# அள்ளக்குறையாத
# அறிவுச் சரங்கம்!

பதிப்புரை

# شرح
# رياض الصالحين من كلام سيد المرسلين

لفضيلة الشيخ محمد بن صالح العثيمين رحمه الله تعالى

ترجمة : علي ابو خالد العمري

இமாம் நவவி (ரஹ்) அவர்களின் ரியாளுஸ் ஸாலிஹீன்

# நபிமொழி - தெளிவுரை

**மேன்மைமிகு ஷைக் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்)**

தமிழில்

**K.J . மஸ்தான் அலீ பாகவி, உமரி (அபூ காலித்)**

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸலாத்தும் ஸலாமும் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள் - அனைவர் மீதும் பொழியட்டுமாக!

இவ்வுலகையும் உலகின் மிகச்சிறந்த படைப்பாக மனிதனையும் படைத்த இறைவன் மனித வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டுமென வகுத்துக் கொடுத்த மகத்தானதொரு வாழ்க்கை நெறிதான் இஸ்லாம்!

மனிதனை அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழச்செய்து மரணத் திற்குப் பிறகு நாளை மறுமையில் அவனுக்கு, அல்லாஹ்வின் அன்பையும் கிருபையையும் மன்னிப்பையும் பெற்றுத்தந்து அருட்பேறு கள் நிறைந்த சவனபதிக்குப் பாதை அமைத்துக் கொடுக்கும் இனிய நெறிதான் - இறைமார்க்கம்தான் இஸ்லாம்!

இத்தகைய ஒப்பற்ற இஸ்லாமிய சன்மார்க்கத்தை இவ்வுலகத்து மக்களுக்கு எடுத்துரைத்து நேர்வழிகாட்டுவதற்காக எண்ணற்ற நபிமார்கள் இவ்வுலகில் தோன்றினார்கள். அவர்களுள் இறுதித் தூதராக முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அனுப்பி வைத்த எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹ், அல்குர்ஆன் எனும் மகத்தான வேதத்தையும் அவர்களுக்கு வழங்கினான்.

**திருக்குர்ஆனும் திருநபி (ஸல்)அவர்கள் அருளிச்சென்ற ஹதீஸ் களும் இஸ்லாமிய சன்மார்க்கத்தின் இரு மூலாதாரங்களாகும்!**

- இறைவன் தன்னுடைய இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை முழுமையான அறிவு ஞானத்துடன் பேசச்செய்தான். நாளும் பொழுதும் அப்படி அவர்கள் நவின்ற நல்வாக்குகள்தான் ஹதீஸ்கள் என்கிற பொன் மொழிகள். அவை யாவும் தூய்மை யானவை., பாதுகாக்கப்பட்டவை! குர்ஆன் ஓரிடத்தில் கூறுகிறது:

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى اِنْ هُوَ اِلاَّ وَحْيٌ يُوْحى

அவர் மனம்போனபடி பேசுவதில்லை. அவர் பேசவது, (அவர் மீது) இறக்கியருளப்பட்ட வஹியே தவிர வேறில்லை! (53 : 3-4)

நபிகளார் மொழிந்தவை மட்டுமல்ல, அவர்கள் செய்தவையும் செய்வதற்கு அனுமதி அளித்தவையும் - அனைத்தும் ஹதீஸ்களின் கீழ் வருபவைதான். இம்மூவகை ஹதீஸ்களும் குர்ஆனுக்கு அழகிய தொரு விரிவுரையாகவும் அதன் உன்னத கருத்துக்களையும் உயர் இலட்சியங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டும் கலங்கரை விளக்காகவும் அமைந்துள்ளன.

ஆம்! அகிலத்திற்கோர் அருட்கொடையாய், அழகிய முன்மாதிரியாய் அனுப்பப்பட்ட, நற்குணத்தின் மிக உன்னத நிலையில் நின்று வாழவும் வழிகாட்டவும் செய்த பூமான் நபியவர்களின் பாக்கியம் நிறைந்த ஹதீஸ்கள்-

∴ வானுலகத்து வஹி அருளிய தெளிந்த நீரோடை மூலம் இப்புவி வாழ் மக்களுக்குப் புது வாழ்வு நல்கின., நல்கிக்கொண்டே இருக்கின்றன!

∴ மனித வாழ்வின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் ஊக்கமளித்து மிகச் சிறந்த பண்பாட்டைத் தோற்று விக்கக்கூடிய நன்னெறிகளையும் நல்லொழுக்கங்களையும் அவற்றிற்குத் தேவையான அறிவுரைகளையும் ஞானங் களையும் அளித்தன., அளித்துக்கொண்டே இருக்கின்றன!

∴ வாய்மையும் தூய்மையும் மிக்க வணக்க வழிபாடுகளையும் அவற்றின் ஒழுங்கு முறைகளையும் வழங் கின., வழங்கிக் கொண்டே இருக்கின்றன!

சுருங்கக்கூறின், எத்தகைய தூய்மையான வணக்க வழிபாட்டை, நேர்மையான வாழ்க்கையை மனிதனிடம் இருந்து இஸ்லாம் விரும்புகிறதோ அதற்கேற்ப அல்லாஹ்வின் அருள் வேதமாகிய அல் குர்ஆனின் கருத்துக் கருவூலங்களை வெளிக்கொணரும் அள்ளக் குறையாத அறிவுச் சரங்கமே அண்ணல் நபிகளாரின் ஹதீஸ்கள்!

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்புத் தோழர்களாகிய ஸஹாபாப் பெரு மக்கள் திருக் குர்ஆனுடனும் ஹதீஸ்களுடனும் ஆழ்ந்த தொடர்புகொண்டிருந்தார்கள்.,அவ்விரண்டின் அடியொற்றியே அவர்கள் வாழ்ந்தார்கள் என்பது மட்டுமல்ல குர்ஆனையும் ஹதீஸ் களையும் மனனம் செய்தார்கள். ஆய்வு செய்தார்கள், தொகுத்துப் பாதுகாத்தார்கள் தொல்லுலகெங்கும் பரப்பிடப் பாடுபட்டார்கள்.

அல்லாஹ்வின் பேருதவியினால், எல்லாக் காலத்திலும் எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள், மார்க்க அறிஞர்கள், மாமேதைகள் அனைவரின் கருத்திலும் கவனத்திலும் அண்ணல் நபிகளாரின் ஹதீஸ்கள் இடம் பெற்றன. அனைவரின் வாழ்வையும் பண்படுத்தின. ஹதீஸ்களை மனனம் செய்வதும் ஆராய்வதும் அவற்றிற்கு நூல் வடிவம் கொடுப்பதும் இவ்வுலகில் தொடர் பணிகளாயின. பல்வேறு கோணங்களில் ஹதீஸ்கள் ஆய்வு செய்யப்பட்டு முஸ்னத்களிலும் ஸிஹாஹ்களிலும் ஸு னன்களிலும் மு.:ஜம்களிலும் வரிசைப்படுத்தப்பட்டன.

இத்தகைய பணிகளில் பங்கு பெற்றவர்களுள் ஒருவர்தாம் இமாம் அபூ ஜகரிய்யா யஹ்யா ஷர.:ப் அந் நவவி (ரஹ்) அவர்கள். (631 - 676) இவர்கள் ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டின் புகழ் மிக்க மாமேதைகளுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் பல்வேறு தலைப்புகளில் பயனுள்ள பல நூல்களை எழுதியுள்ளார்கள். அவை யாவும் மக்களின் வரவேற்பையும் நன்மதிப்பையும் பெற்றன. மார்க்க அறிஞர்கள் அந் நூல்களை பல கோணங் களில் ஆய்வு செய்தனர்., தாங்களும் பயன் பெற்றனர்., மக்களுக்கும் பயனளித்தனர்.

இமாம் நவவி அவர்களின் நூல்களில் மக்களின் அதிகப் பயன்பாட்டிற்குரிய, பாமரர் - பண்டிதர் அனை வரிடையேயும் அறிமுக மான நூல்தான் **ரியாளுஸ் ஸாலிஹீன் மின் கலாமி ஸைய்யிதில் முர்ஸலீன்**.

அனைத்துத் தரப்பு மக்களிடையும் இத்தொகுப்பு அதிகஅளவு புகழ் பெற்றதற்குக் காரணம், இந்நூல் வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய சீரான அறிவுரைகளைத் தனித் தனித் தலைப்புகள் அமைத்துச் சிறப்பாய் வழங்குகிறது என்பதுதான்.

இஸ்லாத்தின் நன்னெறிகளிலும் நற்குணங்களிலும் நல்லார்வத்தை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் குர்ஆன் வசனங்களை மணி மகுடமாகச் சூட்டி ஆர்வமூட்டுதல், அச்சறுத்துதல் எனும் இரு அம்சங்களைக் கொண்ட ஹதீஸ்களையும் அணிகலன்களாக அணிவித்துப் பார்ப்போரும் படிப்போரும் கேட் போரும் இன்புறும் வகையில் அறிவுக்கு அருசுவை விருந்தொன்றை இந்நூல் படைத்துத் தருகிறது!

பள்ளிவாசல் இமாம்கள் தொழுகைக்குப் பின்னர் அல்லது முன்னர் இந்நூலைப் படித்துக் காட்டுவதும் மக்கள் அனைவரும் நல்லார்வத்துடன அதனைச் செவிமடுப்பதும் உலகின் பலநாடுகளிலும் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுவதே இதற்குச் சான்றாகும்.

சமகால அறிஞர்களிடையே கல்வி ரீதியில் ஓர் ஒளிமிக்க உன்னத இடத்தை இமாம் நவவி (ரஹ்)அவர்கள் பெற்றிருந்ததும் ஒரு காரணமாகும். அந்த அளவுக்கு ஆழமான அறிவுஞானமும் நபிமொழியின் இலக்கினைத் துல்லியமாகப் புரிந்துகொள்கிற - புரியவைக்கிற நிறையாற்றலும் அவர்களிடம் நிறைந்திருந்தன.

இந்த ரியாளுஸ் ஸாலிஹீன் நூல், ஏனைய நபிமொழித் தொகுப்புகளைக் காட்டிலும் பலவகைகளில் சிறந்து விளங்குவதை நாம் காணலாம்! உண்மையில் இந்நூல் சொற்பொழிவாளர்களின் துணைவன்., அறிவுரை

பெறுவோர்க்கு ஓர் அரிய கருவூலம்! நடைபயில்வோருக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு! உத்தமர்களின் பூங்காவனம்!

ரியாளுஸ் ஸாலிஹீன் ஹதீஸ் தொகுப்புக்கு-சவூதி அரேபியா வின் உனைஸா மாநகரைச் சேர்ந்த, அண்மையில் காலமான அல்லாமா முஹம்மத் பின் ஸாலிஹ் (ரஹ்) அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாய் இருந்தார்கள். இமாமாகவும் கத்தீபாகவும் அவர்கள் பணியாற்றிய உனைஸா பெரிய பள்ளிவாசலில் நாள்தோறும் தொழுகைக்குப் பிறகு இந்நபிமொழிகளுக்கு விரிவான விளக்கத்துடன் அழகியதோர் உரையினை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவை யாவும் சுமார் ஏழு பாகங்களாக வெளியிடப் பட்டுள்ளன!

உனைஸா இஸ்லாமிக் சென்டரில் இரவு நேர ஹதீஸ் வகுப்புகளில் கலந்துகொண்ட தமிழ் அன்பர்கள், ஷைகு முஹம்மத் (ரஹ்) அவர்களின் விரிவுரை நூலை அடிப்படையாகக்கொண்டு நான் அளித்த விளக்கங்களைக் கேட்டதும் இவற்றைத் தமிழில் நூலாகத் தொகுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமே என்று விரும்பினார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்பவே இந்நூலை நான் எழுதத் தொடங்கினேன்.

அல்லாஹ்வின் பேருதவியினால் இப்பொழுது முதல் பாகம் நிறைவு பெற்று உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

இந்த முதல் பாகத்தில் 59 நபிமொழிகளின் தெளிவுரையே இடம் பெற்றுள்ளது. இமாம் நவவி (ரஹ்) அவர்கள் தங்களது தொகுப்பை பதினேழு அத்தியாயங்களாக அமைத்து 265 பாடங்களும் 1897 நபிமொழிகளும் இடம்பெறச் செய்துள்ளார்கள்! இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து இப்பணியை நிறைவு செய்ய நாடியுள்ளேன். அதற்கான கால அவகாசத்தையும் உடல் நலத்தை யும் அல்லாஹ்விடம் யாசிக்கிறேன்!

இந்நூல் வெளிவருவதற்கு தக்க ஆலோசனைகள் கூறி உதவி செய்த நண்பர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்கு வானாக!

அபூ காலித் உமரி
உனைஸா 11 / 2 / 2002

## ஹதீஸ் கிரந்தங்கள் - ஒரு பார்வை

**அல் ஜாமிஉ:** இஸ்லாம் தொடர்பான எல்லா விஷயங்களும் அதாவது, கொள்கை வழிபாடு, சட்டம், வரலாறு, ஒழுக்கம், த∴ப்ஸீர் (வேத விளக்கம்), குழப்பங்கள், போர்கள், சான்றோர் சிறப்புகள், இறுதி நாளின் அடையாளங்கள் போன்ற எல்லா வகையான ஹதீஸ்களும் இடம்பெற்றுள்ள நூல். எடுத்துக்காட்டாக, ஜாமிஉ ஸஹீஹு ல் புகாரி, ஜாமிஉத் திர்மிதி

**அஸ் ஸிஹாஹ்:** ஒப்புக்கொள்ளப்பட்ட, ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் தொகுக்கப் பட்டுள்ள நூல்கள். உதாரணமாக ஸஹீஹு ல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

**அஸ் ஸு னன்:** ∴பிக்ஹ் சட்டங்கள் தொடர்பான ஹதீஸ்கள் ஒருசேரத் தொகுக் கப்பட்டுள்ள நூல்கள். எடுத்துக்காட்டாக, ஸு னன் அபீ தாவூத், ஸு னன் நஸாஈ

**அல்முஸ்னத்:** ஸஹாபிகளின் நபிமொழி அறிவிப்புகள் அனைத்தும் அவரவரின் பெயரில் வரிசையாய்த் தொகுக்கப்பட்டுள்ள - அல்லது பிரபலமான ஓர் இமாமின் அறிவிப்புகள் அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டுள்ள நூல். எடுத்துக்காட்டாக, இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்களின் முஸ்னத்

**அல்மு∴ஜம்:** அறிவிப்பாளர்களின் பெயர்கள் அல்லது ஷைகுகளின் பெயர்களை அனுசரித்து அரபி எழுத்துக்களின் வரிசைப்படி ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட நூல்கள். எடுத்துக்காட்டாக, தபரானியின் மு∴ஜமுஸ் ஸ∴கீர், மு∴ஜமுல் கபீர்

**அல் ஜு ஸ்வு:** குறிப்பிட்டதொரு ∴பிக்ஹ் சட்டம் தொடர்பான ஹதீஸ்கள் ஒன்று திரட்டப்பட்ட நூல். எடுத்துக்காட்டாக, இமாம் புகாரி அவர்களின் ஜு ஸ்வு ர∴ப்இில் யதைன் - جزء رفع اليدين - தொழுகையில் ருகூவுக்குப் பிறகு கைகளை உயர்த்துதல்

## இமாம் நவவி (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

இமாம் ஹாபிழ் முஹ்யித்தீன் அபூ ஜகரிய்யா யஹ்யா பின் ஷர∴ப் அந் - நவவி ஷா∴பிஈ (ரஹ்) அவர்கள், ஷாம் தேசத்துச் சிற்றூர்களில் ஒன்றான நவா என்னும் ஊரில் பிறந்ததால் நவவி (நவாவைச் சேர்ந்தவர்) என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்கள். அவர்களின் இயற்பெயர் யஹ்யா. முஹ்யித்தீன் என்பது பட்டப்பெயர். அபூ ஜகரிய்யா என்பது குறிப்புப் பெயர்.

### பிறப்பும் கல்வியும்

இமாம் நவவி அவர்கள் பிறந்தது ஹிஜ்ரி 631 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம். பத்து வயதிலேயே குர்ஆனை முழுமையாகக் கற்று மனப்பாடம் செய்து முடித்தார்கள். அதன் பிறகு தங்கள் ஊரிலேயே கல்வியில் சிறந்த ஆசிரியர்களிடம் அரபி இலக்கணம், இலக்கியம், நபிமொழிகள், அறிவிப்பாளர்கள் வரலாறு, ∴பிக்ஹு சட்ட விளக்கம் போன்ற பல்வேறு கலைகளைக் கற்றார்கள்.

மராக்குஷ் மாநகரத்தைச் சேர்ந்த ஷைக் யாஸீன் பின் யூசுப் அவர்கள் ஒருதடவை நவா என்கிற அந்தச் சிற்றூருக்குச் சென்றிருந்தபொழுது ஒரு காட்சியைக் கண்டார். சிறுவர் யஹ்யாவை சம வயதுடைய சிறுவர்கள் விளையாட வருமாறு வற்புறுத்தி அழைத் துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவருக்கு விளையாட்டில் ஆர்வமில்லை., அதிகமாக வற்புறுத்தியதால் அழுதுகொண்டே அவர்களை விட்டும் ஓடுகிறார். எங்கு செல்கிறார்? என்ன செய்கிறார்? என்று ஷைக் யாஸீன் பின்தொடர்ந்தபொழுது வீட்டிற்குச் சென்று குர்ஆனை எடுத்து ஓதினார் சிறுவர் யஹ்யா. உடனே அவரது தந்தை ஷர.்ப் அவர்களைச் சந்தித்து, உங்கள் புதல் வரைக் கல்வி கற்பதிலேயே முழுமையாக ஈடுபடுத்துங்கள். இதோ! இந்தச் சிறுவயதில் விளையாட்டில்கூட ஆர்வம் இல்லாமல் குர்ஆன் ஓதுகிறரர் உங்கள் புதல்வர் என்று கேட்டுக் கொண்டார்! தந்தையும் அதற்கு ஒப்புக் கொண்டுத் தம் புதல்வரின் படிப்புக்காக எல்லா உதவிகளும் செய்தார்!

சிறுவர் யஹ்யா அவர்கள், தாருல் ஹதீஸ் மத்ரஸாவில் சேர்ந்து கல்வி கற்பதற்காக ஹிஜ்ரி 649 ஆம் ஆண்டு தம் தந்தையுடன் திமிஷ்க் மாநகரம் வந்து அங்கு கிழக்குத் திசையில் உமையா மஸ்ஜிதுடன் இணைந்த கட்டிடமான மத்ரஸா ரவாஹிய்யாவில் தங்கி கல்வி கற்றார்கள்.

## கல்விப் பணி

இமாம் நவவி (ரஹ்) அவர்கள், ஹிஜ்ரி 665 ஆம் ஆண்டு திமிஷ்கில் புகழ்பெற்ற கல்விக்கூடமாகிய தாருல் ஹதீஸ் மத்ரஸ ாவில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பெற்றார்கள். அங்கு ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் கிடைத்ததுதான். ஆயினும் இமாம் நவவி அவர்கள் எவ்வித ஊதியமும் பெற்றுப் பயனடையவில்லை. என்ன செய்தார்கள்? ஒவ்வொரு மாத ஊதியத்தையும் மத்ரஸா நிர்வாகி யிடமே சேமித்து வருவார்கள். ஓராண்டில் பெருந்தொகை ஒன்று சேர்ந்ததும் ஏதேனும் சொத்து வாங்கி அதனை மத்ரஸா பெயரில் வக்.்ப் செய்து விடுவார்கள். அல்லது நூல்கள் வாங்கி அங்கிருந்த நூலகத்திற்கு கொடுத்துவிடுவார்கள். தேவையான பண உதவியை அவர்களின் தந்தை அனுப்பிக்கொண்டிருந்தார்கள். ஆடைகள் தேவையெனில் தங்கள் தாயாரிடம் இருந்து தருவித்துக் கொள்வார்கள்.

யானேும் அன்பளிப்போ சன்மானமோ வழங்கினால் அந்த நபர் மார்க்கப் பற்றுள்ளவராக இருந்தால் மட்டுமே - அந்த அன்பளிப்பு தமக்குத் தேவை என்றால்தான் பெற்றுக்கொள்வார்கள். மரணம் அடையும் வரையில் தாருல் ஹதீஸ் மத்ரஸாவிலேயே ஆசிரியராகப் பணியாற்றினார்கள்.

## பேணுதலான - தூய வாழ்வு

வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒருமித்துக் கூறுவது இதுதான்: இமாம் நவவி (ரஹ்) அவர்கள் உலகப் பற்றில்லாத, பேணு தலான வாழ்வை மேற்கொள்பவர்களாக இருந்தார்கள்! கல்விப் பணியில் முழு ஈடுபாடு கொண்டிருந்ததுடன் பொதுமக்களுக்கு வழி காட்டுவதிலும் நன்மையைக் கடைப்பிடிக்குமாறு ஏவுதல் - தீமை யைத் தடுத்தல் போன்ற பெரும் பணிகளிலும் நல்லார்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தார்கள். இதேபோல் ஆட்சியாளர்களின் தவறான போக்கைத் தக்கமுறையில் கண்டிப்பதற்கும் அவர்கள் தயங்கியதில்லை.

இமாம் அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் ஆடம்பரமான வாழ்க் கையை விரும்பியதில்லை. எளிய உணவு கள், எளிமையான ஆடைகளிலேயே வாழ்வைக் கழித்தார்கள். திருமணத்திலும்கூட அவர்க ளது மனம் நாட்டம் கொள்ளவில்லை. அந்த அளவுக்கு கல்விப் பணியில் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள்!

நடுத்தரமான வாழ்க்கைச் சூழ்நிலையில் இருந்து திமிஷ்க் மாநகரம் சென்ற இமாம் அவர்களை எல்லா வசதி வாய்ப்புகளும் தேடிவந்தன! இளமையின் வசந்த காலத்தில்- அனைத்து ஆரோக்கியமும் சக்தியும் நிரம்பி இருந்தும்கூட அவர்கள் இன்ப வாழ்வையும் வசதிவாய்ப்புகளையும் - கல்விப் பணிக்காகவே தியாகம் செய்து விட்டு சாதாரணமான - எளிய வாழ்க்கையிலேயே மன நிறைவு கண் டார்கள்!

## எழுத்துப் பணி

இமாம் அவர்கள் எழுதிய முக்கியமான நூல்களில் சில: ஸஹீஹ் முஸ்லிமின் விரிவுரை, அல் மஜ்மூ.் (அல் முஹத்த.்ப் விரிவுரை), ரியாளுஸ் ஸாலிஹீன், அல் அத்கார், அல் அர்பஊனந் நவவிய்யா, தஹ்தீபுல் அஸ்மா வல் லுகாத், அல் மின்ஹாஜ் - இவை தவிர இன்னும் ஏராளமான நூல்களை அவர்கள் இயற்றி யுள்ளார்கள்.

## மரணம்

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் நிறைவேற்றிய ஹஜ் இரண்டு. மரணம் அடைவதற்கு சிலகாலம் முன்பு தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினார்கள். வக்.்ப் நிர்வாகத்தில் இருந்து எடுத்த எல்லா நூல்களையும் திரும்ப ஒப்படைத்தார்கள். தங்கள் ஆசிரியர்களின் மண்ணறைகளைத் தரிசித்து அவர்களுக்காக அல்லாஹ் விடம் அழுது அழுது பிரார்த்தனை செய்தார்கள். தங்கள் நண்பர்களை யெல்லாம் சந்தித்து விடை பெற்றார்கள். பிறகு தங்கள் தந்தையின் கப்றை ஜியாரத் செய்துவிட்டு பிறகு பைத்துல் முகத்தஸ் மற்றும் கலீல் ஆகிய இடங்களையும் ஜியாரத் செய்தார்கள். பிறகு நவா திரும்பி அங்கே பிணியுற்ற இமாம் அவர்கள் ஹிஜ்ரி 676 ஆம் ஆண்டு ரஜப் பிறை 24 இல் மரணம் அடைந்தார்கள்!

# இதுவே இலட்சியத்தை அடையும் பாதை!

~ مقدمة الامام النووي رحمه الله ~

### இமாம் நவவி அவர்களின் முன்னுரை

بسم الله الرحمن الرحيم

الحَمْدُ للهِ الوَاحِدِ القَهَّارِ العَزِيْزِ الغَفَّارِ مُكَوِّرِ اللَّيْلِ عَلَي اَلنَّهَارِ تَذْكِرَةً لاُوِلِي القُلُوْبِ وَ الاَبْصَارِ وَ تَبْصِرَةً لِذَوِيْ الاَلْبَابِ وَ الاِعْتِبَارِ الَّذِيْ أَيقَظَ مِنْ خَلْقِهِ مَنِ اصْطَفَاهُ فَزهَّدَهُمْ فِيْ هذِهِ الدَّارِ وَ شَغَّلَهُمْ بِمُرَاقَبَتِهِ وَ اِدَامَةِ الاَفْكَارِ وَ مُلاَزَمَةِ الاِتِّعَاظِ وَ الادِّ كَارِ وَ وَفَّقَهُمْ للدُؤُوبِ فِيْ طَاعَتِهِ وَ التَّأَهُّبِ لِدَارِ الْقَرَارِ وَ الحَذَرِ مِمَّا يُسْخِطُهُ وَ يُوْجِبُ دَارَ الْبَوَارِوَ الْمُحَافَظَةِ عَلَي ذَلِكَ مَعَ تَغَايُرِ الاَحْوَالِ وَ الاَطْوَار

அளவிலாக் கருணையும் நிகரிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தனித்தவன்., அனைத்தையும் அடக்கியாளுபவன்., யாவரையும் மிகைத்தவன்., பெரும் மன்னிப்பாளன்., பகலின் மீது இரவைச் சற்றிவரச் செய்ப வன். இவ்வாறு செய்வதன் நோக்கம், - இதயமும் அகப்பார்வை யும் உடையோர்க்கு ஓர் நினைவூட்டியாகவும் - அறிவும் சிந்தனை யும் உடையோர்க்கு ஓர் அறிவுரையாகவும் படிப்பினையாகவும் அது திகழ வேண்டும் என்பதுதான்!

தனது படைப்பினமாகிய மனிதர்களில் (தனது தீனுக்காக) யாரை அவன் தேர்ந்தெடுத்தானோ அவர் களுக்கு விழிப்புணர்வு ஊட்டினான்., உலகில் அவர்களைப் பற்றற்றவர்களாய் ஆக்கினான். மேலும் தனது கண்காணிப்பு குறித்து அஞ்சவும் சதாவும் தன்னை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும்படியும் அவர்களைச் செய்தான். (பேரண்டத்தில் பரவியுள்ள இறைச்சான்றுகளிலிருந்து) தக்க படிப்பினைகள் பெற்று அவனை நினைவு கூர்ந்து சதாவும் அவனுக்குக் கீழ்ப்படிந்து வாழவும் நிலையான மறுமை வீட்டிற்காகத் தயாரிப்புச் செய்யவும் அவர்களுக்கு நல்லருள் புரிந்தான். மேலும் இரட்சகனுக்குக் கோபமூட்டுகிற - நரகத்திற்கு உரியவர் களாய் அவர்களை ஆக்கக்கூடிய தீமைகள் குறித்து அவர்களை எச்சரிக்கையுடன் இருக்கச் செய்தான்., எத்தகைய இக்கட்டான சூழ்நிலைகள், காலநிலைகள் வந்தாலும் சரியே! தன்னுடைய நேர்வழியில் நிலைத் திருக்க அவர்களுக்கு நல்லருள் புரிந்தான்.

أَحْمَدُهُ أَبْلَغَ حَمْدٍ وَ أَزْ كَاهُ وَ أَشْمَلَهُ وَ أَنْمَاهُ

وَ اَشْهَدُ أَنْ لا اِلهَ اِلاَّ اللهُ البَرُّ الكَرِيْمُ ، الرَّؤوْفُ الرَّحِيْمُ ، وَ اَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ ، وَحَبِيْبُهُ وَ خَلِيْلُهُ ، اَلْهَادِيْ اِلى صِرَاطٍ مُسْتَقِيْمٍ ، وَ الدَّاعِي اِلى دِيْنٍ قَوِيْمٍ صَلَوَاتُ اللهِ وَ سَلاَمُهُ عَلَيْهِ ، وَعَلَي سَائِرِ الَّنبِيّينَ ، وَ آلِ كُلٍّ وَ سَائِرِ الصَّالِحِيْنَ

அல்லாஹ்வை நான் புகழ்கிறேன்., பொருளாழமிக்க, தூய புகழாக., ஒருங்கிணைந்த, வளமிக்க புகழாக! (புகழ்கிறேன்)

மேலும் திண்ணமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை என்று சாட்சி சொல் கிறேன். அவன் உபகாரி.,கண்ணியமிக்கவன்., பரிவுமிக்கவன்.,கருணையாளன்! மேலும் திண்ணமாக முஹம்மத் நபி, அல்லாஹ்வின் அடியார்., தூதர் என்றும் சாட்சி சொல்கிறேன். அவர்கள், அல்லாஹ் வின் அன்புக்கு உரியவராகவும் அவனுடைய நேசராகவும் நேரான வழியின் பக்கம் வழிகாட்டக்கூடியவராகவும் செம்மையான மார்க்கத்தின்பால் அழைக்கக் கூடியராகவும் திகழ்கிறார்கள்.

அல்லாஹ்வின் நல்வாழ்த்துக்களும் ஈடேற்றமும் அவர்கள் மீதும் அனைத்து நபிமார்கள் மீதும் அவர்கள் அனைவரின் குடும்பத்தினர் மீதும் நல்லோர்கள் அனைவர் மீதும் பொழியட்டுமாக!

أَمَّا بَعْدُ : فَقَدْ قَالَ اللهُ تَعَالَي : وَمَا خَلَقْتُ الْجِنَّ وَ الاِ نْسَ اِلاَّ لِيَعْبُدُوْنَ مَا اُرِيْدُ مِنْهُمْ مِنْ رِّزْقٍ وَمَا اُرِيْدُ أَنْ يُطْعِمُوْنِ ( سورة الذاريات الآية: ٥٦-٥٧ ) وَهَذَا تَصْرِيْحٌ بِأَنَّهُمْ خُلِقُوْا لِلْعِبَادَةِ فَحَقٌّ عَلَيْهِمْ الاعْتِنَاءُ بِمَا خُلِقُوْا لَهُ وَالاعْرَاضُ عَنْ حُظُوْظِ الدُّنْيَا بِالَّزهَادَةِ ، فَاِنَّهَا دَارُ نَفَادٍ لاَ مَحَّلُ اِخْلاَدٍ وَمَرْكَبُ عُبُوْرٍ لاَ مَنْزِلُ حُبُوْرٍ وَ مَشْرَعُ انْفِصَامٍ لاَ مَوْطِنُ دَوَامٍ ، فَلِهذَا كَانَ الاَيْقَاظُ مِنْ أَهْلِهَا هُمُ الْعُبَّادَ ، وَ أَعْقَلُ النَّاسِ فِيْهَا هُمُ الزُّهَادَ ، قَالَ اللهُ تَعَالَي : اِنَّمَا مَثَلُ الْحَيَاةِ الدُّنْيَا كَمَاءٍ أَنْزَلْنَاهُ مِنَ السَّمَاءِ فَاخْتَلَطَ بِهِ نَبَاتُ اْلاَرْضِ مِمَّا يَأْكُلُ النَّاسُ وَالاَنْعَامُ حَتَّي ، اِذَا أَخَذَتِ اْلاَرْضُ زُخْرُفَهَا وَ ازَّيَنَتْ وَ ظَنَّ أَهْلُهَا أَنَّهُمْ قَادِرُوْنَ عَلَيْهَا أَتَاهَا أَمْرُنَا لَيْلاً أَوْ نَهَارًا فَجَعَلْنَاهَا حَصِيْدًا كَأَنْ لَمْ تَغْنَ بِالاَمْسِ كَذَلِكَ نُفَصِّلُ الآيَاتِ لِقَوْمٍ يَتَفَكَّرُوْنَ ( سورة يونس الآية : ٢٤ ) وَ الآيَاتُ فِيْ هذَا اَلْمَعْنى كَثِيْرَةٌ

இறைப் புகழுக்கும் நபி ஸலவாத்துக்கும் பிறகு சொல்லவருவது என்னவெனில்-

அல்லாஹ் கூறுகிறான்: ஜின்களையும் மனிதர்களையும் நான் படைத்தது, அவர்கள் என்னை வணங்கி வழிபட வேண்டும் என்பதற்காகத்தான். நான் அவர்களிடமிருந்து எந்த வாழ்வாதாரத்தையும் நாடவில்லை., அவர்கள் எனக்கு உணவளிக்க வேண்டும் என்றும் நான் நாடவில்லை " (51: 56-57)

திண்ணமாக மனிதர்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் இறை வழிபாடுதான் என்பதை இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது. எனவே அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்திற்கு முக்கியத்து வம் கொடுப்பதும் உலகின் வசதி வாய்ப்புகளைப் புறக்கணித்துப் பற்றற்ற நிலையை மேற்கொள்வதும் அவர்களுக்குக் கடமை ஆகிவிட்டது!

ஏனெனில், இது அழியும் உலகமே தவிர நிலைத்திருக்கும் வீடல்ல., கடந்து செல்லும் வாகனமே தவிர இன்பம் துய்க்கும் இல்லமல்ல! வற்றும் நீரோடையே தவிர நிலையாகத் தங்கும் நாடல்ல!

இதனால்தான் உலகில் வாழும் மக்களில் விழிப்புணர்வு அடைந் தவர்கள் இறைவனை வணங்கி வழிபடு வோராய் உள்ளனர்., அறிவிற்சிறந்த மக்கள் உலகப் பற்றில்லாதவர்களாய் இருக்கின் றனர். அல்லாஹ் கூறுகி றான்:

(எந்த உலக வாழ்வின் போதையில் மயங்கி நம் சான்றுகள் குறித்து நீங்கள் அலட்சியமாக இருக்கிறீர் களோ அந்த) உலக வாழ்க்கையின் உதாரணம் இதைப் போன்றதாகும் : வானத்தில் இருந்து மழையை இறக்கினோம். பின்னர் அதன் மூலம் - மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக்கூடிய பூமியின் விளைபொருள் கள் நன்கு அடர்த்தியாய் வளர்ந்தன., இவ்வாறாக, பூமி அழகாகவும் செழுமையாகவும் காட்சியளிக்கத் தொடங்கியபோது - அதன் பலனை அடைந்திட தங்களுக்கு ஆற்றலுள்ளதென அதன் உரிமையாளர்களும் எண்ணியபொழுது திடீரென இரவிலோ பகலிலோ நமது கட்டளை அங்கு வந்தது. நேற்றைய தினம் எதுவும் விளைந்திருக் காததுபோன்று அதனை நாம் முற்றாக அழித்து விட்டோம். சிந்தித்துணரும் மக்களுக்குச் சான்றுகளை இவ்வாறு தெளிவாக விளக்குகிறோம் (10 : 24) இந்தக் கருத்தில் இறைவசனங்கள் ஏராளமாய் உள்ளன.

وَلَقَدْ أحْسَنَ ا لْقَائِلُ :

اِنَّ للهِ عِبَادًا فُطَنَا طَلَّقُوْا الدُّنْيَا وَ خَافُوْا الفِتَنَا

نَظَرُوْا فِيْهَا فَلَمَّا عَلِمُوْا أَنَّهَا لّيْسَتْ لِحَيٍّ وَطَنَا

جَعَلُوْهَا لُجَّةً وَ اتَّخَذُوْا صَالِحَ الاَعْمَالِ فِيْهَا سُفُنَا

ஒரு கவிஞர் ஓர் அழகிய கவிதை பாடினார்:

**கூரறிவு பெற்றஇறை அடியா ரிங்கே**
**கொடுத்திட்டார் மணவிலக்கு உலகத் திற்கே!**
**பாருலக வாழ்வினிலே பயந்தார் குழப்பம்!**
**பகுத்தாய்ந்தார்., உலகத்தின் உண்மை பற்றி!**
**யாருக்கும் இவ்வுலகு நிலைதள மில்லை**
**என்றறிந்து ஆழ்கடலாய் அதனை ஆக்கி**
**சீரமல்களைக் கப்பல்களாய்ச் செலுத்தி னார்கள்!**
**சிறப்புடனிறை யருள்பெற்றே வென்றார் உலகில்!**

فَاِذَا كَانَ حَالُهَا مَا وَصَفْتُهُ ، وَ حَالُنا وَ مَا خُلِقْنَا لَهُ مَا قَدَّمْتُهُ ، فَحَقٌّ عَلَي الْمُكَلَّفِ أنْ يَذْهَبَ بِنَفْسهِ مَذْهَبَ ألاَخْيَارِ، وَ يَسْلُكَ مَسْلَكَ أُولِى النُّهَي وَ الاَبْصَار، وَ يَتَأَهَّبَ لِمَا أَشَرْتُ اِلَيْهِ ، وَ يَهْتَمَّ بما نَبَّهْتُ عَلَيْهِ . وَ أَصْوَبُ طَرِيْقٍ لَهُ فِيْ ذَلِكَ ، وَ أَرْشَدُ مَا يَسْلُكُهُ مِنَ المَسَالِكِ : اَلتَّأَدُّبُ بِما صَحَّ عَنْ نَبِيِّنَا ﷺ سَيِّدِ الاَوَّلِيْنَ وَ الآخِرِيْنَ ، وَأَكْرَمِ السَّابِقِيْنَ وَ اللاَّحِقِيْنَ . صَلَوَاتُ اللهِ وَ سَلاَمُهُ عَلَيْهِ وَ عَلَي سَائِرِ النَّبِيِّيْنَ.

எனவே உலகத்தின் யதார்த்த நிலை நான் விளக்கியதாகவே இருக்கும்பொழுது - நமது நிலையும் நாம் படைக்கப்பட்டதன் நோக்கமும் சற்று முன் நான் எடுத்துரைத்ததாகவே இருக்குமானால், அறிவும் பருவ வயதும் உடைய ஒவ்வொருவரின் கடமை இதுதான்: சான்றோர்சென்ற வழியிலேயே அவர் தன்னைச் செலுத்த வேண்டும்., அகப்பார்வையும் விவேகமும் உடைய மக்களின் பாதையிலேயே அவரும் நடைபோட வேண்டும்., மேலும் நான் எதைச் சுட்டிக்காட்டினேனோ அதற்கு அவர் தயாராக வேண்டும்., எதைக் குறித்து எச்சரிக்கை செய்தேனோ அதைக் குறித்து அவர் அக்கறை கொள்ள வேண்டும்!

இந்த விஷயத்தில் மிகவும் சரியான வழி - இலட்சியத்தின் பால் கொண்டு சேர்க்கும் மிகவும் சீரான பாதை எதுவெனில், நம் முடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அருளியதாக ஆதாரப் பூர்மாகப் பதிவாகியுள்ள ஹதீஸ்களை எடுத்து நடப்பதுவே! - அவர்கள் முன்னோர், பின்னோர்களின் தலைவர்., முற்கால, பிற்கால மக்கள் அனைவரினும் கண்ணியமிக்கவர்கள்! அல்லாஹ்வின் ஸலவாத் (வாழ்த்துரை)களும் ஸலா(மும்ஈடேற்ற) மும் அவர்கள் மீதும் அனைத்து நபிமார்கள் மீதும் பொழியட்டுமாக!

وَقَدْ قَالَ اللهُ تَعَالَي: وَتَعَاوَنُوْا عَلَي الْبِرِّوَ التَّقْوَي (سورة المائدة الآية : ٢ )

وَقَدْ صَحَّ عَنْ رَسُوْلِ اللهِ ﷺ اَنَّهُ قَالَ : وَاللهُ فِي عَوْنِ الْعَبْدِ مَا كَانَ الْعَبْدُ فِي عَوْنِ أخِيْهِ وَأَنَّهُ قَالَ : مَنْ دَلَّ عَلَي خَيْرٍ فَلَهُ مِثْلِ أجْرِ فَاعِلِهِ وَ أَنَّهُ قَالَ : مَنْ دَعَا اِلَى هُدًىكَانَ لَهُ مِنَ الأجْرِ مِثْلُ اُجُوْرِ مَنْ تَبِعَهُ لاَ يَنْقُصُ ذَلِكَ مِنْ اُجُوْرِهِمْ شَيْئاً) وَ أَنَّهُ قَالَ : لِعَلِيٍّ رضي الله عنه : فَوَاللهِ لاَنْ يَّهْدِيَ اللهُ بِكَ رَجُلاً وَاحِدًا خَيْرٌ مِنْ حُمُرِ النَّعَمِ

அல்லாஹ் கூறுகிறான்: நன்மையான காரியத்திலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள் (6 : 2) மேலும் நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஆதாரப்பூர்வமாகப் பதிவாகியுள்ளது:

❁ ஒருமனிதன் தன் சகோதரனுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருக்கும் காலெமெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறான்

❁ எவர் நற்காரியத்திற்கு வழிகாட்டினாரோ அவருக்கு அதனைச் செய்தவர் பெறுவது போன்ற கூலி உண்டு

❁ எவர் நேர் வழியின் பால் அழைக்கிறாரோ அவருக்கு - அவரைப் பின்பற்றியவர்கள் பெறும் நற்கூலிகளைப் போல் கிடைக்கிறது., அவர்களின் கூலிகளில் எதையும் அது குறைத்து விடாது

❁ அலீ(ரலி)அவர்களை நோக்கி நபியவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்கள் மூலம் அல்லாஹ் ஒரு மனிதனுக்கு நேர்வழிகாட்டுவது செந்நிற ஒட்டகங்களை விடவும் சிறந்ததாகும்

فَرَأَيْتُ أنْ أجْمَعَ مُخْتَصَرًا مِنْ الاَحَادِيْث الصَّحِيْحَةِ ، مُشْتَمِلاً عَلَي مَا يَكُوْنُ طَرِيْقًا لِّصَاحِبِهِ اِلَى الآخِرَةِ ، وَمُحَصِّلاً لآدَابِهِ الْبَاطِنَةِ وَ الظَّاهِرَةِ ، جَامِعاً لِّلتَّرْغِيْبِ وَ التَّرْهِيْبِ وَ سَائِرِ أَنْوَاعِ آدَاب السَّالِكِيْنَ : مِنْ أحَادِيْثِ الزُّهْدِ ، وَ رِيَاضَاتِ النُّفُوْسِ، وَ تَهْذِ يْبِ الاَخْلاَقِ ، وَ طَهَارَاتِ الْقُلُوْبِ وَ عِلاَجِهَا ، وَ صِيَانَةِ الْجَوَارِحِ وَ ازَالَةِ اعْوِجَاجِهَا وَغَيْرِ ذَلِكَ مِنْ مَقَاصِدِ الْعَارِفِيْنَ

(இந்த குர்ஆன் வசனம் மற்றும் ஹதீஸ்களின் ஒளியில்) எனது சிந்தனை சென்றது., அதாவது, ஆதாரப் பூர்வமான ஹதீஸ்களின் சருக்கமான தொகுப்பு ஒன்றை நாம் உருவாக்க வேண்டும்., படிப்போருக்கு மறுமைக் கான பாதையாக அமையும் கருத்துகளை உள்ளடக்கியதாகவும் - அகத்தையும் புறத்தையும் சீர்படுத்தக்கூடிய - நல்லொழுக்கங்களை வழங்கக் கூடிய அம்சங்களை உள்ளடக்கியதாகவும் அது திகழ வேண்டும். மேலும் ஆர்வம் ஊட்டுதல், அச் சறுத்தல் மற்றும் சான்றோர்களின் நெறிமுறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்த தாகவும் அது திகழ்ந்திட வேண்டும். உலகப் பற்றின்மை தொடர்பான நபிமொழிகளுடன் - மனப்பயிற்சி, குண ஒழுக்கம், உள்ளங்களைத் தூய்மைப்படுத்துதல், அவற்றின் நிவாரணம், உறுப்பு(களின் செயல்பாடு)களைப் பாதுகாத்தல், அவற்றின் பாதிப்புகளை எடுத்துரைத்தல் மற்றும் இறைவனைப் பற்றி நன்கு அறிந்த மேலோர் களின் இலட்சியங்கள் ஆகிய அனைத்தையும் அந்த ஹதீஸ் திரட்டு உள்ளடக்கியிருக்க வேண்டும் (என்று நாடினேன்)

وَأَلْتَزِمُ فِيْهِ أنْ لاَ أذْكُرَ اِلاَ حَدِيْثًا صَحِيْحًا مِنْ الوَاضِحَاتِ، مُضَافًا اِلَى الْكُتُبِ الصَّحِيْحَةِ الْمَشْهُوْرَاتِ، وَأُ صَدِّرَ الا بْوَابَ مِنَ اْلقُرْآنِ الْعَزِيْزِ بِآيَاتٍ كَرِيْمَاتٍ ، وَأُوَشِّحَ مَا يَحْتَاجُ اِلَي ضَبْطٍ أوْ شَرَحِ مَعْنَي خَفِيٍّ بِنَفَائِسَ التَّنْبِيْهَاتِ . وَاِذَا قُلْتُ فِيْ آخِرِ حَدِيْثٍ : مُتَّفَقٌ عَلَيْهِ ، فَمَعْنَاهُ : رَوَاهُ الْبُخَارِي وَ مُسْلِمٌ

இந்நூலில் ஒரு நியதியை நான் கடைப்பிடிக்கிறேன்,, அதாவது, தெளிவான, ஆதாரப்பூர்வமான நபி மொழியை மட்டும்தான் நான் சொல்வேன்., அதுவும் ஆதாரப்பூர்வமான நூல்களென்று பிரபலமான நபிமொழித் தொகுப்பு ஒன்றுடன் அது இணைத்துச் சொல்லப்படும். பாடங்களின் தொடக்கத்தில் சங்கைமிகு குர்ஆனின் திருவசனங்களைக் கூறுவேன். உச்சரிப்பு தேவை எனும் பொழுது - உள்ளடங்கிய அர்த்தத்துக்கு விளக்கம் தேவை எனும் இடத்தில் நுணுக்கமான, எச்சரிக்கையான விளக்கத்தை அணிவிக்கிறேன். நபிமொழியின் முடிவில் முத்தஃபகுன் அலைஹ் متفق عليه என்று நான் கூறினால் அதன் பொருள், இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் இருவரும் இந்த நபிமொழியை அறிவித்துள்ளார்கள் என்பதாகும்.

وَ أَرْجُوْ اِنْ تَمَّ هذَا الْكِتَابُ أنْ يَكُوْنَ سَائِقًا لِلْمُعْتَنِي بِهِ اِلِي الْخَيْرَاتِ ، حَاجِزًا لَهُ عَنْ أنْوَاعِ الْقَبَائِحِ وَ الْمُهْلِكَاتِ . وَ اَنَا سَائِلٌ أَخًا انْتَفَعَ بِشَيْءٍ مِنْهُ أنْ يَّدْعُوَ لِي، وَ لِوَالِدَيَّ ، وَمَشَائِخِي ، وَسَائِرِ أَحْبَابِنَا،وَالْمُسْلِمِيْنَ أَجْمَعِيْنَ، وَعَلَي اللهِ الْكَرِيْمِ اعْتِمَادِىْ ، وَاِلَيْهِ تَفْوِيْضِىْ وَاسْتِنَادِىْ ،وَحْسبِي اللهُ وَ نِعْمَ الْوَكِيْلُ ، وَلاَحَوْلَ وَلاَ قُوَّةَ اِلاَّ بِاللهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ

இந்நூல் நிறைவடைந்தால், கவனத்துடன் படிப்போருக்கு நன்மைகளின் பக்கம் வழிநடத்திச் செல்லக் கூடிய தாக இந்நூல் திகழும் என்றும் எல்லா வகையான தீமைகள் - நாசகார பாவங்களை விட்டும் அவர்களைத் தடுக்கும் என்றும் நான் ஆதரவு வைக்கிறேன்.

இந்நூலிலிருந்து பயன் பெறும் சகோதரரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவெனில், அவர் எனக்காக துஆ (பிரார்த்தனை) செய்ய வேண்டும்.,மேலும் என் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள் அனைவருக்காக வும் அனைத்து முஸ்லிம்களுக்காகவும் அவர் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதுதான்.

நான் நம்பியிருப்பது கண்ணியத்திற்குரிய அல்லாஹ்வைத்தான்., என் பணிகளை ஒப்படைத்திருப்பதும் அவனிடமே., நான் முழுவதுஞ் சார்ந்திருப்பதும் அவனையே! அல்லாஹ் எனக்குப் போது மானவன்.,அவனே சிறந்த முறையில் பொறுப்பேற்பவன்! நன்மைகள் மீது சக்தி பெறுவதும் தீமைகளிலிருந்து விலகுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர வேறில்லை! அவன் யாவரையும் மிகைத்தவன்., நுண்ணறிவாளன்!

بسم الله الرحمن الرحيم

பாடம் : 1

# நிய்யத் - எண்ணமும் அதன் தூய்மையும்

١ بَابُ الاخْلاصِ وَ احْضَارِ النِّيَّةِ فِي جَمِيْعِ ألاعْمَالِ وَ الاَقْوَالِ البَارِزَةِ وَ الْخَفِيَّةِ

قال الله تعالي : وَمَا أُمِرُوْا اِلاَّ لِيَعْبُدُوا اللهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ حُنَفَاءَ وَ يُقِيْمُوْا الصَّلاَةَ وَ يُؤْتُوْا الزَّكَاةَ وَذلِكَ دِيْنُ الْقَيِّمَة ( سورة البينة الاية : ٥ ) وَقَالَ تَعَالي : لَنْ يَنَالَ اللهَ لُحُوْمُهَا وَ لادِمَاءُ هَا وَ لكِنْ يَنَالُهُ التَّقْوَي مِنْكُمْ ( سورة الحج الاية : ٣٧) وقــال تعالي: قُلْ اِنْ تُخْفُوْا مَا فِي صُدُوْرِكُمْ أوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللهُ (سورة آل عمران : ٢٩)

பாடம்:

**வாய்மையுடனும் தூய எண்ணத்துடனும் இருத்தல்.,வெளிப்படையான, மறைவான அனைத்து செயல்களிலும் சொற்களிலும்!**

அல்லாஹ் கூறுகிறான்: மேலும் தங்களது கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவர்களாகவும் ஓர்மனப்பட்டவர்களாகவும் அல்லாஹ்வை அவர்கள் வணங்கி வழிபட வேண்டும்., தொழுகையையும் நிலை நாட்ட வேண்டும்., ஜகாத்தும் கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தக் கட்டளையும் அவர்களுக்கு இடப்படவில்லை. இதுவே சீரான - செம்மையான மார்க்கமாகும் (98 : 5) - மற்றோர் இடத்தில்,
அந்தப் பலிப்பிராணிகளின் இரத்தமும் இறைச்சியும் அல்லாஹ்வைச் சென்றடையப் போவதில்லை. உங்களின் பயபக்தியே அவனிடம் போய்ச் சேர்கிறது (22 : 37) - இன்னோர் இடத்தில்,
உங்கள் உள்ளங்களில் உள்ளதை நீங்கள் மறைத்தாலும் வெளிப்படுத்தினாலும் சரியே அல்லாஹ் அதனை அறிகிறான் (3: 29)

## தெளிவுரை الشرح

## நிய்யத்தின் நிறைநிலை

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: பாடம்: வாய்மை மற்றும் தூய எண்ணத்துடன் இருத்தல் ...

நிய்யத் (எண்ணம்): இது எழுவது மனத்தில்தான். மனம்தான் அதற்குரிய இடம். எந்த ஓர் அமலானாலும் - எண்ணத்திற்கும் நாவுக்கும் தொடர்பில்லை. நிய்யத்தை நாவால் மொழிவதென்பது இல்லை. இதனால்தான் தொழுகை, நோன்பு, ஹஜ் அல்லது உளூ போன்ற அமல்களை செய்யும்பொழுது நிய்யத்தை நாவால்

மொழிபவன் பித்அத் எனும் புதிய நடைமுறையைக் கடைப்பிடித்த வன் ஆகிறான். அல்லாஹ்வின் மார்க்கத்தில் - அதில் இல்லாத ஒன்றைச் சொன்னவனாகிறான்!

நபி (ஸல்) அவர்கள் உளு, தொழுகை, தர்மம், நோன்பு, ஹஜ் போன்ற இபாதத் - வழிபாடுகளை நிறை வேற்றியபொழுது நிய்யத்தை நாவால் சொன்னதில்லை., அதாவது, யா அல்லாஹ், நான் உளு செய்ய நிய்யத் செய்கிறேன் என்றோ, யா அல்லாஹ், நான் தொழு வதற்கு நிய்யத் செய்கிறேன் என்றோ, யா அல்லாஹ், நான் தர்மம் கொடுக்க நிய்யத் செய்கிறேன் என்றோ, யா அல்லாஹ், நான் நோன்பு வைக்க நிய்யத் செய்கி றேன் என்றோ, யா அல்லாஹ், நான் ஹஜ் செய்ய நிய்யத் செய்கிறேன் என்றோ நபியவர்கள் சொன்னதில்லை. ஏனெனில் நிய்யத் - எண்ணத்திற்கான இடம் மனமே தவிர., நாவல்ல.

மனிதனின் உள்ளத்தில் எழுகிற எல்லா எண்ணங்களையும் அல்லாஹ் அறிகிறான்.,அவனுக்குத் தெரியாத தென்று எதுவுமே இல்லை. இமாம் நவவி அவர்கள் சுட்டிக்காட்டிய வசனம் ஒன்றில் இறைவன் குறிப்பிடுவது போன்று: <u>உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை நீங்கள் மறைத்தாலும் சரி, வெளிப்படுத்தினாலும் சரி அல்லாஹ் அவற்றை அறிகிறான்</u>

அனைத்து வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும்பொழுதும் மனத்தில் எண்ணத்தூய்மை - அதாவது, அல்லாஹ்வுக்காக மட்டுமே நிறைவேற்றுகிறோம் என்கிற வாய்மைநிலை இருக்க வேண்டும்., அவனது திருப் பொருத்தத்தையும் மறுமை வெற்றியையும் தவிர வேறெவும் மனத்தில் இருக்கக் கூடாது.

மேற்சொன்ன இன்னொரு வசனத்தின் கட்டளையும் இதுவே: "தங்களது கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கே உரிதாக்கியவர்களாய்...அவனை வழிபட வேண்டும் என்றுதான் அவர்களுக்குக் கட்டளை இடப்பட்டது" - அதா வது தங்களது அமல்களை அவனுக்கு மட்டுமே சமர்ப்பித்தவர்களாய் ...

எல்லா வணக்கவழிபாடுகளிலும் நிய்யத் - மனதில் நினைத்தல் இணைந்திருப்பது அவசியம். எடுத்துக் காட்டாக, உளு செய்கிற பொழுது - அல்லாஹ்வுக்காகச் செய்கிறோம்., அவனது கட்டளைக் குக் கீப்படிந்து செய்கிறோம் எனும் எண்ணம் இருக்க வேண்டும்.

ஆக, மூன்று விஷயங்களை மனத்தில் நினைக்க வேண்டும்.

1) அந்த வழிபாட்டை நினைப்பது
2) அதை அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றுவதாக நினைப்பது
3) அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நிறைவேற்றுவதாக நினைப்பது. இதுவே நிய்யத்தின் நிறைநிலை!

இவ்வாறே தொழுகையிலும்! உதாரணமாக நீங்கள் எந்தத் தொழுகையைத் தொழப்போகிறீர்களோ அந்தத் தொழுகையை நினைக்க வேண்டும். அது ளுஹர் அல்லது அஸ்ர் அல்லது மஃக்ரிப் அல்லது இஷா அல்லது ஃபஜ்ர் என்று நினைக்க வேண்டும். இரண்டாவதாக அத்தொழுகையை அல்லாஹ்வுக்காவே தொழுவ தாக நினைக்க வேண்டும். முகஸ்துதியையோ பிறர் உங்கள் தொழுகையைப் புகழ வேண்டுமென்றோ அல்லது பணத்தை, உலக நன்மையை அடைந்திட வேண்டும் என்றோ நீங்கள் எதிர்பார்க் கக்கூடாது. மூன்றாவதாக - "**தொழுகையை நிலைநாட்டுங்கள்** " என்றும் "**நீங்கள் அச்சமற்ற நிலைக்கு வந்தால் தொழுகையை நிலைநாட்டுங்கள்., ஜகாத் கொடுங்கள்** " என்றும் பல வசனங் களில் அல்லாஹ் இட்ட கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்தே அந்தத் தொழுகையை நீங்கள் நிறைவேற்றுவதாக நினைக்க வேண்டும்.

## வாய்மையும் நாமும்

இமாம் நவவி அவர்கள் குர்ஆனின் பல வசனங்களை இங்கு குறிப்பிட்டார்கள். அவை அனைத்தும் உணர்த்துவது இதையே: அதாவது, மனம்தான் எண்ணத்திற்கான இடம்., மேலும் மனிதனின் எண்ணங்களை அல்லாஹ் நன்கு அறிகிறான்.

சிலபொழுது மனிதன் செய்யும் ஒருசெயல் மக்களின் பார்வையில் நல்ல செயலாகத் தெரியலாம். ஆனால் அது கெட்ட செயல். நிய்யத் எனும் எண்ணம் அதனைக் கெடுத்துவிடுகிறது. உள்ளத்து எண்ணங்களையும் அல்லாஹ அறிந்துகொண்டிருக்கி றான் என்பதே அதற்குக் காரணமாகும். மறுமை நாளில் ஒரு மனிதனுக்கு நற் கூலியோ தண்டனையோ வழங்குவதென்பது நிய்யத் எனும் எண் ணத்தின் அடிப்படையில்தான்! அல்லாஹ் கூறுகிறான்: திண்ணமாக (இறைவனாகிய) அவன் மனிதனை மீண்டும் படைப்பதற்கு ஆற்றல் உள்ளவனாக இருக்கிறான். எந்நாளில் உள்ளத்தின் இரகசியங் களெல்லாம் சோதனையிடப்படுமோ அந்நாளில் மனிதனிடம் எந்த சயவலிமையும் இருக்காது. அவனுக்கு உதவி செய்பவர் எவரும் இருக்கமாட்டார்! (86 : 8 - 11)

ஆக, மறு உலகில் நற்கூலி, தண்டனை என்பது உள்ளத்து எண்ணங்களைப் பொறுத்து! ஆனால் இவ்வுல கில் வெளிப்படையான நிலைகளைக் கொண்டே மனிதன் நடத்தப்படுவன். ஆனாலும் இந்த வெளிப்படையான நிலைகள் அந்தரங்கமான நிலைகளுக்கு ஏற்ப அமைந்தால் - அவனது அகமும் புறமும் சீர்பெறுகின்றன.

மாறாக புறத்தின் நிலை ஒன்று., அகத்தின் நிலை வேறொன்று என்றிருந்தால் - உள்ளத்தில் கெட்ட எண்ணம் இருந்தால் - அல்லாஹ்தான் பாதுகாக்க வேண்டும்-அது மிகப்பெரிய இழப்பாகவே வந்து முடியும்.

ஆம், மனிதன் எவ்வளவோ அமல்கள் செய்கிறான்., கஷ்டப்படுகிறான். ஆனாலும் நிய்யத் - உள்நோக்கம் சீராக இல்லாததால் அவன் செய்த அமல்களின் மூலம் யாதொரு நற்பேறும் அவனுக்குக் கிடைப்பதில்லை.

அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்)அவர்கள் அருளியதுபோன்று: மனிதர்களால் கற்பனைசெய்யப்பட்ட கடவுளர் களை என்னுடன் இணை சேர்ப்பதை விட்டும் நான் மிகவும் தேவையற்றவன். ஒருவன் ஓர் அமல் செய்து அதில் பிறிதொன்றையும் என்னுடன் இணையாக்கினால் அவனது இணைவைப்புச் செயலை அவனோடு விட்டு விடுகி றேன்., நான் ஏற்றுக்கொள்வதில்லை (நூல்: முஸ்லிம்)

எனவே நிறைவேற்றும் ஒவ்வொரு வழிபாட்டையும் இக்லாஸ் எனும் வாய்மையுடன் நிறைவேற்றுவதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அதே நேரத்தில் ஓர் இறைவழிபாட்டை -அறப்பணியை நாம் நிறைவேற்ற நாடும்பொழுது ஷைத்தான் வந்து, நீ முகஸ்துதிக்காகவே செயல்படுகிறாய், என்று உள்ளத்தில் ஊசாட்டம் ஏற்படுத்தி. அதன் மூலம் நமது செயலூக்கத்தை குன்றிடச் செய்ய முனையலாம். அவனது ஊசாட்டத்தை நாம் பொருட்படுத்தக் கூடாது. ஷைத்தானின் சூழ்ச்சிவலைக்கு ஆளாகி அந்த அமலை விட்டுவிடக்கூடாது. நல்ல அமல்களை - நற்பணிகளை வாய்மையுடனும் ஊக்கத்துடனும் தொடர்ந்து ஆற்றிட வேண்டும். முகஸ்துதிக்காகவா இந்த அமலை இப்பொழுது நீங்கள் செய்கிறீர்கள் என்று யாரேனும் கேட்டால் இல்லை என்றுதானே சொல்வோம்! அப்படி யாயின் ஷைத்தான் ஏற்படுத்துகிற ஊசாட்டங்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை.

# எண்ணம்போல் வாழ்வு

١ – وَ عَنْ اَمِيْرِ الْمُؤْمِنِيْنَ اَبِيْ حَفْصٍ عُمَرَ بْنِ الْخَطَّاب بْنِ نُفَيْلِ بْنِ عَبْدِ الْعُزَّي بْنِ رِياحِ بْنِ عَبْدِ الله بْنِ قُرْطِ بْنِ رَزَاحِ بْنِ عَدِيِّ بْنِ
يَقُوْلُ : اِنَّمَا الاعْمَالُ بِالنِّيَاتِ وَ اِنَّمَا لِكُلِّ امْرِيءٍ مَا ﷺ قَالَ : سَمِعْتُ رَسُوْلَ الله ﵁ كَعْب بْنِ لُؤَيِّ بْنِ غَالِب بْنِ الْقُرَشِيِّ الْعَدَوِيِّ
نَوَي فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ اِلى الله وَ رَسُوْلِهِ فَهِجْرَتُهُ اِلى الله وَ رَسُوْلِهِ فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ اِلَى دُنْيَا يُصِيْبُهَا أَوْ امْرَأَةٍ يَنْكِحُهَا فَهِجْرَتُهُ اِلى مَا
هَاجَرَ اِلَيْهِ – مُتَّفَقٌ عَلَي صِحَّتِهِ رَوَاهُ اِمَامَا الْمُحَدِّثِيْنَ أَبُوْ عَبْدِ الله مُحَمَّدُ بْنُ اسْمَاعِيْلَ بْنِ اِبْرَاهِيْمَ بْنِ الْمُغِيْرَةِ بْنِ بَرْدِزْبَهْ الجُعْفِيُّ الْبُخَارِيُّ
وَ أَبُو الْحُسَيْنِ مُسْلِمُ بْنُ الْحَجَّاجِ بْنُ مُسْلمِ الْقُشَيْرِيِّ النَّيْسَابُوْرِيُّ رضي الله عنهما فِيْ صَحِيْحَيْهِمَا اللَّذَيْنِ هُمَا أَصَحُّ الْكُتُبِ الْمُصَنَّفَةِ

நபிமொழி: 1

உமர் பின் கத்தாப் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியதை நான் செவியுற்றிருக்கிறேன்: “செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே உள்ளன., ஒவ்வொரு மனிதனுக் கும் - அவன் எதை எண்ணினானோ அதுவே கிடைக்கும். எனவே அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரை நோக்கி ஒருவன் ஹிஜ்ரத்தை மேற்கொண்டால் அவனது ஹிஜ்ரத் அல்லாஹ் - ரஸூலுக்காக மேற்கொள்ளப் பட்டதாக அமையும். ஒருவன், உலகச் செழிப்பை அடைவதற்காக அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காக ஹிஜ்ரத்தை மேற்கொண்டால், அவனது ஹிஜ்ரத் - எதை நோக்கி மேற்கொண்டானோ அதை நோக்கியே அமையும்” - இதன் ஆதாரப்பூர்வ நிலை, ஏகோபித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. [1]

இதனை ஹதீஸ் ஆய்வாளர்களின் இமாம்களான, அபூ அப்தில்லாஹ் முஹம்மத் பின் இஸ்மாயீல் பின் இப்றாஹீம் பின் முகீறா பின் பர்திஸ்பால் ஜு அஃபிய்யுல் புகாரிய்யு, அபுல் ஹுஸைன் முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ் பின் முஸ்லிமில் குறைஷிய்யுன் நைஸாபூரிய்யு (ரளியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் தம் ஹதீஸ் தொகுப்பில் அறிவித்துள்ளார்கள். அவ்விரண்டும், ஹதீஸ் தொகுப்புகளிலேயே ஆதாரப்பூர்வமான நூல்களாகும்.

## தெளிவுரை الشرح

இந்தப் பாடத்தின் தலைப்பு இக்லாஸ் - அதாவது கண்ணியமும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்வுக்கென எண்ணத்தைத் தூய்மையாக்குதல் என்று அமைந்தபோது, ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு செயலிலும் எல்லா நிலையிலும் அல்லாஹ்வுக்காக என்று எண்ணத்தைத் தூய்மையாக்குவது அவசியம் என்றானபோது இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் குர்ஆன் வசனங்களையும்

[1] **இமாம் புகாரி வஹியின் ஆரம்பம் எனும் பகுதியில், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வஹியின் தொடக்கம் எவ்வாறு ஆரம்பித்தது எனும் பாடத்தில் இதனைப் புதிவு செய்துள்ளார்கள். எண்: 1 இமாம் முஸ்லிம் ஜிஹாத் எனும் பகுதியில் அமல்கள் எல்லாம் நிய்யத்தைப் பொறுத்தே எனும் பாடத்தில் இதனைப் புதிவு செய்துள்ளார்கள். எண்: 1907**

நபிமொழிகளையும் குறிப்பிட் டார்கள். உமர் (ரலி) அவர்கள் அறிவித்த இந்த ஹதீஸை முதலில் கொணர்ந்தார்கள். உமர் அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறநான் கேட்டிருக்கிறேன்:

❁ **செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே உள்ளன.**

❁ **ஒவ்வொரு மனிதனுக்கும் - அவன் எதை எண்ணினானோ அதுவே கிடைக்கும்.**

இந்த இரு வாக்கியங்கள் குறித்து நபிமொழி ஆய்வாளர்கள் இடையே பல கருத்துகள் நிலவுகின்றன. சிலர் கூறுவர்: இந்த இரண்டு வாக்கியங்களும் ஒரே பொருள் கொண்டவை. முதல் வாக்கியத்தின் பொருளையே இரண்டாம் வாக்கியமும் வலியுறுத்திக் கூறுகிறது!

இந்தக் கருத்து சரியானதல்ல. இரண்டாவது வாக்கியம் புதியதொரு கருத்தைக் கொடுப்பதே தவிர முந்தைய வாக்கியத்தின் கருத்தையே மீண்டும் கூறுவதல்ல.

சற்று ஆழமாகச் சிந்தித்தால் இவ்விரண்டு வாக்கியங்களுக்கு இடையே பெருத்த வேறுபாடு இருப்பதைப் புரிந்துகொள்ளலாம்.

❁ முதல் வாக்கியம் காரண அடிப்படையிலானது.

❁ இரண்டாம் வாக்கியம் விளைவாய் வருவது.

முதல் வாக்கியத்தில் - ஒவ்வொரு செயலுக்கும் எண்ணம் இருப்பது அவசியம் என்று நபியவர்கள் விளக்குகிறார்கள். மனிதன் அறிவும் செயல் சதந்திரமும் உடையவனாக இருந்தால் அவன் செய்யும் ஒவ்வொரு செயலின் பின்னணியில் எண்ணம் இருக்கத்தான் செய்யும். அறிவும் சதந்திரமும் உள்ள எந்த மனிதனின் செயலும் எண்ணமின்றி அமையாது. அப்படி அமைவது இயலாத ஒன்று!

அறிஞர் சிலர் கூறியதைக் கவனியுங்கள்: எண்ணுதல் இன்றி அமல் செய்யுமாறு அல்லாஹ் நம்மைப் பணித்திருந்தால் அது நம்மால் முடியாது. நமது சக்திக்கு அப்பாற்பட்டதை அல்லாஹ் நம்மீது சமத்தியதாக ஆகிவிடும்!

இந்தக் கருத்து முற்றிலும் சரியானது. நீங்கள் அறிவும் சதந் திரமும் பெற்றிருந்து - எவருடைய நிர்பந்தமும் இல்லாத நிலையில் ஒருசெயலைச் செய்யும்பொழுது எந்த ஓர் எண்ணமும் இல்லாமல் எப்படிச் செயல்படுவீர்கள்? அது நடைமுறைக்கு இயலாதது. நாட்டம் மற்றும் ஆற்றலில் இருந்து பிறப்பதே செயல்., நாட்டமே எண்ணம் என்பது!

இப்பொழுது பாருங்கள். முதல்வாக்கியம் - ஒரு செயலைச் செய்பவருக்கு ஓர் எண்ணம் இருப்பது அவசியம் எனும் பொருளைத் தருகிறது.

இங்கு இன்னொரு கருத்தை அறிந்து கொள்ள வேண்டும். எண்ணங்கள் பலவிதமாய் உள்ளன. ஓர் எண்ணத்திற்கும் மற்றோர் எண்ணத்திற்கும் வானம் - பூமி அளவு வேறுபாடு உள்ளது.

சிலரின் எண்ணம் நல்லதாக இருக்கும். அவர்களுடைய அமல்களில் மேலான - உன்னதமான குறிக்கோள் இருக்கும். வேறு சிலரின் எண்ணம் கீழ்த்தரமானதாய் இருக்கும். மட்டரகமான - கெட்ட நோக்கமே அவர்களின் உள்ளத்தில் ஒளிந்திருக்கும்.

நீங்கள் இரண்டு மனிதர்களைப் பார்க்கலாம்! இருவரும் ஒரே செயலைத்தான் செய்வார்கள்., அதன் தொடக்கம் - முடிவு, அமைதி, அசைவு எனும் அனைத்து அம்சங்களிலும் இருவரும் ஒன்றுபோல் தெரிவார்கள்! ஆனால் அவ்விருவருக்கும் வானம் - பூமி அளவு வித்தியாசம்! ஏன்? எண்ணத்தின் வேறுபாட்டினால்தான்!

ஆக, எண்ணமின்றி எந்த ஒருசெயலும் இல்லை., ஆனால் எண்ணங்கள் பலவிதம் என்பது ஓர் அடிப்படை ஆகும்.

இந்தக் கருத்தின் எதிர் விளைவைச் சுட்டிக்காட்டும் வகையில் நபியவர்கள் கூறினார்கள்: " **மனிதன் எதை எண்ணினானோ அதுவே அவனுக்குக் கிடைக்கும்** " என்று!

அவன் மேற்கொள்ளும் ஷரீஅத்தின் எல்லாச் செயல்களிலும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் மறுமை நலனையும் அவன் நாடினால் அவை அவனுக்குக் கிடைக்கும். அவற்றின் மூலம் உலக நலனை நாடினால் அது அவனுக்குக் கிடைக்கவும் செய்யலாம். கிடைக்காமலும் போகலாம்! அல்லாஹ் கூறுகிறான்:

من كان يريد العاجلة عجلنا له فيها ما نشاء لمن نريد

"விரைவில் கிடைக்கக்கூடிய உலகப் பலன்களை ஒருவன் விரும்புகிறான் எனில் அவனுக்கு உலகிலேயே கொடுத்து விடுகிறோம்., நாம் நாடுவதை! நாம் நாடுபவருக்கு மட்டும் " (17: 18)

- அதாவது அவன் நாடுவதை அவனுக்குக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லவில்லை. மாறாக, "**அவனுக்கு உலகிலேயே கொடுத்து விடுகிறோம்., நாம் நாடுவதை**" என்றே கூறுகிறான். அவன் நாடியதை அல்ல! இதேபோல், **நாம் நாடுபவருக்கு மட்டும்!** எல்லாருக்கும் அல்ல என்றே சொல்கிறான்! உலகிலேயே கொடுக்கிறோம் என்றால் யாருக்கு., எதனை என்பதைக் குறிப்பிட்டே கூறுகிறான். அதாவது, சிலருக்கு - அவர்கள்

நாடுவது அனைத்தும் உலகிலேயே வழங்கப்படுகிறது. வேறு சிலருக்கு ஏதோ சில கொடுக்கப்படுகிறது. இன்னும் சிலருக்கு எதுவும் கொடுக்கப்படு வதில்லை., எப்பொழுதும் கொடுக்கப்படுவதில்லை!

ஆனால் மறு உலகின் சுவனப் பேறுகள் அவ்வாறல்ல. அல்லாஹ் கூறுகிறான்:

وَمَنْ أَرَادَالآخِرَةَ وَ سَعَى لَهَا سَعْيَهَا وَهُوَ مُؤْمِنٌ فَأُولئِكَ كَانَ سَعْيُهُمْ مَشْكُوْرًا

“யார் மறுமையை விரும்புகிறாரோ - இறைநம்பிக்கை கொண்ட வராக இருந்து அதற்காகப் பாடுபடுகிற முறைப்படி பாடுபடுகிறாரோ அத்தகைய ஒவ்வொருவரின் முயற்சியும் மதிக்கப்படக்கூடியதாகவே இருக்கும்” (17 : 19)

ஆம்! இறைவனின் திருப்பொருத்தத்தையும் மறு உலகின் சுவனப் பேறுகளையும் நாடி நற்செயல் ஆற்றுபவர் கண்டிப்பாக அதற்கான நற்பயன்களை- கனிகளைப் பறித்து மகிழ்வார்! ஆக, **ஒவ்வொரு மனிதனுக்கும் - அவன் எதை எண்ணினானோ அதுவே கிடைக்கும்.**

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே உள்ளன என்று தொடங்குகிற இந்த நபிமொழி, செயலுக்கு அளவுகோலாய்த் திகழ்கிறது., ஆனால் இது அந்தரங்க நிலையைப் பொறுத்தது! இதேபோல் - இமாம் புகாரியும் இமாம் முஸ்லிமும் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவித்துள்ள

مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ

“**நமது வழிகாட்டல் இல்லாத அமலை ஒருவர் செய்வாராயின் அது ரத்து செய்யப்படும்**“ எனும் நபிமொழி வெளிப்படையான செயல்களுக்கு அளவு கோலாய்த் திகழ்கிறது. இதனால்தான் நபிமொழி ஆய்வாளர்கள் - இந்த இரண்டு நபிமொழிகளும் தீன்-இறைமார்க்கம் முழுவதையும் உள்ளடக்கியுள்ளன என்று கூறியுள்ளார்கள்!

## நிய்யத்தும் ஹிஜ்ரத்தும்

பிறகு நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸு க்குப் பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டு தந்தார்கள். கூறுகிறார்கள். **ஒருவன் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டால் அவனது ஹிஜ்ரத் அல்லாஹ் – ரஸூ லுக்காக மேற்கொள்ளப்பட்டதாக அமையும். ஒருவன் உலகச் செழிப்பை அடைவ தற்காக அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காக ஹிஜ்ரத் மேற்கொண்டால், அவனது ஹிஜ்ரத் - எதனை நோக்கி மேற்கொண்டானோ அதனை நோக்கியே அமையும்**

ஹிஜ்ரத்: இறைநிராகரிப்பு நாட்டை விட்டு வெளியேறி இஸ்லாமிய நாட்டிற்கு குடிபெயர்வது ஹிஜ்ரத் ஆகும்! எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் வாழும் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கிறார் - அமெரிக்கா நிராகரிப்பு நாடு - தனது இறைமார்க்கத்தைப் பகிரங்கமாக அங்கு கடைப்பிடித்து வாழ்வது அவருக்குச் சாத்தியமில்லை என்றால் அங்கிருந்து வெளியேறி இஸ்லாமிய நாடுகளுக்கு அவர் குடிபெயர வேண்டும். இதுதான் ஹிஜ்ரத்.

ஹிஜ்ரத்தை மேற்கொள்பவர்கள் நிய்யத் - எண்ணத்தைப் பொறுத்து பல வகைப்படுவர்.

1) அவர்களில் சிலர் தனது நாட்டைத் துறந்து அல்லாஹ் - ரஸூ லின் பக்கம் அதாவது அல்லாஹ்வும் ரஸூ லும் வழங்கிய ஷரீஅத்தின் பக்கம் ஹிஜ்ரத்தை மேற்கொள்கிறார்கள். இவர்கள்தாம் நன்மையை அடைப வர்கள். தமது நோக்கம் நிறை வேறப்பெற்ற வர்கள். அதனால்தான் **அது அல்லாஹ் – ரஸூ லின் பக்கம் மேற் கொள்ளப்பட்ட ஹிஜ்ரத்** என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது அவர் எதை எண்ணினாரோ அதை அடைந்துவிட்டார்.

2) உலக செழிப்பை எதிர்பார்த்து ஹிஜ்ரத் மேற்கொள்பவர்கள். எடுத்துக்காட்டாக, ஒருவன் பொருள் சம்பாதிக்க விரும்புகிறான். இஸ்லாமிய நாடுகளில் செல்வச் செழிப்பு அதிகம் உள்ளது., அதிக அளவு பணம் சம்பாதிக்க வாய்ப்புள்ளது என்று கேள்விப்படுகிறான். உடனே இறைநிராகரிப்பு நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டில் குடிபெயர்கிறான். இவனுக்குப் பொருளீட்டுவதுதான் ஒரே குறிக்கோள்! தீனை- இறைமார்க்கத்தை முழுமையாகக் கடைப்பிடித்து வாழ வேண்டும் எனும் நோக்கம் எதுவும் இல்லை.

3) இறைநிராகரிப்பு நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டிற்கு ஒருவன் ஹிஜ்ரத் மேற்கொள்கிறான்., அதன் நோக்கம் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதுதான்! அதாவது, அவனிடம் சொல்லப்பட்டது: நீ எங்கள் (இஸ்லாமிய) நாட்டிற்கு குடிபெயர்ந்துவந்தால் இன்ன பெண்ணை உனக்குத் திருமணம் செய்து தருவோம். அதன் பிறகு நிராகரிப்பு நாட்டிற்கு அவளை அழைத்துச் செல்லக்கூடாது என்று! உடனே எப்படியாவது அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் எனும் ஆசையில் இறைநிராகரிப்பு நாட்டை விட்டு வெளியேறி இஸ்லாமிய நாட்டிற்கு குடிவந்து விட்டான்.

முதலாமவன் உலகின் சுகவாழ்வை நாடிவந்தவன், இவனோ பெண்ணைத் திருமணம் செய்வதற்காக வந்தவன். இவ்விருவரும் அல்லாஹ் - ரஸூ லை நோக்கி ஹிஜ்ரத்தை மேற்கொள்ளவில்லை.

அதனால்தான் இது பற்றி நபியவர்கள் குறிப்பிடும்போது - அவர்களது ஹிஜ்ரத், அவர்கள் அடையும் உலகச் செழிப்பை நோக்கி அமையும் என்றோ அல்லது அவன் திருமணம் செய்யும் பெண்ணை நோக்கி அமையும் என்று குறிப்பிடவில்லை. - **எதனை நோக்கி மேற்கொண்டானோ அதனை நோக்கியே அமையும்** என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன காரணம்?

வாசகம் நீளும் என்பதே இதற்குக் காணரம் என்பர் சிலர். அதாவது அவன் அடையவிருக்கும் உலகச் செழிப்பை நோக்கி அல்லது அவன் திருமணம் செய்யும் பெண்ணை நோக்கி அவனது ஹிஜ்ரத் அமையும் என்று கூறினால் வாசகம் நீண்டு கொண்டே போகும் என்பதனால்தான் நபியவர்கள் சுருக்கமாகக் கூறினார்கள் என்பர்.

இன்னொரு கருத்தும் உண்டு. அவ்விரு நோக்கங்களையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் புறக்கணித்ததன் காரணம் அந்த நோக்கங்கள் அற்பமானவை என்று குறிப்பால் உணர்த்துவது ஆகும். உன்னத வழிபாடாகிய ஹிஜ்ரத்தின் நோக்கம், உலகச் செழிப்பை அடைவதும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதும்தான் என்றால் அதுபோல கீழ்த்தரமான, மட்டரகமான நோக்கம் வேறெதுவும் இருக்க முடியாது!

ஆக, ஹிஜ்ரத்தின் நோக்கம் இது அல்லது அது அல்லது இரண்டும்தான் என்றால் அது மிக கீழ்த்தரமானது, மட்டரகமானது! ஆனால் ஹிஜ்ரத் என்பது அல்லாஹ், ரஸூலுக்காக என்றால் அது, மிகவும் உன்னதமான நோக்கம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஹிஜ்ரத் மூன்று வகைப்படும்:

1) ஹிஜ்ரதுல் ம(க்)கான் - இடத்தை வெறுப்பது
2) ஹிஜ்ரதுல் அமல் - செயலை வெறுப்பது
3) ஹிஜ்ரதுல் ஆமில் - செயல்படுபவரை வெறுப்பது

## இடத்தை வெறுப்பது

பாவங்களும் தீமைகளும் நிறைந்த இடத்தை - சிலபோது அது நிராகரிப்பு நாடாகவும் இருக்கலாம் - அத்தகைய நாட்டை விட்டு வெளியேறி நல்ல சூழ்நிலையுள்ள நாட்டிற்கு குடிபெயருவதாகும்.

அனைத்தினும் மகத்தான ஹிஜ்ரத் எதுவெனில், நிராகரிப்பு நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்வதுதான். கல்வியாளர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் தனது தீனை - இறைமார்க்கத்தை வெளிப்படையாகக் கடைப்பிடித்து வாழ்ந்திட முடியவில்லை என்றால் நிராகரிப்பு நாட்டிலிருந்து இஸ்லாமிய நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்வது அவன் மீது கடமையாகும்.

ஆனால் தனது தீனை வெளிப்படையாகக் கடைப்பிடித்து வாழ்வதற்கு அவனால் முடியும் என்றால் - இஸ்லாத்தின் சின்னங்களை நிலைநாட்டுவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றால் ஹிஜ்ரத் செய்வது அவன் மீது கடயைாகாது. ஆனால் அது முஸ்தஹப் - விரும்பத்தக்கது ஆகும். இதன் அடிப்படையில் இங்கு தங்கியிருப்பதைக் காட்டிலும் பெரும் தவறாக ஆகிவிடும் ஒருவன் நிராகரிப்பு நாட்டிற்குச் சென்று குடியேறுவது! ஒரு மனிதனின் தாய்நாடே நிராகரிப்பு நாடாக இருந்தால், தனது தீனை கடைப்பிடித்து வாழ்வதற்கு அவனால் இயலவில்லை என்றால் அந்நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் செய்வது அவன் மீது கடமையாகும்.

இவ்வாறே ஒருமனிதன் இஸ்லாத்தை முழுமையாகக் கடைப் பிடிப்பவனாகவும் முஸ்லிம்களின் நாட்டைச் சேர்ந்தவனாகவும் இருந்தால் நிராகரிப்பு நாட்டிற்கு அவன் பயணம் செய்வது கூடாது. ஏனெனில் அவனது தீன் வாழ்க்கைக்கும் குணவொழுக்கத்திற்கும் அதில் ஆபத்து இருக்கிறது. மேலும் அது பணத்தை வீண்விரயம் செய்வதாகவும் நிராகரிப்பாளர்களின் பெருளாதாரத்தை வலுப்படுத் துவதாகவும் இருக்கிறது. மேலும் நிராகரிப்பாளர்களுடன் - நம்மால் முடிந்த எல்லா வழிகளிலும் கடினமான போக்கை மேற்கொள்ள நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: “இறைநம்பிக்கை கொண்டவர்களே, இறைமறுப்பாளர்களில் யார் உங்களை அடுத்திருக்கிறார்களோ அவர்களுடன் போர் புரியுங்கள். அவர்கள் உங்களிடம் கடினமான போக்கைக் காண வேண்டும். அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களுடன் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்” (9 : 123)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: “சத்தியத்தை நிராகரிப்பவர்களுக்கு வெறுப்பாக இருக்கும் பாதையில் எந்த ஓர் அடியை அவர்கள் எடுத்துவைத்தாலும், மேலும் எந்தப் பகைவனிடமும் (சத்திய விரோதப் போக்கிற்காக) எந்தப் பழியை அவர்கள் வாங்கினாலும் அவை ஒவ்வொன்றுக்கும் பகரமாக அவர்களின் பெயரில் ஒரு நன்மை எழுதப்படாமல் ஒருபோதும் விடப்படமாட்டாது. நிச்சமாக அல்லாஹ் நற்பணி ஆற்றுவோரின் கூலியை வீணாக்குவ தில்லை” (9 : 120)

(அந்நாடுகளில் உள்ள) நிராகரிப்பாளன், கிறிஸ்தவனாக அல்லது யூதனாக, நாத்திகனாக எப்படி இருந்தாலும், அவன் தனக்கு இஸ்லாத்தின் பெயரைச் சூட்டியிருந்தாலும் சூட்டாதிருந்தாலும் சரியே - அவன் அல்லாஹ்வுக்கு விரோதிதான். அவனது வேதத்திற்கும் அவனுடைய தூதருக்கும் நம்பிக்கையாளர்கள் அனை

வருக்கும் அவன் விரோதிதான். அவனுடன் எவ்வளவு தொடர்புகள், பழக்கங் கள் இருந்தாலும் சரியே, அவன் பகைவன்தான்!

எனவே நிராகரிப்பு நாட்டிற்குப் பயணம் செல்வது யாருக்கும் கூடாது., பின் வரும் மூன்று நிபந்தனைகள் இருந்தாலே தவிர!

1) ஐயங்களை அகற்றிட உதவக் கூடிய கல்வி ஞானம் அவனிடம் இருக்க வேண்டும். ஏனெனில் முஸ்லிம் கள் மத்தியில் பல்வேறு ஐயங்களை எதிரிகள் கிளறுகிறார்கள். அவர்களின் தீன் (இறைமார்க்கம்) அவர்களின் தூதர், அவர்களின் வேதம், அவர்களின் குணநலன்கள் குறித்து - முஸ்லிம்கள் தொடர்பான எல்லா விஷயங் கள் குறித்தும் பற்பல ஐயங்களைக் கிளறுகிறார்கள். மனிதன் ஐயத்திற்கும் தடுமாற்றத்திற்கும் ஆளாகிட வேண்டும் என்பதற்காக! உறுதிகொள்ள வேண்டிய விஷயங்களில் ஒரு மனிதனுக்கு ஐயம் ஏற்பட்டுவிட்டால், அவன் கடமைகளை நிறைவேற்ற மாட்டான் என்பது திண்ணம். அல்லாஹ்வின் மீதும் மலக்குகள், வேதங்கள், தூதர்கள், மறுமை நாள், விதி ஆகிய விஷயங்கள் மீது உறுதியான நம்பிக்கை கொள்வது கடமையாகும். ஒரு மனிதன் இவற்றில் ஐயம் கொண்டுவிட்டால் அவன் நிராகரிப்பாளன் ஆகிவிடுவான்.

முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு ஐயங்களைக் கிளப்புகிறார்கள் நிராகரிப்பாளர்கள். அவர்களில் சில தலை வர்கள் இப்படி வெளிப்படையாகக் கூறுகிறார்கள்:

ஒரு முஸ்லிமை அவனது மதத்தை விட்டும் வெளியேற்றி கிறிஸ்துவ மதத்தில் சேர்க்க வேண்டும் என்று நீங்கள் முயற்சி செய்யாதீர்கள். அவனது மதத்தில் அவனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துங்கள். அது போதும்! அப்படிச் செய்து விட்டாலே அவனிடம் இருந்து அவனது மதத்தைப் பறித்து விடலாம்.

இன்னும் கூறுகிறார்கள்: உயர்வு, கண்ணியம், கொரவம் ஆகியவை எந்தக் கொள்கைப் பிடிப்பில் இருக்கி றதோ அந்தக் கொள்கைப் பிடிப்பை விட்டும் முஸ்லிமை வெளியேற்றுங்கள்., அது போதும். வழிகேடு மற்றும் மௌட்டிகத்தின் மீது அமைந்த கிறிஸ்தவ மதத்தில் அவனைச் சேர்க்க வேண்டும் என்று முயற்சி செய்தால் அது நடக்கும் காரியமல்ல. (என்றுதான் சொல்கிறார்கள்)

ஏனெனில் கிறிஸ்தவர்கள் வழிகெட்வர்கள் (என்பது எல்லோரும் அறிந்தது) நபிமொழியில்[↓] வந்திருப்பது போன்று! ஈஸா நபி போதித்த மார்க்கம் சத்தியமானதே. ஆனால் அந்நிலை ஈஸா நபி வாழ்ந்த காலத்தில் தான்., முஹம்மத் நபியவர்களின் தூதுத்துவம் வந்த பிறகு அது மாற்றப்பட்டு விட்டது. இப்போது நேர்வழியும் சத்தியமும் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில்தான் உள்ளது.

2) ஐயங்களை விட்டும் அவனைப் பாதுகாக்கும் அளவுக்கு மார்க்கம் அவனிடம் உறுதியாக இடம்பெற்றி ருக்க வேண்டும். ஏனெனில் அதன் மூலம்தான் ஒரு மனிதன் ஐயங்களைக் களைந்திட முடியும். எந்த மனித னிடம் மார்க்கம் உறுதியாக இல்லையோ அவன் நிராகரப்பு நாட்டிற்குச் சென்றால் அதில் மூழ்கிவிடுவான். உலகின் செழுமையை அவன் காண்கிறான். மது, மாது, ஓரினச்சேர்க்கை போன்ற இச்சையைத் தூண்டக் கூடியவையும் அனைத்துப் பாவங்களும் நிராகரிப்பு நாட்டில் மலிந்துள்ளன. எனவே அந்த நாடுகளுக்கு அவன் சென்றுவிட்டால் இந்தச் சகதிகளில் அவன் வழுக்கி விழுந்துவிடுவானோ என்று அச்சம் ஏற்படும் சூழ்நிலை தான் உள்ளது. ஆனால் அவற்றில் இருந்து அவனைக் காப்பாற்றும் அளவுக்கு மார்க்கப்பிடிப்பு அவனிடம் இருந்தால் அங்கு பயணம் செய்யலாம்! மனம்போன போக்கில் செல்லவிடாமல் தடுக்கும் மார்க்கப்பிடிப்பு ஒருவனிடம் இருப்பது அவசியமாகும்.

3) அந்நாடுகளுக்குச் செல்ல வேண்டிய தேவை இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நோயாளி, நிராகரிப்பு நாட்டிற்குச் சென்று சிகிச்சை செய்யத்தான் வேண்டும். அல்லது ஒரு மாணவன் மேற்படிப்புக்காக அங்கு செல்ல வேண்டிய தேவை உள்ளது. அதற்கான வசதி இஸ்லாமிய நாட்டில் இல்லை. எனவே அப்படிப் பட்ட மாணவன் அந்நாடுகளுக்குச் சென்று கல்வி கற்கத்தான் வேண்டும். அல்லது ஒரு வியாபாரி வணிகத் தேவைகளுக்காக அங்கு செல்ல வேண்டியுள்ளது. அப்படிப்பட்டவர் அங்கு சென்று வணிகம் செய்து திரும்ப வேண்டியதுதான்.

முக்கியம் எதுவெனில், ஏதேனும் தேவை இருக்க வேண்டும். அதனை முன்னிட்டு நராகரிப்பு நாடுகளுக்குப் பயணம் செய்யலாம். எனவேதான் நான் சொல்கிறேன்:

சுற்றிப்பார்க்கும் நோக்குடன் அந்நாடுகளுக்குப் பயணம் செய்பவர்கள் பாவிகள் ஆவர். இப்படிப்பட்ட பயணத் திற்குச் செலவு செய்யும் ஒவ்வொரு காசும் அவர்களுக்கு ஹராம் - விலக்கப்பட்டதாகும். பணத்தை விரயம் செய்வதாகத்தான் ஆகும். அது பற்றி மறுமை நாளில் அவர்களிடம் கேள்வி - கணக்கு கேட்கப்படும். அது

---

[↓] திர்மிதி இதைப் பதிவு செய்துள்ளார்கள். பகுதி: குர்ஆன் விரிவுரை. பாடம்: ஃபாத்திஹா அத்தியாயத்தில் சேர்ந்தது. (எண் 2953, 2954) அதன் வாசகம்: யூதர்கள் இறைச்சினத்திற்கு ஆளானவர்கள். கிறிஸ்தவர்கள் வழிகெட்டவர்கள். முஸ்னத் அஹ்மதில் (எண் 378- 4) அதன் வாசகம்: நிச்சயமாக இறைச்சினத்திற்கு ஆளானவர்கள் யூதர்கள், நிச்சயமாக வழிகெட்டவர்கள் கிறிஸ்தவர்கள் மேலும் திர்மிதி இமாம் கூறுகிறார்கள்: இது ஹஸன் ஃகரீப் தரத்திலான ஹதீஸ் ஆகும். ஸஹீஹு ல் ஜாமிஉ வில் இது கடைசி ஹதீஸ் ஆக பதிவாகியுள்ளது.

எப்படிப்பட்ட நாள்? அங்குச் சுற்றித் திரியவோ உல்லாசம் போகவோ எந்த இடத்தையும் அவர்கள் காண முடியாது. உலகத்தில் தாங்கள் செய்த அமல்களைத்தான் அந்த மறுமை நாளில் காண்பார்க்ள்!

ஏனெனில், இப்படிப்பட்டவர்கள் தங்கள் நேரங்களை வீணாக்குகிறார்கள்., பணத்தைப் பாழாக்குகிறார் கள். தங்கள் குணவொழுக்கத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள். சில நேரங்களில் அவர்களின் குடும்பத் தினரும் அவர்களுடன் செல்வார்கள்.

ஆச்சரியம் என்னவெனில், இவர்கள் செல்லக்கூடிய அந்த நிராகரிப்பு நாடுகளில் பாங்கு சப்தத்தைக் கேட்க முடியாது. திக்ர்-இறைநினைவு தொடர்பாக எந்த வார்த்தையையும் கேட்க முடியாது. இங்கு அவர்கள் கேட்பதெல்லாம் யூதர்களின் சங்கு சப்தத்தையும் கிறிஸ்தவர்களின் நகரா ஓசையையும்தான்! இந்நிலையில் அங்கு மனைவி - மக்களுடன் மாதக்கணக்கில் - வருடக்கணக்கில் தங்கி இருக்கிறார்கள். இதனால் ஏற்படும் தீமைகளுக்கு அளவே இல்லை. அல்லாஹ்தான் நம்மைப் பாதுகாக்க வேண்டும்.

இது எப்படிப்பட்ட சோதனை எனில், இதனால்தான் அல்லாஹ் துன்பங்கள் கொடுத்துக் கொண்டிருக்கி றான். என்னென்ன துன்பங்கள் நமக்கு வர இருக்கின்றனவோ, என்னென்ன துன்பங்களை நாம் சகித்துக் கொண்டிருக்கிறோமோ அவை அனைத்திற்கும் காரணம் பாவங்களும் தீமைகளும்தான்! குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: உங்களுக்கு ஏற்பட்ட எந்தத் துன்பமானாலும் அது உங்கள் கைகள் சம்பாதித்தவைதான். மேலும் அவன் (இறைவன்) பெரும் பாலான பாவங்களைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுகிறான் (42: 30)

## த:.வத் - அழைப்புப் பணிக்காக ஹிஜ்ரத்

இங்கு இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் நற்கல்வியாளராகவும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் உறுதியும் உடையவராகவும் அவரது சொல் - செயலுக்குப் பிற மத மக்களை இஸ்லாத்தின்பால் ஈர்க்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருந்தால் - இப்படிப்பட்டவர் அழைப்புப் பணியின் நோக்கத்திற்காக நிராகரிப்பு நாட்டிற்கு ஹிஜ்ரத் செல்வது கூடும். அதற்கு அனுமதி உண்டு என்பது மட்டுமல்ல இறைமார்க்க ரீதியான ஒரு தேவையுமாகும் அது!

ஏனெனில் இப்படிப்பட்ட நாடுகளில் வாழும் மக்களுக்கு - குறிப்பாக யூத, கிறிஸ்தவ மக்களுக்கு இஸ்லாத் தைப் பற்றி எந்த விவரமும் தெரியாது என்பது ஒருபுறம் இருக்க இஸ்லாத்தைப் பற்றிய தவறான கருத்தே பெரும்பாலான மக்களின் உள்ளங்களில் ஊட்டப்பட்டுள்ளன. இஸ்லாம் என்றால் ஒழுங்கற்ற - நெறிமுறை களில்லாத-காட்டுமிராட்டித்தனமான மதம் என்றுதான் அவர்களுக்கு மத்தியில் திட்டமிட்டுப் பரப்பப்பட்டுள்ளது., பரப்பப்பட்டு வருகிறது!

குறிப்பாக மேலைநாட்டு மக்களை எடுத்துக் கொள்ளுங்கள். இஸ்லாத்தின் அடிப்படை கொள்கை, அதன் சிறப்பு, இறுதித்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் தூயவாழ்வு, அருளார்ந்த ஆளுமை ஆகியவை பற்றி எதுவும் தெரியாது. அதேநேரத்தில் - முஸ்லிம்களில் சில வழிதவறிகள், மன இச்சைக்கு அடிமைப்பட்டு வாழும் தீயவர்கள் தங்களையும் முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டு இஸ்லாத்திற்கெதிரான காரியங்களைச் செய்கிறார்கள்., இஸ்லாத்திற்கு முரணான கருத்துக்களைப் பேசுகிறார்கள். இவற்றைப் பார்க்கிற மேலைநாட்டு மக்கள் இவர்களின் மதம்தான் இஸ்லாமா? இஸ்லாம் என்றால் காட்டுமிராண்டிகளின் கூடாரமா? என்று கருத்து மயக்கம் கொள்கிறார்கள். இவர்கள் இஸ்லாத்தை வெறுப்பதற்கு என்ன காரணம்? இறைவாக்கான குர்ஆனையும் நபிகளாரின் தூய வாழ்வையும் அறிந்து கொள்ள முன்வராததற்கு தடையாக இருப்பது எது? இப்படிப்பட்ட வழிதவறிய முஸ்லிம்களும் அவர்களின் தவறான நடத்தைகளும் நடவடிக்கைகளும்தான் காரணம்!

இந்நிலையில், அந்த நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்க ளுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனை களையும் அடிப்படைகளையும் புரிய வைப்பது முஸ்லிம்களின் மீது கடமை. த:.வா - அழைப்புப்பணியில் ஆற்ற லும் ஆர்வமும் உள்ளவர்கள் இந்நோக் கத்திற்காக அந்த நாடுகளுக்குச் செல்வது அவசியமாகும். அதற்காக ஹிஜ்ரத் மேற்கொண்டு அங்கேயே குடியேறிட வேண்டும். இது இஸ்லாமிய அழைப்புப் பணியின் இன்றியமையாத் தேட்டமாகும்.

இங்கு வந்திருப்பவர்கள் வராதவர்களுக்கு எனது செய்தியை எட்டச்செய்யுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜில் இட்ட கட்டளைக்கு ஏற்ப நபித்தோழர்கள் உலகின் பலபாகங்களை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள்., ஆங்காங்கே குடியேறி இஸ்லாத்தின் இனிய செய்தியை மக்களுக்குப் போதித் தார்கள். இதேபோல் அதற்கடுத்தடுத்த தலைமுறைகளில் தோன்றிய ஆன்றோரும் சான்றோரும் அழைப்புப் பணிக்காக இத்தகைய ஹிஜ்ரத்தை மேற்கொண்டார்கள். இவையாவும் இங்கு நினைவு கூரத் தக்கவையாகும்.

## செயலை வெறுப்பது

இதுஅல்லாஹ் விலக்கிய பாவங்களையும் தீமைகளையும் வெறுப்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

كما قال النبي ﷺ : الْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُوْنَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ وَ الْمُهَاجِرُ مَنْ هَجَرَ مَا نَهَي اللهُ عَنْهُ – متفق عليه

எவனது நாவிலிருந்தும் கையிலிருந்தும் பிற முஸ்லிம்கள் நிம்மதி பெற்றிருக்கிறார்களோ அவன்தான் முஸ்லிம்! மேலும் அல்லாஹ் விலக்கிய தீமைகளை எவன் வெறுத்தொதுக்கினானோ அவன்தான் ஹிஜ்ரத் செய்தவன்" (நூல்: புகாரி, முஸ்லிம்)

எனவே அல்லாஹ் விலக்கியுள்ள எல்லாத் தீமைகளிலிருந்தும் நாம் விலகிடவேண்டும்., அவற்றை வெறுத்திட வேண்டும். அல்லாஹ்வுக்குச் செலுத்தும் கடமைகளில் அலட்சியம் செய்வதும் தீமைதான். மனிதர்களின் உரிமைகளைப் பறிப்பதும், அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைப் புறக்கணிப்பதும் தீமைகள்தான்! இவ்விருவகை தீமைகளில் இருந்தும் விலகிட வேண்டும்!

திட்டுவது, ஏசவது,கொலை, கொள்ளை,திருட்டு, மோசடி, பிறர் பொருளை அநியாயமாக உண்பது, பெற்றோரை நிந்திப்பது, இரத்த பந்தங்களைத் துண்டிப்பது போன்ற எல்லாத் தீமைகளையும் நாமும் தவிர்த்திட வேண்டும்., மனித சமுதாயத்திலிருந்தும் அவற்றைக் கெல்லி எறிந்திட வேண்டும்.

## செயல்படுபவரை வெறுப்பது

யார் தீமைகள் - பாவங்கள் புரிகிறார்களோ அவர்களை வெறுப்பதும் அவர்களுடைய தொடர்பை நிறுத்துவமாகும் இது.

மார்க்க அறிஞர்கள் சொல்வர்: ஒருவன் பாவத்தை வெளிப்படையாகச் செய்கிறானெனில்,அதற்கு வெட்கப்படுவதில்லையெனில், அவனுடன் யாரும் பேசாமல் - எவ்விதத் தொடர்பும் வைக்காமல் அவனை வெறுத்து ஒதுக்கிட வேண்டும். இது ஷரீஅத்தின் கட்டளையாகும்,,

ஆனால் ஒன்று: அப்படி வெறுப்பதனால் பயனேதும் விளையும் நிலை இருக்க வேண்டும். எல்லோரும் அவனை வெறுத்தால் அவன் திருந்திவிடுவான்., தனது தவறினை உணர்ந்து பாவம் புரிவதை விட்டுவிடுவான் என்றிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, சமுதாயத்தில் வெளிப்படையாக வட்டித் தொழில் செய்யும் மனிதனை எல்லோரும் வெறுத்தால், யாருமே அவனுடன் பேசாமல், ஸலாம்கூட சொல்லாமல் விலகிச் சென்றால் அவன் வெட்கப்பட்டு அல்லது விரக்தி அடைந்து திருந்தும் நிலை இருக்க வேண்டும். அந்தத் தீய தொழிலைக் கைவிடும் நிலை இருக்க வேண்டும்.

அப்படி வெறுத்தொதுக்குவதால் எவ்விதப்பயனும் இல்லையெனில் அதில் சற்றுதளர்வு காட்டலாம். சற்று நெளிவுசளிவான போக்கை மேற்கொள்ளலாம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

كما قال النبي ﷺ : لاَ يَحِلُّ لِمُؤْمِنٍ أنْ يَهْجُرَ أخاَهُ فَوْقَ ثَلاَثٍ يَلْتَقِياَنِ فَيُعْرِضُ هذاَ وَ يُعْرِ ضُ هذاَ وَ خَيْرُهُماَ الَّذِي يَبْدَأُ بِالسَّلاَمِ

– متفق عليه

தன் சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்தொதுக்குவது இறைநம்பிக்கையாளனுக்கு ஆகுமானதல்ல. இருவரும் சந்திக்கும்பொழுது இவர் இப்படியும் அவர் அப்படியுமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்வது கூடாது. இருவரில் யார் முந்திக் கொண்டு ஸலாம் சொல்கிறாரோ அவர்தான் சிறந்தவர்" (நூல்: புகாரி, முஸ்லிம்) - ஆனாலும் தொடர்ந்து சீர் திருத்தத்திற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

பாவம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அது பயனளித்தது என்பதற்கு நபித்தோழர்களின் வாழ்வில் ஓர் அழகிய எடுத்துக்காட்டு உண்டு. கஅப் பின் மாலிக், ஹிலால் பின் உமைய்யா, மிறாறா பின் ரபீஃ (ரலியல்லாஹு அன்ஹு ம்) ஆகிய மூன்று நபித்தோழர்களும் தபூக் போரில் கலந்து கொள்ளாமல் மதீனாவிலேயே தங்கிவிட்டார்கள். அவர்களின் சோம்பலும் பொடுபோக்கும்தான் அதற்குக்காரணம். போர்க்களத்தில் இருந்து திரும்பி வந்த நபியவர்கள் அம்மூன்று தோழர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார்கள். அவர்களைச் சமூகத்தை விட்டும் ஒதுக்கி வைத்தார்கள். யாரும் அவர்களுடன் பேசக்கூடாது., ஸலாம் கூட சொல்லக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தார்கள். நபி (ஸல்)அவர்கள் எடுத்த இந்நடவடிக்கை நற்பயனளித்தது. அம்மூன்று தோழர்களும் திருந்தினார்கள். வாய்மையான முஸ்லிம்களாய் மீண்டும் திகழ்ந்தார்கள்.

### அறிவிப்பாளார் அறிமுகம்

## உமர் பின் கத்தாப் (ரலி)

உமர்(ரலி)அவர்கள் குறைஷி குலத்து சிறப்புமிகு தலைவர்களுள் ஒருவர். அறியாமைக் காலத்தில் பிரச்னைக்குரிய விவகாரங்களில் சமரசம் செய்து வைக்கும் பொறுப்பு உமர் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. நபித் துவ 6 ஆம் ஆண்டில் இவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பொழுது சமார் 40 பேர் மட்டுமே முஸ்லிம்களாகி இருந்தார்கள். உமர் அவர்களது வருகையால் இஸ்லாத்திற்குக் கண்ணியமும் உதவியும் கிடைத்தது! மதீனாவை நோக்கி முதன் முதலில் ஹிஜ்ரத்தை மேற்கொண்டவர்களுள் உமர் (ரலி) அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள், பத்று போரிலும் பைஅதுர் ரிள்வான் என்ற போர்ப் பிரமாண நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். தவிர நபிகளாரின் தலைமையில் நடந்த எல்லாப் போர்களிலும் உமர் அவர்கள் பங்கேற்றார்கள்.

அபூபக்ர் (ரலி)அவர்களுக்குப் பிறகு ஃகிலாஃபத் ஆட்சிப் பொறுப்பு உமர் (ரலி)அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. மிகச் சிறந்த ஆட்சியை வழங்கினார்கள். சிரியா, ஈராக் மற்றும் எகிப்து போன்ற நாடுகளை வெற்றி கொள்ளும் பேற்றை அவர்களுக்கு அல்லாஹ் வழங்கினான். அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு ஸஹாபாக் களிலேயே சிறந்தவர்கள் உமர் (ரலி) அவர்கள்தாம்!

உமர் (ரலி)அவர்கள், ஃபஜ்ர் தொழுகையின்பொழுது அபூ லுஃலுஆ என்ற அடிமை ஒருவனால் குத்தப்பட்டு ஷஹீதானார்கள்! நபி (ஸல்) அவர்கள் அடக்கம் செய்யபட்டுள்ள வீட்டிலேயே அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு அடுத்து நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்! உமர் (ரலி) அவர்களின் மூலமாக சமார் 537 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள்- شرح الكلمات

| | |
|---|---|
| 1) எண்ணத்தூய்மை, வாய்மை. இது-அல்லாஹ்வின் உவப்பை மட்டுமே உள்ளத்தில் நாடும் நிலை யாகும். அமல்கள் ஒப்புக் கொள்ளப் படுவதற்கு இது நிபந்தனையாகும்! | ١)الاخلاص :مصدرأخلصوهوعمل القلب الذي يراد به وجه الله تعالي لا غيره وهوشرط لقبول الاعمال |
| 2) ஓர்மனப்பட்டவர்கள்: அசத்தியமான மதங்கள் அனைத்தை விட்டும் விலகி தீனுல் இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்தவர். | ٢) حنفاء: جمع حنيف أي مائلين عن الاديان الباطلة الي دين الاسلام |
| 3) சீரான மார்க்கமாகும்: இரு விதமாக பொருள் கொள்ளலாம்: சீரான நெறியை போதிக்கும் மார்க்கமாகும். அல்லது சத்தியத்தை நிலை நாட்டும் சமுதாயத் தின் மாாக்கமாகும். | ٣) دين القيمة: نعت لموصوف محذوف: أي دين الملة المستقيمة او دين الامة القَيِّمَةِ بالحق أي القائمة يه |
| 4) அவற்றின் இறைச்சிகள் அல்லாஹ் வைச் சென்றடையமாட்டா. அதாவது, அவற்றை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான். (அறியா மைக் காலத்து மக்கள் குர்பானி கொடுத்த ஒட்டகங்களின் ரத்தத்தை கஃபாவின் சவரு களில் தேய்த்துக் கொண்டிருந்தனர். அதற்கான மறுப்பு இதிலுள்ளது. | ٤) لن ينال الله لحومها : لن تصل اليه وهو تعبير مجازي عن عدم القبول وفي الآاية رد لما كان يفعله أهل الجاهلية من تلطيخ البيت الحرام بدماء البد ن |
| 5) சிங்கம். அபு ஹப்ஸ் என்பது உமர் (ரலி) அவர்களின் குறிப்புப்பெயர்! | ٥) الحفص: الاسد وأبوحفص كنية لعمر بن الخطاب رضي الله عنه |
| 6) ஹதீஸ் தொகுப்பாளர்களின் இரு இமாம்கள்: அவர்கள்தாம் அபூ அப்தில் லாஹ் முஹம்மத் பின் இஸ் மாயீல் பின் இப்ராஹீம் பின் முஃகீரா பின் பர்திஸ்பா அல் ஜு அஃபி அல் புகாரி (ரஹ்)அவர்கள் மற்றும் அபுல் ஹு ஸைன் முஸ் லிம் பின் ஹஜ்ஜாஜ் பின் முஸ்லிம் அல்குஷைரி நஸாபூரி (ரஹ்) அவர்கள்! | ٦) اِمَامَا الْمُحَدِّثِيْنَ: هُمَا اَبُوْ عَبْدِ الله محمد بن اسماعيلَ بن أبراهيمَ بن المغيرة بن بَرْدِزْبَه الْجُعْفِيُّ الْبُخَارِيُّ ، و ابو الْحُسَيْنِ مُسْلِمُ بن الْحَجَّاجِ بن مسلم الْقُشَيْرِيُّ النَّيْسَابُوْرِيُّ |
| 7) பர்திஸ்பா: இது பார்ஸி வார்த்தை., இதன் பொருள்: விவசாயம் செய்பவர். இவர் தனது இனத் தாரின் மதத்தி லேயே இருந்தார்.பிறகு அவரது மகன் முஃகீரா என்பவர்தான் யமான் -அல் ஜு அஃபி என்பவரின் கரம்பிடித்து இஸ்லாம் மார்க்கம் ஏற் றார்.,அதனால் அவருக்கு ஜு அஃபிய்யு என்று வழங் கலாயிற்று! | ٧) بَرْدِزْبَه : كلمة فارسية معناه : الزَّرَّاعُ وكان بردزبه فارسيا علي دين قومه ثم اسلم ولده المغيرة علي يد اليمان الجعفي وانما قيل له الجعفي لذلك |
| 8) அல் குஷைரி: பனூ குஷைர் என்ற குலத்தில் பிறந்ததால் இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் அல் குஷைரி என்று சொல்லப்பட்டார்கள்! | ٨) القشيري: نسبة الي قبيلة بني قشير |
| 9) நைஸாபூரி: நைஸாபூர் என்ற ஊரில் பிறந்ததால் அவர்களுக்கு அவ்வாறு வழங்கப்படலாயிற்று! | ٩) النيسابوري: نسبة الي بلدة نيسابور |

## கேள்விகள் – الاسئلة

1) வணக்கவழிபாட்டில் நிய்யத் எப்படி அமைய வேண்டும்?
2) நிய்யத்தை நாவால் மொழிவதன் சட்ட நிலை என்ன?
3) பித்அத் என்பது என்ன?
4) அமல்கள் ஒப்புக்கொள்ளப்படுவதற்கு இக்லாஸ் அவசியம் என்பதை 20 வரிகளில் விளக்கவும்.
5) ஹிஜ்ரத் என்றால் என்ன?
6) உமர் (ரலி) அவர்களைப்பற்றி நீ அறிந்திருப்பதென்ன?
7) அழைப்புப் பணியின் அவசியத்தைச் சருக்கமாக விளக்கிக் கூறவும்.

## கஅ்பாவை இடிக்க வரும் கயவர் கூட்டம்!

٢ – وعن ام المؤمنين أم عبد الله عائشة رضي الله عنها قالت : قال رَسُوْلُ الله ﷺ : يَغْزُوْجَيْشٌ الكَعْبَةَ فَإذَا كَانُوْا بِبَيْدَاءَ مِنَ الاَرْضِ يُخْسَفُ بأوَّلِهِمْ وَ آخِرِهِمْ . قَالَتْ : يَارَسُوْلَ الله كَيْفَ يُخْسَفُ بأوَّلِهِمْ وَآخِرِهِمْ وَفِيْهِمْ أسْوَاقُهُمْ وَمَنْ لَيس مِنْهُمْ! قَالَ : يُخْسَفُ بأوَّلِهِمْ وَ آخِرِهِمْ ثُمَّ يُبْعَثُوْنَ عَلَي نِيَّاتِهِمْ – متفق عليه هذا لفظ البخاري

**ஹதீஸ் 2**

உம்முல் முஃமினீன் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெரும்படையொன்று கஅபாவுக்கு எதிராகப் போர் தொடுத்துவரும். அப்படையினர் பரந்து விரிந்த ஒரு மைதானத்தில் நிலை கொண்டிருக்கும் பொழுது அப்படையின் முதலாமவரும் இறுதியானவரும் -அனைவரும் பூமியினுள் விழுங்கப்பட்டு விடுவார்கள்,,- அப்பொழுது நான் கேட்டேன்: அல்லாஹ்வின் தூதரே! அவர்களில் முதலாமவரும் இறுதி யானவரும்- அனைவரும் பூமியினுள் எப்படி விழுங்கப்படுவார்கள்? அங்கே வியாபாரத்தில் ஈடுபட்டவர்களும் அந்தப் படையில் சேராத சாமானியர்களும் இருப்பார்களே என்று! அதற்கு நபியவர்கள் சொன்னார்கள்: அவர்களில் முதலாமவரும் இறுதியானவரும் - அனைவரும் பூமியினுள் விழுங்கப் படத்தான் செய்வார்கள். பின்னர் மறுமை நாளில் அவரவரின் நிய்யத் - எண்ணத்திற்கு ஏற்ப எழுப்பப்படுவார்கள்" (நூல் : புகாரி, முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

கஅபா என்பது திருமக்கா நகரிலுள்ள தொன்மையானதோர் இறையாலயம் ஆகும். மனிதர்கள் இறைவனை வழிபடுவதற்காக உலகில் முதன் முதலில் கட்டியெழுப்பப்பட்ட மஸ்ஜித் - பள்ளிவாசல் இதுவே! உலக முஸ்லிம்கள் அனைவரும் இதனை முன்னோக்கியே அல்லாஹ்வை தொழுது வருகிறார்கள். மேலும் ஆண்டு தோறும் இந்த ஆலயத்திற்கு நேரில் சென்று ஹஜ் எனும் புனிதக் கடமையை நிறைவேற்றுகிறார்கள். இத்தகைய சிறப்பு மிக்க இறையாலயத்தை இடித்துத் தகர்க்க இறுதிக் காலத்தில் ஒரு முயற்சி மேற்கொள்ளப் படும் என்றும் அது முறியடிக்கப் படுவதோடு அதை மேற்கொள்ளும் கயவர் கூட்டம் கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படும் என்றும் முன்னறிவிப்புச் செய்கிறது இந்நபிமொழி.

இந்த கஅபா ஆலயத்தை இப்ராஹீம் நபியவர்களும் அவர்களின் இன்னுயிர் மைந்தர் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களும் கட்டினார்கள். அவ்விருவரும் கஅபாவின் அடித்தளத்தில் சற்றுச்சவர் எழுப்பி முழுமையாகக்கட்டி முடித்தபொழுது இறைவனிடம் இவ்வாறு இறைஞ்சினார்கள்:

எங்கள் இறைவனே! எங்களுடைய இந்தப்பணியை ஏற்றுக் கொள்வா யாக! நிச்சயமாக நீயே எல்லாம் செவியுறுபவன்., எல்லாம் அறிபவன்" (2:127)

இத்தகைய சிறப்புமிக்க புனித கஅபாவின் நீண்ட நெடிய வரலாற்றில் அதனை இடிப்பதற்கான தீய முயற்சி முன்னொரு சந்தர்ப்பத்தில் நடை பெற்றதுண்டு. யமன் தேசத்தின் அப்ரஹா என்ற மன்னன் கஅபா ஆலயத்தை இடித்துத் தகர்ப்பதற்குத் திட்டமிட்டுப் பெரும் அளவில் படை திரட்டிக்கொண்டு வந்தான். அந்தப் படை முன்னே பிரமாண்டமான யானை ஒன்று தலைமை வகித்து வந்தது. அநீதியிழைக்க நாடிவந்த அப்ரஹாவின் ஆனைப்படை மக்காநகரில் நுழைந்து கஅபா ஆலயத்தை நோக்கி நெருங்கி வந்தது. **அல் முகம்மஸ்** என்ற இடத்தை அடைந்தபோது - அந்தப் படைக்கு முன்னால் பவனி வந்துகொண்டிருந்த யானை கீழே படுத்து விட்டது. தொடர்ந்து முன்னேறிச் செல்லவில்லை.

கஅபாவை நோக்கிச் செல்லுமாறு எப்படியெல்லாமோ அதை உசப்பிப் பார்த்தார்கள், அப்ரஹாவின் கூலிப் படையினர். ஊஹூம் ...! யானை தன் இடத்தை விட்டு ஓரடிகூட நகரவில்லை! ஆனால் யமன் தேசத்தை நோக்கித் திரும்பிச் செல்லும்போது யானை எழுந்தோடுகிறது, எல்லோருக்கும் முன்னால்!

இதுதொடர்பான - இதேபோன்ற ஆச்சரியமான நிகழ்ச்சி ஒன்று ஹு தைபிய்யா உடன்படிக்கையின் போது நடந்தது. அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்தார்கள். திடீரென அது கீழே படுத்துக் கொண்டது. இதனைக் கண்ட நபித்தோழர்கள் - காரணம் எதுவுமின்றி ஒட்டகம் கீழே படுத்துக் கொண்டது! காரணம் எதுவுமின்றி ஒட்டகம் கீழே படுத்துக்கொண்டது! என்று கூறினார்கள். சிலர் அந்த ஒட்டகத்தை உசப்பி எழுப்பவும் அடித்துத் துன்புறுத்தவும் முனைந் தார்கள். அப்பொழுது நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: நமது ஒட்டகம் காரணமில்லாமல் கீழே படுக்கவில்லை. அப்படிச் செய்வது அதன் வழக்கமு மில்லை!"

மேலும் சொன்னார்கள்: நமது ஒட்டகம் காரணமில்லாமல் கீழே உட்காரவில்லை., (கஅபாவை இடிக்க வந்த அப்ரஹா மன்னன் படைதிரட்டி வந்தபொழுது) அந்த யானையைத் தடுத்து நிறுதிய இறைவன்தான் இப்பொழுது இந்த ஒட்டகத்தையும் தடுத்து வைத்துள்ளான்"

என் உயிர் எந்த இறைவன் கைவசம் உள்ளதோ அந்த இறைவன் மீது சத்தியமாக! குறைஷிகள் எந்த ஒரு சமாதானத் திட்டத்தை என்னிடம் கேட்டாலும் அதை நான் ஏற்றுக்கொள்வேன். ஆனால் இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளை மீறாத வகையில் அது இருக்க வேண்டும்" (நூல்: புகாரி)

-ஒட்டகம் கீழே உட்கார்ந்தது குறித்து நபியவர்கள் இவ்வாறு கூறியதன் கருத்து என்னவெனில், அந்த சந்தர்ப்பத்தில் குறைஷிகளுடன் ஒருசமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்., போர் தவிர்க்கப்பட வேண்டும் என்று இறைவன் உணர்த்துகிறான். அதற்காகவே ஒட்டகத்தை தடுத்துவைத்து விட்டான் என்பதாகும். - அவ்வாறே அன்று ஹு தைபிய்யா ஒப்பந்தம் கைழுெத்திடப்பட்டது.

❁ ஹு தைபிய்யாவின் வரலாற்றில் ஒட்டகத்தை இறைவன் தடுத்து வைத்தது, குறைஷிகளுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டுமென வலியுறுத்திட!

❁ மக்காவின் வரலாற்றில் யானையைத் தடுத்து வைத்தது, கஅபா ஆலயத்தின் பாதுகாப்பை உறுதி செய்திட!

ஆம்! யானை எழுந்திட மறுத்தபொழுது அப்ரஹா மன்னனும் அவனுடைய கூலிப்படையினரும் அவ்விடத் திலேயே தடைபட்டு நின்றனர். அப்பொழுது அவர்கள்மீது பறவைக் கூட்டங்களை அல்லாஹ் அனுப்பினான். அவை தத்தம் கால்களில் கற்களைச் சமந்துவந்து அநீதியாளனாகிய அப்ரஹா மீதும் அவனுடைய படை பட்டாளத்தின் மீதும் அவற்றை எறிந்தன. அந்தக் கற்கள் அவர்களின் உச்சந்தலையைத் தாக்கி உடலைத் துளைத்துக் கொண்டு பின்துவாரத்ததின் வழியாக வெளியேறின! இவ்வாறாக அவர்களின் உடல்களைச் சிதைத்துச் சின்னாப் பின்னமாக்கி விட்டான், இறைவன். குர்ஆன் குறிப்பிடுவது போன்று!

பிறகு (கால்நடைகளால்)மென்று தின்னப்பட்ட வைக்கோல் போன்று அவர்களை ஆக்கிவிட்டான்" (105: 5)

அரபிக் கவிஞர் உமைய்யா பின் ஸல்த் என்பார் பாடுகிறார்:

حَبَسَ الْفِيْلَ بِا لْمُغَمَّسِ حَتَّى صَارَ يَحْبُوْ كَأَنَّهُ مَعْقُوْرٌ

இறைவன் அந்த யானையை
அல்மு·கம்மஸில் தடுத்தான் - அது
தவழ ஆரம்பித்தது.
குதிங்கால்கள் வெட்டப்பட்டது போன்றானது"

- இவ்வாறாக கெடுமதிகொண்ட அப்ரஹாவின் தீய சூழ்ச்சியில் இருந்து தனது ஆலயத்தை அல்லாஹ் பாதுகாத்தான்.

புனித கஅபாவில் யார்-எப்பொழுது எவ்வித அநீதி இழைக்க நாடினாலும் அவர்கள் இறைவனால் தண்டிக்கப் படுவார்கள் என்பதை குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது:

எவர்கள் இந்தப் பள்ளிவாசலில் நேர்மை தவறிக் கொடுமை இழைக்க நாடுகிறார்களோ அத்தகைய வர்களுக்கு நாம் துன்புறுத்தும் வேதனையைச் சவைக்கும்படிச் செய்வோம்" (22 : 25)

- இவ்வாறுதான் இறுதிக் காலத்தில் கெடுமதி கொண்ட கயவர் கூட்டம் ஒன்று கஅபாவை இடிக்க வரும்., அப்பொழுது அனைவரையும் பூமி விழுங்கிவிடும். அவர்கள் தங்கியிருக்கும் மைதானத்தில் வியாபாரம் செய்ய வந்தவர்களும் அழிந்துபோவர்! வேடிக்கை பார்க்க வந்தர்களும் தப்பிக்க முடியாது! - எனும் வாசகங்களில் இருந்து, மக்கள் கூட்டம் கடலென அங்கு திரண்டிருக்கும் என்று தெரியவருகிறது!

நபியவர்கள் இவ்வாறு முன்னறிவிப்புச் செய்தபொழுது ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஒரு சந்தேகம். அந்த மைதானத்தில் குழுமியிருக்கும் எல்லோருமே தண்டனைக்கு ஆளாவார்கள் என்றால் நிரபராதிகளும் அதில்

சிக்கிக் கொள்வார்களே! அவர்களையும் தண்டிக்கவேண்டியது வருமே! தீயோரைத் தண்டிக்க வேண்டியது தான். நிரபராதிகளைத் தண்டிப்பது எப்படி நியாயம் ஆகும் என்பதுதான் அந்தச் சந்தேகம்!

நபியவர்கள் சொன்ன விளக்கம் இதுதான்: அங்கு கூடியிருக்கும் எல்லோரையும் பூமி விழுங்கும்பொழுது நிரபராதிகளும் அதில் சிக்கத்தான் வேண்டியது வரும். ஆனால் மறுமையில் எழுப்பப்படுவது அவரவரின் நிய்யத் - எண்ணத்தின்படி அமையும்! நிரபராதிகள் எனில் தண்டனை கிடையாது!

இந்த நபிமொழி வழங்கும் படிப்பினை இதுதான்: அசத்தியவாதிகளுடன் யார்யாரெல்லாம் சேர்ந்திருக்கி றார்களோ- அநீதி இழைக்க, அக்கிரமம் செய்யத் துணைபோகிறார்களோ அவர்கள் அதற்கான தண்டனையின் பொழுதும் உடன் இருந்துதான் ஆகவேண்டும்., தீயோரைத் தீண்டும் தண்டனை எல்லோரையும் சூழ்ந்து கொள்ளும். யாரையும் விட்டுவைக்காது.

குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் அநீதி இழைத்தோரை மட்டும் பிடிப்பதோடு நின்று விடாத குழப்பத்தை அஞ்சிக்கொள்ளுங்கள்., நிச்சயமாக அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்" (8 : 25)

### அறிவிப்பாளர் அறிமுகம்

## ஆயிஷா (ரலி) அவர்கள்

நபி(ஸல்)அவர்களின் மனைவியும் அபூபக்ர்(ரலி) அவர்களின் மகளாருமான ஆயிஷா (ரலி) அவர்கள், நபித்துவ நான்காம் ஆண்டு பிறந்தார்கள். இவர்கள் சிறுமியாக இருந்தபொழுதே இஸ்லாத்தைத் தழுவினார் கள். ஆறு வயதின் போது இவர்களை நபியவர்கள் திருமணம் முடித்து ஒன்பது வயதின்போது வீடுகூடினார் கள். நபியவர்கள் மரணம் அடைந்தபொழுது இவர்களுக்கு வயது பதினெட்டு. அதன் பிறகு நாற்பது ஆண்டு கள் வாழ்ந்த ஆயிஷா (ரலி)அவர்கள் ஹிஜ்ரி 57 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்கள். அவர்களின் ஜனாஸா வுக்குத் தொழுகை நடத்தியது அபூஹு ரைரா (ரலி) அவர்கள்! ஆயிஷா (ரலி) அவர்களிடம் இருந்து 1210 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1)வெட்டவெளி,புற்பூண்டுகளோ-குன்று குழிகளோ இல்லாத பொட்டல் பூமி | ١) البيداء : المفازة وجمعها بِيدٌ وهي الارض الملساء التي لا شيء فيها |
| 2) பூமி உள்வாங்குதல், பூமியில் புதையுண்டு போகுதல் | ٢) الخسف : الذهاب في الارض |
| 3) வாங்கவும் விற்கவும் வந்திருப்ப வர்கள்., கஅபாவை இடிக்கும் தீய நோக்கம் இல்லாத வர்கள். | ٣) أسواقهم : الذين جأؤوا للبيع و الشراء ليس لهم قصد سيء في غزو الكعبة |
| 4) அவர்களின் அடக்கத்தலங்களில் இருந்து அல்லாஹ் அவர்களை எழுப்புவான்., பிறகு அவரவ ரின் எண் ணங்களுக்கு ஏற்ப அவர்களிடம் கேள்வி -கணக்கு வாங்கப்படும். | ٤) يبعثون علي نياتهم : يبعثهم الله من قبورهم و يحاسبون علي مقاصدهم |
| 5)யானை கீழே படுத்துத் தவழலானது. | ٥) يحبو :( أي الفيل ) يربك و يزحف |
| 6) கால் வெட்டப்பட்டது., ஒட்டகத்தின் கால் களில் ஒன்றை வெட்டினான்., அது கீழே விழ வேண்டும்., அதை அறுப்பது சாத்தியமாக வேண் டும் என்பதற்காக! | ٦) معقور: عقر البعير: قطع احدي قوائمه ليسقط و يتمكن من ذبحه |

## கேள்விகள் الاسئلة

1) கஅபா எங்கு உள்ளது? அதன் சிறப்பு என்ன?
2) அப்ரஹாவும் அவனுடைய கூலிப்படையினரும் தோற்றது எப்படி?
3) கஅபாவை இடிக்கவரும் கயவர்க்கூட்டம் தண்டிக்கப்படுவார்கள் என்று நபியவர்கள் சொன்னபோது ஆயிஷா(ரலி)அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் என்ன? அதன்பதில் என்ன?
4) இந்த நபிமொழி தரும் படிப்பினை என்ன?
5) ஹு தைபிய்யா உடன்படிக்கை பற்றி சுருக்கமாக விளக்கி எழுதவும்.
6) ஆயிஷா (ரலி) அவர்களைப் பற்றி நீ அறிந்திருப்பதென்ன?

# ஜிஹாத் ஏன்? எதற்கு?

٣ – وَعَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ :قَالَ اَلنَّبِيّ ﷺ :{ لاَ هِجْرَةَ بَعْدَ الْفَتْحِ وَ لَكِنْ جِهَادُ وَ نِيَّةُ وَ اِذَا ا سْتُنْفِرتُمْ فَانْفِرُوْا } مُتَفَقٌ عَلَيْهِ

وَ مَعْنَاهُ : لاَ هِجْرَةَ مِنْ مَكَّةَ لأَنّهَا صَارَتْ دَارَ اِسْلاَمٍ

ஹதீஸ் 3

ஆயிஷா(ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வெற்றிக்குப் பிறகு ஹிஜ்ரத் இல்லை. ஆயினும் ஜிஹாத் - இறைவழிப்போரும் நிய்யத் - தூய எண்ணமும் உண்டு. நீங்கள் புறப்பட வேண்டுமென அழைக்கப்பட்டால் புறப்படுங்கள்" (புகாரி, முஸ்லிம்)

இமாம் நவவி(ரஹ்)அவர்கள் சொல்கிறார்கள்: இதன் பொருள் மக்கா நகரில் இருந்து ஹிஜ்ரத் செய்தல் கிடையாது என்பதே! ஏனெனில் அது இஸ்லாமிய நாடாக ஆகிவிட்டது"

## தெளிவுரை- الشرح

ஹிஜ்ரத் என்பது - முன்னர் குறிப்பிட்டது போன்று - இறைவழிகாட்டலுக்கு ஏற்ப வாழவும் அதன்பால் மக்களை அழைக்கவும் இடம் தராத நாட்டிலிருந்து வெளியேறிவிடுவதாகும்.

நபி (ஸல்)அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.,எதனால்? அங்கு ஓரிறைக் கொள்கையைப் பிரச்சாரம் செய்யவும் இறைநெறியைப் பின்பற்றி வாழவும் மக்கத்து குறைஷிகள் அனுமதிக்க வில்லை. மேலும் அந்த மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட ஏழைஎளிய முஸ்லிம்கள் மீது கொடுமைகளைக் கட்ட விழ்த்து விட்டார்கள்! ஒருகட்டத்தில் அது எல்லை மீறிப்போயிற்று! இதனால் நபியவர்கள் மக்காவை விட்டு வெளியேறி-இஸ்லாத்தின் பாதுகாப்புக்கும் பிரச்சாரப் பணிக்கும் உத்திரவாதம் அளிக்க முன்வந்த மதீனா மாநகரில் குடியேறினார்கள்! நபித்தோழர்களும் சிறுகச்சிறுக மக்காவைத் துறந்து மதீனாவில் குடியேறிய வண்ணம் இருந்தார்கள்!

❁ இந்த ஹிஜ்ரத் பயணம் பல ஆண்டுகள் தொடர்ந்தது!

மதீனா சென்ற மாநபி (ஸல்) அவர்கள் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மக்காவின் மீது போர் தொடுத்து அங்கே வெற்றிக் கொடி நாட்டினார்கள். சிலைவணக்கத்தின் ஆதிக்கத்திலிருந்த அந்நாட்டை மீட்டு ஓரிறைக் கொள்கை கோலோச்சும் புண்ணிய பூமியாய் மாற்றினார்கள். யுத்தமின்றி, ரத்தமின்றியே இந்தச் சாதனை நடந்தேறியது! இவ்வாறு புனித மக்காநகர் இஸ்லாமிய நாடாய் மலர்ந்த பிறகு அங்கிருந்து வெளியேறி வேறுநாடு செல்வவதற்கு - ஹிஜ்ரத் செய்வதற்கு என்ன இருக்கிறது? எனவேதான் வெற்றிக்குப்பின் ஹிஜ்ரத் இல்லை என்று நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். அதாவது, இனி யாரும் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வரவேண்டியதில்லை என்றார்கள்!

ஆகவே இது பொதுவான கட்டளை அல்ல. அதாவது, இனி எந்தச் சூழ்நிலையிலும் - எந்நாட்டிலிருந்தும் ஹிஜ்ரத் செய்ய வெண்டியதில்லை என்பதல்ல இதன் பொருள்., இமாம் நவவி (ரஹ்) அவர்கள் சென்னது போன்று-மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தல் இல்லை என்பதே கருத்தாகும்.

தௌபா பாவமன்னிப்புக்கான அவகாசம் முடிவடையாதவரை ஹிஜ்ரத் முடிவடையாது. சூரியன் மேற்கில் இருந்து உதிக்காதவரை (அதாவது யுகமுடிவு நாள் வரையில்) பாவமன்னிப்பு முடிவடையாது என்று மற்றொரு நபிமொழி கூறுகிறது.

அது மட்டுமல்ல, மக்கத்திருநகர் இனி மறுமைநாள் வரையில் அல்லது அல்லாஹ் நாடும் காலம் வரையில் இஸ்லாமிய நாடாகவே நீடிக்கும்.,இனி ஒருபொழுதும் நிராகரிப்பு நாடாய் அது மாறாது என்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது.

<u>ஆயினும் ஜிஹாத்- இறைவழிப்போரும் நிய்யத் எனும் எண்ணமும் உண்டு"</u>

அதாவது இதன் பிறகு செய்யவேண்டியது ஜிஹாத் ஆகும். மக்காவில் வசிக்கும் முஸ்லிம்கள் ஜிஹாதுக் கான சூழ்நிலை வரும்பொழுது அங்கிருந்து வெளிக்கிளம்பத்தான் வேண்டும். எப்பொழுதும் அதற்குத் தயார் எனும் தூய்மையான எண்ணம் இருந்துகொண்டிருக்க வேண்டும்.

<u>நீங்கள் புறப்படவேண்டுமென அழைக்கப்பட்டால் புறப்பட வேண்டும்"</u>

அதவது, உங்களில் ஆட்சியதிகாரம் வழங்கப்பட்டவர்கள் அல்லது உங்களின் தலைவர்கள் உங்களை இறைவழியில் ஜிஹாத் செய்யுமாறு உங்களை அழைத்தால் நீங்கள் புறப்படத்தான் வேண்டும். அது உங்கள் மீது கடமை! இங்கு ஜிஹாத் என்றால் என்ன?அதன் இலட்சியம் என்னஎன்பதை அறிந்துகொள்வது அவசியம்.

ஜிஹாத் என்றவுடன் இறைநிராகரிப்பாளர்களை எதிர்த்து யுத்தம் செய்வது என்று மட்டும் பெரும்பாலோர் புரிந்து வைத்துள்ளனர். ஜிஹாத் என்பது இதனைவிடவும் விரிவான பொருள்கொண்ட வார்த்தையாகும். எதிரிகளுடன் மோதுவது- யுத்தம் செய்வது என்பதற்கு முதலில் பல்வேறு நிலைகளைக் கடந்து வருவது அவசியமாகும். ஷைத்தானிய உணர்வுகனை எதிர்த்துப் போரிட்டு நமது மனத்தை அடக்குதல் - அநீதி யாளர்களை எதிர்த்துப் போரிடுதல், பித்அத் எனும் நூதன அனுஷ்டானங்களை ஒழிப்பதற்காகப் போரிடுதல், இஸ்லாத்திற்கெதிரான சடங்கு சம்பிரதாயங்களைக் கெல்லியெறியப் பாடுபடுதல், இதேபோல் எல்லா வகையான தீமைகளை எதிர்த்து மேற் கொள்ளும் சீர்திருத்த நடவடிக்கைகள் யாவும் அதில் அடங்கும்.

மனத்தின் தீய எண்ணங்களை எதிர்ப்பதும் ஜிஹாதின் பொருளில் அடங்கும் என்பதுபோல் அதனை நல் வழியில் ஈடுபடுத்தும் முயற்சியும் அதற்கு இன்றியமையாததே. ஆம்! இறைமார்க்கத்தைக் கற்கும் வழியில் மனத்தைப் பக்குவப்படுத்துவது, அதன்படி அமல் செய்யப் பண்படுத்துவது, இறை நெறியின்பால் அழைக்கும் பணியில் மனத்தைப் பொறுமையுடன் ஈடுபடுத்துவது, அவ்வழியில் நேரிடும் கஷ்டங்களைவும் துன்பங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொள்ளுமாறு பழக்குவது ஆகிய அனைத்தும் ஜிஹாதில் அடங்கும்.

ஒரு மனிதன் இறைவன் மீதும் இறைத்தூதர் மீதும் நம்பிக்கை கொண்டதாக அறிவித்து இஸ்லாத்தை ஏற்ற பிறகு அனைத்திற்கும் முதலில் தனது தனி வாழ்க்கையையும் சமுக வாழ்க்கையையும் இறை வழிகாட்ட லுக்கு ஏற்ப அமைத்திட வேண்டும் என்பதும் ஜிஹாதின் தேட்டமாகும்.

ஆனால் எதிரிகளை எதிர்த்துக் களத்தில் போர் புரியவேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை வந்தால் மனத்திண்மை யுடன் அதில் குதித்தாக வேண்டும். இறைவன் கூறுகிறான்:

<u>இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள் என்று கூறப்பட்டால் பூமியிலேயே அமிழ்ந்து கிடக்கிறீர்களே! மறுமையைவிட உலக வாழ்க்கை யில் நிறைவடைந்து விட்டீர்களா? உலக வாழ்க்கையின் இன்பங்கள் யாவும் மறுவுலக வாழ்க்கைக்கு முன் னால் மிகஅற்பமானவைதான்! நீங்கள் (இறைவழியில்) புறப்படவில்லையாயின் அல்லாஹ் உங்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை அளிப்பான். மேலும் உங்களுக்குப் பதிலாக வேறொரு சமூகத் தினரைக் கொண்டு வருவான். மேலும் அல்லாஹ்வுக்கு நீங்கள் எந்தத்தீங்கும் செய்ய முடியாது. அல்லாஹ் யாவற்றின் மீதும் பேராற்றல் கொண்டவன்"</u>

இன்னோர் உண்மையையும் புரிந்து கொள்ளவேண்டும். இறைவனுக்காகவே - அவனது மார்க்கத்தை உலகில் மேலோங்கச் செய்வதற்காகவே எனும் நிய்யத் - எண்ணம் ஜிஹாதில் இருந்திட வேண்டும். மாறாக, இனம், நிறம், மொழி, தேசியம் என குறுகிய மாச்சரியங்களுக்குள்ளாகி போர்புரிந்தால் அல்லது பகட்டுக்காக, பட்டம் - பதவிகளுக்காக யுத்தம் செய்தால் அது ஜிஹாத் ஃபீஸபீலில்லாஹ் என்கிற இறைவழிப்போராகாது. அதில் கொல்லப் படுவர் ஷஹீத் - இறைமார்க்கத்தியாகி எனும் உயர் பதவியை அடையமுடியாது!

ஒருதடவை நபி (ஸல்)அவர்களிடம் வினவப்பட்டது: ஒரு மனிதர் மன மாச்சரியத்திற்காகப் போர்புரிகிறார்., மற்றொருவர் வீரத்தைக் காட்டுவதற்காகப் போர் புரிகிறார்., இன்னொருவர் முகஸ்துதிக்காகப் போர் புரிகிறார்., இவர்களில் யார் இறைவழியில் போர் புரிந்தவர்? அதற்கு நபியவர்கள் பதிலளித்தார்கள்: இறைமார்க்கம் மேலோங்குவதற்காக யார் போர் புரிந்தாரோ அவர்தான் இறை வழியில் போர் புரிந்தவர் ஆவார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

எனவே ஜிஹாத் போன்ற உன்னதமான தியாகமாகவும் வழிபாடாகவும் திகழ்கிற பணிகளிலேகூட - இஸ் லாத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவையான அறப்பணிகளிலேகூட நிய்யத் எனும் வாய்மையான எண் ணம் அவசியம். இல்லையெனில் எல்லாம் பாழாகிவிடும்!

வாய்மையுடன் நிறைவேற்றப்படும் ஜிஹாதின் சிறப்பைப் பின்வரும் நபிமொழி எடுத்துரைப்பதைப் பாருங்கள்:

எவர் (அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக்) காயப்படுத்தப்படுகிறாரோ அவனது பாதையில் காயப் படுத்தப் படுபவர் யார் என்பதை அவனே மிக அறிந்தவன் - அவர் மறுமை நாளில் தன் காயத்திலிருந்து இரத்தம் வழியும் நிலையில் வருவார்., நிறம் சிவப்பாய் இருக்கும்., மணமோ கஸ்தூரி மணமாக இருக்கும்!" (புகாரி, முஸ்லிம்)

## شرح الكلمات

## அருஞ்சொற்கள்

| | |
|---|---|
| 1)மக்கா வெற்றிக்குப் பிறகு: அது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் நடைபெற்றது. | ١) بعد الفتح: بعد فتح مكة. وكان فتحها سنة ثمان بعد الهجرة |
| 2)இறைநிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போர் செய்வது - முடிந்த வரையில் எல்லா சக்திகளையும் ஆற்றல்களையும் ஒன்று திரட்டி முழு மூச்சுடன் உழைப்பது, சொல் | ٢) جهاد: محاربة الكفار، وهوالمبالغة واستفراغ ما في الوسع والطاقة من قول أو فعل |

| | |
|---|---|
| லாலும் செயலாலும் அதனைச் சாதிப்பது. | |
| 3)வழிபாடுகளை அல்லாஹ்வுக்காக மட்டுமே நிறைவேற்றும்தூயஎண்ணம் | ٣) نية : اخلاص العمل لله تعالي |
| 4)ஜிஹாதுக்காக வெளிக்கிளம்புமாறு உங்க ளிடம் வேண்டப்பட்டால் | ٤)اذااستنفرتم:اذاطلب منكم الخروج الي الجهاد |

## கேள்விகள் الاسئلة

1) ஹிஜ்ரத் என்பதன் கருத்து என்ன? வெற்றிக்குப் பின் ஹிஜ்ரத் இல்லை என்பதன் கருத்து என்ன?
2) ஜிஹாத் என்றால் என்ன என்று விளக்கவும்.
3) இறைவழிப் போர்(அல் ஜிஹாத் ஃபீ ஸபீலில்லாஹ்)என்பதற்கு நபியவர்கள் அளித்த இலக்கணம் என்ன?

## நல்லெண்ணமும் நற்கூலியும்

٤ – وعن أبي عَبْد الله جَابِر بْن عَبْدِالله الاَنْصَارِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ: كُنَّا مَعَ اَلنبيِّ ﷺ فِي غَزَاةٍ فَقَالَ : اِنَّ فِي اَلْمَدِيْنَةِ لَرِجَالاً مَا سِرْتُمْ مَسِيْرًا وَلا قَطَعْتُمْ وَادِيًا اِلاَّ كَانُوا مَعَكُمْ حَبَسَهُمْ اَلْمَرْضُ وَ فِي رِوَايَةٍ : اِلاّ شَرَكُوْكُمْ فِي اَلأَجْرِ رَوَاهُ مُسْلِمُ

وَرَوَاهُ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ ﷺ قَالَ: رَجَعْنَا مِنْ غَزْوَةِ تَبُوْكَ مَعَ النَبِيِّ ﷺ فَقَالَ : اِنَّ أَقْوَاماً خَلْفَنَا بِالْمَدِيْنَةِ مَا سَلَكْنَا شِعْبًا وَ لاَ وَادِيًا اِلاّ وَ هُمْ مَعَنَا حَبَسَهُمْ العُذْرُ

நபிமொழி 4

ஜாபிர் பின் அப்துல்லாஹ்-அன்ஸாரி (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு போருக்காகச் சென்றிருந்தோம். நபியவர்கள் கூறினார்கள்: சிலபேர் (நம்முடன் புறப்பட இயலாமல்) மதீனாவில் உள்ளனர். நீங்கள் எந்த ஒரு பாதையில் நடந்தாலும் எந்த ஓர் ஓடையைக் கடந்தாலும் அவர்கள் உங்களுடன் இல்லாமல் இல்லை., நோய் அவர்களைத் தடுத்து விட்டது,, - மற்றோர் அறிவிப்பில்: கூலியில் உங்களுடன் அவர்கள் கூட்டாகாமல் இல்லை" என உள்ளது.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்துள்ள அனஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பில், நாங்கள் தபூக் யுத்தத்திலிருந்து நபி (ஸல்) அவர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கொஞ்சம் பேர் நம்முடன் வர இயலாமல் மதீனாவில் உள்ளனர். அவர்களும் நம்முடன் உள்ள நிலையிலேயே தவிர நாம் எந்த ஒரு கணவாயிலும் எந்த ஓர் ஓடையிலும் நடந்து செல்வதில்லை. அவர்களைத் தக்க காரணம் தடுத்து விட்டது"

### தெளிவுரை- الشرح

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு நபி(ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் ரோமானியர்களை எதிர்த்துப் போர் புரிவதற்காகப் புறப்பட்டிருந்தார்கள்., இதற்கு தபூக் யுத்தம் என்று பெயர். நோய், முதுமை போன்ற காரணத் தாலும் வாகன வசதியின்மையாலும் முஸ்லிம்கள் சிலர் மதீனாவிலேயே தங்கி விட்டனர். ஆனால் அவர்களின் உள்ளத்தில் வாய்மை இருந்தது. அதிமுக்கியமான இந்தப் போரில் நம்மால் பங்கேற்க முடியவில்லையே என்ற ஆதங்கம் இருந்தது! ஆரம்பத்தில் பலர் நபியவர்களின் சமூகம் வந்து-போருக்குப் புறப்படுவதற்காக, இரவலாக வாகனம் தந்து உதவுமாறு வேண்டி நின்றனர். சிலருக்குத்தான் நபியவர்களால் வாகனம் வழங்க முடிந்தது. வாகனம் கிடைக்காதவர்களோ அழுதுகொண்டே திரும்பிச் சென்றார்கள். இத்தகைய வாய்மையான முஸ்லிம்களை நினைவுகூர்ந்தே நபி (ஸல்)அவர்கள் இவ்வாறு கூறினார்கள்., தபூக்கில் இருந்து திரும்பும் வழியில்!

இந்த நபிமொழியின் கருத்து இதுதான்: ஒரு மனிதன் நல்ல அமல் ஒன்றை-பணியைச் செய்ய வேண்டுமென நாடினான்., பிறகு ஏதேனும் தடை ஏற்பட்டு அதைச் செய்ய இயலவில்லை என்றால் அதற்கான கூலி அவனுக்கு உண்டு. அதாவது, ஒரு நல்ல பணியைச் செய்திட நிய்யத் - எண்ணம் வைத்தான் எனும் வகையில் அவன் பெயரில் நற்கூலி பதிவு செய்யப்படும்.

ஆனால் முன்னரே அந்த அமலை செய்து வருவது அவனுக்கு வழக்கமாக இருந்து- அதைச் செய்ய இயலா வண்ணம் தற்போது தடை ஏற்பட்டு விட்டது என்றால் அந்த அமலைச் செய்ததற்கான முழுக் கூலியுமே அவனுக்குக் கிடைக்கும்.

ஏனெனில் மற்றொரு தடவை நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: <u>ஓர் அடியான் நோயுற்று விட்டாலோ பயணம் புறப்பட்டு விட்டாலோ - முன்னர் ஆரோக்கியமாக-ஊரில் தங்கியிருந்த பொழுது அவன் செய்து வந்த அமல்களின் கூலி அவன் பெயரில் எழுதப்படும்"</u> (நூல்: புகாரி)

எடுத்துக்காட்டாக, ஒருவன் எல்லாத் தொழுகைகளையும் பள்ளிவாசல் சென்று ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவது வழக்கம். ஆனால் ஒரு பொழுது அயர்ந்து தூங்கிவிட்டான். அல்லது நோயுற்றுவிட்டான். அதனால் ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்ள இயலவில்லையானால் - ஜமாஅத் தொழுகைக்கான முழுக்கூலியும் - எவ்விதக் குறைவுமின்றி அவன் பெயரில் எழுதப்படும்.

இதேபோல் ஸு ன்னத் தொழுகைகளை நிறைவேற்றுவது அவனது வழக்கம். ஆனால் ஒருபோது ஏதோ காரணத்தால் அவற்றை விடவேண்டிய தாயிற்று என்றால் ஸு ன்னத் தொழுகைக்கான முழுக்கூலியும் - எவ்விதக் குறைவுமின்றி அவன் பெயரில் எழுதப்படும்!

ஆனால் முன்னர் அதனைச் செய்யும்வழக்கம் இல்லையாயின் தற்பொழுது நிய்யத்-எண்ணம் வைத்ததற்கான கூலிமட்டும் அவன் பெயரில் எழுதப்படும். நபியவர்களின் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று இதற்கு ஆதாரமாக உள்ளது.

ஒருதடவை ஏழைத் தோழர்கள் சிலரின் உள்ளத்தில் ஓர் எண்ணம் பிறந்தது. நம்முடைய செல்வந்த சகோதரர்கள் அதிக அளவு தானதர்மங்கள் செய்கிறார்கள்., நற்பணிகளுக்குச் செல்வத்தை அள்ளிக்கொடுக்கி றார்கள்., அடிமைகளை விலைக்கு வாங்கி விடுதலை செய்கிறார்கள்! நமக்கும் இறைவன் செல்வத்தை வழங்கினால்நாமும் இவ்வாறு செய்யலாமே! அதிக நற்கூலிகளைப் பெறலாமே என்கிற நல்லார்வம் எழுந்தது.

நபி(ஸல்)அவர்களிடம் வந்து கேட்டனர்: அல்லாஹ்வின் தூதரே! செல்வம் படைத்தவர்கள் நற்கூலியையும் நிலையான மறுமைப் பேறுகளை யும் அடைவதில் எங்களை முந்திவிட்டனரே!

அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்கு ஒன்றை அறிவித்துத் தரட்டுமா? அதனை நீங்கள் செயல்படுத்தினால் உங்களை முந்திச்சென்றவர் களை நீங்கள் அடைந்துவிடுவீர்கள். பின்னர் வருபவர்களில்- நீங்கள் செயல்பட்டதுபோன்று செயல்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் உங்களை வந்து சேர்ந்திட முடியாது! நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஸு ப்ஹானல்லாஹ் என்று 33 தடவையும் அல்லாஹு அக்பர் என்று 33 தடவையும் அல்ஹம்து லில்லாஹ் என்று 33 தடவையும் சொல்லி வாருங்கள்

- அவ்வாறே அந்த ஏழை முஸ்லிம்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஓதி வந்தார்கள். இதனைச் செல்வந்தர்கள் அறிந்தபொழுது அவர்களும் அதைப்போன்று செய்யலானார்கள்.

அதனால் அந்த ஏழை முஸ்லிம்கள் மீண்டும் நபியவர்களிடம் வந்து சொன்னார்கள்: அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை செல்வந்தர்களான எங்கள் சகோதரர்கள் கேள்விப்பட்டார்கள். பிறகு அவர்களும் அவ்வாறு செய்யத் தொடங்கி விட்டார்களே!,,

அதற்கு நபியவர்கள் சொன்னார்கள்: இது அல்லாஹ்வின் அருட்கொடை. தான் நாடுபவர்களுக்கு அதனை அவன் வழங்குகிறான். அல்லாஹ் மகத்தான அருட்கொடையாளன்,, (நூல்: புகாரி, முஸ்லிம்)

- அந்தச் செல்வந்தர்கள் செய்த தர்மங்களுக்கான கூலியை ஏழைகளாகிய நீங்களும் பெற்றுவிட்டீர்கள் என்று நபியவர்கள் சொல்லவில்லை. ஆனால் அமல் செய்யவேண்டுமென நிய்யத் - எண்ணம் வைத்ததற்கான கூலி நிச்சயம் அவர்களுக்கு உண்டு.

இன்னொரு நபிமொழியில் இதனை இன்னும் தெளிவாகக் காணமுடிகி றது. அதில் வருகிறது: இருமனிதர் கள் உள்ளனர். ஒருவருக்கு அல்லாஹ் அதிக செல்வம் வழங்கியுள்ளான். அதனை அவர் நன்மையான காரி யங்களில் செலவு செய்கிறார். இன்னொருவர் ஏழை. அவர் எண்ணுகிறார்: எனக்கும் இவ்வாறு அதிகச் செல்வங்கள் இருந்தால் இந்த மனிதரைப் போல் நானும் நற்பணிகளுக்கு வாரி வழங்குவேனே! என்று கூறு கிறார். இந்த இரு மனிதர்களைப் பற்றி நபியவர்கள் கூறினார்கள்:

இந்த (ஏழை) மனிதர் தனது எண்ணத்தின் பிரதிபலனைப் பெறுகிறார். இருவரும் சமமான கூலியைப் பெறுகின்றனர்" (நூல்: திர்மிதி)

அதாவது, நிய்யத் - எண்ணத்திற்கான கூலியில் இருவரும் சமமானவர்களே! ஆனால் செயலைப் பொறுத்து அதனை வழக்கமாக செய்து வந்தால்தான் - இடையே ஏதேனும் தடை ஏற்பட்டாலும் - செயல்பட்டதற்கான கூலி எழுதப்படும்.

மேற்சொன்ன நபிமொழியிலிருந்து மேலும் தெரியவருகிறது: அல்லாஹ்வின் பாதையில் போர்புரியச் செல்ப வருக்கு - அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு நடைக்கும் எட்டுக்கும் கூலி உண்டு.

நீங்கள் எந்த ஒருபாதையில் நடந்தாலும் எந்த ஓர் ஓடையைக் கடந்தாலும் அவர்கள் உங்களுடன் இல்லாமல் இல்லை,, எனும் வாசகம் இந்த உண்மை யைத்தான் உணர்த்துகிறது. குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

قال تعالي: ذَلِكَ بأنَّهُمْ لاَ يُصِيْبُهُمْ ظَمَأٌ وَ لاَ نَصَبٌ وَ لاَ مَخْمَصَةٌ فِي سَبِيْلِ اللهِ وَلاَ يَطَؤُنَ مَوْطِأً يَغِيْظُ الكُفَّارَ وَلاَ يَنَالُوْنَ مِنْ عَدُوٍّ نَيْلاً اِلاَّ كُتِبَ لَهُمْ بِهِ عَمَلٌ صَا لِحٌ اِنَّ اللهَ لا يُضِيْعُ أجْرَ الْمُحْسِنِيْنَ وَ لاَ يُنْفِقُوْنَ نَفَقَةً صَغِيْرَةً وَ لاَ كَبِيْرَةً وَ لاَ يَقْطَعُوْنَ وَادِيًا اِلاَّ كُتِبَ لَهُمْ لِيَجْزِيَهُمْ أحْسَنَ ما كَانُوا يَعْمَلُوْنَ ( سورة التوبة ١٢٠– ١٢١ )

அது எதற்காகவெனில், அல்லாஹ்வின் பாதையில் பசி, தாகம் மற்றும் களைப்பின் எந்தத் துன்பத்தை அவர்கள் சகித்துக் கொண்டாலும் மேலும் சத்தியத்தை நிராகரிப்பவர்களுக்கு வெறுப்பாக இருக்கும் பாதையில் எந்த ஓர்அடியை அவர்கள் எடுத்துவைத்தாலும் மேலும் பகைவனிடம் (அவனது சத்திய விரோதப்போக்கிற்காக) எந்தப் பழியை அவர்கள் வாங்கினாலும்- அவை ஒவ்வொன்றிற்கும் பகரமாக அவர்களின் பெயரில் நன்மை எழுதப்படாமல் விடப்படமாட்டாது. நிச்சயமாக அல்லாஹ் நற்பணியாற்றுவோரின் கூலியை வீணாக்கு வதில்லை. மேலும் அவர்கள் (அல்லாஹ்வின் பாதையில்) சிறிய அளவிலோ பெரியஅளவிலோ செலவு செய்யும் எதுவும் மேலும் (ஜிஹாதுக்காக) ஏதேனும் பள்ளத்தாக்கை அவர்கள் கடந்து செல்வதும் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்படாமல் விடப்படவேமாட்டாது. எதற்காகவெனில் இவர்கள் செய்து கொண்டிருந்த அமல்களில் சிறப்பா னவற்றிற்கான கூலியை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கிட வேண்டும் என்பதற்காகத்தான்" (9 : 119 - 120)

இதுபோன்றுதான் தொழுகையிலும். உளூ செய்துகொண்டு தொழுகைக்காகப் பள்ளிவாசல் நோக்கிச் செல்பவனின் ஒவ்வோர் எட்டுக்கும் பகரமாக ஓர் அந்தஸ்து உயர்த்தப்படுகிறது., ஒருபாவம் மன்னிக்கப்படு கிறது.

இவ்வாறாக- ஒருநற்செயலைச் செய்வதற்கும் நற்கூலி உண்டு., அதற்குத் தூண்டுதலாகவும் துணையாக வும் உள்ள காரணிகளுக்கும் நற் கூலி உண்டு எனும் ஷரீஅத்தின் நியதி அல்லாஹ்வின் பெரும் அருட் கொடை என்றுதான் சொல்ல வேண்டும்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்

அபூ அப்துல்லாஹ் என்பது இவர்களது குறிப்புப்பெயர். மதீனாவாழ் அன்ஸாரிகளில் ஒருவராகிய இவர்கள், நபியவர்களின் அன்புக்குரியவர்கள். ஸஹாபாக்களிலே இவர்கள்தாம் வயதால் இளையவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. ஃபிக்ஹ் சட்ட நுணுக்கங்களில் திறமைபெற்றுத் திகழ்ந்த ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் தலைமைப் பதவிக்குரிய தகுதியும் சிறப்பும் பெற்றிருந்தார்கள். ஹிஜ்ரி 74 ஆம் ஆண்டு 91 வது வயதில் மரணம் அடைந்தார்கள்!

### شرح الكلمات

### அருஞ்சொற்கள்

| | |
|---|---|
| 1)அன்ஸார் (உதவியாளர்கள்) எனும் மதீனத்து மக்களைச் சேர்ந்தவர் என்று பொருள். அரபிமொழி வழக்கின் அசல், (நாஸிரீ என்று) ஒருமையுடன் சேர்த்துத் சொல்வதே. ஆனால் அன்ஸார் என்பது - நபியவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் உதவி செய்த வர்களுக்குப் சூட்டப்பட்ட பெயராகப் பிரபலமாகி விட்டதால் அதனுடன் சேர்த்துச் சொல்வது வழக்கமாகி விட்டது! | ١) الانصاري : نسبة الي الانصار، مفرده ناصروكان الاصل أن ينسب الي المفرد الا انه نسب الي الجمع لان لفظ الجمع قد صار علما بالغلبة علي الذين نصروا رسول الله ﷺ ودينه فصارت النسبة اليه |
| 2) சில ஆண்கள், சில பேர் என்று பொருள். ஏனெனில் இதன் ஒருமையாகிய கௌம் என்பது அந்தப் போரில் கலந்து கொண்ட ஆண்களை மட்டுமே குறிக்கும். | ٢) اقواما : رجالا لان القوم مختصون بالجال |
| 3) மலைப் பாதை. கணவாய் | ٣) شِعْبًا : بكسر الشين طريقا في الجبل |
| 4) ஓடை. காமூஸில் உள்ளது: இது மலைகள், குன்றுகள் அல்லது மணல் மேடுகள் மத்தியில் அமைந்த பாதை, தண்ணீர் வழிந்தோடும் படுகை | ٤) واديا: في القاموس: مفرج ما بين جبال أو تلال أو آكام وهو الموضع الذي يسيل الماء |

## கேள்விகள் –الاسئلة

1) இந்த நபிமொழியில், கூலியில் உங்களுடன் அவர்கள் கூட்டாகாமல் இல்லை'' எனும் வாசகத்தின் கருத்து என்ன?
2) தபூக் யுத்தத்தில் முஸ்லிம்கள் சிலர் கலந்து கொள்ளாமல் பின்தங்கி விட்டதற்கு என்ன காரணம்?
3) ஏழை நபித்தோழர்கள் சிலர் நபியவர்களிடம் வந்து என்ன கோரிக்கை வைத்தார்கள்? நபி (ஸல்) ஆவர்கள் அதற்கு என்ன பதில் சொன்னார்கள்? அந்நிகழ்ச்சியில் நமக்குள்ள படிப்பினைகள் என்ன?

# சொந்த மகனுக்கு ஜகாத் கொடுக்கலாமா?

٥ – وَ عَنْ أَبِيْ يَزِيْدَ مَعْنِ بْنِ يَزِيْدَ بن الاَخْنَسِ ﷺ وَهُوَ وَأَبُوه وَ جَدُّهُ صَحَابِيّوْنَ قَالَ: كَانَ أَبِيْ يَزِيْدُ أَخْرَجَ دَنــانِيْرَ يَتَصدَّقُ بِهاَ فَوَضَعَهاَ عِنْدَ رَجُلٍ فِي المَسْجِدِ فَجِئتُ فَأَخَذْتُهاَ فَقَالَ : وَاللهِ ماَ ايّاَكَ أَرَدْتُّ فَخَاصَمْتُه اِلى رَسُوْلِ اللهِ ﷺ فَقَالَ : لَكَ مَا نَوَيْتَ ياَ يَزِيْدُ وَ لَكَ مَا أَخَذْتَ يَا مَعْنُ ( رَوا هُ البُخَارِيْ )

ஹதீஸ் 5

மஅன் பின் யஜீத்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: (இவருடைய தந்தையும் பாட்டனாரும் நபித்தோழர் களாவர்) என் தந்தை யஜீத் (ரலி) அவர்கள் சில தங்க நாணயங்களைத் தர்மம் செய்வதாக எடுத்துச் சென்று பள்ளிவாசலில் இருந்த ஒரு மனிதரிடம் (யாராவது தேவையுடையோருக்கு வழங்குமாறு) கொடுத்து வைத்தார். நான் சென்று அவற்றை வாங்கிக் கொண்டேன். அந்தத் தங்க நாணயங்களுடன் என் தந்தை யிடம் வந்தேன். அவரோ அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் உனக்கென நினைக்க வில்லையே! என்றார். நான் இறைத்தூதர் (ஸல்)அவர்களிடம் இந்தப் பிரச்னையைக் கொண்டு சென்றேன். அப்பொழுது நபி (ஸல்)அவர்கள் சொன் னார்கள்: யஜீதே! நீ நினைத்தது உனக்கு., மஅனே! நீ பெற்றுக் கொண்டது உனக்கு (நூல்: புகாரி)

### தெளிவுரை -الشرح

இந்த நபிமொழி சவையானதும் சிந்தனைக்குரியதுமான நிகழ்ச்சி ஒன்றை எடுத்துரைக்கிறது.

நபித்தோழராகிய யஜீத் சில தங்க நாணயங்களை எடுத்துக்கொண்டு தர்மம் செய்வதற்காக பள்ளிவாசல் சென்றபோது அங்கு ஏழைகள் யாரும் இல்லை. அங்கே அமர்ந்திருந்த ஒருவரிடம் சென்று யாராவது ஏழை எளியவர் வந்தால் அவருக்கு என் சார்பாக இவற்றை வழங்கவும் என்று சொல்லிக் கொடுத்துவிட்டு வந்தார்.

சற்று நேரத்தில் அவருடைய மகனாரின் கையிலேயே அந்தத் தர்மம் வந்து சேர்ந்தது. அது எப்படி?

நாணயங்களை வாங்கிச் செல்பவர் - அவற்றைக் கொடுத்த யஜீதின் மகனார்தான் என்பதை அந்தமனிதர் அறியாதிருக்கலாம். அல்லது மஅன்கூட ஓர் ஏழைதானே என்பதால் அவருக்குக் கொடுத்திருக்கலாம்!

ஆனால் தாம் கொடுத்துவைத்திருந்த தர்மத்தைத் தம் மகனே வாங்கி னார் எனும் விவரம் யஜீத்(ரலி) அவர்களுக்குத் தெரியவந்ததும் -உன்னை நான் நினைக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார். அதாவது, வேறெவருக் காவது கொடுக்க வேண்டும் என்றுதானே பணத்தைக் கொடுத்தேன். உனக்குத் தரவேண்டும் என்று நான் கொடுக்கவில்லையே" என்கிறார்.

நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள். அது, ஓர் அடிப்படை உண்மையை உணர்த்துகிறது. அமல் களெல்லாம் எண்ணங்களைப் பொறுத்தே உள்ளன., ஒருமனிதன் நல்லது செய்ய நாடினால் அது அவனுக்கு நற்கூலியாகவே அமையும் என்பதே அந்த உண்மை! இதனால்தான் இந்நிகழ்ச்சியை இந்தப் பாடத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள் இமாம் நவவி (ரஹ்) அவர்கள்.

இந்த நிகழ்ச்சியில் - தமது தர்மம் சொந்த மகனுக்கே போய்ச் சேர வேண்டுமென யஜீத் (ரலி) அவர்கள் நினைக்கவில்லை. யாரேனும் அந்நிய ஏழைக்குக் கிடைக்க வேண்டும் என்றே எண்ணினார். எனவேதான் யஜீதே! நீ நினைத்தது உனக்கு என்று நபியவர்கள் சொன்னார்கள். அதாவது, நீ எண்ணிய எண்ணத்தின்படி உனக்குக் கூலி உண்டு.

இந்த நபிமொழியின் வெளிச்சத்தில் பல சட்ட நுணுக்கங்கள் தெளிவாகின்றன.

❁ தந்தைக்கும் மகனுக்கும் ஏற்படுகிற இதுபோன்ற விஷயங்களில் தீர்ப்புக்காக நடுவர் ஒருவரை நாடிச் செல்வது பெற்றோரை நிந்திக்கும் குற்றமாகாது.

❁ செல்வந்தர் ஒருவர் ஒரு மனிதருக்கு ஜகாத் பணம் கொடுக்கிறார். அந்த மனிதர் ஏழைதான்., ஜகாத் வாங்கிடத் தகுதியானவர்தான் எனக் கருதியே கொடுக்கிறார். ஆனால் பிறகுதான் தெரியவருகிறது, அவர் ஏழை அல்ல என்பது இவரது ஜகாத் கூடுமா? கூடாதா?

கூடும்., அவர் மீதான கடமை நீங்கிவிடும். ஏனெனில் அவர் நினைத்தது ஓர் ஏழைக்கு ஜகாத் வழங்கிட வேண்டுமென்றுதான். எனவே அவரது நிய்யத் - எண்ணத்தின்படி அவருக்கு நிச்சயம் கூலி கிடைக்கும்.

❁ ஒருவர் தனது சிறிய தோட்டம் ஒன்றை அல்லாஹ்வின் பாதையில் வக்ஃப் செய்ய எண்ணினார். ஆனால் எனது இன்ன தோட்டத்தை வக்ஃப் செய்கிறேன் என்று அவர் சுட்டிக்காட்டியது அவரது பெரிய தோட்டத்தை! அவரது சொல், எண்ணத்திற்கு மாறானது. ஆனாலும் அவர் எண்ணியது போல் சிறிய தோட்டம்தான் வக்ஃப் செய்யப்பட்டதாக ஆகும். தவறாகச் சுட்டிக் காட்டியதால் எந்தப் பாதிப்பும் வராது.

❁ ஒருவர் ஹஜ் - உம்ரா இரண்டையும் வேறுபடுத்தி அறியாதவர்., மக்களோடு சேர்ந்து அவரும் ஹஜ்ஜு க்காகப் புறப்பட்டார்., எல்லோரும் முதலில் உம்ரா செய்துவிட்டு இஹ்ராம் களைந்தனர். அவரும் அதுபோலவே செய்ய நாடினார்., செய்தார்! ஆனால் தல்பியா சொல்லும் பொழுது லப்பைக் ஹஜ்ஜன் - இதோ ஹஜ்ஜு க்காக ஆஜராகி விட்டேன்,, என்று சொல்லிவிட்டார். இப்பொழுது இவரது நிய்யத் - எண்ணம் போல் அது உம்ராவாகவே நிறைவேறும். எல்லோரையும் போல் அவரும் உம்ரா செய்துவிட்டு இஹ்ராம் களைந்தது கூடும். லப்பைக் ஹஜ்ஜன் என்றதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு இந்நபிமொழியின் நிழலில் மேலும் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன.

❁ இந்த நபிமொழியின் மூலம் மேலும் தெரிய வருகிறது: ஒருமனிதன் தன் சொந்த மகனுக்கும் தர்மம் வழங்கலாம். அது ஆகுமானதே!

இதற்கு இன்னொரு நிகழ்ச்சியும் ஆதாரமாக உள்ளது. அண்ணல் நபி (ஸல்)அவர்கள் ஏழை எளியோருக்குத் தர்மம் வழங்குமாறு தம் தோழர்களுக்கு கட்டளையிட்டார்கள். அதில் அதிக அளவு ஆர்வம் ஊட்டினார்கள்.

அப்பொழுது அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது(ரலி) அவர்களின் மனைவி ஜைனப் (ரலி) அவர்கள் தமது செல்வத்தில் சிறிது தர்மம் கொடுக்க நாடினார்கள்.

இதனை அறிந்த அவர்களின் கணவராகிய இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் - உனது தர்மத்தைப் பெற உன் கணவரும் (அதாவது நானும்) நம் பிள்ளைகளுமே மிகவும் தகுதியானவர்கள். - ஏனெனில் ஜைனபின் கணவராகிய இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் ஏழையாக இருந்தார்கள். ஆனால் ஜைனப் (ரலி) அவர்கள் அதனை ஏற்கவில்லை., நான் இதுபற்றி நபி(ஸல்) அவர்களிடம் விசாரித்துத்தான் எதுவும் செய்யமுடியும் என்று சொல்லி விட்டார்கள்.

நபி(ஸல்)அவர்களிடம் வந்து வினவியபொழுது அவர்கள் பதிலளித்தார்கள். அப்துல்லாஹ் சொன்னது சரிதான்.. நீ தர்மம் வழங்குபவர்களி லேயே உன் கணவரும் உன் பிள்ளைகளும்தாம் மிகவும் அருகதையான வர்கள்.

ஆனால் இன்னொன்றையும் இங்கு கவனிக்க வேண்டும். ஒருமனிதன் தன் மகனுக்கு ஜகாத் வழங்குவது கூடும். ஆனால் ஒருநிபந்தனை: அவ்வாறு மகனுக்கு ஜகாத் கொடுப்பதை தன் இன்னொரு கடமைக்கு ஈடாக்கக் கூடாது.

அதாவது, தாம் கொடுத்து வரும் ஜகாத் பணமே மகனின் செலவுக்குப் போதுமானது., அவனது செலவுக்கென கொடுத்து வரும் பணத்திற்கு இந்த ஜகாத்தை ஈடாக்கிவிடலாம் எனும் நிலை இருக்கக் கூடாது.

ஆனால் மகன் தனியே வாழ்கிறான். அவன் மீது கடன் உள்ளது., அதனை அடைப்பதற்கு ஜகாத் வழங்கி னால் அது கூடும். எடுத்துக்காட்டாக, மகன் ஓட்டிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகி கடன்சுமை அதிக மாகி விட்டது. அவ்வளவு பணம் அவனிடம் இல்லை. பெரும் சிரமத்திற்கு ஆளாகி விட்டான் என்றால் தந்தை தனது ஜகாத் பணத்தை மகனுக்குக் கொடுத்து மகனின் கடன் சுமை தீர உதவலாம்., அது கூடும்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## மஅன் பின் யஜீத் (ரலி) அவர்கள்

மஅன் என்பது இவருடைய இயற்பெயர். இவரும் இவரது தந்தை யஜீதும் பாட்டனார் அக்னஸு ம் - மூவருமே ஸஹாபிகள் (நபித்தோழர்கள்) "நானும் என் தந்தையும் என் பாட்டனாரும் நபி(ஸல்) அவர்களிடம் வந்து (இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக) சத்திய பிரமாணம் செய்து கொடுத்தோம்" என்று மஅன் (ரலி) அவர்கள் நினைவு கூர்கிறார்கள். டமாஸ்கஸ் யுத்தத்தில் கலந்துகொண்ட இவர்கள் கூஃபா நகரில் தங்கி இருந்தார்கள். பிறகு எகிப்து வந்தார்கள். பிறகு டமாஸ்கஸில் குடியேறினார்கள்.

மர்வான் உடைய ஆட்சிக் காலத்தில் ளஹ்ஹாக் பின் கைஸ் என்பாரின் தலைமையில் ஹிஜ்ரி 64 ஆம் ஆண்டு நடைபெற்ற மர்ஜ் ராஹத் என்ற போரில் பங்கேற்று அதிலே அவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள்.

மஅன் பின் யஜீத் அவர்கள் முஆவியா(ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் நடந்த யுத்தங் களில் முஆவியாவின் படைகளில் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் மூலம் ஐந்து நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) நபி (ஸல்) அவர்களுடன் - அவர்களின் வாழ்நாளில், விசவாசியாக உள்ள நிலை யில் சேர்ந்திருந்த மனிதர்., அதுசிறிது காலமே ஆயினும் சரியே! ஆனால் விசு வாசம் கொண்ட நிலையிலேயே அவர் மரணம் அடைந்திருக்க வேண்டும்! உஸூல் ஹதீஸின் வழக்கில் இன்னொரு நிபந்தனை உண்டு. தோழர்என்றுபெயர் பெறும் வகையில் நபியவர்களுடன் நீண்ட காலம் அவர் நட்புகொண்டிருந்திருக்க வேண்டும் | ١) الصحابيون: الصحابي من اجتمع من البشر بالنبي ﷺ حـال حياتـه مؤمنا به و لو فترة واحدة ومات علي الايمان ، هذا عند الاطلاق واما عند الاصوليين : فهو ما ذكر بالاضافة الي انه لازم الرسول ﷺ ملازمة طويلة حتي اصبح عليه لفظ صاحب |
| 2) நீ எண்ணியது உனக்கு உண்டு: எண்ணத்தின் நன்மை உனக்குண்டு. | ٢) لك مانويت: أي ثوابه |
| 3) நீ பெற்றுக்கொண்டது உனக்கு: அதாவது நீ எடுத்த பணம் உனக்கே! | ٣) لك ما أخذت: لك ملك ما أخذت |

### கேள்விகள் – الاسئلة

1) ஸஹாபி - நபித்தோழர் என்றால் யார்? தாபிஈ என்றால் யார்?
2) இந்த நபிமொழி வழங்கும் நிகழ்ச்சியில் நீ பெற்ற படிப்பினைகள் என்ன?
3) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?
4) இந்தப் பாடத்திற்கும் இந்நபிமொழிக்கும் உள்ள தொடர்பை விளக்கவும்.

## மரண சாஸனமும் வாரிசுகளின் உரிமையும்

٦ – وَ عَنْ أَبِي اِسْحاقَ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ مَالِكِ بْنِ أَهَيْبِ بْنِ عَبْدُ مَنَافِ بْنِ زُهْرَةَ بْنِ كِلاَبِ بْنُ مُرَّةَ بْنِ كَعْبِ بْنِ لُؤَيٍّ أَلقُرَشِيِّ أَلزُهْرِيِ ﷺ أَحَدِ العَشَرَةِ الْمَشْهُوْدِ لَهُمْ بِالجَنَّةِ رَضِيَ اللهُ عَنْهُمْ قَالَ : { جاءَنِيْ رَسُوْلُ اللهِ ﷺ يَعُوْدُنِي عَامَ حَجَّةِ الْوَدَاعِ مِنْ وَجْعِ اِشْتَدَّ بِيْ فَقُلْتُ : يَا رَسُوْلَ اللهِ اِنِّيْ قَدْ بَلَغَ بِيْ مِنْ أَلْوَجْعِ مَا تَرَي وَ أَنَا ذُو مَالٍ وَلاَ يَرِثُنِيْ الاَّ ابْنَةٌ لِيْ أَفَاتَصَدَّقُ بِثُلُثَيْ مَالِي؟ قَالَ :لاَّ، قُلتُ: فَالشَطْرُ يَا رَسُوْلَ اللهِ ؟ قَالَ : لا، قُلْتُ : فَالثُلُثُ يَارَسُوْلَ اللهِ ؟ قَالَ: أَلثُلُثُ وَ الثُلُثُ كَثِيْرٌ – أو كَبِيْرٌ – انَّكَ أَنْ تَذَرَ وَرَثَتَكَ أَغْنيَاء خَيْرٌ مِنْ أَنْ تَذَرَهُمْ عَالَةً يَتَكَفَّفُوْنَ أَلنَّاسَ ، وَانّكَ لَنْ تُنْفِقَ نَفَقَةً تَبْتَغِيْ بِهَا وَجْهَ اللهِ الاَّ أجرْتَ عَلَيْهَا حَتّي فِي فِي اِمْرأتِكَ قَالَ: فَقُلْتُ: يارَسُوْلَ اللهِ أَخَلَّفُ بَعْدَ أصْحَابْي؟ قَالَ : انَّكَ لَنْ تُخَلَّفَ فَتَعْمَلَ عَمَلاً تَبْتَغِيْ بِهِ وَجْهَ اللهِ الاّ ازْددتَّ بِهِ دَرَجَةً وَرِفْعَةً وَ لَعَلَّكَ أَنْ تُخَلَّفَ حَتّي يَنْتَفِعَ بِكَ أَقْوامٌ وَ يَضرَّ بِكَ آخَرُوْنَ . اَللَّهُمَّ أَمْضِ لاَصْحابِيْ هِجْرَتَهُمْ وَ لاَ تَرُدَّهُمْ عَلَي أَعْقَابِهِمْ لكِنِ البَائِسُ سَعْدُ بْنُ خَوْلَةَ يَرْثِيْ لَهُ رَسُوْلُ اللهِ ﷺ أَنْ ماتَ بِمَكَّةَ . مُتّفقٌ عَلَيْهِ

ஹதீஸ் 6

ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் (சவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்ட பத்துப் பேரில் ஒருவர்) அறிவிக்கிறார்கள்: இறுதி ஹஜ்ஜின் ஆண்டில் எனக்குக் கடுமையான நோய் ஏற்பட்டிருந்த காரணத் தால் நபி (ஸல்) அவர்கள் என்னை நலம் விசாரிக்க வந்தார்கள். அப்பொழுது நான் கேட்டேன்:

அல்லாஹ்வின் தூதரே! நான் எந்த அளவுக்கு நோய்வாப்பட்டிருக்கிறேன் என்பதை நீங்களே பார்க்கிறீர்கள். நான் சொத்துசகம் உடையவன். ஒரே ஒரு மகளைத் தவிர வேறு வாரிசுகள் எனக்கு இல்லை. எனவே எனது சொத்தில் மூன்றில் இரண்டு பகுதியை நான் தர்மம் செய்துவிடட்டுமா?

இதற்கு நபி(ஸல்)அவர்கள் வேண்டாம் என்று சொன்னார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! பாதியை ,

வேண்டாம்''

அல்லாஹ்வின் தூதரே! மூன்றில் ஒரு பங்கினை? ''

மூன்றில் ஒரு பாகத்தை வேண்டுமானால் தர்மம் செய்யும். மூன்றில் ஒரு பாகம்கூட அதிகம் (அல்லது கூடுதல்)தான். நிச்சயமாக நீர் உம் வாரிசுகளைச் செல்வந்தர்களாக விட்டுச் செல்வதே சிறந்தது., மக்களிடம் கை நீட்டி யாசகம் கேட்கும் வகையில் ஏழைகளாக விட்டுச் செல்வதைவிட! நீர் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி எது ஒன்றைத் தர்மம் செய்தாலும் அதன் பொருட்டு உமக்கு நற்கூலி வழங்கப்படாமல் போகாது!உம்முடைய மனைவியின் வாயில் நீர் ஊட்டுகிற உணவு - பானத்திற்குக்கூட (நற்கூலி உண்டு)''

நான் கேட்டேன்: அல்லாஹ்வின் தூதரே! என் தோழர்களெல்லாம் மதீனா திரும்பிச் செல்ல நான் இங்கே தங்க விடப்படுவேனா? ''

அதற்கு நபி(ஸல்) அவர்கள் நீர் தங்கிட வேண்டியது வராது. அப்படி நீர் தங்கியிருந்து - அப்போது அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி நீர் எந்த அமல் செய்தாலும் அதன் பொருட்டு ஒரு சிறப்பும் ஓர் அந்தஸ்தும் உமக்கு உயர்த்தப்படாமல் போகாது''

மேலும் நபியவர்கள் சொன்னார்கள்: ஆனால் உமக்கு நீண்ட ஆயுள் அளிக்கப்படலாம்., உம்மின் மூலம் நிறையப்பேர் பயன் அடையும் வகையிலும் மேலும் பலபேர் உம்மின் மூலம் நஷ்டம் அடையும் வகையிலும்! (அது அமையலாம்) - யா அல்லாஹ்! என் தோழர்களுக்கு அவர்களின் ஹிஜ்ரத்தை செல்லுபடியாக்குவாயாக! அவர்களை - அவர்களின் பழைய நிலைக்குத் திருப்பி விடாதே!- ஆனால் துயரத்திற்குள்ளானவர் ஸஅத் இப்னு கௌலா என்பவர்தான்!'' - அவர் நோய்வாய்ப்பட்டு மக்காவிலேயே மரணம் அடைந்தது குறித்து நபி(ஸல்) அவர்கள் மனம் வருந்தினார்கள்" (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

புகழ்பெற்ற நபித்தோழரான ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர். பிறந்த பூமியான மக்கத் திருநகரை - அல்லாஹ்வுக்காகவும் ரஸூலுக்காகவும் துறந்து ஹிஜ்ரத் மேற்கொண்டு மதீனாவில் குடியேறியவர். சுவனவாசி என்று உலகிலேயே நபியவர்களால் நற்செய்தி சொல்லப்பட்டவர்! இவையே, அன்னாரின் சிறப்புக்கும் உயர்வுக்கும் தெளிவான சான்றுகளாகும்.

ஹிஜ்ரீ 10 ஆம் ஆண்டு ஹஜ்ஜை நிறைவேற்ற வந்த நபி (ஸல்) அவர்களுடன் ஸஅத் (ரலி) அவர்களும் மக்க மாநகர் வந்திருந்தார்கள். ஹஜ்ஜு க்குப் பிறகு கடுமையான பிணிக்குள்ளான ஸஅத் அவர்களை நலம் விசாரிக்க வந்தார்கள், நபியவர்கள். !

நற்குணத்தின் முன்மாதிரியாக விளங்கிய நபியவர்கள் தம் தோழர்களுடன் அன்பாய்ப் பழகும் பண்புள்ளவர்கள். அதிலும் குறிப்பாக பிணியுற்றவர்களைச் சந்தித்து நலம் விசாரிப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

கடுமையாக நோயுற்றிருந்த ஸஅத் (ரலி)அவர்கள் தமக்கு மரணமே வந்துவிடுமோ என அஞ்சி சொத்தில் பெரும் பகுதியை தர்மம் செய்ய முன்வருகிறார்கள். அது குறித்து நபியவர்களிடம் விளக்கம் கேட்டபொழுது மூன்றில் ஒரு பாகத்திற்கு மேல் தர்மம் செய்ய வேண்டாமென நபி (ஸல்) அவர்கள் தடுத்துவிடுகிறார்கள்.

ஏனெனில் மரணவேளையோ என அஞ்சுகின்ற கட்டத்திலுள்ள ஒருவரின் சொத்தில் வாரிசுகளின் உரிமை சம்பந்தப்படுகிறது. எனவே அவர்களின் உரிமைக்குப் பாதிப்பு வராத வகையில்தான் மரண சாஸனம் அமைதல் வேண்டும்.

ஆனால் நோய்நொடியின்றி ஆரோக்கியமாக இருப்பவரோ லேசான நோய் கண்டிருப்பவரோ எவ்வளவு வேண்டுமானாலும் தர்மம் செய்யலாம். மூன்றில் இரண்டு பகுதியோ பாதியோ - தன் விருப்பப்படி அவர் தர்மம் செய்யலாம். ஏன், சொத்து முழுவதையும்கூட அவர் தர்மம் செய்யலாம்! ஆனால் ஒரு நிபந்தனை: வேறொரு வழியில் அவருக்குப் போதிய வருமானம் கிடைப்பதாய் இருக்கவேண்டும். அதனைக் கொண்டு அவர் தனது எதிர்காலப் பொருளாதார நிலையைச் செம்மைப் படுத்திக்கொள்ள இயல வேண்டும். இல்லையெனில் முழுச் சொத்தையும் தர்மம் செய்தல் ஆகாது.

ஆக, ஸஅத் (ரலி) அவர்களை, மூன்றில் ஒரு பாகத்தைத் தர்மம் செய்ய அனுமதித்த நபி(ஸல்) அவர்கள் - இதுவும் அதிகம்தான்,, என்றும் கூறினார்கள்.

இதிலிருந்து - சொத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்குக் குறைவாகவே தர்மம் அளிக்குமாறு மரண சாஸனம் அமைந்திட வேண்டும்., அதுவே சிறந்தது என்று தெரியவருகிறது.

இதனால்தான், மக்கள் மூன்றில் ஒரு பாகத்தைக்கூட தவிர்த்துக் கொண்டு நான்கில் ஒரு பாகத்தைத் தர்மம் அளிக்குமாறு மரணசாஸனம் செய்யக் கூடாதா?" என்று இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்

மேலும் அபூ பக்ர் (ரலி) அவர்கள் மரணத் தருவாயில் தமது சொத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை தர்மம் செய்யுமாறு அறிவுறுத்திவிட்டு -

அல்லாஹ் தனக்கு எந்தப் பங்கினைப் பொருந்திக் கொண்டானோ அதையே நானும் பொருந்திக் கொள்கிறேன்" என்று கூறினார்கள் - போரில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படும் பொருள்களில் ஐந்தில் ஒருபாகம் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உரியது என்று குர்ஆனில் (8 : 41) வந்துள்ள வசனத்தைக் குறித்தே இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

இன்றைய காலத்தில் மக்கள் தங்களது சொத்தில் மூன்றில் ஒருபாகத்தை தர்மம் வழங்கும்படி மரண சாஸனம் செய்வது சிறந்த நடைமுறையல்ல என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அது நான்கில் ஒரு பாகமாகவோ ஐந்தில் ஒரு பாகமாகவோதான் இருக்க வேண்டும். அதுவே சிறந்தமுறை.

அபூ பக்ர்(ரலி) அவர்களைப் பின்பற்றி ஐந்தில் ஒரு பாகத்தை மரணசாஸனம் செய்வதுதான் சிறந்தது என்று நம்முடைய ஃபிக்ஹு - சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளதும் கவனிக்கத் தக்கதாகும்.

நீர் உம் வாரிசகளைச் செல்வந்தர்களாக விட்டுச் செல்வதே சிறந்தது., மக்களிடம் கைநீட்டி யாசகம் கேட்கும் நிலையில் அவர்களை விட்டுச் செல்வதைவிட! ''

- மரணத்தைத் தழுவ இருப்பவர் தனது சொத்தை வாரிசுகளுக்காக விட்டுச் செல்வதே நேரியமுறை என்பதற்கு இது நேரடியான ஆதாரமாகும். அவரது சொத்தை, வாரிசகள் கைப்பற்றுவது நிர்பந்தமாகத்தான்., ஆகையால் அவருக்கு எந்தப் புண்ணியமும் இல்லை என்று சொல்வது தவறு. வாரிசகளுக்காகச் சொத்தை விட்டுச்செல்வதால் நிச்சயம் அவருக்கு நற்கூலி உண்டு.

இன்னொரு கோணத்தில் பார்த்தாலும் இதுவே சிறந்தது. அதாவது, சொத்தை வாரிசகளுக்காக அவர் விட்டுச் சென்றால் அதை ஆண்டு அனுபவிப்பது யார்? அவருடைய மனைவி - மக்கள்தாம். உறவினர் கள்தாம்! ஆனால் தர்மம் கொடுத்துவிட்டுச் சென்றால் அதனை அனுபவிப்பது அந்நியர்கள்!

ஒரு நபிமொழி கூறுகிறது: உறவினருக்குத் தர்மம் செய்வது அந்நியர்களுக்குத் தர்மம் கொடுப்பதைவிடச் சிறந்தது., ஏனெனில் முந்தையது தர்மமாகவும் உறவினர்களை ஆதரிப்பதாகவும் உள்ளது" இந்த வகையில் இரட்டிப்பு நன்மைக்கு அது காரணியாக அமைகிறது.

அல்லாஹ்வின் திருப்பொருத்தை நாடி எந்த ஒரு தர்மம் நீர் செய்தாலும் அதன் பொருட்டால் உமக்கு நற்கூலி வழங்கப்படாமல் போகாது''

- அதாவது எந்த ஒருபொருளையும் தர்மம் செய்யலாம். பணம், ஆடை, போர்வை, விரிப்பு, உணவுப் பொருள்கள் என எதனையும் தர்மம் செய்யலாம். எதுவாயினும் அல்லாஹ்வுக்காக என நிய்யத் - எண்ணம் வைத்து வழங்கினால் நிச்சயம் அதற்குக் கூலி உண்டு.

உம் மனைவியின் வாயில் ஊட்டும் உணவு பானத்திற்குக் கூட (நற்கூலி உண்டு)''

அதாவது, மனைவியின் தேவைகளுக்காகச் செலவு செய்வதற்கும் நற்கூலி உண்டு., அது கணவன் மீது கடமையானதாயினும் சரியே! அதனை நிறை வேற்றாத கணவனை நோக்கி, என் தேவைக்குச் செலவு செய்யப் பணம் தாருங்கள்., இல்லையெனில் என்னை மணவிலக்குச் செய்து விடுங்கள் என்று சொல்லும் உரிமை மனைவிக்கு உண்டு! அந்த அளவுக்குக் கண்டிப்பான செலவினங்களைக்கூட நிய்யத் - எண்ணத் தூய்மையுடன் செய்தால் அவற்றிற்காகவும் அல்லாஹ் கூலி வழங்குகிறான்.

இதேபோன்றுதான் உங்கள் பிள்ளைகளுக்காக-உங்கள் பெற்றோருக்காக ஏன், உங்கள் தேவைக்காகவே கூட நீங்கள் கஞ்சத்தனம் செய்யாமல் தாராளமாகச் செலவு செய்தால் - அது அல்லாஹ்வின் விருப்பப்படி அமை யும் போது எல்லாவற்றிற்கும் நற்கூலி பதிவு செய்யப்படுகிறது.

<u>என் தோழர்களெல்லாம் மதீனாவுக்குத் திரும்பிச்செல்ல நான் இங்கேயே தங்கிடுமாறு விடப்படுவேனா?</u> ''

- அதாவது, நோயின் காரணமாக நான் மதீனா திரும்ப இயலாமல் இங்கேயே- மக்காவிலேயே என் வாழ்க்கை முடிந்து விடுமா?

<u>அப்படி நீர் தங்கிடுமாறு விடப்பட்டு அப்போது அல்லாஹ்வின் திருப்பொருத்தை நாடி எந்த ஓர் அமலை நீர் செய்தாலும் அதற்குப் பகரமாக ஒருசிறப்பை -ஓர் அந்தஸ்தை அல்லாஹ் உமக்கு உயர்த்தவே செய்வான் ''</u>

- அதாவது, நீர் மக்காவிலேயே தங்கியிருக்குமாறு விடப்பட்டாலும் - மக்காவை விட்டு வெளியேற உம்மால் இயலாது என வைத்துக் கொண்டாலும் - நீர் எந்த மக்காவைத் துறந்து ஹிஜ்ரத் செய்தீரோ அந்த மக்கா வில் வைத்து நீர் எந்த அமல் செய்தாலும் நல்ல நிய்யத் - நல்லெண்ணத் துடன் செய்தால் அதற்கான நன்மையை - புண்ணியத்தை அல்லாஹ் உமக்கு அளிக்கவே செய்வான். அருட்பேறுகள் நிறைந்த சவனத்தில் உயர்ந்த அந்தஸ்தை அல்லாஹ் உமக்கு நிச்சயம் வழங்குவான்.

<u>ஆனால் உமக்கு நீண்ட ஆயுள் அளிக்கப்படலாம் ''</u>

-அதாவது, ஸஅத்(ரலி)அவர்கள் நோயிலிருந்து குணம் அடைந்து நீண்ட காலம் வாழலாம் என நல்லாதரவு வைத்து நபியவர்கள் கூறிய வார்த்தையாகும் இது! அப்படியே நிகழவும் செய்தது. ஸஅத் (ரலி)அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். நிறைய குழந்தைச் செல்வங்களையும் கண்டார்கள். பதினேழு ஆண் குழந்தை களும் பன்னிரெண்டு பெண் குழந்தைகளும் அவர்களுக்குப் பிறந்தன என்று வரலாறு கூறுகிறது!

உம்மின் மூலம் நிறையப்பேர் பயனடையும் வகையில், உம்மின் மூலம் நிறையப்பேர் நஷ்டம் அடையும் வகையில் (நீண்டகாலம் வாழ்வீர்)"

- இதுவும் நிகழ்ந்தது. ஸஆத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் பல இஸ்லாமியப் போர்களில் முக்கிய பங்கு வகித்து மகத்தான வெற்றிகள் பல சூடினார்கள். அவர்களின் மூலம் நிறையப்பேர் பயனடைவர்கள் என்பது முஸ்லிம்களைக் குறிக்கும். நிறையப்பேர் நஷ்டம் அடைவார்கள் என்பது நிராகரிப்பாளர்களைக் குறிக்கும்.

## இதுவே முன்னேற்றம்

யா அல்லாஹ்! என் தோழர்களின் ஹிஜ்ரத்தை செல்லுபடியாக்குவாயாக! "

- தம் தோழர்களின் ஹிஜ்ரத்தை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு அதற்கான கூலியை முழுமையாக வழங்கிட வேண்டும். அதில் எந்தக் குறையையும் வைத்திக்கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். இவ்வாறு ஹிஜ்ரத் செல்லுபடியாகுவதற்கு இரண்டு நிலைகள் தேவை.

1) ஈமானில் - நம்பிக்கையில் நிலைத்திருத்தல். ஏனெனில் ஒருவர் ஈமானில் நிலைத்திருந்தால்தான் ஹிஜ்ரத்திலும் நிலைத்திருப்பார்.

2) மீண்டும் மக்காவில் குடியேறாதிருத்தல். ஏனெனில் ஒருவர் அல்லாஹ் - ரசூலின் பக்கம் ஹிஜ்ரத் மேற்கொண்டு ஓர் ஊரைத் துறந்து விட்டாரெனில் அது தர்மம் செய்துவிட்ட பொருளைப் போன்றாகிறது. தர்மம் கொடுத்த பொருளை மீண்டும் பெறலாகாது. இதுபோலவே எந்நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் மேற்கொண்டாரோ அந்நாட்டில் மீண்டும் குடிபுகலாகாது.

இதேபோன்றுதான், ஒருமனிதன் அல்லாஹ்வின் தண்டனைக்கு அஞ்சி தீமைகளைக் கைவிட்டுவிடுவதும்! தீய பாட்டுகள், தீய படங்கள், ஆபாசப் பத்திரிகைகள், ஆபாசப்படங்கள், இதேபோல் தீய நண்பர்கள், தீய பழக்கங் கள் ஆகியற்றை ஒருவர் விட்டொழித்துவிட்டாரெனில் பிறகு இவற்றை மீண்டும் வாங்கலாமா? தொடங்கலாமா? என்று சிந்திக்கக்கூடாது. தீமை ளை விட்டொழித்தது விட்டொழித்ததாகவே இருக்க வேண்டும். அவற்றை மீண்டும் தொடர்வது இறைவனின் கோபத்திற்கு நம்மை ஆளாக்கிவிடும்! நன்மையின் பக்கம் அடியெடுத்து வைத்தபின் தீமைக்குத் திரும்பக்கூடாது. தீமைகளை விட்டும் விலகிடும்போது - அது அல்லாஹ்வுக்காக எனும் பொழுது அது நிரந்தரமாக இருந்தால்தான் அது பயனளிக்கும். நற் கூலியைப் பெற்றுத்தரும்.

இதோ! நபி(ஸல்)அவர்கள் மேலும் பிரார்த்தனை செய்ததைப் பாருங்கள். யா அல்லாஹ்! என் தோழர்களை, அவர்கள் வந்த வழியிலேயே திருப்பி விடாதே" - இது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதோர் உண்மை. ஈமான்- இறைநம்பிக்கை கொண்ட பிறகு நிராகரிப்புக் கொள்கைக்குத் திரும்புதல் என்பதென்ன? கண்ணியத்திற்குப் பின் இழிவைத் தேடிக்கொள்வது போன்றதுதானே. சிகரத்தை எட்டிப்பிடித்த பின்னால் கீழ்நோக்கிச் சரிவதற்குச் சமமானதுதானே அது!அழிவிலிருந்து தப்பித்தபிறகு மீண்டும் அழிவை வர வழைப்பது ஒருபோதும் அறிவுடமை ஆகாது.

ஏனெனில் இறைநம்பிக்கையே வெற்றிக்கு அடிப்படை. முன்னேற்றத்தின் திறவுகோல். தீமைகளை விட்டொழித்து விட்டு நன்மையின் பக்கம் திரும்புவதே உயர்வுக்கும் சிறப்புக்கும் உத்திரவாதம். மாறாக மீண்டும் நிராகரிப்புப் போக்கை மேற்கொள்வதும் நன்றி மறந்து பாவங்கள் புரியத் தொடங்குவதும் நிச்சயம் பின்னடைவேயாகும்!

இந்நபிமொழியில் மேலும் பல விஷயங்கள் தெரியவருகின்றன.

∴ ஹலாலான - ஆகுமான வழியில் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் சம்பாதிக்கலாம்., அது தவறல்ல. ஆனால் அதற்கான ஜகாத்தை கொடுத்திட வேண்டும்.

∴ மரணத்தின் பிடியில் இருப்பவர் சொத்தில் மூன்றில் ஒருபங்கிற்கு அதிகமாகக்கூட தர்மம் செய்யலாம்., ஆனால் வாரிசுகள் அதனை அனுமதிக்க வேண்டும்.

∴ இந்நபிமொழியின் பயன்களில் முக்கியமானது ஆலோசனைப் பண்பாகும்.

-ஸஅத் பின் அபீவக்காஸ் (ரலி)அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயல்பட்டுள்ளார்கள். அதுவும் தீன் - மார்க்கப் பிரச்னைகளில் அது மிகவும் கட்டாயமான ஒன்றாகும்.

அல்லாஹ் தன் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களையே முக்கியமான பிரச்னைகளின்போது தோழர்களிடம் ஆலோசனை செய்து செயல்படுமாறு பணிக்கிறான்:

இவர்களின் தவறுகளைப் பொறுத்துக் கொள்வீராக. மேலும் இவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருவீராக. மேலும் தீனின் பணிகளில் இவர்களிடம் ஆலோசனை செய்வீராக. (ஏதாவதொரு விஷயத்தில்) நீர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டால் அப்பொழுது அல்லாஹ்வை முழுமையாகச் சார்ந்திருப்பீராக. திண்ணமாக அல்லாஹ் தன்னை முழுமையாகச் சார்ந்து செயல்படுவோரை நேசிக்கிறான்" (குர்ஆன் 3 : 159)

மக்களில் சிலர் தமக்கே எல்லாம் தெரியும் என்று கருதுகிறார்கள். பிறரிடம் ஆலோசனை கேட்பதற்கு என்ன இருக்கிறது என்று ஆணவம் கொள்கின்றனர். இதனாலேயே தன்னிச்சையாகச் செயல்படுகின்றனர். அத னால் அவர்களின் முயற்சிகள் பல சிக்கல்களுக்கு உள்ளாகின்றன! வேறுபல கெடுதிகளும் விளைகின்றன.

இன்னும் சிலர் - நாம் சத்தியத்தை எடுத்து வைக்கிறோம்., இதுவிஷயத் தில் எதற்கும் நாம் அஞ்சப் போவதில்லை என்று வீரவசனம் பேசகின்றனர். அதனால் குறுகிய வட்டத்தில் சிந்திக்கிறார்கள். எது நன்மை பயக்கும்? எது தீங்கு விளைவிக்கும்? என்று விரிவான முறையில் யாரிடமும் ஆலோசனை கலப்பதில்லை. முழுச் சமுதாயத்துடனும் தொடர்புடைய -எவ்வளவு முக்கியமான விவகாரமானாலும் இப்படித்தான் சிந்திக் கிறார்கள்., சயமாகத்தான் செயல்படுகிறார்கள். இறுதியில் அவர்களின் நடவடிக்கை யினால் ஏற்படும் தீய விளைவுகளைச் சமுதாயம் முழுவதும் சந்திக்க நேரிடுகிறது!

இவர்களின் நிய்யத் - எண்ணம் நல்லதாக இருக்கலாம். ஆனால் அது மட்டும் போதாது. விவேகத்துடன் செயல்படும் திறன் இருக்கவேண்டும். ஒரு மனிதன் நல்லெண்ணத்திற்காகப் புகழப்படலாம். ஆனால் விவேகம் இல்லாத பொழுது அது இகழ்ச்சியாகவே வந்து முடியும். நல்லெண்ணம் என்பது வேறு. விவேகமான நடவடிக்கை - பயன்பாட்டின் சற்றளவு விரிவான செயல்திறன் என்பது வேறு என்பதை நாம் மறந்து விடக் கூடாது!

எனவே பாரதூரமான விளைவுளை ஏற்படுத்தும் விஷயங்களிலாவது அனுபவமிக்கவர்களிடம்-தீன் பணிகள் செய்துவரும் இயக்கத்தவர்களிடம்-சமுதாய ஆர்வலர்களிடம் ஆலோசனை கலந்து கூட்டாகச் செயல்படும் சிந்தனை வளர வேண்டும்.

இதேபோல ஆலோசனை வழங்குபவரும் வினயத்துடன் வழங்க வேண்டும். ஆலோசனை கேட்டு வந்திருப்பவர் இதனை எதிர்பார்த்துத்தான் வந்துள்ளார்., அதையே நமது கருத்தாகச் சொல்லிவிடலாம் என்பது கூடாது! இது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போக்காகும். எது உண்மையோ - எது பயனுள்ளதோ -சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதோ அதை மேற்கொள்ளுமாறுதான் ஆலோசனை கூறிட வேண்டும். அதனைச் செயல்படுத்துவதற்கே ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். ஆலோசனை கேட்டு வந்திருப்பவர் அதை ஏற்றாலும் ஏற்கா விட்டலும் சரியே!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## ஸஅத் பின் அபூ வகாஸ் (ரலி) அவர்கள்

ஸஅத் பின்அபீ வகாஸ் (ரலி) அவர்களின் குறிப்புப் பெயர் அபூ இஸ்ஹாக். அவருடைய தந்தை பெயர் மாலிக். ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தைத் தழுவியவர்களில் இவர் ஐந்தாமவர் அல்லது ஏழாமவர். நபியவர்களால் சவனத்தின் நற்செய்தி சொல்லப்பட்ட பத்துப்பேர்களில் இவர்களும் ஒருவர். உமர் (ரலி) அவர்களது மரணத்தின்பொழுது அடுத்த கலீஃபாவைத் தேர்ந்தெடுக்கும் ஆறுபேர் கொண்ட ஆலோசனை குழுவில் இடம் பெற்றிருந்தார்கள்! இறைவழிப் போரில் அம்பு எய்திய முதல் நபரும் இவர்களே! பத்று போரிலும் ஹு தைபிய்யா உடன்படிக்கையிலும் ஏனைய போர்களிலும் கலந்துகொண்டார்கள். இராக் தேசத்தை வெற்றி கொண்டது இவர்கள்தாம்.

வீரம், இறைமார்க்கத்தின் விஷயத்தில் கண்டிப்பான போக்கு, நபிவழி பின்பற்றல், உலகில் பற்றற்றநிலை, பேணுதல், வாய்மை, பணிவு ஆகியவற்றில் இவர்கள் பெற்றிருந்த தனிச்சிறப்புகள் பிரபலமானவை. مجاب الدعوة (பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுபவர்) என்று பெயர் பெற்றிருந்தார்.

தடித்த உடல்வாகு கொண்டவராகவும் குள்ளமானவராகவும் இருந்த இவர்கள் கோதுமை நிறத்தவர் ஆவார். ஹிஜ்ரி 55 ஆம் ஆண்டு, மதீனாவில் இருந்து 10 மைல் தொலைவிலான அகீக் என்ற இடத்தில் மரணம் அடைந்தார்கள். இவருடைய ஜனாஸாவை அங்கிருந்து மக்கள் தம் தோள்களில் சமந்து கொண்டு வந்து மதீனாவில் பகீஃ மண்ணறையில் நல்லடக்கம் செய்தார்கள். ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் மூலம் 270 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

## شرح الكلمات

## அருஞ்சொற்கள்

| | |
|---|---|
| 1) என்னை நலம் விசாரிப்பார்கள். | ١) يعود بي : يزورني مرة بعد اخري |
| 2) பாதி | ٢) الشطر : النصف |
| 3) விட்டுவிடுவீர். | ٣) تذر : تترك |
| 4) ஏழைகள் | ٤) عالة : فقراء |
| 5)மக்களிடம் கை நீட்டிக்கேட்பார்கள். | ٥) يتكففون الناس: يسالونهم ما في أكفهم |

| | |
|---|---|
| 6)என் தோழர்கள் மக்காவில் இருந்து திரும் பிய பிறகு நான் இங்கே விடப் படுவேனா? | أخلف بعد أصحابي؟ : أاترك في مكة بعد انصرافهم عنها؟ |
| 7)எதிர்காலத்தில் இப்படி நடைபெறும் என்று நபியவர்கள்செய்த முன்னறிவிப் பாகும் இது. ஸஅத் ஈராக்கை வெற்றி கொண்டார்கள். அவர்களின் கை பற்றி பலர் நேர்வழிபெற்றார்கள். பயன்அடைந் தார்கள். மேலும் இறைநிராகரிப்பாளர்கள் பலர் அவர்களின் கைகளால் கொல்லப் பட்டார்கள்., நஷ்டமடைந்தார்கள். | ٧) ينتفع بك: هذا من اخباره ﷺ بالمغيبات ، وقد فتح سعد عراق فاهتدي علي يديه أقوام فانتفعوا وقتل علي يديه كفار فخسروا |
| 8) முழுமைப்படுத்து, செல்லுபடியாக்கு. | ٨) أمض: اتمم |
| 9) வருத்தத்திற்கும் துயரத்திற்கும் உள் ளானவர். ஸஅத் பின் அபீ வகாஸ் அவர் களிடம் இதைச் சொல்வதன் நோக் கம் அவர்களது ஹிஜ்ரத் எற்றுக் கொள்ளப் பட்டது குறித்து அவர் மனம் நிம்மதி அடைவதே ஆகும். | ٩) البائس: من اشتدت حاجته واشتد حزنه . مناسبة ذكر هذا عند سعد بن ابي وقاص تطييب قلبه بقبول هجرته واتمامها له لا كسميه سعد بن خولة |
| 10)மனம் வருந்துகிறார். நோந்து போகி றார். | ١٠) يرثي : يحزن و يتوجع |

### கேள்விகள்- الاسئلة

1) மரணப்படுக்கையில் இருப்பவர் தர்மம் செய்வதாயின் அதற்கான நெறி முறை என்ன? விரிவாக விளக்கவும்.
2) அல்லாஹ் தனக்கு எந்தப் பங்கினைப் பொருந்திக்கொண்டானோ அதனையே நானும் பொருந்திக் கொள்கிறேன்'' என்று சொன்னது யார்? இதன் விளக்கம் என்ன?
3) ஹிஜ்ரத் செல்லுபடியாகுவதற்குரிய இரண்டு நிபந்தனைகள் என்ன?
4) இந்நபிமொழி தரும் படிப்பினைகள் சிலவற்றை விவரிக்கவும்.

## ஒழுக்க மாண்பே
## உயர்வுக்கு அடிப்படை!

٧– وَعَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ { اِنَّ اللهَ لا يَنْظُرُاِلَي أَجْسَامِكُمْ وَ لاَ اِلَيْ صُوَرِكُمْ ولكِنْ يَنْظُرُ اِلَيْ قُلُوْبِكُمْ } رواه مسلم

ஹதீஸ் எண்7

அபூ ஹு ரைரா(ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: நிச்சயமாகஅல்லாஹ் உங்களின் உடல்களையோ தோற்றங்களை யோபார்ப்பதில்லை. ஆனால் உங்களின் உள்ளங்களைப் பார்க்கி றான்'' (முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

இறைவன் உங்களுடைய உடலையும் தோற்றத்தையும் குலத்தையும் பார்த்து எடைபோட்டு உங்களுக்கு உயர்வும் தாழ்வும் அளிப்பதில்லை. உங்கள் உடல் பெரியதா? சிறியதா? பிணியுற்றதா? ஆரோக்கியமானதா? உங்களது தோற்றம் அழகானதா? அலங்கோலமானதா? நீங்கள் பிறந்தது உயர்ந்த குடும்பத்திலா? தாழ்ந்த குடும்பத்திலா? இதேபோல் உங்களிடம் செல்வம், செல்வாக்கு உள்ளதா? பட்டம்-பதவியைப் பெற்றுள்ளீர்களா? இவற்றை வைத்து எந்த மனிதனுக்கும் இறைவன் கண்ணியம் அளிப்பதில்லை. இவற்றில் எதனையும் அளவு கோலாய்க் கொண்டு மனிதர்களை இறைவன் தரம் பிரிப்பதில்லை.

ஆனால் ஓரே ஓர் அம்சத்தைக் கொண்டு மனிதர்களை அவள் தரம் பிரிக்கிறான். அதுவே பயபக்தியும் நல்லொழுக்கமும் கொண்ட தூயவாழ்வு! ஆம்! இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு இதனை அடிப்படையாகக் கொண்டதே! இறைவனுக்கு அஞ்சிவாழ்பவர் யாரோ அவரையே கண்ணியமும் உயர்வும் உடையவராக அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்., அவரே அவனிடத்தில் அதிகம் நெருக்கமானவராகிறார். நல்லொழுக்கம் தவறியவர் இறைவனிடம் தரம்தாழ்ந்தவர் மட்டுமல்ல தண்டனைக்கு உரியவரும்கூட!

குர்ஆன் ஓரிடத்தில் கூறுகிறது: ஓ மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆண் - பெண்ணிலிருந்து படைத்தோம். பிறகு உங்களைச் சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் நாம் ஆக்கியது, நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டே! நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் அதிகக் கண்ணியமானவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தான்! திண்ணமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும் தெரிந்தவனாகவும் இருக்கிறான் "(49: 13)

இதுதான் குர்ஆனின் போதனை. மனித குலத்திற்குச் சிறப்பும் உயர்வும் அளிக்கவல்ல இஸ்லாமிய சன்மார்க்கத்தின் அடிப்படைச் சித்தாந்தம்.

மொழி, இனம், நிறம், குலம்-கோத்திரம், பிரதேசம் ஆகியவற்றைக்கொண்டு மனிதர்களிடையே பேதமை பாராட்டும் சித்தாந்தங்கள்,பிறப்பால் உயர்வு-தாழ்வைக் கற்பிக்கும் மதங்கள் மனித தர்மத்திற்கே எதிரானவை! இழிவானவை ஆகும்! ஏனெனில்அவற்றை ஏற்ற மனிதன் தன் இனத்தையே இழிவுபடுத்தத் தலைப்படுகிறான்., தன்னினத்தை இழிவுபடுத்துபவன் தன்னையே இழிவுக்குள்ளாக்குகிறான் என்பதல்லாமல் வேறென்ன!

நீங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவர்களாயின் இந்த அடிப்படையை உளமார ஏற்றுச் செயல்படுத்துங்கள். செல்வம், செல்வாக்கு. வசதி வாய்ப்புகள் ஆகியவற்றை நீங்கள் பெற்றிருந்தால் அவற்றைக் கொண்டு பெருமையடிக்காதீர்கள். அவற்றை அடையாத மக்களை இழி வாகக் கருதாதீர்கள்! இறைவனை அஞ்சி, பாவம் -பழிகள் தவிர்த்து வாழும் தூய்மை நிலை - தக்வா உங்களிடம் உள்ளதா என்று பாருங்கள். இதுவே இறைவன் உங்களுக்கு வழங்கிய பேரருள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

<u>ஆனால் உங்களின் உள்ளங்களைப் பார்க்கிறான் "</u>

- ஸஹீஹ் முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது: அவன் உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கிறான். - ஆக, செயல்கள் சிறப்பாய் இருப்பதுடன் அவற்றின் பின்னணியில் உள்ள எண்ணங்களும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே இறைவன் கண்ணியம் அளிக்கிறான்!

இதோ! ஒரே இமாமைப் பின்பற்றி ஒரே வரிசையில் நின்றுதொழும் இரு மனிதர்களைப் பாருங்கள். ஒருவர் தன்னைத் தொழுகையாளி என்று காட்டிக் கொள்வதற்காகப் பள்ளிவாசல் வந்து தக்பீர் கட்டியுள்ளார். அவர் உடலளவில்தான் இங்கு தொழுகை வரிசையில் நிற்கிறார். அவரது உள்ள மும் உணர்வும் வேறெங்கோ சுற்றித்திரிகிறது!

இன்னொருவர் வாய்மையோடு தொழுகையில் நிற்கிறார். அவரது உள்ளத்தில் பயபக்தியும் தூய்மையும் நிறைந்துள்ளது.

முதலாமவர் உலகை நாடி வந்துள்ளார்., இரண்டாமவர் இறைஉவப்பைத் தேடி வந்துள்ளார். முதலாமவரின் தொழுகை நிராகரிக்கப்படுகிறது., இரண் டாமவரின் தொழுகை நிறைவான கூலியைப் பெறுகிறது! இந்தவேறு பாட்டிற்கு என்ன காரணம்? உள்ளத்தின் எண்ணம்தான் காரணம்!

## நற்சிந்தனையே ஈமானுக்குப் பலம்

எண்ணத்தைத் தூய்மையாக்குவதற்கு என்ன வழி என்று நீங்கள் கேட்கலாம். இறைவனின் வல்லமைகளைச் சிந்திப்பதும் அவனது பேராற்றலை நிரூபிக்கும் சான்றுகளின் பக்கம் கவனம் செலுத்துவதும்தான் அதற்கான வழியாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: திண்ணமாக வானங்கள், பூமி ஆகிய வற்றின் ஒழுங்கமைப்பிலும் இரவு - பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடை யோருக்குப் பல சான்றுகள் உள்ளன" (3 : 191) - வேறோர் இடத்தில்,

திண்ணமாக இறைநம்பிக்கை உள்ளவர்களுக்கு வானங்களிலும் பூமியிலும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன. மேலும் உங்களைப் படைத்த திலும் (பூமியில்) அல்லாஹ் பரப்புகிற எண்ணற்ற உயிரினங்களிலும் உறுதி கொள்ளும் மக்களுக்குப் பெரும் சான்றுகள் உள்ளன," (45:3-4)

சிலபொழுது உள்ளத்தில் ஷைத்தானிய ஊசாட்டங்கள் புகுந்து உங்கள் இறைநம்பிக்கையைப் பலவீனப்படுத்தலாம். உடனே இறையாற்றலின் பக்கம் கவனத்தைத் திருப்பி சிந்தனையைச் சீராக்குங்கள்., கூராக்குங்கள். இப் பேரண்டத்தைப் பாருங்கள்! இதனை நிர்வகிப்பவன் யார்? உலகின் நிலை மைகள் எவ்வாறு மாற்றம் அடைகின்றன? காலங்களை ஏற்றயிறக்கங் களோடு இறைவன் எவ்வாறு சுழன்று வரச் செய்கிறான்?

இவ்வாறெல்லாம் சிந்திக்கும்பொழுது - இறைவன் இல்லாமல் இவ்வுலகம் இல்லை., நுண்ணறிவாளனும் சிறந்த நிர்வாகியுமான இறைவனால்தான் இவ்வுலகம் நிர்வகிக்கப்படுகிறது எனும் பேருண்மையை உறுதியாக அறிந்துகொள்வீர்கள்!

இதேபோல் ஷிர்க்-இறைவனோடு பிறிதொன்றை இணைவைத்தல் எனும் கொடிய பாவத்தை விட்டும் உங்கள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் மனத்திடம் கூறுங்கள்: மனிதர்கள் யாரும் நமக்கு எவ்வித நன்மையோ தீமையோ அளித்திட முடியாது. அல்லாஹ்வின் கட்டளையை நாம் மீறினால் அவனது தண்டனையிலிருந்து மனிதர்கள் எவரும் நம்மைக் காப்பாற்றவும் முடியாது அவனது கட்டளைக்குக் கீழ்ப் படிந்து வாழ்ந்தால் மனிதர்கள் நமக்கு நற்கூலி வழங்கப்போவதுமில்லை. நமக்கு நற்கூலியோ தண்டனையோ

லாபமோ நஷ்டமோ அளித்திட மனிதர்களால் முடியாது. நம்முடைய செயல்களுக்கு நன்மையோ தண்டனையோ தரும் ஆற்றல் பெற்றவன் அல்லாஹ் ஒருவன்தான்!

இப்படி இருக்கும்பொழுது இணைதுணையற்ற அந்த இறைவனோடு பிறரை ஏன் நாம் இணையாக்க வேண்டும்? நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகளின் மூலம் மனிதர்களின் பக்கம் நெருக்கம் பெற நாம் ஏன் நாடவேண்டும்?

இறைவனின் உவப்பைப் பெறநாடி வழிபாடு செலுத்தாமல் மனிதர்களின் உவப்பைப் பெறும் எண்ணத்திற்கு உள்ளத்தில் ஏன் இடம் கொடுக்க வேண்டும்? அப்படிச் செய்தால் இறுதியில் ஏமாற்றமே மிஞ்சம்! இறைவனும் நம்மை நேசிக்க மாட்டான்., மனிதர்களையும் நம்மை விட்டு விலகிச் சென்றிடுமாறு செய்திடுவான்!

இறைவனையே நாடுவோம். அவனது உவப்பைப் பெறுவதையே இலட்சியமாகக் கொள்வோம்!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அபூ ஹு ரைரா (ரலி) அவர்கள்

இவர்களின் இயற்பெயர் அப்துர் ரஹ்மான் பின் ஸக்ர். இஸ்லாத்தைத் தழுவும் முன்பு இவர்களின் பெயர் அப்துஷ் ஷம்ஸ் (சூரியனின் அடிமை) என்றிருந்தது. நபியவர்கள் அப்துர் ரஹ்மான் (கருணைமிக்க இறைவனின் அடிமை) என்று பெயர் மாற்றம் செஷய்தார்கள். அபூ ஹுரைரா என்பது பட்டப்பெயராகும். இந்தப் பெயரின் பின்னணியில் சுஷவையான கதை ஒன்றுண்டு. அபூ ஹுரைராவே அறிவித்திருக்கிறார்கள்.

நான் என் வீட்டின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன். என் னிடம் பூனைக் குட்டி ஒன்று இருந்தது. இரவில் எனது அறையில் அதை வைத்திருப்பேன். பகலில் என்னுடன் அதை எடுத்துச் செல்வேன். அதனு டன் விளையாடுவதிலேயே எனது ஓய்வான நேரம் கழியும். இதனைக் கண்ட மக்கள் (பூனையைச் சமந்து திரிபவர்) என்கிற பொருளில் என்னை அபூ ஹு ரைரா என்று அழைக்கலாயினர்''

தவ்ஸ் குலத்தைச் சேர்ந்த இவர்கள் கைபர் யுத்தம் நடைபெற்ற ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார்கள். அந்தப் போரிலும் அதன்பிறகு நடந்த அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அபூ ஹு ரைரா (ரலி) அவர்ளின் அதிக காலம் நபியவர்களின் சமூகத்திலேயே கழிந்தது. நபிகளாரிடம் இருந்து கல்விஞானம் பெறுவதில் அவர்களுக்கிருந்த அதிக ஆர்வமே அதற்குக் காரணம்! அதனால்தான் ஸஹாபாக் களிலேயே அதிக அளவு நபிமொழிகளை மனனம் செய்திருந்தவர்கள் என்று இவர்கள் பிரபல மானார்கள். அதைக் குறித்து அவர்கள் சொல்கிறார்கள்:

நபித்தோழர்களில் என்னை விடவும் அதிகமாக ஹதீஸ்களை அறிந்தவர் யாருமில்லை. ஆனால் இப்னு உமரைத் தவிர! ஏனெனில் அவர் எழுதிவைத்துக்கொள்வார். நான் எழுதுவதில்லை'' - அபூ ஹு ரைரா (ரலி) அவர்களின் அழைப்பை ஏற்று அவர்களுடைய தாயாரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள் என்பதும் குறிப் பிடத்தக்கதாகும். அபூ ஹு ரைரா (ரலி) அவர்களிடம் இருந்து 5304 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மதீனாவில் வசித்துவந்த இவர்கள் ஹிஜ்ரி 57 ஆம் ஆண்டு 78 வது வயதில் அங்கேயே மரணம் அடைந தார்கள். மதீனாவின் பகீஃ மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

### அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1)உங்களின் உடல்களைப் பார்க்க மாட் டான்: அவற்றின் பேரில் உங்களுக்கு நன்மை அளிப்பதில்லை. | ١) لا ينظر الي أجسامكم : لا يثيبكم عليها |
| 1) பூனைக்குட்டி. | ٢) هريرة : تصغير هرة |

### கேள்விகள் - الاسئلة

1) மனிதனுக்கு இறைவன் அளிக்கும் கண்ணியத்தின் அடிப்படை என்ன?

2) மொழி, இனம், நிறத்தின் அடிப்படையில் அல்லது பிறப்பின் அடிப்படையில் மனிதர்களிடையே உயர்வு - தாழ்வு கற்பிப்பதன் தீய விளைவுகளை விவரிக்கவும்.

3) ஒழுக்க மாண்பே உயர்வுக்கு அடிப்படை எனும் சித்தாந்தத்திற்கு குர்ஆன் - ஹதீஸின் ஆதாரங்களைக் கூறவும். அதனால் மனித வாழ்வில் மலரும் நல்ல பயன்களைச் சருக்கமாக எழுதவும்.

4) உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும் வழிமுறை என்ன?

5) ஷிர்க் என்பதன் பொருள் என்ன? அது கொடிய பாவம் என்பதற்கான ஆதாரம் என்ன?

6) அறிவிப்பாளரைக் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## இறைவழிப்போரும் இலட்சியமும்

٨ – وَ عَنْ أَبِي مُوْسي عَبْدِ اللهِ بْنِ قَيْسِ الأشعَرْي ﷺ قَالَ سُئِلَ رَسُوْلُ اللهِ ﷺ عَنِ الرَّجُلِ يُقَاتِلُ شَجَاعَةً وَ يُقَاتِلُ حَمِيَّةً وَ يُقَاتِلُ رِياءً أيُّ ذلِكَ فِي سَبِيْلِ اللهِ؟ فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : { مَنْ قَاتَلَ لِيَكُوْنَ كَلِمَةُ اللهِ هِيَ العُلْيَا فَهُوَ فِي سَبِيْلِ اللهِ} مُتَّفَقٌ عَلَيْهِ

ஹதீஸ் 8

அபூ மூஸா அப்துல்லாஹ் இப்னு கைஸ் அல்-அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது: ஒருவன் வீரத்திற்காகப் போர்புரிகிறான்., இன்னொருவன் மனமாச்சரியத்திற்காகப் போர் புரிகிறான்., வேறொருவன் முகஸ்துதிக்காகப் போர் புரிகிறான்., இவர்களில் இறைவழியில் போர்புரிபவர் யார்? " அதற்கு நபி(ஸல்) அவர்கள் இறைமார்க்கம் மேலோங்குவதற்காகப் போர் புரிபவர் யாரோ அவர்தான் இறைவழியில் உள்ளவர்" (புகாரி, முஸ்லிம்)

### தெளிவுரை-الشرح

இறைமார்க்கம் மேலோங்கித் திகழ்வதற்காக ... எனும் வார்த்தை அல்லாஹ்வுக்காகப் போரிடும் எண்ணத் தூய்மையைச் சுட்டிக்காட்டுகிறது. இதன் அடிப்படையில்தான் இமாம் நவவி (ரஹ்)அவர்கள் இந்த நபிமொழியை இங்கு பதிவு செய்துள்ளார்கள்.

வீரம், மனமாச்சரியம், முகஸ்துதி ஆகிய மூன்று நோக்கங்களில் ஒன்றுக்காகப் போர் செய்வது பற்றி வினவப்பட்டது.

வீரத்திற்காகப் போர் செய்வதன் கருத்து: மாவீரன் ஒருவன் போர்க்களம் புக வேண்டும்., தன்னுடைய வீர சாகசங்களை வெளிப்படுத்த வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறான். அதற்கொரு களம் அவனுக்குத் தேவைப் படுகிறது. போர்ச் சூழலை யாரேனும் தோற்றுவிக்கமாட்டார்களா என ஓயாது விரும்புகிறது, அவனது உள் மனம்! இந்த மனநிலையே போர் செய்யுமாறு அவனைத் தூண்டுகிறது!

மனமாச்சரியத்திற்காகப் போர் செய்வதென்பது, மொழி, இனம், நாடு போன்ற குறுகிய மனப்பான்மையின் அடிப்படையில் போர் செய்வதாகும்.

முகஸ்துதிக்காகப் போர் செய்வதென்பது, ஒருவன் தன்னை வீரனென்று எல்லாமக்களும் புகழ்ந்துரைக்க வேண்டும்., தனது வீரத்தைக் கண்டு எல்லோரும் திகைத்திட வேண்டும் என்பதற்காகப் போர் செய்வ தாகும்.

இந்த மூன்று மனிதர்களையும் வரிசையாகக் குறிப்பிட்டு நபி(ஸல்) அவர்கள் பதிலளிக்கவில்லை. காரணம், போர் செய்வதற்கு இன்னும் பலகாரணங்கள் இருக்கலாம். மண்ணாசை. பெண்ணாசை, பொன்னாசை போன்ற பேராசைகளினால் போர்கள் நடைபெற்ற வரலாறுகள் பல உண்டு. இன்றைய இணைய தள யுகத்திலும் பேராசையினாலும் ஆதிக்க வெறியினாலும் ஆங்காங்கே பயங்கரப் போர்களும் பேரழிவுகளும் நிகழ்ந்து கொண் டிருப்பதை நாம் காண்கிறோம்.

இவ்வாறாகப் போரில் குதித்திடத் தூண்டுகோலாக அமையும் எண்ணங்கள் ஏராளமுண்டு. ஆனால் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வது என்பதென்ன? அதற்கான அளவுகோல் என்ன? இந்தக் கேள்விக்கு நபி (ஸல்)அவர்கள் ஒரே வரியில் விளக்கம் அளித்தார்கள். அதுதான் - இறைமார்க்கம் உலகில் மேலோங்கிட வேண்டும் எனும் இலட்சியத்திற்காகப் போர் செய்வது! இந்த இலட்சியத்தின் அடிப்படையிலான போர்தான் ஜிஹாத் ஃபீ ஸபீலில்லாஹ் எனும் இறைவழிப்போர்! இந்தப்போரில் இறங்குபவன் தான் இறைவழிப்போர் செய்பவன்!

ஆனால் இந்த உண்மையைப் புரியாத காரணத்தால் ஜிஹாத் தொடர்பாக மக்களிடையே பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகும்.

சிலர் நாங்கள் சமுதாயத்திற்காக ஜிஹாத் செய்கிறோம் என்று வீரம் பேசுகிறார்கள். இங்கே நாம் கவனிக்க வேண்டியது, அந்தச் சமுதாயம் தனது வாழ்க்கை முறையை இஸ்லாத்தின் அடிப்படையில் அமைத்துள்ளதா? இல்லையா? என்பதுதான்! இஸ்லாத்தின் வழிகாட்டலைவிட்டும் சமுதாயம் விலகிச் செல்கிறதெனில், தீமை களிலும் பாவங்களிலும் மூழ்கிக் கிடக்கிற தெனில், அந்தச் சமுதாயத்திற்காகப் போர்புரிவது அல்லாஹ்வின் பாதையில் எனும் இலக்கணத்தின் கீழ் வராது! இனவாதத்தின் அடிப்படையிலான அறியாமைக் காலத்துப் போராகவே அது கருதப்படும்!

அரேபிய நாடுகளைச் சேர்ந்த சிலர், நாங்கள் அரேபிய சமுதாயத்திற்காக - அரபிமொழி ரீதியிலான சகோத ரத்துவத்திற்காகப் போர் செய்கிறோம் என்கின்றனர். இதுவும் இனவாதத்தின் அடிப்படையிலான போர்தான்! இஸ்லாம் மார்க்கம், ஏகத்துவக் கொள்கை ரீதியான சகோதரத்துவத்தைப் போதிக்கிறதே தவிர, மொழி, இன, பிரதேச ரீதியான சகோதரத்துவத்தை அல்ல!

இன்னும் சிலர் நாங்கள் தாய் நாட்டிற்காக ஜிஹாத் செய்கிறோம் என்று முழக்கமிடுகின்றனர். இதில் - ஏகத்துவக் கலிமாவை ஏற்றுக்கொண்ட ஒருமுஸ்லிமுக்கும் நிராகரிப்பாளனுக்கும் என்னவேறுபாடு இருக்க முடியும்? ஒருமுஸ்லிம் தனது தாய் நாட்டிற்காகப்போர் புரிந்தால் நிராகரிப்பாளன், அவனது தாய்நாட்டிற்காகப் போர் புரிகிறான். என்ன வித்தியாசம் இருவருக் கும்? தாய்நாட்டை நேசிப்பது ஈமானின் ஓர் அம்சமாகும் எனச் சொல்லப் படுவது நபியவர்களின் பெயரில் இட்டுக்கட்டப்பட்ட பொய்ச் செய்தியாகும்.

எனவே இறைமார்க்கத்தை மேலோங்கச் செய்யவேண்டும் எனும் இலட்சியத்தை விடுத்து இதர நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் போர்கள் புனிதப் போர்கள் அல்ல., அவற்றில் கலந்துகொண்டு கொல்லப் படுபவன் இறைவனுக்காக உயிர் நீத்த ஷஹீத் - தியாகி அல்லன். இவ்வுலக வாழ்வையும் இழந்தவன்., மறுவுலக வாழ்வையும் பெரும் நஷ்டத்திற் குள்ளாக்கியவன் என்றே அவன் கருதப்படுவான்!

தற்காப்புப் போரின் நிலை என்ன என்று இங்கு ஒரு கேள்வி எழலாம். அதாவது, உங்களை ஒருவன் கொலை செய்ய வருகிறான்., அல்லது உங்கள் நாட்டைவிட்டு உங்களை வெளியேற்றிடப் போர் தொடுத்து வருகிறான். அல்லது உங்கள் வீட்டில் புகுந்து சொத்துக்களைக் கொள்ளையடித்துச் செல்ல வருகிறான்., அல்லது உங்கள் மனைவி - மக்களை மானபங்கப்படுத்தும் தீய எண்ணத்துடன் நுழைகிறான் என்றால் நீங்கள் அவனை எதிர்த்துப்போர் புரியத்தான் வேண்டும்., தாக்கிடத்தான் வேண்டும்!

ஒருதடவை நபியவர்களிடம், ஒருவன் எனது வீடு புகுந்து தாக்குதல் தொடுத்தால் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், நீ அவனை எதிர்த்து பதில் தாக்குதல் தொடுத்திடு என்றார்கள்''

அப்பொழுது அவன் என்னைக் கொன்றால்?''

அவன் உன்னைக் கொன்றால் நீ ஷஹீத் எனும் வீரத் தியாகி''

நான் அவனைக் கொன்றால்?''

நீ அவனைக் கொன்றால், அவன் நரகத்தில் வீழ்வான்'' எனப்

பதில் அளித்தார்கள் நபி (ஸல்) அவர்கள் (நூல்: முஸ்லிம்)

- ஏனெனில் அவன் அட்டூழிக்காரன்., அநியாயக்காரன்! அவன் முஸ்லிமாக இருந்தாலும் சரியே! அதற்கான தண்டனை நரகமே!

உங்களை உங்கள் நாட்டைவிட்டு - வீட்டை விட்டு வெளியேற்ற வருபவனைஎதிர்த்து நீங்கள்போர்புரிவதும் அவனைக் கொல்வதும் அனுமதிக்கப்பட்ட ஒன்றே! அவன் ஒருமுஸ்லிமாக இருந்தாலும் சரியே என்று சொல்கிற பொழுது, ஒருமுஸ்லிமைக் கொல்வது எப்படி அனுமதிக்கப்பட்டதாகும்? என்று கேட்காதீர்கள். அவன் ஒரு முஸ்லிம் - இறைநம்பிக்கை உடையவன் என்பது உண்மையெனில் பிறிதொரு முஸ்லிமின் உடைமைகளைக் கொள்ளை அடித்திடவும் அவன் வீட்டுப்பெண்களை மானபங்கப்படுத்திடவும் எப்படித் துணிந்தான்? ஈமான் எனும் இறைநம்பிக்கையும் இத்தகைய மாபாதகச் செயலும் ஓரிடத்தில் ஒன்றிணைவது சாத்தியமானதல்லவே!

நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ஒருமுஸ்லிமைத் திட்டுவது தீய செயலாகும். அவனோடு போர்புரிவது குஃப்ர்- இறைநிராகரிப்பாகும் '' (நூல்: ஸஹீஹு ல் புகாரி)

அது மட்டுமல்ல, இப்படி ஒருமுஸ்லிம் மீது கொடுமையிழைக்க வரும் கொடியவனைத் தடுத்து நிறுத்தாமல்- அவனை எதிர்த்துப் போரிடாமல் கை கட்டி - வாய் பொத்தி மௌனமாக இருந்தோமானால் கொடுமையாளர்களின் கை மேலோங்கி விடும்., பூமியெங்கும் அராஜகமும் குழப்பமும்தான் தலை விரித்தாடும்!

ஆக, தற்காப்புப் போரின் நிலைவேறு! வேறு வகையான போர் எனில் அதில் இறைவனுக்காக, அவனது மார்க்கத்திற்காக எனும் எண்ணத் தூய்மை இருக்க வேண்டும். எண்ணத் தூய்மையே எல்லாவற்றிற்கும் அடிப்படை!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அபூ மூஸா அல் அஷ்அரி (ரலி) அவர்கள்

இவர்களின் இயற்பெயர் அப்துல்லாஹ். கைபர் வெற்றியின் பொழுது நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றார்கள். அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்டவர்களில் இவரும் ஒருவர். இவரை நபி (ஸல்) அவர்கள் யமன் தேசத்தின் சில பகுதிகளுக்கு ஆளுநராக நியமித்தார்கள். பிறகு உமர் (ரலி)அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பஸரா வுக்கு ஆளுநராக அவரையே நியமித்தார்கள். அபூ மூஸா (ரலி) அவர்களின் மூலமே இஸ்பஹான் மற்றும் அஹ்வாஸ் ஆகிய தேசங்கள் வெற்றி கொள்ளப்பட்டன. பிறகு உஸ்மான் (ரலி)அவர்களால் கூஃபா நகருக்கு ஆளு நராக நியமிக்கப்பட்டார்கள். பிறகு அலீ (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத் தில் அலீ (ரலி) மற்றும் முஅவியா (ரலி) இருசாராருக்கும் சமரசம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட இரு பிரமுகர்களில் இவர்கள் ஒருவர்! பிறகு எந்த அணியிலும் சேராமல் இவர் ஒதுங்கிக் கொண்டார்!

ஃபிக்ஹு சட்டங்களை அதிகம் தெரிந்தவர்., குர்ஆனை கற்றறிந்ததுடன் அழகிய ராகத்துடன் அதை ஓதுபவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்கள். இவர்களிடம் இருந்து 360 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அல்அஹ் நகரை வெற்றிகொண்ட பிறகு மக்கா திரும்பிய இவர்கள் ஹிஜ்ரி 50 ஆம் ஆண்டு மரணமார்கள்.

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) வினவப்பட்டது: வினவியவர்: லாஹிக் பின் ளம்றா-அல்பாஹிலி (ரலி) | ١) سئل: السائل هو لاحق بن ضمرة الباهلي |
| 2) மாச்சரியம்: பிடிவாதம், ரோஷம், தன் இனத்திற்குச் சார்பாக வாதாடுதல் | ٢) حمية: أنفة و غيرة و محاماة عن عشيرته |
| 3) முகஸ்துதி: தன் போர்த் திறனைப் பிறருக்குக் காண்பிப்பதற்காக! | ٣) رياء: مراءاة ليري قتاله |
| 4) அல்லாஹ்வின் வாக்கு: இறைமார்க்கம். | ٤) كلمة الله : دين الله |

## கேள்விகள் – الاسئلة

1) வீரத்திற்காக, மனமாச்சரியத்திற்காக, முகஸ்துதிக்காக போர் புரிவதன் கருத்துக்களை விவரிக்கவும்.
2) இறைவழிப்போர் குறித்து மக்களிடையே உள்ள தவறான கருத்தை விளக்கவும். இறைவழிப்போரின் இலக்கணத்தின் கீழ் வராத போர்கள் சிலவற்றைக் கூறவும்.
3) தற்காப்புப் போரின் சட்டநிலை என்ன? அதன் ஆதாரத்தை விளக்கவும்.

## இருவரும் குற்றவாளிகளே!

٩ – وَعَنْ أَبِي نُفَيْعِ بْنِ الْحَارِثِ الثَّقَفِيْ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ : { اذاَ الْتَقَي الْمُسْلِماَنِ بِسَيْفَيْهِماَ فَالْقاَتِلُ وَ الْمَقْتُوْلُ فِي النَّارِ ، قُلْتُ: يَارَسُوْلَ اللهِ هذاَ الْقاَتِلُ فَماَ باَلُ الْمَقْتُوْلِ؟ قاَلَ: اِنَّهُ كاَنَ حَرِيْصاً عَلي قَتْلِ صاَحِبِهِ} مُتَّفَقٌ عَلَيْهِ

ஹதீஸ் 9

அபூ பக்ரா நுஃபையிப்னு ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: இரண்டு முஸ்லிம்கள் தங்களின் வாட்களைக் கொண்டு மோதிக்கொண்டார்கள் எனில் கொல்பவனும் கொல் லப் படுபவனும் நரகம்தான் செல்வர்,, நான் கேட்டேன்: அல்லாஹ்வின் தூதரே! இவனோ கொலை செய்த வன்., கொலைசெய்யப்பட்டவனின் நிலை என்ன? (அவன் ஏன் நரகம் செல்லவேண்டும்?) அதற்கு நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்: நிச்சயமாக அவன் தன் சகோதரனைக் கொலைசெய்யப் பெரிதும் ஆசைப் பட்டவனாக இருந்தான்'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை- الشرح

இரண்டு முஸ்லிம்கள் தங்களின் வாட்களைக்கொண்டு மோதிக் கொண்டால் ... என்பதன் கருத்து இருவரும் பரஸ்பரம் கொலை செய்யும் எண்ணத்தில் வாளை உருவித் தாக்குதல் தொடுத்தனர் என்பதாகும். வாட்கள் என்று சொல்லப்பட்டிருப்பது ஓர் எடுத்துக்காட்டிற்காகவே! கத்தி, துப்பாக்கி, கைக்குண்டுபோன்ற ஆயுதங் களைப் பயன்படுத்துவதையும் இது உள்ள டக்கும்.

கொலைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதத்தைக் கையிலேந்தி முஸ்லிம்கள் இருவர் மோதிக்கொண்டு ஒருவர் மற்றவரைக் கொலைசெய்தால், கொன்றவன் - கொல்லப்பட்டவன் இருவருமே நாளை மறுவுலகில் நரக வேதனை எனும் கொடிய தண்டனைக்கு ஆளாக நேரிடும்!

ஆனால் இங்கு ஒரு கேள்வி எழுகிறது: அதாவது கொலை செய்தவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டியதுதான். இதில் நியாயம் உண்டு. ஏனெனில் அவன் வேண்டுமென்றே ஓர் இறைநம்பிக்கையாளனைக் கொலை செய்துள்ளான். அதற்கான தண்டனையிலிருந்து அவன் தப்பிட முடியாதுதான்! குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

قاَلَ تَعالى { وَمَنْ يَّقْتُلْ مُؤمِناً مُتَعَمِّداً فَجزَاَؤُهُ جَهَنَّمُ خالِداً فِيْهاَ وَ غَضِبَ اللهُ عَلَيْهِ وَ لَعَنَهُ وَ أَعَدَّلَهُ عَذاَباً عَظِيْماً } [ سُوْرَةُ النِّساَء الاية ٩٣ ]

ஓர் இறைநம்பிக்கையாளரை ஒருவன் வேணடுமென்றே கொலை செய்து விட்டால் அவனுக்குரிய தண்டனை நரகமாகும். அதில் அவன் நிரந்தரமாக வீழ்ந்துகிடப்பான். மேலும் அல்லாஹ் அவன் மீது கோபம் கொண் டான்., சபித்தான். மேலும் பெரியதொரு தண்டனையையும் அவனுக்காகத் தயார் செய்து வைத்துள்ளான் '' (குர்ஆன்: 4 : 93)

ஆனால் கொலை செய்யப்பட்டவனுக்கு ஏன் தண்டனை, மறுமையில்? இதுபற்றி நபி(ஸல்) அவர்களிடம் வினா எழுப்பினார்கள், அபூ பக்ரா (ரலி) - இவனோ கொலை செய்தவன்., கொலைசெய்யப்பட்டவனும் ஏன் நரகம் செல்ல வேண்டும்?''

கொலை செய்யப்பட்டவன் நரகத்தில் வீசியெறியப்படுவான் என்பது தெளிவான-நியாயமான தீர்ப்பாகும். தெளிவான விஷயத்தை முதலில் ஏற்றுக் கொண்டு, அதன் பிறகு சந்தேகத்திற்கு விளக்கம் கேட்டுள்ளார், அபூ பக்ரா (ரலி) அவர்கள்!

இவ்விதத்தில் நம்மில் பெரும்பாலோரின் சிந்தனைப் போக்கு எப்படி இருக்குமெனில், ஐயோ! இவன் கொல்லப்பட்டுவிட்டான்., இவனுக்கு என்ன தண்டனை வேண்டிக்கிடக்கிறது? என்றுதான் சிந்திப்பார்கள். பலரும் - கொலை செய்தவன் மீதுதான் கோபம் கொள்வர். அவனைத் தண்டித்தேயாக வேண்டுமென்பார்கள். கொலை செய்யப்பட்டவன் மீது பெரிதும் இரக்கம் காட்டுவர்கள். ஐயோ! பாவம் அவன்! எனப் பரிந்தே பேசவார்கள்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள் நியாயமான பதிலை அளித்தார்கள். அது அறிவுப்பூர்வமான தீர்ப்பும்கூட! அதன் காரணத்தையும் சொன்னார்கள்: நிச்சயமாக அவன் தன் சகோதரனைக் கொல்வதற்குப் பெரிதும் ஆசை கொண்டிருந்தான்'' -அதாவது தன்னுடைய சகோதரனைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென துடித்துக் கொண்டிருந்தான். அதனால்தான் கொடுவாளைக் கையிலேந்தினான்! ஆனால் நடந்தது வேறு. இவனுடைய சகோதரன் முந்திக் கொண்டான்., அவ்வளவுதான்!

எண்ணத்தின் அடிப்படையிலேயே செயல்கள் அனைத்தும் எடைபோடப்படும் என்பதற்கு இந்நபிமொழியில்- இந்தவாக்கியமே ஆதாரம். இதேவகையில்தான்-

قَالَ النَّبِي ﷺ : مَنْ قُتِلَ دُوْنَ دَمِهِ فَهُوَ شَهِيْدٌ ، وَمَنْ قُتِلَ دُوْنَ أَهْلِهِ فَهُوَ شَهِيْدٌ ، وَمَنْ قُتِلَ دُوْنَ مَالِهِ فَهُوَ شَهِيْدٌ – أَخْرَجَهُ أَبُوداوُد وَ التُّرْمِذِيْ وَ غَيْرُهُ

எவர் தன் உயிரைக் காப்பதற்கான போரில் கொல்லப்பட்டாரோ அவர் ஷஹீத் - வீரமரணம் அடைந்த வர். எவர் தன் குடும்பத்தாரைக் காப்பதற்கான போரில் கொல்லப்பட்டாரோ அவரும் வீரமரணம் அடைந்தவர். எவர் தன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான போரில் கொல்லப்பட்டாரோ அவரும் வீர மரணம் அடைந்த வர்'' எனும் நபிமொழியிலும் -

உனது சொத்துக்களை அபகரிப்பதற்காக வந்தவனை எதிர்த்து நீ போராடும்பொழுது அவன் உன்னைக் கொன்றுவிட்டால் நீ ஷஹீத் - வீரமரணம் அடைந்தவனாவயாய் '' என்கிற நபிமொழியிலும்,

-கொலையுண்டவனுக்கு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது நிய்யத் - எண்ணத் தூய்மையின் அடிப்படை யிலேயே என்பதைஎளிதில் புரிந்து கொள்ளலாம்.

ஏனெனில், உயிர், உடைமை, மானம் ஆகியவற்றிற்கு ஆபத்து நேர இருந்த சூழ்நிலையில்தான் இவர்கள் ஆயுதமேந்தினார்கள்., தற்காப்புக்காக! இது ஆகுமான நடவடிக்கை மட்டுமல்ல., அவசியம் மேற்கொள்ள வேண்டிய கண்டிப்பான நடவடிக்கையும்கூட!

கொலைவெறியுடன் வீட்டினுள் நுழைந்த கொடியவனைச் சும்மா விட்டு வைக்க முடியுமா? கொள்ளையடிக்க வந்தவனையும் காமவெறியுடன் வீடு நுழைந்தவனையும் தாக்கி வீழ்த்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டா இருக்க முடியும்?

இவர்கள் ஆயுதமேந்தியது கட்டாயச் சூழ்நிலையில்! இந்த வகையில் இவர்களது எண்ணம் - நிய்யத் குற்றமற்றது., தூய்மையானது. இதனடிப் படையிலேயே இவர்களைக் குறித்து ஷஹீத் - நீதிக்காகப் போராடி மடிந்தவர்கள் என்று இந்நபிமொழியில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நபிமொழியில் - இன்னும் சிலவிஷயங்கள் தெரிய வருகின்றன: நபியவர்கள் அறிவுரை வழங்கும் பொழுது நபித்தோழர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் கருத்தூன்றியும் கேட்பார்கள். அதனால்தான் ஆய்வுரீதியான சந்தேகங்கள் அவர்களின் உள்ளத்தில் எழுந்தன. அவைபற்றி உடனுக்குடன் நபியவர் களிடம் கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றார்கள்., பிறகுக்கும் கற்றுக் கொடுத்தார்கள்.

இந்தவகையில் இறைவசனங்கள் மற்றும் நபிமொழிகள் தொடர்பாக எழுகிற நியாயமான எந்த ஐயமானா லும் அதற்குரிய விளக்கம் குர்ஆன் - ஹதீஸ்களிலேயே நேரடியாக நமக்குக் கிடைத்துவிடுகிறன. அல்லது நபித்தோழர்களால் இதுபோல் கேள்வி கேட்கப்பட்டு - பதிலளிக்கப்பட்ட ரீதியில் கிடைத்து விடுகின்றன!

எனவே எந்தவொரு சந்தேகமானாலும் அதற்கான விளக்கத்திற்கு முறையான ஆய்வை மேற்கொள்வது நமது கடமை. தீர்வு கிடைக்காத - காணமுடியாத சிக்கலான பிரச்னை என்று எதுவும் குர்ஆன் - ஹதீஸில் கிடையாது. எங்கேனும் தெளிவின்மை தொடர்கிறதெனில் நமது அறிவாற்றலின் பலவீனமே அல்லது ஆய்வாற்ற லின் குறைபாடே அதற்குக் காரணமாகும்!

## அறிவிப்பாளர் அறிமுகம்
## நுஃபய் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள்

நுஃபைய் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் பட்டப்பெயர்தான் அபூ பக்ரா என்பது. இவரது தந்தை பெயர் மஸ்ரூஹ் என்றும் சொல்லப்பட்டுள்ளது. நபி(ஸல்) அவர்கள் தாயிப் நகரை முற்றுகையிட்டிருந்தபொழுது நுஃபைய் பின் ஹாரிஸ் (ரலி)அவர்கள். தண்ணீர் இறைக்கப்பயன்படும் கப்பியின் துணை கொண்டு கோட்டைச் சுவரிலிருந்து வெளியே வந்தார்கள்! (பக்ரா என்றால் தண்ணீர் இறைக்கும் கப்பி என்று பொருள்) அன்றில் இருந்து - தண்ணீர்க்கப்பியின் கயிற்றைப் பற்றியவர் என்ற பொருளில் அபூ பக்ரா என்று அழைக்கப் பட்டார்கள். இஸ்லாத்தைத் தழுவிய இவர்களுக்கு நபியவர்கள் விடுதலை அளித்தார்கள். சிறப்புக்குரிய நபித்தோழர்களில் ஒருவ ராகக் கணிக்கப்படும் நுஃபைய் (ரலி) அவர்கள் மரணம் அடைந்தது. ஹிஜ்ரி 51 அல்லது 52 ஆம் ஆண்டு பஸராவில்! இவர்களிடம் இருந்து 232 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1)இருமுஸ்லிம்கள் மோதிக்கொண்டனர்: பரஸ்பரம் ஒருவர் மற்றொரு வரைக் கொல்ல நாடினர். | ١) التقي المسلمان :قصد كل منهما قتل صاحبه |
| 2) நிலைமை: விஷயம், | ٢) البال: الحال والشأن |
| 3) பெரிதும் நாட்டம் கொண்டிருந் தான்: அவனது ஆர்வம் அதிகமாக இருந்தது. | ٣) كان حريصا: قد اشتد رغبته |

### கேள்விகள் - الاسئلة

1) முஸ்லிம்கள் தங்களிடையே போரிடுவதால் ஏற்படும் தீய விளைவுகளை விவரிக்கவும்.
2) இந்த நபிமொழியில் - கொலைசெய்யப்பட்டவனுக்கும் தண்டனை உண்டு என்று சொல்லப்பட்டதன் அடிப்படை என்ன?
3) ஒருவனது மனத்தில் தீமைசெய்யும் எண்ணம் வந்தது., ஆனால் செயலில் இறங்கவில்லை - இப்படிப் பட்டவனுக்குத் தண்டனை உண்டா?
4) இந்நபிமொழியின் படிப்பினைகள் சிலவற்றை எழுது.
5) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## ஜமாஅத்துடன் தொழுவது கடமையே!

١٠ – وَ عَنْ اَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : صَلاَةُ الرَّجُلِ فِيْ جَمَاعَةٍ تَزِيْدُ عَلَي صَلاَتِهِ فِيْ بَيْتِهِ وَ صَلاَتِهِ فِيْ سُوْقِهِ بِضْعاً وَ عِشْرِيْنَ دَرَجَةً وَ ذَلِكَ أَنَّ أَحَدَكُمْ اِذَا تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوْءَ ثُمَّ أَتَي الْمَسْجِدَ لاَ يَنْهَزُهُ اِلاَّ الصَّلاَةُ ، لاَ يُرِيْدُ اِلاَّ الصَّلاَةَ لَمْ يَخْطُ خَطْوَةً اِلاَّ رُفِعَ لَهُ بِهاَ دَرَجَةٌ وَ حُطَّ عَنْهُ بِهاَ خَطِيْئَةٌ حَتَّي يَدْخُلَ الْمَسْجِدَ فَاِذَا دَخَلَ الْمَسْجِدَ كَانَ فِيْ الصَّلاَةِ مَا كَانَتِ الصَّلاَةُ هِيَ تَحْبِسُهُ ، وَ الْمَلاَئِكَةُ يُصَلُّوْنَ عَلي أَحَدِكُمْ مَا دَامَ فِيْ مَجْلِسِهِ الَّذِيْ صَلَّي فِيْهِ يَقُوْلُوْنَ: اللَّهُمَّ ارْحَمْهُ اللَّهُمَّ اغْفِرْلَهُ ، اللَّهُمَّ تُبْ عَلَيْهِ ، ماَ لَمْ يُؤْذِ فِيْهِ ، مَالَمْ يُحْدِثْ فِيْهِ} متفق عليه وَهَذاَ لَفْظُ مُسْلِمٍ وَقَوْلُهُ صلي الله عليه وسلم :{ يَنْهَزُهُ } هُوَ بِفَتْحِ الْباَءِ وَ الْهاَءِ وَ بِالزَّاء : أَيْ يُخْرِجُهُ وَ يُنْهِضُهُ

ஹதீஸ் 10

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருமனிதர் ஜமாஅத் துடன் நிறைவேற்றும் தொழுகை, அவர் தனது வீட்டில் தொழும் தொழுகையை விடவும் தனது கடைத் தெரு வில் தொழும் தொழுகையை விடவும் இருபதுக்கும் அதிகமான அந்தஸ்துகளைப் பெறுகிறது.

அதற்குக் காரணம், ஒருவர் அழகாக உளூ செய்துகொண்டு பிறகு பள்ளிவாசல் நோக்கி வருகிறார் எனில் - தொழுகையைத் தவிர வேறதுவும் அவரை வெளிக்கிளப்பவில்லை என்றிருந்தால், அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்குப் பகரமாக நிச்சயமாக அவருக்கு ஓர் அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்துகிறான்., ஒரு குற்றத்தை அவரை விட்டும் அகற்று கிறான். இது பள்ளிவாசலில் அவர் நுழைவது வரையிலாகும்.

பள்ளிவாசலில் நுழைந்துவிட்டாரெனில் - தொழுகை அவரை அங்கு தடுத்து வைத்திருக்கும் காலம் வரை யில் அவர் தொழுகையில் ஈடுபட்டி ருப்பதாகவே கருதப்படுவார். மேலும் உங்களில் ஒருவர்தான் தொழுத இடத்தில் இருந்து கொண்டிருக்கும்காலமெல்லாம் மலக்குமார்கள் அவருக் காகப் பாவமன்னிப்புக் கோரிப்

பிரார்த்தனை செய்த வண்ணம் இருக்கி றார்கள்: யா அல்லாஹ், இவருக்கு அருள் பொழுந்திடு! இவரது பாவத்தை மன்னித்திடு. இவரது பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றிடு என்று!-அந்த இடத்தில் இவர் யாருக்கும் தொல்லை கொடுக்காமலும் உளூ முறியாமலும் இருக்கும் வரையிலாகும் இது'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை- الشرح

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் தொழுகையும் ஒன்று. இது நாள்தோறும் ஐந்து நேரம் கடமையாக்கப்பட்டுள்ளது. இந்தக் கடமையான தொழுகையைப் பள்ளிவாசல் சென்று இமாம் - ஜமாஅத்துடன் சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். அதாவது ஒருவரை இமாமாக -தலைவராக முன்னிருத்தி அவர் பின்னால் எல்லோரும் அணிவகுத்து நின்று கூட்டான முறையில் நிறைவேற்றுவது கடமை. இத்தகையக் கூட்டுத் தொழுகையின் அவசியத்தையும் சிறப்பையுமே இந்நபிமொழி எடுத்துரைக்கிறது.

இமாம் - ஜமாஅத்துடன் நிறைவேற்றும் ஒரு தொழுகைக்கு இருபது சொச்சம் (மற்றோர் அறிவிப்பின்படி) இருபத்தேழு நன்மைகள் வழங்கப்படுகின்றன. ஏனெனில் ஜமாஅத்துடன் தொழுவதென்பது அல்லாஹ் விதித்த முக்கியமானதொரு கடமை., அதனைப் பேணுவதற்கே இத்துணை சிறப்பு!

சிலரிடம் தவறான கருத்தொன்றுள்ளது. அதாவது ஜமாஅத்துடன் தொழுவது கடமையானதல்ல., ஸு ன்னத்தானது - சிறப்பானது மட்டுமே என்று வாதிடுகின்றனர். அதற்கு இதுபோன்ற நபிமொழிகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

அதற்குரிய பதில் இதுதான்: ஒரு பொருளுக்குச் சிறப்பு சேர்ப்பதனால் அது கடமையானதல்ல என்றாகாது. தவ்ஹீத் எனும் ஏகத்துவக் கொள்கை யின் சிறப்பு குறித்து எத்தனையோ நபிமொழிகள் பேசகின்றன. அதனால் தவ்ஹீத் கொள்கை கடமையானதல்ல என்றாகிவிடுமா? கடமைகளிலெல்லாம் அதிமுக்கிய கடமை தவ்ஹீத்தானே! அஃதன்றி எந்த அமலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையே! அத்துடனே அதற்குச் சிறப்புகளும் உண்டு. சிறப்புகள் என்பன பயன்களையும் விளைவுகளையும் பொருத்ததாகும்.

எனவே இறைமார்க்க அறிஞர்கள் பெரும்பாலோரின் கருத்து, ஜமாஅத் துடன் தொழுவது கடமை என்பதே! இதுவே ஆதாரப் பூர்வமானது. ஒருமுஸ்லிம் பள்ளிவாசல் சென்று ஜமாஅத்துடன் சேர்ந்துதான்-கடமையான ஐந்து நேரத் தொழுகைகளை நிறைவேற்றவேண்டுமென்று குர்ஆனும் பலநபிமொழிகளும் வலியுறுத்துகின்றன! அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قَالَ تَعَالَي : وَاِذَا كُنْتَ فِيْهِمْ فَأَقَمْتَ لَهُمْ الصَّلَاةَ فَلْتَقُمْ طَائِفَةٌ مِنْهُمْ مَعَكَ وَ لْيَأخُذُوْ أَسْلِحَتَهُمْ فَاِذَا سَجَدُوْا فَلْيَكُوْنُوْا مِنْ وَّرَائِكُمْ وَلْتَأتِ طَائِفَةٌ اُخْرَي لَمْ يُصَلُّوْا فَلْيُصَلُّوْ مَعَكَ وَلْيَأخُذُوْ حِذْرَهُمْ وَ أَسْلِحَتَهُمْ ( سورة النساء ١٠٢ )

மேலும் (நபியே) நீர் முஸ்லிம்களிடையே இருக்கும்பொழுது (போர் நிலையில்) அவர்களுக்குத் தொழ வைப்பீராயின் அவர்களில் ஒரு குழுவினர் தங்களுடைய ஆயுதங்களை ஏந்திக்கொண்டு உம்மோடு நிற்க வேண்டும். பிறகு அவர்கள் சஜூ து செய்து (தொழுது) முடித்துவிட்டால் பின்னால் சற்று விலகிச் சென்றிட வேண்டும். தொழாமல் இருக்கும் மற்றொரு குழுவினர் வந்து உம்மோடு தொழ வேண்டும். அத்துடன் அவர்களும் முன்னெச்சரிக்கையாக தம் ஆயுதங்களை ஏந்திக் கொண்டிருக்க வேண்டும்.

(4 : 102)

- இவ்வாறு போர்ச் சூழ்நிலையிலேயே ஜமாஅத்துடன் தொழுவதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளபொழுது சாதாரண காலத்தில் அதன் கடமை இன்னும் முக்கியத்துவம் பெறுவது தெளிவான ஒன்றாகும்.

ஜமாஅத்துடன் தொழுவதற்கு இத்துணை சிறப்பு வழங்கப்படுவதன் காரணத்தையும் இந்நபிமொழி தொடர்ந்து குறிப்பிடுகிறது: ... தொழுகையைத் தவிர வேறெதுவும் அவரை வெளிக்கிளப்பவில்லை., தொழுகையைத் தவிர வேறெதையும் அவர் நாடவில்லை . . . ,,

- ஆம்! வாய்மையான - தூய்மையான எண்ணத்துடன் வீட்டைவிட்டும் ஜமாஅத் தொழுகைக்காக அவர் வந்திருக்கிறார் என்பதே காரணம்! அதனால் அவரது ஒவ்வொரு எட்டுக்கும் இரண்டு நன்மைகள் கிடைக் கின்றன: அந்தஸ்து உயர்வு - பாவமன்னிப்பு

ஆம்! அவரது இல்லம் மஸ்ஜிதின் அருகில் இருந்தாலும் சரி, தொலை வாக இருந்தாலும் சரியே! அவர் எடுத்துவைக்கும் ஒவ்வோர் எட்டுக்கும் இந்த இரண்டு பயன்கள் உண்டு!

மேலும் இகாமத் சொல்லும் நேரத்தை எதிர்பார்த்து பள்ளிவாசலில் அவர் இருக்கும் வரையிலும் தொழுகையில் ஈடுபட்டிருப்பதாகவே அவர் கருதப் படுகிறார்!

- இதுவும் மகத்தானதோர் அருட்கொடையன்றோ! எவ்வளவு நீண்ட நேரமானாலும்- தஹிய்யதுல் மஸ்ஜித் எனும் காணிக்கைத் தொழுகை இரண்டு ரக்அத் தொழுவிட்டு பிறகு எவ்வளவு நேரம் நீங்கள் உட்கார்ந் திருந்தாலும் தொழுதற்கான கூலியே உங்களுக்கு வழங்கப்படுகிறது!

இதேபோல் தொழுத இடத்தில் நீங்கள் உளூ உடனும் பிறருக்குத் தொல்லை கொடுக்காமலும் இருக்கும் நேரம் வரையில் மலக்குகளின் துஆ வும் - பிரார்த்தனையும் உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதுவும் மகத்தான சிறப்பே ஆகும்!

**அருஞ்சொற்கள் - شرح الكلمات**

| | |
|---|---|
| 1)சொச்சம்: 3 முதல் 10 வரை | ١) البضع : بكسر الباء و فتحها هو مــن الثلاثــة الي العشرة |
| 2) அழகாக உளூ செய்தார்: நிறை வாகச்செய்தார்., அதன் நபிவழிமுறை களையும் ஒழுங்குகளையும் கடைப் பிடித்தார். | ٢) أحسن الوضوء: أسبغه و أتي بسننه وآدابه |
| 3) ∴குத்வா என்றால் எடுத்து வைக்கும் எட்டு., ∴கத்வா என்றால் எட்டு எடுத்துவைக்கும் முறை. | ٣) خطوة: بالضم ما بين القدمين وبالفتح المرة من الخطو |
| 4) அகற்றினான். | ٤) حط: محا |
| 5) தொழுகையில், அதாவது அதன் நன்மையில்இருந்துகொண்டிருக்கிறார். | ٥) كان في الصلاة: أي في ثوابها |
| 6)மலக்குகள்: ஒளியால் படைக்கப்பட்ட, கண்களுக்குப்புலப்படாதவர்கள். பலவாறு தோன்றும் ஆற்றல் அவர்களுக்குண்டு. இந்தஇடத்தில் - மனிதர்களைக் கண் காணிக்கும் மலக்குகள் என்று கருது வதற்கும் இடமுண்டு. | ٦) الملآئكة: أجسام نورانية قادرة عليي التشكل ويجوز أن يكون المراد بهم في هذا الحديث الحفظة |
| 7)அவருக்குச் சிறு துடக்கு ஏற்படாத வரையில்: உளூவை முறிக்கக் கூடிய - அதனால் மலக்குகளுக்குத்தொல்லை கொடுக்கக்கூடிய எதுவும் அவரில் இருந்து வெளிப்படாத வரையில்! | ٧) مالم يحدث: مالم يخرج ما ينقض وضوءه ويؤذي بــه الملآئكة |

## கேள்விகள் –الاسئلة

1) ஜமாஅத்துடன் தொழுவது கடமையே என்பதை இந்நபிமொழி எப்படி உணர்த்துகிறது?
2) அந்தக் கருத்துக்கு குர்ஆனின் ஆதாரம் என்ன?
3) ஜமாஅத் தொழுகைக்குரிய சிறப்புகளைப் பட்டியலிடவும்.
4) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## ஏராளமான நன்மைகளைப் பெறுவது எப்படி?

**١١ – وَ عَنْ أبِيْ الْعَبَّاسِ عَبْدِ اللهِ بْنِ عَبَّاسِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ رَضِيَ اللهُ عَنْهُما،عَنْ رَسُوْلِ اللهِ ﷺ فِيْماَ يَروِيْهِ عَنْ رَبِّهِ ، تَبَارَكَ وَ تَعَــالَي قَالَ:{ اِنَّ اللهَ كَتَبَ الْحَسَنَاتِ وَ السَّيِّئاتِ ، ثُمَّ بَيَّنَ ذَلِكَ : فَمَنْ هَمَّ بحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهاَ كَتَبَهاَ اللهُ تَبارَكَ وَ تَعالَي عِنْدَهُ حَسَنَةً كامِلَــةً ، وَ اِنْ هَمَّ بِها فَعَمِلَهاَ كَتَبَهاَ اللهُ عَشَرَ حَسَناَتٍ أَلَي سَبْعِمائَةِ ضِعْفٍ الَي أضْعَافٍ كَثِيْرَةٍ ، وَ اِنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهاَ كَتَبَهاَ اللهُ عِنْدَهُ حِســَنَةً كاَمِلَةً ، وَ اِنْ هَمَّ بِهاَ فَعَمِلَهاَ كَتَبَ اللهُ سَيِّئَةً واَحِدَةً } متفق عليه**

ஹதீஸ் 11

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்)அவர்கள் அருட்பேறும் உயர்வும் மிக்கவனாகிய தம் இறைவன் கூறியதாக அருளினார்கள்: திண்ணமாக அல்லாஹ் நன்மைகளையும் தீமை களையும் பதிவு செய்துவிட்டான்"

பிறகு அதற்கு விளக்கம் அளித்தார்கள்: ஒருவன் ஒரு நன்மையை நாடினால்-அதனை அவன் செயல் படுத்தாவிட்டால் அல்லாஹ் அதனைத் தன்னிடத்தில் முழுமையானதொரு நன்மையாகப் பதிவு செய்துகொள்கிறான். மேலும் ஒருவன் நன்மை செய்ய நாடி அதனைச் செயல்படுத்தவும் செய்தால் அல்லாஹ் அதனைப் பத்து நன்மைகளாகப் பதிவு செய்து கொள்கிறான்., அது எழுநூறு மடங்குகளாக ஏன் அதற்கும் அதிகமாக ஏராளமான மடங்குகளாக அதிகரித்துக்கொண்டு செல்கிறது!

ஒருவன் ஒரு தீமையை நாடினான்., ஆனால் அதைச் செய்திடவில்லை என்றால் அல்லாஹ் அதனைத் தன்னிடத்தில் முழுமையானதொரு நன்மை யாகப் பதிவுசெய்து கொள்கிறான்.ஆனால் தீமையைநாடிஅதைச் செயல்படுத்த வும் செய்தால் அல்லாஹ் அதனை ஒரேஒரு தீமையாகத்தான் பதிவு செய்கிறான்,. (நூல் : புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

மனிதர்களின் செயல்களை மட்டுமல்ல அவற்றிற்குத் தூண்டுகோலாய் அமையும் நிய்யத்-எண்ணங்களையும் இறைவன் கவனிக்கிறான். அவை ஒவ்வொன்றிற்கும் தனது அறிவுஞானத்திற்கு ஏற்ப நற்கூலி -தண்டனை வழங்குகிறான். இவ்வாறு மனிதனுக்குரிய நன்மை-தீமைகளை இறைவன் பதிவு செய்வது இருவகையாய் உள்ளது.

1) லவ்ஹு ல் மஹ்பூழ் எனும் மூல ஏட்டில் பதிவு செய்தல்

- பேரண்டத்தில் நிகழ்கிற எல்லாவற்றையும் அந்த மூல ஏட்டில் அல்லாஹ் பதிவுசெய்கிறான். இதனை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: திண்ணமாக நாம் ஒவ்வொன்றையும் ஒருகுறிப்பிட்ட விதிமுறையின்படி படைத்திருக்கிறோம்" (54: 49)

மற்றோரிடத்தில், ஒவ்வொரு சிறிய - பெரியவிஷயமும் எழுதப் பட்டுள்ளது" (54: 53) என்று கூறுகிறது.

1) நன்மைகளையும் தீமைகளையும் - மனிதன் அவற்றைச் செய்கிற பொழுது பதிவு செய்தல்

இவ்விரண்டையும் வேறொரு வார்த்தையில் விளக்குவதானால் இவ்வாறு சொல்லலாம்: ஒன்று முந்தைய பதிவு., மற்றொன்று பிந்தைய பதிவு.

முந்தைய பதிவை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிந்திட முடியாது. அல்லாஹ் நமக்கு நன்மையைப் பதிவு செய்துள்ளானா? தீமை யைப் பதிவு செய்துள்ளானா? என்பதை - அவை நிகழும் முன்னர் யாரும் அறிய முடியாது.

பிந்தைய பதிவு அதாவது மனிதன் செயல்படும்பொழுது அவனுடைய செயல்களை இறைவன் பதிவு செய்வதென்பது அவனது ஞானம், நீதி, மேன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப அமைவதாகும்.

இதனை நபி (ஸல்) அவர்கள் தெளிவாக விவரித்துள்ளார்கள். ஒருமனிதன் நற்செயல் செய்ய வேண்டுமென எண்ணினால் அந்த எண்ணமே ஒரு நன்மையாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் உளூ செய்து கொண்டு குர்ஆன் ஓதவேண்டும் என நிய்யத் - எண்ணம் வைத்தார். ஆனால் வேறு பணிகள் வந்து சேரவே உளூ செய்வதை-குர்அன் ஓதவதை நிறுத்திவிட்டு அவற் றில் ஈடுபட்டார்.

இதுபோன்றே, தர்மம் கொடுக்க எண்ணினார்., அதற்கான பணத்தைத் தனியே எடுத்துவைக்கவும் செய்தார்., பிறகு ஏதோ ஒரு காரணத்தால் அதைச் செயல்படுத்தவில்லை. இரண்டு ரக்அத் தொழ வேண்டும் என எண்ணினார். ஆனால் அதற்கான சூழ்நிலை மாறியதால் தொழமுடியவில்லை! இந்த எண்ணங் களுக் காக முழுமையான நன்மை பதிவு செய்யப்படுகிறது! நிய்யத் - நல்லெண்ணம் கொண்டதற்காக மட்டும் இறைவன் வழங்கும் நற்கூலியாகும் இது! இது எதைக் காட்டுகிறது? இறைவனின் நீதி, நிறைஞானம், பெருந்தன்மை ஆகியவற்றையே காட்டுகிறது.

சிலர் கேட்டலாம்: அது எப்படி முழுமையான நன்மை பதிவு செய்யப் படும்? அவன் தான் எண்ணியபடி நற்செயல் எதையும் செய்யவில்லையே? பிறகு கூலி கிடைப்பதெப்படி?

அதற்கான பதில்: முதலில் அல்லாஹ்வின் அருட்கொடைகள் கடலினும் விரிவானவை., கரை காண முடியாதவை! அவனது நீதியும் ஞானமும் நிறைவானது! இரண்டாவதாக, மனிதனின் உள்ளத்தில் எழும் நல்லெண் ணமே நற்செயலாக- நன்மையாகக் கணிக்கப்படுவதற்குக் காரணம், உள்ளம் இருக்கிறதே அதில்

நன்மையோ தீமையோ - எதாவது நிழலாடிக் கொண்டேயிருக்கும். சதாவும் எதையாவது எண்ணிக்கொண்டி ருப்பதே அதன் இயல்பு! இத்தகைய எண்ணமே மனிதனைச் செயல்படத் தூண்டுகிறது! ஒரு மனிதன் நற்செயல் செய்ய வேண்டுமென நாடிவிட்டால் அதன்பால் ஓர் எட்டு எடுத்து வைத்துவிட்டான்-செயல்பட நெருங்கிவிட்டான் என்பதே அதன் பொருளாகும். இவ்வடிப்படையிலேயே எண்ணமே ஒரு நன்மையாகப் பதிவு செய்யப்டுகிறது!

பிறகு அந்த மனிதன் அந்த எண்ணத்தின்படி செயல்பட்டாலோ அதற்குப் பத்திலிருந்து எழுநூறு மடங்கு நன்மைகள் வரை ஏன், அதனினும் ஏராள மான நன்மைகள் அவனுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன!

இங்கு இன்னோர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நன்மை வழங்குவதில் பத்து-எழுநூறு -ஏராளம் என்கிற இந்த ஏற்றதாழ்வு ஓர்அடிப்படையின் கீழ் அமைந்ததாகும். அதுவே அல் இஃக்லாஸ் - அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றுதல் என்கிற வாய்மையும், அல்முதாபஆ - அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலும் ஆகும்.

ஒருமனிதன் தான் நிறைவேற்றும் வழிபாட்டில்- நற்செயலில் வாய்மை யாளனாக - அல்லாஹ்வுக்காக மட்டுமே அதைச் சமர்ப்பிப்பதில் தூய்மை யாளனாக இருந்தால், இதேபோன்று தனது வழிபாட்டுமுறையை நபிவழியின் அடிச்சவட்டைப் பின்பற்றி அமைத்துக்கொண்டால் அதாவது பித்அத் எனும் நூதன அனுஷ்டானங்களையும் சய கருத்துகளையும் அதில் தவிர்த் துக் கொண்டால் அவனது வழிபாடு முழுமையபன நிலையை அடை கிறது., ஏராளமான நன்மைகளைப் பெறுகிறது., அவனுடைய நற்செயல் களுக்கு அதிக அளவிலான நற்கூலிகள் வழங்கப்படுகின்றன!

ஒருவன் தீமையை நாடினான்., ஆனால் அதைச் செய்திடவில்லை என்றால் அல்லாஹ் அதனைத் தன்னிடத்தில் முழுமயான நன்மையாகப் பதிவு செய்துகொள்கிறான் ''

- அதாவது, தீமையைப் பொறுத்தவரையில், ஒருவன் அதைச் செய்ய நாடி பிறகு திருந்திவிட்டான் என்றால் இறைவனின் பார்வையில் அது முழு நன்மையாக ஆகிறது! இதுவும் இறைவனின் நீதி மற்றும் அருள், ஞானத்தின் பாற்பட்டதாகும்.

எடுத்துக்காட்டாக, ஒருவன் திருடவேண்டுமென எண்ணினான். ஆனால் இறைநினைவு அவனது உள்ளத்தில் வந்து இறைவனுக்குப் பயந்து அத்தீமையைத் தவிர்த்துவிடுகிறான். மற்றோர் அறிவிப்பில்- அதனை அவன் என்பொருட்டால் விட்டுவிட்டான்,, என்று வந்துள்ள வாசகம் இதனை இன்னும் தெளிவுபடுத்துவதைக் காணலாம்!

அதேநேரத்தில்-எண்ணியதுபோல் அத்தீமையை அவன் செய்து விடுகிறான் என்றால் ஒரே ஒரு தீமை மட்டுமே அவன் பெயரில் பதிவு செய்யப்படுகிறது! இதுவும் இறைவனின் நீதி, அவனது மேன்மையின் பாற்பட்டதே! இறைவன் கூறுகிறான்:

قال تعالي: مَنْ جَاءَ بِالْحَسَنَةِ فَلَهُ عَشْرُ أَمْثَالُهَا وَ مَنْ جَاءَ بِالسَّيِّئَةِ فَلاَ يُجْزَي اِلاَّ مِثْلَهَا وَهُمْ لاَ يُظْلَمُوْنَ

எவர் இறைவனின் (திருமுன்னால்) ஒரு நன்மையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அதைப்போல் பத்து மடங்கு நற்கூலி உண்டு. எவர் தீமையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அவர் செய்த தீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். அவர்கள் யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது" (குர்ஆன் 6:160)

இந்நபிமொழியில் -நிய்யத் எனும் எண்ணமே ஒருவனை நன்மையின்பால் கொண்டு சேர்க்கிறது எனும் வகையில் அதன் முக்கியத்துவம் வலியு றுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில்தான் இன்னோர் உண்மை முன்பு விளக்கப் பட்டுள்ளது. அதாவது, ஒருவன் தீமை செய்ய எண்ணி அதனை நிறை வேற்றும் செயற்களத்திலும் இறங்கி, அதன் பிறகு அதனைச் செய்ய இயலா மலாகிவிட்டான் என்றால் தீமை செய்தவனாகவே அவன் கருதப்படுவான். அந்தத்தீமை செய்தவனுக்கு என்ன தண்டனையோ அதில் ஒருபங்கு அவனுக்கு அளிக்கப்படும். -இந்த விபரம், இரண்டு முஸ்லிம்கள் தங்களின் வாட்களைக் கொண்டு மோதிக்கொண்டால் கொல்பவனும் கொல்லப்படுபவ னும் நரகம் செல்வர் . . . , , என்கிற நபிமொழியின் கீழ் முன்னர் விவரிக்கப்பட்டுள்ளது.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள்

இவர்களின் பெயர் அப்துல்லாஹ். அப்பாஸ் (ரலி) அவர்களின் புதல்வர் எனும் வகையில் இப்னு அப்பாஸ் என்று பிரபலமாகியிருப்பது இவர்களின் குறிப்புப் பெயராகும். இவர்கள் ஹிஜ்ரத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் மரணம் அடைந்த பொழுது இவர்களின் வயது பதிமூன்று!

"யா அல்லாஹ்! தீனில் (இறைமார்க்கத்தில்) இவருக்கு அதிக ஞானத்தை வழங்குவாயாக. கூஷ்ட்ட நுட்பத்தையும் விஷய ஞானத்தையும் இவருக்குக் கற்றுக்கொடுப்பாயாக!" என்று இவருக்காக நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செஷ்தார்கள் என்று ஆதாரப்பூர்வமான அறிவிப்பு ஒன்று வந்துள்ளது. அதற்கேற்ப இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்

இந்தக்ஷ் க்ஷமுதாயத்தின் மாமேதையாகவும் ஞானக்கடலாகவும் திகழ்ந்தார்கள்! இவர்களிடம் இருந்து 1660 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

ஹிஜ்ரி 68 ஆம் ஆண்டு தாயி∴ப் நகரில் மரணம் அடைந்த இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அங்கேயே நல்லடக்கம் செஷய்யப்பட்டுள்ளார்கள்.

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) தன் இறைவனிடம் இருந்து அறிவிக்கிறார்கள்: ஹதீஸு ல் குத்ஸி என்பது, உள்ளுதிப்பு,கனவு அல்லது வஹியின் இதர முறைகள் மூலமாக அல்லாஹ் தன் நபிக்கு எதனை அறிவித்துக் கொடுக்கிறானோ- நபிய வர்கள் அவ்வாறு எதனை தமது வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தி யுள்ளார்களோ அதுவாகும்! | ١) يرويه عن ربه : هذاحديث قدسي: وهو ما أخبربــه نبيــه ﷺ بالاهام أو رؤيا المنام أو غير ذلك من كيفيات الوحي فعبر عنه النبي ﷺ بكلامه |
| 2) அதை எழுதும்படி, கண்காணிக் கும் மலக்குகளுக்குக் கட்டளை இட்டான். | ٢) كتب: أمر الحفظة بكتابتها |
| 3) உயர்ந்தான்: அதாவது அவனது மாண்புக்குத் தகுதியில்லாதவற்றை விட்டும் அவன் தூய்மையானவன். | ٣) تعالي: تنزه عما لا يليق به |
| 4) நாடினான்: அதைச்செயல்படுத்தும் நிலை அவனிடம் மிகைத்தது. | ٤) هم : أراد وترجح فعلها عنده |

## கேள்விகள் -الاسئلة

1) லவ்ஹுல் மஹ்பூழ் என்றால் என்ன?
2) இந்நபிமொழியில் இறைவன் பதிவு செய்துவிட்டான் எனும் வாசகத்தை விவரிக்கவும். மூலஏட்டில்பதிவு செய்வதிலுள்ள வகைகளை விளக்கவும்.
3) நற்செயலைச் செய்ய வில்லையாயினும் அதை எண்ணியதற்காக மட்டும் முழு நன்மை பதிவுசெய்யப்படும் என்றால், அது எப்படி?
4) ஒரு நற்செயல் எழுநூற்றுக்கும் அதிகமான, ஏராளமான நன்மைகளைப் பெற்று விடுவதன் இரகசியம் என்ன?
5) தீமை செய்ய நாடிய மனிதன் பிறகு அதைச் செய்ய வில்லை யெனில் அது ஒரு நன்மையாகப் பதிவு செய்யப்படுவதன் விளக்கம் என்ன?
6) அறிவிப்பாளர் பற்றி சிறு குறிப்பு செய்யவும்.

## பாறையை அகற்றிய பிரார்த்தனைகள்!

١٢ – وَ عَنْ اَبِيْ عَبْدِ الرَّحْمنِ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ بْنِ الْخَطَّابِ ﷺ قَالَ : سَمِعْتُ رَسُوْلَ اللهِ ﷺ يَقُوْلُ : اِنْطَلَقَ ثَلاَثَةُ نَفرٍ مِمَّنْ كَانَ قَبْلَكُمْ حَتَّي آوَاهُمْ الْمَبِيْــتُ اِلَى غَارٍ فَدَخَلُوْهُ ، فَانْحَدَرَتْ صَخْرَةٌ مِنَ الْجَبَلِ فَسَدَّتْ عَلَيْهِمْ الْغَارُ فَقَالُوْا : اِنَّهُ لاَ يُنْجِيْكُمْ مِنْ هَذِهِ الصَّخْرَةِ اِلاَّ أَنْ تَدْعُوا اللهَ بِصَالِحِ أَعْمَالِكُمْ

ஹதீஸ் 12

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்)அவர்கள் இவ்வாறு கூறிட நான் கேட்டுள்ளேன்: உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று பேர் (ஒருபாதை வழியே) நடந்து சென்றனர். ஒருகுகையில் இரவு தங்க வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாயினர். அவர்கள் குகையினுள் சென்றதும் மலையிலிருந்து ஒருபாறை உருண்டு வந்து குகை வாசலை அடைத்துக் கொண்டது.

அவர்கள் தங்களுக்குள் கூறிக்கொண்டார்கள்: நாம் செய்த நல்ல அமல்களின் மூலம் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறெ துவும் இந்தப் பாறையை அகற்றி நம்மைக் காப்பாற்றப் போவதில்லை.

قَالَ رَجُلٌ مِنْهُمْ : اللَّهُمَّ كَانَ لِيْ أَبَوَانِ شَيْخَانِ كَبِيْرَانِ ، وَكُنْتُ لاَ أُغْبِقُ قَبْلَهُمَا أَهْلاً وَ لاَ مَالاً فَنَأي طَلَبُ الشَّجَرِ يَوْمًا فَلَمْ ارِحْ عَلَيْهِمَا حَتَّي نَامَا فَحَلَبْتُ لَهُمَا غَبُوْقَهُمَا فَوَجدتُهُمَا نَائِمَيْنِ فَكَرِهْتُ أَنْ أُوْقِظَهُمَا وَ أَنْ أغْبِقَ قَبْلَهُمَا أَهْلاً أَوْ مَالاً ، فَلَبِثْتُ – وَ الْقَدَحُ عَلَي يَدِيَ – أَنْتَظِرُ اسْتِيْقَاظَهُمَا حَتَّي بَرِقَ الْفَجْرُ وَ الصِّبْيَةُ يَتضَاغَوْنَ عِنْدَ قَدَمي– فَسْتَيْقَظَا فَشَرِبَا غَبُوْقَهُمَا اللَّهُمَّ اِنْ كُنْتُ فَعَلْتُ ذَلِكَ اِبْتِغَاءَ وَجْهِكَ فَفَرِّجْ عَنَّا مَا نَحْنُ فِيْهِ مِنْ هَذِهِ الصَّخْرَةِ ، فَانْفَرَجَتْ شَيْئًا لاَ يَسْطَعُوْنَ الْخُرُوْجَ مِنْهُ.

அவர்களில் ஒருவர் பிரார்த்தனை செய்தார்: யா அல்லாஹ்! என்னுடைய பெற்றோர் இருவரும் தள்ளாத வயதுடைய முதியோராய் இருந்தார்கள். நான் மாலைநேரத்தில் பால் கறந்து அவர்கள் இருவருக்கும் புகட்டிய பிறகுதான் என் மனைவி- மக்களுக்கும் பணியாட்களுக்கும் புகட்டுவேன்.

ஒருநாள் (ஆடகளை மேய்த்திட) புல்-செடிகொடிகளைத் தேடிச் சென்றது வெகு தூரத்திற்கு என்னை இட்டுச் சென்றுவிட்டது! மாலையில் அவர்கள் இருவரும் கண்ணயரும் வரைக்கும் கால்நடைகளை நான் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுவரவில்லை! அவ்விருவருக்கும் தேவையான பாலை நான் கரந்து முடித்தபொழுது இருவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டி ருக்கக்கண்டேன். அவ்விருவரையும் தூக்கத்திலிருந்து எழுப்பவோ அவர் களுக்கு முன்னர் என் மனைவி - மக்களுக்கும் பணியாட்களுக்கும் பால் புகட்டவோ நான் விரும்பவில்லை. கையில் பால் குவளையை ஏந்தியபடியே பெற்றோர்கள் விழித்தெழுவதை எதிர் பார்த்து நின்று கொண்டிருந்தேன்., அதிகாலை உதயமாகும் வரையில்! பிள்ளைகள் என் காலடியில் பசிதாளாமல் கதறிக் கொண்டிருந்தனர்!

யா அல்லாஹ்! உனது விருப்பத்தை நாடியே இவ்வாறு நான் செய்திருந்தேன் எனில் நாங்கள் சிக்கியிருக்கும் இந்தப் பாறையை எங்களை விட்டும் அகற்றுயாயாக!,,

- சிறிதளவு பாறை அகன்றது., அவர்களால் வெளியேற இயலாத வகையில்!

قَالَ الآخَرُ : اللهُمَّ اِنَّهُ كَانَتْ لِيْ اِبْنَةُ عَمٍّ كَانَتْ أحَبَّ النَّاسِ اِلَيَّ {وَفْي رِوَايَةٍ : كُنْتُ أحِبُّهَا كَأشَدِّ مَا يُحِبُّ الرِّجَالُ النِّسَاءَ ،} فَأَرَدتُّ عَلي نَفْسِـــهَا فَامْتَنَعَـــتْ مِنِّي حَتَّي أَلَمَّتْ بِهَا سَنَةٌ مِنَ السِنِيْنَ فَجَاءَتْنِي فَأعْطَيْتُهَا عِشْرِيْنَ وَ مِائَةَ دِينَارٍ عَلي أنْ تُخَلِّيَ بَيْنِي وَ بَيْنَ نَفْسِهَا ففعَلَتْ ، حَتَّي اِذَا قَدَرْتُ عَلَيْهَا{ وَ فِي رِوَايَـــةٍ : فَلَمَّا قَعَدتُ بَيْنَ رِجْلَيْهَا} قَالتْ : أَتَّقِ اللهَ وَ لاَ تَفُضَّ الْخَاتَمَ اِلاَّ بِحَقِّهِ ، فَانْصَرَفْتُ عَنْهَا وَهِيَ أحَبُّ النَّاسِ اِلَيَّ وَ تَرَكْتُ الذَّهَبَ الَّذِي أعْطَيْتُهَا ، اللَّهُمَّ اِنْ كُنْـــتُ فَعَلْتُ ذَلِكَ ابْتِغَاءَ وَجْهِكَ فافرُجْ عَنَّا مَا نَحْنُ فِيْهِ ، فانْفَرَجَتِ الصَّخْرَةُ غَيْرَ اَنَّهُمْ لاَ يَسْتَطِيْعُوْنَ الْخُرُوْجَ مِنْهَا.

மற்றொருவர் பிரார்த்தனை செய்தார்: யா அல்லாஹ்! என் சிறிய தகப்பனா ருக்கு ஒருமகள் இருந்தாள். அனைவரினும் எனக்கு அவள் பிரியமானவள். (மற்றோர் அறிவிப்பில், பெண்கள் மீது ஆண்கள் அன்புகொள் வதிலெல்லாம் கூடுதலாக நான் அவள் மீது அன்பு கொண்டிருந்தேன்) அவளை அனுபவிக்க வேண்டுமென நான் பெரிதும் விருப்பம் கொண்டேன். அவளோ என் விருப்பத்தை நிராகரித்து விட்டாள். இவ்வாறு இருக்கும் பொழுது வறுமையும் துயரமும் அவளை வாட்டின. என்னிடம் வந்தாள். அப்பொழுது எனது ஆசைக்குத் தன்னை அவள் ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக 120 தங்க நாணயங்கள் அவளுக்கு கொடுத்தேன். அவள் எனக்கு இணங்கினாள்.

இவ்வாறாக அவளை என் வசத்திற்கு நான் கொண்டுவந்தபோது (மற்றோர் அறிவிப்பில் அவளது இரண்டு கால்களிடையே நான் அமர்ந்த பொழுது) அவள் சொன்னாள்:

அல்லாஹ்வுக்கு அஞ்சிவிடு., எனது கற்பை அநியாயமாகப் பறித்து விடாதே! ''

உடனே அவளை விட்டும் நான் விலகிவிட்டேன். அப்பொழுது அவள் மீது அனைவரினும் அதிகமாக பிரியம் வைத்திருந்தேன். அவளுக்குக் கொடுத்திருந்த தங்க நாணயங்களையும் அப்பபடியே விட்டுக் கொடுத்தேன்.

யா அல்லாஹ்! உனது விருப்பத்தை நாடியே இவ்வாறு நான் செய்தேன் எனில் எங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சிரமத்தை அகற்றுவாயாக!

அந்தப் பாறை இன்னும் சற்று விலகியது. ஆனாலும் அவர்களால் அதிலிருந்து வெளியேற இயலவில்லை!

وَقَالَ الثَّالِثُ : اللَّهُمَّ اسْتَأجَرْتُ اُجَرَاءَ وَ أعْطَيْتُهُمْ أجْرَهُمْ غَيْرَ رَجُلٍ وَاحِدٍ تَرَكَ الَّذِي لَهُ وَ ذَهَبَ، فَثَمَّرْتُ اَجْرَهُ حَتَّي كَثُرَتْ مِنْهُ الأمْوَالُ ، فَجَاءَنِي بَعْدَ حِـــيْنٍ فَقَالَ: يَا عَبْدَ اللهِ أَدِّ اِلَيَّ أجْرِي ، فَقُلْتُ : كُلُ مَا تَرَي مِنْ أجْرِكَ : مِنَ الابِلِ وَ الْبَقَرِ وَ الْغَنَمِ وَ الرَّقِيْقِ . فَقَالَ: يَا عَبْدَ اللهِ لاَ تَسْتَهْزِئْ بِي! فَقُلْتُ: لا أسْـــتَهْزِئُ بِكَ ، فَأخَذَهُ كَلَّهُ فَاسْتَاقَهُ فَلَمْ يَتْرُكْ مِنْهُ شَيْئًا ، اللّهُمَّ اِنْ كُنْتُ فَعَلْتُ ذَلِكَ ابْتِغَاءَ وَجْهِكَ فَافْرُجْ عَنَّا مَا نَحْنُ فِيْهِ فَانْفَجَرَتِ الصَّخْرَةُ فَخَرَجُوْا يَمْشُـــوْنَ } متفـــق عليه

மூன்றாமவர் பிரார்த்தனை செய்தார்: யா அல்லாஹ்! நான் சில கூலி ஆட்களை வேலைக்கு அமர்த்தினேன். அவர்களது கூலியை அவர்களுக்கு நான் கொடுத்துவிட்டேன். ஆயினும் ஒருநபர் தனது கூலியை வாங்காமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அவரது கூலியை (வியாபாரத்தில் ஈடுபடுத் திப்) பெருக்கினேன். அதன்மூலம் அதிகமான சொத்துக்கள் உருவாயின!

சில காலத்திற்குப் பிறகு அவர் வந்து அல்லாஹ்வின் அடியாரே! எனது கூலியை என்னிடம் ஒப்படைத்து விடும் எனச் சொன்னார். நான் சொன்னேன்: நீ பார்க்கிற அதைத்தும் உனது கூலியில் சேர்ந்ததே! ஒட்டகங்கள், மாடுகள், ஆடுகள், கூலியாட்கள் எல்லாமும் உனது கூலியே!

அதற்கு அவர் அல்லாஹ்வின் அடியாரே! என்னைப் பரிகாசம் செய்யாதீர்! என்றார். நான் சொன்னேன்: நான் உன்னைப் பரிகாசம் செய்யவில்லை!

பிறகு அவை எல்லாவற்றையும் அவர் எடுத்துக்கொண்டார்., ஓட்டிச் சென்றார்! எது ஒன்றையும் விட்டுவைக்கவில்லை. -யா அல்லாஹ்! உனது விருப்பத்தை நாடியே இதை நான் செய்தேன் எனில் எங்களது துன்பத்தை அகற்றுவாயாக!

- பாறை முழுவதும் அகன்றது. அவர்கள் வெளியே புறப்பட்டுச் சென்றார்கள் ” (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை-الشرح

இது, முற்காலத்து பனீ இஸ்ராயீல் சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று மனிதர்களின் வாழ்வில் நடைபெற்ற அபூர்வமான நிகழ்ச்சியாகும். பல படிப்பினைகளையும் தத்துவங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

குகையின் வாயிலை மூடிய கற்பாறையை அகற்றிவிட்டு வெளியேறுவ தற்கு அம்மூவருக்கும் எந்த வழியும் இல்லை. பிறகு என்ன ஆனது? அல்லாஹ்வின் ஆற்றலின் பக்கம் அடைக்கலம் தேடி அவனது தனிப்பட்ட உதவி கிடைத்தாலே தவிர அங்கிருந்து அவர்களால் வெளியேற முடியாத நிலை! அப்பொழுதுதான் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்வில் செய்த நல்ல அமல்களை எடுத்துச் சொல்லி அல்லாஹ்வின் நெருக்கத்தையும் தனிப்பட்ட அன்பையும் உதவியையும் பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள்!

முதலாமவர், ஆடுகளை ஓட்டிக்கொண்டு தாமதமாக வீடு திரும்பிய பொழுது பெற்றோர் விழித்தெழுவதை எதிர்பார்த்திருப்பதா? அல்லது மனைவி மக்களின் பசியைப் போக்குவதா? எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்கிற நிலையில் பெற்றோருக்கே முன்னுரிமை கொடுத்தார்! பால்க் குவளையைக் கையில் ஏந்தியவண்ணம் விடியவிடிய அவர்களின் காலடியில் காத்துநின்றார்., அவர்களின் தூக்கம் கெடக்கூடாது., அவர்களின் மனம் நோகக்கூடாது என்பதற்காக!

என்ன ஆச்சரியம்! இவ்வாறு அவர் செய்த பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்பட்டு பாறை சிறிது விலகியது!

பெற்றோருக்குப் பணிவிடை செய்வது உயர் பண்பு மட்டுமல்ல., உயிரைப் பறிக்க வரும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் அளவு வல்லமை கொண்டதும்கூட என்பது இதிலிருந்து தெரிகிறது.

இரண்டாமவர் தனது பயபக்தியை - நல்லொழுக்கத்தை நினைவுகூர்ந்து அல்லாஹ்வின் அன்பையும் உதவியையும் வேண்டி உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்கிறார்.

அவரது சிறிய தந்தையின் அழகு மங்கையை வறுமை வாட்டிய பொழுது - அவளுடைய தந்தை மரணம் அடைந்த பிறகு உண்ண உணவின்றி அவள் வாடியபொழுது அவளாகவே அவரைத் தேடிவந்தாள்., அப்போது அவரது விருப்பப்படி தவறான வழிக்கு தன்னை ஒப்படைக்க முன்வந்தாள்! இவ்வாறு பணத்திற்காகக் கற்பைப் பறிகொடுக்க இணங்குவது கூடாது. ஆனால் அவ்வாறுதான் நடந்தது!

ஆம்! பணத்தை அள்ளிக்கொடுத்து இன்பம் அனுபவிக்க அவர் தயாரான போதுதான் அந்தமெய்சிலிர்க்க வைக்கும் சொற்களை அவள் மொழிந்தாள்!- அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்., அநியாயமாக என் கற்பைப்பறித்துவிடாதே! ”

அவளது இதய ஆழத்திலிருந்து கிளம்பிய இந்தச் சொல் அவரது இதய ஆழத்தில் பதிந்தது! உடனே இறைவனுக்கு அஞ்சி அவளை விட்டும் விலகினார்! இறையச்சத்தால் நடுங்கும் உள்ளத்தை அவர் பெற்றிருந்ததால்தான் அவள்மீது அவர் ஆத்திரப்படவில்லை. அப்பொழுதும் அவள் மீது அவருக்கு அன்புதான் இருந்தது. அதனால்தான் அவளுக்குக் கொடுத்த 120 தங்க நாணயங்களை அவர் திரும்பப்பெறவில்லை!

மனிதன் பலவீனமானவன்., தீமை புரியுமாறு தூண்டும் அவனது உள்ளம் சிலபோது அவனைத் தீமையில் தள்ளிவிடுகிறது. அல்லது ஷைத்தானிய ஊசாட்டத்தினால் அவன் தீமையில் விழுந்துவிடுகிறான். ஆக, மனிதன் ஒருதீமையை நாடி, பிறகு இறையச்சத்தின் அடிப்படையில் அதிலிருந்து விலகுகிறான் என்றால் அது ஒரு நன்மையாகவே பதிவு செய்யப்படுவது மட்டுமல்ல. உதவியை ஈர்த்துவரும் அளவுக்கு இறைவனுக்கு உவப்பான உயர் பண்பாக மாறிவிடுகிறது!

இந்த அடிப்படையில்தான் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்த அந்த மனிதரின் பிரார்த்தனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாறை இன்னும் கொஞ்சம் விலகிறது!

இதனை இறையாற்றலின் சான்று என்றுதான் சொல்ல வேண்டும். இறைவன் நாடினால் முதல் தடவையிலேயே அதனை முற்றாக அகற்றி யிருக்க முடியும். ஆயினும் ஒவ்வொருவரும் தத்தமது பிரார்த்தனையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பது இறைநாட்டம் போலும்!

மூன்றாமவர், கூலியாளிடம் தான் நடந்து கொண்ட மனிதாபிமானத்தின் அடிப்படையிலான நடத்தையையும் உதவியையும் எடுத்துச் சொல்லி இறைஞ்சினார். தொழிலாளி பலகாலம் கடந்த பிறகு வந்து கூலி கேட்ட பொழுது நீ அப்பொழுதே ஏன் உனது கூலியை வாங்கிக் கொண்டுபோக வில்லை., இப்பொழுது உனக்கு

எதுவும் தரமுடியாது என்று அவரது உரிமையை அபகரித்துக் கொள்ளவில்லை! அல்லது இதோ உனது கூலி என்று ஓர் ஆட்டை மட்டும் கொடுத்து ஆளை அனுப்பிவிடவில்லை. அப்படிச் செய்தாலும் அவர் வாங்கிக் கொண்டு சென்றிருப்பார்தான். ஆனால் அவர் அந்தக் கூலியாள் விட்டுச் சென்ற ஓர் ஆட்டை வியாபார ரீதியாகப் பல்கிப் பெருகச் செய்து - ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் எனப் பெரும் மந்தையையே அள்ளிக்கொடுத்தார்! அவர் அமானிதத்தைப் பாதுகாத்தார் என்பது மட்டுமல்ல தொழிலாளர் நலனுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களின் உரிமைகளைப் பேணினார். பாதுகாத்துக் கொடுத்தார்.

இதுவும் இறைவனுக்கு உவப்பான- இறையுதவியை ஈர்த்துவரக்கூடிய நற்செயல்கள் என்பதை இந்நபிமொழி எடுத்துரைக்கிறது! இந்நபிமொழியில் இருந்து மேலும் பல விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இஃக்லாஸ் எனும் எண்ணத்தூய்மை மிகவும் முக்கியம். இம்மூன்று மனிதர்களில் ஒவ்வொருவரும் இஃக்லாஸை தங்களது பிரார்த்தனையில் குறிப்பிடுவதை நீங்கள் காணலாம். யா அல்லாஹ்! உனது விருப்பத்தை நாடியே இதை நான் செய்தேன் எனில் எங்களது துன்பத்தை அகற்று வாயாக!"

ஆனால் முகஸ்துதி அதாவது பிறர் பார்ப்பதற்காகவோ பாராட்டு வதற்காகவோ செயல்படும் போக்கு இருக்கிறதே அது, எல்லா அமல்களை யும் பாழாக்கிவிடும். செய்த அமல்களெல்லாம் நீரில் ஒதுங்கும் நுரை போலாகி இறுதியில் ஒன்றுமில்லாமல் போய்விடும்! அமல் செய்த மனிதனுக்கு அவற்றால் எந்தப் பயனும் இராது.

பத்தினித் தன்மையின் சிறப்பு! விபச்சாரம் செய்வதற்கான சாதகமான சூழ்நிலை இருந்தும் அதிலிருந்து ஒருவன் விலகினான் எனில் அது மிகச் சிறப்பு மிக்க அமல்களில் ஒன்றாகும். வேறொரு நபிமொழி இத்தகைய பத்தினித்தனத்தை மேற்கொள்ளும் மனிதனை மிகவும் சிறப்பித்துக் கூறு கிறது: அதாவது, அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத மறுமை நாளில் அல்லாஹ் தன் பிரத்தியேக நிழலின் கீழ் நிழல் கொடுக்கக் கூடிய ஏழு வகையினருடன் இந்தமனிதனுக்கும் நிழல் கொடுப்பான் என்று!

அல்லாஹ்வின் ஆற்றல் எத்துணை மகத்தானது என்பதும் இங்கு கவனத்திற்குரியது. அம்மூவரும் செய்த பிரார்த்தனை ஏற்கப்பட்டு பாறை முற்றாக விலகியது அல்லாஹ்வின் கட்டளைப்படியே! அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் மிக்கவன்!

அறிவிப்பாளர் அறிமுகம்

## இப்னு உமர் (ரலி) அவர்கள்

இவர்கள் உமர் (ரலி) அவர்களின் புதல்வர். அப்துல்லாஹ் என்பது இவர்களின் இயற்பெயர். அபூ அப்துர் ரஹ்மான் என்பது இவர்களின் குறிப்புப் பெயர்.

நபியவர்களுக்கு நபித்துவம் வழங்கப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்னர் பிறந்தார்கள். சிறு வயதிலேயே இஸ்லாத்தை ஏற்ற இவர்கள் தம் தந்தை உமர் (ரலி) அவர்களுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்டார் கள். பத்று மற்றும் உஹு த் போர்களில் அவர்கள் கலந்துகொள்ளாததற்குக் காரணம் வயதின்மையே! ஆனால் அகழ் போரில் கலந்துகொள்ள அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி அளித்தார்கள். அதன் பிறகு நபியவர்கள் அனுப்பிய அனைத்துப் போர்ப்படைகளிலும் அவர்கள் கலந்துகொள்ளத் தவறியதில்லை.

ஷரீஅத் சட்டங்களை அதிகம் கற்றறிந்து மார்க்கத் தீர்ப்பு வழங்கி வந்த -உலகில் பற்றற்ற வாழ்க்கையை மேற்கொண்ட தோழர்களுள் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஸஹாபாக்களிடையே குழப்பமான சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் எந்தப் பிரிவிலும் சேராமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஹு தைபிய்யா உடன்படிக்கையின் காலகட்டத்தில் நபியவர்களின் சார்பாக குறைஷிகளுடன் பேச்சவார்த்தை நடத்தச்சென்ற உஸ்மான் (ரலி) அவர்களை குறைஷிகள் கொன்றுவிட்டார்கள் என்று பரவிய வதந்தியை அடுத்து நடைபெற்ற பைஅதுர் ரிள்வான் என்ற யுத்தப் பிரமாணத்தில் இப்னு உமர் அவர்களும் கலந்துகொண்டார்கள். 86 வது வயதில் - ஹிஜ்ரி 73 ஆம் ஆண்டு மக்காவில் மரணம் அடைந்த இவர்களது ஜனாஸா தீதுவா (ذي طوي) என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இப்னு உமர் (ரலி) அவர் களிடமிருந்து 1630 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) பேர்: பன்மைவார்த்தை., இதேவார்த்தை யில் இதற்கு ஒருமை இல்லை. குறிப் பிட்டஎண்ணிக்கை கொண்டமனிதர்கள் என்பது இதன்பொருள். மூன்று முதல் பத்துவரை. | ١) نفر : اسم جمع لا واحد له من لفظه ، يقع علي عدد مخصوص من الجال أي ما بين الثلاثة الي العشرة |
| 2) தங்கச் செய்தான். | ٢) آوي: أسكنه و أنزله |

| | |
|---|---|
| 3) குகை:அதாவது மலையில்,மக்கள் நுழையும்வகையில்அமைந்தஒன்றாகும். அங்கேமக்கள்இரவுதங்குவார்கள். வெயில், மழைக்கும் அங்கே ஒதுங்குவார்கள். | ٣) الغار : كل ما يكون في الجبل مما يدخله الناس يبيتون فيه أو يتظللون فيه عن الشمس أو المطر |
| 4) உருண்டுவந்தது. | ٤) انحدرت: تدحرجت من علو ا لي سفل |
| 5) பால் புகட்டமாட்டேன். அதாவது அவ்விருவரை விடவும் யாருக்கும் முன்னுரிமை கொடுக்கமாட்டேன். | ٥) لا أغبق : الغبوق شرب العشيوالصبوح شرب الصبوح و المراد لا اقدم عليهما أحدا |
| 6) தூரமானது. | ٦) نآي: بعد |
| 7) திரும்பஓட்டிக்கொண்டுவரவில்லை. | ٧) لم أرح: لم أرجع يقال: أرحت الابل : رددتها الي قراحها |
| 8) இலங்கியது. வெளிப்பட்டது | ٨) برق : تلألأ وظهر |
| 9) கதறிக்கொண்டிருந்தார்கள். | ٩) يتضاغون : يصيحون من الجوع والضغاء صوت الذلة والفاقة |
| 10) அகற்றுவாயாக. விலகச்செய்வாயாக. | ١٠) فرج : دعاء من التفريج أي افتح |
| 11) விருப்பம் கொண்டேன். | ١١) فأردتها : كناية عن طلب الجماع |
| 12) வந்தது., வந்துஇறங்கியது. | ١٢) ) المت: نزلت |
| 13) வறுமையும் துயரமும்: அதாவது பூமி எவ்விதப் புற்பூண்டுகளையும் முளைப்பிக்காத பஞ்சகாலம் | ١٣ سنة من السنين : المجدبة التي لا تنبت فيها الارض شيئا |
| 14) என்வசத்துக்குஅவளைக்கொண்டு வந்தேன்: சக்திபெற்றேன். அதாவது அவளை உடலுறவு கொள்வது - ஆட்சேபனையின்றி சாத்தியமானது | ١٤) قدرت عليها : تمكنت من الوقاع عليها من غير معارض |
| 15) கற்பைப்பறித்துவிடாதே. அல்ஃபள்ளு என்றால் உடைத்தல், திறத்தல் ஆகும். மோதிரம் என்பது பெண்ணுறுப்பை - கன்னித்தன்மையைக் குறிக்கும். | ١٥) لا تفض الخاتم: الفض الكسرو الفتح والخاتم كناية عن الفرج والبكارة |
| 16) அநியாயமாக:நியாயமானமுறையின்றி முறையான திருமணமின்றி. | ١٦) ) الا بحقه: بزواج مشروع |

## கேள்விகள் ~ الاسئلة

1)வஸீலா (இறைவனின் பக்கம் நெருக்கம்) தேடுவது என்றால் என்ன? அதில் ஆகுமானது என்ன? கூடாதது என்ன?

2) குகையை அடைத்திருந்த பாறை ஒரேயடியாக விலகாமல் படிப்படியாக விலகியதன் தத்துவம் என்ன?

3) இந்நபிமொழி தரும் படிப்பினைகளைச் சுருக்கமாக எழுதவும்.

4) அறிவிப்பாளர் குறித்து சிறு அறிமுகம் செய்யவும்.

## ٢ – باب التوبة

قال العلماء: التَّوْبَةُ وَاجِبَةٌ مِنْ كُلِّ ذَنْبٍ، فَانْ كَانَتِ الْمَعْصِيَةُ بَيْنَ الْعَبْدِ وَ بَيْنَ اللهِ تَعَالَي لاَ تَتَعَلَّقُ بِحَقِّ آدَمِيٍّ، فَلَهَا ثَلاَثَةُ شُرُوْطٍ :

أَحَدُهَا : أَنْ يُقْلِعَ عَنْ الْمَعْصِيَةِ.

وَالثَّاني : اَنْ يَنْدَمَ عَلي فِعْلِهَا.

وَالثَّالِثُ : اَنْ يَعْزِمَ اَنْ لاَ يَعُوْدَ اِلَيْهَا أَبَداً. فَاِنْ فُقِدَ أَحَدُ الثَّلاَثَةِ لَمْ تَصِحَّ تَوْبَتُهُ

وَاِنْ كَانَتِ الْمَعْصِيَّةُ تَتَعَلَّقُ بِآدَمِيٍّ فَشُرُوْطُهَا أَرْبَعَةٌ : هذِهِ الثَّلاَثَةُ وَأن يَّبْرَأَ مِنْ حَقِّ صَاحِبِهَا ، فَاِنْ كَانَتْ مَالاً أَوْ كَانَتْ نَحْوَهُ رَدَّهُ اِلَيْهِ ، وَاِنْ كَانَتْ حَدَّ قَذْفٍ وَ نَحْوَهُ مَكَّنَهُ مِنْهُ أَوْ طَلَبَ عَفْوَهُ ، وَاِنْ كَانَتْ غِيْبَةً اِسْتَحَلَّ مِنْهَا. وَ يَجبُ اَنْ يَّتُوْبَ مِنْ جَمِيْعِ الذُّنُوْبِ، فَاِن تَابَ مِنْ بَعْضِهَا صَحَّتْ تَوْبَتُهُ عِنْدَ أَهْلِ الحَقِّ مِنْ ذَلِكَ الذَنْبِ ، وَ بَقِيَ عَلَيْهِ البَاقِي . وَقَدْ تَظَاهَرَتْ دَلاَئِلُ الكِتَابِ وَالسُّنَّةِ وَ اِجْمَاعِ الاُمَّةِ عَلي وُجُوْبِ التَّوْبَةِ

### பாடம் : 2 தௌபா - பாவமீட்சி தேடல்

இறைமார்க்க அறிஞர்கள் கூறுவர்: அனைத்துப் பாவங்களில் இருந்தும் பாவமீட்சி தேடுவது கடமையாகும். மனித உரிமையுடன் தொடர்பில்லாமல் - மனிதனுக்கும் இறைவனுக்கும் மத்தியிலான பாவமாக இருந்தால் அதிலிருந்து மீட்ஷி பெறுவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன.

- **அந்தப் பாவத்திலிருந்து முற்றாக விடுபடுதல்**
- **அதனைச் செய்தது குறித்து வருந்துதல்**
- **இனி எப்போதும் அந்தப் பாவத்தைத் திரும்பச் செய்வதில்லை என்று உறுதி கொள்ளல்**

இந்த மூன்று நிபந்தனைகளில் ஒன்று விடுபட்டால் அவனது பாவமீட்சி நிறைவேறாது. மனித உரிமையுடன் தொடர்பான பாவமாக இருந்தால் அதிலிருந்து மன்னிப்புத் தேடுவதற்கு நான்கு நிபந்தனைகள் உள்ளன. நான்காவதாக அந்த மனிதனின் உரிமையி(னைப் பாதிக்கும் தீங்கி)லிருந்து விடுபடல் வேண்டும். அது பண மாகவோ பொருளாகவோ இருந்தால் அதனை அவனிடம் திருப்பிக் கொடுத்திட வேண்டும். அவதூறு சுமத்தி யதற்கான தண்டனைபோன்றதாக இருந்தால் அந்தத் தண்டனையை ஏற்றிடும் வகையில் அவனிடம் தன்னை ஒப்படைத்திட வேண்டும். அல்லது அதனை மன்னித்து விடுமாறு அவனிடம் கோரிட வேண்டும். புறம் பேசிய பாவமாக இருந்தால் அதனைப் பொறுத்துக் கொள்ளுமாறு அவனிடம் கேட்க வேண்டும்.

அனைத்துப் பாவங்களைவிட்டும் மீட்சிபெறுவது கடமை. ஒரு மனிதன் சில பாவங்களிலிருந்து மட்டும் பாவ மீட்சி தேடினால் - சத்தியவான்களிடத்தில் - அந்தப் பாவத்திலிருந்து மட்டும்தான் மீட்சி தேடியதாக ஆகும். மற்ற பாவங்கள் அப்படியே அவன் மீது படிந்திருக்கும்.

பாவமீட்சி தேடுவது கடமை என்பதற்கு குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் ஆதாரங்கள் ஏராளம் உள்ளன. சமுதாயத்தின் கருத்தொற்றுமையும் அதற்குண்டு. அல்லாஹ் கூறுகிறான்:

இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாவமன்னிப்புக் கோரி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள். நீங்கள் வெற்றி அடையக்கூடும்'' (24 : 31)

வேறோரிடத்தில், உங்கள் இரட்சகனிடம் பாவமன்னிப்புப் கோரி பிறகு அவன் பக்கம் மீளுங்கள்'' (11 : 3)

இன்னோரிடத்தில், இறைநம்பிக்கைகொண்டோரே! அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். தூய்மை யான பாவமன்னிப்பாக'' (66 : 8)

## தெளிவுரை- الشرح

தௌபா எனும் அரபிச் சொல்லுக்கு அகராதியில் திரும்புதல் என்று பொருள். இறைமார்க்கத்தின் வழக்கில் - அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்வதை விட்டும் திரும்பி, அவனுக்குக் கீழ்ப்படிவதாகும்.

பாவமீட்சி தேடுவதில் மிகமுக்கியமானதும் கண்டிப்பானதும் யாதெனில், இறைநிராகரிப்பை விட்டும் இணை வைப்பை விட்டும் பாவமீட்சி தேடி இறைநம்பிக்கை கொள்வதாகும். ஏனெனில், இவைதான் மிகவும் கொடிய பாவச்செயல்களாகும்.

இறைமறை கூறுகிறது: (நபியே!) இறைநிராகரிப்பாளர்களிடம் கூறும்: (இப்போதேனும் அசத்தியத்தை விட்டும்)அவர்கள் விலகிக் கொள்வார்களாயின் அவர்கள் செய்த முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப் படும். (8 : 38)

இரண்டாவதாக, பெரும் பாவங்களிலிருந்து மன்னிப்புத் தேடி மீளுவது. மூன்றாவதாக, சிறிய பாவங்களில் இருந்து மன்னிப்புத்தேடி மீளுவது. ஆக, ஒருமனிதன் அனைத்துப் பவங்களையும் விட்டொழித்து அல்லாஹ் வின் பக்கம் திரும்பி மன்னிப்புத் தேடுவது கடமையாகும்.

பாவமீட்சி தேடுவதற்கு - இமாம் நவவி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டது போன்று - மூன்று நிபந்தனைகள் உள்ளன. மேலும் ஆராய்ந்தால் அவற்றுடன் இன்னும் இரு நிபந்தனைகள் வந்து சேருவதைக் காணலம்.

முதலாவது நிபந்தனை: இக்லாஸ் எனும் எண்ணத் தூய்மை. தன்னுடைய பாவங்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டும்., அவனது உவப்பை நாம் பெறவேண்டும் எனும் தூய எண்ணத்தின் அடிப்படையில் பாவமீட்சியை மேற்கொள்ள வேண்டுமே தவிர தன்னைத் தூய மனிதன்போல் ஊர் - உலகுக்குக் காட்டிக் கொண்டு அதன் மூலம் மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும் பெறலாமெனும் உலகாயத நோக்கம் இருக்கக் கூடாது.

இரண்டாவது நிபந்தனை: செய்த பாவம் குறித்து மனம் வருந்துதல். இதுதான் அவன் பாவமீட்சி தேடு வது உண்மை என்பதற்கான அடையாளமாகும். தான் செய்தது தவறான செயலல்ல என்று அவன் அகந்தை யுடன் இருந்திருந்தால் இவ்வாறு மனம் நொந்து கைசேதப்படமாட்டான் என்பது வெளிப்படை.

மூன்றாவது நிபந்தனை: பாவத்திலிருந்து முற்றாக விலகுதல். இதுதான் மிகவும் முக்கியமானது! அல்லாஹ் விதித்த கடமைகளை நிறைவேற்றாமல் இருப்பதும் ஒருபாவமே! எனவே அதிலிருந்து மீட்சி பெறவேண்டு மானால் உடனே அவற்றை நிறைவேற்றத் தொடங்கிட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஜகாத் கொடுக்காமல் தட்டிக்கழித்துக் கொண்டிருக்கும் ஒருவன் அந்தப் பாவத்திலிருந்து மீட்சி பெறவேண்டுமானால் உடனே கடந்த காலத்திற்கும் சேர்த்துக் கணக்குப் பார்த்து ஜகாத் கொடுத்திட வேண்டும்.

இவ்வாறுதான்- தொழுகையை நிறைவேற்றாமல் இருப்பது. பெற்றோரை நிந்திப்பது, ரத்த பந்தத்தை முறிப் பது, வட்டிவாங்கித்தின்பது, மது அருந்துவது, ஏமாற்றிப் பணம் பறிப்பது, புறம்பேசித் திரிவது போன்ற பாவச் செயல்களும். இவற்றிலிருந்து பாவமீட்சி பெற வேண்டுமானால் உடனே அவற்றை விட்டும் விலகிட வேண்டும்.

மாறாக அந்தப் பாவங்களைத் தொடர்ந்து செய்துகொண்டு நான் பாவமீட்சி தேடுகிறேன் என்றால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மட்டுமல்ல அப்படிச் செய்வது அல்லாஹ்வைப் பரிகாசம் செய்த குற்றமாகவும் ஆகிறது.

உங்களுடன் கொடுக்கல் - வாங்கல் வைத்துள்ள ஒருவன் ஒரு விவகாரத்தில் தவறு செய்து விடுகிறான்., பிறகு அது குறித்து நான் வருந்துகிறேன்., இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே தொடர்ந்து அந்தத் தவறைச் செய்தால் அது, உங்களைப் பரிகாசம் செய்வதாகத்தான் ஆகும். இது போன்று தான் அல்லாஹ்வுடன் நடந்து கொள்வதும்.

இங்கு ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். பாவங்கள் இரண்டு வகையில் உள்ளன. ஒன்று மனித உரிமையுடன் தொடர்புடையது. இரண்டாவது இறைச்சட்டங்களை - கடமைகளை மீறுதல் தொடர் பானது.

இரண்டாவது வகையைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி பிற மனிதர்களிடம் தெரியப்படுத்த வேண்டிய தில்லை. இறைவனிடம் பாவமீட்சி தேடுவதே போதுமானது. தான் இப்படி ஒரு பாவத்தைச் செய்தேன் என்று பிறருக்குத் தெரியப்படுத்துவது, தன்னைத்தானே கேவலப்படுத்துவதுபோன்றதாகும். அப்படிக்ஷ் க்ஷெய்வது கூடாது. அல்லாஹ் அந்தப் பாவத்தை மக்களின் கண்களை விட்டும் மறைத்து அந்த மனிதன் மீது உபகாரம் செய்திருக்கும்பொழுது அவனும் தனது தவற்றை உணர்ந்து பாவமீட்சி தேடிடும் போது பிறருக்குத் தெரிவிப் பதற்கு என்ன இருக்கிறது!

அது மட்டுமல்ல செய்த பாவத்தைப் பிறரிடம் சொல்லிக்காட்டுவதை நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கண்டித் துள்ளார்கள்: என் சமுதாயத்தினர் அனைவரும் மன்னிப்பைப் பெறக்கூடியவர்களே. ஆனால் (செய்த தவறு களைப்) பகிரங்கப்படுத்துவோரைத்தவிர! ஒருவன் பாவம் செய்துவிட்டு காலையில் எழுந்து மக்களிடம் சென்று நான் இன்னின்ன பாவங்களைச் செய்தேன் என்று சொல்லிக்கொண்டு திரிவது (தான் பகிரங்கப் படுத்து வதாகும்)" (புகாரி, முஸ்லிம்)

ஆனால் தண்டனைக்குரிய பாவத்தை அவன் செய்திருந்தால் அதற்குப் பொறுப்பான அமீர் - தலைவரிடம் க்ஷென்று தெரியப்படுத்தித் தனது தண்டனையை நிறைவேற்றுமாறும் அந்தப் பாவத்திலிருந்து தன்னைத் தூய்மைப் படுத்துமாறும் கோருவது அவனுக்குக் கூடும். ஏனெனில் தண்டனைகள் பாவங்களுக்குப் பரிகார மாக உள்ளன. ஆயினும் பிறரிடம் சொல்லி அதனை வெளிப்படுத்தாமல் இருப்பதே சிறந்ததாகும்.

மனித உரிமையைப் பாதிக்கும்படியான பாவத்தைப் பொறுத்த வரையில் -இமாம் நவவி (ரஹ்) அவர்கள் சுட்டிக்காட்டியது போன்று - அதனை உரியவரிடம் திருப்பி ஒப்படைப்பதே பாவத்தில் இருந்து விடுபடுவதாகும்.

எடுத்துக்காட்டாக, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் மறுத்த வன் பின்னர் அது பாவமென உணர்ந்து பாவமீட்சி தேடுகிறான் எனில் பாதிக்கப்பட்டவரிடம் க்ஷென்று உண்மையைச் சொல்லி அந்தப் பணத்தை ஒப்படைத்திடவேண்டும். அவர் இறந்துவிட்டாரெனில் அவருடைய வாரிசுகளிடம் அதைக் கொடுத்திட வேண்டும். அவர் எங்கிருக்கிறார்? உயிருடன் உள்ளாரா? இறந்து விட்டாரா என்று அவரைப் பற்றிய தகவல்

தெரிய வில்லையெனில், - வாரிசுகளும் இல்லையெனில், அவரது பெயரில் அந்தப் பணத்தைத் தர்மம் செய்திட வேண்டும். அவரைப்பற்றி அல்லாஹ் அறிவான்., அந்தத் தர்மத்தின் கூலியை அவரிடம் சேர்த்திடுவனான்.

அநியாயமாக ஒருவரை அடித்திருந்தால் அதற்குப் பகரமாக அவர் அடிப்பதற்காக அவரிடம் தன்னை ஒப்படைத்திட வேண்டும். அவரது உடலில் எந்த இடத்தில் அநியாயமாக அடிக்கப்பட்டதோ அதே இடத்தில் அவரும் அடித்துப் பழி தீர்த்துக் கொள்வார். முதுகிலெனில் முதுகில்., தலையிலெனில் தலையில்! அடிபட்டவர் அதனை மன்னித்து மனம் பொறுத்தால் அப்படிக்ஷ் செய்யவேண்டியதில்லை.

இறைவன் கூறுகிறான்: தீமையின் கூலி அதேபோன்ற ஒரு தீமையே ஆகும் " (திருக்குர்ஆன் 42 : 401)

பிறிதோர் இடத்தில், எனவே உங்களிடம் எவரேனும் வரம்பு மீறினால் அவர் எந்த அளவுக்கு உங்களிடம் வரம்பு மீறினாரோ அந்தஅளவுக்கு நீங்களும் அவருக்குப் பதிலடி கொடுங்கள்" (2 : 194)

புறம் பேசிய பாவம் தொடர்பாகச் சான்றோர் சிலர் மேலும் ஒருவிளக்கம் கொடுக்கிறார்கள்: புறம் பேசியதை அந்த மனிதர் அறிந்து விட்டாரெனில் அவரிடம் சென்று மன்னிப்புக் கோரிட வேண்டியதுதான். ஆனால் அது அவருக்குத் தெரியாது என்றால், அவருக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. மாறாக, புறம் பேசியவர் அவருக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்டிட வேண்டும். அவரைக் குறித்துப் புறம்பேசிய அதே சபையில் அவரது நற்குணத்தைப் புகழ்ந்து பேசிட வேண்டும் - நன்மை தீமையை அழித்து விடும் எனும் நியதிக்கேற்ப அமைவதாகும் இது!

ஆக பாவமீட்சி தேடுவது நிறைவேறவேண்டுமெனில் பாவங்களிலிருந்து முற்றாக விடுபடல் வேண்டும்.

நான்காவது நிபந்தனை: மீண்டும் அந்தப் பாவத்தைச் செய்வதில்லை யென உறுதிகொள்வது. - சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் பாவம் செய்யும் எண்ணத்துடன் இருந்தால் பாவமீட்சி ஒப்புக் கொள்ளப் படமாட்டாது.

எடுத்துக்காட்டாக, ஒருமனிதன் மது, மாது, சூது என எல்லாப் பாவச் செயல்களிலும் பணத்தை விரயம் செய்தான். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணமெல்லாம் சில நாட்களிலேயே காலியானது. இப்பொழுது அவன் வறுமையின் பிடியில்! உடனே பக்தி மேலிட- யா அல்லாஹ்! என்னை மன்னித்துவிடு. என்னைத் தண்டித்து விடாதே! என்று பிரார்த்தனை செய்து பாவமீட்சி தேடுகிறான். ஆனாலும் அடிமனத்தில் ஓர் எண்ணம்: மீண்டும் கையில் பணம் வந்தால் ஒரு தடவையேனும் அவற்றை அனுபவிக்க வேண்டும் என்று! இப்படிப்பட்ட மனிதனின் பாவமீட்சி ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. இவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறானே தவிர வேறில்லை!

ஐந்தாவது நிபந்தனை: பாவமீட்சியை அதற்குரிய காலகட்டத்தில் மேற்கொள்வதாகும். அதன் பிறகு பாவமீட்சி தேடினால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்தக் காலகட்டம் இரண்டு வகையில் உள்ளது:

1) ஒவ்வொருவருக்கும் உரியது
2) எல்லோருக்கும் பொதுவானது

முதலாவது மரண நேரம். அதற்கு முன்பே பாவமீட்சி தேடிட வேண்டும். மரண நேரம் வந்த பிறகு பாவ மீட்சி தேடினால் அது பயனளிக்காது. அல்லாஹ் கூறுகிறான் :

قال الله : وَ لَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّئَاتِ حَتَّي اِذَا حَضَرَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّي تُبْتُ الآنَ وَلاَ الَّذِيْنَ يَمُوْتُوْنَ وَهُمْ كُفَّارٌ اُولئكَ اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا أَلِيْمًا (سورة النساء ١٨)

எவர்கள் தீயசெயல்கள் செய்துகொண்டே இருக்கிறார்களோ - எதுவரையெனில், அவர்களில் ஒருவருக்கு மரண நேரம் நெருங்கினால் நான் இப்பொழுது பாவமீட்சி தேடுகிறேன் என்கிறாரோ - இத்தகையவர்களுக்குப் பாவமன்னிப்புக் கிடையாது" (குர்ஆன் 4 : 18) மற்றோர் இடத்தில்,

قال الله : فَلَمَّا رَأَوْا بَأسَنَا قَالُوْا آمَنَّا بِاللهِ وَحْدَهُ وَ كَفَرْنَا بِمَا كُنَّا بِهِ مُشْرِكِيْنَ فَلَمْ يَكُنْ يَنْفَعُهُمْ اِيْمَانُهُمْ لَمَّا رَأَوْا بَأسَنَا سُنَّةَ اللهِ الَّتِـــيْ قَـــدْ خَلَتْ فِيْ عِبَادِهِ وخَسرَ هُنَالِكَ الْكَافِرُوْنَ (سورة الغافر الاية : ٨٤–٨٥)

அவர்கள் நமது தண்டனையைக் கண்டபொழுது ஏக இறைவனாகிய அல்லாஹ்வை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்., அவனுக்கு இணையாக நாங்கள் ஏற்படுத்தியிருந்த தெய்வங்களை நிராகரித்தோம் என்று கூறி னர். ஆனால் நமது தண்டனையைக் கண்ட பின்னால் அவர்கள் கொண்ட ஈமான் - நம்பிக்கை அவர்களுக் குச் சிறிதும் பயனளிக்காது போயிற்று! இது அல்லாஹ்வின் நியதி. அவனுடைய அடியார்களாகிய மனிதர் களிடையே என்றென்றும் நடைபெற்று வரக்கூடியது. மேலும் அந்நேரத்தில், நிராகரிப்பாளர்கள் நஷ்டமடைந்து விட்டார்கள்'' (40 : 84 -85)

ஆம்! மரண நேரம் நெருங்கிய பிறகு இப்பொழுது நாம் உலகத்தை விட்டுப் பிரியப் போகிறோம்., இனி நமக்கு வாழ்வில்லை., ஐயோ! வசமாக மாட்டிக் கொண்டோம், இனி தப்பிக்க எதுவும் செய்யமுடியாது'' என்ற நிலையில் தேடுகிற பாவமன்னிப்பு நிர்பந்த நிலையிலானது. அது எவ்விதப் பயனும் அளிக்காது!

எல்லோருக்கும் பொதுவான காலகட்டமெனும் இரண்டாவது வகையை பின்வரும் நபிமொழி விளக்குகிறது:

قال النَّبي ﷺ : الهِجْرَةُ لاَ تَنْقَطِعُ حَتَّي تَنْقَطِعَ التَّوْبَةُ وَ لاَ تَنْقَطِعُ التَّوْبَةُ حَتَّي تَطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا . أخرجه ابو داؤد و أحمد

நபி (ஸல்)அவர்கள் அருளினார்கள்: தௌபா - பாவமீட்சி தேடுவதற்கான கால அவகாசம் முடிவடையாத வரை ஹிஜ்ரத் முடிவடையாது. சூரியன் மேற்கிலிருந்து உதிக்காதவரையில் (அதாவது யுகமுடிவு நாள் வரையில்) பாவமீட்சி தேடுவது முடிவடையாது''(நூல் : அபூ தாவூத், அஹ்மத்) அல்லாஹ் கூறுகிறான்:

قال الله تعالي: يَوْمَ يَأتِي بَعْضُ آيَاتِ رَبِّكَ لاَ يَنفَعُ نَفْسًا اِيْمَانُهَا لَمْ تَكُنْ آمَنَتْ مِنْ قَبْلُ أ وَ كَسَبَتْ فِي اِيْمَانِهَا خَيْرًا ( سورة الانعام الاية: ١٥٨)

உம் இறைவனின் சான்றுகளில் சில, வெளிப்படும் நாளில் முன்னரே நம்பிக்கை கொள்ளாதவருக்கும் அல்லது நம்பிக்கை கொண்டிருந்தும் அதனுடன் யாதொரு நன்மையையும் சம்பாதிக்காதவருக்கும் - அவரு டைய நம்பிக்கை எவ்விதப் பயனும் அளிக்கா! '' (குர்ஆன் 6: 158)

இறைவனின் சான்றுகளில் சில என்பதுதான் சூரியன் மேற்கிலிருந்து உதயமாவதாகும் - இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் விளக்கம் அளித்துள் ளார்கள்.

## எதிரிகளின் சூழ்ச்சி வலை

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் குறிப்பிட்டது போன்று- எல்லாப் பாவங்களில் இருந்தும் பாவமீட்சி தேடுவது கடமை என்பதற்கு நேரடியான ஆதாரங்கள் குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஏராளம் உள்ளன. பாவமீட்சி தேடுவதன் சிறப்பும் அதன் நன்மையும் அவற்றில் விளக்கப்பட்டுள்ளன.

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் பின்வரும் இறைவசனத்தைக் கூறினார்கள்:

قال تعالى وَتُوْبُوْا اَلَى اللهِ جَمِيْعًا أَيُّهَا الْمُؤمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ( سورة النور الآية : ٣١)

இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள் '' (24 : 31)

- இந்த வசனம், பார்வையைப் பேணுவது கடமையென உணர்த்தும் வசனத்தொடரின் இறுதியில் இடம் பெற்றுள்ளது. அது வருமாறு:

قال تعالي: قُلْ للمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ ابْصَارِهِمْ وَ يَحْفَظُوْا فُرُوْجَهُمْ ذَلِكَ أَزْكَي لَهُمْ اِنَّ اللهَ خَبِيْرٌ بِمَا يَصْنَعُوْنَ وَ قُلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَ يَحفَظْنَ فُرُوْجَهُنَّ ...{ الي قوله } أوالطِّفْلِ الَّذِيْنَ لَمْ يَظْهَرُوْا عَلَي عَوْرَاتِ النِّسَاءِ وَ لاَ يَضْرِبْنَ بِأَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِيْنَ مِنْ زِيْنَتِهِنَّ وَ تُوْبُوْا اِلَي اللهِ جَمِيْعًا أَيُّهَا الْمُؤْمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ( سورة النور الآية: ٣٠ –٣١ )

(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம் - அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக்கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்படியும் நீர் கூறும். இதுவே அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும். அவர்கள் செய்யும் அனைத்தையும் திண்ணமாக அல்லாஹ் நன்கு தெரிந்தவனாக இருக்கிறான்.

மேலும் (நபியே!) நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளட்டும் ...தாங்கள் மறைத்து வைத்திருக்கும் தங்களது அழகை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தங்களுடைய கால்களை (ப் பூமியில்) அடித்துக்கொண்டு நடக்க வேண்டாம். இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள்! நீங்கள் வெற்றி பெறலாம். (குர்ஆன்24 : 30 - 31)

பார்வையைப் பேணாதிருப்பதும் வெட்கத்தலங்களைப் பாதுகாக்காதிருப்பதும் பாவச்செயல்களாகும்., அவற்றில் இருந்து பாவமீட்சி தேடுவது கடமை என்பதை இந்த வசனம் உணர்த்துகிறது.

பார்வையைப் பேணாதிருப்பது என்றால் அதைக் கட்டுப்படுத்தா திருப்பது- பார்க்கக் கூடாதவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டுதிரிவது என்று பொருள். வெட்கத்தலத்தைப் பாதுகாக்காதிருப்பதென்றால் மானக் கேடான செயல் அதாவது விபச்சாரம் செய்வது என்று பொருள். இவை, பெரும் அழிவையும் நாசத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்தும் காரணிகளின் பாற்பட்டவையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

قَدْ ثَبَتَ عَنِ النَّبِي ﷺ أَنَّهُ قَالَ: مَا تَرَكْتُ بَعْدِي فِتْنَةً أَضَرَّ عَلَي الرِّجَالِ مِنَ ا لنِّسَاءِ–رواه البخاري

எனக்குப் பின்னால் நான் விட்டுச் செல்கிற சோதனைகளில் ஆண்களின் மீது அதிகத் தீங்கு விளைவிக்கக் கூடிய சோதனைபெண்களின் சோதனையே" (நூல்: புகாரி) - மேலும் சொன்னார்கள்:

وَ قَالَ: وَ اِنَّ اَوَّلَ فِتْنَةِ بَنِى اِسْرَائِيْلَ كَا نَتْ فِى النِّسَاءِ – أخْرجه مسلم

யூதர்களுக்கு நேர்ந்த ஆரம்ப சோதனை பெண்களின் விஷயத்தில் ஏற்பட்ட சோதனையே" (நூல்: முஸ்லிம்)

இதனால்தான், முஸ்லிம்களை எப்படியாவது பெண்களின் விஷயத்தில் சீரழித்திட வேண்டும் என்று எதிரிகள் தொடர்ந்து சூழ்ச்சிவலை பின்னுகிறார்கள். பர்தா அணிவதால் பெண்களின் சுதந்திரம் பறிபோகிறது என்று கூப்பாடு போட்டு, முஸ்லிம் சமுதாயத்துப் பெண்களைத் தூண்டி விடுகிறார்கள். ஆண் - பெண் சமத்துவம் என்கிற கோஷத்தை எழுப்பி அதன் மாயையில் முஸ்லிம் பெண்களையும் வீழ்த்தப் பார்க்கிறார்கள்., பெண்களும் தங்களின் அழகைக்காட்டிக் கொண்டு வீதிக்கு வர வேண்டும் என்பதே அவர்களது திட்டம்! இதற்காகச் சர்வதேச அளவில் சதிவலை பின்னிச் செயல்படுத்துகிறார்கள்.

இதில் இவர்களின் எதிர்பார்ப்பு என்னவெனில், ஆண்களும் பெண்களும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி பழகுகிற ஒழுக்கக் கேடான இந்த மேற்கத்திய கலாச்சாரத்தை முஸ்லிம்களிடையே எப்படியேனும் புகுத்திட வேண்டும் என்பதுதான்! அதன் மூலம் முஸ்லிம்களை - குறிப்பாக இளைஞர்களை வழிகெடுத்துச் சிற்றின்ப மோகத்

தில் சிக்க வைத்து அவர்களை உயிரற்ற சடலங்களாக்கி மூலையில் முடங்கிடச் செய்ய வேண்டும் என்பது தான்!

பொதுவாக ஏகஇறைக்கொள்கையில் முஸ்லிம்கள் உறுதியுடன் உள்ளதையும் இஸ்லாமிய நெறிகளைப் பெரும்பாலும் பேணி வருவதையும் எதிரிகள் நன்கு அறிவர். எனவேதான் முஸ்லிம்களின் கொள்கைப்பற்றையும் கலாச்சாரத் தனித் தன்மையையும் எப்படியேனும் பலவீனப்படுத்திட வேண்டும்., மாற்றிட வேண்டும் என்று எதிரிகள் முனைப்புக்காட்டுகின்றனர். அதற்காக அவர்கள் தேடிக் கண்டுபிடித்த வழிதான் இது:

அதாவது, முஸ்லிம் சமுதாயத்தில் சமத்துவம் என்கிற பெயரில் அந்நிய ஆண்களும் பெண்களும் கட்டுப் பாடின்றி பழகும் நிலை வந்துவிட்டால் முஸ்லிம்கள் சிற்றின்ப வேட்கைக்குப் பலியாகி - ஒழுக்க வீழ்ச்சிக்கு உள்ளாகி இறைமார்க்கத்தின் நெறிமுறைகளைத் தாங்களாகவே கைகழுவி விடுவார்கள். இதுதான் எதிரி களின் திட்டம்.

எனவே இது விஷயத்தில் அனைத்து முஸ்லிம்களும் - குறிப்பாக இளைஞர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலே சொன்ன இந்த வசனம் அதாவது, இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள்., நீங்கள் வெற்றி பெறலாம்,, என்கிற வசனம் முஸ்லிம் சமுதாயம் முழுவதையும் நோக்கி கட்டளை இடுகிறது!

எனவே தவறான பார்வை எனும் பாவத்தைத் தவிர்ப்பதில் - அதிலிருந்து பாவமீட்சி தேடுவதில் ஒருவருக் கொருவர் அறிவுரை கூறிக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய சகோதரர் இந்தப் பாவத்திலிருந்து மீண்டாரா? இல்லை அதிலேயே மூழ்கித் தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கிறாரா? என்று ஒவ்வொரு வரும் கண் காணித்திட வேண்டும். அதன் மூலம்தான் நாம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெற்றி பெறமுடியும்.

## இதில் இரு நன்மைகள் உண்டு!

١٣– عَنْ أَبِي هُرَيْرَة ﷺ قَالَ: سَمِعْتُ رَسُوْلَ اللهِ ﷺ يَقُوْلُ { واللهِ اِنِّي لأَسْتَغْفِرُ اللهَ وَ أَتُوْبُ اِلَيْهِ فِيْ الْيَوْمِ أَكْثَرَ مِنْ سَبْعِيْنَ مَرَّةً } البخاري

ஹதீஸ் 13

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டுள் ளேன்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! திண்ணமாக நான் ஒருநாளில் எழுபது தடவைக்கு அதிகமாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருகிறேன்.,அவன் பக்கம் மீளுகிறேன்" (நூல் : புகாரி)

١٤ –عنِ الأَغَرِّ بْنِ يَسَارٍ الْمُزْنِي ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : يَا أَيُّهَا النَّاسُ تُوْبُوْا الَي اللهِ وَ اسْتَغْفِرُوهُ فَاِنِّي أَتُوْبُ فِي الْيَوْمِ مِائَةَ مَرَّة } رواه مسلم

ஹதீஸ் 14

அஃகர்ரு இப்னு யஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்)அவர்கள் அருளினார்கள்: ஓ! மனிதர் களே! பாவமீட்சிதேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள்., அவனிடம் மன்னிப்புத் தேடுங்கள். திண்ணமாக நான் ஒருநாளில் நூறு தடவை பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுகிறேன்" (நூல்: முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

இமாம் நவவி (ரஹ்) அவர்கள், பாவமீட்சி தேடுவதற்கு ஆதாரமாக குர்ஆன் வசனங்களைக் குறிப்பிட்ட பிறகு இப்பொழுது நபிமொழிகளை வரிசைப்படுத்துகிறார்கள். ஒரு கருத்துக்கு ஒன்றுக்கதிகமான ஆதாரங்கள் சேரும்பொழுது அதன் உறுதிப்பாடும் கட்டாய நிலையும் அதிகரிக்கும்.!

நபி(ஸல்)அவர்கள் பரிசுத்தமானவர்கள்.அவர்களின் முந்தைய - பிந்தைய பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்டான். அத்தகைய உத்தமரான நபி (ஸல்) அவர்களே ஒருதடவை இருதடளைவ அல்ல. நூறு தடவை பாவமீட்சி தேடியுள்ளார்கள் எனில் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

பாவமீட்சி தேடுமாறு நபியவர்கள் தம் சமுதாயத்திற்கு இட்ட கட்டளையாகும் இது. இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில், ஒருமுஸ்லிம் பாவமீட்சி தேடும்பொழுது அதில் இரு நன்மைகள் கிடைக்கின்றன. ஒன்று: அல்லாஹ் - ரஸூலின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் அதிலுள்ளது. அல்லாஹ் - ரஸூலின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிவது முழுக்க முழுக்க நன்மையே!இம்மை, மறுமையின் நற்பேறுகளுக்கு அதுவே அடிப்படை.

இரண்டாவதாக ஒரு நாளைக்கு சுமார் நூறு தடவை பாவமீட்சி தேடிய உத்தம நபியைப் பின்பற்றிய நற்பேறு கிடைக்கிறது.

இந்த நபிமொழிகள் சில உண்மைகளை உள்ளங்களில் பதிய வைக்கின்றன. நபி (ஸல்) அவர்கள் இறை வழிபாட்டில் கொண்ட உறுதி நிலையில் அனைத்து மனிதர்களினும் சிறந்து விளங்கினார்கள். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அனைவரினும் அதிகமாக அல்லாஹ்வின் திருமுன் பணிபவர்களாய் - அவனை வணங்குபவர் களாய் - அனைவருக்கும் அதிகமாக அவனுக்கு அஞ்சுபவர்களாய் திகழ்ந்தார்கள். அல்லாஹ்வை அவர்கள் அறிந்திருந்ததை விட உலகில் யாரும் அறிந்திருக்கவில்லை.

நபி (ஸல்)அவர்கள் நன்மையின் சிறந்த போதகராய்த் திகழ்ந்தார்கள். எதனை நன்மை என்று உலக மக்க ளுக்கு எடுத்துச் சொன்னார்களோ அதனை அனைவருக்கும் முதலில் தமது வாழ்வில் செயல்படுத்தினார்கள். பாவ மன்னிப்புக் கோருங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் பிறருக்கு ஏவியது அவ்வழியில் தாங்கள் ஒரு முன்மாதிரியாய் வாழ்ந்தபிறகுதான். இவ்வாறு அவர்களின் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருந்தன.

இதில் அனைத்து முஸ்லிம்களுக்கும் - குறிப்பாக அழைப்புப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நல்ல படிப்பினை உள்ளது. ஒன்றைச் செய்யுமாறு மக்களுக்கு ஏவும்பொழுது அனைவருக்கும் முதலில் அதனை அவர்கள் செயல்படுத்திட வேண்டும். தீமையை விட்டும் தடுத்திடும் பொழுது அனைவரை விடவும் முதலில் அவர்கள் அதிலிருந்து விலகிட வேண்டும். அப்படிச் செய்யும்பொழுதுதான் அவர்களின் அழைப்புப்பணி வெற்றி பெறும். அவர்களின் உழைப்பு மறுமையில் மதிக்கப்படும்., நற்கூலியைப் பெறும்!

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## அஃகர்ரு பின் யஸார் (ரலி) அவர்கள்

அஃகர்ரு பின் யஸார் -அல் முஸனி (ரலி) அவர்கள், நபித்தோழர்களில் ஒருவர். இவர் அறிவித்த ஹதீஸ்களை **அல் அதபுல் முஃப்ரதில்** இமாம் புகாரி அவர்களும் **அல்யவ்மு வல்லைலா** வில் நஸாஈ அவர்களும் பதிவு செய்துள்ளார்கள். முஸ்னத் அஹ்மதிலும் அபூதாவூதிலும்கூட பதிவாகியுள்ளது.

### அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) தௌபா : நிகழ்ந்துவிட்ட பாவச் செயல் குறித்து மனம் வருந்துவதும் அதனை மீண்டும் செய்யாதிருக்க உறுதி கொள்வதும் ஆகும். அது ஏற்கப்படுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. | ١) التوبة : الندم علي ما حصل من اثم والعزم علي عدم العودة اليه ولقبولها شروط |
| 2)விடுபடுவது: தடுத்துக்கொள்வது, தொடர்பு நீங்கு வது | ٢) أن يقلع: أن يكف و ينقطع |

| | |
|---|---|
| 3) சத்தியவான்களிடத்தில்: ஸு ன்னத் வல் ஜமாஅத் தினரிடத்தில் | ٣) عند أهل الحق: عند أهل السنة و الجماعة |
| பாவமன்னிப்பு (பொறுத்துக் கொள்ள) வேண்டுகிறேன். அல் - ஃகஃப்ர் -ன் அகராதிப் பொருள் மறைத்தல். | ٤) استغفر: اطلب المغفرة وهي الصفح عن الذنب و أصل الغفر الستر |

## கேள்விகள் - الاسئلة

1) பாவமன்னிப்புத் தேடுவதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
2) இந்த இரு நபிமொழிகளிலும் உள்ள படிப்பினைகள் யாவை?
3) அறிவிப்பாளர்களைப் பற்றி சிறு அறிமுகம் செய்யவும்.
4) மனித உரிமை தொடர்பான பாவங்களுக்கு உதாரணம் கூறவும். அவற்றிலிருந்து விடுபடுவதற்கு என்ன நிபந்தனைகள் உள்ளன?
5) புறம் பேசுதல், கடனைத் திருப்பித் தராமல் இருத்தல் போன்ற பாவங்களில் இருந்து விடுபடுவதெப்படி?
6) மரண நேரம் நெருங்கும் முன்பே பாவமீட்சி தேடிட வேண்டும் என்பதற்கு குர்ஆன் - ஹதீஸில் இருந்து ஆதராங்கள் தரவும்.
7) பார்வையைத் தாழ்த்துவது - பேணுவது என்றால் என்ன? அதை வலியுறுத்தும் குர்ஆன் வசனத்தை விளக்கவும்.
8) தௌபா எனும் அரபிச் சொல்லின் பொருளை விவரிக்கவும்.

## பாவம் செய்த மனிதனும் காணாமல் போன ஒட்டகமும்

**١٥ – وَ عَنْ أبِى حَمْزَةَ أنَسِ بْنِ مَالِكٍ الأَنْصَارِيِّ خَادِمِ رَسُوْلِ اللهِ ﷺ ،قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : للهُ أفْرَحُ بِتَوْبَةِ عَبْدِهِ مِـــنْ أحَدِكُمْ سَقَطَ عَلَى بَعِيْرِهِ وَقَدْ أضَلَّهُ فِي أرْضٍ فَلاَةٍ – متفق عليه**

**وَفِى رِوَايَةٍ لِمُسْلِمٍ :{ للهُ أشَدُّ فَرَحًا بِتَوْبَةِ عَبْدِهِ يَتُوْبُ اِلَيْهِ مِنْ أحَدِكُمْ كَانَ عَلَى رَاحِلَتِهِ بِأَرْضٍ فَلاَةٍ ، فَانْفَلَتَتْ مِنْهُ ، وَ عَلَيْهَـــا طَعَامُهُ وَ شَرَابُهُ فَأَيِسَ مِنْهَا ، فَأَتَي شَجَرَةً فَاضْطَجَعَ فِي ظَلِّهَا، وَقَدْ أيِسَ مِنْ رَاحِلَتِهِ ، فَبَيْنَمَا هُوَ كَذَلِكَ اِذَا هُوَ بِهَا ، قَائِمَةً عِنْدَهُ ، فَأَخَذَ بِخِطَامِهَا ثُمَّ قَالَ مِنْ شِدَّةِ الْفَرَحِ : اللَّهُمَّ أنْتَ عَبْدِيْ وَ أنَا رَبُّكَ ، أخْطَأَ مِنْ شِدَّةِ الْفَرَحِ }**

ஹதீஸ் 15

நபி (ஸல்) அவர்களின் பணியாளரான அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: தன்னுடைய அடியான் பாவமீட்சி தேடி தன் பக்கம் மீளும்பொழுது அது குறித்து அல்லாஹ் அதிக மகிழ்ச்சி உடையவனாக இருக்கிறான்., ஒரு பொட்டல் பூமியில் தனது ஒட்டகத்தைத் தவறவிட்டிருந்த உங்களில் ஒருவர், திடீரென அது கிடைக்கப் பெற்றதும் அடையும் மகிழ்சியை விட அதிகமாக! (மகிழ்ச்சி அடைகிறான். ஸஹீஹ் முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது:

நபி (ஸல்)அவர்களின் பணியாளரான அனஸ்(ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தன்னுடைய அடியான் பாவமீட்சி தேடி தன் பக்கம் மீளும்பொழுது அது பற்றி அல்லாஹ் அதிக அளவு மகிழ்ச்சி அடைபவனாக இருக்கிறான்., அது உங்களில் ஒருவர் (பின்வரும் சூழ்நிலையில்) அடையும் மகிழ்ச்சியை விட அதிகமாகும்., அவர் ஒருபொட்டல் பூமியில் தனது வாகனத்தில் பயணமாகிக் கொண்டி

ருந்தார். திடீரென அது அவரை விட்டும் காணாமல்போய்விட்டது! அவரது உணவும் பானமும் அதிலேதான் இருந்தன. இனி அந்தவாகனம் கிடைக்கப் போவதில்லை என அவர் நிராசை அடைந்தார். பிறகு ஒரு மரத்தருகே வந்து அதன் நிழலில் ஓய்வாகப்படுத்திருந்தார்., தன் வாகனம் கிடைக்கு மென்ற நம்பிக்கையே அவருக்கில்லை. இந்நிலையில் திடீரென அந்த வாகனத்தை அவர் காண்கிறார். அவர் முன்னால் அது நின்று கொண்டி ருக்கிறது! உடனே அதன் கடிவாளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கோடு கூறலானார்: யாஅல்லாஹ்! நீதான் என் அடிமை! நான் உன் எஜமானன் என்று! அதிக அளவு மகிழ்ச்சியினால் அவரது வார்த்தை தவறியது! (நூல்: முஸ்லிம்)

## தெளிவுரை- الشرح

பாவம் செய்த மனிதன் திருந்தி மனம் வருந்தி பாவமீட்சி தேடுவது குறித்து இறைவன் அடையும் மகிழ்ச்சியை ஓர் உவமை மூலம் அழகாக விளக்கியுள்ளார்கள் நபி(ஸல்) அவர்கள். அந்த உவமை இதுதான்: தண்ணீரோ புற்பூண்டுகளோ இல்லாத ஒருபொட்டல் பூமியில் ஒட்டகப் பயணம் மேற்கொண்ட மனிதன் அந்த ஒட்டகத்தைத் தொலைத்து விடுகிறான். அங்கும் இங்கும் எங்கும் தேடியும் கிடைக்கவில்லை. பதறிப்போய் விட்டான். என்ன செய்வது? எதுவும் அவனுக்குப் புலப்படவில்லை. அப்படியே அலைந்து திரிந்து களைத்து-மனம் நொந்து கடைசியில் ஒரு மரத்தடிக்கு வந்து அதன் நிழலில் படுத்துச்சிறிது கண்ணயர்ந்து விடுகிறான்!

- இனி நமக்கு வாழ்வேது! மரணமாக வேண்டியதுதான். தாகத்திற்குத் தண்ணீரோ உண்பதற்கு உணவோ எதுவுமில்லை! எல்லாம் அந்தப் பாழாய்ப்போன ஒட்டகத்தில்! அதுதான் தொலைந்துவிட்டதே! எங்கே போய்த் தேடுவது? எங்கே கிடைக்கப் போகிறது? - இவ்வாறு நிராசையின் உச்சகட்டத்தை அடைந்திருந்தான்.

ஏதோ அரவம் கேட்டு கண் விழித்தான். என்ன ஆச்சரியம்! அவனது ஒட்டகம் அங்கே நின்றுகொண்டிருந்தது! அவன் படுத்திருந்த மரத்தடியில் அதன் கடிவாளம் சிக்கிவிட்டிருந்தது!

திடீரென தன்முன்னால் அந்த ஒட்டகத்தைக் கண்டதும் திக்குமுக்காடிப் போனான் அவன்! அளவிலா ஆனந்தம் அவனுக்கு! அதன் யதார்த்த நிலையை எவராலும் கற்பனை செய்ய முடியாது! மரணத்திற்குப் பிறகு வாழ்வு கிடைத்தது போன்ற மட்டில்லாத மகிழ்ச்சி அது! அப்படியொரு சூழ்நிலை யாருக்கு ஏற்பட்டதோ அவர்தான் அதை முழுமையாக உணர முடியும்.

உடனே ஒட்டகத்தின் கடிவாளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்த வாறு செஷான்னான்: யா அல்லாஹ்! நீதான் என் அடிமை., நான் உன் எஜமானன்,.- ஒட்டகம் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லத்தான் நா உயர்த்தினான். யா அல்லாஹ் நீதான் நல்லுதவி செய்த எஜமானன் என்று புகழத்தான் நாடினான். ஆனால் மகிழ்ச்சிப் பெருக்கின் காரணத்தால் நா தடுமாறியது., வார்த்தை தவறியது!

பாவம் செஷ்ய்த மனிதன் பின்னர் மனம் திருந்தி நல்வழி திரும்புவது குறித்து அல்லாஹ் அந்தளவுக்கு மகிழ்ச்சி அடைகிறான் என்பதை எடுத்துக்காட்டுவதே நோக்கம். இவ்வாறு பாவமீட்சி தேடுமாறு இந்நபிமொழி ஆர்வமூட்டுகிறது. இறைஉவப்பைப் பெறுவதிலேயே மனிதனின் இம்மை - மறுமை நலன் அடங்கியுள்ளது.

இன்னொரு விஷயத்தையும் இங்கு புரிந்துகொள்ளவேண்டும். பாவமீட்சி தேடுவதை இறைவன் விரும்பு கிறான் எனில் அதற்குக் காரணம், நமது பாவமீட்சியும் நல்லமல்களும் அவனுக்குத் தேவை என்பதல்ல., மாறாக, இறைவன் பெருந்தகைமையாளன்., மனிதர்களைத் தண்டிக்க வேண்டும்- பழிவாங்க வேண்டும் என்று

அவன் துடித்துக் கொண்டிருக்கவில்லை. மனிதர்களை மன்னிக்கவே அவன் பெரிதும் விரும்புகிறான். அவர்களின் குற்றங்குறைகளைப் பொறுத்தருளுவதே அவனுக்கு மிகவும் பிரியமானது!

மேலும் மகிழ்ச்சித் தன்மை இறைவனுக்கு உண்டு என்பதையும் இந்நபிமொழி உறுதிப்படுத்துகிறது. இறைவன் மகிழ்ச்சி அடைகிறான்., கோபம் கொள்கிறான்., அன்பு வைக்கிறான்., வெறுக்கிறான்! ஆனால் அவை மனிதர்களுக்கு ஏற்படுவது போன்ற தன்மைகள் அல்ல! இறைவன் சகல நிலைகளிலும் தனித்தவன்., இணையற்றவன். குர்ஆன் குறிப்பிடுகிறது:

يقُوْلُ اللهُ تَعَالَى : لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ { سورة الشوري الآية: ١١}

(உலகின்) எந்தப் பொருளும் அவனுக்கு ஒப்பானதாய் இல்லை., அவன் அனைத்தையும் செவியுறுபவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான்" (42:11)

மேலேசொன்ன தன்மைகள் அவனது மகத்துவத்திற்கும் மாண்புக்கும் ஏற்றவகையில் அவனிடம் உள்ளன. இறைவனின் மகிழ்ச்சிக்குப் படைப் பினங்களின் மகிழ்ச்சி ஒப்பாகாது., படைப்பினங்களின் மகிழ்ச்சிக்கு இறைவனின் மகிழ்ச்சி ஒப்பானதல்ல.

மேலும் இந்த நபிமொழியிலிருந்து தெரியவருகிறது: ஒருமனிதன் இறைநிராகரிப்பு (குஃப்ர்) வார்த்தையை நா தவறி கூறிவிட்டால் அது குற்றமாகாது. தொலைந்துபோன ஒட்டகம் கிடைக்கப் பெற்ற இந்த மனிதன் நிராகரிப்பு வார்த்தையைத்தான் கூறினான். தன் இறைவனை நோக்கி, நீ எனது அடிமை., நான் உன் எஜமானன் என்று சொல்வது சந்தேகமின்றி குஃப்ர்தான்- இறைநிராகரிப்புதான்! ஆனால் நாவு தடுமாறியதே தவிர இதயமோ இறையைப் புகழவும் நன்றி செலுத்தவும்தான் நாடியது என்பதால் அந்த வார்த்தை மன்னிப்பைப் பெற்றது!

இதேபோன்றுதான் - ஒருவன் பிறிதொருவனைத் தவறுதலாகத் திட்டி விடுவதும் பேசிவிடுவதும்! வேண்டுமென்றே திட்டுமிட்டுப் பேசவில்லை என்றிருந்தால் அது குற்றத்திற்குரியதோ தண்டனைக்குரியதோ அல்ல! இதேபோன்று ஒருவன் வேண்டுமென்றில்லாமல் தவறுதலாக தன்மனைவியை தலாக் - மணவிலக்கு சொன்னால் அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை. நா தவறி வெளிப்படும் இதுபோன்ற வார்த்தைகளின் சட்டநிலை அபத்தமாகச் சொல்கிற சத்தியத்தைப் போன்றதாகும். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! என்று அபத்தமாக - வீணாகச் சொல்வதால் எதுவும் வினையமாக ஆகாது! குர்ஆன் கூறுகிறது:

قال الله تعالى: لاَ يُؤَآخِذُ كُمُ اللهُ بِاللغْوِ فِيْ أَيْمَانِكُمْ وَلَكِنْ يُؤَاخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ {سورة البقرة الآية: ٢٢٥}

(உள்நோக்கம் எதுவுமின்றி) தற்செயலாக நீங்கள் செய்யும் அபத்தமான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான். ஆனால் நீங்கள் உள்ளத்தால் நாடிச்செய்யும் சத்தியங்களுக்காக உங்களைக் குற்றம் பிடிப்பான்" (2 : 225)

ஆனால் இறைநிராகரப்பு (குஃப்ர்) வார்த்தையைப் பரிகாசத்திற்காகப் பேசுபவன் பாவியே! அவன் நிராகரிப்பாளனாகவே ஆகிவிடுகிறான். குர்ஆன் கூறுகிறது:

لقول الله سبحانه : وَلَئِنْ سَأَلْتَهُمْ لَيَقُوْلَنَّ اِنَّمَا كُنَّا نَخُوْضُ وَ نَلْعَبُ قَلْ أَبِاللهِ وَ آيَاتِهِ وَرَسُوْلِهِ كُنْتُمْ تَسْتَهْزِئُوْنَ لاَ تَعْتَذِرُوْا قَدْكَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ { سورة التوبة الآية: ٦٥}

(நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று) அவர்களிடம் நீர் கேட்பீராயின் நாங்கள் நகைச்சுவையாகவும் விளையாட்டாகவும்தான் பேசிக் கொண்டிருந்தோம் என்று கூறுவர். (நபியே) அவர்களிடம் நீர் கேளும்:

அல்லாஹ்வையும் அவனுடைய வசனங்களையும் அவனுடைய தூதரையும்தான் நீங்கள் பரிகாசம் செய்து கொண்டி ருக்க வேண்டுமா?- நீங்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்ட பின் நிராகரித்து விட்டீர்கள்!" (9:65)

இஸ்லாத்தின் அடிப்டைக் கொள்கை - கோட்பாடுகள் தொடர்பான வார்த்தைகளைப் பேசிப் பரிகாசம் செய்வது எந்த வகையிலும் கூடாது. பரிகாசம் செய்பவன் ஆழமான பொருள்கொண்டு - அர்த்தம் வைத்தே பேசுகிறான்., சிரித்து மகிழ்கிறான். எனவே நிராகரிப்பு வார்த்தை பேசி பரிகாசம் செய்பவன் பாவியே ஆவான்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தை மேற்கொண்டு மதீனா வந்தபொழுது அனஸ் (ரலி) அவர்கள் எட்டு வயது சுஷிறுவர். அவர்களை, அவர்களின் தாயார் உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் நபியவர்களிடம் அழைத்துவந்து: அல்லாஹ்வின் தூதரே! இதோ என் மகன் அனஸ். இவர் உங்களோடு இருந்து உங்களுக்குப் பணிவிடை செய்யட்டும். இவருக்கு தீன் - இறைமார்க்கம் போதியுங்கள்., நல்லொழுக்கம் புகட்டுங்கள் என்று சொல்லி ஒப்படைத்தார்கள்! அன்றிலிருந்து நபி(ஸல்) அவர்களுக்கு, அவர்கள் மரணம் அடையும் வரையில் பணிவிடை செய்யும் பெரும் பேறு பெற்றார்கள், அனஸ் (ரலி) அவர்கள்! நபி (ஸல்) அவர்களது தலைமையில் நடைபெற்ற எட்டுப் போர்களில் கலந்துகொண்டார்கள்!

இவர்களின் குறிப்புப் பெயர் அபூ ஹம்ஸா. மதீனாவில் இவர்களது கோத்திரம் புகழ்பெற்ற கஸ்ரஜ் கோத்திரமாகும். பனூ நஜ்ஜார் கிளையைச் சோந்த இவர்களுடைய மாமன்மார்கள் நபி(ஸல்)அவர்களுக்குத் தாய்வழி உறவினர் களாவர். உமர் (ரலி)அவர்களது ஆட்சிக் காலத்தில் பஸராவில் குடியேறிய அனஸ் (ரலி) அவர்கள், ஹிஜ்ரி 93 ஆம் ஆண்டு அங்கேயே மரணம் அடைந்தார்கள். அப்பொழுது அவர்களது வயது 103 என்றும் 93 என்றும் இரு கருத்துகள் உள்ளன. ஸஹாபாக்களில் இறுதியாக மரணம் அடைந்தவர்கள் இவர்களே! அன்னாரிடமிருந்து 1286 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1)அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எனும் வாசகத்தைப் பின்னணியாகக் கொண்டது. | ١) لله:جواب قسم مقدر: والله لله أشد فرحا |
| 2) அதிக மகிழ்ச்சி உடையவனாக இருக்கிறான். | ٢) أفرح : أشد فرحا |
| 3) திடீரென தனது ஒட்டகம் கிடைக்கப் பெற்றார். | ٣) سقط علي بعيره: عثر عليه وصادفه من غير قصد |
| 4) அதனைத் தவறவிட்டிருந்தார். | ٤) اضله: ضيعه |
| 5) புற்பூண்டுகளோ தண்ணீரோ இல்லாத விசாலமான பூமி. | ٥) فلاة : أرض واسعة لانبات بها ولا ماء |
| 6) வாகனம்: மனிதன் பயணத்திற்குப் பயன் படுத்தக்கூடியது. ஓட்டகம் போன்ற எல்லாவும் இதில் அடங்கும். | ٦) الراحلة : ما يركبه الانسان من ناقة و غيرها |
| 7) கடிவாளம். | ٧) الخطام : الحزام |

## கேள்விகள் - الاسئلة

1) மனிதன் பாவமன்னிப்பு தேடும்பொழுது அல்லாஹ் அடையும் மகிழ்ச்சிக்கு நபி (ஸல்) அவர்கள் கூறிய உவமை என்ன?
2) ஒருமனிதன் கு∴ப்ர் - இறைநிராகரிப்பு வார்த்தை நா தவறி கூறிவிட்டால் அதன் சட்டநிலை என்ன என்பதை விளக்கவும்.
3) மகிழ்ச்சி, கோபம், அன்பு, வெறுப்பு ஆகிய பண்புகள் இறைவனுக்கும் உள்ளனவா? விளக்கம் என்ன?
4) இந்த நபிமொழியிலிருந்து நீ பெறும் படிப்பினைகளைப் பட்டியலிடவும்.
5) அறிவிப்பாளரைக் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## சூரியன் மேற்கிலிருந்து உதித்தால்!

١٦ – وَعَنْ أَبِى مُوْسَى عَبْدِ اللهِ بْنِ قَيْس الأَشْعَرِيِّ ﷺ عَنِ النَّبِي ﷺ قَالَ: {إِنَّ اللهَ تَعَالَى يَبْسُطُ يَدَهُ بِاللَّيْلِ لِيَتُوْبَ مُسِيْءُ النَّهَارِ، وَ يَبْسُطُ يَدَهُ بِالنَّهَارِ لِيَتُوْبَ مُسِيْءُ الليل حَتَّي تطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا } رواه مسلم

١٧ – وَ عَنْ أَبِىْ هُرَيْرَة ﷺ قَالَ: قَالَ رَسُلُ اللهِ ﷺ : { مَنْ تَابَ قَبْلَ أَنْ تَطلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا تَابَ اللهُ عَلَيْهِ } رواه مسلم

١٨ – وَ عَنْ أَبِى عَبْدِ الرَّحْمنِ عَبدِ اللهِ بْنِ عُمَرَ بْنِ الخَطَّابِ ﷺ عَنِ النَّبِيْ ﷺ قَالَ : {إِنَّ اللهَ عَزَّ وَجَلَّ يَقْبَلُ تَوْبَةَ العَبْدِ مَا لَــمْ يُغَرْغِرْ– رواه الترمذي وقال: حديث حسن }

ஹதீஸ் 16 - 17 -18

அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ், பகலில் பாவம் செய்த மனிதன் பாவமீட்சி தேடட்டும் என்பதற்காக இரவில் தனது கையை விரித்து வைக்கிறான். இரவில் பாவம் செய்தவன் பாவமீட்சி தேடட்டும் என்று பகலில் கையை விரித்து வைக்கிறான். (இது) சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும் வரையில் (நடந்துகொண்டிருக்கும்)"(முஸ்லிம்)

அபூ ஹு ரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சூரியன் மேற்கில் இருந்து உதயமாவதற்கு முன் (அதாவது யுக முடிவு நாள் வருவதற்கு முன்) யார் பாவமீட்சி தேடுகிறரோ அவரை அல்லாஹ் மன்னித்துவிடுகிறான்" (நூல்: முஸ்லிம்)

உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: நிச்சமாக அல்லாஹ் மனிதனின் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறான்., அம்மனிதனின் உயிர் ஊசலாடும் கட்டத்தை அடையாதிருக்கும் வரையில்!" (நூல்: திர்மிதி)

## தெளிவுரை - الشرح

இந்த மூன்று நபிமொழிகளின் கருத்து இதுதான்: பாவம் செய்த மனிதனை இறைவன் உடனுக்குடன் தண்டிப்பதில்லை. பாவமன்னிப்புத் தேடுவதற்கு அவனுக்கு அவகாசம் அளிக்கிறான். மனிதன் தாமதமாகப் பாவமன்னிப்புத் தேடினாலும் அதை ஏற்றுக் கொள்கிறான்.

ஒருவன் பகலில் பாவம் செய்துவிட்டு இரவில்தான் -தாமதமாகத்தான் மன்னிப்புக் கோருகிறான் என்றாலும் அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்கிறான். இதேபோன்று இரவில் பாவம் செய்த மனிதன் உடனே பாவமீட்சி தேடாமல் விடிந்த பிறகுதான் - பகலில்தான் பாவமன்னிப்புத் தேடுகிறான் என்றாலும் அல்லாஹ் அதனை ஏற்று அவனுக்கு மன்னிப்பு வழங்குகிறான். தன் மீது நம்பிக்கை கொண்ட மனிதன் திருந்தவேண்டும்., நல்வழியில் திரும்ப வேண்டும் என்பதுதான் இறைவனின் விருப்பம். எனவேதான் மனிதனது தாமிதமான பாவமீட்சியையும் ஏற்றுக் கருணை பொழிகிறான்.

ஆனால் அதற்கும் ஓர் எல்லை உண்டு. அதுதான் சூரியன் மேற்கில் இருந்து உதயமாவது. அப்படி சூரியன் மேற்கில் இருந்து உதயமாகி விட்டால் பாவமன்னிப்பு வழங்குவது முடிவடைந்துவிடும்.

சூரியன் எப்படி மேற்கில் உதயமாகும்? கிழக்கில் உதயமாவது தானே உலகின் நியதி என்று இங்கு ஒருகேள்வி எழலாம்!

ஆம்! இறைவன் சூரியனைப் படைத்த காலம் முதல் அது கிழக்கில் இருந்துதான் உதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் யுக முடிவுநாள் நெருங்கும்பொழுது அது மேற்கில் உதித்து வரும்!

அதாவது, பூமியின் வேகச் சுழற்சி படிப்படியாகக் குறைந்து வரும்பொழுது அது தலைகீழாகச் சுழலத் தொடங்கும். கிழக்கு நோக்கிச் சுற்றிக்கொண்டிருக்கும் பூமி, மேற்கு நோக்கிச் சுற்றத்தொடங்கும். அப்பொழுது சூரியன் மேற்கிலிருந்து உதயமாவதாகத் தோன்றும்!

கோளங்களின் சுழற்சியில் இப்படிப்பட்ட மாற்றத்தை மக்கள் காணும் பொழுது எல்லோரும் ஈமான் - இறை நம்பிக்கை கொள்வார்கள். யூதர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட எல்லா நிராகரிப்பாளர்களின் உள்ளங்களிலும் திடீர் விசுவாசும் பிறக்கும். ஆனால் யார் யாரெல்லாம் அதற்கு முன்பு நம்பிக்கை கொள்ளவில்லையோ அவர்களின் ஈமான் அவர்களுக்குப் பயனளிக்காது!

சூரியன் மேற்கில் இருந்து உதயமாவதைக் கண்டதும் எல்லோரும் அஞ்சி நடுங்குவார்கள்! ஐயோ! நாம் பாவங்களிலேயே மூழ்கிக்கிடந்து விட்டோமே! இதோ! கேள்வி - கணக்கு கேட்கப்படும் மறுமைநாள் உண்மையாகிவிட்டதே! என்று பதறித்துடித்து அவசர அவசரமாக பாவ மீட்சி தேடுவார்கள். ஆனால் மறுமைக்கான அடையாளங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டால் ஈமான் கொள்வதோ பாவமீட்சி தேடுவதோ எவ்விதப் பயனும் அளிக்காது.

இதேபோன்றுதான் மனிதன் நன்கு ஆரோக்கியமாக வாழும்போதே பாவமீட்சி தேடி இறைவனின் மன்னிப்பைப் பெற்றிட வேண்டும். காலம் முழுவதும் தீமைகளைச் செய்து கொண்டிருந்துவிட்டு - இறைமறையின் எச்சரிக்கைகளையும் இறைத்தூதரின் அறிவுரைகளையும் அலட்சியப் படுத்திக் கொண்டே இருந்து விட்டு உயிர் தொண்டையை அடைத்து நிற்கும் மரண வேளையில் பாவமீட்சி தேடினால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்தவிவரம் குர்ஆனிலும் நேரடியாகக் குறிப்பிடப் பட்டுள்ளது:

எவர்கள் தீய செயல்கள் புரிந்த வண்ணம் இருந்து, அவர்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும்போது இப்பொழுது நான் பாவமீட்சி தேடுகிறேன் என்று சொல்கிறாரோ அத்தகையவர்களுக்குப் பாவமன்னிப்பு கிடையாது" (4 : 18)

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1)தனது கையை விரித்து வைக்கிறான்: கை அல்லாஹ்வுக்கு உண்டு. ஆனால் அதன் உள்ளமையை -விரித்து வைப்பதெப் படி என்பதை அவன்தான் அறிவான். கல்வியாளர் சிலரின் கருத்து: கையை விரித்து வைப்தென்பது, தனது அருளை விசாலம் | ١) يبسط يده: ان لله يدا هو أعلم بحقيقتها و كيفيتها ويري بعض أهل العلم أن هـــذا كناية عن بسط رحمته و سعتها و فتحه باب |

| | |
|---|---|
| ஆக்குவதையும் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதன் வாசலைத் திறந்து வைப்பதையும் சுட்டுவதாவதாகும். ஆனால் முந்தைய கருத்தே சரியானது! | التوبة لعباده والاول أسلم |
| 2) அவனது பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். | ٢) تاب الله عليه: قبل توبته |

## கேள்விகள் ~ الاسئلة

1) மனிதனின் பாவமன்னிப்புக் கோரிக்கையை அல்லாஹ் ஏற்றுக்கொள்வதற்குரிய கால அவகாசம் என்ன? அதில் எத்தனை வகைகள் உள்ளன?
2) சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும் என்பதன் விளக்கம் என்ன?
3) இந்த நபிமொழிகளின் அறிவிப்பாளர்கள் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## காலுறை மீது மஸஹ் செய்வதன் சட்டம்

**١٩ – وَعَنْ زِرِّ بْنِ حُبَيْسٍ قَالَ : أَتَيْتُ صَفْوَانَ بْنَ عَسَّالٍ ﷺ أَسْأَلُهُ عَنِ الْمَسَحِ عَلَى الْخُفَّيْنِ فَقَالَ: اِنَّ الْمَلاَئِكَةَ تَضَعُ أَجْنحَتَهَا لِطَالِبِ الْعِلْمِ رِضًي بِمَا يَطْلُبُ ، فَقُلْتُ : اِنَّهُ قَدْ حَكَّ فِيْ صَدْرِي الْمَسَحُ عَلَي الْخُفَّيْنِ بَعْدَ الْغَائِطِ وَالْبَوْلِ ، وَكُنْتَ امْــرَءً مِــنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ فَجِئتُ أَسْأَلُكَ: هَلْ سَمِعْتَهُ يَذْكُرُ فِيْ ذَلِكَ شَيْئًا قَالَ : نَعَمْ، كَانَ يَأْمُرُنَا أذَا كُنَّا سَفْرًا – أَوْ مُسَافِرِيْنَ – أَنْ لاَ نَنْزِعَ خِفَافَنَا ثَلاَثَةَ اَيَّامٍ وَ لَيَالِيْهِنَّ أَلاَّ مِنْ جَنَابَةٍ، لَكِنْ مِنْ غَائِطٍ وَ بَوْلٍ وَنَوْمٍ فَقُلْتُ: هَلْ سَمِعْتَ فِي الْهَوَي شَيْئًا ؟ قَالَ: نَعَمْ كُنَّــا مَعَ رَسُوْلِ اللهِ ﷺ فِيْ سَفَرٍ ، فَبَيْنَا نَحْنُ عِنْدَهُ اِذْ نَادَاهُ أَعْرَابِيٌّ بِصَوْتٍ لَهُ جَهْوَرِيٍّ : يَا مُحَمَّدُ، فَأَجَابَهُ رَسُوْلُ اللهِ ﷺ نَحْوًا مِــنْ صَوْتِهِ : هَاؤُمْ ، فَقُلْتُ لَهُ: وَيْحَكَ اغْضُضْ مِنْ صَوْتِكَ فَاِنَّكَ عِنْدَ النَّبِيِّ ﷺ ، وَقَدْ نُهِيْتَ عَنْ هَذَا! فَقَالَ : وَ اللهِ لاَ أَغْضُضْ قَالَ الاعْرَابِيُّ : الْمَرْءُ يُحِبُّ الْقَوْمَ وَ لَمَّا يَلْحَقْ بِهِمْ؟ قَالَ النَبِيُّ ﷺ : الْمَرْءُمَعَ مَنْ أَحَبَّ يَوْمَ الْقِيَامَةِ ) فَمَا زَالَ يُحَدِّثُنَا حَتَّي ذَكَرَ بَابًا مِنَ الْمَغْرِبِ مَسِيْرَةُ عَرْضِهِ أَوْ يَسِيْرُ الرَّاكِبُ فِيْ عَرْضِهِ أَرْبَعِيْنَ عَامًا (قَالَ سُفْيَانُ – أَحَدُ الرُّوَاةِ – قِبَلَ الشَّامِ) خَلَقَهُ اللهُ تَعَــالَي يَوْمَ خَلَقَ السَّمَوَاتِ وَ الاَرْضَ مَفْتُوْحًا لِلتَّوْبَةِ لاَ يُغْلَقُ حَتَّي تَطْلُعَ الشَّمْسُ مِنْهُ} رواه الترمذي وغيره وقال: حديث حسن صحيح**

ஹதீஸ் 19

ஸிர்ரு பின் ஹுபைஸ் (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: காலுறைகளின் மீது மஸஹ் செய்வது பற்றி கேட்பதற்காக நான் ஸஃப்வான் பின் அஸ்ஸால் (ரலி) அவர்களிடம் வந்தேன்.

அப்பொழுது அவர்கள், ஸிர்ரே! என்ன விஷயமாக வந்துள்ளீர்? என வினவினார்கள்''

கல்வியைத் தேடித்தான் '' என்றேன்.

கல்வியைத் தேடுபவருக்காக - அவரது தேடல் குறித்து திருப்தி அடைந்தவாறு மலக்குகள் தங்கள் இறக்கைகளைத் தாழ்த்துகிறார்கள்'' என்றார்கள்.

நாள் சொன்னேன்: மலம், சிறுநீர் கழித்த பிறகு (உளு செய்யும்போது) காலுறைகளின் மீது மஸஹ் செய்வதென்பது என் மனத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்திவிட்டது. நீங்கள் நபி (ஸல்) அவர்களின் தோழர்

களில் ஒருவர்.,எனவேதான் உங்களிடம் விளக்கம் கேட்கலாம் என வந்தேன். நபியவர்கள் இது விஷயத்தில் ஏதேனும் சொல்ல நீங்கள் கேட்டிருக்கிறீர்களா''?

அவர்கள் சொன்னார்கள்: ஆம்! நாங்கள் பயணம் மேற்கொண்டால் மலஜலம் கழித்தாலோ தூங்கினாலோ (உளூவின்பொழுது) எங்கள் காலுறைகளை மூன்று பகல் - இரவுகளுக்குக் கழற்ற வேண்டாமென நபி (ஸல்) அவர்கள் எங்களை ஏவுவார்கள் - பெருந்துடக்கு நீங்கலாக!

அன்பு கொள்வது பற்றி நபி(ஸல்) அவர்கள் ஏதாவது கூறக் கேட்டிருக்கிறீர்களா? ''

ஆம்! ஒருதடவை நாங்கள் நபி(ஸல்)அவர்களுடன் பயணம் புறப்பட்டிருந்தோம். நாங்கள் அவர்களுடன் இருந்து கொண்டிருந்தபோது ஒரு நாட்டுப்புற மனிதர்,அவருக்கே உரிய உரத்த குரலில் நபி(ஸல்) அவர்களை நோக்கி - ஏ முஹம்மத்! என அழைத்தார். நபி(ஸல்) அவர்களும் - அவரது குரலுக்கு ஈடாக குரலுயர்த்தி பெற்றுக்கொள்வீராக'' என்று அவருக்குப் பதில் அளித்தார்கள்.

நான் சொன்னேன்: நாசமாகப் போவாய்! குரலைத் தாழ்த்து! நீ நபியவர்களின் சமூகத்தில் இருக்கிறாய்! இப்படிக் குரலுயர்த்துவது உனக்குத் தடை செய்யப்பட்டுள்ளது!''என்று. அதற்கு அவர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் குரலைத் தாழ்த்தமாட்டேன்.

அந்த நாட்டுப்புறத்துக்காரர் கேட்டார்: ஒரு மனிதன் தன் சமூகத்தினரை நேசிக்கிறான். ஆனால் (அமல் விஷயத்தில்) அவர்களைச் சென்றடையாமல் இருக்கிறான்?''

அதற்கு நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ஒரு மனிதன் யாரை நேசித்தானோ அவர்களுடனேதான் மறுமைநாளில் இருப்பான் - இவ்வாறாகத் தொடர்ந்து பல விஷயங்களை அவர்கள் எங்களுக்கு அறிவித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் மேற்குத் திசையில் ஒரு வாசல் படைக்கப்பட்டிருப்பது பற்றி எடுத்துரைத் தார்கள். அது எத்துணை விசாலமானது என்றால், அதன் அகலத்தின் நடைபயணம் (அல்லது ஒருபயணி அதன் அகல வாட்டில்) நாற்பது அல்லது எழுபது ஆண்டுகள் நடந்து செல்லும் அளவு இருக்கும். - (அறிவிப் பாளர்களில் ஒருவரான ஸு ஃப்யான் (இப்னு உயைனா) என்பார் கூறுகிறார்: அது ஷாம் தேசத்தை நோக்கி யதாகும்")

வானங்கள்- பூமியைப் படைத்த காலத்திலேயே அந்தவாசலையும் அல்லாஹ் படைத்துவிட்டான். அந்த வாசல் பாவமீட்சிக்காகத் திறந்தே இருக்கும். சூரியன் மேற்கில் உதிக்கும் வரையில் அது மூடப்படமாட்டாது'' - இதனை இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேலும் இது, ஹஸன் - ஸஹீஹ் என்றும் சொல்லியுள்ளார்கள்.

## தெளிவுரை~الشرح

பாவமீட்சி தேடுவதற்கான காலம் எப்பொழுது முடிவடையும் என்பதை விளக்கும் நபிமொழிகளில் இதுவும் ஒன்றாகும். இதற்காகவே இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இதனை இங்கு கொண்டுவந்துள்ளார்கள்.

இந்த மாழியிலிருந்து இன்னும் பலவிஷயங்கள் தெரிய வருகின்றன. முதலாவதாக, கல்வியின் சிறப்பு. கல்வி கற்கும் மாணவர்களுக்காக வானவர்கள் இறக்கையைத் தாழ்த்துகிறார்கள். அதாவது, அவரது முயற்சிக்கு உதவியும் ஒத்துழைப்பும் பாதுகாப்பும் அளிக்கிறார்கள்.

இங்கு இல்மு - கல்வி எனும் வார்த்தை நபி (ஸல்)அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தின் கல்வியைச் சுட்டுகிறது. அத்துடன் அதற்கு வலிவும் பொலிவும் சேர்க்கிற அனைத்துக் கல்விகளுக்கும் அவற்றின் உபகர ணங்களுக்கும் இந்தச் சிறப்பு உண்டு.

ஸிர்ரு இப்னு ஹு பைஸ் (ரஹ்) என்பார் நபித்தோழர்களுக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்! அவரது உள்ளத்தில் ஓர் ஐயம் எழுந்தது. காலுறைகளை அணிந்திருப்பவர் உளூ செய்யும்பொழுது அவற்றின் மீது மஸஹ் செய்வது (ஈரக்கையால் தடவுவது) கூடுமா? குர்ஆனில் - இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தொழுகைக்காகக்ஷ் கெ்ஷல்லும் பொழுது உங்கள் முகங்களையும் முழங்கைகள் வரை உங்கள் கைகளையும் கழுவுங்கள். மேலும் உங்கள் தலைகளை ஈரக்கையால் தடவுங்கள். மேலும் உங்கள் கால்களைக் கனுக் கால்கள் வரை கழுவுங்கள்'' (5 : 6)என்று இறைவன் கட்டளையிட்டபடி பாதங்களைக் கழுவ வேண்டியதில் லையா? என்பதே அந்த ஐயம்!

இதற்கு பிரபல நபித்தோழர் ஸஃப்வான் (ரலி) அவர்கள் விளக்கம் அளித்தார்கள். இதிலிருந்து - காலுறை மீது மஸஹ் செய்வதுதான் கூஷிறந்தது என்பது தெரியவருகிறது!

புகாரியிலும் முஸ்லிமிலும் இடம் பெற்றுள்ள இன்னொரு நிகழ்ச்சியும் இதற்கு ஆதாரம் சேர்க்கிறது. முஃகீரா பின் ஷு அபா (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஒருதடவை நபி (ஸல்) அவர்களுடன் பயணம் சென்றிருந்தேன். நபியவர்கள் உளூ செய்தார்கள். அப்பொழுது நான், அவர்களின் காலுறைளைக் கழற்றுவதற் காகக் குனிந்தேன். நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

فقالَ : دَعْهُمَا فَانِّي أَدْخَلْتُهُمَا طَاهِرَتَيْنِ فَمَسَحَ عَلَيْهِمَا – أخرجه مسلم

அவற்றை விட்டுவிடும். நான் அவற்றைக்ஷ் சுத்தமான நிலையிலேயே மாட்டியுள்ளேன்'' - பிறகு நபியவர்கள் அவற்றின்மீது மஸஹ் கெ்ஷய்தார்கள்,. - ஆனால் காலுறைகளின் மீது மஸஹ் கெ்ஷய்யலாம் என்பதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன.

1) உளூ செய்துகொண்டு காலுறைகளை அணிந்திருக்க வேண்டும். மேலேசொன்ன - முஃகீரா (ரலி) அவர்களது அறிவிப்பில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

- எனவே தயம்மும் செய்துகொண்டு காலுறைகள் அணிந்திருந்தால் பிறகு உளூ செய்யும்பொழுது அவற்றின் மீது மஸஹ் செய்வது கூடாது. ஏனெனில் தயம்மும் என்பது உளுவுக்கான மாற்று ஏற்பாடுதான்! அத்துடன் அது முகத்திலும் கைகளிலும் மட்டும் மேற்கொள்ளும் சுத்தமே ஆகும்!

2) சிறு துடக்கை நீக்குவதற்கான உளூவில் மட்டுமே மஸஹ்! பெருந்துடக்கை நீக்குவதற்கான குளிப்பில் மஸஹ் செய்வது போதுமாகாது! **பெருந்துடக்கு நீங்கலாக** என இந்நபிமொழியில் வந்துள்ள வார்த்தை இதனைத் தெளிவுபடுத்துகிறது.

ஆனால் காயத்திற்காக ஓர் உறுப்பில் கட்டுப்போடப்பட்டு அது அவிழக் கூடாத நிலையில் இருந்தால் குளிப் பின்போது அதன் மீது மஸஹ் செய்யலாம். தலை மஸஹ் குளிப்பில் இல்லை., அத்துடன்- பெருந்துடக்கை நீக்கு தவதற்கான சுத்தம் பெரிய அளவிலானதாக உள்ளது. எனவே அதில் காலுறைகளைக் கழற்றிப் பாதங் களைக் கழுவுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது! இவ்வாறாக கியாஸ் எனும் ஒப்பீட்டாய்வும் கடமையான குளிப் பில் காலுறைகளின் மீது மஸஹ் இல்லை என்பதையே வலியுறுத்துகிறது!

3) நபி (ஸல்) அவர்கள் வரையறை செய்த காலத்திற்குள் மஸஹ் செய்தல் இருக்க வேண்டும். அலீ (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்: ஊரில் தங்கியிருப்பவருக்கு ஒரு பகல் ஓர் இரவு என்றும் பயணிக்கு மூன்று பகல்கள் என்றும் (காலுறையின் மீது மஸஹ் செய்வதற்கு) நபி (ஸல்) அவர்கள் கால நிர்ணயம் செய்தார் கள்" (நூல்: முஸ்லிம்)

- நிர்ணய காலத்திற்குப் பிறகு உளூ கெ்ஷய்யும்பொழுது பாதங்களைக் கழுவியாக வேண்டும். மேலும் மஸஹ் அனுமதிப்பட்ட காலத்தில்கூட இடையில் எந்தச் சூழ்நிலையிலும் காலுறைகளைக் கழற்றாமல் இருக்க

வேண்டும். அப்படிக் கழற்றியாக வேண்டியது வந்தால் அத்துடன் அனுமதி காலம் முடிவடைந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இங்கு இன்னொன்றையும் தெரிந்து கொள்ளவேண்டும். நிர்ணய காலம் முடிந்த நேரத்தில் நீங்கள் உளூவுடன் இருந்தால் நீங்கள் அதனுடனேயே நீடிக்கலாம். பிறகு சுத்தம் நீங்குகிறபோதுதான் மஸஹ்க்கான அனுமதி முடிவுக்குவரும். பிறகு செய்யும் உளூவில் பாதங்களைக் கழுவி நீங்கள் காலுறைகளைஅணிந்தால் அதிலிருந்து புதிய கால அவகாசும் தொடங்கும்.

## அந்த நாட்டுப்புறத்தாரின் கேள்வி!

விளக்கம் கேட்டுவந்த நாட்டுப்புறத்தார் நபி (ஸல்) அவர்களைக் குரலுயர்த்தி அழைத்தபொழுது-அப்படி அழைப்பது கூடாது., நபியவர்களின் சமூகத்தில் குரலுயத்திப் பேசுவதே தடை என்று அவருக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. இது பின்வரும் இறைவசுனத்தின் கட்டளையாகும்:

والله عز وجل يقول: يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا لاَ تَرْفَعُوْا أَصْوَاتَكُمْ فَوْقَ الصَّوْتِ النَّبِيِّ وّ لاَ تَجْهَرُوْا لَهُ بِالْقَوْلِ كَجَهْرِ بَعْضِكُمْ لِبَعْضٍ أَنْ تَحْبَطَ أَعْمَالَكُمْ وَ أَنتُمْ لاَ تَشْعُرُوْنَ ( الحجرات الآية : ٢ )

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களது குரலை நபியின் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள்! மேலும் உங்களில் ஒருவர் மற்றவரிடம் குரலுயர்த்திப் பேசுவதுபோல் நபியிடம் உயர்ந்த குரலில் பேசாதீர்கள். நீங்கள் செய்த நற்செயல்கள் அனைத்தும் - நீங்கள் அறியாத நிலையிலேயே வீணாகிப் போய்விட வேண்டாம்'' (49: 3)

- ஆனாலும் நாட்டுப்புற மக்கள் ஒழுங்குமுறைகள் அறியாதவர்கள். ஏனெனில் அவர்கள் நகரத்து மக்களை விட்டும் தூரமானவர்கள். நற்கல்வி யும் நல்ல பழக்கவழக்கங்களும் கிடைக்கப் பெறாதவர்கள்! அதனால்தான் அவர் நபியவர்களைக் குரலுயர்த்தி அழைத்தார். குரலைத் தாழ்த்தமாட்டேன் என்றும் சொன்னார்.

அந்த மனிதருக்கு அவரைப் போலவே குரலுயர்த்திப் பதிலளித்து, அவரது செயல் விரும்பத் தக்கதல்ல என்று உணர்த்தினார்கள், நபியவர்கள். இந்தப் பாணி நயமானது. எவர் மனத்தையும் புண்படுத்தாதது. ஏனெனில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனைவரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ளும் நற்குணம் கொண்டவர்கள். அவரவரது அறிவின் கொள்ளளவிற்கு ஏற்ப அனைவருக்கும் மரியாதை கொடுப்பவர்கள்!

இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது, அந்த நாட்டுப் புறத்து மனிதர் கேட்ட கேள்வியே! அது மிக முக்கியமானது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் அதனினும் முக்கியமானது. அதனை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.

<u>ஒருமனிதன் யாரை நேசித்தானோ அவர்களுடனேயே மறுமை நாளில் இருப்பான்''</u>

ஆகா! எத்துணை மகத்தான அருட்கொடை! உண்மையான அன்புக்குக் கிடைத்த பலன் எத்துணை சிறந்தது?

மற்றொரு தடவை அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசித்த மனிதரை நோக்கி நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: நிச்சயமாக யாரை நீர் நேசித்தீரோ அவர்களுடனேயே இருப்பீர்''

இதனை அறிவித்த அனஸ்(ரலி) அவர்கள் சொன்னார்கள்: நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் அபூபக்ர்,உமர் (ரலி - அன்ஹு ம்) ஆகியோரையும் நேசிக்கிறேன். மறுமை நாளில் அவர்களுடன் இருப்பதையே விரும்புகிறேன்" (நூல்: புகாரி, முஸ்லிம்)

இவ்வாறே நாமும் அல்லாஹ்வையும் நபி (ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் குறிப்பாக நேர்வழி பெற்ற கலீஃபாக்களையும் நேசிப்போம். அதற்குப் பின்னர் வாழ்ந்த தீனின் - இறைமார்க்கத்தின்

முன்னோடிகளையும் இமாம்களையும் நேசிப்போம். அவர்களின் மீதான அன்பை, நம் உள்ளத்தில் நிலைப் படுத்திட உறுதியேற்போம். அதற்கு அல்லாஹ்வைச் சாட்சியாக்குவோம்!

தன் சமுதாயத்தின்மீது உண்மையான அன்பு செலுத்தும் ஒருமுஸ்லிம் நாளை மறுமைநாளில் அவர் களுடனேயே எழுப்பப்படுவார்., அனைவரும் நபி(ஸல்) அவர்களின் தடாகத்தில் தண்ணீர் அருந்தும் பேறு பெறு வார்கள் என்பது எத்துணை மகத்தான நற்செய்தி!

அதே நேரத்தில் அந்த முஸ்லிம் இஸ்லாத்தின் எதிரிகளை வெறுத்திட வேண்டும். அது அவர் மீதான கடமை என்பதையும் மறந்திடக் கூடாது. அவர்கள் இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் பகைவர்கள். தவ்ஹீத் - ஏகத்துவக் கொள்கைக்கும் இறைத்தூதரின் ஸு ன்னத்- நடைமுறைகளுக்கும் எதிராகச் செயல்படுபவர்கள் எனத் தெரிந்தபிறகும் ஒரு முஸ்லிம் அவர்களுடன் நட்போ நேசமோ வைத்துக்கொள்ளக் கூடாது! இறைவன் கூறுகிறான்:

قال تعالي: يَا أَيُّهَا الَّذِيْن َآمَنُوْا لاَ تَتَّخِذُوْا عَدُوِّيْ وَّ عَدُوَّ كُمْ اَوْلِيَاء (سورة الممتحنة الآية:)

இறைநம்பிக்கை கொண்டவர்களே! எனக்கும் உங்களுக்கும் பகைவர்களாய் இருப்பவர்களை நண்பர் களாக்கிக் கொள்ளாதீர்கள்'' (குர்ஆன் 60: 1)

ஆக, ஒருபொதுவான சட்ட நியதியை இந்நபிமொழி நமக்கு வழங்குகிறது: ஒரு மனிதன் யாரை நேசித் தானோ அவர்களுடனேயே இருப்பான்,, நல்லவர்களை நேசித்தால் நல்லவர்களுடன் இருப்பான்., தீயவர்களை நேசித்தால் அத்தீயவர்களுடன்தான் இருப்பான்!

### அறிப்பாளர் அறிமுகம்

## ஸிர்ரு பின் ஹு பைஸ் (ரஹ்)

ஸிர்ரு பின் ஹு பைஸ் அவர்கள் தாபிஈன் (எனும் நபித்தோழர்களை அடுத்த) தலைமுறையைச் சேஷிர்ந்தவர். இவர்கள் அறியாமைக் காலத்தையும் கண்டுள்ளார்கள். ஸஃப்வான் பின் அஸ்ஸால் (ரலி) அவர்கள் நீங்கலாக உமர் (ரலி) அவர்கள் மற்றும் அலீ (ரலி)அவர்கள் ஆகியோரிடமும் ஹதீஸ்களைச் செவியேற்றுள்ளார்கள். மேலும் புகழ்பெற்ற நபித்தோழர்களாகிய - உபை பின் கஅப், இப்னு மஸ்வூத், அப்பாஸ், அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) போன்றவர்களிடம் இருந்தும் ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். 122 வயது வரை வாழ்ந்த இவர்கள் ஹஜ்ஜாஜ் பின் யூசுப் காலத்தில் ஜமாஜிம் யுத்தத்தில் மரணம் அடைந்தார்கள்.

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) எது விஷயமாக வந்துள்ளீர்?: உம்மை இங்கு வரச் செய்த நோக்கம் என்ன? | ١) ما جاء بك : ما حملك علي المجيء |

| | |
|---|---|
| 2) கல்வியைத் தேடித்தான் | ٢) ابتغاء العلم : من أجل طلب العلم |
| 3) தங்கள் இறக்கைகளைத் தாழ்த்துகிறார்கள்: அவருக்கு உதவி செய்தல், அவரது முயற்சியை எளிதாக்குதல் என்பதே கருத்து | ٣) تضع أجنحتها : مجاز عن معونته و تيسير سعيه |
| 4) என் மனத்தில் நெருடல் ஏற்பட்டு விட்டது: எனக்கு சந்தேகம் உள்ளது. | ٤) حكَّ في صدري: حصل عندي شك |
| 5)அல்ஃகாயித்: அசல் பொருள்: பூமியில் தாழ்வான ஓர் இடம். மலத்திற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டது, தாழ்வான இடம் சென்று மலம் கழிப்பதன் அடிப்படையில்! | ٥) الغائط : في أصل اللغة المكان المنخفض من الارض وأطلق علي ما يخرج من دبر الانسان للمجاورة |
| 6) பயணிகள் | ٦) سفرا : جمع سافر، مثل صحب جمع صاحب |
| 7)பயணிகள் என்பதற்கு பயன் படுத்தப்பட்ட வார்த்தை எது என்று அறிவிப்பாளருக்கு ஏற்பட்ட ஐயத்தை இது குறிக்கிறது. | ٧) أو : تدل علي الشك من الراوي هل قال سفر أو مسافرين |
| 8) காலுறை: மனிதன் தனது பாதத்தில், செருப்பு போன்று அணிகிற ஒன்று. | ٨) خفافنا : جمع خف ، هو ما يلبس في قدم الانسان مثل الحذاء |
| 9) கட்டளையிடுவார்கள். இங்கு இதன் பொருள், செய்வது கூடும் என்பதே! | ٩) يأمرنا: الامر هنا للاباحة و الجواز |
| 10) பெருந்துடக்கு: ஜனாபத் என்பதன் அசல் பொருள்: தூரவிலகுதல். இஸ்லாமிய வழக்கில், உட லுறவு அல்லது விந்து வெளிப்படலின் மூலம் குளிப்பு கடமையா கும் நிலையாகும். | ١٠) ا لجنابة: هي لغة البعد و شرعا ما يوجب الغسل من جماع أو انزال |
| 11) அன்பு கொள்வது | ١١) الهوي : الحب |
| 12) நாட்டுப்புறத்தார்: அஃராப் எனும் பன்மைச் சொல் லில் ياء சேர்த்து ஒருமையாக்கப்பட்டுள்ளது. நாட்டுப் புறம் மற்றும் கிராமத்தில் வாழும் இருவகை அரபி களையும் உள்ளடக்கும் அல்அரபி எனும் சொல்லை விட்டும் வேறு படுத்துவதே நோக்கம். | ١٢ ) أعرابي: نسبة الي أعراب، وهم سكان البوادي،ونسب الي الجمع تمييزا له عن عربي الذي يشمل من يسكن البادية أو القرى |
| 13) கடுமையான, உரத்த | ١٢) الجوهري: الشديد العالى |
| 14) வாங்கிக்கொள், பெற்றுக் கொள் | ١٣) هاؤم : خذ (في رواية القرطبي: تعالوا) |

| | |
|---|---|
| 15)நாசூமாகப்போவாய்: இது மனமிரங்கியும் வருந்தியும் சொல்லப்படும் வார்த்தையாகும். தேவை இல்லாத ஒரு தீமையில் விழுந்துள்ளவனுக்கு இவ்வாறு சொல்லப் படும். | ١٤) ويحك : كلمة ترحم و توجع تقال لمن وقع في سوء لا يستحقه |
| 16) (அமல் விஷயத்தில்) அவர்களைச் சென்றடையா திருக்கிறான்: அவர்கள் அமல் செய்வதுபோல் முழுமை யாக அவன் அமல் செய்யவில்லை. | ١٥) لما يلحق بهم : لم يعمل مثل عملهم من حيث الكمال |
| 17) பலவிஷயங்களை எங்களுக்கு அவர்கள் அறிவித் துக் கொண்டிருந்தார்கள்: அதாவது நபியவர்கள். | ١٦) فما زال يحدثنا : أي النبيﷺ |
| 18) பாவமீட்சிக்காக: பாவமீட்சியை ஏற்றுக் கொள்வ தற்காக | ١٧) للتوبة : لقبول التوبة |

## கேள்விகள் ~ الاسئلة

1) கல்வியின் சிறப்பை சுருக்கமாக விளக்கவும்.
2) மஸஹ் என்றால் என்ன? அதன் சட்டங்களை விளக்கவும்.
3) இந்நாட்டுப்புற அரபி கேட்ட கேள்வி என்ன? அதற்கு நபியவர்கள் அளித்த பதில் என்ன? அதில் அமைந்துள்ள அழகிய முன்மாதிரி என்ன?
4) அறிவிவப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?
5) நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் யாவை? அது வலியுறுத்தப் பட்டுள்ள குர்ஆன்வசூனங்களைக் குறிப்பிடவும்.
6) நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்துவதன் தனிச் சிறப்பை எழுதவும்.

## நூறு கொலை செய்தவனுக்கும் மன்னிப்பு உண்டு., ஆனால் ...?

٢٠ – وَ عَنْ أَبِيْ سَعِيْدٍ سَعْد بْنِ مَالِكِ بْنِ سِنَانٍ الْخُدْرِيْ ﷺ اَنَّ نَبِيَّ اللهِ ﷺ قَالَ :{ كَانَ فِيْمَنْ كَانَ قَبْلَكُمْ رَجُلٌ قَتَلَ تْسْـعَةً وَ تِسْعِيْنَ نَفْسًا ، فَسَأَلَ عَنْ أعْلَمِ أهْلِ الارْضِ ، فَدُلَّ عَلَي رَاهِبٍ فَأَتَاهُ فَقَالَ : اِنَّهُ قَتَلَ تِسْعَةً وَ تِسْعِيْنَ نَفْسًا فَهَلْ مَنْ تَوْبَةٍ؟ فَقَـالَ: لاَ، فَقَتَلَهُ فَكَمَّلَ بِهِ مِئَةً ، ثُمَّ سَأَلَ عَنْ أعْلَمِ أهْلِ الاَرْضِ ، فَدُلَّ عَلَى رَجُلٍ عَالِمٍ فَقَالَ: اِنَّهُ قَتَلَ مِئَةَ نَفْسٍ فَهَلْ مِنْ تَوْبَةٍ؟ فَقَـالَ : نَعَمْ، مَنْ يَحُوْلُ بَيْنَهُ وَ بَيْنَ التَّوْبَةِ؟ اِنْطَلِقْ اِلَي أرْضِ كَذَا وَ كَذَا ، فَإِنَّ بِهَا أنَاسًا يَعْبُدُوْنَ اللهَ تَعَالَي فَاعْبُدِ اللهَ مَعَهُمْ ، وَلاَ تَرْجِـعْ اِلَي أرْضِكَ فَإِنَّهَا أرْضُ سُوْءٍ ، فَانْطَلَقَ حَتَّي اِذَا نَصفَ الطَّرِيْقَ أتَاهُ الْمَوْتُ ، فَاخْتَصَمَتْ مَلآئِكَةُ الرَّحْمَةُ وَ مَلآئِكَـةُ الْعَـذَابِ. فَقَالَتْ ملآئِكَةُ الرَّحْمَةُ: جَاءَ تَائِبًا مُقْبِلاً اِلَي اللهِ تَعَالَي، وَ قَالَتْ ملآئِكَةُ الْعَذَابِ : اِنَّهُ لَمْ يَعْمَلْ خَيْرًا قَطُّ ، فَأَتَاهُ مَلَكٌ فِيْ صُوْرَةِ آدَمِيٍّ فَجَعَلُوْهُ بَيْنَهُمْ – أيْ حَكَمًا – فَقَالَ: قِيْسُوْا مَا بَيْنَ الاْرْضَيْنِ فَإِلَي أَيَّتِهِمَا كَانَ أدْنَي فَهُوَ لَهُ ، فَقَاسُوْا فَوَجَدُوْهُ أدْنَي اِلَـي الأَرْضِ الَّتِي أرَادَ، فَقَبَضَتْهُ مَلآئِكَةُ الرَّحْمَةِ } متفق عليه

وَ فِيْ رِوَايَةٍ فِيْ الصَّحِيْحِ : { فَكَانَ اِلى الْقَرْيَةِ الصَّالِحَةِ أقْرَبَ بِشِبْرٍ فَجُعِلَ مِنْ أهْلِهَا } وَفِيْ رِوَايَةٍ فِيْ الصَّــحِيْحِ : فَــأوْحَى اللهُ تَعَالَى اِلَى هذِهِ أنْ تَبَاعَدِيْ، وَاِلَى هذِهِ أنْ تَقَرَّبِي ، وَقَالَ : قِيْسُوْا مَا بَيْنَهُمَا ، فَوَجَدُوْهُ اِلَى هذِهِ أقْرَبَ بِشِبْرٍ فَغُفِرَ لَهُ} وَفِي رِوَايَةٍ: فَنَآي بِصَدْرِهِ نَحْوَهَا

ஹதீஸ் 20

அபூ ஸயீதில் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன்னர் வாழ்ந்து சென்ற சமுதாயத்தில் ஒருமனிதன் இருந்தான். அவன் தொன்னூற்றி ஒன்பது பேரைக் கொலை செய்திருந்தான்! பிறகு அவன், இந்தப் புவிவாழ் மக்களில் அதிகம் அறிந்தவர் யார் என்று விசாரித் தான். ஒரு துறவியின் பக்கம் அவனுக்கு வழி காட்டப்பட்டது. அவரிடம் வந்தான். நான் தொன்னூற்றி ஒன்பது பேரைக் கொலை செய்து விட்டேன். எனக்கு மன்னிப்பு உண்டா? என்று அவரிடம் கேட்டான். அவர், கிடை யாது என்று சொல்லி விட்டார். உடனே அவரையும் கொலை செய்து அவருடன் நூறைப் பூர்த்தியாக்கினான்.

பிறகு இப்புவி வாழ் மக்களில் அதிகம் அறிந்தவர் யார் என்று கேட்டான். கல்வி அறிவுபெற்ற இன்னொரு மனிதரின் பக்கம் அவனுக்கு வழிகாட்டப்பட்டது. (அவரிடம் சென்று) கேட்டான்: நான் நூறு பேரைக் கொலை செய்துள்ளேன்., எனக்குப் பாவமன்னிப்பு உண்டா?

அவர் சொன்னார்: ஆம், உண்டு! பாவமன்னிப்புப் பெறவிடாமல் உன்னை யாரால் தடுக்க முடியும்?நீ இன்ன இன்ன ஊருக்குச் செல்! அங்கு, அல்லாஹ்வை வணங்கி வழிபட்டுக் கொண்டிருக்கும் மக்கள் உள்ளனர்., அவர்களுடன் சேர்ந்து நீயும் அல்லாஹ்வை வணங்கு. உனது சொந்த ஊருக்கு நீ திரும்பி விடாதே! அது கெட்டதொரு பூமியாகும்!

உடனே அவன் (அந்த ஊரை நோக்கிப்) புறப்பட்டான். பாதி வழி வந்திருக்கும்பொழுது மரணம் அவனைத் தழுவிக்கொண்டது! அவனைக் கைப்பற்றும் விஷயத்தில் கருணைமலக்குகளும் தண்டனை மலக்குகளும் தர்க்கம் செய்யலானார்கள்!

கருணை மலக்குகள் சொன்னார்கள்: இவன் பாவமீட்சி தேடியவனாக - தனது இதயத்தால் அல்லாஹ்வின் பக்கம் முன்னோக்கியவனாக வந்துள்ளான்,. என்று! தண்டனை மலக்குகள் சொன்னார்கள்: இவன் எந்த ஒரு நன்மையையும் செய்யவில்லை,. என்று!

இந்நிலையில் வேறொரு மலக்கு மனித வடிவத்தில் அங்கு வந்தார். அவரைத் தங்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும் நடுவராக்கினார்கள், அந்த மலக்குகள். அவர் சொன்னார்: இரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தூரத்தை அளந்து பாருங்கள். இந்த மனிதன் எந்த ஊரின் பக்கம் நெருக்கமாக இருக்கிறானோ அந்த ஊரைச் சேர்ந்தவனாவான்! "

அவ்வாறு அளந்து பார்த்தபொழுது அவன், எந்த ஊரை நாடி வந்தானோ அந்த ஊரின் பக்கம் நெருக்க மானவனாக இருந்தான். உடனே கருணை மலக்குகள் அவனைக் கைப்பற்றிக் கொண்டார்கள்!"(நூல்: புகாரி, முஸ்லிம்)

ஸஹீஹ் (முஸ்லிமின்) ஓர் அறிவிப்பில் வந்துள்ளது: அவன் நல்ல ஊரின் பக்கமே ஒரு சாண் அளவு அதிக நெருக்கமாக இருந்தான். எனவே அவ்வூர்வாசிகளுடன் சேர்க்கப்பட்டான்"

ஸஹீஹ் (முஸ்லிமின்) வேறோர் அறிவிப்பில் உள்ளது: இந்த ஊருக்கு நீ தூரமாகிவிடு என்று அல்லாஹ் கட்டளையிட்டான்., மேலும் அந்த ஊருக்கு - நீ நெருக்கமாகிவிடு என்று கட்டளையிட்டான். மேலும் கூறி

னான்: (இப்பொழுது) இரு ஊர்களுக்கும் மத்தியில் அளந்து பாருங்கள் என்று! அதன்படி அந்த மனிதன் இந்த ஊரின் பக்கமே அதிக நெருக்கமாக இருக்கக் கண்டார்கள்!"

ஸஹீஹ் (முஸ்லிமின்) இன்னோர் அறிவிப்பில் உள்ளது: அவன் தனது இதயத்தால் அந்த ஊரை நாடிப் புறப்பட்டான் "

## தெளிவுரை - الشرح

வாய்மையுடன் பாவமன்னிப்புத் தேடும் மனிதனுக்கு அல்லாஹ்விடம் மன்னிப்பு உண்டு., அவன் செய்த பாவம் எவ்வளவு பெரிதாயினும் எவ்வளவு அதிகமாயினும் சரியே! ஏனெனில், அல்லாஹ்வின் கருணை எல்லையில்லாதது! உலகின் எல்லாப் பொருள்களையும் வியாபித்து நிற்கக் கூடியது! இந்த உண்மைக்கு இன்னோர் ஆதாரமே இந்த நபிமொழி.

நபி(ஸல்) அவர்கள் முற்காலச் சமுதாயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைத் தத்துவார்த்தமான முறையில் விளக்கிக்காட்டி பாவமீட்சி தேடுவதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்த்துகின்றார்கள்.

பாவமீட்சி தேடும் மனிதனுக்கு மன்னிப்பு கிடைக்கவேண்டுமாயின் அதற்கு மிகமுக்கியமான நிபந்தனை, அவன் மனம் திருந்தியிருக்க வேண்டும் என்பதே. பாவம் குறைவாக, லேசானதாக இருக்க வேண்டும் என்ப தல்ல. அவன் மனம் வருந்தி - திருந்தி வாழ முன்வந்து விட்டால் அவனது பாவம் எவ்வளவு கடுமையான தாக-கொடுமையா னதாக இருந் தாலும் அவனுக்கு மன்னிப்பு உண்டு!

இந்தக் கருத்துக்கு ஓர் உவமை கூறி தத்துவார்த்தமாக விளக்கித் தருகிறார்கள், நபி (ஸல்) அவர்கள்! உவமையுடன் எடுத்துரைக்கும் கருத்துக்கள் மனதில் நன்கு பதிகின்றன! அவற்றைக் கடைப்பிடித்து வாழ வேண்டுமெனும் நல்லார்வமும் பிறக்கிறது - மக்களின் உள்ளங்களில் கருத்துக்களை நயமாகப் புகட்டுவதில் நபி(ஸல்)அவர்கள் மேற்கொண்ட நுட்பமான பாணியாகும் இது!

அது மட்டுமல்ல இஸ்லாத்தின் அழைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் மென்மையாக நடந்துகொள்ள வேண்டும். நல்லவற்றை நயமாக எடுத்துக்கூறி மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும். அவர்களை நிராசை அடையச் செய்துவிடக்கூடாது என்பதையும் இங்கு நபியவர்கள் நயமாக வலியுறுத்தியுள்ளார்கள்! இறைமார்க்கம் - ஆன்மிகம் பற்றிப் பேசுபவர்கள் - அறிவுரை கூறுபவர்கள் ஷரீஅத்தின் அடிப்படைகளை நன்கு அறிந்து அதன்படி செயலாற்றுவது அவசியம். அழைப்புப் பணியின் வழியில் இது ஓர் அடிப்படை அம்சமாகும்.

99 பேரைக் கொலை செய்த குற்றத்திற்கு மன்னிப்பு உண்டா என்ற கேள்விக்கு- ஆலயத்தில் அமர்ந்து வழிபட்டுவந்த அந்தத் துறவி தவறான பதிலைத் தந்தார். குற்றத்தின் கடுமையை மட்டுமே பார்த்தாரே தவிர பாவமீட்சி தேடிவந்த மனிதனின் மனமாற்றத்தைப் பார்க்கவில்லை., உனக்கு மன்னிப்பே கிடையாது என்று சொல்லி அவனை நிராசைகொள்ளச் செய்தார்.

ஆனால் மார்க்கத்தைக் கற்றுணர்ந்த அந்த அறிஞரின் அணுகுமுறை சரியாக இருந்தது. முதலில் - மன்னிப்புத் தேடிவந்த மனிதனின் மனத்தில் நம்பிக்கை ஒளி பாய்ச்சினார்., மன்னிப்புப் பெறவிடாமல் உன்னை யாரால் தடுக்க முடியும் என்று கூறி தைரியமூட்டினார்.

இரண்டாவதாக -இனி என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது? எங்குச் செல்ல வேண்டும்? எங்குச் செல்லக்கூடாது என்று - செயல்படும் விதத்தையும் விளக்கினார். தீமை செய்த ஒருமனிதன் திருந்திய பிறகு மீண்டும் தீமையில் சிக்காதிருப்பதற்கு இது மிகமிக முக்கியம்! கெட்ட-மோசமான சூழ்நிலையை விட்டு வெளியேறிட வேண்டும்., நல்லோருடன் சேர்ந்து வாழவேண்டும்., இறைவழிபாடு செய்துவர வேண்டும்.

ஆகா! இது எத்துணை விவேகமான பதில்! கடும் முரடனின் கல்மனத்தையும் கனியச்செய்திடும் காரிய சாத்தியமான அனுகுமுறை! பாவமீட்சி தேடிப்புறப்பட்ட அந்த மனிதனிடம் - அந்த வழியில் எத்தனை சோதனைகள் வந்தாலும் பின்வாங்கக்கூடாது எனும் மன உறுதி இருந்தது. வாய்மையான எண்ணம் இருந்தது. இதனால்தான் நல்லோர் வாழ்ந்த ஊரை நோக்கிப் புறப்பட்டு - அதனை அடையும் முன்பே அவன் மரணம் அடைந்த நிலையிலும், எவ்வித நற்செயலும் அவன் செய்யவில்லை என்பதுடனேயும் அவனுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. நல்லூரை நெருங்கி விட்டானா என்று மலக்குகளால் அளக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டதாக நபி யவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது - உண்மையான மனமாற்றத்திற்கும் மனத் தூய்மைக்கும் இறைமார்க்கம் எத்துணை முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை உணர்த்தவே! இறைவனின் ஆணைகளும் மலக்குமார்களின் செயல்களும் மிக நுட்பமானவை., அவற்றின் யதார்த்த நிலையை நம்மால் அறியமுடியாது., ஆனால் நாம் புரியும் பாஷையில் - பாணியில் நபியவர்கள் விளக்கச் சொல்லியுள்ளார்கள் என்பதைக் கவனத் தில் கொள்ள வேண்டும். ஸஹீஹ் முஸ்லிமின் பல்வேறு அறிவிப்புகளின் வாசுகங்கள் உணர்த்தும் கருத்தும் இதுவே!

கொலைகாரன் திருந்தி மனம் வருந்தி பாவமீட்சி தேடினால் அவனுக்கு மன்னிப்பு உண்டு என்பதே ஷரீஅத் கூட்ட வல்லுனர்கள் பெரும்பாலோரின் கருத்தாகும். ஆனால் புகழ்பெற்ற நபித்தோழர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்து- கொலை செய்தவனுக்கு மன்னிப்புக் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்:

قال الله تعالى: وَمَنْ يَقْتُلْ مُؤْمِنًا مُتَعَمِّدًا فَجَزَاءُهُ جَهَنَّمُ خَالِدًا فْهَا وَ غَضِبَ اللهُ عَلَيْهِ وَ لَعَنَهُ وَ أَعَدَّ لَهُ عَذَابًا أَلِيْمًا ( سورة النساء ألآية: ٩٣ )

ஓர் இறைநம்பிக்கையாளரை ஒருவன் வேண்டுமென்றே கொலை செய்துவிட்டால் அவனுக்குரிய தண்டனை நரகமாகும். அதில் அவன் நிரந்தரமாக வீழ்ந்து கிடப்பான். மேலும் அல்லாஹ் அவன் மீது கோபம் கொண்டான். அவனை சபித்தும்விட்டான். மிகப் பெரிய வேதனையும் அவனுக்காகத் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது" (அல்குர்ஆன் 4: 95)

ஆயினும் பெரும்பாலான அறிஞர்களின் கருத்தே சரியானதாகும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்து பின்வரும் விளக்கத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறது:

கொலை செய்தவனுக்குப் பாவமன்னிப்புக் கிடையாது என்பது கொலை செய்யப்பட்டவனைப் பொறுத்துச் சொல்லப்பட்டதாகும். அதாவது கொலை செய்தவனுடன் மூன்று உரிமைகளின் தொடர்பு ஏற்படுகிறது.

(1) அல்லாஹ்வின் உரிமை
(2) கொலை செய்யப்பட்டவனின் உரிமை
(3) கொலை செய்யப்பட்டவனின் வாரிசுகளின் உரிமை

அல்லாஹ்வின் உரிமையைப் பொறுத்தவரையில் - கொலை செய்தவன் பாவமீட்சி தேடினால் அல்லாஹ் மன்னிப்பு வழங்கிவிடுவான். குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் :

لقول الله تعالى: قُلْ يَا عِبَادِيَ الَّذِيْنَ أَسْرَفُوْا عَلَي أَنْفُسِهِمْ لاَ تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللهِ اِنَّ اللهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا (سورة الزمر الآية: ٥٣ )

(நபியே!) கூறுவீராக: தங்கள் ஆன்மாக்களுக்கு கொடுமை இழைத்துக்கொண்ட என் அடிமைகளே! அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். திண்ணமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிடுகிறான்" (39 : 52) மற்றோர் இடத்தில்,

وقال الله تعالى: وَالَّذِيْنَ لاَ يَدْعُوْنَ مَعَ اللهِ اِلٰهًا آخَرَ وَ لاَ يَقْتُلُوْنَ النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللهُ اِلاَّ بِالْحَقِّ وَلاَ يَزْنُوْنَ وَ مَنْ يَّفْعَلْ ذٰلِكَ يَلْــقَ أَثَامًا يُضَاعَفْ لَهُ الْعَذَابُ يَوْمَ الْقِيَامَةِ وَ يَخْلُدْ فِيْهِ مُهَانًا اِلاَّ مَنْ تَابَ وض آمَنَ وَ عَمِلَ عَمَلاً صَالِحًا فَأولٰئِكَ يُبَدِّلُ اللهُ سَــيِّئَاتِهِمْ حَسَنَاتٍ (سورة الفرقان الآية: ٦٨)

மேலும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெந்தத் தெய்வத்தையும் அழைப்பதில்லை. (கொலைசெய்யக் கூடாதென) அல்லாஹ்வினால் தடை செய்யப்பட்ட எந்த உயிரையும் அவர்கள் கொலை செய்வதில்லை. மேலும் விபச்சாரமும் செய்வதில்லை. யாரேனும் இந்தச் செயல்களைச் செய்தால் அவன் தன் பாவத்திற்கான கூலியைப் பெற்றே தீருவான். மறுமை நாளில் அவனுக்கு இரட்டிப்புத் தண்டனை அளிக்கப்படும். அதிலேயே இழிவுக்குரியவனாக வீழ்ந்து கிடப்பான். ஆனால் எவர் மன்னிப்புக் கோரி இறைநம்பிக்கை கொண்டு நற்செயலும் புரிந்தாரோ அவரைத் தவிர! இத்தகையோரின் தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றிவிடுகிறான். அவன் பெரும் மன்னிப்பாளனும் கிருபையாளனும் ஆவான்" (25 : 69 - 70)

கொலைசெய்யப்பட்டவனின் உரிமையைப் பொறுத்தவரையில் - கொலை செய்தவனின் பாவமீட்சியினால் அவனுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை., அவனது உயிர் திரும்பப்போவதுமில்லை. அவனது உரிமை நிறைவேறப் போவதுமில்லை. அவன் இறந்தது இறந்ததுதான். அவனிடம் மன்னிப்பு கோரிடவும் முடியாது. அவனது உயிரைப் பறித்த குற்றத்தில் இருந்து பொறுப்பு நீங்கிடவும் முடியாது. கொலை செய்தவனின் மீதான ஒருகளங்க மாகவே அது நீடிக்கும்! மறுமை நாளில் அல்லாஹ் அவ்விருவருக்கும் மத்தியில் தீர்ப்பு வழங்குவான்.

- இந்தக் கோணத்தில்தான் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் இப்படிக் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

கொலைசெய்யப்பட்டவனின் வாரிசுகளின் உரிமையைப் பொறுத்த வரையில் கொலைசெய்தவன் தன்னை அவர்களிடம் ஒப்படைத்து தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு, நீங்கள் விரும்பினால் என்னைக் கொன்று பழிதீர்த்துக்கொள்ளுங்கள். விரும்பினால் எனக்கு மன்னிப்பு வழங்குங்கள்! என்று சொல்லாத வரையில் அவனது பாவமீட்சி தேடல் நிறைவேறாது!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அபூ ஸயீதுல் குத்ரீ (ரலி) அவர்கள்

அபூ ஸயீதுல் குத்ரீ (ரலி) அவர்கள் வயதின்மையின் காரணத்தால் உஹு த் போரில் கலந்து கொள்ள வில்லை. அதில் அவர்களின் தந்தை கொல்லப்பட்டு ஷஹீத் ஆனார்கள். அதற்குப் பிறகு நடந்த அனைத்துப் போர்களிலும் கலந்துகொண்டார்கள். இவர்களிடம் இருந்து ஏராளமான நபிமொழிகள் அறிவிக்கப் பட்டுள்ளன. அவை சுமார் 1270 இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அவர்கள், நபித்தோழர்களில் இளைய தலைமுறையில் ஷரீஅத் சட்டங்களை அதிகம் தெரிந்தவர்களாயும் சிறப்புக்குரிய வர்களாயும் திகழ்ந்தார்கள். ஹிஜ்ரி 64 ஆம் ஆண்டு ஜு ம்ஆ நாளில் மரணம் அடைந்தார்கள். அவர்களது ஜனாஸா மதீனாவில் பகீஃ மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

### அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) துறவி: உலக ஈடுபாடுகளை விட்டும் விலகி அதன் இன்பங்களை விட்டுவிட்டு பற்றற்ற நிலையை மேற்கொண்டவர். | راهب : هو المتخلي عن أشغال الدنيا والتارك لملاذها و الزاهد فيها |

| | |
|---|---|
| 2) யார் தடையாக வர முடியும்? | ٢) من يحول : أي شيئ يكون حائلا و فاصلا |
| 3) நெருக்கமானவனாக | ٣) أدنى : أقرب |
| 4) புறப்பட்டான்: கஷ்டத்தையும் சிரமத்தையும் தாங்கிக் கொண்டு கிளம்பினான்., மரணம் ஏற்படும் அளவிலான சிரமம் ஒருபுறம்! | ٤) نأي : نهض بجهد و مشقة رغم ثقل ما أصابه من الموت |

**கேள்விகள்** - الاسئلة

1) அழைப்புப் பணி செய்வோருக்கு இந்நபிமொழி தரும் பாடம் என்ன?
2) கொலை செய்வது அழிவிலாழ்த்தும் பெரும்பாவம் என்பதற்கு குர்ஆன், ஹதீஸின் ஆதாரங்களை எழுதவும்.
3) இந்நபிமொழியின் மூலம் கிடைக்கும் படிப்பினைகள் என்ன?
4) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## தபூக் யுத்தமும் தடுமாற்றமும்

**٢١ – وَعَنْ عَبْدِ اللهِ بْنِ كَعْبِ بْنِ مَالِكٍ ، وَكَانَ قَائِدَ كَعْبٍ ﷺ مِنْ بَنِيْهِ حِيْنَ عَمِيَ قَالَ: سَمِعْتُ كَعْبَ بْنَ مَالِكٍ ﷺ يُحَـــدِّثُ بِحَدِيْثِهِ حِيْنَ تَخَلَّفَ عَنْ رَّسُوْلِ اللهِ ﷺ فِي غَزْوَةِ تَبُوْكٍ . قَالَ كَعْبٌ : لَمْ أَتَخَلَّفْ عَنْ رَّسُوْلِ اللهِ ﷺ فِيْ غَزْوَةٍ غَزَاهَا قَطُّ اِلاَّ فِيْ غَزْوَةِ تَبُوْكٍ، غَيْرَ أَنِّي قَدْ تَخَلَّفْتُ فِيْ غَزْوَةِ بَدْرٍ ، وَلَمْ يُعَاتَبْ أَحَدٌ تَخَلَّفَ عَنْهُ، اِنَّمَا خَرَجَ رَسُوْلُ اللهِ ﷺ وَ الْمُسْلِمُوْنَ يُرِيْـــدُوْنَ عِيْرَ قُرَيْشٍ حَتَّى جَمَعَ اللهُ تَعَالَي بَيْنَهُمْ وَ بَيْنَ عَدُوِّهِمْ عَلَي غَيْرِ مِيْعَادٍ. وَ لَقَدْ شَهِدْتُّ مَعَ رَسُوْلِ اللهِ ﷺ لَيْلَةَ الْعَقَبَةِ حِيْنَ تَوَاثَقْنَـــا عَلَي الاسْلَامِ، وَمَا اُحِبُّ أَنَّ لِيْ بِهَا مَشْهَدَ بَدْرٍ وَ اِنْ كَانَتْ بَدْرٌ أَذْكَرَ فِيْ النَّاسِ مِنْهَا.**

ஹதீஸ் 21

கஅப் இப்னு மாலிக் (ரலி) அவர்களின் மகனார் அப்துல்லாஹ் அறிவிக்கிறார்கள்: (இவர்தான் கஅப் (ரலி) அவர்கள் கண்பார்வை இழந்த காலத்தில் அவர்களை வழிநடத்தி அழைத்துச் செல்பவராக இருந்தார்.) கஅப் (ரலி) அவர்கள் தபூக் போரில் கலந்துகொள்ளாமல் நபியவர்களை விட்டும் பின்தங்கி விட்டபொழுது நடந்த நிகழ்வுகள் பற்றி இவ்வாறு அறிவித்ததை நான் கேட்டுள்ளேன்.

கஅப்(ரலி) அவர்கள் சொன்னார்கள்: நபி(ஸல்)அவர்கள் கலந்துகொண்ட எந்தப் போரை விட்டும் நான் எப்போதும் பின்தங்கியதில்லை., தபூக் யுத்தத்தைத்தவிர! ஆனால் பத்று போரில் நான் கலந்து கொள்ள வில்லை என்பது வேறு விஷயம்! அதில் கலந்துகொள்ளாமல் இருந்த எவரும் கண்டிக்கப்படவில்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் - குறைஷிகளின் வாணிபக் குழுவைத் தாக்குவதற்காகத் தான் புறப்பட்டிருந்தார்கள். அங்கே முன்னறிவிப்பு இல்லாமல் அவர்களையும் அவர்களுடைய பகைவர்களையும் மோதச் செய்தான், அல்லாஹ்!

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காக நாங்கள் உறுதிமொழி கொடுத்தபோது நடைபெற்ற நள்ளிரவு கணவாய் உடன்படிக்கையில் நபி (ஸல்) அவர்களிடம் நான் ஆஜராகியுள்ளேன். அதற்குப் பகரமாக பதருப் போரில்

கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கப்பெறுவதை நான் விரும்பவில்லை. அதைவிட பத்ருப் போர் தான் மக்களிடையே அதிகம் பேசப்படக்கூடியதாக இருந்தாலும் சரியே!

كَا نَ مِنْ خَبَرِىْ حِيْنَ تَخَلَّفْتُ عَنْ رَّسُوْلِ اللهِ ﷺ فِيْ غَزْوَةِ تَبُوْكٍ أَنِّيْ لَمْ أَكُنْ قَطُّ أَقْوَي وَ لاَأَيْسَرَ مِنَّيْ حِيْنَ تَخَلَّفْتُ عَنْهُ فِـيْ تِلْكَ الْغَزْوَةِ ، وَاللهِ مَا جَمَعْتُ قَبْلَهَا رَاحِلَتَيْنِ قَطُّ حَتّي جَمَعْتُهُمَا فِيْ تِلْكَ الغَزْوَةِ ، وَلَمْ يَكُنْ رَسُوْلُ اللهِ ﷺ يُرِيْدُ غَزْوَةً اِلاَّ وَرَّي بِغَيْرِهَا حَتَّي تِلْكَ الْغَزْوَةِ، فَغَزَاهَا رَسُوْلُ اللهِ ﷺ فِيْ حَرٍّ شَدِيْدٍ، وَاسْتَقْبَلَ سَفَرًا بَعِيْدًاوَ مَفَازًا، واسْتَقْبَلَ عَدَدًا كَثِيْـرًا ، فَجَلَّـي لِلمُسْلِمِيْنَ أَمْرَهُمْ لِيَتَأَهَّبُوْا اُهْبَةَ غَزْوِهِمْ فَأَخْبَرَهُمْ بِوَجْهِهِمُ الَّذِيْ يُرِيْدُ، وَ الْمُسْلِمُوْنَ مَعَ رَسُوْلِ اللهِ كَثِيْرٌ وَ لاَ يَجْمَعُهُمْ كِتَـابٌ حَافِظٌ (يُرِيْدُ بِذَلِكَ الدِّوَانَ) قَالَ كَعْبٌ : فَقَلَّ رَجُلٌ يُرِيْدُ أَنْ يَتَغَيَّبَ اِلاَّ ظَنَّ أَنَّ ذَلِكَ سَيَخْفَي بِهِ مَا لَمْ يَنْزِلْ وَحْيٌ مِنَ اللهِ، وَغَزَا رَسُوْلُ اللهِ ﷺ تِلْكَ الْغَزْوَةَ حِيْنَ طَابَتْ الثِّمَارُ وَ الظِّلاَلُ فَأَنَااِلَيْهَا أَصْعَرُ ،

தபூக் போரில் நபி (ஸல்) அவர்களை விட்டும் நான் பின்தங்கியிருந்தபோது நடைபெற்றது பற்றி நான் அறிவிப்பது என்னவெனில்,நான் அதிக அளவு சக்தியும் செளகரியமும் முன்னெப்போதும் பெற்றிருந்ததில்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அதற்கு முன்பு ஒருபொழுதும் இரண்டு ஒட்டகங்கள் என்னிடம் இருந்த தில்லை. ஆனால் அந்தப் போரின்போது இரண்டு ஒட்டகங்களை நான் சேகரித்து வைத்திருந்தேன்.

நபி(ஸல்)அவர்கள் ஏதேனும் போருக்குப் புறப்பட நாடினால் அதனை மற்றொரு விஷயத்துடன் இணைத்து மறைத்தே பேசுவார்கள். இவ்வாறு இந்தப் போரும் வந்தது! நபியவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்டது கடுமையான வெயில் நேரத்தில்! அதுவும் நெடியதொரு பயணத்தை மேற்கொண்டார்கள். பாலை வெளியைக் கடந்து செல்ல நேர்ந்தது! எதிரிகளின் அதிக எணண்ணிக்கை கொண்ட படையைச் சந்திக்க நேர்ந் தது! எனவே முஸ்லிம்கள் தங்களுடைய போர்த் தளவாடங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக யதார்த்த நிலையை அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். முஸ்லிம்கள் எங்கு நோக்கி செல்ல வேண்டும் என்பது தமது நாட்டம் என்பதை வெளிப் படையாக அறிவித்தார்கள். நபி (ஸல்) அவர்களுடன் முஸ்லிம்கள் அதிக அளவில் புறப்பட்டிருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை எந்த ஏட்டிலும் பதிவு செய்து வைக்கப்படவில்லை. (அதாவது அரசாங்கப் பதிவேடு என்று எதுவும் அப்பொழுது இல்லை)

கஅப் (ரலி) அவர்கள் சொல்கிறார்கள்: போருக்குப் புறப்படாமல் தங்கி விடலாமென விரும்பும் எவரேனும் இருந்தால் நாம் கலந்து கொள்ளாதது பற்றி அல்லாஹ்விடம் இருந்து வஹி (குர்ஆன் வசனம்) இறங்கி னாலேதவிர அது யாருக்கும் தெரியப் போவதில்லை - என்றே எண்ணிக் கொண்டிருந்தார்!

நபி (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்ட நேரத்தில் கனிகள் கனிந்திருந்தன., நிழல்கள் நன்கு அடர்த்தியாகி விட்டிருந்தன! நான் அவற்றின் மேல் அதிக மையல் கொண்டிருந்தேன்!

فَتَجَهَّزَ رَسُوْلُ اللهِ ﷺ وَالْمُسْلِمُوْنَ مَعَهُ ، وَطَفِقْتُ أَغْدُولِكَيْ أَتَجَهَّزَ مَعَهُ ، فَأَرْجِعُ وَلَمْ أَقْضِ شَيْئاً، وَأَقُوْلُ فِيْ نَفْسِى، : أَنَا قَـادِرٌ عَلَى ذَلِكَ اِذَا اَرَدْتُ، فَلَمْ يَزَلْ يَتَمَادَى بِي حَتَّى اسْتَمَرَّ بِالنَّاسِ الْجِدُّ ، فَاصْبَحَ رَسُوْلُ اللهِ ﷺ غَادِيًا وَالْمُسْلِمُوْنَ مَعَـهُ ، وَلَـمْ أَقْضِ مِنْ جِهَازِى شَيْئًا ، ثُمَّ غَدَوْتُ فَرَجَعْتُ وَلَمْ أَقْضِ شَيْئًا فَلَمْ يَزَلْ يَتَمَادَي بِىْ حَتَّى أَسْرَعُوْا وَ تَفَـارَطَ الْغَـزْوُ فَهَمَمْـتُ أَنْ

أرْتَحِلَ فَأدْرَكَهُمْ ، فَيَا لَيْتَنِي فَعَلْتُ، ثُمَّ لَمْ يُقَدَّرْ ذَلِكَ لِىْ فَطَفِقْتُ اِذَا خَرَجْتُ فِيْ النَّاسِ بَعْدَ خُرُوْجِ رَسُوْلِ اللهِ ﷺ يَحْزُنُنِيْ أَنِّيْ لاَ أَرَى لِىْ اُسْوَةً، اِلاَّ رَجُلاً مَغْمُوصًا عَلَيْهِ فِى النِّفَاقِ اَوْ رَجُلاً مِمّنْ عَذَرَ اللهُ تَعَالَي مِنَ الضُّعَفَاءِ،

நபி(ஸல்)அவர்கள் போருக்கான ஏற்பாட்டைச் செய்து முடித்திருந்தார்கள். அவர்களுடன் முஸ்லிம்களும் அதற்கான ஏற்பாட்டை முழுமையாக்கி விட்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் போருக்கான ஏற்பாடுகளைச் செய்வ தற்காகக் காலையில் புறப்படலானேன். ஆனால் எதையும் செய்து முடிக்கா மலேயே திரும்பிவருவேன்.

நான் என் மனத்திற்குள் சொல்லிக்கொள்வேன்: நாம் நாடிவிட்டால் ஏற்பாட்டைச் செய்துமுடிக்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கத்தானே செய்கிறது!- இந்த எண்ணம்தான் தொடர்ந்து என்னைத் தாமதப்படுத்திக் கொண்டே இருந்தது! மக்களோ இடைவிடாது முயற்சிகள் மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்!

நபி(ஸல்)அவர்கள் தோழர்களுடன் ஒருநாள் அதிகாலையில் போருக்காகப் புறப்பட்டுவிட்டார்கள். நானோ அதுவரையில் எவ்வித ஏற்பாட்டையும் செய்து முடிக்காமலேயே இருந்தேன். பிறகு மறுநாள் காலையில் சென் றேன். எதையும் செய்து முடிக்காமலேயே திரும்பி வந்தேன். இவ்வாறு நான் தாமதமாகிக்கொண்டே இருந் தேன். படைவீரர்களோ மிக வேகமாகப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தார்கள். வெகுதூரம் சென்று விட்டார் கள். நானும் பயணம் புறப்பட முனையத்தான் செய்தேன்., எப்படியேனும் அவர்ளைப் பிடித்துவிட வேண்டும் என நாடத்தான் செய்தேன். அந்தோ! அப்படி நான் செய்தேனில்லையே! எனது விதியில் அந்தப் பாக்கியம் எழுதி வைக்கப்பட்டிருக்க வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்!

நபி(ஸல்) அவர்கள் சென்ற பிறகு நான் மக்கள் மத்தியில் சென்றபொழுது - நயவஞ்சகனென்று இழித்துக் கூறப்பட்டவனையும் (பெண்கள் முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகளைப் போன்ற) இயலாதவர்களையும் தக்க காரணம் உடையவர்களையும் தவிர என்னைப்போல் போருக்குக் கிளம்பா திருந்த எவரையும் நான் காணவில்லை., இது எனக்கு மிகுந்த துயரம் அளிக்கலானது!

وَلَمْ يَذْكُرْنِى رَسُوْلُ اللهِ ﷺ حَتَّي بَلَغَ تَبُوْكًا ، فَقَالَ وَهُوَ جَالِسٌ فِي الْقَوْمِ بِتَبُوْكٍ : مَا فَعَلَ كَعْبُ بْنُ مَالِكٍ؟ فَقَالَ رَجُلٌ مِنْ بَنِيْ سَلِمَةَ: يَا رَسُوْلَ اللهِ حَبَسَهُ بُرْدَاهُ، وَالنَظَرُ فِيْ عِطْفِيْهِ فَقَالَ لَهُ مُعَاذُ بْنُ جَبَلٍ رضي الله عنه : بِئْسَ مَا تَقُوْلُ وَاللهِ يَا رَسُوْلَ اللهِ مَا عَلِمْنَا عَلَيْهِ الاَّ خَيْرًا، فَسَكَتَ رَسُوْ لُ اللهِ ﷺ فَبَيْنَمَا هُوْ عَلَي ذَلِكَ رَأي رَجُلاً مُبَيَّضًا يَزُوْلُ بِهِ السَّرَابُ . فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : كُنْ أَبَا خَيْثَمةَ، فَأذَا هُوَ أَبُو خَيْثَمَةَ الاَنْصَارِيُّ وَهوُ الذِّيْ تَصَدَّقَ بِصَاعِ التَّمْرِ حِيْنَ لَمَزَهُ الْمُنَافِقُوْنَ

நபி (ஸல்) அவர்கள் தபூக் சென்றடையும் வரையில் என்னைப் பற்றி எதுவும் கூறவில்லை. தபூக்கில் மக்கள் மத்தியில் அவர்கள் அமர்ந்திருந்த பொழுது கேட்டார்கள்: கஅப் பின் மாலிக் என்ன செய்தார்? பனூ ஸலிமா குலத்தைச் சேர்ந்த ஒருவர் பதில் சொன்னார்: அல்லாஹ்வின் தூதரே! அவர் அணிந்திருக்கும் வேஷ்டி யும் மேலங்கியும் அவரைத் தடுத்துவிட்டன! தமது ஆடையழகைக் கண்டு பூரிப்படைவதே அவரது வேலை!

அதற்கு முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: நீ எவ்வளவு மோசமான வார்த்தையைக் கூறி விட்டாய்! அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அவரது விஷயத்தில் நல்லதைத் தவிர வேறெதையும் அறிந்திருக்க வில்லை! - நபி (ஸல்) அவர்கள் மௌனமாகிவிட்டார்கள்.

இதற்கிடையில் வெள்ளை ஆடை அணிந்த ஒருமனிதர் பாலைவனத்தில் கானல் அசைவதுபோல் வந்து கொண்டிருப்பதை நபி(ஸல்) அவர்கள் பார்த்தார்கள். இவர் அபூ கைஸமாவாகத்தான் இருக்கவேண்டும் என்று நபியவர்கள் சொன்னார்கள். அவ்வாறே அபூ கைஸமாதான் வந்து கொண்டிருந்தார்! இவர் ஒரு அன்ஸாரித்

தோழர்., இவர்தான் ஒரு மரைக்கால் பேரீத்தம் பழத்தைப்போர்) நிதியாக வழங்கினார். அப்பொழுது அவரை நயவஞ்சுகர்கள் குறை பேசினார்கள்.

قَالَ كَعْبٌ: فَلَمَّا بَلَغَنِي أنَّ رَسُوْلُ الله ﷺ قَدْ تَوَجَّهَ قَافِلاً مِنْ تَبُوْكٍ حَضَرَنِي بَثِّي فَطَفِقْتُ أَتَذَكَّرُ الْكَذِبَ وَ أَقُوْلُ: بِمَ أَخْرُجُ مِنْ سَخَطِهِ غَدًا وَ أَسْتَعِيْنُ عَلَى ذِلِكَ بِكُلِّ ذِي رَأيٍ مِنْ أَهْلِي، فَلَمَّا قِيْلَ: اِنَّ رَسُوْلَ الله ﷺ قَدْ أَظَلَّ قَادِمًا زَاحَ عَنِّي الْبَاطِلُ حَتَّي عَرَفْتُ أَنِّي لَمْ أَنْجُ مِنْهُ بِشَيْءٍ أَبَدًا، فَأَجْمَعْتُ صِدْقَهُ، وَأَصْبَحَ رَسُوْلُ الله ﷺ قَادِمًا، وَكَانَ اذَا قَدِمَ مِنْ سَفَرٍ بَدَأَ بِالْمَسْجِدِ فَرَكَعَ فِيْهِ رَكْعَتَيْنِ ثُمَّ جَلَسَ لِلنَّاسِ ، فَلَمَّا فَعَلَ ذَلِكَ جَاءَهُ الْمُخَلَّفُوْنَ يَعْتَذِرُوْنَ اِلَيْهِ وَ يَحْلِفُوْنَ لَهُ، وَ كَانُوْا بِضْعًا وَ ثَمَانِيْنَ رَجُلاً فَقُبِلَ مِنْهُمْ عَلاَنِيَتُهُمْ وَ بَايَعَهُمْ وَ اسْتَغْفَرَلَهُمْ وَ وَكَّلَ سَرَائِرَهُمْ اِلَى الله تَعَالَى

## சிந்தையில் இருந்து பொய அகன்றுவிட்டது!

கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் தபூக்கில் இருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் செய்தி எனக்குக் கிடைத்த பொழுது கவலை என்னை ஆட்கொண்டது! எப்படிப் பொய் சொல்லலாமெனச் சிந்திக்க ஆரம்பித்தேன். நாளை நபியவர்களின் கோபத்தை விட்டும் எப்படித் தப்பிக்கப் போகிறோமோ என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். இது தொடர்பாக எனது குடும்பத்தில் விஷயஞானம் உடைய அனைவரிடமும் ஆலோசனை கலந்தேன்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள் இதோ வந்து விட்டார்கள் என்று சொல்லப் பட்டபொழுது (எனது சிந்தையிலிருந்து) பொய் அகன்றுவிட்டது. பொய் சொல்லி எந்த வகையிலும் அவர்களிடம் இருந்து தப்பிக்க முடியாது என்பது எனக்கு உறுதியாகிவிட்டது. எனவே அவர்களிடம் உண்மையே கூறுவது என்று உறுதியான முடிவுக்கு நான் வந்துவிட்டேன்.

நபி (ஸல்) அவர்கள் அதிகாலையில் வருகை தந்தார்கள். அவர்கள் எப்போது பயணத்திலிருந்து திரும்பி வந்தாலும் முதலில் பள்ளிவாசல் சென்று இரண்டு ரக்அத் தொழுவார்கள். அப்படியே அமர்ந்து மக்களிடம் உரையாடுவார்கள்.

அப்படி அமர்ந்திருந்தபொழுது-போருக்குச் செல்லாமல் பின்தங்கிவிட்டவர்கள் வந்து நபியவர்களிடம் சாக்குப் போக்குச் சொன்னார்கள்., அவர்களிடம் சத்தியம் செய்தார்கள். அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை எண்பது சொச்சம் இருந்தது. அந்த மனிதர்கள் வெளிப்படையாய் எடுத்துவைத்த வாதங்களை நபியவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களிடம் விசுவாசப் பிரமாணம் வாங்கினார்கள். அவர்களின் பாவமன்னிப்புக்காக பிரார்த்தனையும் செய்தார்கள். அவர்களின் உள்ளத்து ரகசியங்களை உயர்வுமிக்கவனாகிய அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள்!

حَتَّى جِئْتُ ، فَلَمَّا سَلَّمْتُ تَبَسَّمَ تَبَسُّمَ الْمُغْضَبِ ثُمَّ قَالَ: تَعَالَ، فَجِئْتُ أَمْشِي حَتَّى جَلَسْتُ بَيْنَ يَدَيْهِ، قَال لِي: مَا خَلَّفَكَ ؟ أَلَمْ تَكُنْ قَدْ أَبْتَعْتَ ظَهْرَكَ! قَالَ: قُلْتُ: يَا رَسُوْلَ الله اِنِّي وَ الله لَوْ جَلَسْتُ عِنْدَ غَيْرِكَ مِنْ أَهْلِ الدُّنْيَا لَرَأَيْتُ أَنِّي سَأَخْرُجُ مِنْ سَخْطِهِ بِعُذْرٍ، لَقَدْ اُعْطِيْتُ جَدَلاً، وَلَكِنِي وَالله لَقَدْ عَلِمْتُ لَئِنْ حَدَّثْتُكَ الْيَوْمَ حَدِيْثَ كِذْبٍ تَرْضَي بِهِ عَنِّي بِهِ لَيُوْشِكَنَّ اللهُ يُسْخِطُكَ

عَلَيَّ، وَ اِنْ حَدَّثْتُكَ حَدِيْثَ صِدْقٍ تَجِدُ عَلَيَّ فِيْهِ اِنِّى لأَرْجُوْ فِيْهِ عُقْبَي اللهِ عَزَّ وَ جَلَّ ، وَاللهِ مَا كَانَ لِى مِنْ عُذْرٍ ، وَاللهِ مَا كُنْتُ قَطُّ أَقْوَى وَ لاَ أَيْسَرَ مِنِّى حَيْنَ تَخَلَّفْتُ عَنْكَ قَالَ : فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : أَمَّا هَذَا فَقَدْ صَدَقَ ، فَقُمْ حَتَّي يَقْضِيَ اللهُ فِيْكَ،

கடைசியாக நான் சென்றேன். நான் ஸலாம் கூறியபொழுது நபி(ஸல்) அவர்கள் கோபத்தை வெளிப் படுத்தியவாறு புன்னகை செய்தார்கள். பிறகு சொன்னார்கள்: அருகே வாரும்" - நான் சென்று நபியவர்களின் முன்னால் அமர்ந்தேன்.

என்னிடம் கேட்டார்கள்: நீர் ஏன் புறப்படாமல் இருந்து விட்டீர்? நீர் ஒட்டகத்தை வாங்கி வைத்திருக்க வில்லையா?

நான் சொன்னேன்: அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! தாங்களின் சமூகத்திலன்றி உலகில் வேறொருவர் முன்னால் நான் அமர்ந்திருந்தால் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி அவரது கோபத் தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாமென நான் கருதியிருப்பேன். அந்த அளவுக்கு வாதம் புரியும் திறனை அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான்.

ஆனாலும் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் உறுதியாக அறிந்துள்ளேன்: அதாவது இன்று நான் தாங்களிடம் பொய் சொல்லி அதனடிப் படையில் தாங்கள் என்னைப் பொருந்திக் கொண்டாலும் - அல்லாஹ் என் மீது உங்களைக் கோபம் கொள்ளச் செய்தே தீருவான்! நான் உங்களிடம் உண்மை உரைத்து, அத னால் நீங்கள் என்மீது கோபம் கொண்டால்- நிச்சயமாக நான் அது விஷயத்தில் அல்லாஹ்வின் புறத்தில் இருந்து நல்ல முடிவை எதிர்பார்க்கிறேன்.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! என்னிடம் தக்க காரணம் எதுவுமில்லை. அல்லாஹ்வின் மீது சத்திய மாக! நான் உங்களுடன் (போருக்குப்) புறப்படாமல் தங்கி விட்டபொழுது நல்ல ஆற்றல் உடையவனாக - வசதி உடையவனாகவே இருந்தேன்., முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு!

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: இவர்தான் உண்மை சொல்லியுள்ளார். நீர் செல்ல லாம்., அல்லாஹ் உமது விஷயத்தில் தீர்ப்பளிக்கும் நேரத்தை நீர் எதிர்பார்த்திரும்,,

وَسَارَ رِجَالٌ مِنْ بَنِى سَلِمَةَ فَاتَّبَعُوْنِى ، فَقَالُوْا لِى: وَاللهِ مَا عَلِمْنَاكَ أَذْنَبْتَ ذَنْبًا قَبْلَ هَذَا، لَقَدْ عَجَزْتَ فِى أَنْ لاَ تَكُوْنَ اعْتَذَرْتَ اِلَى رَسُوْلِ اللهِ ﷺ بِمَا اعْتَذَرَ الْمُخَلَّفُوْنَ فَقَدْ كَانَ كَافِيْكَ ذَنْبَكَ اسْتِغْفَارُ رَسُوْلِ اللهِ ﷺ لَكَ، قَالَ: فَوَاللهِ مَا زَالُوْا يُؤَنِّبُوْنَنِى حَتَّي أَرَدْتُ أَنْ ارْجِعَ اِلَي رَسُوْلِ اللهِ ﷺ فَأُكَذِّبَ نَفْسِيْ، ثُمَّ قُلْتُ لَهُمْ: هَلْ لَقِيَ هَذَا مَعِيَ مِنْ أَحَدٍ ؟ قَالُوْا: نَعَمْ لَقِيَهُ مَعَكَ رَجُلاَنِ قَالاَ مِثْلَ مَا قُلْتَ، وَقِيْلَ لَهُمَا مِثْلَ مَا قِيْلَ لَكَ، قَالَ قُلْتُ : مَنْ هُمَا؟ قَالُوْا: مُرَارَةُ بْنُ الرَّبِيْعِ الْعَمْرِيُّ ، وَ هِلاَلُ بْنُ اُمَيَّةَ الْوَاقِفِيُّ، قَالَ: فَذَكَرُوْا لِىْ رَجُلَيْنِ قَدْ شَهِدَا بَدْرًا فِيْهِمَا أُسْوَةٌ. قَالَ : فَمَضَيْتُ حِيْنَ ذَكَرُوْهُمَا لِيْ.

## ஸலாம் சொல்வேன்., அருகிலேயே தொழுவேன்

பனூ ஸலிமா கிளையைச் சேர்ந்த சிலர் என்னைத் தொடர்ந்து நடந்து வந்தார்கள். என்னிடம் சொன் னார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதற்கு முன்பு நீர் எந்தப் பாவமும் செய்ததாக நாங்கள் அறிந்த தில்லை. போருக்குப் புறப்படாதிருந்த ஏனையோர் சாக்குப்போக்கு சொன்னதுபோல் நீரும் சாக்குப்போக்குச்

சொல்வதற்கில்லாமல் செய்துவிட்டீரே! நபியவர்கள் உமக்காகப் பாவமன்னிப்பு வேண்டிப் பிரார்த்தனை செய்வதே உமது பாவத்திற்குப் பரிகாரமாக - போதுமானதாக ஆகியிருக்குமே!,,

கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இவ்வாறு அவர்கள் என்னை நச்சரித்துக்கொண்டே இருந்தனர். எந்த அளவுக்கெனில், நபியவர்களிடம் திரும்பிச் சென்று முன்பு நான் சொன்னது உண்மையல்ல என்று சொல்லிவிடலாமா? என்றுகூட நான் சிந்தித்தேன்,,

- பிறகு அந்த மனிதர்களிடம் கேட்டேன்: என்னைப்போல் இந்நிலைக்கு ஆளானோர் எவரேனும் உண்டா?,,

அவர்கள் சொன்னார்கள்: இரண்டு பேர் உம்மைப்போல் இதேநிலைக்கு ஆளாகியுள்ளனர். நீர் சொன்னது போன்றே அவர்களும் சொன்னார்கள். உமக்குச் சொல்லப்பட்டதுபோன்றே அவர்களிடமும் சொல்லப்பட்டுள்ளது

அவர்கள் யார் யார்? ''

முறாறா பின் ரபீஇல் ஆமிரீ, ஹிலால்பின் உமையா - அல் வாகி:.பி''

கஅப் (ரலி) அவர்கள் சொல்கிறார்கள்: அவர்கள் என்னிடம் சொன்ன இரண்டு பேரும் எப்படிப்பட்டவர்கள் எனில், இருவரும் பத்றுப் போரில் கலந்துகொண்டவர்கள்., அவ்விருவரிலும் எனக்கு ஒரு முன்மாதிரி இருந்தது! ''

கஅப் (ரலி) அவர்கள் சொல்கிறார்கள்: அவ்விருவரைப் பற்றியும் மக்கள் என்னிடம் சொன்போது நான் பேசாமல் சென்றுவிட்டேன்,,

وَنَهى رَسُوْلُ اللهِ ﷺ عَنْ كَلاَمِنَا أَيُّهَا الثَّلاَثَةُ مِنْ بَيْنِ مَنْ تَخلَّفَ عَنْهُ. قَالَ: فَاجْتَنَبَنَا النَّاسُ – أَوْ قَالَ : تَغَيَّرُوْا لَنَا – حَتَّي تَنَكَّرَتْ لِى فِيْ نَفْسِيَ الأَرْضُ، فَمَا هِيَ بِالأَرْضِ الَّتِي أَعْرِفُ، فَلَبِثْنَا عَلَى ذَلِكَ خَمْسِيْنَ لَيْلَةً. فَأَمَّا صَاحِبَايَ فَاسْتَكَانَا وَقَعَدَا فِيْ بُيُوْتِهِمَا يَبْكِيَانِ، وَأَمَّا أَنَا فَكُنْتُ أَشَبَّ الْقَوْمِ وَ أَجْلَدَهُمْ ، فَكُنْتُ أَخْرُجُ فَأَشْهَدُ الصَّلاَةَ مَعَ الْمُسْلِمِيْنَ، وَأَطُوْفُ فِيْ الأَسْوَاقِ وَلاَ يُكَلِّمُنِي أَحَدٌ، وَآتِى رَسُوْلَ اللهِ ﷺ فَأُسَلِّمُ عَلَيْهِ، وَهُوَ فِى مَجْلِسِهِ بَعْدَ الصَّلاَةِ فَاقُوْلُ فِي نَفْسِى : هَلْ حَرَّكَ شَفَتَيْهِ بِرَدِّ السَّلاَمِ أَمْ لاَ؟

போரில் கலந்து கொள்ளாமல் பின்தங்கியவர்களில் எங்கள் மூவரிடம் மட்டும் எவரும் பேசக்கூடாதென நபி (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள். மக்கள் எங்களை விட்டும் ஒதுங்கிக்கொண்டார்கள். (அல்லது இந்த இடத்தில் கஅப் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கலாம் :) எங்கள் விஷயத்தில் மக்களின் நடவடிக்கை மாறிவிட்டது,

எனது மனத்தில் விரக்தி ஏற்பட்டு இந்தப் பூமியே என்னைப் பொறுத்து அந்நிய பூமியாகத் தென்பட்டது. நான் முன்பு அறிந்த பூமியாக அது இல்லை. ஐம்பது இரவுகளாக இந்நிலையிலேயே நாங்கள் இருந்தோம்.

என்னுடைய இரு தோழர்களோ அடங்கிவிட்டார்கள். அழுத வண்ணம் வீட்டிலேயே முடங்கிக்கிக் கிடந்தார்கள். மூன்று பேரில் நான்தான் வயதில் குறைந்தவனாகவும் வலிமை மிக்கவனாகவும் இருந்தேன்.

நான் வெளியே செல்வேன். முஸ்லிம்களோடு தொழுகையில் கலந்துகொள்வேன். கடைவீதிகளிலே சுற்றுவேன். யாருமே என்னுடன் பேசமாட்டார்கள். நபி (ஸல்)அவர்கள் தொழுகையை முடித்துக் கொண்டு அதே இடத்தில் அமர்ந்திருக்கும்போது அவர்களிடம் ஆஜராவேன்., அவர்களுக்கு ஸலாம் சொல்வேன். ஸலாத்திற்கு பதில் சொல்லிட உதடுகளை அசைக்கிறார்களா? இல்லையா? என்று எனக்கு நானே கேட்டுக்கொள்வேன்.

ثُمَّ اُصَلِّى قَرِيْبًا مِنْهُ، وَأَسَارِقُهُ النَّظَرَ، فَاِذَا أَقْبَلْتُ عَلَى صَلاَتِى نَظَرِ اِلَيَّ ، وَاِذَا الْتَفَتُّ نَحْوَهُ أَعْرَضَ عَنِّى ، حَتَّى اِذَا طَالَ ذَلِكَ عَلَيَّ مِنْ جَفْوَةِ الْمُسْلِمِيْنَ مَشَيْتُ حَتَّى تَسَوَّرْتُ جِدَارَ حَائِطِ أَبِى قَتَادَةَ وَهُوَ ابْنُ عَمِّى وَ أَحَبُّ النَّاسِ اِلَيَّ، فَسَلَّمْتُ عَلَيْهِ فَوَاللهِ مَا رَدَّ

عَلَيَّ السَّلاَمَ، فَقُلْتُ لَهُ: يَا اَبَا قَتَادَةَ أَنْشُدَكَ بِاللهِ هَلْ تَعْلَمُنِي اُحِبُّ اللهَ وَ رَسُوْلَهُ؟ فَسَكَتَ، فَعُدْتُ فَنَاشَدْتُهُ فَسَكَتَ، فَعُدْتُ فَنَاشَدْتُهُ فَقَالَ: اللهُ وَ رَسُوْلُهُ أعْلَمُ، فَفَاضَتْ عَيْنَايَ، وَتَوَلَّيْتُ حَتَّي تَسَوَّرْتُ الْجِدَارَ، فَبَيْنَا اَنَا أَمْشِي فِي سُوْقِ الْمَدِيْنَةِ اَذَا نَبَطِيٌّ مِنْ نَبَطِ أَهْلِ الشَّامِ مِمّنْ قَدِمَ بِالطّعَامِ يَبِيْعُهُ بِالْمَدِيْنَةِ يَقُوْلَ: مَنْ يدُلُّ عَلَي كَعْبِ بْنِ مَالِكٍ؟ فَطَفَقَ النَاسُ يُشِيْرُوْنَ لَهُ اِلَيَّ حَتَّي جَاءَنِي فَدَفَعَ اِلَيَّ كِتَابًا مِنْ مَلِكِ غَسَّانٍ ، فَقَرَأْتُهُ فَإذَا فِيْهِ:

பிறகு அவர்களுக்கு அருகிலேயே தொழுவேன். ஓரக்கண்ணால் அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பேன். நான் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் பொழுது நபியவர்கள் என்னைப் பார்ப்பார்கள். நான் அவர்களின் பக்கம் முன்னோக்கும்பொழுது என்னை விட்டும் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்.

இவ்வாறாக முஸ்லிம்களின் ஒட்டுமொத்தப் புறக்கணிப்பு நீடிப்பதை நான் உணர்ந்தபோது - ஒருநாள் அப்படியே நடந்து சென்றேன். அபூ கத்தாதாவின் தோட்டத்துச் சுவர் ஏறி உள்ளே சென்றேன். அவர் என் சிறிய தந்தையின் மகன். எனக்கு மிகவும் பிரியமானவர். அவருக்கு நான் ஸலாம் சொன்னேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர் எனது ஸலாத்திற்கு பதில் சொல்ல வில்லை. நான் கேட்டேன்: அபூ கத்தாதாவே! அல்லாஹ்வைக்கொண்டு சத்தியமிட்டுக் கேட்கிறேன்: நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக் கிறேன் என்பது உமக்குத் தெரியாதா? - அவர் மௌனமாக இருந்தார். மீண்டும் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்து அவரிடம் அவ்வாறு கேட்டேன். அப்பொழுதும் அவர் மௌனமாகவே இருந்தார். மூன்றாவது தடவையும் கேட்டேன். அப்பொழுது சொன்னார். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும்தான் மிகவும் அறிந்த வர்கள்.

என் கண்களிரண்டும் கண்ணீர் வடித்தன. வந்த வழியே திரும்பி சுவர் ஏறித்தாவி வெளியே வந்தேன்.

அப்படியே மதீனாவின் கடைவீதியில் நான் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, உணவுப் பொருள் களை மதீனாவில் விற்பனை செுய்ய வந்திருந்த சிரியா தேசத்து விவசுாயி ஒருவன் அங்கே, கஅப் பின் மாலிக்கை அறிவித்துக்கொடுப்பவர் யார்? என்று கேட்டுக்கொண்டிருந்தான். உடனே மக்கள் என் பக்கம் சுட்டிக்காட்டி அவனுக்கு என்னைத் தெரியப்படுத்தத் தொடங்கினார்கள். உடனே அவன் என்னிடம் வந்தான். கஸ்ஸான் மன்னன் எழுதிய ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தான். நான் எழுத்தறிவு உடையவனாக (அதாவது எழுதவும் படிக்கவும் தெரிந்தவனாக) இருந்தேன். அந்தக் கடிதத்தைப் படித்தேன். அதில் எழுதப் பட்டிருந்தது:

أَمَّا بَعْدُ فَإِنَّهُ قَدْ بَلَغَنَا أَنَّ صَاحِبَكَ قَدْ جَفَاكَ، وَلَمْ يَجْعَلْكَ اللهُ بِدَارِ هَوَانٍ وَلاَ مَضِيْعَةٍ، فَالْحَقْ بِنَا نُوَاسِكَ، فَقُلْتُ حَيْنَ قَرَأْتُهَا : وَهَذِهِ أَيْضًا مِنَ الْبَلاَءِ فَتَيَمَّمْتُ بِهَا التَّنُّوْرَ فَسَجَرْتُهَا

நான் எழுதுவது என்னவெனில், உம்முடைய தோழர் உம்மை வெறுத்து ஒதுக்கிவிட்டார் எனும் செய்தி எங்களுக்குக் கிடைத்துள்ளது. கேவலமும் உரிமையிழப்பும் உடைய நாட்டில் அல்லாஹ் உம்மை வைத் திருக்க வேண்டாம். எங்களிடம் வந்துவிடும். நாங்கள் உம்மை உபசுரிப்போம்”

அதைப் படித்தபொழுது - இதுவும் ஒரு சோதனையே! என்று சொன்னேன், பிறகு அந்தக் கடிதத்தை அடுப்பில் தூக்கி வீசி எரித்து விட்டேன்.

حَتَّى اِذَا مَضَتْ أَرْبَعُوْنَ مِنَ الْخَمْسِيْنَ وَ اسْتَلْبَثَ الْوَحْيُ اِذَا رَسُوْلُ رَسُوْلِ اللهِ ﷺ يَأتِيْنِي ، فَقَالَ : اِنَّ رَسُوْلَ اللهِ ﷺ يَـــأمُرُكَ أنْ تَعْتَزِلَ امْرَأتَكَ ، فَقُلْتُ: أُطَلِّقُهَا، امْ مَاذَا أفْعَلُ؟ قَالَ: لاَ، بَلْ اعْتَزِلْهَا فَلاَ تَقْرَبْهَا، وَأرْسَلَ اِلَي صَاحِبَيَّ بِمِثْلِ ذَلِكَ. فَقُلْتُ لامْرَأتِي: الْحَقِي باِهْلِكِ فَكُوْنِي عِنْدَهُمْ حَتَّي يَقْضِيَ اللهُ فِي هَذَا الاْمْرِ،

- இவ்வாறு ஐம்பதில் நாற்பது நாட்கள் கழிந்துவிட்டபொழுது - வஹி எனும் இறையருட்செய்தி வருவது தாமதமானபொழுது நபியவர்களின் தூதுவர் என்னிடம் வந்துசொன்னார்: நீர் உம் மனைவியை விட்டும் பிரிந்திருக்குமாறு நபியவர்கள் உமக்குக் கட்டளையிடுகிறார்கள்.

அவளை நான் விவாவ ரத்து செய்துவிடவா? அல்லது நான் என்ன செய்யவேண்டும்? என்று நான் கேட்டேன்,

இல்லை., அவளை விட்டும் விலகியிரும்! அவளை நெருங்கக் கூடாது என்றார் அவர்.

இதேபோன்ற கட்டளையை என்னிரு தோழர்களுக்கும் நபி (ஸல்) அனுப்பியிருந்தார்கள். நான் என் மனைவியிடம் சென்னேன்: நீ உன் பெற்றோரிடம் சென்றுவிடு! அல்லாஹ் இந்த விஷயத்தில் ஒரு தீர்ப்பை அளிக்கும் வரையில் அவர்களிடம் தங்கியிரு,,

فَجَاءَتْ امْرَأةُ هِلاَلِ بْنِ اُمَيَّةَ رَسُوْلَ اللهِ ﷺ فَقَالَتْ لَهُ : يَا رَسُوْلَ اللهِ اِنَّ هِلاَلَ بْنَ أمَيَّةَ شَيْخٌ ضَائِعٌ لَيْسَ لَهُ خَادِمٌ، فَهَلْ تَكْرَهُ أنْ أخْدَمَهُ؟ قَالَ: لاَ، وَلَكِنْ لاَ يَقْرَبَنَّكِ . فَقَالَتْ: اِنَّهُ وَاللهِ مَا بِهِ مِنْ حَرَكَةٍ اِلَي شَيْءٍ، وَ وَاللهِ مَا زَالَ يَبْكِي مُنْذُ كَانَ مِنْ أمْرِهِ مَاكَانَ اِلَى يَوْمِهِ هَذَا. فَقَالَ لِيْ بَعْضُ أهْلِي: لَو اسْتَأذَنْتَ رَسُوْلَ اللهِ ﷺ فِي امْرَأتِكَ، فَقَدْ اَذِنَ لاِمْرَأةِ هِلاَلِ بْنِ أمَيَّةَ أنْ تَخْدِمَهُ؟ فَقُلْتُ : لاَ اَسْتَأذِنُ فِيْهَا رَسُوْلَ اللهِ ﷺ ، وَ مَا يُدْرِيْنِي مَاذَا يَقُوْلُ رَسُوْلُ اللهِ ﷺ اِذَا اسْتَأذَنْتُهُ فِيْهَا وَأنَا شَابٌ! فَلَبِثْتُ بِذَلِكَ عَشْرَ لَيَـــالٍ، فَكَمُلَ لَنَا خَمْسُوْنَ لَيْلَةً مِنْ حِيْنَ نَهَي عَنْ كَلاَمِنَا.

ஹிலால் பின் உமையாவின் மனைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து சொன்னாள்: ஹிலால் பின் உமையா தள்ளாத வயதுடைய முதியவராக இருக்கிறார். அவருக்குப் பணிவிடை செய்பவர் யாரும் இல்லை. நான் அவருக்குப் பணிவிடை செஷய்வதைத் தாங்கள் விரும்பவில்லையா? என்ன?,,

அதற்கு நபியவர்கள் சொன்னார்கள்: அப்படியில்லை., ஆனால் அவர் உன்னை நெருங்கக்கூடாது.

அதற்கு அந்தப் பெண்மணி கூறினாள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எந்தச் செயலின் பக்கமும் எந்த அசைவும் அவரிடம் இல்லை. அவரது விவகாரம் இவ்வாறு ஆனதிலிருந்து இன்றுவரை அவர் ஓயாது அழுது கொண்டே இருக்கிறார்''

என்னுடைய குடும்பத்தினர் சிலர் என்னிடம் சொன்னார்கள்: உமது மனைவி விஷயத்தில் நபியவர்களிடம் நீர் அனுமதி கேட்கக்கூடாதா?

நான் சொன்னேன்: அவள் விஷயத்தில் நபியவர்களிடம் நான் அனுமதி கேட்டால் நபியவர்கள் சொல்லப் போவதென்ன என்பது எனக்கு என்ன தெரியும்? நானோ இளைஞனாக இருக்கிறேன்.

இதே நிலையில் பத்து நாட்கள் கழிந்தன. எங்களோடு எவரும் பேசக்கூடாது என்று தடைவிதித்து ஐம்பது நாட்கள் நிறைவடைந்தன!

ثُمَّ صَلَّيْتُ صَلاَةَ الْفَجْرِ صَبَاحَ خَمْسِيْنَ لَيْلَةً عَلَي ظَهْرِ بيْتٍ مِنْ بُيُوْتِنَا ، فَبَيْنَا أَنَا جَالِسٌ عَلَى الحَالِ التِّي ذَكَرَ اللهُ تَعالَي مِنَّا ، قَدْ ضَــاقَتْ عَلَيَّ نَفْسِى وَ ضَاقَتْ عَلَيَّ الاَرْضُ بِمَا رَحُبَتْ ، سَمِعْتُ صَوْتَ صَارِخٍ أَوْفَى عَلَى سَلْعٍ يَقُوْلُ بَأَعْلَى صَوْتِهِ: يَا كَعَبُ بْنُ مَالِــكٍ أَبْشِــرْ، فَخَرَرْتُ سَاجِدًا، وَعَرَفْتُ أَنَّهُ قَدْجَاءَ فَرَجٌ فَآذَنَ رَسُوْلُ اللهِ ﷺ النَّاسَ بتَوْبَةِ اللهِ عَزَّ وَجَلَّ عَلَيْنَا حِيْنَ صَلَّى صَلاَةَ الْفَجْرِ

## உண்மைக்குக் கிடைத்த பரிசு

பிறகு ஐம்பதாவது நாள் அதிகாலையில் எங்களது வீடொன்றின் மாடியில் நான் ஃபஜ்ர் தொழுகை தொழுதுகொண்டிருந்தேன். நான் அந்த நிலையிலே - அதாவது, எங்களைப் பற்றி (குர்ஆனில்) அல்லாஹ் கூறியுள்ளதுபோல் -உயிர்வாழ்வதே எனக்குக் கஷ்டமாகிவிட்டது. பூமி இவ்வளவு விரிவாக இருந்தும் என்னைப் பொறுத்து குறுகிப்போய் விட்டது என்ற அந்நிலையிலே இருந்துகொண்டிருந்தேன். அப்பொழுது ஸல்வு என்ற மலை மீதேறி சப்தமிட்டு அழைப்பவரின் அழைப்பைக் கேட்டேன்!

ஓ!....! கஅப் பின் மாலிக்! நற்செய்தி பெறுவீராக!"

-அப்படியே ஸஜ்தாவில் விழுந்தேன். நமது துன்பம் நீங்கியது என்பதை அறிந்தேன்!

நபி(ஸல்)அவர்கள் ஸு ப்ஹு தொழுதபொழுது, எங்களது பாவமன்னிப்புக் கோரிக்கையை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு எங்கள் மீது மீண்டும் கருணை பொழிந்துவிட்டான் என்பதை மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

فَذَهَبَ النَّاسُ يُبَشِّرُوْنَنَا ، فَذَهَبَ قِبَلَ صَاحِبَيَّ مُبَشِّرُوْنَ، وَرَكَضَ رَجُلٌ اِلَيَّ فَرَسًا وَسَعَي سَاعٍ مِنْ أَسْلَمَ قِبَلِــيْ وَ أَوْفَــى عَلَــي الْجَبَلِ، وَكَانَ الصَّوْتُ أَسْرَعَ مِنَ الْفَرَسِ، فَلَمَّا جَاءَنِيَ الَّذِي سَمِعْتُ صَوْتَهُ يُبَشِّرُنِي نَزَعْتُ لَهُ ثَوْبَيَّ فَكَسَوْتُهُمَا اِيَّاهُ بِبَشَارَتِهِ، وَاللهِ مَا أَمْلِكُ غَيْرَهُمَا يَوْمَئِذٍ ، واِسْتَعَرْتُ ثَوْبَيْنِ فَلَبِسْتُهُمَا وَانْطَلَقْتُ أَتَأَمَّمُ رَسُوْلَ اللهِ ﷺ يَتَلَقَّانِيَ النَّاسُ فَوْجاً فَوْجًا يُهَنِّئُوْنَنِى بِالتَوْبَةِ وَ يَقُوْلُوْنَ لِيْ: لِتَهْنِكَ تَوْبَةُ اللهِ عَلَيْكَ،

உடனே மக்கள் அந்த நற்செய்தியை எங்களுக்கு அறிவித்திடப் புறப்பட்டு விட்டார்கள். என் இரு தோழர்களை நோக்கியும் நற்செய்தியாளர்கள் சென்றனர். ஒருவர் குதிரை மீது ஏறி என்னை நோக்கி விரைந்து வந்தார். அஸ்லம் கிளையைச் சேர்ந்த ஒருவரோ என்னை நோக்கி விரைந்து வந்தவர் மலை உச்சியிலே ஏறிவிட்டார். அவரது குரலின் வேகம் குதிரையை விடவும் விரைவானதாக இருந்தது.

எவரது உரத்த குரலினால் நற்செய்தியை நான் செவியுற்றேனோ அவர் என்னிடம் வந்தபோது அவரது நற்செய்திக்குப் பரிசாக என்னுடைய இரண்டு ஆடைகளையும் களைந்து அவற்றை அவருக்கு அணிவித்தேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அப்பொழுது அவற்றைத் தவிர வேறு ஆடைகள் என்னிடம் இல்லை. பிறகு இரண்டு ஆடைகளை இரவல் வாங்கி அணிந்துகொண்டு நபி (ஸல்) அவர்களிடம் ஆஜராக நாடியவாறு புறப் பட்டேன். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து என்னைச் சந்தித்தனர். பாவமன்னிப்புக் கிடைத்ததன் பேரில் என்னை வாழ்த்திக் கொண்டிருந்தனர்! மக்கள் என்னிடம் செஷான்னார்கள்: உமது பாவமன்னிப்புக் கோரிக் கையை அல்லாஹ் ஏற்றுக்கொண்டதன் பேரில் உமக்கு வாழ்த்துகள்!,,

حَتّى دَخَلْتُ الْمَسْجِدَ فَإِذَا رَسُوْلَ اللهِ ﷺ جَالِسٌ حَوْلَهُ النَّاسُ، فَقَامَ طَلْحَةُ بْنُ عُبَيْدِ اللهِ ﷺ يُهَرْوِلُ حَتَّى صَافَحَنِي وَ هَنَّأنِي، وَاللهِ مَاقَامَ رَجُلٌ مِنَ الْمُهَاجِرِيْنَ غَيْرُهُ فَكَانَ كَعْبٌ لاَ يَنْسَاهَا لِطَلْحَةَ قَالَ كَعْبٌ: فَلَمَّا سَلَّمْتُ عَلَى رَسُوْلِ اللهِ ﷺ قَالَ وَهُوَ يَبْرُقُ وَجْهُهُ مِنَ السُّرُوْرِ : أَبْشِرْ بِخَيْرِ يَوْمٍ مَرَّ عَلَيْكَ مُذْ وَلَدَتْكَ أُمُّكَ،

அவ்வாறாக மஸ்ஜிதுக்குள் நுழைந்தேன். அங்கு நபி(ஸல்)அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் மக்கள் அமர்ந்திருந்தனர். தல்ஹா பின் உபைதுல்லாஹ் எழுந்து என்னை நோக்கி ஓடிவந்தார். எனக்குக் கைலாகு கொடுத்தார். எனக்கு வாழ்த்துத் தெரிவித்தார். அல்லாஹ் வின்மீது சத்தியமாக! அவரைத் தவிர முஹாஜிர்கள் வேறெவரும் எழுந்து வரவில்லை. தல்ஹா (ரலி) அவர்களின் இந்த உபகாரத்தை கஅப் (ரலி) அவர்கள் என்றென்றும் மறக்காமல் இருந்தார்கள்!

கஅப் (ரலி)அவர்கள் கூறுகிறார்கள்: நான் நபி(ஸல்)அவர்களுக்கு ஸலாம் சொன்னபொழுது - நபியவர்கள் கூறினார்கள்., அவர்களின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்துக் கொண்டிருந்தது: உம் அன்னை உம்மை ஈன்றெடுத்த நாள்முதல் உமக்குக் கிடைக்கப்பெறாத சிறந்ததொரு நாளினைக் கொண்டு மகிழ்வு அடைவீராக!

أَمَّا بَعْدُ فَقُلْتُ : أَمِنْ عِنْكَ يَارَسُوْلَ اللهِ؟ أَمْ مِنْ عِنْدِ اللهِ ؟ قَالَ: لاَ، بَلْ مِنْ عِنْدِ اللهِ عَزَّ وَ جَلَّ ، وَكَانَ رَسُوْلُ اللهِ ﷺ إِذَا سُرَّ اسْتَنَارَ وَجْهُهُ حَتَّي كَأَنَّ وَجْهَهُ قِطْعَةُ قَمَرٍ. وَكُنَّا نَعْرِفُ ذَلِكَ مِنْهُ ، فَلَمَّا جَلَسْتُ بَيْنَ يَدَيْهِ قُلْتُ: يَا رَسُوْلَ اللهِ اِنَّ مِنْ تَوْبَتِي أَنْ أَنْخَلِعَ مِنْ مَالِي صَدَقَةً اِلَى اللهِ وَ رَسُوْلِهِ. فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : أَمْسِكْ عَلَيْكَ بَعْضَ مَالِكَ فَهُوَ خَيْرٌ لَكَ، قُلْتُ: اِنِّي أَمْسِكُ سَهْمِي الَّذِي بِخَيْبَرَ.وَقُلْتُ : يَا رَسُوْلَ اللهِ اِنَّ اللهَ تَعَالَى اَنَّمَا أَنْجَانِي بِالصِّدْقِ ، وَ اِنَّ تَوْبَتِي اَنْ لاَ اُحَدِّثَ اِلاَّ صِدْقًا مَا بَقِيْتُ، فَوَ اللهِ مَا عَلِمْتُ أَحَدًا مِنَ الْمُسْلِمِيْنَ أَبْلاَهُ اللهُ تَعَالَي فِي صِدْقِ الْحَدِيْثِ مُنْذُ ذَكَرْتُ ذَلِكَ لِرَسُوْلِ اللهِ ﷺ أَحْسَنَ مِمّا أَبْلاَنِي اللهُ تَعَالَى، وَاللهِ مَا تَعَمَّدْتُ كِذْبَةً مُنْذُ قُلْتُ ذَلِكَ لِرَسُوْلِ اللهِ ﷺ اِلَى يَوْمِي هَذَا، وَ اِنِّي أَرْجُوْ أَنْ يَحْفَظَنِي اللهُ تَعَالَى فِيْمَا بَقِيَ.

நான் கேட்டேன்: இது தங்களிடம் நின்றும் உள்ளதா? அல்லாஹ்வின் புறத் திலிருந்து வந்ததா? ''

நபியவர்கள்: இல்லை., இது, கண்ணியமும் மகத்துவமும் பொருந்தியவனாகிய அல்லாஹ்வின் புறத்தில் இருந்து வந்ததாகும் ''

-நபி (ஸல்)அவர்கள் மகிழ்ஷ்ஷியடைந்தால் அவர்களின் முகம் ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அது சந்திரனின் ஒருபகுதியைப் போலிருக் கும். நபியவர்களின் இந்நிலையை நாங்கள் அறிபவர்களாய் இருந் தோம்.

நான் நபி(ஸல்) அவர்களின் முன்னால் உட்கார்ந்தபொழுது சொன்னேன்: அல்லாஹ்வின் தூதரே! எனக்கு மன்னிப்புக் கிடைத்ததன் பொருட்டு நன்றி செலுத்திடவே எனது எல்லாச்சொத்துகளையும் அல்லாஹ் - ரஸூ லின் பாதையில் தர்மம் செய்கிறேன் ''

அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: உமது சொத்தில் சிறிது அளவை உமக்காக வைத்துக் கொள்ளும். இதுவே உமக்குச் சிறந்ததாகும்"

நான் சொன்னேன்: கைபரில் இருந்து எனக்குக் கிடைத்த பங்கை எனக்காக நான் வைத்துக் கொள்கி றேன் ''

மேலும் நான்சொன்னேன்: அல்லாஹ்வின் தூதரே! உண்மை பேசியதனால் தான் அல்லாஹ் எனக்கு ஈடேற்றம் அளித்துள்ளான். எதிர்காலத்தில் என் ஆயுள் முழுவதும் உண்மையே நான் பேசுவேன் என்பதும் - எனக்கு மன்னிப்பு கிடைத்ததன் பொருட்டு நான் செலுத்தும் நன்றியாக உள்ளது.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபி(ஸல்) அவர்களின் முன்னிலையில், உண்மையே பேசுவேன் என நான் வாக்குறுதி கொடுத்த நாளில் இருந்து இன்று வரை முஸ்லிம்களில் எவரைக் குறித்தும் (நான் அறியேன் அதாவது) உண்மை பேசும் விஷயத்தில் அல்லாஹ் என்னைச் சோதனைக் குள்ளாக்கியதை விடவும் அழகாக அல்லாஹ் அவரைச் சோதனைக்குள்ளா கியதை நான் அறியேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபியவர் களிடம் அவ்வாறு நான் வாக்குறுதி கொடுத்ததில் இருந்து இன்றைய தினம் வரை எந்தச் சூழ்நிலையிலும் பொய் பேச நான் நாடியதே இல்லை. எதிர்காலத்திலும் அதிலிருந்து அல்லாஹ் என்னைப் பாதுகாப்பான் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு''

قَالَ: فَأَنْزَلَ اللهُ تَعَالَى: { لَقَدْ تَابَ اللهُ عَلَى النَّبِيِّ وَالْمُهَاجِرِيْنَ وَالاَنْصَارِالَّذِيْنَ اتَّبَعُوْهُ فِي سَاعَةِ العُسْرَةِ } حتَّى بَلَغَ : اِنَّـــهُ بِهِـــمْ رَؤُوْفٌ رَحِيْمٌ. وَعَلَى الثَّلاَثَةِ الّذِيْنَ خُلِّفُوْا حَتَّى اِذَاضَاقَتْ عَلَيْهِمُ الاَرْضُ بِمَا رَحُبَتْ} حَتَّى بَلَغَ اتَّقُوْا اللهَ وَكُوْنُوا مَعَ الصَّادِقِيْنَ ، (سورة التوبة ،الآية: ١١٧– ١١٩)

கஅப் (ரலி) அவர்கள் சொல்கிறார்கள்: அப்போது அல்லாஹ் இறக்கியருளிய வசனம் இதுதான்: நபியையும் - துன்பம் சூழ்ந்த நேரத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்த முஹாஜிர்களையும் அன்ஸர்களையும் அல்லாஹ் பொறுத்தருளினான். அவர்களில் ஒருசிலரின் உள்ளங்கள் நெறிதவறுதலின் பால் சற்று சாய்ந்துவிட்டிருந்த பிறகும்! (ஆனால் அவர்கள் நெறிதவறிச் செல்லாமல் நபிக்கு பக்கபலமாக இருந்தார்கள்! அப்பொழுது) அல்லாஹ் அவர்களை மன்னித்தான். திண்ணமாக அவன் அவர்கள் விஷயத்தில் அதிகப் பரிவும் கருணையும் கொண்டவனாக இருக்கிறான். மேலும் விவகாரம் ஒத்தி போடப்பட்டிருந்த மூவரையும் அவன் மன்னித்து விட் டான். அவர்களது நிலைமை எந்த அளவு மோசமாகி விட்டதெனில், பூமி இத்துணை விரிவாய் இருந்தும் அவர்களைப் பொறுத்து அது குறுகிவிட்டிருந்தது., அவர்கள் உயிர் வாழ்வதே கஷ்டமாகிவிட்டது. மேலும் அல்லாஹ்விடம் இருந்து தப்பிப்பதற்கு அவனது அருளின் பக்கம் திரும்புவதைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். பின்னர் பாவமன்னிப்புக் கோரி தன்னிடம் அவர்கள் மீண்டு வர வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவர்களின் மீது கருணை பொழிந்தான். திண்ணமாக அவன் பெரும் மன்னிப்பாளன்.,கருணை மிக்கவன். இறைநம்பிக்கைகொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். வாய்மை யாளர்களுடன் இருங்கள்'' (9 : 117 - 119)

قَالَ كَعْبٌ : وَاللهِ مَا اَنعَمَ اللهُ عَلَيَّ مِنْ نِعْمَةٍ قَطُّ بَعْدَ اِذْ هَدَانِيَ اللهُ لِلاِسْلاَمِ أَعْظَمَ فِي نَفْسِي مِنْ صِـــدْقِي رَسُـــوْلَ اللهِ ﷺ أَنْ لاَ اَكُوْنَ كَذَبْتُهُ، فَاَهْلِكَ كَمَا هَلَكَ الَّذِيْنَ كَذَبُوْا ., اِنَّ اللهَ تَعَالَى قَالَ لِلَّذِيْنَ كَذَبُوْا حِيْنَ أَنْزِلَ الْوَحْيُ شَرَّ مَا قَالَ لِاحَدٍ، فَقَـــالَ اللهُ تَعَالَى : سَيَحْلِفُوْنَ بِاللهِ لَكُمْ اِذَا انْقَلَبْتُمْ اِلَيْهِمْ لِتُعْرِضُوْا عَنْهُمْ فَأَعْرِضُوْا عَنْهُمْ اِنَّهُمْ رِجْسٌ وَمَأْوَاهُمْ جَهَـــنَّمُ جَـــزَاءً بِمَـــا كَـــانُوْا يَكْسِبُوْنَ. يَحْلِفُوْنَ لَكُمْ لِتَرْضَوْا عَنْهُمْ فَاِنْ تَرْضَوْا عَنْهُمْ فَاِنَّ اللهَ لاَ يَرْضَى عَنِ الْقَوْمِ الْفَاسِقِيْنَ } – سورة التوبة ،الآية: ٩٥ –٩٦

கஅப் (ரலி) அவர்கள் மேலும் சொல்கிறார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இஸ்லாத்தின் பால் அல்லாஹ் எனக்கு வழிகாட்டிய பின்பு நபி(ஸல்)அவர்களிடம் நான் உண்மை பேசியதைவிட பெரியதோர் அருட்

கொடையை அல்லாஹ் என் மீது அருளிடவில்லை! அவர்களிடம் நான் பொய்சொல்லி இருந்தால் பொய் சொன்னவர்கள் அழிந்து போனதுபோல் நானும் அழிந்துபோயிருப்பேன். நிச்சயமாக அல்லாஹ் (வஹி எனும் இறையருட் செய்தியை இறக்கியருளியபொழுது) பொய் சொன்னவர்கள் குறித்து மிகவும் மோசமான நிலையைக் கூறினான்., வேறு எவர் விஷயத்திலும் அப்படிக் கூறவில்லை. அல்லாஹ் கூறினான்:

நீங்கள் அவர்களிடம் திரும்பிவரும்பொழுது அவர்களை நீங்கள் கண்டு கொள்ளாமல் இருந்திட வேண்டும் என்பதற்காக உங்கள் முன்னிலையில் அவர்கள் அல்லாஹ்வின் பெயரில் சத்தியம் செய்வார்கள். எனவே நீங்கள் அவர்களைக் கண்டு கொள்ளாமலே இருந்து விடுங்கள். ஏனெனில் அவர்கள் அசுத்த மானவர்கள். உண்மையில் அவர்கள் சேருமிடம் நரகம்தான். அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த தீமைகளுக்கு இதுவே கூலியாகும். நீங்கள் அவர்கள் மீது திருப்தி கொண்டிட வேண்டும் எனும் நோக்கத்தில் அவர்கள் சத்தியம் செய்வார்கள். நீங்கள் அவர்கள் மீது திருப்தி கொண்டாலும் திண்ணமாக அல்லாஹ், பாவிகளான இத்தகைய மக்கள் மீது திருப்பதி கொள்ளமாட்டான்" (9 : 95 - 96)

قَالَ كَعْبٌ : كُنَّا خُلِّفْنَا أَيُّهَا الثَّلاَثَةُ عَنْ أَمْرِ أُولئك الَّذِيْنَ قَبلَ مِنْهُمْ رَسُوْلُ اللهِ ﷺ حِيْنَ حَلَفُوْا لَهُ ، فَبَايَعَهُمْ وَ اسْتَغْفَرَ لَهُمْ، وَأَرْجَأَ رَسُوْلُ اللهِ ﷺ أَمْرَنَا حَتَّي قَضَي اللهُ فِيْهِ بِذَلِكَ ، قَالَ اللهُ تَعَالَي: { وَعَلَي الثَّلاثَةِ الَّذِيْنَ خُلِّفُوْا } وَلَيْسَ الَّذِي ذُكِرَ مِمَّا خُلِّفْنَا تَخَلُّفَنَا عَنِ الْغَزْوِ، وَ اِنَّمَا هُوَ تَخْلِيْفُهُ اِيَّانَا وَ اِرْجَاؤُهُ أَمْرَنَا عَمَّنْ حَلَفَ لَهُ وَ اعْتذَرَ اِلَيْهِ فَقَبلَ مِنْهُ. متفق عليه

கஅப் (ரலி) அவர்கள் மேலும் சொல்கிறார்கள்: எவர்கள் நபியவர்களிடம் வந்து சத்தியம் செய்தார்களோ, நபியவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு அவர்களிடம் விசுவாசுப் பிரமாணம் வாங்கினார்களோ அவர்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்பும் கோரினார்களோ அத்தகையவர்களின் விவ காரத்தைவிடவும் எங்கள் மூவரின் தீர்ப்பு பிற்படுத்தப்பட்டது. அல்லாஹ் பின் வருமாறு குர்ஆன் வசனத்தை இறக்கியருளி எங்கள் விவகாரத்தில் தீர்ப்பு அளிக்கும் வரையில் நபி (ஸல்) அவர்கள் எங்கள் விவகாரத்தை ஒத்தி போட்டார்கள்"

விவகாரம் ஒத்தி போடப்பட்ட மூவரையும் (அல்லாஹ் மன்னித்து விட்டான்")

- இங்கு குல்லி..பூ (خُلِّفُوْا) எனும் வார்த்தை, நாங்கள் மூவரும் போரில் கலந்துகொள்ளாமல் பின்தங்கியிருந்தவர்கள் எனும் ரீதியில் சொல்லப்பட்டதல்ல, மாறாக, எவர்கள் நபியவர்களிடம் வந்து சத்தியம் செய்து சாக்குப்போக்குச் சொல்லி - நபியவர்களும் அதனை ஒப்புக் கொண்டார்களோ அவர்களை விடவும் எங்களது தீர்ப்பை (تَخْلِيْفُ) பிற்படுத்துதல், எங்களது விவகாரத்தை ஒத்திப்போடுதல் என்பதே கருத்து. (புகாரி, முஸ்லிம்)

وَفِيْ رِوَايَةٍ { أَنَّ النَّبِيَّ ﷺ خَرَجَ فِيْ غَزْوَةِ تَبُوْكٍ يَوْمَ الْخَمِيْسِ ، وَكَانَ يُحِبُّ أَنْ يَخْرُجَ يَوْمَ الْخَمِيْسِ }

وَفِيْ رِوَايَةٍ { وَ كَانَ لاَ يَقْدُمُ مِنْ سَفَرٍ اِلاَّ نَهَارًا فِيْ الضُّحَى ، فَاِذَا قَدِمَ بَدَأَ بِالْمَسْجِدِ فصَلَّي فِيْهِ رَكْعَتَيْنِ ثُمَّ جَلَسَ فِيْهِ }

மற்றோர் அறிவிப்பில் உள்ளது: நபி(ஸல்)அவர்கள் தபூக் போருக்குக் கிளம்பியது வியாழக்கிழமையில்! மேலும் வியாழக்கிழமையிலேயே பயணம் புறப்பட விரும்பக் கூடியவர்களாய் இருந்தார்கள்"

இன்னோர் அறிவிப்பில்: பயணத்திலிருந்து திரும்பிவந்தால் முற்பகல் -வேளையில்தான் வருவார்கள். (ஊரை) வந்தடைந்தால் முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுவார்கள். பிறகு அங்கு அமர்ந் திருப்பார்கள்,.

## தெளிவுரை- الشرح

### முதல் கோணல் முற்றும் கோணல்

தபூக் போர் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு நடைபெற்றது. முஸ்லிம்கள் மீது போர் தொடுக்கும் நோக்கத்துடன் ரோம் நாட்டுக் கிறிஸ்தவர்கள் பெரும் படைதிரட்டிக்கொண்டிருப்பதாக நபி(ஸல்) அவர்களுக்குகூஷ் செய்தி கிடைத்தது. அவர்களை எதிர்த்துப் போர் புரிவதற்காக முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு நபியவர்கள் தபூக் நோக்கிப் புறப்பட்டார்கள்.

தபூக்கை அடைந்தபொழுது அங்கு எதிரிகள் யாரையும் காணோம். அவர்களின் போர் நடவடிக்கையோ நடமாட்டமோ எதுவும் இல்லை. முஸ்லிம்களை எதிர்த்து வெற்றிகொள்ள முடியாது எனக்கருதி, கிறிஸ்த வர்கள் பின்வாங்கி விட்டிருந்தார்கள். ஆகையால் நபியவர்கள் தபூக்கில் இருபது நாட்கள் தங்கியிருந்துவிட்டுப் போர் எதுவுமின்றி மதீனா திரும்பினார்கள்.

மதீனாவில் இருந்து முஸ்லிம்கள் போருக்காகப் புறப்பட்டபொழுது கடுமையான கோடை காலம்! பழங்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு நெருங்கிய பருவம்!

நயவஞ்சகர்களோ மறுமை பற்றிக் கவலைப்படாமல் உலக வாழ்க்கைக்கே முன்னுரிமை கொடுத்தார்கள்., அவர்களில் யாரும் போருக்குப் புறப்படவில்லை. கழனிகளிலும் கனிகளிலும் கவனம் செலுத்தினார்கள். நிழலில் தஞ்சம் புகுந்தார்கள். தபூக் நோக்கிப் பயணமாவது அவர்களுக்கு மிகவும் கூஷிரமமாகப்பட்டது! வாய்மையான இறைவிசுவாசிகளோ, நபியவர்களிடம் இருந்து கட்டளை பிறந்ததும் உடனே போருக்குப் புறப்பட்டுவிட்டார்கள்! பயணத்தின் நீண்ட தொலைவோ அறுவடைக்குக் காத்திருந்த கனிகளோ அவர்களின் ஊக்கத்தைக் குலைத் திடவில்லை!

ஆனால் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் தக்க காரணம் எதுவுமின்றியே தபூக் நோக்கிப் புறப்படாமல் பின்தங்கி விட்டார்கள். அவர்கள் வாய்மையான இறைநம்பிக்கையாளரே தவிர வஞ்சகர் அல்லர்! அவர்கள் சொன்னார்கள்:

நபி (ஸல்)அவர்கள் கலந்து கொண்ட எந்தப் போரை விட்டும் நான் எப்பொழுதும் பின் தங்கியதில்லை”

- ஆம்! கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் ஓர் இறைவழிப்போராளியாகவே திகழ்ந்தார்கள்.

### பத்று போரின் பின்னணி!

ஆனால் பத்றுப் போரைத் தவிர”

- பத்று போரில் கஅப் (ரலி) அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் அன்று நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து வெளிக்கிளம்பியது போரை நாடியல்ல. குறைஷிகளின் வாணிபக்குழு ஒன்றைத் தாக்கி விபாரச் சரக்குகளைப் பறிக்க வேண்டும் என்றுதான் புறப்பட்டிருந்தார்கள். அதனால் நபியவர்களுடன் வந்தது குறைந்த அளவிலான தோழர்களே!

இங்கு ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்காவாகூஷிகளின் வாணிபக் குழுமீது தாக்குதல் தொடுத்து அவர்களின் வியாபாரச் சரக்குகளைப் பறிப்பதற்காக நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் புறப் பட்டது வரம்பு மீறிய செயலோ அநீதியோ அல்ல. மக்கத்து குறைஷிகள்தாம் நபியவர்களுக்கும் முஸ்லிம்களுக் கும் கடும் தொல்லை கொடுத்து மக்காவில் வாழும் உரிமையை அவர்களிடம் இருந்து பறித்து விட்டிருந் தார்கள்! வீடு, வாசல்கள், சொத்து - சுகங்கள் அனைத்தை விட்டும் அவர்களை வெளியேற்றியிருந்தார்கள்! ஆகையால் குறைஷிகளின் வாணிபக்குழு மீது தாக்குதல் தொடுத்து அவர்களின் வியாபாரச் சரக்குகளைப்

பறிப்பதற்காக முஸ்லிம்கள் மேற்கொண்ட நடவடிக்கை - தங்களுடைய உரிமைகளில் சிலவற்றைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் முயற்சியே ஆகும்.

ஆக! நபியவர்கள், வாணிபக்குழுவை எதிர்கொள்வதற்காகப் புறப்பட்டதால்தான் அதிகப் படையையும் திரட்டவில்லை., போதிய ஆயுதங்களையும் குவித்துக்கொள்ளவில்லை! நபியவர்களோடு புறப்பட்டிருந்த முஸ்லிம் கள் வெறும் 313 பேர்தான்! உடன்சென்ற வாகனங்களும் குறைவுதான். எழுபது ஒட்டகங்களும் இரண்டு குதிரைகளும்தான் இருந்தன!

முஸ்லிம்கள் புறப்பட்டு வருவதை அறிந்த வாணிபக்குழுவின் தலைவர் அபூ சுப்யான், வியாபாரக் கூட்டத் தைக் காப்பாற்ற வருமாறு குறைஷிகளுக்குத் தூது அனுப்பிவிட்டுப் பாதையைக் கடலோரமாக மாற்றிக் கொண்டுத் தப்பிவிட்டார்.

அபூ ஸு ப்யான் அனுப்பிவைத்த ஆள் மக்கா நகர் வந்து அபாய அறிவிப்புக்ஷ் செய்து உதவி கேட்டதும் குறைஷிகள் -தலைவர்கள்,சமூகப் பிரமுகர்கள் உட்பட அனைவரும் போருக்கான ஏற்பாட்டுடன் புறப்பட்டு விட் டார்கள். பெரிய அளவில் ஆயுதங்ளைச் சேகரித்துக்கொண்டு ஏறக்குறைய ஆயிரம் பேர் திரண்டு வந்தார்கள்!

அபூ ஸு ப்யான் - நாங்கள் தப்பித்து வந்துவிட்டோம்., நீங்கள் மக்கா திரும்புங்கள். இப்போதைக்குப் போர் வேண்டாம் என்று மீண்டும் தூது அனுப்பிக் கேட்டுக்கொண்ட பிறகும் குறைஷித் தலைவர்கள் மக்கா திரும்பவில்லை. சண்டைக்கு வலியவந்தார்கள். ஆம்! குறைஷித் தலைவர்கள் ஆணவத்துடன் போர் முரசு கொட்டிக் கொண்டுவந்து பத்று மைதானம் வந்து முகாமிட்டார்கள். இறுதியில் அவர்களுடைய ஆணவத்திற்குக் கிடைத்த பரிசு வரலாறு காணாத தோல்விதான்!

- இவ்வாறு முஸ்லிம்கள் பத்றுப் போரைச் சந்தித்தது எதிர்பாராத ஒன்றாகும். அதனால்தான் அதில் கஅப் பின் மாலிக்(ரலி) அவர்கள் கலந்து கொள்ள இயலவில்லை!

ஆனால் தொடக்க காலத்தில் நபியவர்களிடம் - இஸ்லாத்தின் பேரில் பைஅத் எனும் உறுதிப் பிரமாணம் செுய்து கொடுத்த நிகழ்ச்சியில் தாமும் கலந்துகொண்டதைப் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்கள் கஅப் (ரலி) அவர்கள். அந்த நிகழ்ச்சி ஹிஜ்ரத்திற்கு முன்பு மினாவில் ஒரு கணவாயில் வைத்து நடைபெற்றது. பத்று போரைவிட அதுதான் தமக்குப் பிரியமானது என்றும் சொல்கிறார்கள். ஏனெனில் ஐயமின்றி அது ஒரு மகத்தான உடன்படிக்கை., மாபெரும் விசுவாசப் பிரமாணம்! ஆனாலும் பத்று போர்தான் காலமெல்லாம் மக்களிடையே பேசப்படும் வகையில் பிரபலம் அடைந்தது! ஏனெனில் அது முக்கியமானதொரு போர்., பிரபலம் அடைந்துவிட்டது. என்ன இருந்தாலும் உறுதிமொழி எடுக்கும் ஒரு நிகழ்ச்சி போரைப் போல் பிரபலமாக முடி யாது!

ஆக, கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் தமக்குத்தாமே ஆறுதல் சொல்லிக் கொள்கிறார்கள். பத்றில் கலந்து கொள்ளும் வாய்ப்புத் தப்பினாலும் அந்தக் கணவாய் உடன்படிக்கையின் பாக்கியம் கிடைத்ததே என்று!

நபி(ஸல்) அவர்கள் ஏதேனும் போருக்குப் புறப்பட நாடினால் அதனை மறைத்தே பேசுவார்கள்"

- அதாவது தங்களது நாட்டத்தை வெளிப்படுத்தமாட்டார்கள். எடுத்துக்காட்டாக,தெற்கு நோக்கிப் புறப்பட நாடியிருந்தால் - வடக்கு நோக்கிப் புறப்பட வேண்டும் என்பதுபோல் பேசுவார்கள். கிழக்கு நோக்கிப் புறப்பட நாடியிருந்தால் மேற்கு நோக்கிப் பயணமாக வேண்டும் என்பதுபோல் பேசுவார்கள். - இது நபியவர்கள் மேற் கொண்ட விவேகமிக்க நடவடிக்கை., போர்த் தந்திரம்!

ஏனெனில், எங்குச் செல்லப் போகிறோம் என்பதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் அது பற்றிய செய்தி எதிரிகளுக்குக் கிடைத்துவிடலாம். அதற்கேற்ப அவர்கள் தங்களது திட்டத்தை மாற்றி அமைத்துக் கொள்ள

லாம்., போருக்குப் பொருத்தமான இடமென எந்த இடத்தை நபியவர்கள் தேர்வு செய்துள்ளார்களோ அந்த இடத்தை விட்டும் எதிரிகள் விலகிச் சென்றிடவும் செய்யலாம்!

ஆனாலும் தபூக் போர்ச் சூழ்நிலையில் பொதுவான இந்த வழக்கத்திற்கு ஏற்ப நபியவர்கள் மறைத்துப் பேசவில்லை. தபூக் நோக்கிப் புறப்படப் போகிறோம் என்பதைத் தெளிவாகவே கூறினார்கள். அப்படிச் செய்த தற்குப் பலகாரணங்கள் இருந்தன:

1) முன்பு நாம் குறிப்பிட்டதுபோன்று - அது கடுமையான கோடை காலம்., கனிகள் அறுவடைக்குத் தயாராகி வந்த நேரம்! மனித மனம் சுக வாழ்வை நாடும் இயல்புடையதாகவும் சோம்பலின் பக்கம் சாயக்கூடியதாகவும் தானே உள்ளது. எனவே மனத்தைக் கட்டுப்படுத்திப் பயனுள்ள பணிகளில் நாட்டம் செலுத்த வேண்டுமெனில் இலட்சியம் தெளிவாக இருப்பது அவசியம்!

2) மதீனாவில் இருந்து தபூக் வெகுதொலைவில் இருந்தது. எங்கும் ஒரே பாலைவெளி., மணற்பரப்பு! அத்துடன் கோடை வெயிலும் சுட்டெரித்துக் கொண்டிருந்தது! ஆகையால் இந்தப் பயணத்தில் முஸ்லிம்கள் கடுமையான தாகத்தையும் களைப்பையும் கூகித்துக்கொள்ள வேண்டும்! இத்தகைய சூழ்நிலையில் எங்குச் செல்கிறோம் என்பதை வெளிப்படையாகச் சொன்னால்தான் அதற்கேற்ப அவர்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள முடியும்!

3) எதிரிகளோ அதிக வலிமையுடன் இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை திகைப்பூட்டும் அளவு இருந் தது. அதனை எதிர்கொள்ளும் வகையில் முஸ்லிம்கள் ஊக்கத்துடன் இருக்க வேண்டும் என்றுதான் நபி (ஸல்) அவர்கள் எங்கு நோக்கிப் புறப்படுகிறோம்., யாரை எதிர்த்துப் போர் புரியப் போகிறோம் என்பதைத் தெளிவாகக் கூறினார்கள்!

<u>நபி(ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் போருக்கான தயாரிப்பைச் செய்து முடித்திருந்தார்கள் ...</u>"

ஆனால் கஅப் (ரலி)அவர்கள் அதைப் பிற்படுத்திக் கொண்டே இருந்தார்கள். தினமும் காலையில் வாக னத்தில் ஏறி, இதோ! இப்பொழுதே நான் புறப்பட்டுச் சென்று நபியவர்களை அடைந்துவிடுவேன்., முஸ்லிம் களோடு இணைந்துவிடுவேன் என்று கூறுவார்கள்தான். ஆனால் அவர்களால் அப்படிச் செயல்பட முடிவதில்லை. நிலைமை அவர்களை மேலும் மேலும் தாமதப்படுத்திக்கொண்டே சென்றது!

## படிப்பினைகள்

இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய பாடம் இதுதான். சத்தியத்தை அறிந்துவிட்டால் உடனே அதன்படி செயல்படத் தொடங்கிட வேண்டும். சத்தியத்தின் பால் முன்னேறிச் செல்ல முயன்று கொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்திலேயே அப்படிகூஷ் செய்யாமல் அசட்டையாக இருந்து விட்டால் அதன் நற்பேற்றையே இழக்க வேண்டிய நிலை வந்துவிடும். குர்ஆனில் அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்:

قال الله: وَنُقَلِّبُ أَفْئِدَتَهُمْ وَ أَبْصَارَهُمْ كَمَا لَمْ يُؤْمِنُوْا بِهِ أَوَّلَ مَرَّةٍ وَ نَذَرُهُمْ فِيْ طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ (سورة الانعام الآية: ١١٠)

ஆரம்பத்தில் இந்த வேதத்தின் மீது அவர்கள் நம்பிக்கை கொள்ளாதிருந்ததுபோன்று (இப்பொழுதும் நம்பிக்கை கொள்ளாதிருக்கும் வகையில்) அவர்களுடைய இதயங்களையும் பார்வைகளையும் நாம் திருப்புகி றோம். மேலும் வரம்புமீறிய போக்கிலேயே உழன்றுகொண்டிருக்குமாறு அவர்களை விட்டுவிடுகிறோம்'' (6 : 110)

ஆம்! நற்பணிகளை நோக்கி நாம் விரைந்திடவில்லையானால் - ஷைத்தானின் ஊசாட்டமும் மனஇச்சையும் நம்மை மிகைத்துவிடும். எந்த நல்ல காரியமும் நம் கையைவிட்டும் போய்விடும்.

எடுத்துக்காட்டாக, தொழுகையை எடுத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் பலரைப் பார்த்திருக்கலாம். தொழு கைக்காக மஸ்ஜித் நோக்கி வருவார்கள்தான். ஆனால் முன் வரிசைக்கு வரமாட்டார்கள். அதில் அவர்களுக்கு

அப்படி யொரு அலட்சியம்! எப்பொழுதும் கடைசி வரிசையில்தான் நிற்பார்கள்! அப்படிப்பட்டவர்கள் குறித்து நபி (ஸல்) அவர்கள் செய்த எச்சரிக்கையைப் பாருங்கள்: சிலர் தொடர்ந்து தாமதமாகவே வருகிறார்கள். இறுதியில் அல்லாஹ்வும் அவர்களைத் தாமதப்படுத்திவிடுகிறான்'' (முஸ்லிம்)

ஆம்! யார் தாமதத்தை வழமையாக்கிக் கொள்கிறார்களோ அவர்களை அல்லாஹ்வும் தாமதத்தில் சிக்க வைத்து விடுகிறான்.

---

- கஅப் பின் மாலிக்(ரலி)அவர்கள் தபூக்கின் பயண ஏற்பாடுகளை எல்லா முஸ்லிம்களுடனும் சேர்ந்து செய்யாமல் நாளை நாளை என்று தாமதப்படுத்தினார்கள்., இறுதியில் மிஞ்சியது தாமதமும் கவலையும் கலக்கமும் தான்!

ஆம்! போரில் கலந்து கொள்ளும் நற்பேறு கைக்கு எட்டாத தொலைவுக்கு விலகிச் சென்றபொழுது - கஅப் (ரலி) அவர்கள், மதீனாவின் தெருக்களுக்கும் கடைவீதிகளுக்கும் வருகிறார்கள். அங்கிருந்த நிலையைக் கண்டதும் அவர்களது மனம் பதறியது. நபி(ஸல்) அவர்களோ அபூ பக்ரோ உமரோ உஸ்மானோ அலீயோ (ரலியல்லாஹு அன்ஹு ம்) யாரும் இல்லை! முஹாஜிர்களும் இல்லை., அன்ஸாரிகளும் இல்லை! தெருக்களில் அங்கும் இங்கும் நடந்து சென்றுகொண்டிருந்தது நயவஞ்சகர்கள் மட்டும்தான்! தவிர நோயாளிகள், முதியவர்கள் என பலவீனப்பட்டவர்கள் இருந்தார்கள், அவ்வளவுதான்!

இப்படிப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் மதீனாவில் இல்லையே! அவர்களுடன் நாமும் தங்கியிருக்க வேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டு விட்டதே என்று தம்மைத்தாமே நொந்துகொள்கிறார்கள் கஅப் (ரலி)!

நபி (ஸல்)அவர்கள் தபூக்கில் தோழர்களுடன் இருக்கும்பொழுது கஅப் (ரலி) அவர்களைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கு பனூ சலிமா கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் கஅப் அவர்கள் மீது குற்றம் சுமத்த, அதற்கு முஆத் பின் ஜபல்(ரலி)அவர்கள் தக்க பதில் கொடுத்தார்கள்! ஆனால் நபி(ஸல்)அவர்கள் குற்றம் சுமத்தியவர் பற்றியோ மறுத்தவர் பற்றியோ எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார்கள்.

இந்த நேரத்தில், தூரத்தில் ஒருவர், வெள்ளைவெளேரென ஆடைகள் அணிந்து கானல் அசைவதுபோல் வந்து கொண்டிருந்த நபரைக் குறித்து இவர் அபூ கைஸமாவாகத்தான் இருக்க வேண்டும் என்று நபியவர்கள் சொன்னதுபோன்று அபூ கைஸமாதான் வந்து கொண்டிருந்தார். - இது நபி (ஸல்)அவர்களின் நுட்பமான மதிப்பீட்டையும் கூர்மையான பார்வையையும் எடுத்துக்காட்டுகிறது.

கஅப் (ரலி) அவர்கள், அபூ கைஸமா (ரலி) அவர்களைப் பற்றி கூறிய தகவலில் பல விஷயங்கள் நமது கவனத்தை ஈர்க்கின்றன.

அதாவது, போர் நிதி வழங்குமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆணையிட்டபொழுது ஒரேஒரு மரைக்கால் பேரீத்தம் பழத்தை நிதியாக அளித்தது, இந்த அபூ கைஸமாதான்! - அதைத்தான் நயவஞ்சகர்கள் கேலி பேசினார்கள்.

இதேபோல் - அதிக நிதியுதவி செய்தவர் பற்றியும் - இப்படி அதிக அளவு அள்ளிக்கொடுக்கிறாரே இவர்., அல்லாஹ்வின் உவப்பை நாடியா செய்கிறார், பேரும் புகழுக்காகவும்தானே வாரிவழங்குகிறார்! என்று பேசினார்கள்!

ஆனால் எந்த ஒரு தர்மமனாலும் - அரைப் பேரீத்தம் பழமேயானாலும் ஓர் அணுஅளவுப் பொருளானாலும் அதுவும் இறைவழிப்போருக்கு உதவினால் மறுமையின் நற்பயன் கிடைக்கும் என்கிறது இஸ்லாம்.

நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: திண்ணமாக ஒரு மனிதர் பேரீத்தம் பழம் அளவுக்கு ஒருபொருளைத் தர்மம் செய்கிறார்., அதனையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்., பிறகு அதனை அவருக்காக எவ்வாறு பல்கிப் பெருகச் செய்கிறான் எனில், உங்களில் ஒருவர் தனது ஒட்டகக்குட்டியைக் கண்ணும் கருத்துமாய் வளர்ப்பது

போன்று பல்கிப்பெருகச் செய்கிறான் அல்லாஹ். இறுதியில் (குறைந்த அளவிலான) அந்தத் தர்மம் உஹு த் மலைபோன்று பெருகி விடுகிறது'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

மற்றொரு தடவை சொன்னார்கள்: (தர்மம் கொடுப்பதன் மூலம்) உங்களை நரகத்திலிருந்து தற்காத் துக் கொள்ளுங்கள். பாதிப் பேரீத்தம் பழத்தை வழங்குவது மூலமானாலும் சரியே!'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: ஒருவன் அணுஅளவு நன்மை செய்திருந்தாலும் அதனை அவன் கண்டு கொள்வான். அணுஅளவு தீமை செய்திருந்தாலும் அதனை அவன் கண்டுகொள்வான்'' (குர்ஆன் (99: 8)

இதன்படியே ஒவ்வொரு தோழரும் தத்தம் வசதிக்கும் சக்திக்கும் ஏற்ப போர்நிதிக்கு அள்ளிக்கொடுத் தார்கள். ஆனால் இஸ்லாம் வெற்றிபெறும் வகையில் யாரும் செயல்பட்டுவிடக்கூடாது என்பதுதான் நயவஞ்ச கர்களின் எதிர்பார்ப்பு! அதனால்தான் அதிகஅளவு நிதி அளித்தவர் பற்றியும் அவதூறு பரப்பினார்கள்., குறை வாக நிதி அளித்தவர் பற்றியும் கேலி பேசினார்கள்.

நயவஞ்சகர்களின் இத்தகைய விஷமத் தனத்தையே கஅப் (ரலி) அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். குர்ஆனும் இதனை ஓரிடத்தில் கூறுகிறது:

இறைநம்பிக்கையாளர்களில் மனமுவந்து வாரிவழங்குவோரின் தர்மங்களைப் பற்றியும் இந்த நயவஞ்சகர்கள் குறை பேசுகிறார்கள். (இறைவழியில் செலவு செய்வதற்காகச்) சிரமப்பட்டு உழைத்ததைத் தவிர வேறெதுவும் பெற்றி ருக்காதவர்களப் பற்றியும் இவர்கள் கேலி செய்கிறார்கள். அல்லாஹ் இவர்களைக் கேலி செய்கிறான். மேலும் இவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனையும் உண்டு'' (9: 79)

இத்தகைய வஞ்சகர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில்தான் இருந்தனர் என்பதில்லை. அன்றைய வஞ்ச கர்களின் வாரிசுகள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்களுடைய மூதாதையர்கள் விட்டுச் சென்ற பணியை - முஸ்லிம்களைக் கேலி பேசுகிற பணியை - இஸ்லாத்திற்குக் கேடு விளைவிக்கிற சூழ்ச்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இறைவனின் படைப்புகளிலேயே இவர்கள்தாம் மிகவும் கேடுகெட்டவர்கள்!

<u>என் குடும்பத்தில் விஷய ஞானமுடைய அனைவரிடமும் ஆலோசனை கலந்தேன் ''</u>

- ஏதாவது பொய்சொல்லித் தப்பிக்கத்தான் கஅப் (ரலி) அவர்கள் முதலில் திட்டமிட்டுள்ளார்கள். அது பற்றி தம்முடைய குடுப்பத்தினரிடம் ஆலோசனையும் செய்துள்ளார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் மதீனா திரும்பிய பொழுது தான் உண்மை சொல்லிவிடுவது என்கிற உறுதிப்பாடு அவர்களுக்கு வந்தது.

நயவஞ்சகர்கள் பொய்யான சாக்குப்போக்குகள் சொல்லி, பொய்ச்சத்தியம் செய்தார்கள். தங்களை மன்னிக் கும்படி கோரினார்கள். அவர்களின் வெளிப்படையான நிலையை ஏற்றுக்கொண்டு அந்தரங்கத்தை அல்லாஹ் விடம் ஒப்படைத்தார்கள் நபிவர்கள்! அது மட்டுமல்ல நயவஞ்சகர்களுக்காகப் பாவமன்னிப்பு வேண்டிப் பிரார்த் திக்கவும் செய்தார்கள்! ஆனாலும் அது அவர்களுக்கு எவ்விதப்பயனும் அளிக்கவில்லை, அல்லாஹ் கூறுகிறான்:

قال الله تعالى:{ اِسْتَغْفِرْ لَهُمْ أَوْ لاَ تَسْتَغْفِرْ لَهُمْ اِنْ تَسْتَغْفِرْ لَهُمْ سَبْعِيْنَ مَرَّةً فَلَنْ يَغْفِرَ اللهُ لَهُمْ } (سورة التوبة الآية: ٨٠ )

(நபியே!) நீர் இவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரினாலும் கோரா விட்டாலும் சரி- எழுபது தடவைகள் இவர்களுக்காக நீர் பாவமன்னிப்புக் கோரினாலும்கூட அல்லாஹ் இவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட் டான்.''(9: 80)

ஆனால் கஅப் பின் மாலிக் (ரலி)அவர்கள் உண்மையே உரைத்தார்கள். தமது தவறை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்கள். அது பற்றியே நபியவர்கள் கூறினார்கள்:

<u>இவர்தான் உண்மை உரைத்துள்ளார்''</u>

- கஅப் (ரலி)அவர்களின் வாய்மைக்கும் சிறப்புக்கும் இதுவே போதுமான சான்று. அதற்கு நபியவர்கள் வழங்கிய நற்சான்றே இது!

அல்லாஹ் உமது விவகாரத்தில் தீர்ப்பு அளிக்கும் நேரத்தை எதிர் பார்த்திரும் ''

- கஅப் பின் மாலிக் அவர்கள் அல்லாஹ் - ரஸூலின் கட்டளைக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தவராகவும் முழுமையான நம்பிக்கை கொண்டவராகவும் புறப்பட்டுச் சென்றார்கள்.

அப்பொழுது அவர்களுடைய பனூ ஸலிமா குலத்தினர் சிலர் தவறான ஆலோசனையை வலியுறுத்தினார் கள். அப்படிச் செய்யலாமே என்றுதான் கஅப் (ரலி)அவர்களது மனம் முதலில் விரும்பியது. வேறு இரு தோழர் களுக்கும் இதேநிலை எற்பட்டுள்ளது., அவ்விருவரும் உண்மையைத் திரும்பப் பெறுவதற்காக நபியவர்களிடம் செல்லவில்லை என்றும் தெரியவந்தது.

மக்கள் என்னிடம் சொன்ன இரண்டு பேரும் எப்படிப்பட்டவர்களெனில் இருவரும் பத்று போரில் கலந்து கொண்டவர்கள். அவ்விரு வரிலும் எனக்கு முன்மாதிரி இருந்தது''

ஆம்! அல்லாஹ், சில பேருக்குச் சில நேரங்களில் நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கிறான். வாய்மை யில் நிலைத்திருக்க - தீமையை நாடாதிருக்க நல்ல முன்மாதிரியைக் காண்பித்துக் கொடுத்துப் பேருதவி புரிகி றான்! கஅப் (ரலி)அவர்கள் தம் இருதோழர்களையும் பின்பற்றி உண்மையிலிருந்து பின்வாங்கக் கூடாது என்று உறுதிகொண்டார்கள். சோதனைக்கு மேல் சோதனைகள் வந்தாலும் எல்லாவற்றையும் தாங்குவதெனும் உறுதிப்பாட்டில் உள்ளம் உறுதிபூண்டது! பொய்யிலிருந்து முழுமையாக அவர்களை அல்லாஹ் காத்த ருளினான். கஅப்(ரலி) அவர்களது உளத் தூய்மைக்குச் சான்றாகத் திகழும் அந்த உண்மை வரலாற்றை குர்ஆனிலும் இடம்பெறச் செய்து அவர்களுக்குச் சிறப்பளித்தான்!

## படிப்பினைகள்

1) **நல்லெண்ணம்.** ஆம்! ஒருவரின் உள்ளத்தில் நல்லெண்ணம் இருந்தால் அல்லாஹ் அவர் மீது பேருப காரம் புரிகிறான். பாவத்திலிருந்து அவரைக் காப்பாற்றுகிறான். கஅப் (ரலி) அவர்களைப் பாருங்கள். நபிவர் களிடம் பொய் சொல்ல நாடியபொழுது உண்மையே பேசும்படி செய்து அவர்களை அல்லாஹ் காப்பாற்றினான். அதற்குக் காரணம் அவர்களது உள்ளத்தில் உறுதியுடன் உறைந்திருந்த நல்லெண்ணமே!

2) **இறைநம்பிக்கையில் முழு உறுதிப்பாடு.** ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி நபியவர்களிடம் இருந்து தப்பித்து விட்டாலும் நாளை அல்லாஹ் கோபம் கொண்டால் அதிலிருந்து தப்பிக்க முடியாது என்று கஅப் (ரலி) அவர்கள் சொல்லியிருப்பது அவர்களது இறைநம்பிக்கையின் உறுதிப்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது. நாம் என்றென்றும் நினைவில் கொண்டு பின்பற்றத்தக்க பாடமாகும் இது.

---

அந்த மூன்று தோழர்கள் மீதும் சமூகத்தடை விதித்து நபி (ஸல்) அவர்கள் கட்டளை பிறப்பித்தபொழுது அனைத்து மக்களும் அதனை ஏற்று அப்படியே செயல்படுத்தினார்கள்.

நான் நபியவர்களிடம் ஆஜராவேன்! .... ஸலாத்திற்குப் பதில் சொல்லிட உதடுகளை அசைத்தார்களா இல்லையா? என்பதை நான் அறியேன்''

- ஆம்! கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களின் ஸலாத்திற்கு நபி (ஸல்) அவர்களே பதில் சொல்லவில்லை. நபியவர்களோ நற்குணத்தில் சிறந்தவர்கள். அனைவரிடமும் நல்ல முறையில் பழகக்கூடியவர்கள்! ஆயினும் அந்தத் தோழர்களைச் சற்றுக்கடினமாக நடத்தவேண்டும்.,பண்படுத்த வேண்டும் எனும் கட்டளைக்கு நபியவர் களும் கட்டுப்பட்டார்கள்.

என்னுடைய இரண்டு தோழர்களும் மிகவும் மனம் நொந்துபோனார்கள். அழுத வண்ணம் தங்கள் வீடு களிலேயே முடங்கிவிட்டார்கள்''

- ஆம்! அந்த மூவரில் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் மட்டுமே மஸ்ஜிதுக்கு வந்து ஜமாஅத் - கூட்டுத் தொழுகையில் கலந்துகொண்டிருந்தார்கள். பிறகு நாட்கள் செல்லச்செல்ல அவர்களும் வீட்டிலேயே தொழலானார்கள். அந்த அளவுக்கு மனவேதனையும் சஞ்சலமும் அவர்களை வாட்டியெடுத்தது! (அதன் விவரம் பின்னால் வருகிறது)

ஒருநாள் அப்படியே நடந்து சென்றேன். அபூ கதாதாவின் தோட்டத்துச் சுவர் ஏறி உள்ளே சென்றேன் "

அதாவது, வாசல் வழியாக உள்ளே செல்லாமல் சுவர் ஏறிக் குதித்துச் சென்றுள்ளார்கள். வாசல் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது சுற்றுச் சுவரில் ஒருபகுதியில் இடிபாடு ஏற்பட்டு லேசாகத் தாண்டி உள்ளே செல்லும் வகையில் அமைந்திருக்க வேண்டும். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

நான் அவருக்கு ஸலாம் சொன்னேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர் எனது ஸலாத்திற்கு பதில் சொல்லவில்லை"

கஅப் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர்தான் அபூ கத்தாதா (ரலி) அவர்கள். மக்கள் எல்லோரும் புறக்கணித்துவிட்ட நிலையில் நெருங்கிய உறவுடைய - பாசத்திற்குரிய சகோதரராவது சந்தோசமாகப் பேசுவார்., ஆறுதல் சொல்லி மனத்தைத் தேற்றுவார் என்றுதான் அவரிடம் சென்றுள்ளார்கள், கஅப் (ரலி) அவர்கள். ஆனால் அவரும் பேசவில்லை. ஸலாத்திற்குக்கூடப் பதில் சொல்லவில்லை. - இதற்குக் காரணம் அல்லாஹ்-ரஸூலின் கட்டளைக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்பதுதானே தவிர கஅப் அவர்களைத் தனிப்பட்ட முறையில் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல!

என் கண்கள் இரண்டும் கண்ணீர் வடித்தன. வந்த வழியே திரும்பி சுவர் ஏறித்தாவி வெளியே வந்தேன் "

அபூ கத்தாதா (ரலி) அவர்களிடம் - நான் அல்லாஹ்வையும் ரஸூலையும் நேசிப்பவன் இல்லையா? என்று, அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து மூன்றுமுறை கேட்டார்கள், கஅப் பின் மாலிக் அவர்கள். நிலையின் கடுமையை உணர்த்தக்கூடிய மிகப்பெரியதொரு சத்தியமாகும் இது! அபூ கத்தாதா(ரலி)அவர்கள் ஆம் என்றோ இல்லை என்றோ எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவருக்கு நன்றாகத் தெரியும்: கஅப் (ரலி) அவர்கள் அல்லாஹ்வையும் ரஸூலையும் அதிகம் நேசிப்பவர்கள் என்பது! மூன்றாவது தடவையில் ஒப்புக்கு ஒரு பதிலை சொன்னார்., அல்லாஹ்வும் ரஸூலும்தான் மிகவும் அறிந்தவர்கள் என்று! இது அந்தக் கேள்விக்குரிய பதிலாகக் கருதப்படாத ஒரு வார்த்தையாகும். -இந்தக் கட்டத்தில்தான் கஅப் (ரலி)அவர்கள் மனம் நொந்து கண்ணீர் வடித்து விட்டார்கள்.

ஷாம் தேசத்து விவசாயி ஒருவர், கஅப் பின் மாலிக்கை எனக்குக் காண்பித்துத் தருபவர் யார்? என்று அங்கே கேட்டுக் கொண்டிருந்தார்"

- அன்றைய ஷாம் தேசத்து விவசாயிகளைக் குறிப்பதற்கு நப(த்)தி (பன்மை : அன்பாத்) எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாலைவனப் பகுதிகளில் பூமிக்கடியில் எங்கெங்கு தண்ணீர் உள்ளதென ஆய்வு (இஸ்தின்பாத்) செய்வதே அவர்களுடைய பணி. அதனால்தான் அவர்கள் நபதி - அன்பாத்(த்) என்று அழைக்கப்படுகிறார்கள்.

அவன் என்னிடம் வந்தான். கஸ்ஸான் மன்னன் எழுதிய ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தான்"

-இந்த கஸ்ஸான் மன்னன் இறைநம்பிக்கை இல்லாதவன்., நிராகரிப்பாளன். கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியைப் பயன்படுத்திக் குழப்பம் விளைவிக்கத் திட்டமிட்டான். வாய்மை மிக்க அந்தத் தோழருக்கு ரகசியக் கடிதம் எழுதி அனுப்பி அவரைத் தன் பக்கம் இழுக்கச் சதி செய்தான். ஆனால் அல்லாஹ் - ரஸூலின் மீதான நம்பிக்கையில் - வாய்மையான அன்பில் உறுதியாக இருந்த அந்தத் தோழர் அந்தக் கடிதத்தைப் பார்த்தபொழுது இதுவும் ஒரு சோதனையே என்று சொல்லியவாறு அதனை அடுப்பில் வீசி எரித்தார்!

கஅப் (ரலி) அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மையே! அதுவும் ஒரு சோதனையே! மிக நெருங்கிய உறவினர் உட்பட மக்கள் அனைவரின் புறக்கணிப்புக்குள்ளாகி மனம் நொந்துள்ள ஒருமனிதரைப் பக்கத்து நாட்டு மன்னனே வலை விரித்து அழைக்கும் பொழுது -ராஜ மரியாதை தருவதாகக் கூறும்போது அதிலிருந்து தப்பிப்பது கடினம்தானே! ஆனால் கஅப் அவர்கள் அந்தச் சோதனையிலும் சாதனை படைத்தார்கள். கடிதத்தை கையில் வைத்துக் கொண்டிருந்தால், அவ்வப்பொழுது அதைப் படித்துப் பார்க்க வேண்டியது வரும்., மன்னனிடம் சென்று நிம்மதியாக இருக்கலாமே என்று தீய மனம் தூண்டும்., ஷைத்தானின் ஊசாட் டமும் விரட்டிக் கொண்டுவரும்! அப்படியொரு வழிச்சறுகல் ஏற்பட்டுவிடக்கூடாது., அதற்கான எந்த வாய்ப்பும் இருக்கக்கூடாது என்றுதான் கடிதத்தையே அடுப்பிலிட்டு அழித்தார்கள்!

வஹி (எனும் இறையருட்செய்தி) தாமதமானபொழுது ... நீர் உம் மனைவியை விட்டும் விலகி இருக் கும்படி நபியவர்கள் உமக்குக் கட்டளையிடுகிறார்கள் ''

வஹி வருவது தாமதமானதில் அல்லாஹ் ஒரு தத்துவத்தை அமைத்து வைத்தான். வஹியின் பக்கம் மக்கள் அனைவரையும் ஆர்வம் கொள்ளச் செய்ய வேண்டுமென்பதுதான் அது. வாய்மையும் தூய்மையும் மிக்க இந்தத் தோழர்களின் விஷயத்தில் இப்பேரண்டத்தின் அதிபதி என்ன தீர்ப்பு வழங்குகிறானோ, எப்பொழுது வஹி வரப்போகிறதோ? என்று அனைவரையும் எதிர்பார்க்கச் செய்வதே இறைவனின் நாட்டம் - ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அபாண்டம் சுமத்தப்பட்ட நிகழ்ச்சியின்போதும் இவ்வாறுதான் வஹி வருவது தாமதமாயிற்று!

இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில் அந்த மூன்று தோழர்களுக்கும் மேலும் ஒருகட்டுப்பாட்டை விதித் தார்கள் நபி (ஸல்) அவர்கள். அவர்களை விட்டும் அவர்களுடைய மனைவியரே விலகிக்கொள்ள வேண்டும் என்பது தான் அது.

கஅப் (ரலி) அவர்கள் நல்ல திடகாத்திரமான - வாலிபத்துடிப்புள்ளவர். மனைவியுடன் வாழக்கூடாது என்று அவரை விலக்கி வைப்பது மிகவும் கஷ்டமான சமாச்சாரம்தான்!

ஆயினும் நபியவர்களின் தூதுவர் வந்து அந்தக் கட்டுப்பாட்டை அறிவித்த பொழுது -

நான் என் மனைவியை மணவிலக்கு செய்துவிடவா? அல்லது நான் என்ன செய்யவேண்டும்?" என்றுதான் கேட்டார்கள் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள். ஆகா! இத்துணை சோதனைகளிடையேகூட நபியவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில்தான் அவர்கள் ஆர்வமாக இருந்துள்ளார்கள். மனைவியை மணவிலக்கு செய்யும் படி சொன்னால்கூட அதற்கும் அவர்கள் தயார் என்பதையே அவர்களது வார்த்தை காட்டுகிறது.

தூது கொண்டுவந்தவர் சொன்ன பதிலையும் கவனியுங்கள். நபியவர்கள் சொல்லி அனுப்பிய வார்த்தை களையே அவர் திரும்பச் சொன்னாரே தவிர அவற்றை மாற்றவோ புதியதொரு கருத்தைக் கற்பிக்கவோ அவர் முயற்சி செய்யவில்லை. முன்சொன்ன வார்த்தைகளையே திரும்ப ஒருமுறை சொல்லி அவற்றின் யதார்த்த மான கருத்தையே வலியுறுத்தினார். நபி(ஸல்)அவர்களின் கட்டளைகள் -ஹதீஸ்களைப் பொறுத்து ஸஹாபாக் களின் நிலைப்பாடு இதுதான் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்!

## படிப்பினைகள்

இந்நிகழ்ச்சிகளில் நமக்குப் பல படிப்பனைகள் உள்ளன:

(1) இறைத்தூதரின் கட்டளைக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல்! - ஊர்விலக்கு எனும் தண்டனை மிகக் கடுமையானது. அதனைச் சற்றுத் தளர்த்த வேண்டும் என்று யாரும் மேல்முறையீடு செய்யவில்லை. அல்லது அதை செயல்படுத்த முடியாதபடி குடும்ப ரீதியான நெருக்கடியையோ குழப்பத்தையோ எவரும் ஏற்படுத்த வில்லை - அந்த மூன்று தோழர்களோ அவர்களுடைய குடும்பத்தினரோ யாரும் அப்படிச் செய்யவில்லை! அவர்க ளுடைய மனையிவரேகூட நபியவர்களின் கட்டளையை மீறவில்லை. அலட்சியம் செய்யவில்லை. அதற்குக்

கீழ்ப்படிய வேண்டாமென தத்தம் கணவர்களைத் தூண்டவில்லை! நபித்தோழர்களின் வாழ்வில் நடைபெற்ற இத்தகைய கூடிமுகக் கட்டமைப்புக்கு உலகில் வேறெந்த சமூகத்திலும் நிகர் காண்பது கடினமே!

(2) தீய சக்திகள் குறித்து எச்சரிக்கையாக இருப்பதும் நமது சமுதாயத்தினுள் ஊடுருவுவதற்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர்களுக்கு அளிக்காதிருப்பதும்!

(3) குழப்பத்திற்கும் வழிகேட்டிற்கும் இழுத்துச் செல்லக்கூடிய வழி வகைகளை அடைத்துவிடுவது! - கஸ்ஸான் மன்னனின் கடிதம் கையில் இருந்தால் அவனது நாட்டில் தஞ்சம் புகலாம் எனும்தீய எண்ணத்திற் குப் பலியாக வேண்டியது வரலாம்., அதனால் அந்தக் கடிதத்தையே தீயிட்டுக் கொளுளுத்தி அதன் வழியை அடைத்துவிட்டார்கள், கஅப் (ரலி) அவர்கள்!

---

பிறகு ஐம்பதாவது நாளின் அதிகாலையில் எங்களது வீடொன்றின் மாடியில் ஃபஜ்ர் தொழுது கொண்டி ருந்தேன் ''

- ஜமாஅத் தொழுகையை அலட்சியம் செய்ததால் அப்படிச் செய்யவில்லை. முன்பு சொன்னதுபோல் - பள்ளிவாசல் சென்றால் பேசுவார் யாருமில்லை., வலியச் சென்று ஸலாம் சொன்னாலும் பதில் வருவதில்லை. இந்நிலையில்தான் கஅப் (ரலி)அவர்கள் மனம் நொந்து வீட்டிலேயே தங்கிவிட்டார்கன். மற்ற இருதோழர்களின் நிலையும் இதுவே!

அவரது நற்செய்திக்குப் பகரமாக என்னுடைய இரண்டு ஆடைகளையும் களைந்து அவற்றை அவருக்கு அணிவித்தேன் ''

மலைமீதேறி உரக்கக் குரல் கொடுத்தவர் மூலம்தான் நற்செய்தி பற்றிய தகவல் முதலில் கிடைத்தது. அவர்தான் பரிசுக்குரியவர் ஆனார். அணிந்திருந்த இரு நல்லாடைகளையும் களைந்து அவருக்குப் பரிசூஹாக நல்கி விட்டு இரவல் ஆடைகளை அணிந்துகொண்டே நபியவர்களிடம் சென்றார்களெனில் அந்தச் செய்தி எவ்வளவு ஆனந்தத்தை அவர்களுக்கு அளித்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்!

நான் நபி (ஸல்) அவர்களிடம் செல்லப் புறப்பட்டேன். மக்கள் கூட்டமாக வந்து என்னைச் சந்தித் தார்கள்''

எந்த மக்கள்? அல்லாஹ் -ரஸூ லின் கட்டளைப்படி அம்மூன்று தோழர்களையும் ஊர் விலக்கிவைத்த அதே மக்கள்தான்! மன்னிப்பு அறிவிக்கப்பட்டதும் அவர்கள் அனைவருக்கும் அளவிலா ஆனந்தம்! ஒருவருக்கொரு வர் போட்டி போட்டுக்கொண்டு கூட்டம் கூட்டமாக வந்து வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்களின் உள்ளத்தில் - அவர்களுடைய சகோதரர்களின் பேரில் இருந்த நேசம்தான்! தங்களுக்கு எதை விரும்பினார்களோ அதையே தம் கூடிகோதரர்களுக்கும் விரும்பினார்கள்.

அந்த நேசத்தினால்தான் - அம்மூன்று தோழர்களையும் அல்லாஹ் மன்னித்ததாக அறிவிக்கப்பட்டபொழுது - திருக்குர்ஆனின் வசனங்களையே இறக் கியருளிச் சிறப்பித்தபொழுது யாரும் பொறாமைப்படவில்லை., புளகாங் கிதத்துடன் ஓடோடிவந்து வாழ்த்துக்கூறி மகிழ்வைப் பகிர்ந்து கொள்கிறார்கள்!

தல்ஹா பின் உபைதுல்லாஹ் எழுந்து என்னை நோக்கி ஓடிவந்தார். எனக்குக் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார் ''

பள்ளிவாசலில் நபியவர்களுடன் அமர்ந்திருந்த தோழர்களில் தல்ஹா மட்டும்தான் எழுந்துவந்து கஅப் (ரலி) அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். இதனைப் பெரும் மரியாதையாகவும் பேருபகாரமாகவும் கஅப் (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## வருகை தருபவருக்காக எழுந்து நிற்பது கூடுமா?

இந்த இடத்தில் மேலும் சில விவரங்களை அறிந்துகொள்வது பயன் மிக்கது. அதாவது, ஓர் அவையினுள் வருபவரை நோக்கி எழுந்து செல்வதும் கைலாகு கொடுப்பதும் ஆகுமானவையே., கண்ணியம் அளிப்பவையே!

இதேபோல வருகை தருபவருக்காக எழுந்து நிற்பதிலும் தவறில்லை. அப்படிச் செய்வது கூடாதென எந்தத் தடையும் வரவில்லை.

ஆனால் ஒருவர் வரும்பொழுது - உட்கார்ந்திருப்பவரை எழுந்து நிற்கும்படிச் செய்வதும் எழுந்து நிற்கு மாறு வற்புறுத்துவதும் தான் கூடாது என்று தடை வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்: தனது வருகையின் பொழுது பிற மக்கள் நிற்பவர்களாய்க் காட்சியளிக்க வேண்டுமென யார் விரும்புகிறாரோ அவர் தனது இருப்பிடத்தை நரகமாக் கிக்கொள்ளட்டும் '' (நூல்: அபூ தாவூத், திர்மிதி)

ஆக, எழுவதென்பது மூன்று வகையில் உள்ளது :

- வருகை தருபவரை நோக்கி எழுந்து செல்வது
- வருகை தருபவருக்காக எழுந்து நிற்பது
- உட்கார்ந்திருக்கும் ஒருவருக்கருகில் நின்றுகொண்டிருப்பது

முதல்வகை: வருகை தருபவரை நோக்கி எழுந்து செல்வதில் தவறில்லை. நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீராரம் மூவகை ஆதாரங்களும் இதற்குண்டு.

சொல்லாதாரம்: பனூ குறைளா எனும் மதீனா வாழ் யூதர்களின் விஷயத்தில் தீர்ப்பளிப்பதற்காக ஸஅத் பின் முஆத் (ரலி) அவர்கள் வருகை தந்தபொழுது யூதர்களை நோக்கி நபி (ஸல்) அவர்கள் சொன்னார் கள்: உங்கள் தலைவரின் பக்கம் எழுந்து செல்லுங்கள் ''

- பனூ குறைளா போருக்குப் பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சியாகும் இது. இந்த யூதர்கள், முஸ்லிம்களுடன் செய்திருந்த உடன்படிக்கைக்கு எதிராகச் செயல்பட்டதாலும் குறிப்பாக, அகழ் யுத்தத்தில் மிகக் கடுமையான நெருக் கடியில் எதிரிகளுக்குச் சாதகமாக அவர்கள் நடந்ததாலும் நபி (ஸல்) அவர்கள் அந்த யூதர்களை முற்றுகையிட்டுக் கைது செய்தார்கள்.

இவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது? அதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பு ஸஅத் பின் முஆத் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஸஅத் பின் முஆத் அவர்கள், மதீனத்து முஸ்லிம்களில் அவ்ஸ் கோத்திரத் திரத்தின் தலைவர். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தை மேற்கொண்டு மதீனாவுக்கு வருவதற்கு முன்பே பனூ குறைளா யூதர்களுக்கும் அவ்ஸ் கோத்தி ரத்துக்கும் உடன்படிக்கை இருந்தது. அந்த வகையில் இருசாராரும் நேச குலத்தவர்கள் ஆவர். ஆகையால் தங்களது நேசகுலத்தின் தலைவர் ஸஅத் பின் முஆத் அவர்களை நடுவராக ஆக்குவதற்கும் அவர்கள் அளிக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதற்கும் அந்த யூதர்கள் ஒப்புக்கொண்டி ருந்தார்கள்.

அகழ் யுத்தத்தில் எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த ஸஅத் பின் முஅத் (ரலி) அவர்களால் நடக்க இயலாதிருந்தது. அதனால் வாகனத்தின் மீது அமர்ந்து வந்தார்கள். உங்கள் தலைவரின் பக்கம் எழுந்து செல்லுங்கள்'' என்று யூதர்களை நோக்கி நபியவர்கள் கூறியதும் அவர்கள் எழுந்து சென்று ஸஅத் (ரலி) அவர்களை வரவேற்று வாகனத்தில் இருந்து கீழே இறக்கினார்கள்! (அந்த யூதர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமென ஸஅத் (ரலி) அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என்பது வரலாறு)

அங்கீகாரம்: இது நாம் விளக்கம் அளிக்கும் இந்த நபிமொழியில் உள்ளது. - கஅப் (ரலி)அவர்கள் மஸ்ஜிதி னுள் நுழைந்தபொழுது அவர்களை நோக்கி தல்ஹா (ரலி) அவர்கள் எழுந்துசென்றார்கள். இது நபி (ஸல்) அவர்களால் மறுக்கப்படாததால் அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றதாகிறது.

செயல்ரீதியான ஆதாரம்: பனூ ஸகீப் கோத்திரத்தாரின் தூதுக்குழவினர் - ஹு னைன் போருக்குப் பிறகு ஜு அரானா எனும் இடத்தில் நபி (ஸல்) அவர்களிடம் வந்தபொழுது அந்தத் தூதுக்குழுவினரை நோக்கி நபியவர் கள் எழுந்து சென்றார்கள். (மற்றோர் அறிவிப்பில், எழுந்து நின்றார்கள் என்றுள்ளது)

(2) வருகை தருபவருக்காக எழுந்து நிற்பது. இதில் குற்றமில்லை. வருகை தருபவருக்காக எழுந்து நிற்கவில்லையாயின் அது மரியாதைக் குறைவாகக் கருதப்படும் சூழ்நிலையில் அது ஆகுமானதே! அப்படி நிற்காமலிருப்பது சிறந்ததாயினும் அத்தகையதொரு வழக்கம் நடைமுறையில் இருக்கும்பொழுது அதில் குற்ற மில்லை.

(3) ஒருவர் உட்கார்ந்திருக்க மற்றொருவர் அவருக்கு அருகில் - அவருக்குக் கண்ணியம் அளிப்பதற்காக நின்று கொண்டிருப்பது! இது தடைசெய்யப்பட்டதாகும். நபி (ஸல்)அவர்கள் சொன்னார்கள்: <u>அந்நியர்கள் சிலர், சிலருக்கு கண்ணியம் அளிக்கும் பொருட்டு நின்று கொண்டிருப்பது போன்று நீங்கள் செய்யாதீர்கள்''</u> எந்த அளவுக்கெனில், தொழுகையில்கூட இமாம் நிற்க இயலாமல் உட்கார்ந்து தொழுகை நடத்தினால் அவரைப் பின்பற்றித் தொழுபவர்கள் உட்கார்ந்துதான் தொழுதிடவேண்டும்., நின்று கொண்டு தொழக்கூடாது.

ஜாபிர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்)அவர்கள் பிணியுற்ற பொழுது- அவர்கள் உட்கார்ந்து தொழுகை நடத்த நாங்கள் அவர்களைப் பின்பற்றித் தொழுதோம். அபூ பக்ர் (ரலி) அவர்கள், நபியவர்களின் தக்பீரை உரக்கச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நபியவர்கள் எங்களை நோக்கித் திரும்பிப் பார்த்தார்கள். நாங்கள் நின்று கொண்டிருக்கக் கண்டார்கள். உடனே எங்கள் பக்கம் உட்காருமாறு சமிஞ்கை செய்யவே நாங்களும் உட்கார்ந்தோம்., உட்கார்ந்துகொண்டே நபியவர்களின் தொழுகையைப் பின்பற்றித் தொழுதோம்.

நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்து ஸலாம் கொடுத்தபொழுது சொன்னார்கள்: சற்று முன்னர் - ரோமர் களும் பாரசீகர்களும் செய்வது போன்று நீங்களும் செய்ய முனைந்து விட்டீர்களே! அவர்கள்தாம் தங்க ளுடைய மன்னர்கள் உட்கார்ந்து கொண்டிருக்க அவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருப்பார்கள்! நீங்கள் அவ்வாறு செய்யாதீர்கள்'' (முஸ்லிம்)

ஆனால் உட்கார்ந்து கொண்டிருப்பவருக்கு அருகில் மற்றொருவர் நிற்க வேண்டிய தேவை இருந்தால் - அந்தச் சூழ்நிலையில் அது கூடும். ஆம்! ஒருவர் மீது எதிரிகள் திடீர் தாக்குதல் தொடுக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிற சூழ்நிலையில் அவருக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக அவரருகில் மற்றொருவர் நின்று பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருப்பதில் குற்றமில்லை.

இதேபோல ஒருவருக்குக் கண்ணியம் கொடுப்பதற்காகவும் நம்மிடையே உள்ள கட்டமைப்பையும் தலை மைக்குக் கீழ்ப்படியும் பண்பையும் எதிரிகளுக்கு உணர்த்தி உள்ளச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அவருக்கு அருகில் ஒருவர் நின்றுகொண்டிருப்பதில் குற்றமில்லை.

நபி (ஸல்) அவர்கள் வரலாற்றில் - ஹு தைபிய்யா உடன்படிக்கையின்போது இப்படி நடைபெற்றது. உடன் படிக்கை குறித்து பேச்சுவார்த்தை நடத்த மக்கத்து குறைஷிகள் சார்பில் சில தலைவர்கள் வந்தார்கள். அவர்களுக்கும் நபியவர்களுக்கும் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது புகழ்பெற்ற நபித் தோழர் முஃகீரா பின் ஷு அபா (ரலி) அவர்கள், கையில் வாளை ஏந்திக்கொண்டு நபியவர்களுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஆக, உட்கார்ந்திருக்கும் ஒருவருக்கு அருகில் நின்றுகொண்டிருப்பதன் நோக்கம் பாதுகாப்பு அளிப்ப தாகவோ எதிரிகளுக்கு உணர்த்து வதாகவோ இருந்தால் அதில் குற்றமில்லை.

## லட்சியக் குழுவினரின் சிறு தவறுகூட ...!

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபியவர்களிடம் அவ்வாறு நான் வாக்குறுதி கொடுத்ததில் இருந்து இன்றைய தினம் வரை எந்தசூ் சூழ்நிலை யிலும் பொய் சொல்ல நான் நாடியதில்லை. எதிர் காலத்திலும் அதிலிருந்து அல்லாஹ் என்னைக் காத்தருள்வான் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு''

உண்மை பேசூியதால் கஅப் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் ஈடேற்றம் அளித்தான், அல்லவா? அதற்கு கைமாறு செலுத்த வேண்டும்., தமது தவறுக்குப் பரிகாரமாகவும் அமைய வேண்டும் என்று இவ்வாறு அவர்கள் சபதம் செய்துள்ளார்கள். இனி வாழ்நாள் முழுவதும் உண்மையே பேச வேண்டுமென உறுதியேற்றுச் செயல் பட்டுள்ளார்கள். வாய்மைமிகு அந்த ஸஹாபியின் வரலாறு உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும் அளவு புகழ் பெற்றுவிட்டது!

நபியையும் - துன்பம் சூழ்ந்த நேரத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்த முஹாஜிர்களையும் அன்ஸார்களையும் திண்ணமாக அல்லாஹ் பொறுத்தருளினான் ''

கஅப் ரலி) அவர்களுக்கும் ஏனைய இருதோழர்களுக்கும் மன்னிப்பு வழங்கியதாக அறிவித்த இந்த மூன்று வசனங்களின் விளக்கத்தைசூ் சுருக்கமாகப் பார்ப்போம்.

முதலில் நபியைப் பொறுத்தருளியதாக அல்லாஹ் அறிவித்திருப்பது ஏன்? போரில் கலந்துகொள்ளாதிருக்க சில நயவஞ்சகர்களுக்கு நபி அனுமதி அளித்ததைத் தவறு என்று அல்லாஹ் கருதியிருக்கலாம். அல்லது இறைவனின் மன்னிப்பும் கருணையும் - நபி உட்பட எல்லோருக்கும் தேவையே எனும் பொருளிலும் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கலாம்! -அவர்கள் இறுதி நபி., முந்தைய, பிந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்ட தூய்மையான தூதர்!

பிறகு முஹாஜிர்களையும் அன்ஸார்களையும் பொறுத்தருளியதாகக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் இவ்விரு சாராரின் சிறுசிறு பிழைகளை மன்னித்து நன்மைகளை அள்ளி அள்ளி வழங்கினான். உன்னதமான அந்தஸ்து களை அவர்களுக்கு அளித்தான்.

இந்த வசனத்தில் முஹாஜிர்களை முதலில் கூறியிருப்பதற்குக் காரணம், அவர்கள் அன்ஸார்களைவிடவும் சூிறந்தவர்கள் என்பதே! ஏனெனில் அவர்கள், ஹிஜ்ரத் (நாடுதுறத்தல்) நுஸ்ரத் (பேருதவி புரிதல்) என்கிற இருவகை தியாகங்களையும் ஒருசேர நிறைவேற்றியவர்கள்!

துன்பம் சூழ்ந்த நேரத்தில் எனும் சொல் தபூக் போரையும் அப்பொழுது நிலவிய கடும் நெருக்கடியையும் சுட்டிக்காட்டுகிறது. வரலாற்றில் இந்த போருக்கு ஃகஸ்வதுல் உஸ்ரா (கஷ்ட காலத்துப் போர்) என்றுகூட ஒருபெயர் உண்டு.

அவர்களில் ஒரு சிலரின் உள்ளம் நெறிதவறுதலின் பால் சற்று சாய்ந்து விட்டிருந்த பிறகும் ...''

அதாவது அன்று முஸ்லிம்களில் சிலர் - வாய்மையாளர்களாய் இருந்ததுடனேயே போரில் கலந்திடாமல் தவிர்க்கவே விரும்பினார்கள். ஏனென்று கேட்டால் ஏதாவது சூொல்லிக் கொள்ளலாம் என்றே கருதினார்கள். ஆயினும் தக்க நேரத்தில் அவர்களின் உள்ளம் தெளிவு பெற்றது. சத்தியத்தில் நிலைத் திருக்கும் உறுதியை அல்லாஹ் அவர்களுக்கு நல்கினான். அவர்களது தடுமாற்றம் நீங்கியது. தயக்கம் மாறியது. நபியவர்களுடன் சூேர்ந்து போருக்குப் புறப்பட்டார்கள்.

விவகாரம் ஒத்தி போடப்பட்டிருந்த மூவரையும் அல்லாஹ் மன்னித்து விட்டான். அவர்களது நிலைமை எந்தஅளவு மோசமாகி விட்டதெனில், பூமி இத்துணை விரிவாக இருந்தும் அவர்களைப் பொறுத்துக் குறுகி விட்டது. அவர்கள் உயிர் வாழ்வதே கடினமாகி விட்டது''

அந்த மூன்று தோழர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை எனும் ஒட்டுமொத்த சமூகப் புறக் கணிப்பு குறித்துத்தான் இவ்வாறு சித்தரிக்கப் பட்டுள்ளது, குர்ஆனில். ஆம்! பூமி இவ்வளவு பரந்து விரிந்து இருந்தும் இம்மதீனா வாழ் மூன்று தோழர்களின் வாழ்க்கை வட்டம்தான் மிகவும் குறுகலாகி அவர்கள் உயிர் வாழ்வதே சிரமமானது.

இத்தகையதொரு கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டதன் நோக்கம், போரில் கலந்து கொள்ளாமல் பின்தங்கியிருந்த அந்தத் தோழர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதுதான். ஏனெனில் அவர்கள் ஒருலட்சியக் குழுவைச் சேர்ந்தவர்கள்., சத்தியத்திற்குச் சான்று வழங்கும் கடமையை ஏற்றிருந்த, நீதி வழிவந்த, நடுநிலைமிக்க ஒரு சமுதாயத்தின் அங்கத்தினர்கள்! உலகில் மனித குலத்தைச் சீர்திருத்தம் செய்யும் லட்சியத்திற்காகத் தோற்றுவிக்கபட்டிருக்கும் உன்னதமான உம்மத்தினர்கள்! இப்படிப்பட்டவர்களின் சிறுதவறுகூட கண்டிக்கப்படாமல் - களையப்படாமல் நீடித்தால் எதிர்காலத்தில் பின்னடைவுக்கும் பெரும் வீழ்ச்சிக்கும் அது வழிவகுத்துவிடலாம். அது மட்டுமல்ல அத்தகைய கடுமையான நடவடிக்கை எடுத்ததில் ஏனைய தோழர்களுக்கும் தக்க படிப்பினை இருந்தது. ஏன், எல்லாக் காலத்து முஸ்லிம்களுக்கும் நல்ல பாடத்தை அது வழங்குகிறது என்பதே உண்மை.

இந்தத் தொடரில் நயவஞ்ஸகர்களின் மிக மோசமானநிலை குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் அவர்களோ நபியவர்களிடம் பொய்யான சாக்குப்போக்குகள் சொல்லித் தப்பித்துவிட்டிருந்தார்கள். அந்த மோசமான நிலை இதுதான்:

எனவே நீங்கள் அவர்களைக் கண்டு கொள்ளாமலே இருந்து விடுங்கள். ஏனெனில் அவர்கள் ரிஜ்ஸ் - அசுத்தம் ஆவர்''

அரபி மொழியில் ரிஜ்ஸ் என்றால் நரகல் என்று பொருள். மது நரகல்! மனிதனின் மலம் நரகல்! ஆடுமாடு களின் சாணம் நரகல்! இதுபோன்று நயவஞ்சகர்களும் நரகல்தான்! (இத்தகைய இழிநிலையிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக)

திண்ணமாக அல்லாஹ் பாவிகளான இந்த மக்கள் மீது திருப்தி கொள்ளவே மாட்டான் ''

நயவஞ்சகத்தை நாம் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தையும் மன்னிப்பை யும் இலட்ஷியமாகக் கொண்டே நாம் செயல் பட வேண்டும். அல்லாஹ் நம் மீது அதிருப்திகொண்ட நிலையில் மக்கள் அனைவரும் நம் மீது திருப்தி கொண்டாலும் அது நமக்குப் பயன் அளிக்கப் போவதில்லை! ஆனால் அல்லாஹ் நம்மைப் பொருந்திக்கொண்டா னெனில் மக்களின் உள்ளங்களையும் நம் பக்கம் ஈர்த்துக்கொண்டு வருவான். அவர்களும் நம்மைப் பொருந்திக் கொள்ளும்படி செய்வான்!

குர்ஆன் ஓரிடத்தில் கூறுகிறது: எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்துகொண்டிருக்கி றார்களோ அவர்களுக்காக விரைவில் கருணைமிக்க இறைவன் (மக்களின் உள்ளங்களில்) அன்பைத் தோற்று விப்பான்''

''திண்ணமாக அல்லாஹ், பாவிகளான இத்தகைய மக்கள் மீது திருப்தி கொள்ளவே மாட்டான்''

என்கிற வசனம் பாவங்கள் குறித்து எச்சரிக்கை செய்கிறது. எந்த ஒரு பாவத்தைச் செய்தாலும் அது, அல்லாஹ்வின் கோபத்திற்குத்தான் நம்மை ஆளாக்கும். பாவத்தில் பலவகை உள்ளன. குஃப்ர் - இறைநிரா கரிப்பும் நயவஞ்சகமும் கொடிய பாவங்களாகும். தவிர பெற்றோரை நிந்திப்பது பாவம்! இரத்த பந்தத்தை முறிப்பது பாவம்! ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பது பாவம்! ஒப்பந்தத்தை மீறிச் செயல்படுவது பாவம்! பொய் பேசுவது பாவம்!

ஆக, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் மன்னிப்பையும் பெற வேண்டுமெனில் பாவங்களை விட் டொழிக்க வேண்டும். அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## கஅப் பின் மாலிக் (ரலி)

கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் மதீனாவைச் சேர்ந்தவர்கள். மக்காவில் நபி (ஸல்) அவர்களுக்கும் மதீனத்து முஸ்லிம்களுக்கும் நடைபெற்ற இரண்டாம் கணவாய் உடன்படிக்கையில் கலந்துகொண்டு தொடக்க காலத் திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்! பத்று, தபூக் நீங்கலாக ஏனைய எல்லாப் போர்களிலும் இவர்கள் கலந்து கொண்டார்கள்! நபி(ஸல்)அவர்களுடைய கவிஞர்களுள் இவரும் ஒருவர்! முதுமையினால் கண்பார்வை இழந்திருந்தார்கள். 77 ஆம் வயதில் முஆவியா (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் ஷாம் தேசத்தில் மரணம் அடைந் தார்கள். ஹிஜ்ரி 51 ஆம் ஆண்டு மதீனாவில் மரணம் அடைந்தார்கள் என்று மற்றொரு கருத்தும் உள்ளது.

**அருஞ்சொற்கள் -** شرح الكلمات

| | |
|---|---|
| 1) தபூக் : ஓரிடத்தின் பெயர் | ١) تبوك : اسم موضع |
| 2) பின்தங்கிவிட்டார்: நபியவர்களுடன் போருக்குப் புறப்படவில்லை. | ٢) تخلف : لم يخرج معه الي الجهاد |
| 3) பத்று: மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள ஒரு நீர்நிலையின் பெயர். நபியவர்களுக்கும் குறைஷி களுக்கும் பிரபல போர் நடந்த இடத்திற்கு பெயராய் சூட்டப்பட்டது. | ٣) بدر : اسم لماء بين مكة و المدينة ، وبه سمي المكان الذي وقعت فيه المعركة المشهورة بين الرسول ﷺ و المشركين |
| 4) வாணிபக்குழு: வியாபாரசுஷ் சரக்குகள் ஏற்றப்பட்ட ஒட்டகங்கள் | ٤) العير : الأبل التي عليها أحمالها |
| 5)முன்கூட்டி அறிவித்தல்: உடன்படிக்கை, ஒப்பந்தம் | ٥) ميعاد : موعد و اتفاق |
| 6) கணவாய் இரவு: இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக வும் நபியவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கு வதாகவும் அன்ஸாரிகள் நபியவர்களிடம் செய்து கொடுத்த உறுதிப் பிரமாணம் நடைபெற்ற இரவு! | ٦) ليلة العقبة : وهي الليلة التي بايع فيها الأنصار النبي ﷺ على الاسلام وأن يؤيدوه ونصروه |
| 7) அதிகம் பேசப்படக்கூடியது: அதன் புகழ்மிக்க அதன் செஷய்தி அதிகப் பிரபலம் அடைந்தது. | ٧) أذكر : أشهر ذكرا في الفضيلة |
| 8) மறைத்தே பேசுவார்கள்: தமது நோக்கத்தை மறைத்து வேறொன்றை வெளியிடுவார்கள்., அதாவது அவ்வாறு கருதும் படும்படியான ஒரு வார்த்தையைச் சொல்வார்கள். கேட்பவர் அந்த வேறொன்றுதான் அவர் களது நோக்கம் என்று புரிந்து கொள்வார். | ٨) ورَّي : أي أخفي مقصده وأظهر غيره وذلك بان يذكركلاما يحتمل مقصده ويحتمل شيئا آخروقد يفهم السامع أنه هو المقصود |
| 9) (யதார்த்த நிலையை) தெளிவாகக் கூறினார்கள்: தங் களது நோக்கம் எது என்று ஒளிவுமறைவின்றி தெளிவாக விளக்கினார்கள். | ٩) فجلي : كشف و أوضح المقصد الذي يريده من غير تورية |

| | |
|---|---|
| 10)பயண ஏற்பாடுகள் செய்து கொள்வதற்காக. | ١٠) ليتأهبوا : ليستعدوا بما يحتاجون اليه في سفرهم |
| 11) போர்த் தளவாடங்கள் | ١١) الاهبة : العدة |
| 12) அவர்களின் இலக்கை: அவர்கள் எங்கு நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை. | ١٢) بوجههم : بمقصدهم الذي يتجهون اليه |
| 13) கனிந்திருந்தன : நன்கு பழுத்திருந்தன. | ١٣) طابت : أينعت و نضجت |
| 14) அதிக மையல் கொண்டிருந்தேன். | ١٤) أصعر : أميل |
| 15) (காலையில் புறப்பட)லாலேன். | ١٥) طفقت : جعلت ، وهي من أفعال الشروع التي ترفع الاسم وتنصب الخبر |
| 16) முயற்சி : பயண முன்னேற்பாடுகளைக் கவனித்தல் | ١٦) الجد : الاجتهاد في أمر السفر و شؤونه |
| 17) என் பயண ஏற்பாடுகள்: பயணத் தேவைகள் | ١٧) جهازي : حاجات السفر |
| 18) இழித்துக் கூறப்பட்டவன்: தீனை கடைப்பிடித்து வாழ்வதில் பழிப்புக்குள்ளானவன். குறை கூறப்பட்ட வன். | ١٨) مغموصا : مطعونا في دينه |
| 19) அவருடைய வேஷ்டியும் மேலங்கியும் : அல்பருது: கோடுகள் இடப்பட்ட யமன் தேசத்து ஆடைகள். | ١٩) برداه : مثني برد وهي الازار أو الرداء والبرود ثياب من اليمن فيها خطوط |
| 20) (தம் ஆடைகளின்) வலது - இடது பக்கங்கள் : இந்த வாக்கியம் தற்பெருமையைச் சுட்டக் கூடிய தாகும். | ٢٠) عطفيه : جانبيه ، الجملة كناية عن العجب و الكبر |
| 21) வெள்ளாடை அணிந்தவர். | ٢١) مبيضا : لابسا البياض |
| 22) கானல் அவருடன் அசைகிறது: மனிதனுக்கு, கடுமையான வெயில் நேரத்தில் - தூரத்தில் தண்ணீர் போன்று தென்படுகிற ஒன்றாகும். | ٢٢) يزول به السراب : يتحرك، و السراب ما يظهر للانسان من بعد كالماء وقت اشتداد الحر |
| 23) அவரைக் குறை பேசினார். | ٢٣) لمزه : طعن فيه |
| 24) திரும்பக்கூடியவர். | ٢٤) قافلا : راجعا |
| 25) எனது கவலை: கடுந்துயரம் | ٢٥) بثي : البث أشد الحزن |
| 26)இதோ! வந்து விட்டார்கள்: நெருங்கி வந்து விட்டார்கள். | ٢٦) أظل قادما : أقبل ودني |
| 27) அகன்றுவிட்டது: நீங்கியது, போய்விட்டது. | ٢٧) زاح : زال و ذهب |
| 28) உறுதி கொண்டேன்: உறுதியான எண்ணம் கொண்டேன். | ٢٨) أجمعت : عزمت |

| | |
|---|---|
| 29) வாங்கியிருந்தாய் : விலைக்கு வாங்கியிருந்தாய். | ٢٩) ابتعت : اشتريت |
| 30) ஒட்டகம்: அல்ளஹ்ர் என்பது, பயணத்திற்கு பயன் படும் ஒட்டகம். | ٣٠) ظهرك: الظهر الابل التي تركب |
| 31) என் மீது கோபம் கொள்வீர். | ٣١) تجد علي : تغضب |
| 32) அல்லாஹ் அளிக்கும் நல்ல முடிவை: என் பாவ மன்னிப்புக் கோரிக் கையை ஏற்பது, என் மீது நபியைத் திருப்தி அடையச் செய்வது மூலம் அல்லாஹ் எனக்கு வைத்திருக்கும் நல்லமுடிவை | ٣٢) عقبي الله عز وجل : أن يعقبني الله خيرا بتوبته علي و ارضاء نبيه ﷺ عني |
| 33)என்னை நச்சரிப்பார்கள்: என்னைக் கடுமையாகப் பழிப்பார்கள். | ٣٣) يؤنبونني : يلومونني أشد اللوم |
| 34) முன்மாதிரி | ٣٤ أسوة : قدوة |
| 35) அந்நியமானதாகிவிட்டது: மாறி விட்டது. | ٣٥) تنكرت : تغيرت |
| 35) அடங்கிக்கிடந்தார்கள்: பணிந்தார்கள், தணிந்தார் கள். | ٣٥ ) فاستكانا : ذلاً و خضعا |
| 36)மூன்று பேரில் வயதில் கூஷிறியவன். | ٣٦) أشب القوم : أصغرهم |
| 37) அவர்களில் வலிமை மிக்கவன் | ٣٧) أجلدهم : أقواهم |
| 38) ஓரக்கண்ணால் அவர்களைப் பார்ப்பேன்: ரகசிய மாக அவர்களைப் பார்ப்பேன். | ٣٨) أسارقه النظر : أنظر اليه في خفية |
| 39) புறக்கணிப்பு: வெறுத்தொதுக்கும் நிலை | ٣٩) جفوة : أعراض |
| 40) உயரே ஏறினேன். | ٤٠) تسورت : علوت سورا |
| 41) தோட்டம் | ٤١) حائط : بستان |
| 42) என்கண்கள் கண்ணீர் வடித்தன: கண்களில் நீர் பெருக் கெடுத்தன! | ٤٢) فاضت عيناي : كثرت دموع عيني |
| 43) வந்தவழியே திரும்பினேன். | ٤٣) توليت : رجعت من حيث أتيت |
| 44) விவகூஷாயி: நபதி என்று கூஷால்லப் பட்டிருப்பது, அவர் தண்ணீர் குறித்து ஆய்வு (இஸ்தின்பாத்) கூஷய்கிறார் என்பதனாலாகும். | ٤٤) نَبَطِي : فلاح ، سمي به لأنه يستنبط الماء أي يستخرجه |
| 45) உம்மை உபசரிப்போம்: சஞ்சலத்தைக் குறைப் போம். | ٤٥) نواسك : من المواساة أي نخفف عنك |
| 46) முஹாஜிர்கள்: மக்காவைத் துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்டவர்கள். பிறந்த நாட்டைத் துறத்தல் என்பதுடன் நபியவர்களுக்கு உதவியும் செய்தவர்கள். | ٤٦) المهاجرون : هم الذين هاجروا من مكة الي المدينة فجمعوا في ذلك بين الهجرة و مفارقة الوطن و بين نصرة النبي ﷺ |

| | |
|---|---|
| 47) அன்ஸார்கள்: மதீனா வாழ் முஸ்லிம்கள். நபியவர்களுக்குப் புகலிடம் நல்கிப் பேருதவி புரிந்தவர்கள். தங்களையும் மனைவி - மக்களையும் பாதுகாப்பது போல் பாதுகாத்து இஸ்லாத்தின் அரணாய்த் திகழ்ந்தவர்கள்! | ٤٧) الانصار: هم أهل المدينة الذين آووا النبي ﷺ و نصروه و منعوه مما يمنعون منه نساءهم و أبنائهم |
| 48)நயவஞ்சகர்கள்: உள்ளத்தில் ஒன்றை மறைத்து வைத்துக்கொண்டு வெளியே வேறொன்று பேசுபவர்கள். இறைநிராகரிப்பை உள்ளத்தில் மறைத்து நம்பிக்கையாளர்கள்போல் நடிப்பவர்கள். | ٤٨) المنافقون : الذين يظهرون خلاف ما يخفون – يخفون الكفر و يظهرون الايمان |

## கேள்விகள் - الاسئلة

1) தபூக் போருக்குப் புறப்படவிடாமல் நயவஞ்சகர்களைத் தடுத்தது எது?
2) பத்று யுத்த்தின் பின்னணியைச் சுருக்கமாக விளக்கவும்.
3) நபி (ஸல்)அவர்கள் ஏதேனும் போருக்குப் புறப்பட நாடினால் மறைத்தே பேசுவார்கள் என்பதை விளக்குக.
4) கஅப் (ரலி) அவர்கள் தபூக் நோக்கிப் புறப்படாமல் ஏன் தாமிதமானார்? எப்படித் தாமதமானார்?
5) நபி (ஸல்) அவர்கள் தபூக்கை அடைந்த பிறகு தூரத்தில் வெள்ளைவெளேரென ஆடை அணிந்து கானல் அசைவதுபோல் வந்து கொண்டிருந்தவர் யார்? அவரைக் குறித்து கஅப்(ரலி) கூறியது என்ன?
6) கஅப் (ரலி) அவர்களைப் போல் தபூக்கில் கலந்துகொள்ளாமல் மேலும் இரு தோழர்கள் பின்தங்கினார்கள்., அவர்களைக் குறித்து கஅப் அவர்கள் கூறியதன் கருத்தை விளக்கவும்.
7) கஅப் (ரலி) அவர்களுக்கும் அபூ கதாதா (ரலி) அவர்களுக்கும் நடந்த உரையாடல் என்ன, அதிலுள்ள படிப்பினைகள் என்ன?
8) கஸ்ஸான் கொடுத்துனுப்பிய கடிதம் பற்றிய செய்தி என்ன? கஅப் (ரலி) அவர்கள் அளித்த பதில் என்ன? அதிலுள்ள படிப்பினைகள் என்ன?
9) ஐம்பது நாட்கள் வரை நீடித்த ஊர்க்கட்டுப்பாட்டின்பொழுது வஹி இறங்குவது தாமதமானதன் தத்துவம் என்ன?
10) அம்மூன்று தோழர்களின் மனைவியர் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் பிறப்பித்த புதிய கட்டளை என்ன? அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?
11) ஊர்க்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அம்மூன்று தோழர்களும் அனுபவித்த துன்பங்களை விளக்கவும்.
12) பனூா குறைளா போர் எப்பொழுது நடைபெற்றது? - எந்த விவகாரத்தில் தீர்ப்பளிக்கும் பொறுப்பு ஸஅத் பின் முஆத் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது?
13) கஅப் (ரலி) அவர்கள் தங்களது தவறுக்குப் பரிகாரமாகவும் அல்லாஹ் அளித்த மன்னிப்புக்கு நன்றியாகவும் என்னென்ன செய்தார்கள்?
14) வாய்மையான தோழர்களுக்கு இத்தகைய கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன?
15) இந்நிகழ்ச்சியில் நயவஞ்சகர்களின் நிலைமை என்ன? குர்ஆன் வசனம் அவர்களை எவ்வாறு சுட்டிக் காட்டுகிறது?
16) முஹாஜிர்கள், அன்ஸார்கள், நயவஞ்சகர்கள் இம்மூன்று வார்த்தைகள் பற்றி விளக்கம் எழுதவும்.

## இதனை விடவும் சிறந்த பாவமீட்சி உண்டா?

٢٢– وَعَنْ أبِى نُجَيْدٍ – بِضَمِّ النُوْنِ وَ فَتحِ الْجِيْمِ – عِمْرَانَ بْنِ الْحُصَيْنِ الْخُزَاعِيْ رَضِىَ اللهُ عَنْهُمَا أنَّ امْرَأةً مَنْ جُهَيْنَــةَ أتَــتْ رَسُوْلَ اللهِ ﷺ وَهِيَ حُبْلَي مِنَ الزِّنَي ، فَقَالَتْ: يَا رَسُوْلَ اللهِ أصَبْتُ حَدًّا فَأقِمْهُ عَلَيَّ، فَدَعَى نَبِيُّ اللهِ ﷺ وَلِيَّهَا فَقَــالَ : أحْسِــنْ الَيْهَا ، فَاذَا وَضَعَتْ فَأتِني، فَفَعَلَ فَأمَرَ بِهَا نَبِيُّ اللهِ ﷺ فَشُدَّتْ عَلَيْهَا ثِيَابُهَا ، ثُمَّ أُمِرَ بِهَا فَرُجِمَتْ ، ثُمَّ صَلَّى عَلَيْهَا فَقَالَ لَهُ عُمَرُ: تُصَلِّي عَلَيْهَا يَا رَسُوْلَ اللهِ وَقَدْ زَنَتْ ؟ قَالَ : لَقَدْ تَابَتْ تَوْبَةً لَوْ قُسِمَتْ بَيْنَ سَبْعِيْنَ مِنْ أهْلِ الْمَدِيْنَةِ لَوَسِعَتْهُمْ، وَهَــلْ وَجَــدْتَ أفْضَلَ مِنْ أنْ جَادَتْ بِنَفْسِهَا للهِ عَزَّ وَجَلَّ؟ ! – رواه مسلم .

ஹதீஸ் 22

இம்றான் ஹு ஸைன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''ஜு ஹைனா என்ற குலத்தைச் சேர்ந்த ஒருபெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் வந்தாள். அவள் விபச்சாரத்தில் ஈடுபட்டதினால் கருவுற்றிருந்தாள். அவள் சொன்னாள்: அல்லாஹ்வின் தூதரே! நான் தண்டனை பெறும் அளவுக்குத் தவறு செய்து விட்டேன். என் மீது தண்டனை நிறைவேற்றுங்கள்.

நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணின் பொறுப்பாளரை அழைத்தார்கள். அவரிடம் சொன்னார்கள்: நீர் இவளிடம் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்ளும். குழந்தை பெற்றெடுத்ததும் இவளை என்னிடம் அழைத்து வாரும்.

அவ்வாறே அவளுக்குக் குழந்தை பிறந்ததும் அவளை நபியவர்களிடம் அழைத்து வந்தார் அவர். அவளது விஷயத்தில் நபி (ஸல்) அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். அவள் மீது அவளுடைய ஆடைகள் கட்டப்பட்டன. பிறகு கல்லெறிந்து அவளைக் கொல்லுமாறு நபியவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே செய்யப்பட்டது. பிறகு நபியவர்கள் அந்தப் பெண் ணுக்கு ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.

அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதரே! இவள் விபச்சாரம் செய்தவள் ஆயிற்றே! இவளுக்காகவா நீங்கள் ஜனாஸா தொழுகை நடத்துகிறீர்கள்?

அதற்கு நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: இந்தப் பெண்மணி தேடிக் கொண்டது எத்தகைய பாவமீட்சியெனில், அதனை மதீனத்து முஸ்லிம்களில் எழுபது பேருக்குப் பங்கீடு செய்தால் அவர்கள் அனைவருக்கும் அது போதுமாகிவிடுமே! அல்லாஹ்வின் வழியில் தனது உயிரையே இவள் ஈந்து விட்டாளே! இதனைவிடவும் சிறந்த நிலையொன்றை நீர் கண்டுள்ளீரா என்ன? '' (நூல் : முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

பாவமீட்சி தேடுவது கடமை என்பதையும் வாய்மையான பாவமீட்சியின் பயனையும் சிறப்பையும் இந்த அரிய நிகழ்ச்சி அழகாய் உணர்த்துகிறது.

அன்றைய அறியாமைக் காலத்து மக்களின் வாழ்க்கை மிகவும் சீரழிந் திருந்தது. மிருக நிலையொத்தது என்று கூறும் அளவு மிகவும் தரம் தாழ்ந்திருந்தது. விபச்சாரம் போன்ற மானக்கேடான செயல்களும் கொலை பாதகங்களும் மது - சூதுபோன்ற கொடிய பாவங்களும் மக்களின் பார்வையில் சர்வ சாதாரணமாகி விட்டிருந்தன!

இந்நிலையில்தான் தீனுல் இஸ்லாமெனும் இறைமார்க்கம் இறையருட் போதனைகளுடன் இத்தரணியில் ஒளிவீசிக்கொண்டு உதித்தது! மக்களின் இதயங்களை ஓரிறை நம்பிக்கையிலும் தூய்மைமிக்க இறைவழிபாட்டிலும் நிலைகொள்ளச் செய்தது! மறுவுலகம் பற்றிய அச்சத்தை அவற்றில் ஆழப்பதித்தது! அதன் பயனாய் அறியாமையின் அடிப்படையிலான அநாச்சாரங்களும் வழிகேடுகளும் அழிந்தன. மனித வாழ்வில் தீமைகள் மாய்ந்து அமைதி தவழுந்தது., நன்மைகள் மலர்ந்தன!

இஸ்லாம் வழங்கிய இத்தகைய சீர்திருத்தத்தின் உச்சநிலையும் ஆச்சரியமும் என்னவெனில், பாவத்தில் வீழ்ந்த சிலர் தாமாகவே முன்வந்து தவறை ஒப்புக்கொண்டுத் தம் மீது தண்டனை நிறைவேற்றுமாறு வேண்டினார்கள் என்பதுதான்!

இதோ! விபச்க்ஷாரத்தில் ஈடுபட்டுக் கர்ப்பம் தரித்த மதீனத்து மாது ஒருத்தி, செய்த குற்றத்தை ஒப்புக்கொள்கிறாள்., அதற்கான தண்டனையைத் தாருங்கள் என்று கேட்கிறாள். என்ன தண்டனை? அதனை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் கேட்கிறாள். திருமணமானவர்கள் விபச்சாரம் செய்துவிட்டால் கல்லால் அடித்துக் கொல்லவேண்டுமென்பதுதான் அது! அந்தத் தண்டனையைத்தான் தேடி வருகிறாள். தண்டனை பெற்றால்தான் இறைவன் அக்கொடிய பாவத்தை மன்னிப்பான் எனும் உறுதியுடன் வருகிறாள். இஸ்லாத்தின் வரலாற்றைத் தவிர வேறெங்கும் இதற்கு நிகரான நிகழ்ச்சியை நாம் காண்பது அரிது!

விபக்ஷ்க்ஷாரம் போன்ற சமூக விரோதச் செயல்களுக்குக் கடும் தண்டனை கொடுக்கத்தான் வேண்டுமென்பது இஸ்லாமிய ஷரீஅத்தின் உறுதியான தீர்ப்பாகும். இந்த அளவுக்குத் தண்டனையும் எச்சரிக்கையும் இல்லையெனில், மக்களிடயே பாவக்ஷ்செயல்களும் ஒழுக்கச்சீரழிவுகளும் பெருகி விடும்! பிறகு அவற்றை யாராலும் தடுத்து நிறுத்த முடியாமலாகி இறுதியில் அது மனித குலத்தின் அழிவுக்கும் நாசத்திற்கும் வழி வகுத்து விடும்!

ஒழுக்கச் சிதைவுகளில் இருந்தும் நாசத்திலிருந்தும் மனித குலத்தைக் காப்பதே- இஸ்லாமியக் குற்றவியல் க்ஷட்டத்தின் குறிக்கோள் என்பதுடன் - தண்டனையை நிறைவேற்றுவதில் நபியவர்கள் மேற்கொண்ட மென்மையான போக்கும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டிருப்பது நம் கவனத்திற்கு உரியதாகும்.

ஆம்! அந்தப்பெண் மீது-அவள் கர்ப்பத்துடன் உள்ள நிலையிலேயே தண்டனை நிறைவேற்றாமல் குழந்தை பெற்றெடுக்கும் வரை பிற்படுத்துமாறு நபியவர்கள் கட்டளையிடுகிறார்கள். காரணம், அவள் செய்த தவறுக்காக வயிற்றிலுள்ள க்ஷிசுவின் உயிர் பறிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான்!

மேலும் பாருங்கள்! அந்த இடைபட்ட காலத்தில் அவளை ஏசவோ கேவலமாகப் பேசவோ கூடாது என்றும் நல்லமுறையில் அவளிடம் நடந்து கொள்ளவேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் கட்டளை யிடுகிறார்கள்.

குழந்தை பிறந்தபின் அவள்மீது தண்டனை நிறைவேற்றியபோது அவள் மீது அவளுடைய ஆடைகளை நன்கு சுற்றிக்கட்டுமாறு கட்டளை இட்டதற்குக் காரணமும் அவளது கண்ணியம் காக்கப்படவேண்டும் என்பதே! அவளுடைய உடலுறுப்புகள் வெளிப்படக் கூடாதென்பதே!

மேலும் அந்தப் பெண்ணுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்பு அவளுக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது, ஜனாஸா தொழுகை என்பது என்ன? இறந்தவரின் பாவமன்னிப்புக்காகவும் சுவனப் பேற்றிற்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதும் அதற்காக மேற்கொள்கிற வழிபாடும்தான் அது! நபி (ஸல்) அவர்களே இமாமாக நின்று கூட்டான முறையில் அதனை நிறைவேற்றினார்கள்!

அப்பொழுது உமர்(ரலி)அவர்கள், இவள் விபச்சாரம் செய்தவளாயிற்றே., இவளுக்காகவா நீங்கள் ஜனாஸா தொழுகை நடத்துகிறீர்கள்? என்று கேட்ட பொழுது நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்க ஒன்றாகும். இஸ்லாத்தின் நடுநிலைப் பார்வையையும் அதன் வழிகாட்டல் இம்மை - மறுமை எனும்

இருவகை நலன்களையும் உள்ளடக்கிய தென்பதையும் இஸ்லாமிய ஷரீஅத்தின் நீதி மற்றும் குற்றவியல் சட்டங் களின் அடிப்படையையும் தூரநோக்கையும் அது தெளிவுபடுத்துகிறது.

அந்தப் பெண்மணி தானாகவே வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குரிய தண்டனையைத் தாங்கிக் கொள்கிறாள். அந்த அளவுக்கு வாய்மையானது - தூய்மையானது அவள் மேற்கொண்ட தௌபா -பாவ மன்னிப்பு! அதனால்தான் அது எழுபது பேருடைய பாவமன்னிப்புக்குச் சமமானது என்று நபி (ஸல்) அவர்கள் புகழ்ந்து கூறினார்கள்!

ஆம்! அளிக்கப்பட்ட ஒவ்வொரு கால அவகாசத்தின் பிறகும் அவள் தண்டனையைத் தேடித்தான் வருகி றாள்! எந்தக் கட்டத்திலும் அவள் எவ்விதத் தில்லுமுல்லும் செய்யவில்லை., திரிபுவாதம் பேசவில்லை! அவ ளது உள்ளத்தில் நிறைந்திருந்தது, உறுதியான (ஈமான்) இறை நம்பிக்கைதான்! அத்துடன் - உலகத் தண்டனை எவ்வளவு கடுமையான தாயினும் மறுமைத் தண்டனைக்கு எதிரில் மிகவும் சாதாரணமானதே! தாங் கிக் கொள்ள முடியாதது - சகித்துக் கொள்ள இயலாதது - மறுமையில் இறைவன் கொடுக்கும் தண்டனை தான் என்கிற ஆழமான இறையக்ஷ்க்ஷமும் ஞானமும்தான் இருந்தது!

அதனால்தான், இப்பாருலகம் முழுவதையும் படைத்தாளும் ஆற்றல்மிக்க அல்லாஹ்வின் பேராற்றலுக்கு முன்னிலையில் தன்னையே - தன்னுயிரையே ஒப்படைத்தாள்., அந்த ஸஹாபிப் பெண்மணி! ரலியல்லாஹு அன்ஹா (அந்தப் பெண்மணியை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக)

இந்நபிமொழியின் மூலம் தெரிவது என்னவெனில், விபச்சாரம் செய்த ஒருவன், தன்னைத்தானே இழிவு படுத்தும் நோக்கமின்னிறி - முஸ்லிம்களின் தலைவரிடமோ பொறுப்பாளரிடமோ வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு தன் மீது தண்டனை நிறைவேற்றுமாறு கோரினால் அது பழிப்புக்கோ இழிவுக்கோ உரிய செயலல்ல!

ஆனால் விபக்ஷ்க்ஷாரம் செய்தவன் எல்லோரிடமும் அதைச் சொல்லிக் காட்டிக்கொண்டு திரிவதும் தனக்குத்தானே இழிவைத் தேடிக்கொள்வதும் கூடாது. இப்படிச் செய்பவனுக்கு மன்னிப்பே கிடையாது.

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: என் சமுதாயத்தார் எல்லோரும் மன்னிப்புக்குரியவர் களே., ஆனால் பகிரங்கப்படுத்துபவர்களைத் தவிர! பகிரங்கப்படுத்துபவர்கள் யார் என்று தோழர்கள் கேட்டார் கள். அதற்கு நபியவர்கள் சொன்னார்கள்: எவர்கள் பாவம் செய்து பிறகு அல்லாஹ் அவர்களது விஷயத் தில் அதனை மறைத்திருக்கும் நிலையில் காலையில் எழுந்து அதனை அனைவரிடமும் அறிவித்துக்கொண்டு திரிகிறார்களோ அவர்கள்தாம்'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

இன்று சமுதாயத்தில் கேடுகெட்ட மனிதர்கள் க்ஷிலரைக் காண்கிறோம். அவர்கள் பாவச்செயல்கள் புரிவது ஒருபுறம் இருக்கட்டும்., ஆனால் அதனைப் பெருமையாகச் சொல்லிக் காண்பித்துக்கொண்டு திரிகிறார்களே அதனை விடவும் மோசமான சீரழிவு வேறென்ன இருக்க முடியும்! இதனை வேரடிமண்ணோடு கெல்லி எறிவதற் குக் கடுமையான நடவடிக்கை எடுப்பது அவசியம்தானே!

இங்கு இப்படி ஒரு கேள்வி பிறக்கிறது: விபச்சாரம் செய்து விட்ட ஒரு மனிதன் நீதிபதியிடம் செ்ன்று தெரியப்படுத்தி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனை நிறைவேற்றுமாறு கேட்பது சிறந்ததா? அதை மறைப்பது க்ஷிறந்ததா?

பதில்: அவன் தூய்மையான முறையில் பாவமீட்சி தேடினால் மனம் நொந்து திருந்தினால் மீண்டும் அந்தப் பாவத்தில் விழுவதில்லையென உறுதியுடன் இருந்தால் அப்படிப்பட்டவன் நீதிபதியிடம் செல்லாமல் இருப்பதே சிறந்தது. தனது குற்றத்தைத் தெரிவிக்காமல் இருப்பதே நல்லது. தனக்கும் அல்லாஹ்வுக்கும் உள்ள ரகசியமாக அதனை ஆக்கிடவேண்டும். வாய்மையான முறையில் பாவமீட்க்ஷி தேடுபவனை அந்தக் கருணை மிக்க இறைவன் மன்னித்துவிடுவான்!

ஆனால் மீண்டும் அந்தப் பாவத்தில் விழலாமென அவன் அஞ்சினால் - தனது பாவமீட்சி தூய்மையானதல்ல எனத் தெரிந்தால் இத்தகைய மனிதன் நீதிபதியிடம் சென்று குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையைக் கோரிப் பெறுவதுதான் சிறந்தது.

அறிவிப்பாளர் அறிமுகம்

### இம்ரான் பின் ஹு ஸைன் (ரலி) அவர்கள்

இம்ரான் பின் ஹு ஸைன் அவர்களின் குறிப்புப் பெயர் அபூ நுஜைத் என்பதாகும். சிறப்புமிக்க நபித் தோழர்களில் ஒருவராகிய இவர்கள் ஃபிக்ஹு கூட்டம் அறிந்தவர்களும்கூட! இவர்கள் இஸ்லாத்தைத் தழுவியது கைபர் போர் நடைபெற்ற ஆண்டில்! நபி(ஸல்) அவர்களுடன் பல போர்களில் கலந்துகொண்டார் கள். இவர்களிடம் இருந்து 180 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பஸராவில் குடியேறிய அன்னார் அங்கேயே ஹிஜ்ரி 53 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்கள்.

## அருஞ்சொற்கள் -شرح الكلمات

| | |
|---|---|
| 1)ஜு ஹைனா என்ற கோத்திரத்தைச் சேர்ந்த பெண்மணி: ஸஹீஹ் முஸ்லிமில், ஃகாமித் என்ற குலத்துப் பெண் என்று உள்ளது. அது ஜு ஹைனாவின் ஒரு குலம்தான்! | ١) امرأة من جهينة : وعند مسلم من غامد وهي بطن من جهينة |
| 2) தண்டனைக்குரிய குற்றம் ஒன்றைச் செய்து விட்டேன். | ٢) أصبت حدا : فعلت ما يعاقب عليه بحد |
| 3)கட்டப்பட்டது: ஆடைகளால் அவளை மறைத்துச் சுற்றி அவற்றின் ஓரங்கள் கட்டப்பட்டன. | ٣) فشدت : جمعت أطرافها لتستتر |
| 4)நபியவர்களிடம் உமர் கேட்டார்கள்: இதில் தத்துவம் என்ன என்று விளக்கம் கேட்டார்களே தவிர மறுக்கும் முறையிலல்ல! | ٤) فقال له عمر : مستجليا للحكمة و ليس منكرا |
| 5) எழுபது பேர்களுக்கு: பாவம் செய்த எழுபது பேர்களுக்கு! | ٥) سبعين : من العصاة |
| 6) அது அவர்களுக்குப் போதுமாகி விடும்: அவர்களுடைய பாவங்களை அகற்றுவதற்கு! | ٦) لوسعتهم : لكفتهم في رفع آثامهم |
| 7) தன்னுயிரையே ஈந்து விட்டாள்: அல்லாஹ்வின் உவப்பைப் பெறுவதற்காக தன் உயிரையே தியாகம் செய்து விட்டாள். | ٧) جادت بنفسها : بذلتها لمرضاة الله تعالي |

## கேள்விகள் ~ الاسئلة

1) விபச்சாரம் போன்ற சமூக விரோதச் செயல்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் கடும் தண்டனை கொடுப்பதன் தத்துவம் என்ன?

2) இஸ்லாமிய சன்மார்க்கமும் அதன் ஷரீஅத் சட்டங்களும் இன்றைய உலகிற்கு எந்தஅளவு தேவையாய் உள்ளன என்பதைச் சுருக்கமாக விளக்கவும்.

3) இந்நிகழ்ச்சியில் உமர் (ரலி) அவர்கள் ஏன் அவ்வாறு கேள்வி கேட்டார்கள்? அதற்கு நபி (ஸல்) அவர்கள் அளித்த பதிலின் தத்துவம் என்ன?

# இருவரும் சுவனம் சென்றனர்!

٢٣ – وَ عَنْ اِبْنِ عَبَّاسٍ رضي الله عنهما : أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : لَوْ أَنَّ لابْنِ آدَمَ وَادِيًا مِنْ ذَهَبٍ أَحَبَّ أَنْ يَكُوْنَ لَهُ وَادِيَانِ ، وَلَنْ يَمْلأَ فَاهُ اِلاَّ التُّرَابُ ، وَ يَتُوْبُ اللهُ عَلَي مَنْ تَابَ} متفق عليه

ஹதீஸ் 23

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ஆதத்தின் மகனுக்கு ஓர் ஓடை நிறைய தங்கம் கிடைத்தால் இரண்டு ஓடைகள் நிறைய தங்கம் வேண்டும் என்று விரும்புகிறான். அவனது வாயை மண்ணைத்தவிர வேறெதுவும் நிரப்பப் போவதில்லை! எவர் பாவமீட்கூஷி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுகிறாரோ அவருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்குகிறான் '' (நூல்: புகாரி, முஸ்லிம்)

٢٤– وَعَنْ أَبِى هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : يَضْحَكُ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى الَى رَجُلَيْنِ يَقْتُلُ أَحَدُهَمَا الآخَرَ يَدْخُلاَنِ الْجَنَّةَ ، يُقَاتِلُ هَذَا فِىْ سَبِيْلِ اللهِ فَيُقْتَلُ ، ثُمَّ يَتُوْبُ اللهُ عَلَى الْقَاتِلِ فَيُسْلِمُ فَيُسْتَشْهَدُ } متفق عليه

ஹதீஸ் 24

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்கள் அருளினார்கள்: இந்த இரண்டு மனிதர்களைப் பார்த்து அல்லாஹ் சிரிக்கிறான். அவர்களில் ஒருவர் இன்னொருவரைக் கொல்கிறார். பிறகு இருவரும் சுவனம் கூெடில்கிறார்கள். - ஒருவர் அல்லாஹ்வின் வழியில் போர் புரிகிறார். கொல்லப் படுகிறார். பிறகு கொலைகூெய்தவர் தௌபா -பாவமீட்சி தேடி மீளவே அவருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்கி கருணை பொழிகிறான். அவர் இஸ்லாத்தைத் தழுவுகிறார். பிறகு அவரும் (இறைவழிப் போரில் கொல்லப் பட்டு) ஷஹீதாகிறார்!'' (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை- الشرح

இந்த இரண்டு நபிமொழிகளும் பாவமீட்சி பற்றி விளக்குகின்றன. மனிதன் எவ்வளவு பெரிய பாவங்கள் கூெய்திருந்தாலும் திருந்தி, மனம் வருந்தி, வாய்மையுடன் தௌபா- பாவமீட்சி தேடினால் அவனை அல்லாஹ் மன்னித்து விடுகிறான் என்பதே இவற்றின் மையக் கருத்தாகும்.

குர்ஆனும் ஓரிடத்தில் இதனையே எடுத்துரைக்கிறது: (கருணைமிக்க இறைவனின் உண்மையான அடியார் களாகிய) அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெந்தத் தெய்வத்தையும் அழைப்பதில்லை. மேலும் (கொலைசெய்யக் கூடாதென) அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்ட எந்த உயிரையும் நியாய மின்றி கொலை செய்வதில்லை. மேலும் விபச்சாரம் கூெய்வதில்லை. இந்தகூஷி செயல்களைச் செய்தவன் யாராயினும் அவன் தன் பாவத்திற் கான கூலியைப் பெற்றே தீருவான். மறுமை நாளில் அவனுக்கு இரட்டிப்புத் தண்டனை கொடுக்கப்படும். மேலும் அவன் இழிவுக்குரியவனாய் அதிலேயே என்றென்றும் வீழ்ந்துகிடப்பான். ஆனால் (இந்தப் பாவங்களுக்குப் பிறகு) எவன் மன்னிப்புக் கோரி, இறைநம்பிக்கை கொண்டு நற்செயலும் செய்யத் தொடங்கினானோ அவனைத் தவிர! இத்தகையவர்களின் தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றி விடுகிறான். அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவ னாகவும் கிருபைமிக்க வனாகவும் இருக்கிறான்'' (25 : 68 - 70)

முதல் ஹதீஸின் கருத்து இதுதான்: மனிதன் பணத்தின் மீது பேராசை கொண்டவன். அவனிடத்தில் பணம் அபரிமிதமாகவே இருந்தாலும் இன்னும் பணம் வேண்டும்., இன்னும் பணம் வேண்டும் என்றுதான்

பேராசைப்படுகிறான்! பணத்தாசை மரணம் வரையிலும் அவனைத் தொடர்கிறது! அவனது வாயை மண்ணைத் தவிர வேறெதுவும் நிரப்பப் போவதில்லை என்கிற வார்த்தை சுட்டிக்காட்டுவது இதையே! - எவ்வாறாயினும் பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் அவன் மீளவேண்டுமென நபி (ஸல்) அவர்கள் ஆர்வமூட்டுகிறார்கள்.

ஏனெனில் பேராசையுள்ள மனிதன் பணத்திற்காகத் தவறான வழிகளின் மூலம் வருவாய் ஈட்ட தயங்கு வதில்லை. பணம்தான் அவனுக்கு முக்கியம்! இந்த நோய்க்கு மருந்தென்ன? வாய்மையான முறையில் பாவ மன்னிப்புத் தேடிக் கொள்வதே அதன் அருமருந்தாகும்.

ஆம்! மனிதன் திருந்திவிட்டால், மனம் வருந்தி பாவமன்னிப்புத் தேடி விட்டால் அல்லாஹ்விடம் அதற்கு மன்னிப்பு உண்டு. பொருளீட்டுவது தொடர்பான பாவமாக இருந்தாலும் சரியே!

இரண்டாவது ஹதீஸின் கருத்து இதுதான்: இறைநிராகரிப்பாளன் தனது நிராகரிப்புப் போக்கை கைவிட்டு பாவமீட்சி தேடினால் - இஸ்லாத்தை ஏற்றால் அல்லாஹ் அவனுக்கு மன்னிப்பு வழங்குகிறான். ஒரு முஸ்லிமை அவன் கொலை செய்திருந்தாலும் சரியே! ஏனெனில் புதிதாக இஸ்லாத்தைத் தழுவுதல் என்பது முந்தைய பாவங்கள் அனைத்தையும் மாய்த்து விடுகிறது!

அந்த இருமனிதர்களைப் பார்த்து அல்லாஹ் சிரிப்பதற்குக் காரணம் இதுதான்: உலகில் அவ்விருவரிடையே கடுமையான பகைமை இருந்தது. கொலை செய்யும் அளவுக்கு ஒருவரை ஒருவர் வெறுத்தனர். பிறகு ஷஹீத் (இறைவழிப்போரில் இறந்த தியாகி) எனும் அந்தஸ்தில் அவ்விருவருமே சுவனம் சென்றுவிட்டனர்! பரஸ்பரம் நேசம் கொள்ளக்கூடியவர்களாய் மாறி விட்டனர். ஏனெனில் சுவனம் சென்ற பிறகு அவர்களின் உள்ளத்தில் இருந்த பகைமையை அல்லாஹ் மாற்றிவிடுகிறான். சுவனம் புகுந்த அனைவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கக் கூடியவர்களாய் ஆகி விடுகிறார்கள்! பொறாமை, பகைமை போன்ற எவ்விதமான இழிக் குணங்களும் இல்லாத தூயநிலை அடைந்து விடுகிறார்கள்!

சுவன வாசிகளின் யதார்த்த நிலை பற்றி குர்ஆன் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறது: அவர்களின் உள் ளங்களில் படிந்திருந்த குரோதங்களை நாம் அகற்றி விடுவோம். அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாய் கட்டில்களில் எதிரெதிரே அமர்ந்திருப்பார்கள் " (15: 47)

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) ஓடை நிறைய | ١) واديا : ملء واد . |
| 2) அவனது வாயை மண்ணத்தை தவிர வேறு எதுவும் நிரப்பப் போவதில்லை: மரணம் வரை யிலும் பேராசைக் காரனாகவே இருப்பான். அவனது அடக்கத்தலத்தின் மண்தான் அவ னது வாயைப் நிரப்பப் போகிறது! | ٢) لن يملأ فاه الا التراب: لا يزال حريصا حتي يموت و يمتلأ جوفه من تراب قبره |
| 3) சிரிக்கிறான்: இது எப்படிப்பட்டது என் பதை அல்லாஹ்தான் மிக அறிந்தவன். சிலர் சொல்வர்: இங்கு அல்லாஹ் சிரிக்கிறான் என்பதன் கருத்து: அவ்விருவரின் செயல்ளை நேசிக்கிறான்., பொருந்திக் கொண்டான்., அதன் பேரில் கூலியும் கொடுக்கிறான் என்ப தாகும். | ٣) يضحك : الله اعلم بهذا الضحك وقيل : المراد بالضحك بالنسبة لله تعالي هنا محبته لفعلهما و الرضا عنه والثواب عليه |

## கேள்விகள் ~ الاسئلة

1) மனிதன் பணத்தின் மீது பேராசை கொள்வதால் ஏற்படும் கேடுகளை விளக்கவும்.
2) அவனது வாயை மண்ணத்தைத் தவிர வேறெதுவும் நிரப்பப் போவதில்லை என்பதன் கருத்து என்ன?
3) இந்த இரு மனிதர்களைப் பார்த்து அல்லாஹ் சிரிக்கிறான் என்பதன் விளக்கம் என்ன?
4) கொலை பாதகச் செயல் செய்தவனும் சுவனம் செல்கிறான் எனில் அதன் அடிப்படை என்ன?
5) அறிவிப்பாளர்கள் குறித்து நீ அறிந்துள்ள தகவல்கள் என்ன?

## ٣ – باب الصبر

பாடம்: 3

## பொறுமை

قَالَ اللهُ تَعَالَى: يَا اَيُّهَا الذِيْنَ آمَنُوْا اِصْبِرُوْا وَ صَابِرُوْا وَ رَابِطُوْا وَ اتَّقُوْا اللهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ (سورة آل عمران ألآية:٢٠٠) وَ قَالَ تَعَالَى: وَ لَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِنَ الْخَوْفِ وَ الْجُوْعِ وَ نَقْصٍ مِنَ الاَمْوَالِ وَ الاَنْفُسِ وَ الثَّمَرَاتِ وَ بَشِّرِالصَّابِرِيْنَ (سورة البقرة الآية :١٥٥) وَقَالَ تَعَالَى: اِنَّمَا يُوَفَّي الصَّابِرُوْنَ أَجْرَهُمْ بِغَيْرِ حِسَابٍ (سُورة الزمر الآية:١٠) وَقَالَ تَعَالَي : وَلَمَنْ صَبَرَ وَ غَفَرَ اِنَّ ذَلِكَ لَمِنْ عَزْمِ الأُمُوْرِ (سورة الشوري الآية: ٤٣ ) وَقَالَ تَعَالَي : اسْتَعِيْنُوْا بالصَّبْرِ وَ الصَّلاةِ اِنَّ اللهَ مَعَ الصَّابِرِيْنَ (سورة البقرة الآية: ١٥٣) وَقَالَ تَعَالَي: وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّي نَعْلَمَ الْمُجَاهِدِيْنَ مِنْكُمْ وَ الصَّابِرِيْنَ (سورة محمد الآية: ٣١) وَالآيَاتُ فِيْ الأَمْرِ بالصَّبْرِ وَ بَيَانِ فَضْلِهِ كَثِيْرَةٌ مَعْرُوْفَةٌ

அல்லாஹ் கூறுகிறான்: இறைநம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். (எதிரிகளை விஞ்சும் வகையில்) பொறுமையில் நிலைத்திருங்கள். (சத்தியத்திற்காகத் தொண்டு செய்திட) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருங்கள்'' (3 : 200)

மேலும் கூறுகிறான்: சிறிதளவு அச்சத்தாலும் பசியாலும் - உடைமைகள், உயிர்கள், விளைபொருள்களில் இழப்பை ஏற்படுத்தியும் திண்ணமாக உங்களை நாம் சோதிப்போம். (இந்தச் சூழ்நிலைகளில்) பொறுமையை மேற்கொள்வோருக்கு (நபியே!) நீர் நற்செய்தி சொல்வீராக!" (2 : 155)

மேலும் கூறுகிறான்: பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி கணக்கின்றி நிறைவாய் வழங்கப்படும்" (39:10)

வேறோர் இடத்தில், யார் பொறுமையை மேற்கொள்கிறார்களோ மேலும் மன்னிக்கவும் செய்கிறார்களோ அவர்களின் அந்தச் செயல் திண்ணமாக உறுதி மிக்க (வீரச்) செயல்களைச் சேர்ந்ததாகும்" (42 : 43)

பிறிதோரிடத்தில், பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் உதவி தேடுங்கள். திண்ணமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" (2 : 153)

மற்றோரிடத்தில், மேலும் நாம் உங்களை நிச்சயம் சோதனைக்கு உள்ளாக்குவோம். - உங்களில் யார் யார் முஜாஹிதுகள் (போராளிகள்) பொறுமையாளர்கள் என்பதை நாம் கண்டறிவதற்காக!" (47 : 31)

பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கட்டளையிடக்கூடிய குர்ஆன் வசனங்கள் ஏராளமாய் - பிரபலமாய் உள்ளன.

### தெளிவுரை - الشرح

## பொறுமையின் தத்துவம்

பொறுமை என்பதற்கு அரபியில் ஸப்ர் என்பர். தடுத்து வைத்தல் என்பது அதன் அகராதிப் பொருள். ஆனால் ஸப்ர் என்றால் இஸ்லாமிய வழக்கில் மனத்தை மூன்று விஷயங்களில் கட்டுப்படுத்துவதாகும்.

- அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில்
- விலக்கப்பட்ட செயல்களை விட்டு விலகுவதில்
- அல்லாஹ் நிர்ணயித்த விதியை ஏற்பதில்

இறைவழிபாட்டில் பொறுமை தேவை. ஏனெனில் இறைவனை வணங்கி வழிபடுவதை சிரமமான ஒன்றாகவே மனிதன் உணர்கிறான்.. மனத்திற்கு அது ஒரு பாரமாகவே உள்ளது.

நோயினாலோ முதுமையினாலோ மனிதனுக்கு இயலாமை வந்து விட்டால் வணக்க வழிபாடென்பது உடலைப் பொறுத்தும் பாரமாகிவிடுகிறது.

இதே போலவே ஹஜ், ஜிஹாத் போன்ற - பணம் செலவு செய்து நிறைவேற்றும் வழிபாடு என்று வரும் பொழுது அவற்றை நிறைவேற்றுவதும் மனிதனுக்குச் சிரமமாகவே படுகிறது! இந்தச் சூழ்நிலைகளில் இறை வழிபாட்டை நிறைவேற்றுவதற்குப் பொறுமை தேவை.

குர்ஆன் ஓரிடத்தில் குறிப்பிடுகிறது: பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் நீங்கள் உதவி தேடுங்கள். திண்ணமாக தொழுகை ஒருபாரமான செயல்தான்., ஆனால் எவர்கள், இறுதியில் தங்கள் இறைவனைச் சந்திப்பவர்களாய் இருக்கிறோம் என்றும் அவனிடமே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது என்றும் உறுதியாக நம்பி அஞ்சி வாழ்கிறார்களோ அவர்களுக்கு அது பாரமானதே அல்ல" ( 2 : 46)

இதேபோல் தீமைகளை விட்டு விலகி வாழ்வதற்கும் பொறுமை தேவை. இறைமார்க்கம் தடைசெய்த காரியங்களில் விழுந்து விடாதவாறு மனத்தைத் தடுத்து வைக்க வேண்டும். மனித மனமோ தீமை செய்யத் தூண்டக் கூடியதாகவே உள்ளது.

கொடுக்கல் - வாங்கலின்பொழுது பொய் பேசவும் ஏமாற்றவும் மனம் ஆசைப்படுகிறது. வட்டிக் கொடுக்கல் - வாங்கல் போன்ற தவறான வழியில் பொருளீட்டி உண்ணவே தூண்டுகிறது. அந்தத் தூண்டுதலுக்குப் பலியாகாமல் மனத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் அதன் கடிவாளத்தைக் கைப்பற்றி அதனை நல்ல வழியில் செலுத்துவதற்கும் பொறுமை தேவை!

இதேபோல விதியைப் பொருந்திக் கொள்வதற்கும் பொறுமை அவசியம். இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட விதி மனிதனைப் பொறுத்து இரண்டு வகைப்படும்.

1) உடன்பாடானது
2) எதிர்மறையானது

மனிதனுக்கு வளவாழ்வும் நிம்மதியும் ஏற்படுவது உடன்பாடான விதி. (அப்பொழுது அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திட வேண்டும்)

உலக வாழ்வில் மனிதன் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் சந்திக்க நேரிடுகிறது. சிலபொழுது நோய் நொடிகள் வந்து வாட்டுகின்றன. வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு வாழ்வு சிதைகிறது. சிலபொழுது குடும்பத்தில் மனைவி - மக்கள் மற்றும் உறவினர்கள் தொடர்பான கடும் பிரச்னைகள்! மனம் நிம்மதி இழக்கிறது. சிலபொழுது சமுதாய வாழ்க்கையில் சோதனைக்கு மேல் சோதனைகள்! - இது எதிர்மறையான விதி! இத்தகைய சூழ்நிலைகளில் பொறுமையே மிகமிகத் தேவை!

பொதுவாகத் துன்பங்களுக்கு உள்ளாகும் மனிதனிடம் பின்வரும் நான்கு நிலைகளில் ஒன்றைக் காணலாம்:

- கோபம் கொள்வது
- பொறுமை கொள்வது
- பொருந்திக்கொள்வது
- நன்றி செலுத்துவது

-முதல் நிலை கோபம் கொள்வது. இறைவனைக் குறித்து உள்ளத்தில் கோபமும் வெறுப்பும் அடைவது. - இறைவன் துன்பம் அளித்துவிட்டான்., அநீதி இழைத்துவிட்டான் என்று அவனைக் குறைகாண்பதாகும் இது!

சிலநேரம் மனிதன் இந்தக் கோபத்தை நாவால் வெளிப்படுத்துவதும் உண்டு. அட நாசமே! ஆட நாசமே! எனப் புலம்பிக் கொண்டு திரிகிறான். அல்லது காலத்தையும் நேரத்தையும் ஏசுகிறான். - இவை யாவும் அல்லாஹ்வுக்குத் துன்பம் கொடுக்கும் வகையிலான பாவச் செயல்களாகும். (இவற்றைத் தவிர்த்துப் பொறுமை காக்க வேண்டும்!)

சிலபொழுது உள்ளத்தில் எழுந்த கோபத்தை உறுப்புகளால் வெளிப்படுத்துகிறான். அதாவது, மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுகிறான். ஆடைகளைக் கிழிக்கிறான். - தன்னிலை இழந்து பதறிப் பரிதவிக்கும் பதற்றக்காரர்களின் நிலையாகும் இது. இதிலிருந்து மனத்தைப் பாதுகாக்க வேண்டும்!

- இப்படிப் பொறுமை இழந்து பதறிப் பரிதவிப்பதால் என்ன பயன்? துன்பம்தான் இரட்டிப்பாகும்! நோவினையும் வேதனையும் கொடுத்துக் கொண்டிருக்கும் துன்பம் ஒருபுறம். விதி குறித்து பொறுமை இழந்ததால் - இறைமார்க்கத்தின் நல்லொழுக்கத்தைப் பேணாததால் நன்மை இழந்து நிற்கும் துன்பம் மறுபுறம்!

இரண்டாவது நிலை பொறுமை! அதாவது, துன்பம் குறித்து இயல்பாக மனத்தில் ஒருவித வெறுப்பு ஏற்பட்டாலும் அதைக் கட்டுப்படுத்துவதும் இறைவனின் கோபத்திற்கு வழிவகுக்கும் வகையில் எதையும் செய்யாதிருப்பதுமாகும் இது!

மூன்றாவது நிலை அந்தத் துன்பத்தை முழுமையாகப் பொருந்திக் கொள்ளும் பண்பட்ட நிலை! அதாவது, துன்பம் எதுவும் நேராதது போன்று முழு நிம்மதியாக இருப்பதுபோன்று மனம் பொருந்திக் கொள்வது!

நான்காவது நிலை, துன்பம் வந்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் ஏற்றமிகு நிலை! அதாவது, இந்தத் துன்பம் அல்லாஹ் விதித்த விதியென ஏற்றுப் பொறுமை கொள்வதுடன் - பொருந்திக் கொள்வ துடன், பொறுமைக்கு அல்லாஹ்விடம் அதிகஅளவு நற்கூலி உண்டு எனும் ரீதியில் அதனை ஒரு நற்பேறாகக் கருதி நன்றி செலுத்துவதாகும்.

- நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் துன்பத்தைக் கண்டால் - மனம் வெறுக்கும் காரியம் நிகழக் கண்டால் **அல்ஹம்து லில்லாஹி அலா குல்லி ஹால்** (எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்) என்று சொல்வார்கள்! (நூல்: இப்னு மாஜா)

## அந்தஸ்தை உயர்த்தும் அமல்கள்

இமாம் நவவி(ரஹ்) அவர்கள், பொறுமைக்கு ஆர்வமூட்டக்கூடிய - பொறுமையாளர்களைப் புகழக்கூடிய குர்ஆன் வசனங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். அவற்றின் விளக்கத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

முதல் வசனம் : இறைநம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். (இறைவழிபாடு செலுத்திடப்) பொறுமையில் உறுதியாய் இருங்கள். (சத்தியத்திற்குத் தொண்டாற்றிட) எப்பொழுதும் ஒருங்கி ணைந்து முனைப்புடன் இருங்கள்'' (3 : 200)

இந்த வசனத்தில் இறைவன், நம்பிக்கையாளர்களே என்று அழைத்து இந்தக் கட்டளைகளை வழங்கி இருப்பதால் இவை ஈமானின் தேட்டத்திற்கும் அதன் ஏற்றத்திற்கும் உரியவை என்பது தெளிவு - அல்லாஹ் வுக்கு அஞ்சியே வாழுங்கள் எனும் வாக்கியத்தையும் சேர்த்தால் இந்தக் கட்டளைகள் மொத்தம் நான்காகும்:

يَا اَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا ا صْبِرُوْا وَ صَابِرُوْا وَ رَابِطُوْا وَاتَّقُوْا اللهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْن

(1) பொறுமையை மேற்கொள்ளுங்கள்
(2) பொறுமையில் உறுதியுடன் இருங்கள்
(3) ஒருங்கிணைந்து முனைப்புடன் இருங்கள்
(4) அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழுங்கள்

(1) பொறுமையை மேற்கொள்ளுங்கள்: அதாவது, வணக்கவழிபாடுகள் மற்றும் துன்பங்கள் மீதும் பாவங் களை விட்டும் விலகுவதிலும் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.

ஒன்றை அறிந்துகொள்ள வேண்டும். பாவம் செய்யும்படி மனம் தூண்டும் பொழுதுதான் அதை விட்டும் பொறுமை கொள்வதெனும் விஷயம் வருகிறது! பாவத்தின் சிந்தனையே மனத்தில் எழாத மனிதனைக் குறித்து அவன் பொறுமை கொண்டான் என்று சொல்வதில்லை! ஆனால் பாவம் செய்யுமாறு உங்கள் மனம் தூண்டும் பொழுது - பொறுமையை மேற்கொள்ளுங்கள்., மனத்தைக் கட்டுப்படுத்துங்கள் என்று சொல்லப்படுகிறது.

2) (எதிரிகளை விஞ்சும் வகையில்) பொறுமையில் நிலைத்திருங்கள். அதாவது எதிரிகள் எவ்வாறு கஷ் டங்களையும் துன்பங்களையும் சகித்துக் கொண்டு அசத்தியத்திற்கு ஆதரவாய் இருக்கிறார்களோ அதை விடவும் அதிகப் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் நீங்கள் சத்தியத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண் டும்.

இவ்விடத்தில் - இரண்டாவது கட்டளைக்கு அறிஞர்கள் சிலர் இப்படிப் பொருள் கொடுக்கிறார்கள்: வழிபாடு களை நிறைவேற்றுவதில் இத்தகைய பொறுமையுடன் நிலைத்திருங்கள் என்று! ஏனெனில் இறைவழிபாட்டில் இரண்டு விஷயங்கள் உள்ளன.

அ) அது மனிதன் மீது கடமையாக்கப்பட்டிருக்கும் நிலை
ஆ) அது மனத்திற்குப் பாரமாக இருக்கும் நிலை

- இறைவனை வழிபடுவதென்றால் அது ஒருசுமையாகவே படுகிறது., பாவத்தை விட்டொழிப்பதென்பது தீய மனத்திற்கு ஒரு பளுவாக இருப்பது போன்று!

இதனால்தான் இறைவழிபாட்டில் பொறுமையுடன் நிலைத்திருப்பது, பாவத்தைவிட்டும் பொறுமையாய் இருப் பதைவிடவும் சிறப்பு மிக்கதாகத் திகழ்கிறது! இந்த வசனத்தில் - **இஸ்பிரூ** (பொறுமை கொள்ளுங்கள்) என்பதற்குப் பிறகு **ஸாபிரூ** எனும் வார்த்தை ஆளப்பட்டிருப்பதன் காரணமும் இதுதான். இந்த வகையில் இதன் பொருள் இவ்வாறு விரிகிறது: அதாவது பிறருடன் போட்டிபோடும் அளவிலான பொறுமையுடன் வழி பாட்டில் நிலைத்திருங்கள்., ஒரு மனிதன் - போரிலோ சண்டையிலோ தன் எதிரியுடன் போட்டி போட்டுக் கொண்டு பொறுமையை மேற்கொள்வது போன்று!

3) ஒருங்கிணைந்து முனைப்புடனிருங்கள் எனும் கட்டளையின் கருத்து, இஸ்லாமிய நாட்டிற்கும் முஸ்லிம் களுக்கும் நிம்மதியும் பாதுகாப்பும் அளிப்பதற்காக எல்லையில் காவல் புரிதல் - எதிரிகளின் ஊடுருவலைக் கண் காணித்தல் என்பதாகும். ஆம்! முஸ்லிம்கள் நாட்டையும் தீனை - இறைமார்க்கத்தையும் பாதுகாத்திட முடிந்த அளவு வலிமையைத் திரட்டி வைத்திருக்க வேண்டும்., எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இந்த வசனத்தில் வந்துள்ள **றாபிதூ** (இதன் வேர்ச் சொல் அல் **முறாபதா**) எனும் வார்த்தைக்கு அதிக அளவு நல்லமல்கள் செய்தல், அதில் நிலைத்திருத்தல் எனும் அர்த்தமும் உண்டு.

பின் வரும் நபிமொழியில் இந்த அர்த்தம் உள்ளது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னென்ன அமல் களைக் கொண்டு அல்லாஹ், தவறுகளை மாய்ப்பானோ - அந்தஸ்துகளை உயர்த்துவானோ அவற்றை உங்க ளுக்கு அறிவித்துத் தரட்டுமா? அவைதான்: மனம் விரும்பாத நிலைகளிலும் உளூவை முழுமையாகச் செய் வது, பள்ளிவாசல்களை நோக்கி அதிகம் நடப்பது, தொழுகைக்குப் பிறகு தொழுகையை எதிர்பார்த் திருப் பது! இதுதான் எல்லையைக் காவல் காப்பது, இதுதான் எல்லையைக் காவல்காப்பது!" (அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) - நூல்: முஸ்லிம்)

- ஏனெனில் இந்த அமல்களில் நன்மைகளை அதிகம் தேடிக் கொள்வதும் அதில் நிலைத்திருப்பதும் உள்ளது. மேலும் முன்கூட்டியே பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகைக்கு இகாமத் சொல்வதை எதிர் பார்த்து காத்திருப்பதை, எல்லையைக் காவல்புரிவதுடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பதன் நுட்பம் என்னவெனில், எல்லை யைக் காவல் காப்பதற்கு அல்லாஹ்விடம் எவ்வளவு அதிக நன்மைகள் கிடைக்குமோ அவ்வளவு அதிக நன்மைகள், முன்கூட்டியே பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகையை எதிர்பார்த்திருப்பதற்கும் உண்டு. இதையே இவ்வாசகம் உணர்த்துகிறது.

4) அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் (அதாவது தக்வாவுடன்) வாழ்தல் என்பதன் கருத்து, அவனது கோபம் மற்றும் தண்டனையில் இருந்து தற்காப்பை மேற்கொள்வதாகும். ஏனெனில் **தக்வா** எனும் வார்த்தையின் உண்மைப் பொருள் தற்காத்தல் என்பதே! இறைக்கட்டளைகளை நிறை வேற்றுவதன் மூலமும் விலக்கப்பட்ட தீய செயல்களை விட்டு விலகுவதன் மூலமும் இந்தத் தற்காப்பு கிடைக்கிறது! இந்த வகையில் முதல் மூன்று கட்டளைகளின் பொருள்களையும் இந்த வார்த்தை உள்ளடக்கும் என்பது தெளிவு! தனித்தனி விஷயங் களைக் கட்டளையிட்ட பின் பொதுவான விஷயத்தைத் தொடுத்துரைத்தல் எனும் இலக்கண விதியின் கீழ் அமைந்ததாகும் இது!

இறுதியில் - நீங்கள் வெற்றியாளர்களாய்த் திகழக்கூடும்,, என்று இந்த வசனம் முடிந்திருப்பதும் கவனத் திற்குரியதாகும்! இந்த நான்கு கட்டளைகளையும் நிறைவேற்றினால்தான் வெற்றிக்கு வழிபிறக்கும் என்பதை இது உணர்த்துகிறது! அத்துடன் ஃபலாஹ் என்பது பொருட்செறிவானதோர் அரபிச் சொல். அதன் கருத்தில் இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒன்று: நாடியது நிறைவேறுவது. மற்றொன்று: அஞ்சியதை விட்டும் தப்பிப் பது. அல்லாஹ்வுக்கு அஞ்சிய வாழ்வை மேற்கொண்டால் மட்டுமே இந்த இரண்டும் கிட்டும். அதுவே வெற்றி!

## சோதனையில் சாதனை

இரண்டாவது வசனம்: திண்ணமாக நாம் -சிறிதளவு அச்சத்தாலும் பசியாலும் - உடைகள், உயிர்கள், விளைபொருள்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் உங்களைச் சோதிப்போம். (இந்நிலைகளில்) பொறு மையை மேற்கொள்கிறவர்களுக்கு (நபியே!) நீர் நற்செய்தி சொல்வீராக!" (2 : 155)

உலகில் மக்களுக்கு ஏற்படும் சோதனைகளை இந்த வசனம் பட்டியலிடுகிறது.

❀ சிறிதளவு அச்சம். ஏனெனில் முழுஅளவு அச்சத்தைக் கொடுத்து அல்லாஹ் சோதிப்பதில்லை. ஏனெனில் முழுஅளவிலான அச்சத்தை மனிதனால் தாங்கிக்கொள்ள முடியாது. அவனை அது அழித்தே விடும்!

மேலும் அச்சம் என்பது பசி - பட்டினியைவிடக் கொடுமையானது. இதனால்தான் சோதனைகளின் வரிசை யில் இதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பசித்த மனிதன் தண்ணீரையாவது அள்ளி அருந்தலாம். எங்காவது அலைந்து திரிந்து வயிற்றுப் பசிக்கு ஏதாவது தேடலாம். இலைதழைகளையாவது தின்று வயிற்றை நிறைத்து உயிர் வாழலாம்!

ஆனால் அச்சத்திற்குள்ளான மனிதனுக்கு வீட்டிலும் நிம்மதி இருக்காது., வெளியிலும் அவன் செல்ல முடியாது. அவன் அஞ்சி அஞ்சியே சாக வேண்டியதுதான்!

ஓர் உண்மையைக் கவனத்தில் கொள்ளவேண்டும். எவற்றையெல்லாம் குறித்து நாம் அஞ்சுகிறோமோ அவை அனைத்திலும் நாம் அதிகம் அஞ்ச வேண்டியது நம்முடைய பாவங்களைக் குறித்துத்தான்! ஏனெனில் பாவங்கள்தாம் அனைத்து விதமான அழிவுகளுக்கும் நாசங்களுக்கும் மூல காரணம். மறுமை மற்றும் உலக ரீதியான எல்லாத் தண்டனைகளிலும் நம்மைச் சிக்கவைப்பது அவைதான்!

❁ பசி: இதில் இருவகைகள் உள்ளன. (அ) மனிதர்கள் மீது சில காலகட்டத்தில் ஒருவிதமான நோயை அல்லாஹ் ஏவுகிறான். அதுதான் 'பசி' எனும் நோய். இந்நோய் வந்து விட்டால் எவ்வளவு அதிகம் உணவு உட்கொண்டாலும் வயிறு நிறையாது, பசித்துக்கொண்டே இருக்கும்!(ஆ)பஞ்சம் - பட்டினி! விவசாய உற்பத்தி நின்று, கால்நடைகளின் வளர்ச்சியும் பெருக்கமும் குறைந்து எங்கும் பஞ்சம் தாண்டவமாடுவதாகும் இது.

❁ உடைமைகள் இழப்பு: பொருளாதாரம் நசிந்துவிடுவதாகும் இது. அதாவது மக்களின் கையிருப்பு குறைந்து விடுவது, அவர்களின் வருமானம் ஏமாற்றம் அளிப்பது, அவர்களின் வாழ்வில் வறுமை தலை தூக்கு வது, அரசாங்கத்தின் கடன்சுமை அதிகரித்து நிர்வாகம் ஸ்தம்பித்து விடுவது போன்ற காரணங்களால் ஏற்படு வதாகும் இது!

❁ உயிரிழப்பு: அதாவது மரணம்! கொடிய நோய்களின் தாக்குதலால் மக்கள் மரணத்தைத் தழுவுவது,, முற்காலத்தில் காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் தாக்கி மக்கள் மடிந்தனர்., இப்பொழுது எய்ட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்களில் மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்!

❁ விளைச்சலின்மை. பசியும் பட்டினியும் இருக்காது., ஆனால் விவசாய உற்பத்தி குறைந்து விடும்., நெற் பயிர்களில் - உணவு தானியங்களில் அபிவிருத்தி இல்லாமலாகிவிடும்!

- இப்படியெல்லாம் அவ்வப்பொழுது அல்லாஹ் மனிதர்களைச் சோதிக்கிறான்., அது, அவர்களுடைய தீய செயல்களுக்கான தண்டனை! இதில் இறைநியதியின் நோக்கம் என்னவெனில், மக்கள் தக்க படிப்பினை பெறவேண்டும்., பாவங்களை விட்டொழித்து நற்செயல்கள் ஆற்ற வேண்டும் என்பதே!

இந்த வசனத்தில், <u>பொறுமையை மேற்கொள்வோர்க்கு (நபியே!) நற் செய்தி சொல்வீராக</u> எனும் வாக்கியம் - வாழ்க்கையில் இத்தகைய சோதனைகள் எதிர்படும்பொழுது பொறுமையுடன் இருப்பவர்களே நற் செய்திக்கு உரியவர்கள் - நற்பேறுபெற்றவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது!

இங்கு ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சோதனைகளில் பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதால் சோதனைக்குள்ளாகும் மனிதன் செயல்படாமல் முடங்கிக் கிடக்க வேண்டும் என்பது பொருளல்ல! வாழ்க்கையில் இவைபோன்ற கஷ்டங்கள் சூழ்கின்றபொழுது அவற்றின் தீய பாதிப்புகளில் இருந்து தப்பிக்க முயல்வது - அதாவது, பஞ்சம் வருவதை முன்கூட்டியே அறிந்து தக்க நட வடிக்கைகள் எடுத்துச் சமாளிப்பது, உயிர்க்கொல்லி நோய்களை ஒழிக்கும் அரிய மருந்துகளைக் கண்டு பிடித்து மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவது போன்ற முயற்சிகள் இறைஉவப்புக்கு எதிரானவையும் அல்ல.. பொறுமைப் பண்புக்கு முரணானவையும் அல்ல.

இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு குர்ஆனில் உள்ளது. அதுதான் யூசுப் நபி (அலை) அவர்களின் வரலாறு. யூசுப் நபி அவர்கள், எகிப்து நாட்டில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட இருந்ததை முன்கூட் டியே அறிந்தபொழுது அதைச் சமாளிக்கும் அரிய திட்டம் ஒன்றை வகுத்துக் கூறினார்கள். பருவ காலத்தில் கிடைக்கும் அதிக விளைச்சலை வீண் விரயம் செய்யாமல் சேமித்து வைத்து எதிர்காலத் தேவைகளைச் சமாளிக்க வேண்டும் எனத் திட்டம் தீட்டினார்கள்!

(மேலும் விவரத்திற்கு பார்க்க: குர்ஆனின் 12 வது அத்தியாயம் யூசுப் நபி வரலாறு) இந்த ரீதியில் பார்த் தால் இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்வது நபிமார்களின் செயல் முறையாகவும் இறைஉவப்பைப் பெறும் நற்செயலாகவும் உள்ள தென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த வசனத்தின் தொடரில் அல்லாஹ் மேலும் கூறுகிறான்: <u>அவர்கள் எத்தகையோர் எனில், தங்களுக் குத் துன்பம் நேரும்பொழுது கூறுவார்கள்: **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்** (பொருள்: நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்., அவனிடமே திரும்பிச் செல்லக் கூடியவர்கள் ஆவோம்)"</u>

- பொறுமையாளர்கள், வாழ்க்கையில் துன்பங்கள் சூழ்கிறபொழுது ஓர் உண்மையை நினைத்துப் பார்க் கிறார்கள்., நாவால் மொழிகிறார்கள். அதிகாரம் முழுவதும் அல்லாஹ்வின் கையில் உள்ளது. அவர்களும்கூட அவனுடைய உடைமைகள்தாம்! தனது உடைமையில் தனது விருப்பப்படி செயல்படுவதற்கு அல்லாஹ் வுக்கு முழுஅதிகாரம் உள்ளது. மேலும் மரணத்திற்குப் பிறகு மனிதர்கள் யாவரும் அல்லாஹ்வின் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியதுள்ளது. அவரவர் செய்த நன்மைகள் -தீமைகளுக்கு அந்த மறுவுலகில் அல்லாஹ் நற்கூலி- தண்டனை வழங்கயிருக்கிறான் என்பதே அந்த உண்மை! - இதனை உணர்ந்ததால்தான் நம்பிக்கையாளர்கள் நிலை குலையாமல் இருக்கிறார்கள். அவன் வழங்கும் நற்கூலியை எதிர்பார்த்து பொறுமையை மேற் கொள்கி றார்கள்.

இந்த வசனம் இவ்வாறு முடிகிறது: <u>அத்தகையோர் மீது அவர்களின் இறைவனிடம் இருந்து புகழுரைகளும் கருணையும் உண்டாகட்டுமாக!</u>

இந்த வசனத்திலுள்ள ஸலவாத் எனும் அரபிச் சொல்லுக்குத்தான் புகழுரைகள் என்று நாம் மொழியாக்கம் செய்துள்ளோம். இது ஸலாத் என்பதன் பன்மை. இதன் கருத்து, அவர்கள் பொறுமையை மேற்கொண்டது பற்றி அல்லாஹ் மலக்குகளிடம் புகழ்ந்துரைப்பதாகும்- அந்தளவுக்கு அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக் கிறான்., பொறுமையை விரும்புகிறான்!

இஸ்லாமிய அறிஞர்களில் சிலர், ஸலாத் எனும் வார்த்தை அல்லாஹ்வுடன் சேர்த்துச் சொல்லப்பட்டால் அவனது கருணை என்று பொருள்., மலக்குகளுடன் சேர்த்துச் சொல்லப்பட்டால் அவர்கள் பாவமன்னிப்புக் கோருவது என்று பொருள்., மனிதர்களுடன் சேர்த்துச் சொல்லப்பட்டால் அவர்கள் பிரார்த்தனை செய்வது என்று பொருள் என்பதாக விளக்கம் அளித்துள்ளனர். இதன்படி அல்லாஹ்விடமிருந்து ஸலவாத் உண்டா வதாக என்பதற்கு அவனது கருணை உண்டாகட்டும் என்றே பொருளானால் இதே இடத்தில் ரஹ்மத் - கருணை எனும் வார்த்தையும் இடம்பெற்றிருப்பது அதற்கு முரணாகிறது! எனவே ஸலவாத் - ரஹ்மத் இரண்டும் வெவ்வேறான பொருள் கொண்டவை என்பதே சரியாகும்.

மட்டுமல்ல (அல்லாஹு ம் மர்ஹம் அலா ஃபுலான்)யா அல்லாஹ்! இன்னார் மீது கருணை புரிவாயாக! என்று நீங்கள் பிரார்த்தனை செய்வது கூடும்., இதில் இஸ்லாமிய அறிஞர்களிடம் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அல்லாஹு ம்ம ஸல்லி அலா ஃபுலான் (யா அல்லாஹ்! இன்ன முஸ்லிம் மீது ஸலாத் பொழிவாயாக என்று பிரார்த்தனை செய்வது கூடாது., நபி(ஸல்) அவர்களுக்காக மட்டும்தான் (அல்லாஹு ம்ம ஸல்லி அலா முஹம்மத்) என்று பிரார்த்தனை செய்யவேண்டும். இதற்குக் காரணம் ஸலாத் என்பது ரஹ்மத் என்பதை விடவும் மேலான பொருள் உடைய வார்த்தை என்பதுதான்!

இந்த இடத்தில் இன்னொரு நுட்பத்தையும் புரிந்துகொள்வது பயன் மிக்கது. அதாவது, நபி (ஸல்) அவர்களின் மீது ஸலாத் சொல்வதுடன் சேர்ந்து வந்தால் பிறர் மீதும் ஸலாத் வேண்டி பிராத்தனை செய்ய லாம். **அல்லாஹு ம்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மத்** (யா அல்லாஹ்! நபியவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் ஸலவாத் பொழிவாயாக) என்று பிரார்த்தனை செய்வது போன்று!

மேலும் நபியவர்களின் பெயருடன் தொடுத்துவரவில்லை., ஆனால் -(நபியே!) அவர்களுடைய செல்வத் திலிருந்து தர்மத்தை வசூல் செய்து கொண்டு அதன் மூலம் அவர்களை அகமும் புறமும் தூய்மைப் படுத்து வீராக., மேலும் அவர்கள் மீது ஸலவாத் உண்டாவதாக என்று பிரார்த்தனையும் செய்வீராக" (9:103) என்று குர்ஆன் குறிப்பிடுவதுபோன்று ஒருகாரணம் இருந்தால் அந்த முஸ்லிம் மீது ஸலவாத் உண்டாகட்டுமென நீங்கள் பிரார்த்தனை செய்வதில் தவறில்லை.

எடுத்துக்காட்டாக, உங்களிடம் ஒருவர் வந்து, இதோ! எனது ஜகாத் பணம்., இதனை ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுங்கள் என்று தந்தால் **ஸல்லல்லாஹு அலைக்** (அல்லாஹ் உங்கள் மீது ஸலவாத் பொழி வானாக) என்று நீங்கள் பிரார்த்தனை செய்வது கூடும். ஆனால் அவரது பெயருடன் சேர்த்து **ஸல்லல்லாஹு அலைஹி** என்று சொல்வது ஒருமரபாக ஆக்கப்படாமல் இருக்க வேண்டும்.

## கணக்கின்றி கூலி

மூன்றாவது வசனம்: பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி கணக்கின்றியே வழங்கப்படும்" (39: 10)

கணக்கோடு வழங்கப்படுவது எவ்வளவு என்று தெரிந்தால் கணக்கின்றி வழங்கப்படுவதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ளது : ஓர் நற்செயலுக்கு பத்து மடங்கு ஏன், எழுநூறு மடங்குகள் வரை - அதை விடவும் இரட்டிப்புடன் அல்லாஹ் அதற்கு கூலி வழங்குவான் என்று!

அதே நேரத்தில் பொறுமைக்கு எவ்வளவு கூலி? அதற்குக் கணக்கே இல்லை என்கிறது இந்த வசனம்! பொறுமைக்கு ஏராளமானகூலி தாராளமாக உண்டு! எவ்வளவு என்று மனிதனால் கற்பனை செய்யவே முடி யாது! அது, அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகும்!

## மன்னிப்பும் சீர்திருத்தமும்

நான்காவது வசனம்: யார் பொறுமையை மேற்கொள்ளவும் மன்னிக்கவும் செய்கிறாரோ அவரது இந்தச் செயல் திண்ணமாக உறுதிமிக்க (வீரச்) செயல்களைச் சேர்ந்ததாகும்" (42 : 43)

கருத்து இதுதான்: மனிதர்களிடமிருந்து வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதென்பது- அவர்களை மன்னித்து விடுவதென்பது சாதாரணச் செயல் அல்ல., உறுதிமிக்க செயல். பெரிய அளவில் மனத்தைக் கட்டுப்படுத்தினால்தான் மன்னிப்பதற்கு மனம் இணங்கும்.

அதிலும் குறிப்பாக அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்யும்பொழுது கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதென்பது - போர் புரியுமாறு இறைவன் இடும் ஆணைக்குக் கீழ்ப்படியுமாறு மனத்தைக் கட்டுப்படுத்து

வதென்பது வீரமிக்க தீரச் செயல் என்பதில் இருகருத்து இருக்க முடியாது. போர்ச் சூழ்நிலையில் ஒரு போராளி மேற்கொள்ளும் பொறுமைக்குச் சாதாரணப் பொறுமையைக் காட்டிலும் அதிக நற்கூலி உண்டு.

இதேபோன்றே மக்களை நன்மை புரியுமாறு ஏவுதல், தீமையை விட்டும் தடுத்தல் எனும் பணிகளுக்காகப் பொறுமையை மேற்கொள்வதற்கும் அதிகச் சிறப்பு உண்டு. ஏனெனில் இப்பணிகளை மேற்கொள்பவருக்கு இரண்டு வகைகளில் கூலி உண்டு!

❁ அவருக்குத் துன்பம் ஏற்படுகிறது எனும் வகையில்!

❁ இறைவனுக்காக - இறைமார்க்கத்திற்காக பொறுமை கொண்டார் எனும் வகையில்!

ஆக! மன்னிப்பதற்கும் மனிதர்களால் ஏற்படுகிற தொல்லைகளைப் பொறுத்துக் கொள்வதற்கும் இதில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. ஆயினும் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குத் தொல்லை கொடுத்தவனை நீங்கள் மன்னிக்க வேண்டுமென்பதற்கு ஒரு நிபந்தனை உண்டு. அந்த நிபந்தனையுடன் இருந்தால்தான் அந்த மன்னிப்பு புகழுக்குரியதாகும். அஷ்ஷூ ரா அத்தியாயத்தில் வரும் ஒருவசனத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னிப்பதும்கூட சீர்திருத்தத்துடன் இருக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. அந்த வசனம் இதுதான்:

<u>எவர் மன்னிக்கிறாரோ மேலும் சீர்திருத்தவும் செய்கிறாரோ அவரது கூலி அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது</u>" (42: 40)

எடுத்துக்காட்டாக, உங்களுக்குத் துன்பம் இழைத்த மனிதன் தீமை புரியத் துணிந்தவனாக எவரையும் துன்புறுத்த அஞ்சாதவனாக இருந்தால் - நீங்கள் அவனைச் சாதாரணமாக மன்னித்து விடுவதால் திருந்த மாட்டான் என்றிருந்தால் அவனை மன்னிக்காதீர்கள்! உங்களது நியாயத்தை விட்டுக் கொடுக்காதீர்கள்! உங்களது உரிமையை முறையாகப் பெற்றுக்கொள்வதே சிறந்தது. ஏனெனில் உங்களது மன்னிப்பு அந்த மனிதனின் தீமையை வளர்க்கவே செய்யும்!

ஆனால் அந்த மனிதனை நீங்கள் மன்னிப்பதால் அவன் திருந்திவிடுவான்.. அவனது தீமை தொடராது என்றிருந்தால் நீங்கள் அவனை மன்னிப்பதே சிறந்தது. உகந்தது. ஏனெனில் **..அவரது கூலி அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது.** நீங்கள் மன்னிக்காமல் நாளை மறுமையில் அந்த மனிதனின் நற்செயல்களை உங்கள் உரிமைக்குப் பகரமாக நீங்கள் பெறுவதைவிட, இந்த வசனம் குறிப்பிடுவதன்படி அந்த மனிதனை மன்னித்து அதற்கான கூலியை அல்லாஹ்விடத்தில் பெற்றுக்கொள்வதே சிறந்தது!

## பொறுமையும் இறையுதவியும்

பொறுமை குறித்து எடுரத்துரைக்கும் ஐந்தாவது வசனம்: <u>பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்</u>" (2 : 153)

வாழ்க்கையில் பிரச்னைகள் எழும்பொழுது பொறுமையை மேற்கொண்டு அதன் மூலம் உதவி தேடுமாறு இவ்வசனம் அறிவுறுத்துகிறது. ஆம்! அல்லாஹ்விடம் உதவியை எதிர்பார்த்து பொறுமையுடன் இருந்தால் பிரச்னைகள் இலகுவாகத் தீர்ந்து நிம்மதி பிறக்கும் என்பது திண்ணம்! துன்பத்திற்குப் பின் இன்பமும் கஷ்டத்திற்குப் பின் இலகுவும் தொடர்வதுதானே உலக வாழ்வின் நியதி! அதற்கான வழிபிறப்பதற்குத்தான் பொறுமை தேவை. பொறுமையில்தான் வெற்றியின் இரகசியம் அடங்கி உள்ளது!

பொறுமையைப் போன்றதுதான் தொழுகையும். அது இறைவனுக்கும் மனிதனுக்கும் ஒருவலுவான தொடர் பாகத் திகழ்கிறது! இதோ! தொழுகையில் அல்லாஹ்வின் திருமுன்னால் மனிதன் நிற்கிறான். இரகசிய உரை யாடலை அவனிடம் சமர்ப்பிக்கிறான். பணிந்தும் குனிந்தும் தலையைத் தரையில் வைத்தும் வணங்கியும் அல்லாஹ்விடம் நெருங்கிச் செல்கிறான். இறையுதவி அவன் பக்கம் கனிந்து வருதற்கு இது ஒருபலமான பால மாக அமைகிறது. இதோ! நபியவர்களின் வாழ்க்கை இதற்கு ஓர் அழகிய முன்மாதிரி! நபியவர்களுக்கு ஏதே னும் துன்பம் ஏற்பட்டால் உடனே தொழுகையின் பக்கம் விரைவார்கள் என்று ஹதீஸ் அறிவிப்புகள் தெரிவிக் கின்றன.

<u>நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்</u>" - இதிலுள்ள உடனிருக்கிறான் எனும் வாசகம் அல்லாஹ்வின் பிரத்தியேகமான நெருக்கத்தைக் குறிக்கிறது. இது இரண்டு வகைகளிலாகும். ஒன்று: அல்லாஹ் எல்லா மனிதர்களுடனும் இருப்பது. பின்வரும் இரண்டு வசனங்களில் இது கூறப்பட்டுள்ளது :

❁ <u>நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான்</u>" (57 : 4)

❁ மூன்று மனிதர்களிடையே ரகசியப் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறுவதில்லை., அவர்களிடையே நான்காவதாக அல்லாஹ்வும் இருந்தே தவிர!அல்லது ஐந்து மனிதர்களிடையே இரகசியப் பேச்சுவார்த்தை எது வும் நடைபெறுவதில்லை., அவர்களிடையே ஆறாவதாக அல்லாஹ்வும் இருந்தே தவிர! இரகசியப் பேச்சுகள்

பேசுவோர் இதனைவிடக் குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் - அவர்கள் எங்கு இருந்தாலும் அவர்களுடன் அல்லாஹ் இருக்கிறான்" (58 : 7)

- இந்த முதல்வகை எல்லாப் படைப்பினங்களுக்கும் பொருந்தும். பேரண்டத்தில் எந்த ஒரு படைப்பானாலும் அல்லாஹ் அதனுடன் இருக்கிறான். அதாவது, அவனது அறிவும் ஆற்றலும் அதிகாரமும் அவற்றைச் சூழ்ந்திருக்கிறது.

இரண்டாவது, பிரத்தியேகமான முறையில் உடனிருத்தல். அல்லாஹ் உடனிருக்கிறான் என்றால் உதவியும் ஒத்தாசையும் நல்கிக்கொண்டிருக்கிறான் என்பது கருத்தாகும். இது ரஸூல்மார்களுக்கும் அவர்களைப் பின்பற்றி வாழ்பவர்களுக்கும் மட்டும் உரியது.

**அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்பது போன்ற வசனங்கள் இத்தகைய உடனிருத்தலை உணர்த்தக் கூடியவையே!**

இந்த இடத்தில் இன்னோர் உண்மையையும் அறிந்து கொள்ளவேண்டும். அதாவது, உடனிருத்தல் எனகிற வாசகத்தின் கருத்து, அல்லாஹ் எல்லா மனிதர்களுடனும் - அவரவருடைய இடங்களில் அவர்களுடன் இருக்கிறான் என்பதல்ல., அவன் இருப்பது அண்ட சராசரங்களுக்கும் மேலே அர்ஷில்தான்! அவன் அங்கிருப்பதுடனேயே - தனது அதிகாரத்தால், அறிவுஞானத்தால் எல்லா மனிதர்களையும் எல்லா படைப்புளையும் சூழ்ந்து கொண்டிருக்கிறான்., எல்லாவற்றையும் அறிந்து கொண்டிருக்கிறான்!

## பொறுமையும் ஜிஹாதும்

பொறுமையின் சிறப்பை எடுத்துரைக்க இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கொண்டு வந்த இறுதி வசனம் இது தான்:

நாம் உங்களை நிச்சயம் சோதனைக்குள்ளாக்குகிறோம். எதற்காகவெனில், உங்களின் முஜாஹித் (போராளி)களையும் பொறுமையாளர்களையும் நாம் அறிந்து கொள்வதற்தகாகத்தான்.. மேலும் உங்களுடைய நிலைமைகளைப் பரிசீலிப்பதற்காகத்தான்!" (47 : 31)

- சோதனைக்குள்ளாக்குதல் என்பதன் கருத்து, அல்லாஹ், இறைநம்பிக்கையாளர்களின் மீது ஜிஹாத் எனும் இறைவழிப்போரைக் கடமை ஆக்கியிருப்பதாகும். இப்படிச் செய்வதன் நோக்கம் என்ன? பொறுமையாளர்கள் யார் என்பதை அறிவதுதான்.,அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதுதான் என்கிறது இந்த வசனம்.

இன்னொரு வசனம் கூறுகிறது: அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர்களுக்குப் பதிலடி கொடுத்திருப்பான். ஆயினும் (இப்படியொரு வழியை அவன் மேற்கொண்டது) உங்களில் சிலரை வேறு சிலரைக் கொண்டு சோதிப்பதற்காகத்தான்! மேலும் எவர்கள் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுகிறார்களோ அவர்களின் பணிகளை ஒருபோதும் அல்லாஹ் வீணாக்க மாட்டான்" (47 : 4 - 5)

இப்படி இறைநம்பிக்கையாளர்கள் மீது இறைவழிப்போரை கடமையாக்கி அவர்களைப் போர்க்களத்தில் கொண்டுவந்து நிறுத்திச் சோதிப்பதன் மூலம் அல்லாஹ் பொறுமையாளர்களை அறிகிறான் என்கிற பொழுது குறைமதியாளர் சிலர் ஒருதவறான கருத்தை முன்வைக்கிறார்கள். எந்த ஒருகாரியமானாலும் - அது நிகழ்கிற பொழுதுதான் அல்லாஹ் அதை அறிந்து கொள்கிறான். நிகழ்வதற்கு முன்னால் அது பற்றி எதுவும் அவனுக்குத் தெரியாது என்கின்றனர்! இதற்குத் தெளிவானதொரு பதில் தருவது நமது கடமை.

எல்லா விஷயங்களையும் நிகழ்வுகளையும் - அவை நிகழ்வதற்கு முன்பே அல்லாஹ் அறிகிறான். அப்படி அறிவதற்கு நம்மால் இயலாதுதான். ஆனால் இறைவனுக்கு இயலாதது என்று எதுவும் இருக்க முடியாது! அவனது ஆற்றல் அளவில்லாதது. இதனை இன்னோர் இடத்தில் குர்ஆன் இவ்வாறு எடுத்துரைக்கிறது:

வானம் பூமியிலுள்ள ஒவ்வொன்றையும் அல்லாஹ் அறிகிறான் என்பதையும் அவை அனைத்தும் ஓர் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும் நீங்கள் அறிவதில்லையா? திண்ணமாக இது அல்லாஹ்வுக்குச் சிறிதும் சிரமமானதன்று!" (22 : 90)

- ஒரு விஷயத்தை அது நிகழ்வதற்கு முன்னால் அல்லாஹ் அறிய மாட்டான் என்று வாதிடுபவன் குர்ஆனில் இடம் பெற்றுள்ள இது போன்ற வசனங்களைப் பொய்ப்படுத்தியவன் ஆகிறான்.

ஒரு வேறுபாட்டைத் தெளிவாகத்தெரிந்து கொள்ள வேண்டும். உங்களில் போராளிகளையும் பொறுமையாளர்களையும் நாம் அறிவதற்காக எனும் வாசகத்தில் வரும் அறிதல் என்பதன் கருத்து, எந்த அறிதலின் அடிப்படையில் நற்கூலியோ தண்டனையோ வழங்கப்படுமோ அந்த அறிதல் ஆகும். அதாவது, ஒன்றை - அது நிகழ்வதற்கு முன்னால் அல்லாஹ் அறிந்து வைத்திருக்கிறான் என்பது சரிதான். ஆனால் அதனடிப்படையில் மனிதனின் செயலுக்கு நற்கூலியோ தண்டயையோ அளிப்பது நீதமாகாது! அதைக்கொண்டு அவன் சோத

னைக்கு உள்ளாக்கப்பட்டு அதில் அவனது செயல்பாடு வெளிப்பட்டு அதன் அடிப்படையில் நற்கூலியோ தண்டனையோ அளிக்கப்பட்டால்தான் அது நீதியாகும்.

அறிஞர் சிலர் இதற்கு இன்னொரு விளக்கம் தருவர். அதாவது, உங்களில் போராளிகளை - பொறுமை யாளர்களை அறிவதற்காக என்றால் அதன் கருத்து, அது வெளிப்படையாக நிகழ்வதை அறிவது, தெளிவாகத் தெரிவது என்பதாகும். ஒருசெயலைக் குறித்து அது எதிர்காலத்தில் நிகழும் என்று அறிவதற்கும் நேற்று அது நிகழ்ந்து விட்டது என்று அறிவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஒரு மனிதன் இந்தச் செயலை நாளை செய்வேன் என்று உங்களிடம் சொல்கிறபொழுது அந்த விஷயம் உங்களுக்குத் தெரியவந்து விட்டது. மறுநாள் அந்தச்செயலை அவன் செய்து விடும்பொழுது அதுவும் உங்களுக்குத் தெரிந்துவிட்டது. இந்த இரண்டையும் அறிந்து கொள்வதற்கு மத்தியில் வித்தியாசும் தெளிவாய் உள்ளதை எவரும் எளிதாய்ப் புரிந்து கொள்ளலாம்.

## எழுத்தாளனும் ஒரு போராளியே!

போராளி (முஜாஹித்) எனும் வார்த்தையின் கருத்து விரிவனானது. அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காக,மேலோங்கச் செய்வதற்காக உழைப்பவர் என்றால் கல்வியின் மூலம் அதற்காக உழைப்ப வரையும் ஆயுதம் ஏந்திக் களத்தில் குதிப்பவரையும் அது உள்ளடக்கும். இருவருமே அல்லாஹ்வின் வழியில் அறப்போர் புரிபவர்தாம்!

கல்வியைக் கற்று - கற்றுக்கொடுத்து மக்கள் மத்தியில் கல்விப் பணியாற்றிக்கொண்டிருப்பவர் கல்வியின் மூலம் ஜிஹாத் செய்பவர் ஆகிறார். அல்லாஹ் வழங்கிய ஷரீஅத்தை அரியணையேற்றுவதற்குக் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டு பாடுபடுகிறார். இதேபோன்றுதான் ஆயுதமேந்தி எதிரிகளுடன் போர் புரிபவரும்! ஆனால் ஒருநிபந்தனை: இவர்களின் நோக்கம் இறைமார்க்கத்தை இத்தரணியில் மேலோங்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1)பொறுமையை மேற்கொள்ளுங்கள்: வழிபாடுகள் மற்றும் துன்பங்கள் மீதும் பாவங்களை விட்டு விலகுவதிலும் பொறுமை கொள்ளுங்கள். | ١) اصبروا: على الطاعات والمصائب وعن المعاصى |
| 2)நிராகரிப்பாளர்களை விஞ்சும் அளவில் பொறுமை மேற்கொள்ளவும். | ٢) صابروا: أى غالبوا الكفار بالصبر |
| 3) ஜிஹாதில் நிலைத்திருங்கள். றாபத (முறா பதா) என்றால் எல்லையைத் தொடர்ந்து கண் காணித்து எதிரிகள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருந்தான் என்று பொருள். | ٣) رابطوا: أقيموا على الجهاد و رابط، مرابطة: اذا لازم ثغر العدو |
| 4)இதற்கான அரபி வார்த்தையிலுள்ள (لام) லாம் சத்தியத்தின் பொருளைக் கொடுக்கக்கூடிய தாகும். இதன் முழுப்பொருள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்களை சோதனைக்கு உள்ளாக் குவோம் என்பதாகும். | ٤) ولنبلونكم : اللام لام القسم، أى والله لنختبرنكم |

## கேள்விகள் – الاسئلة

1) ஸப்ர் (பொறுமை) என்பதன் அகராதிப் பொருள் என்ன? இஸ்லாமிய வழக்கில் அதன் விரிவாக்கம் என்ன? சுருக்கமாக விளக்கவும்.

2) தவறுகளை மாய்க்கக்கூடிய மற்றும் அந்தஸ்துகளை உயர்த்தக்கூடிய அமல்கள் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டவை யாவை?

3) 2 : 155 ஆம் வசனம் சில சோதனைகளை பட்டியலிடுகிறது. அவற்றைச் சுருக்கமாக விளக்கவும்.

4)அத்தகையோர் மீது அவர்களின் இறைவனிடம் இருந்து புகழுரைகளும் (ஸலவாத்தும்) அருளும் உண்டாகும் எனும் வசனத்தின் கீழ் ஸலவாத் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கம் என்ன?

5) மன்னிக்க வேண்டும்தான் ஆனால் அது சீர்திருத்தத்துடன் இருக்க வேண்டும் என்பதன் விளக்கம் என்ன?

6)நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்கிற வசனத்தின் கீழ் உடனிருத்தல் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கம் என்ன?

7) உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை - அவை நிகழ்ந்த பிறகுதான் அல்லாஹ் அறிகிறான். அதற்கு முன்பு அது பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது என்கிற தவறான கருத்துக்கு அளிக்கப்பட்ட பதில் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்கவும்.

## பொறுமையின் தனிச்சிறப்பு

**٢٥ – وَعَنْ أَبِى مَالِكٍ الْحَارِثِ بْنِ عَاصِمٍ ألاَشْعَرِىْ رضي الله عنه قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ :{ الطُّهُوْرُ شَطْرُ الاِيْمَانِ وَالْحَمْدُ للهِ تَمْلأُ الْمِيزَانَ ، وَ سُبْحَانَ اللهِ وَ الْحَمْدُ للهِ تَمْلآنِ – أَوْ تَمْلأُ ما بَيْنَ السَّمَاوَاتِ وَ الارْضَ ، وَالصَّلاةُ نُوْرٌ ، وَالصَّدَقَةُ بُرْهَانٌ ، وَ الصَّبْرُ ضِيَاءٌ ، وَ الْقُرْآنُ حُجَّةٌ لَكَ أَوْ عَلَيْكَ كُلُّ النَّاسِ يَغْدُوْ فَبَائِعٌ نَفْسَهُ فَمُعْتِقُهَا أَوْ مُوْبِقُهَا} رَوَاهُ مُسْلِمٌ**

ஹதீஸ் 25

அபூ மாலிக் - அல் அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: தூய்மை (ஈமான் எனும்) நம்பிக்கையின் பாதியாகும். அல்ஹம்துலில்லாஹ் தராசை நிரப்புகிறது. ஸு ப்ஹானல்லாஹி வல் ஹம்து லில்லாஹ் வானங்களுக்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள இடை வெளியை நிரப்புகிறது. தொழுகை ஒளியாகும். தர்மம் ஆதாரமாகும். பொறுமை வெளிச்சமாகும். திருக்குர்ஆன் உனக்குச் சாதகமான அல்லது பாதகமான ஆதாரமாகத் திகழ்கிறது!. ஒவ்வொரு மனிதரும் காலையில் (தத்தம் பணிக்காகச்) செல்கின்றனர்., தமது ஆன்மா தொடர்பான வியாபாரத்தை மேற்கொள்கின்றனர் - அதற்கு விடுதலை பெற்றுத் தருகின்ற னர். அல்லது அதை அழிவுக்கு உள்ளாக்குகின்றனர்!” (நூல்: முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

பொறுமையின் சிறப்பையும் நன்மையையும் விவரித்து அதைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தக்கூடிய இறை வசனங்ளை முன்னர் பார்த்தோம். இப்பொழுது பொறுமை பற்றி பேசும் நபிமொழிகளைப் பார்ப்போம்.

**பொறுமை வெளிச்சமாகும்** எனும் வாசகத்திற்காகத்தான் இந்த நபிமொழியை இந்த அத்தியாயத்தின் கீழ் இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கொண்டுவந்துள்ளார்கள்.

பொறுமை உள்ளத்தின் ஒளியாகவும் பாதையின் வெளிச்சமாகவும் பணிக்கு ஊக்கமாகவும் திகழ்கிறது! ஆம்! சூழ்ந்து வரும் துன்பங்களினாலும் இன்னல்களினாலும் வாழ்க்கைப்பாதையில் இருள்கள் அடர்ந்து தொடர்ந்து பயணிப்பது தடைபடும் பொழுது பொறுமைதான் வெளிச்சம் பாய்ச்சி இடறகற்றுகிறது. பொறுமையில் உறுதியாக இருப்பவருக்கே அப்பொழுது யதார்த்த நிலை என்ன என்பது புலப்படும்! இருள்களில் இடறி விழுந்திடாமல் ஆற்ற வேண்டிய பணிகளைத் தொடர்ந்து அவர் ஆற்றுகிறார்.

இறைவழியில் வாழும் மனிதர் பொறுமையைக் கடைப்பிடித்தால் நேர்வழியில் நிலைத்து நிற்கும் நற்பேறு பரிசாகக் கிடைக்கிறது. சத்திய நெறியின் அழைப்பாளன் பொறுமையை மேற்கொண்டால் அவனது உழைப்பு வெற்றிக் கனியைப் பறிக்கும் காலம் விரைந்து வருகிறது!

தூய்மை ஈமானில் பாதியாகும் - தூய்மை என்பதில் புலனுக்குட்பட்ட அசுத்தங்களை விட்டு விலகுவதும் அடங்கும்., தீய கொள்கைகள், தீய செயல்கள் ஆகியவற்றை விட்டு விலகுவதும் அடங்கும்.

- ஈமான் என்பது ஏற்பது, தவிர்ப்பது எனும் இரு அம்சங்களைக் கொண்டுள்ளது. தவிர்ப்பது என்பதன் கருத்து, ஷிர்க் எனும் இணைவைப்பை விட்டும் இதர தீமைகளை விட்டும் விலகுதல் ஆகும். மேலும் இணை வைத்து வணங்குபவர்கள், தீமை செய்பவர்கள் ஆகியோருடன் உள்ள தொடர்பை - அவர்கள் செய்யும் தீமை களின் அளவுக்குத் துண்டித்தலும் ஆகும். இந்த ரீதியில் ஒருமனிதன் இறைநம்பிக்கையாளனாகத் திகழ வேண்டுமெனில் எல்லா வகையான தீமைகளை விட்டும் அவற்றைச் செய்பவர்களை விட்டும் விலகித் தூய்மை பெற்றிட வேண்டும். - தூய்மையின் இந்த அம்சத்தின் அடிப்படையில்தான் சுத்தம் ஈமானில் சரிபாதி என்று கூறப்பட்டுள்ளது.

அல்ஹம்து லில்லாஹ் என்பது தராசை நிரப்புகிறது - எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்பது இதன் பொருளாகும். இறைப்புகழை இயம்பும் வார்த்தைகளிலே இதற்கு தனிச்சிறப்பு உண்டு. அதனால்தான் திருக் குர்ஆனின் தொடக்கமே இதனைக் கொண்டு அமைந்துள்ளது.

ஹம்து என்றால் புகழ்தல் என்று பொருள். அதாவது, அழகிய செயல்கள் - ஆற்றல்களைக் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்வதாகும். அப்படிப் புகழ்வதுடன் அவனுக்கு முழுமையாக அடிபணிவதும் அவன் நிர்ணயித்த விதியை முழுமனத்துடன் ஏற்பதும் அதிலிருக்கவேண்டும்.

தராசு என்பது மறுவுலகத்தில் மனிதர்களின் செயல்களை எடை போடு வதற்காக நிறுவப்படும் கருவியாகும். செயல்கள் எப்படி எடைத் தட்டில் நிற்கும்? அவற்றை எப்படித் தராசில் வைத்து நிறுக்க முடியும்? என்றொரு கேள்வி பிறக்கலாம். பதில் இதுதான்:

1) மனிதர்களின் செயல்களுக்கு - மறுமை நாளில் அவற்றைத் தராசில் வைத்து நிறுக்கும் வகையில் வடிவமும் பருமனும் கொடுக்கப்படும்.

2) அல்லது நிறுக்கப்படும் என்றால், செயல்களை அல்ல., அவற்றின் பதிவேடுகள்தான் தராசில் வைத்து நிறுக்கப்படும் என்று பொருள் காண வேண்டும். தீமைகள் நிறுவைக்கு நிற்கமாட்டா. நல்ல செயல்களே எடையில் நிற்கும்.

**அல்ஹம்து லில்லாஹ்**வுக்கு தராசையே நிரப்பும் அளவு மகத்தான நன்மை உண்டென்பதன் கருத்து இதுதான்: ஹம்து என்பதிலுள்ள அல் எனும் துணையெழுத்திற்கு புகழின் எல்லா வகைகளையும் உள்ளடக்கும் அர்த்தம் உண்டு. அல்ஹம்து லில்லாஹ் என்றால் எல்லா வகையான புகழும் அல்லாஹ்வுக்கு மட்டும் சொந்தம் என்று பொருள்.

- அல்லாஹ், எல்லாவகையான பூரணத் தன்மைகளையும் பெற்றவன் என்று கூறுவதும் புகழ்தான்.
- பலவீனங்களும் குறைபாடுகளும் இல்லாதவன்., அவற்றை விட்டும் தூய்மையானவன் என்றுரைப்பதும் புகழ்தான்.
- அவனது பேராற்றலை ஏற்றுக் கொண்டு அதற்கு எதிரில் நமது இயலாமையை ஒப்புக் கொள்வதும் புகழ்தான்.
- அவனுக்கு நன்றி செலுத்துவதும் புகழ்தான்.
- உயர்ந்த அந்தஸ்துகளைப் பெற்றுத்திகழ்வதில் அவன் தனித்துவம் உடையவன் என்பதும் புகழ்தான்.

- இப்படிப்பட்ட புகழ்மொழிகளும் இன்னும் நம் அறிவுக்கு எட்டாத புகழுரைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தம் என்றுரைப்பதில் அல்ஹம்து லில்லாஹ் எனும் வார்த்தை தன்னிகரற்றுத் திகழ்கிறது! இதன் அடிப்டையிலேயே இவ்வளவு மகத்தான கூலியை இவ்வார்த்தை பெறுகிறது!

**ஸு ப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹ், வானங்களுக்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள இடைவெளியை நிரப்புகிறது**

இதில் இருவார்த்தைகள் உள்ளன. **விடுவித்தல், அணிவித்தல்** என்கிற இரு அம்சங்களை முறையே அவை பெறுகின்றன.

முதல் வார்த்தை ஸு ப்ஹானல்லாஹ் - இதன்பொருள், அல்லாஹ் தூய்மையானவன் என்பதாகும். அதாவது, அல்லாஹ்வின் திருப்பெயர்கள், தன்மைகள், செயல்கள் மற்றும் அவன் வகுத்தளித்த சட்டங்கள் ஆகியற்றில் எவ்விதக் குறைபாடுமில்லை., அவை எல்லாமும் தூய்மையானவை! பொருத்த மற்ற பெயர்களை, தன்மைகளை இறைவனுக்குச் சொல்வது கூடாது என்கிற கருத்தில் **விடுவித்தல்** எனும் அம்சமாகும் இது!

அல்லாஹ்வின் பெயர்கள், தன்மைகளின் தூய்மை நிலை பற்றி குர்ஆன் குறிப்பிடுவதைக் கேளுங்கள்:

قَالَ تَعَالَى {وَلِلّٰهِ الاَسْمَاءُ الْحُسْنٰى} سُوْرَةُ ألاَعْرَافِ الآيَة ١٨٠

மிகவும் அழகிய பெயர்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தம்" (7 : 180)

قال تعالى: لِلَّذِيْنَ لاَ يُومِنُوْنَ بالآخِرَةِ مَثَلُ السُّوْءِ وَ لِلهِ الْمَثلُ الاَعْلى( سُوْرَةُ النَّحْل ٦٠ )

தீய தன்மைகளால் வர்ணிக்கப்பட வேண்டியவர்கள் மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள்தான். ஆனால் மிகஉயர்ந்த தன்மைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனே யாவரையும் மிகைத்தவன்., விவேகமிக்கவன் "

அல்லாஹ்வுடைய செயல்களின் தூய நிலை குறித்து குர்ஆன் வேறோர் இடத்தில் கூறுகிறது:

قَالَ اللهُ تَعَالَى: وَمَا خَلَقْنَا السَّمَاوَاتِ وَ الاَرْضَ وَ ما بَيْنَهُماَ لاَعِبِيْنَ ( سُوْرَةُ الدُّخَانَ الاية ٣٨)

இந்த வானங்களையும் பூமியையும் இவற்றிற்கிடையே உள்ள அனைத்தையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லை., சத்தியத்துடன்தான் படைத்துள்ளோம். ஆனால் இவர்களில் பெரும்பாலோர் இதனை அறிவதில்லை" (44 : 38)

அல்லாஹ் வழங்கிய சட்டங்களின் தூயநிலை குறித்து - அவற்றில் எவ்வித முரண்பாடோ குறைபாடோ இல்லை என்பது பற்றி இன்னோர் இடத்தில் குர்ஆன் கூறுகிறது:

قال الله: اَفَحُكْمَ الجَاهِلِيَّةِ يَبْغُوْنَ وَمَنْ أَحْسَنُ مِنَ الله حُكْماً لِقَوْمٍ يُوْقِنُوْنَ (سُوْرَةُ الْمَائِدَة ٥٠)

அறியாமையின் அடிப்படையிலான தீர்ப்பினையா அவர்கள் விரும்புகிறார்கள்? ஆனால் அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர்களைப் பொறுத்தவரை அல்லாஹ்வைவிட நல்ல தீர்ப்பு வழங்குபவன் யார்?"(5 : 50)

இரண்டாவது வார்த்தை **அல்ஹம்து லில்லாஹ்** - சிறப்பிற்கும் உயர்வுக்கும் உரிய எல்லா விதமான முழுமைப்பண்பையும் அல்லாஹ்வுக்குச் சூட்டுகிற சொல்லாகும் இது. இதுவே **அணிவித்தல்** என்கிற அம்சம். இவ்விரு அம்சங்களின் அடிப்படையில்தான் இவ்வார்த்தைக்கு இவ்வளவு அதிகமான நன்மைகள் உண்டென இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொழுகை ஒளியாகும்:** தொழுகை முகத்திற்கு ஒளி. இதனால்தான் யார் அதிகம் அதிகம் தொழுகிறார்களோ - அல்லாஹ்வின் முன்னிலையில் அதிக அளவில் சிரவணக்கம் செய்கிறார்களோ அவர்களின் முகம் ஒளியால் இலங்குவதைக் காண்கிறோம்.

தொழுகை உள்ளத்திற்கு ஒளி. ஆம், அல்லாஹ்வை பற்றிய ஞானக் கதவைத் திறக்கிறது தொழுகை. அல்லாஹ்வின் திருப்பெயர்கள், செயல்கள், அவன் வழங்கிய சட்டங்கள் ஆகியவை குறித்துத் தெளிவான அறிவை வழங்குகிறது தொழுகை. இதனால்தான் தொழுகையாளிகள் இறைவனை அஞ்சி வாழ்வதில், இஸ்லாத்தின் நெறிமுறைகளைப் பேணி நடப்பதில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள்.

இதேபோன்று மண்ணறையிலும் மறுமை நாளின் மஹ்ஷர் மைதானத்திலும் தொழுகை ஒளியாக வருகிறது. ஏனெனில் தொழுகை இஸ்லாத்தின் தூண்.,தூண் நிலைபெற்றிருந்தால் கட்டிடம் நிலைத்து நிற்கும். உலகில் இஸ்லாமியப் பெருவாழ்வு நிறைவாக மலர்ந்து விட்டால் மறுமை வாழ்வில் இருள் அகன்று எங்கும் ஒளிமயமாகி விடும் என்பது திண்ணம்!

இங்கு பொறுமை மற்றும் தொழுகையின் இரு ஒளிகளுக்கு மத்தியிலுள்ள வேறுபாட்டை தெரிந்து கொள்வது பயன்மிக்கது. பொறுமைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள **ழியா** எனும் சொல்லின் பொருளும் ஒளிதான் என்றாலும் அது லேசான வெப்பத்துடனும் அதிக வெளிச்சத்துடமுள்ள ஒளியாகும். குர்ஆனில் இவ்வார்த்தை சூரியனுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

قَالَ تَعَالَى: هُوَ الَّذِي جَعَلَ الشَّمْسَ ضِيَاءً وَّ الْقَمَرَ نُوْراً ( سُوْرَةُ يُوْنُس الاية ٥ )

அவனே சூரியனை வெளிச்சம் தரக்கூடியதாக அமைத்தான். சந்திரனை ஒளியாக ஆக்கினான்" (10 : 5)

பொறுமைக்கு ழியா -வெப்பம் இணைந்துள்ள வெளிச்சம் என்று கூறப்பட்டதற்குக் காரணம், பொறுமை கொள்ளும்பொழுது மனித மனம் சிரமத்தையும் கஷ்டத்தையும் தாங்கிட நேர்வதையும் உடலில் வெப்பமும் களைப்பும் அதிகரிப்பதையும் பார்க்கிறோம். இதனால்தான் பொறுமையாளர்களுக்குக் கணக்கின்றி கூலி வழங்கப்படும் என்று உரைக்கிறது குர்ஆன்!

**தர்மம் ஆதாரமாகும்** -அதாவது தர்மம் என்பது அல்லாஹ்வின் உவப்பைப் பெறும் எண்ணத்துடன் செல்வத்தைச் செலவு செய்வதாகும். மனைவி - மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவது, ஏழை எளியோருக்கு உணவளிப்பது, இறையில்லங்கள் - கல்விக்கூடங்கள் போன்றவை கட்டுவது, இதரப் பொது நலப்பணிகளுக்கு வழங்குவதுபோன்ற எல்லா வகையான தர்மங்களும் இதில் அடங்கும்.

தர்மம் ஆதாரமென்பது வழங்குபவரின் உள்ளத்தில் இறைநம்பிக்கை உள்ளதென்பதற்குத்தான்! எவ்வாறு எனில், செல்வம் மனத்திற்கு அதிகப் பிரியமான ஒன்று. அதனைச் சாதாரணமாகப் பிறருக்கு வழங்கிட மனம் ஒப்புவதே இல்லை. ஒருமுஸ்லிம் செல்வங்களை அல்லாஹ்வுக்காக எனும் வாய்மையுடன் வாரிவழங்குகிறார் எனில் அவனது உள்ளத்தில் இறைநம்பிக்கை இருப்பதால்தான் வழங்குகிறான். தர்மங்களின் நற்கூலியாக நாளை மறுவுலகில் சுவனப் பேறுகள் கிடைக்கும் எனும் உறுதிப்பாட்டின் அடிப்படையில்தான் அப்படிச் செய்கிறான். மனித இயல்பு என்னவெனில், அவனுக்குப் பிரியமான எதுவொன்றையும் இழப்பதற்கு எளிதில் அது முன்வருவதில்லை.,அதனை விடவும் பிரியமான வேறொன்று கிடைக்கும் என்றிருந்தால்தான் பணத்தை வழங்க மனம் வருகிறது, இல்லையா? இந்த ரீதியில்தான் இறைவன் மீதும் மறுவுலகத்தின் மீதும் சுவனத்தின் மீதும் ஆழமான நம்பிக்கையுள்ள நன்மக்களே அதிக அளவில் தானதர்மங்கள் செய்வதை நாம் பார்க்கிறோம்!

ஒவ்வொரு மனிதரும் காலையில் (தத்தம் பணிக்காகச்) செல்கின்றனர். தமது ஆன்மா தொடர்பான வியாபாரத்தை மேற்கொள்கின்றனர்., அதற்கு விடுதலை பெற்றுத் தருகின்றனர். அல்லது அதை அழிவில் ஆழ்த்துகின்றனர்"

-அதிகாலை புலர்ந்ததும் மக்கள் கண்விழித்தெழுந்து அன்றைய தினத்தின் பணிகளைத் தொடங்குகின்றனர். இது அன்றாடம் நாம் காணும் காட்சி!

பகலெல்லாம் ஓடியாடி உழைத்த மனிதன் இரவில் நிம்மதியாகத் துயில் கொண்டு ஓய்வெடுக்கிறான். இதற்காகவே இரவை இறைவன் படைத்துள்ளான் என்கிறது குர்ஆன்.

قال تعالى :وَهُوَالَّذِي يَتَوَفَّيكُمْ بِاللَّيْلِ وَيَعْلَمُ مَاجَرَحْتُمْ بِالنَّهَارِثُمَّ يَبْعَثُكُمْ فِيْهِ {سُوْرَةُالاَنْعَامِ الآية ٦٠ }

பகலில் நீங்கள் என்னென்ன செயல்களைச் செய்தீர்கள் என்பதை அவன் அறியும் நிலையில் அவனே இரவில் உங்கள் உயிர்களைக் கைப்பற்றுகிறான். பிறகு மறுநாள் (இந்த வாழ்க்கை எனும் செயற்களத்தில்) மீண்டும் உங்களை எழுப்புகிறான்' (6 : 60)

இரவில் மனிதர்களைத் தூக்கத்தில் ஆழ்த்துவதைத்தான் உயிர்களைக் கைப்பற்றுதல் எனும் வாசகம் குறிப்பிடுகிறது. ஆம்! தூக்கம் என்பது மரணத்தின் சகோதரன் என்று ஒரு நபிமொழி கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

இரவின் அந்தத் தூக்கம், பகலின் பணிகளில் ஏற்பட்ட களைப்பையும் சோர்வையும் களைகிறது. மீண்டும் நாளையப் பணிகளைத் தொய்வின்றி தொடர்ந்திட உடலிலும் உள்ளத்திலும் உற்சாகம் பொங்குகிறது. மக்கள் காலையில் எழுந்து உற்சாகத்துடன் தத்தம் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

- சிலர் நற்பணிகள் ஆற்றுகின்றனர்., அவர்கள்தாம் இறைநம்பிக்கையாளர்கள்.
- சிலர் தீமைகள் புரிகின்றனர். அவர்கள்தாம் இறைநிராகரிப்பாளர்கள்.

ஆம்! முஸ்லிம்கள் அதிகாலையில் எழுந்து உளூ செய்து தூய்மையாகி தொழுகையை நிறைவேற்றுகிறார்கள். கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் உரிய வல்ல இறைவனாகிய அல்லாஹ்வை வணங்குவது கொண்டு அன்றைய தினத்தைத் தொடங்குகிறார்கள்.

இன்னும் சரியாகச் சொல்வதாயின் அன்றைய அதிகாலைப் பொழுது தெளஹீத் எனும் ஏகத்துவச் சிந்தனையுடன் தொடங்குகிறது! எவ்வாறெனில் -

ஒரு முஸ்லிம் அதிகாலையில் எழுந்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்த வண்ணம் **ஆலு இம்றான்** அத்தியாயத்தின் இந்த **நான்கு வசனங்களை** ஓதிடவேண்டுமென்பது ஷரீஅத்தின் போதனை! ஆம்! நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி அதுவே என அறிவிப்புகள் தெரிவிக்கின்றன. அந்த வசனங்கள் இவைதான்:

திண்ணமாக வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவு பகல் மாறிமாறி வருவதிலும் - அறிவுடையோர்க்குப் பல சான்றுகள் உள்ளன. அவர்கள் எத்தகையவர்கள் எனில், நிற்கும்போதும் உட்காரும் போதும் படுத்திருக்கும்போதும்- ஆக எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வை நினைவுகூர்கிறார்கள். மேலும் வானங்கள் மற்றும் பூமியின் படைப்பமைப்பைக் குறித்துச் சிந்திக்கிறார்கள். (பிறகு உணர்ச்சி பொங்கக் கூறுகிறார்கள்:)

எங்கள் இறைவனே! இவை அனைத்தையும் (யாதொரு நோக்கமும் இன்றி) வீணாக நீ படைக்கவில்லை. நீ தூய்மையானவன். எனவே நரக வேதனையிலிருந்து எங்களை நீ காப்பாற்றுவாயாக! எங்கள் இறைவனே! நீ யாரை நரகத்தில் புகுத்தினாயோ அவனை நீ உண்மையில் கேவலப்படுத்திவிட்டாய். அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை. எங்கள் இரட்சகனே! விசுவாசத்தின்பால் அழைக்கக்கூடிய ஒருவரின் அழைப்பை நாங்கள் செவியுற்றோம். உங்கள் இரட்சகனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். நாங்கள் அவ்வாறே ஏற்றுக்கொண்டோம். எனவே எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களை மன்னித்தருள்வாயாக! எங்களிடம் உள்ள தீமைகளை அகற்றுவாயாக. மேலும் எங்களை நல்லோர்களுடன் மரணிக்ச் செய்வாயாக! எங்கள் இறைவனே! மேலும் தூதர்களின் வாயிலாக நீ அளித்த வாக்குறுதிகளை எங்களுக்கு நிறைவேற்றித் தருவாயாக! மேலும் மறுமை நாளில் எங்களைக் கேவலப்படுத்திவிடாதே! திண்ணமாக நீ வாக்குறுதி மீறாதவன் ஆவாய்," (3 : 190 - 194)

- இவ்வாறு அதிகாலையில் எழுந்ததும் முஸ்லிம்கள் ஆன்மா தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டு அதற்கு விடுதலை வாங்கிக் கொடுக்கின்றனர்., நரகத்திலிருந்து!

மறுபுறம் - இறைவன் விரும்பாத- வெறுக்கக்கூடிய, தடை செய்துள்ள தீமைகளைச் செய்வது கொண்டு அன்றைய தினத்தைத் தொடங்குகிற மக்கள் உள்ளனர். இத்தகையவர்கள்தாம் தங்களது ஆன்மாவை அழிவின் படுகுழியில் தள்ளுகின்றனர்! (அல்லாஹ் பாதுகாப்பானாக!)

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## அபூ மாலிக் அல் - அஷ்அரி (ரலி)அவர்கள்

அபூ மாலிக்அல் அஷ்அரி (ரலி) அவர்கள் நபித்தோழர்களில் ஒருவரும் மதீனா வாழ் அன்ஸாரியும் ஆவார். அபூ மாலிக் என்பது குறிப்புப் பெயர். அன்னாரது இயற்பெயர் அல் ஹாரிஸ் பின் அல்ஹாரிஸ் என்றும் உபைத் என்றும் உபைதுல்லாஹ் என்றும் கஅப் என்றும் பல கருத்துகள் உள்ளன. இவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து அறிவித்த ஹதீஸ்கள் ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம் போன்ற நூல்களில் பதிவாகியுள்ளன. உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மரணம் அடைந்தார்கள்.

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) சுத்தம் : புலனுக்குட்பட்ட அசுத்தங்கள், உடலின் அசுத்த நிலைகள் மற்றும்தீய கொள்கைகள்,செயல்களை விட்டும் மனிதன் தூய்மை அடைவதாகும். | ١) الطهور: أن يتطهر الانسان طهارة حسية و معنوية من كل ما فيه أذي |
| 2) பாதி | ٢) شطر: نصف |
| 3) தீமை மற்றும் குறைபாடுகளை விட்டும் அல்லாஹ்வைத் தூயவன் என்று துதித்தல் ஆகும். | ٣) التسبيح : تنزيه الله عن السوء و النقائص |
| 4) சுயமான அழகுத் தன்மையைக் கொண்டு அல்லாஹ்வுக்குப் புகழ் மாலை சூட்டுவதாகும். | ٤) الحمد لله : الثناء علي الله بالجميل الاختياري والاذعان له |
| 5) வெளிச்சம் : கடுமையான ஒளி | ٥) الصبر ضياء : الضياء شدة النور |
| 6) அதற்கு விடுதலை அளிப்பவர்: தண்டனையில் இருந்து அதற்கு ஈடேற்றம் அளிப்பவர். | ٦) فمعتقها : أى مخلصها من العذاب |
| 7) அதனை அழிவுக்குள்ளாக்குபவர், | ٧) موبقها : مهلكها |

**கேள்விகள் - الاسئلة**

1) பொறுமை வெளிச்சமாகும் என்பதை சுருக்கமாக விளக்கவும்.
2) சுத்தம் ஈமானில் பாதியாகும் என்பதன் கருத்து என்ன?
3) இந்த நபிமொழியில் தராசு என்பது எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது?
4) தர்மம் எதற்கு ஆதாரம்? அதன் விளக்கம் என்ன?
5) ஒவ்வொரு மனிதனும் காலையில் ஈடுபடும் பணிகள் என்ன? முஸ்லிம்களின் பணிகளில் உள்ளசிறப்பு என்ன?
6) அல் ஹம்து என்பதிலுள்ள அல் எனும் துணை எழுத்தின் பொருள் என்ன?
7) ஸுப்ஹானல்லாஹ் என்பதில் உள்ள விடுவித்தல் எனும் அம்சம் என்ன? அல் ஹம்துலில்லாஹ்வில் உள்ள அணிவித்தல் எனும் அம்சம் என்ன?
8) இந்நபிமொழியில் பொறுமைக்குரிய தனிச் சிறப்பு என்ன?
9) சுத்தம் ஈமானில் பாதியாகும் என்பதன் கருத்து என்ன?

## பொறுமையே சிறந்த செல்வம்

**٢٦ – وَعَنْ أَبِى سَعِيْدٍ سَعْدِ بْنِ مَالِكٍ بْنِ سِنَانٍ الخُدْرِى ﷺ :{ انَّ نَاسًا مِنَ ألأنْصَارِ سَأَلُوا رَسُولَ الله ﷺ فَأعْطَا هُمْ ثُمَّ سَأَلُوه فَأعْطَاهُمْ حَتي نَفَدَ مَا عِنْدَه فَقَالَ لَهُمْ حِيْنَ أنْفَقَ كُلَّ شَيءٍ بِيَدِه : مَا يَكُنْ عِنْدِي مِنْ خَيْرٍ فَلَنْ أدَّخِرَهُ عَنْكُمْ و مَنْ يَسْتَعْفِفْ يُعِفَّهُ اللهُ وَمَنْ يَسْتَغْنِ يُغْنِهِ اللهُ وَمَنْ يَتَصَبَّرْ يُصَبِّرْهُ اللهُ وَ مَا أعْطِيَ أحَدٌ عَطَاءً خَيْرًا وَ أوْسَعَ مِنَ الصَبْرِ } مُتَّفَقٌ عَلَيْهِ**

ஹதீஸ் 26

அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அன்ஸாரிகளில் சிலபேர் நபி(ஸல்) அவர்களிடம் பொருளுதவி கேட்டார்கள். நபிவர்களும் வழங்கினார்கள். மீண்டும் கேட்டார்கள்., நபியவர்கள் மீண்டும் வழங்கினார்கள். இறுதியில் நபியவர்களிடம் இருந்த அனைத்தும் தீர்ந்துவிட்டன. இவ்வாறாக தங்கள் கைவசம் இருந்த அனைத்தையும் (இறைவழியில்) நபியவர்கள் செலவு செய்துவிட்டபொழுது அந்த அன்ஸாரிகளிடம் சொன்னார்கள்:

ஏதேனும் செல்வம் என்னிடம் வந்தால் நான் அதை உங்களுக்குத் தராமல் சேமித்து வைக்க மாட்டேன். ஆனால் ஒருவர் ஒழுக்கத் தூய்மையை மேற்கொண்டால் அவரை அல்லாஹ் அவ்வாறே ஆக்குவான். பிறரிடம் தேவைப்படாத நிலையை ஒருவர் மேற்கொண்டால் அவரை, தேவையாகாதவராகவே அல்லாஹ் ஆக்குவான். ஒருவர் பொறுமையை உறுதியுடன் கடைப்பிடித்தால் அவரைப் பொறுமையாளராக ஆக்குவான். பொறுமையை விடவும் சிறந்த, விசாலமான கொடை எதுவும் எவருக்கும் வழங்கப்படவில்லை! (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

நபி(ஸல்) அவர்களின் வள்ளல் தன்மையைப் பறைசாற்றும் பல நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று! கேட்போருக்கு ஈந்து மகிழ்வதே நபியர்களின் உயரிய பண்பு. எவர் வந்து கேட்டாலும் இல்லை என்று அவர்கள் சொன்னதே இல்லை! வீட்டிலோ ஏழ்மைதான்., கஷ்டம்தான்! எந்த அளவுக்கு எனில், சில நேரங்களில் நபியவர்கள் தமது வயிற்றில் கூழாங்கற்களை வைத்துக் கட்டிக்கொண்டு பசியின் கடுமையைச் சமாளித்திருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது. இப்படி ஏழ்மையுடன் வாழ்ந்த ஏந்தல் நபியவர்கள் வறுமைக்கு அஞ்சாமல் வாரிவாரி வழங்கி கைவசம் இருந்ததெல்லாம் காலியானபொழுது சொன்னார்கள்:

ஏதேனும் செல்வம் என்னிடம் வந்தால் அதை உங்களுக்குத் தராமல் நான் சேமித்து வைக்க மாட்டேன்”

- நபியவர்கள் செல்வத்தைச் சேமித்துவைத்துக்கொண்டு இல்லை என்று சொல்வதென்பது கற்பனைக்கும் எட்டாதது. அந்நேரத்தில் அவர்களிடம் எதுவும் இல்லை என்பதே உண்மை!

இந்த சந்தர்ப்பத்தில் நபியவர்கள் மூன்று பண்புகள்மீது ஆர்வமூட்டுகிறார்கள்:

1) ஒழுக்கத் தூய்மை: அதைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் எனும் ஆர்வம் உண்மையில் எவருக்கு உள்ளதோ, சிற்றின்ப வேட்கையைத் தவிர்த்திட, தீய பெண்களின் பின்னால் சுற்றித்திரியும் போக்கை வெறுத்திட எவர் முன்வருகிறாரோ அவரது மனத்தைத் தீமைகளிலிருந்து திருப்பி அவரது வாழ்க்கையை அல்லாஹ் தூய்மையாக்குகிறான். அவரை பாதுகாக்கிறான். இதேபோல் அவருடைய மனைவி - மக்களுக்கும் அந்தப் பாதுகாப்பை அளிக்கிறான்.

ஆனால் தீய மனத்தைக் கட்டுப்படுத்தவும் அதை நல்வழிக்குத் திருப்பவும் அக்கரை செலுத்தாதவன் சிற்றின்ப மோகத்திற்கு ஆளாகிறான். சதாவும் தீமைகளைச் சிந்திக்கிறான. தீய பெண்கள் பின்னால் சுற்றித் திரிகிறான். அவனுடைய கண், காது, கை- கால்கள் ஆகியவை விபச்சாரம் செய்கின்றன. இறுதியில் அவனது மர்ம உறுப்பே அந்தக்கொடிய பாவத்தில் ஈடுபடுகிறது! (அல்லாஹ் பாதுகாப்பானாக!)

2) பிறரிடம் தேவைப்படாத நிலை: உண்மையாதெனில், செல்வ நிலையென்பது போதுமெனும் மன நிறைவே ஆகும். அல்லாஹ் வழங்கிய ரிஜ்க் - வாழ்வாதாரத்தில் - அது குறைவே என்றாலும் அதில் நிறைவு கண்டு வாழ்பவன்தான் செல்வந்தன்! இத்தகைய மனிதனை அல்லாஹ் கண்ணியத்துடன் வாழச்செய்கிறான்.

ஆனால் மக்களிடம் கையேந்திப் பழகியவன் என்றைக்கும் அப்படியேதான் இருப்பான். சுய முயற்சியையும் முன்னேற்றத்தையும் அவனிடம் காண முடியாது. எவ்வளவு கொடுத்தாலும்- கிடைத்தாலும் அவனுக்கு நிறைவு ஏற்படாது. அவனும் அவனது மனமும் என்றைக்கும் **ஏழைகள்**தாம்!

3) பொறுமை: அல்லாஹ் விலக்கியவற்றை விட்டும் உங்கள் மனத்தை நீங்கள் கட்டுப்படுத்தினால் - ஏழ்மை, கஷ்டம் என வரும்பொழுது எவரிடமும் கையேந்தாமல் கண்ணியம் காத்தால் பொறுமைப் பண்பை அல்லாஹ் உங்களுக்கு இலகுவாக்கித் தருவான். அதில் ஓர் இணைப்பை - பிரியத்தை உங்களது உள்ளத்தில் நிச்சயம் ஏற்படுத்துவான்!

உலகில் எத்தனையோ பேருக்கு எவ்வளவோ வசதிகளை- வாழ்க்கைச் சாதனங்களை அல்லாஹ் வழங்கியிருக்கலாம். ஆனால் அவை அனைத்திலும் பொறுமைதான் சிறப்புமிக்கது., உன்னதமானது! அதனை விடவும் விசாலமான - விரிவான அருட்கொடை வேறெதுவும் இல்லை! ஏனெனில் பொறுமையுடன் வாழும் மனிதன் எதையும் தாங்கிக்கொண்டு இமயம்போல் உயர்ந்து நிற்கிறான்.

பாருங்கள்! சிலநேரம் தீய மனம் ஹராமான - விலக்கப்பட்ட பாவச் செயல்களைச் செய்யுமாறு தூண்டு கிறது. மறுபுறம் ஷைத்தான் வந்து இஸ்லாத்தின் கடமைகளை - இறைவழிபாடுகளை நிறைவேற்ற விடாமல் ஊசலாட்டம் ஏற்படுத்துகிறான். இத்தகைய சூழ்நிலைகளில் பொறுமையைக் கடைப்பிடித்துவாழும் மனிதன் சலனம் அடைவதில்லை., நெறிபிறழ்வதில்லை! என்றைக்கும் அவனுக்கு நிமிர்ந்த நடைதான்., நேர்கொண்ட பார்வைதான்!

இதேபோன்று மனிதர்களிடம் இருந்து தொல்லைகள் ஏற்பட்டாலோ - யாரேனும் ஏசிப் பேசினாலோ வரம்பு மீறி அநீதி புரிந்தாலோ அவன் அமைதியே உருவாகக் காட்சி அளிக்கிறான்! உணர்ச்சி வசப்படுவதில்லை., கட்டுப்பாடு இழந்து தீயசொல் -செயல்களில் இறங்கிவிடுவதில்லை! இதனால்தான் பொறுமையே அனைத் தினும் சிறந்த- விசாலமான அருட்கொடை என்கிறது, இந்நபிமொழி!

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) அதை சேமித்துவைக்க மாட்டேன்: உங்களைப் புறக் கணித்து விட்டு மற்றவர்களுக்காக அதைச் சேமித்துவைக்க மாட்டேன். அல்லது அதை உங்களுக்குத் தராமல் மறைக்க மாட்டேன். | ١) فلن أدخره : لا أجعله ذخيرة لغيركم معرضا عنكم أو لا أخبئه و أمنعكم اياه |
| 2) அதாவது, அல்லாஹ் அவனுக்கு ஹராம் ஆக்கிய பெண்களை விட்டும் விலகி ஒழுக்கத் தூய்மையை மேற் கொண்டால்! | ٢) من يستعفف: عما حرمه الله عليه من النساء |
| 3)ஒழுக்கத் தூய்மையை அல்லாஹ் அவனுக்கு வழங்கு வான். | ٣) يعفه ألله : يرزقه الله العفة |
| 4)அதாவது, மன நிறைவுடையவராக ஆக்குவான். செல்வ நிலை என்பது அதனைத் தவிர வேறில்லை. மேலும் அல்லாஹ் அவனுக்கு வாழ்வாதாரத்தின் கதவுகளை திறந்து விடுகிறான்! | ٤) يغنه الله : يجعله غني النفس، لا غناء الا غناءه، ويفتح له أبواب الرزق |
| 5) பொறுமையை விட விசாலமானது: பொறுமையே விசால மான அருட்கொடை என்பதன் கருத்து: அதன் மூலமே ஞானங்களும் நோக்கங்களும் விரிவடைகின்றன என்ப தாகும். | ٥) أوسع من الصبر: معني كون الصبر أوسع : أن به تتسع ألمعارف و المقاصد |

## கேள்விகள் ~ الاسئلة

1) பொறுமையே சிறந்த - விசாலமான கொடை என்பதைச் சுருக்கமாக விளக்கவும்.
2) ஒழுக்கத் தூய்மையைக் கடைப்பிடிப்பதன் சிறப்பையும் உயர்வையும் கூறவும்.
3) பிச்சை எடுப்பதன் இழிநிலையையும் போதுமெனும் மனநிறைவின் சிறப்பையும் விளக்கிக் கூறவும்.
4) பொறுமையின் மூலம் கிடைக்கும் நன்மைகளை விவரித்து எழுதவும்.
5) ஒரு முஸ்லிமின் குணபாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென இந்நபிமொழி உணர்த்துகிறது?
6) நபி (ஸல்) அவர்களின் சீரிய வாழ்க்கையிலிருந்து அவர்களின் வள்ளல் தன்மையைப் பறைசாற்றும் நிகழ்ச்சி கள் சிலற்றை எழுதவும்.
7) அறிவிப்பாளர் வரலாற்றைச் சுருக்கமாக எழுதவும்.

## இன்பமும் துன்பமும் நன்மையாய் அமைந்திட ...!

**٢٧ – وَعَنْ أَبِيْ يَحْيَى صُهَيْبِ بْنِ سِنَانِ ﷺ قَالَ:قَالَ رَسُولُ اللهِ ﷺ :{عَجَباً لأَمْرِالْمُوْمِنِ اِنَّ اَمْرَهُ كُلَّهُ خَيْرٌ وَ لَيْسَ ذَلِكَ لأَحَدٍ اِلاَّ للمُوْمِنِ اِنْ أَصَابَتْهُ سَرّاءُ شَكَرَ فَكَانَ خَيْرًا لَهُ وَ اِنْ أَصَابَتْهُ ضَرّاءُ صَبَرَ فَكَانَ خَيْرًا لَهُ} رواه مسلم**

ஸு ஹைப் பின் ஸினான் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ஓர் இறை நம்பிக்கையாளனின் விவகாரம் குறித்து நான் ஆச்சரியம் அடைகிறேன். அவனுடைய ஒவ்வொரு விஷயமும் அவனுக்கு நன்மையாகவே அமைகிறது. இது ஒருநம்பிக்கையாளனுக்கே அன்றி வேறெவருக்கும் வாய்க்கப்

பெறவில்லை! அவனுக்கு மகிழ்வுநிலை வந்தால் நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக அமைகிறது. அவனுக்கு கஷ்டநிலை வந்தால் பொறுமை காக்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையாக அமைகிறது!" (நூல்: முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

நபி (ஸல்) அவர்கள் இறைநம்பிக்கையாளரின் நிலைமை குறித்து வியப்பை வெளிப்படுத்தியது அவரைச் சிறப்பிக்கும் வகையில்தான்! அவரது இறைநம்பிக்கையையும் அதிலிருந்து மலரும் வாழ்க்கைப் போக்கையும் திருப்பங்களையும் மெச்சிப் பாராட்டியே நபியவர்கள் கூறினார்கள்: அவனது ஒவ்வொரு விஷயமும் அவனுக்கு நன்மையாகவே அமைகிறது என்று!

- தொடர்ந்து அதற்கு விளக்கமும் தந்தார்கள். மனித வாழ்வில் இறைவன் நிர்ணயித்த விதி என்பது - இன்பம் துன்பம் இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கும். இவற்றை எதிர்கொள்ளும் விதத்தில் மனிதர்கள் இருவகையாய்ப் பிரிகின்றனர்., நம்பிக்கையாளன் என்றும் நிராகரிப்பாளன் என்றும்!

ஏக இறைவன்மீது நம்பிக்கை கொண்டு வாழ்க்கையில் எது ஏற்பட்டாலும் அது இறைவன் நிர்ணயித்தது தான் என்று நம்பி செயல்படுபவன் நம்பிக்கையாளன்.

வாழ்க்கையில் சிலபொழுது மகிழ்ச்சியும் இன்பமும் அவனை வந்தடைகின்றன. போதிய வசதிவாய்ப்புகள், கண்குளிர்ச்சியான மனைவி - மக்கள், கண்ணியம் காக்கும் உறவுகள் ஆகியவை கிடைக்கின்றன. இவை யாவும் உலக ரீதியான அருட்பேறுகள். இதேபோல் நற்கல்வியும் நல்லமல் செய்யும் நற்பேறும் கிட்டுகிறது. இவை மார்க்க ரீதியான அருட்கொடைகள்!

இத்தகைய மகிழ்வான நேரங்களில் இறைநம்பிக்கையாளன் அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, அவனுக்கு நன்றி செலுத்துகிறான்.

சில நேரத்தில் வாழ்வில் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு துன்பங்கள் வந்து சூழ்ந்து கொள்கின்றன. அப்பொழுது அவற்றை அவன் பொறுமையோடு தாங்கிக்கொள்கிறான். அதற்கான கூலியையும் இன்பநிலையையும் இறைவனிடமிருந்து எதிர்பார்க்கிறான்.

இவ்வாறு பொறுமை, நன்றி எனும் இவ்விருபண்புகளும் இறைநம்பிக்கையாளனின் வாழ்க்கையை அலங்கரிக்கும் இரு அணிகலன்களாகும். மனஇச்சைகளும் மாயைகளும் நிறைந்த இவ்வுலக வாழ்வில் இலட்சியத்தை நோக்கிய அவனது பயணம் தொடர இரு துருப்புகளாய் அவை பயன்பட்டு மறுமை வெற்றிக்கும் வழிவகுத்துக் கொடுக்கின்றன. எவ்வாறெனில் -

❀ நன்றிக்கு - பின்வரும் இறைவசனம் குறிப்பிடுவது போன்று இறையருட் கொடைகளை மேலும் மேலும் ஈர்த்து வரும் ஆற்றலுள்ளது: நீங்கள் நன்றி செலுத்துவீர்களாயின் உங்களுக்கு மேலும்மேலும் வழங்குவேன்" (14 : 17)

❀ பொறுமைக்குக் கிடைக்கும் நற்கூலிக்கோ அளவே இல்லை. குர்ஆன் ஓரிடத்தில் குறிப்பிடுவது போன்று: பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி கணக்கின்றி - நிறைவாய் வழங்கப்படும்" (39 : 10)

இறைநிராகரிப்பாளனின் நிலையோ இதற்கு நேர்மாறானது. வாழ்வில் அவனுக்கு மகிழ்ச்சி வந்தால் மமதை கொள்கிறான். நமக்கு என்றைக்கும் நற்பேறும்தான்., நம்மைபோல் உலகில் யாருண்டு என்று ஆணவம் பேசுகிறான். அளவுக்கதிகமாய் பூரித்துப் போகிறான்! இந்த இறுமாப்பு இறைநினைவை விட்டும் அவனைத் திசைதிருப்பும் சாபக்கேடாக அமைகிறது!

இதேபோல் துன்பம் வரும்பொழுது பொறுமை இழந்து பதறித் துடிக்கிறான். ஐயோ! அழிவு காலம் வந்து விட்டதே என்று கூப்பாடு போடுகிறான் - இப்படிக் காலத்தையும் நேரத்தையும் ஏச அது, இறைவனை ஏசுவதாக ஆகிறது. ஏனெனில் இரவையும் பகலையும் சுழலச்செய்து காலத்தை உருவாக்குபவன் இறைவன் தானே!

இந்நபிமொழி இறைநம்பிக்கைக்கு ஆர்வமூட்டுவதுடன் உள்ளத்தில் விசுவாசம் உள்ளதென்பதற்கு பொறுமை ஓர் அடையாளம் என்றும் உணர்த்துகிறது!

நீங்கள் இறைநம்பிக்கையாளர் எனில்,துன்பம் நேரும்பொழுது மனம் சஞ்சலம் அடையாமல் பொறுமை யுடன் இருக்க வேண்டும். மாறாக உங்கள் மனம் பொறுமை இழந்து பதறிப் பரிதவித்தால் உங்கள் இறைநம்பிக்கை பலவீனம் அடைந்துள்ளது., பழுதுபட்டுள்ளது என்பதற்கு அது அடையாளமாகும். உடனே நீங்கள் பாவ மன்னிப்புக்கோரி அல்லாஹ்வின் பக்கம் மீளுவதுடன் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு உங்கள் மனத்தைப் பக்குவப்படுத்திட வேண்டும்.

### அறிப்பாளர் அறிமுகம்

## ஸு ஹைப் பின் ஸினான்(ரலி) அவர்கள்

ஸு ஹைப் பின் ஸினான் (ரலி) அவர்கள் ரோம் நாட்டைச் சேர்ந்தவர். ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத் தைத் தழுவிய நபித்தோழர்களில் குறிப்பிடத்தக்கவர். இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் ஈடுபட்டதற்காக மக்காவில் எதிரிகளால் தொல்லைக்கும் தண்டனைக்கும் ஆளாக்கப்பட்டு பிறகு மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள். அப்பொழுது வியாபாரத்தில் ஈட்டிய பெரும் செல்வத்தை மக்காவிலேயே விட்டுவிடும்படியாக ஆயிற்று! அவர்களது தியாகத்தைச் சிறப்பிக்கும் வகையிலேயே இந்த இறைவசனம் இறக்கிய ருளப்பட்டது: **ومن الناس من يشري نفسه ابتغاء مرضات الله** (மக்களில் இப்படியும் ஒருவர் இருக்கிறார்: அவர் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடித் தன் வாழ்வையே அர்ப்பணித்து விடுகிறார்!) - இவர்கள் ஏராளமான நபிமொழிகளை மனனம் செய்திருந்தார்கள். பெரும் எண்ணிக்கையிலான தாபிஈன்கள் இவர்களிடம் இருந்து நபிமொழிகளை அறிவித்துள்ளனர். ஹிஜ்ரி 80 ஆம் ஆண்டு மதீனாவில் மரணம் அடைந்தார்கள்!

### அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) ஆச்சரியம் அடைகிறேன்: பொது உருபுச் சொல் | ١) عجبا:مفعول مطلق أي أعجب عجبا |
| 2)ஓர் இறைநம்பிக்கையாளன்: முழு நம்பிக்கை உடையவன்: அல்லாஹ்வை அறிந்து அவனுடைய சட்டங்களைப் பொருந்தி உண்மையான விசுவாசத்துடன்செயல்படுபவனே அவன்! | ٢) المؤمن : الكامل الايمان وهو العالم بالله الراضي باحكامه العامل علي تصديقه |
| 3) மகிழ்வு நிலை | ٣) السراء : ما يسر |
| 4) துன்ப நிலை : உடலில் ஏற்படும் துன்பம் அல்லது குடும்பத்தினர், குழந்தைகள், பணரீதியில் துன்பம் ஏற்பட்டு மனத்தை வருத்தும் தொல்லை | ٤) ضراء : ما يضر في البدن او ما يتعلق به من أهل أو ولد أو مال |

## இப்படிச்செய்வதற்கு எப்படி மனம் வந்தது?

**٢٨ - وَعَنْ أَنَسٍ ﷺ قَال : لَمَّا ثَقُلَ النَّبِي ﷺ جَعَلَ يَتَغَشَّاهُ الْكَرْبُ فَقَالَتْ فاَطِمة رَضِي الله عَنْها : واَكَرْبَ أَبَتَاه. فَقَال : لَيْس عَلى أَبِيْكِ كَرْبٌ بَعْدَ اليَوْمِ فَلَمّا مَاتَ قَالَتْ: يَا أَبَتَاه أجابَ رَبّا دَعَاه ياَ أَبَتَاه جَنَّةُ الفِرْدَوْسِ مَأوَاه يَا أَبتَاه اِلَى جِبْرِيلَ نَنْعَاه فَلَمّا دُفِنَ قَالَتْ رَضِيَ الله عنها :أَطَابَتْ أَنْفُسُكُمْ أَنْ تَحْثُوْا عَلَى رَسُوْلِ الله ﷺ الّتُراب؟ – رَواه البُخَارِي**

ஹதீஸ் 28

அனஸ் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்)அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டபொழுது கடும் துன்பத்திற்கு உள்ளானார்கள். அப்போது ஃபாத்திமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆஹ்! என் அன்புத் தந்தைக்கு ஏற்பட்ட துன்பமே! - இதனைச் செவியுற்ற நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: இந்நாளுக்குப் பிறகு உன் தந்தைக்கு துன்பம் என்பதே இல்லை,, என்று! - நபியவர்கள் மரணம் அடைந்தபோது ஃபாத்திமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: என் அன்புத் தந்தையே! இரட்சகன் விடுத்த அழைப்புக்குப் பதில் அளித்து விட்டீர்களோ! அன்புத் தந்தையே! ஃபிர்தௌஸ் எனும் சுவனத் தோட்டம்தான் உங்கள் தங்குமிடம் ஆனதோ! அன்புத் தந்தையே! உங்கள் மரணச் செய்தியை ஜிப்ரீலுக்கு நாங்கள் தெரிவித்து விடுகிறோம்.

நபியவர்களது உடல் அடக்கம் செய்யப்பட்டபொழுது ஃபாத்திமா (ரலி) அவர்கள் (நபித்தோழர்களை நோக்கிக்) கேட்டார்கள்: நபி(ஸல்) அவர்களின் (உடலை அடக்கம் செய்து அவர்கள்) மீது மண்ணை அள்ளிப் போட்டது உங்கள் மனத்திற்குத் திருப்தியாக இருந்ததா?" (நூல்: புகாரி)

## தெளிவுரை - الشرح

நபி(ஸல்)அவர்களுக்கு ஏற்பட்ட கடுமையான துன்பம் என்பது மரணத் தருவாயின் கடும் பிணியும் காய்ச் சலுமாகும். கடுமையான காய்ச்சல் என்றால் இருமடங்கு அதாவது சாதாரணமாக இரண்டு நபர்களுக்கு ஏற்படும் காய்ச்சலை நபியவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று!

காருண்ய நபியவர்களுக்கு ஏன் இவ்வளவு கடுமையான கஷ்டமும் துன்பமும்? என்று எவருக்கும் ஓர் ஐயம் எழலாம். ஆனால் இறைவன் இதில் ஒரு தத்துவத்தை நாடியுள்ளான். அதுதான், பொறுமையின் மிக்க மேலான - உயர்ந்த அந்தஸ்தை நபியவர்கள் அடையவேண்டும் என்பது! இறைவனால் பெரும் சோதனை கொடுக்கப்பட்டு அதில் பொறுமையைக் கடைப்பிடித்தால்தான் அது முடியும்! மனம் வெறுக்கக்கூடிய சங்கட மான காரியத்தில்தானே பொறுமையின் சோதனை உள்ளது!

இந்த ரீதியில் இரண்டு மனிதர்கள் தாங்கும் காய்ச்சலையும் கஷ்டத்தை யும் நபியவர்கள் சகித்துக் கொள்ளும்படியானபொழுது - அதைக் கண்ணுற்ற ஃபாத்திமா(ரலி) அவர்கள் கடும் சஞ்சலத்துடனும் மன வேதனையுடனும் சொன்னார்கள்:

<u>என் அன்புத் தந்தைக்கு ஏற்பட்ட துன்பமே!"</u>

- ஏனெனில் அவர்கள் ஒருபெண்மணிதான்., பெரும்பாலும் பெண்களால் எதுவொன்றையும் பொறுத்துக் கொள்ள இயலாது! இதனால்தான் ஃபாத்திமா (ரலி)அவர்களின் சஞ்சலத்தைத் தணித்துப் பொறுமையூட்டும் வண்ணம் நபிவர்கள் சொன்னார்கள்:

<u>இன்றைய தினத்திற்குப் பிறகு உன் தந்தைக்கு எந்தத் துன்பமும் இல்லை"</u>

- ஏனெனில் மரணத்தருவாயின் இந்தத் துன்பத்திற்குப் பிறகு இனி எந்தத்துன்பமும் கஷ்டமும் நபியவர் களுக்கு வராது! நபியவர்கள் இவ்வுலகில் இருந்து விடைபெற்றுச் சென்றதும் மிக்க மேலான தோழரிடம் அதாவது, அல்லாஹ்விடம் போய் சேர்ந்துவிடுகிறார்கள்.

ஆம்! நபி (ஸல்) அவர்கள் மரணத் தருவாயில் மிக்க மேலான தோழரை நான் விரும்புகிறேன்" என்று வீட்டின் முகட்டைப் பார்த்த வண்ணம் கூறிக்கொண்டிருந்ததாக ஹதீஸ் அறிவிப்புகளில் காணப்படுகிறது. மிக்க மேலான தோழன் (**அர் ரஃபீக்குல் அஃலா**) என்பது அல்லாஹ்வைக் குறிக்கும் சொல்லாகும்.

<u>அன்புத் தந்தையே! ஜீப்ரீலிடம் உங்கள் மரணச் செய்தியை அறிவித்து விடுகிறோம்"</u>

- ஜிப்ரீல் என்பவர் மலக்குகள் எனும் வானவர்களின் தலைவர். நபியவர்களின் மரணச்செய்தியை அவருக்கு அறிவிப்பதென்றால் இனி அவர் வானிலிருந்து வஹி எனும் இறையருட்செய்தியை ஏந்திய வண்ணம் பூமிக்கு இறங்கமாட்டார் என்பதை உணர்த்துவதே இதன் கருத்து. ஏனெனில் அவர்தான் காலையும் மாலையும் நபியவர்களுக்கு வஹியைச் சேர்ப்பித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது அது நின்றுவிடுகிறது!

<u>அன்புத் தந்தையே! இரட்சகனின் அழைப்புக்கு பதில் அளித்து விட்டீர்களோ!</u> "

-ஏனெனில் உலகிலுள்ள எல்லாப் பொருட்களின் மீதும் முழு அதிகாரத்துடன் ஆட்சி செய்து கொண்டி ருப்பவன் அந்த இறைவன்தான்.ஒவ்வொரு படைப்பின் ஆயுட்காலத் தவணைகள் அவன் கைவசமே உள்ளன. எல்லா மனிதர்களும் அவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

<u>பிர்தௌஸ் எனும் சுவனமே உங்கள் தங்குமிடம்"</u>

- ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் சுவனத்தின் மிக உயர்ந்த அந்தஸ்தை அடையக்கூடியவர்கள். வேறு எந்த மனிதரும் அதை அடைந்திட முடியாது. நபியவர்களே அது குறித்து இவ்வாறு நவின்றதாக ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ளது போன்று:

<u>வஸீலா எனும் உயர் அந்தஸ்தை நான் அடைவதற்காக நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். திண்ணமாக அது சுவனத்தின் மிக உயரிய அந்தஸ்தாகும். அல்லாஹ்வின் அடியார்களில் ஓர்அடியாருக்கே அது கிடைக்கும். அந்த அடியார் நானாகவே இருக்க விரும்புகிறேன்</u>" - அது சுவனத்தில் ஃபிர்தௌஸ் எனும் உல்லாசத் தோட்டம்தான். ஏனெனில், அதுவே சுவனத்தின் மேல்தட்டில் அமைந்ததாகும்.

நபியவயர்களின் (உடலை அடக்கம் செய்து அவர்கள்) மீது மண்ணை அள்ளிப்போடுவது உங்கள் மனத்திற்குத் திருப்தியாக இருந்ததா? "

- ஃபாத்திமா(ரலி) அவர்கள் இவ்வாறு கேட்டது அவர்களது மனம் அடைந்த கடும் சஞ்சலம், கவலை மற்றும் சோகத்தின் வெளிப்பாடே தவிர, அடக்கம் செய்ததை ஆட்சேபித்தல்ல! ஏனெனில், ஸஹாபாப் பெருமக்கள் நபியவர்களின்மீது அதிக அளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் அடிப்படையில்தான் - உயிருக்கு உயிராய், ஏன், உயிரினும் மேலாய் நீங்கள் நேசித்து வந்த நபி (ஸல்) அவர்களை அடக்கம் செய்து மண்ணைப்போட்டு மூடிவிட்டீர்களே! உங்கள் மனம் எப்படி இடம் கொடுத்தது? என்கிற கருத்தில் அவ்வாறு கேட்டுள்ளார்கள், ஃபாத்திமா (ரலி) அவர்கள்.

ஆம்! அவ்வாறு செய்வது அன்புத் தோழர்களின் மனத்திற்குத் திருப்தியே என்று சொல்வதுதான் அதற்குப் பதில்! ஏனெனில் அல்லாஹ் வழங்கியுள்ள ஷரீஅத்தும் நபியவர்கள் போதித்துச் சென்ற வழிகாட்டலும் அதுதான்! இறந்தவர்களை மண்ணினுள் வைத்து நல்லடக்கம் செய்யவேண்டும் என்பதுதான்!

நபித்தோழர்களோ - இவ்வுலகம் முழுவதையும் ஈடாகக் கொடுத்து நபி (ஸல்) அவர்களை மரணத்தின் பிடியில் இருந்து விடுவிக்க முடியும் என்றிருந்தால் அவர்கள் அதைச் செய்திருப்பார்கள்! ஆனால் பரிசுத்த ஏக இறைவன் அல்லாஹ்தான் என்றென்றும் நிலைத்திருப்பவன். மனிதர்கள் அனைவரும் மரணம் அடைபவர்களே! பின்னர் அவனிடம் திரும்பிச் செல்ல வேண்டியவர்களே! அல்லாஹ் குர்ஆனில் கூறியிருப்பது போன்று :

(நபியே!) நீரும் மரணமாகத்தான் போகிறீர்.,இவர்களும் மரணமாகத்தான் போகிறார்கள்" (39 : 31)

இந்த நபிமொழியிலிருந்து பல உண்மைகள் தெரியவருகின்றன:

❁ நபி (ஸல்)அவர்கள் மனிதர்தாம். ஏனைய மனிதர்களைப்போல் அவர்களுக்கும் நோய் வந்தது. பசிக் கும் தாகத்திற்கும் ஆளானார்கள். வெயிலும் குளிரும் அவர்களை வாட்டியதும் உண்டு! மரணம் அவர்களுக்கு ஏற்பட்டது., மண்ணினுள் வைத்து அடக்கமும் செய்யப்பட்டார்கள். மனிதர்களுக்கு ஏற்படுகிற எல்லா நிலை களும் அவர்களுக்கும் ஏற்படத்தான் செய்தன. நபி (ஸல்) அவர்களே நவின்றது போன்று:

நான் உங்களைப்போன்று மனிதன்தான். உங்களுக்கு மறதி ஏற்படுவதுபோன்று எனக்கும் மறதி ஏற்படத் தான் செய்கிறது" (புகாரி, முஸ்லிம்)

❁ நபி(ஸல்)அவர்களின் விஷயத்தில் வரம்புமீறிச் செல்பவர்களுக்கு இந்த நபிமொழியில் தெளிவான மறுப்பு உள்ளது. இவர்கள் நபியவர்களுக்கு சிறப்பும் உயர் அந்தஸ்தும் அளிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஷிர்க் எனும் இணைவைப்பில் சிக்கிவிடுகிறார்கள். நபியவர்கள் மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் இவர்கள் நபியவர்களை அழைத்துப் பிரார்த்தனை செய்வது எவ்வளவு பெரிய தவறு. இரட்சிக்க வேண்டுமென நபியவர்களை அழைக்கிறார்களே! இன்னும் சிலர் இறைவனிடத்தில் எந்தப் பிரார்த்தனையும் செய்யாமல் நபியவர்களிடம் மட்டும் பிர்த்தனை செய்கிறார்களே. இதனை ஷிர்க் என்று தீர்ப்பளிக்காமல் வேறென்ன சொல்வது?

மதீனாவில் - மஸ்ஜிதுந் நபவியில் இவர்கள் நபியவர்களின் கப்றை முன்னோக்கி நிற்கும்போது அவர்களை நீங்கள் பார்த்தால் தெரியும். ஆம்! தொழுகையில் அல்லாஹ்வின் முன்னிலையில் பணிவுடனும் பயபக்தியுடனும் நிற்பதுபோன்று, ஏன், அதை விடவும் அதிகப் பக்தியுடனும் பணிவுடனும் நபியுடைய கப்றை நோக்கி இவர்கள் நிற்பதை நீங்கள் காணலாம்! இரட்சிக்க வேண்டி நபியவர்களின் கப்றை நோக்கி இவர்கள் பிரார்த்தனை செய்வதை நீங்கள் கேட்கலாம்! (இவர்களின் வழிகேட்டிலிருந்து அல்லாஹ் பாதுகாப்பானாக!)

இத்தகையவர்கள் தீன் - இறைமார்க்கத்தில் வழிதவறிப் போய்விட்டார்கள். இவர்களின் புத்தி பேதலித்து விட்டதோ என்றுதான் கருத வேண்டிய திருக்கிறது! தமக்குத்தாமே நன்மை செய்து கொள்ளவோ தீங்கைத் தடுக்கவோ எந்தஅதிகாரமும் நபியவர்களுக்குக் கிடையாது எனும் நிலையில் பிறருக்கு அப்படிச் செய்வதற்கான அதிகாரம் அவர்களுக்கு எப்படி இருக்க முடியும்?

நபி(ஸல்)அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிடுவதைப் பாருங்கள்:

(நபியே! இவர்களிடம்) கூறும்: அல்லாஹ்வின் கருவூலங்கள் என்னிடம் உள்ளன என்றோ மறைவான வற்றை நான் அறிகிறேன் என்றோ உங்களிடம் நான் கூறவில்லை. நான் ஒருமலக்கு என்றும் நான் உங்க ளிடம் கூற வில்லை. நானோ என்மீது இறக்கியருளப்படுகிற வஹியை மட்டும்தான் பின்பற்றுகிறேன்" (6 : 50)

-ஆம்! நபியவர்கள் மலக்குகளைச் சேர்ந்தவர் அல்லர். அல்லாஹ்வின் ஓர் அடியார்தான் - மனிதர்தான்!

(நபியே!) கூறும்: உங்களுக்கு ஏதேனும் தீமையோ நன்மையோ செய்திடும் ஆற்றல் எனக்கில்லை. கூறும்: அல்லாஹ்வின் பிடியிலிருந்து எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது. மேலும் அவனைத்தவிர வேறெந்தப்

புகலிடத்தையும் என்னால் பெறமுடியாது! அல்லாஹ்வின் வார்த்தைகளையும் அவனுடைய தூதுச் செய்தி களையும் சேர்ப்பித்து விடுவதைத் தவிர வேறு எந்தப் பணியும் எனக்கில்லை" (72 : 21-22)

மேலும் பாருங்கள்!-(நபியே!) உம்முடைய மிக நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக!" (26 : 214) எனும் வசனம் நபியவர்களின் மீது இறக்கியருளப்பட்டபொழுது நபி(ஸல்) அவர்கள் தம் உறவினர் களைப் பெயர் கூறி அழைத்து எச்சரிக்கை விடுத்தார்கள். தம் மகளையும் அழைத்து இவ்வாறு கூறினார்கள்:

...முஹம்மதின் மகள் ஃபாத்திமாவே! எனது செல்வத்தில் நீ எவ்வளவு விரும்பினாலும் கேள்., தருகிறேன்! ஆனால் அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து என்னால் சிறிதளவும் உன்னைக் காப்பாற்ற முடியாது!" (நூல்: புகாரி)

எந்த அளவுக்கு சொல்கிறார்கள், பாருங்கள்! அதுவும் யாரை அழைத்து? தம் உயிருக்கு உயிரான மகளை- யாருக்கு ஒரு சஞ்சலம் என்றால் நபியவர்களின் மனம் நோகுமோ அத்தகைய கண்மணி ஃபாத்திமாவை அழைத்தே இவ்வாறு சொன்னார்கள் எனில் மற்றவர்ளைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை!

ஆக, இவற்றிலிருந்து ஓர் உண்மை தெளிவாகத் தெரிகிறது: அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து ஒரு வரைக் காப்பாற்றுவதோ நோய்நொடிகள் அகற்றி உதவி செய்வதோ துன்பங்களை அகற்றுவதோ குழந்தைப் பேறுகள் அருளுவதோ நபியவர்களின் ஆற்றலுக்குட்பட்ட விஷயங்கள் அல்ல., அவர்களால் தனிப்பட்ட முறை யில் இப்படி எதுவும் செய்ய இயலாது. இவை எல்லாம் அல்லாஹ்வின் அதிகாரத்தில் உள்ளவை. எனவே அல்லாஹ்விடம் மட்டும்தான் எந்த ஓர் உதவியும் கேட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும்., அவனையே நாடவேண்டும். அவற்றைத் தருமாறு நபி (ஸல்) அவர்களிடம் பிரார்த்தனை செய்வது ஷிர்க் எனும் மன்னிப்பில்லாத இணைவைப்பாகும்! ஆம்! இது நபியவர்களைக் கடவுளாக்கும் கொடிய செயல். இந்தப் பாவத்திற்கு மன்னிப்பே கிடையாது!

❁ நபியவர்கள் மரணம் அடைந்தபொழுது ஃபாத்திமா(ரலி) அவர்கள் நபியவர்களின் நற்புகழை எடுத்துச் சொல்லி அழுதது மிகக் குறைவே! அது - அல்லாஹ் நிர்ணயித்த விதியை நொந்து அழுததாக ஆகாது!

மேலும் இந்நபிமொழியிலிருந்து தெரியவருகிறது:

❁ நபியவர்களது வாழ்நாளிலேயே அவர்களுடைய ஆண்மக்கள்,பெண்மக்கள் அனைவரும் மரணம் அடைந்து விட்டர்கள்., ஃபாத்திமா(ரலி) அவர்களைத் தவிர! அவர்கள் மட்டுமே நபியவர்களின் மரணத்திற்குப் பிறகும் உயிர் வாழ்ந்தார்கள்.

ஆகவே நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு வாரிசு சொத்து கிடைத்ததா? வேறு யார் யாருக்குக் கிடைத்தது? இதன் பதிலைத் தெரிந்து கொள்வது அவசியம்.

நபியவர்கள் விட்டுச்சென்றதில் இருந்து அனந்தரச் சொத்தாக யாருக்கும் எதுவும் கிடையாது. ஃபாத்திமா (ரலி)அவர்களுக்கோ அலீ(ரலி) அவர்களுக்கோ நபியவர்களின் மனைவியருக்கோ நபியவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் (ரலி)அவர்களுக்கோ வாரிசுச்சொத்து என்று எதுவும் இல்லை! வேறு எந்தவாரிசுகளுக்கும் இல்லை. ஏனெனில் நபிமார்கள் விட்டுச் செல்வது வாரிசு சொத்தல்ல, அதனை உறவினர் யாரும் அனந்தரமாகப் பெற முடியாது!

நபியவர்கள் அருளியதாக ஆதாரப்பூர்வமாகப் பதிவாகியுள்ளது: நபிமார்களாகிய எங்களிடம் இருந்து வாரிசுச் சொத்தாக யாரும் எதையும் பெற முடியாது., நாங்கள் விட்டுச்செல்வது அனைத்தும் தர்மமாகும்" (நூல்: புகாரி)

நபிமார்களுக்கு மட்டுமே உரிய இந்நியதியில் அல்லாஹ் ஒரு தத்துவத்தை வைத்துள்ளான். அதாவது, நபிமார்கள் விட்டுச் சென்ற சொத்துக்களை அவர்களுடைய உறவினர்கள் வாரிசுச் சொத்தாகப் பெற்றார்கள் எனில் இப்படி ஓர் ஆட்சேபனை எழுப்பப்படலாம்: நாங்கள் இறைவனின் தூதர்களாய் - நபிமார்களாய் வந்துள் ளோம் என்று இவர்கள் சொல்லிக்கொண்டு வந்தது இதற்காகத்தான் போலும்! அதிகாரத்தை அவர்கள் பெற வேண்டும்., அவர்களுக்குப் பிறகு அவர்களின் சந்ததிகளுகச் சொல்லுக்கும் இடம் இருக்கக் கூடாது என்ப தற்காகத்தான் நபிமார்களின் விஷயத்தில் அல்லாஹ் இந்த நியதியை ஏற்படுத்தியுள்ளான்.

எனவே நபிமார்கள் விட்டுச்சென்றது வாரிசுச் சொத்துக்கள் அல்ல., தர்மச் சொத்துக்கள்., ஏழை எளியோருக்கே செலவு செய்யப்பட்டன!

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) கனமானபொழுது: நோயின் கடுமையின் காரணத்தால் | ١)لما ثقل : من شدة المرض |
| 2) கடும் துன்பம்: கடுமையான மரண வேதனை. நபியவர்களின் உயர் அந்தஸ்து மற்றும் சிறப்பின் அடிப்படையிலானதாகும் இது!ஒரு நபிமொழியில் உள்ளது: மக்களிலேயே கடும் துன்பத்திற்கு உள்ளானவர்கள் நபிமார்களே! | ٢) الكرب : الشدة من سكرات الموت ، لعلو درجته وشرف رتبته وفي الحديث : أشد الناس بلاء الانبياء |
| 3) ஃபிர்தௌஸ் (என்பது சுவனத் தோட்டம்) உலகத்துத் தோட்டங்களிலுள்ள மரம், செடிகொடிகள், மலர்கள் போன்ற அனைத்தையும் அது உள்ளடக்கியிருக்கும். | ٣) الفردوس : بستان يجمع كل ما في البساتين من شجر و زهر |
| 4)ஜிப்ரீல்: இது நபிமார்களுக்கு வஹி அறிவிக்கும் பணியை எந்த மலக்கிடம் அல்லாஹ் ஒப்படைத்தானோ அந்த மலக்கின் பெயராகும். | ٤) جبريل: علم لملك كريم خصه الله بالوحي |
| 5)அவர்கள் மரணமான செய்தியை அறிவித்து விடுகிறோம். | ٥) ننعاه: نرفع خبر موته |

## கேள்விகள் - الاسئلة

1) நபியவர்களுக்கு மரணத் தருவாயில் இரு மடங்கு காய்ச்சல் கொடுக்கப்பட்டதேன்? அதில் இறைவன் நாடிய தத்துவம் என்ன?
2) ஃபிர்தௌஸ், வஸீலா எனும் வார்த்தைகளை விளக்கவும்.
3) நபியவர்களை அடக்கம் செய்து அவர்களின் உடலின் மீது மண்ணை அள்ளிப்போட்டது உங்கள் மனத்திற்குத் திருப்தியாக இருந்ததா? என்று ஃபாத்திமா (ரலி) அவர்கள் சொன்னதன் கருத்து என்ன?
4) நபி (ஸல்) அவர்கள் மனிதர்தாம் என்பதை குர்ஆன் - ஹதீஸின் ஆதாரங்களுடன் விவரிக்கவும்.
5) நபி (ஸல்) அவர்களின் விஷயத்தில் வரம்பு மீறிச் செல்பவர்களுக்கு இந்த நபிமொழியில் தக்க மறுப்பு உள்ளதென்பதை ஆதாரங்களுடன் விளக்கவும்.
6) நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் சொத்துக்களை யார் யார் வாரிசுச் சொத்தாகப் பெற்றார்கள்?
7) அறிவிப்பாளர் வரலாறு சுருக்கமாக எழுதவும்.

## ஆறுதல் சொல்வது, யாருக்கு? எப்படி?

**٢٩ – وَعَنْ أبى زَيْدٍ أسَامَةَ بْن زَيْدِ بْن حَارِثَةَ مَوْلَي رَسُوْل الله ﷺ حِبِه وَ بْن حِبِّهِ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ: { أرْسَلَتْ بِنْتُ النَّبي ﷺ : انَّ ابْنِى قَد احْتُضِرَ فاشْهدْناَ ، فأرْسَلَ يُقْرِءَ السَّلاَمَ وَ يَقُوْلَ : اِنَّ لله ماَ أخَذَ وَ لَهُ ماَ أعْطَى وَ كُلُّ شَيء عِنْدَهُ بأجَلٍ مُّسَمّي فلتَصْبِرْ وَ لْتَحْتَسبْ فأرْسَلَتْ اِلَيْهِ تُقْسِمُ عَلَيْهِ لَيَأْتِيَنَّهَا فَقاَمَ وَ مَعَهُ سَعْدُ بْنُ عُبَادَةَ وَ مُعاَذُ بْنُ جَبَلٍ وَ أُبَيُّ بْنُ كَعْب وَ زَيْدُ بْنُ ثَابتٍ وَ رجاَلٌ رَضِيَ اللهُ عَنْهُمْ فَرُفِعَ الى رَسُوْل الله ﷺ الصَّبيُّ فاقْعَدَهُ فِيْ حِجْرِهِ وَ نَفَسُهُ تَقَعْقَعُ ففَاضَتْ عَيْنَاهُ فَقالَ سَعْدٌ : يَا رَسُوْلَ الله مَا هذاَ؟ فَقَال: هذِهِ رَحْمَةٌ جَعَلَها اللهُ تَعا لِى فِي قُلُوْب عِبادِهِ وَ فِيْ رِوَايَةٍ : فِيْ قُلُوْب مَنْ شاَءَ مِنْ عِبَادِهِ وَ اِنَّماَ يَرْحَمُ اللهُ مِنْ عِباَدِهِ الرُّحَماَءَ } متفق عليه --- وَمَعْنَى تَقَعْقَعُ : تَتَحَرَّكُ وَ تَضْطَرِبُ**

ஹதீஸ் எண்: 29

உஸாமா (ரலி) அவர்கள், (நபியவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஜைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் மகன். இவரும் இவருடைய தந்தை ஜைத் அவர்களும் நபியவர்களின் பிரத்தியேக அன்புக்குரியவர் ஆவர்.) கூறுகிறார்கள்: நபியவர்களின் மகளார்- என் மகன் உயிர் பிரியும் நெருக்கடியான நிலையில் இருக்கிறான்., எனவே நீங்கள் எங்களிடம் அவசுஷியம் வரவேண்டும் என்று நபியவர்களுக்குத் தூது அனுப்பினார்கள். அதற்கு நபியவர்கள் ஓர் ஆள் மூலம் இவ்வாறு பதில் அனுப்பினார்கள்: மகளுக்கு ஸலாம் உரைத்து இவ்வாறு சொல்லவும்: எதனை அல்லாஹ் எடுத்துக் கொண்டானோ அது அவனுக்குரியதே., எதனை வழங்கியிருக்கிறானோ

அதுவும் அவனுக்கே சொந்தம்! ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடத்தில் ஒருகுறிப்பிட்ட காலத் தவணை உண்டு! எனவே என் மகள் பொறுமையுடன் இருக்கட்டும். அதற்கான கூலியை (அல்லாஹ்விடத்தில்) எதிர் பார்க்கட்டும்.

ஆனால் நபியவர்களின் மகளோ - அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு நபியவர்கள் அங்கு வரத்தான் வேண்டும் என்று மீண்டும் அவர்களுக்குத் தூது அனுப்பினார்கள்.

எனவே நபி(ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள்., மேலும் ஸஅத் பின் உபாதா, முஆத் பின் ஜபல், உபை இப்னு கஅப், ஜைத் பின் ஸாபித் (ரலியல்லாஹு அன்ஹு ம்) மற்றும் தோழர்கள் சிலரும் உடன் சென்றார் கள். அப்பொழுது நபியவர்களிடம் குழந்தை கொடுக்கப்பட்டது. நபியவர்கள் அதனைத் தமது மடியில் ஏந்தி னார்கள். அப்போது குழந்தைக்கு மூச்சு வாங்கியது! (அதனைக் கண்ணுற்ற) நபியவர்களின் கண்களும் கண்ணீர் வடித்தன! அப்பொழுது ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதரே! இது என்ன? அதற்கு நபி(ஸல்) அவர்கள் பதில் சொன்னார்கள்: அல்லாஹ் தன் அடியார்களின் இதயங் களில் வைத்துள்ள இரக்கமாகும் இது!" - மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது: தன் அடியார்களில் தான் நாடு வோரின் இதயங்களில் இதனை அல்லாஹ் அமைத்துள்ளான். தன் அடியார்களில் (துன்பத்திற்குள்ளானோர் மீது) இரங்குகிறவர் யாரோ அவர்கள் மீதுதான் அல்லாஹ் இரங்குகிறான்,, (நூல்: புகாரி, முஸ்லிம்)

தகஅகஉ (تَقَعْقَعُ) துடிக்கிறது., நெகிழ்கிறது.

## தெளிவுரை - الشرح

இதன் அறிவிப்பாளராகிய உஸாமா (ரலி) மற்றும் அவர்களின் தந்தை ஜைத் (ரலி) இருவரின் சிறப்பு குறித்து இரண்டு வார்த்தைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்று: மௌலா ரஸூ ல்-அடிமைத் தளையில் இருந்து நபியவர்களால் விடுதலை செய்யப்பட்டவர். அதாவது, சிறு வயதில் அடிமையாய் இருந்த ஜைத் (ரலி) அவர்களை விலைக்கு வாங்கி நபியவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்கள், அவர்களின் மனைவி கதீஜா (ரலி) அவர்கள்! நபியவர்களோ ஜைத் (ரலி) அவர்களுக்கு முழு விடுதலை அளித்தார்கள். இதனால்தான் ஜைத் (ரலி) அவர்களுக்கு மௌலா ரஸூ ல் (நபியவர்களால் விடுதலை செய்யப்பட்டவர்கள்) என்று கூறுவது நபித் தோழர்களின் வழக்கம் ஆனது!

மற்றொன்று: ஹிப்பு - அதிக அன்புக்குரியவர் என்பது அதன் பொருள். அதாவது, தந்தை மீதும் மகன் மீதும் நபியவர்கள் அதிக அன்பு வைத் திருந்ததால் **ஹிப்புந் நபி** (நபியின் பிரத்தியேக அன்புக்குரியவர்) எனும் சிறப்புப் பெயரை இருவரும் பெற்றனர்.

பொறுமையைக் கடைப்பிடிப்பது கடமை என்று வலியுறுத்தக்கூடிய ஆதாரங்களுள் இந்த நபிமொழியும் ஒன்று. இதனாலேயே இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இந்தப் பாடத்தின் கீழ் இதனைக் கொண்டுவந்துள் ளார்கள்.

மகனின் உயிர் பிரியும் நெருக்கடியான நிலையைக் கண்டு மனம் நொந்து தூது அனுப்பிய தம் மகளுக்கு நபி (ஸல்) அவர்கள் சொல்லி அனுப்பிய வார்த்தை கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

<u>அவள் பொறுமையைக் கடைப்பிடிக்கட்டும்., கூலியை எதிர்பார்த்திருக்கட்டும்"</u>

அதாவது,பதற்றப்படாமல், சஞ்சலம் அடையாமல் மனத்தைக் கட்டுப்படுத்தட்டும்.பொறுமைக்கான கூலியை அல்லாஹ்விடம் எதிர்பார்த்து அமைதி கொள்ளட்டும். - இப்னு அபீ ஷைபா (ரஹ்) அவர்களின் நபிமொழித் தொகுப்பில், இவ்வாறு தூது அனுப்பியது நபியவர்களின் மகளார் ஜைனப் (ரலி) அவர்கள் என்றுள்ளது.

துன்பத்திற்கு உள்ளானவருக்குச் சொல்லும் ஆறுதல் மொழிகளில் நபி(ஸல்) அவர்கள் மொழிந்த இவ் வார்த்தை பொருட்செறிவானது மட்டுமல்ல., மனதிற்கு உண்மையான ஆறுதலளிக்க வல்லதுமாகும். பொறு மையை மேற்கொள்ளும்பொழுது அதற்கான கூலியை அல்லாஹ்விடம் எதிர்பார்க்க வேண்டும் என்பது முக்கி யம். ஆறுதல் சொல்பவர் இதனையும் சேர்த்து நினைவூட்டுவது அதனினும் முக்கியம்.

ஏனெனில் இன்று நம்மில் பலர் துன்பத்தின்பொழுது பொறுமையைக் கடைப்பிடிக்கத்தான் செய்கின்றனர்., ஆனால் அதற்கான கூலியை அல்லாஹ் தர வேண்டும் என்கிற நாட்டமும் தேட்டமும் அவர்களுக்கு இருப்ப தில்லை. அதனால் அதிகமான நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது.

<u>எதனை அல்லாஹ் எடுத்துக் கொண்டானோ அது அவனுக்குரியதே! எதனை வழங்கியிருக்கிறானோ அதுவும் அவனுக்குரியதே!"</u>

- பெரியதோர் உண்மையை உணர்த்தும் மகத்தான வார்த்தையாகும் இது. நம்முடைய உடைமைகள் யாவும் அல்லாஹ்வுக்கே சொந்தம் எனும் பொழுது அவனது நாட்டப்படி எதையும் - எப்பொழுதும் நம்மிடம் இருந்து எடுத்துக்கொள்ள அவனுக்கு முழுஅதிகாரம் உள்ளது. அது குறித்து பதறவும் பரிதவிக்கவும் என்ன இருக்கிறது!

இதனால்தான் துன்பத்திற்கு உள்ளாகும்பொழுது - **இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிஊன்** (பொருள்: திண்ணமாக நாம் அல்லாஹ்வுக்கே உடைமையானவர்கள். மேலும் திண்ணமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்லக் கூடியவர்கள்) என்று சொல்வது இஸ்லாத்தின் நடைமுறையாய் உள்ளது.

அனைத்தும் அல்லாஹ்வின் உடமைகள் எனும் ரீதியில்தான் அவன் நமக்கு வழங்கியவற்றை நம் விருப்பப் படி கையாளுவதற்கு நமக்கு அனுமதி இல்லை. அல்லாஹ் அனுமதித்த முறையில்தான் கையாள வேண்டும். மேலும் நம் உடைமைகளில் நாம் பெற்றிருக்கும் உரிமை முழுமையானதல்ல. ஒரு வரையறைக்கு உட்பட்டதே ஆகும்.

ஒருவன் தனது சொத்தில் மனஇச்சைப்படி ஆதிக்கம் செலுத்த நாடினால் - ஷரீஅத் அனுமதிக்காத முறை யில் அதைக் கையாள விரும்பினால் அவனுக்கு நாம் சொல்வோம்:

இப்படிகஂ செய்ய உனக்கு அனுமதி இல்லை., உன் கைவசமுள்ளவை அல்லாஹ்வின் சொத்துக்கள். அவற்றை அவன் உனக்கு வழங்கியிருப்பது தற்காலிகமாகத்தான்!"

குர்ஆன் இதனை ஓர் இடத்தில் கூறுகிறது: அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருக்கும் செல்வத்திலிருந்து அவர்களுக்கு வழங்குங்கள்" (24 : 33) எனவே அவன் அனுமதித்த முறைப்படி அவற்றைக் கையாளுவதுதான் அவனது பேருதவிக்கு நன்றி செலுத்துவதாகவும் ஆகும்.

ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடத்தில் ஒரு குறிப்பிட்ட தவணை உண்டு"

- குர்ஆனும் இதனை இவ்வாறு குறிப்பிடுகிறது: ஒவ்வொரு பொருளுக்கும் அவன் ஓர் அளவை நிர்ணயித் துள்ளான்" (13 : 8)

ஆம்! ஒவ்வொன்றுக்கும் - அவற்றின் காலம், இடம், தன்மைகள் ஆகியவற்றைக் கவனித்து ஒரு வரையறை உள்ளது. அப்படி இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட விதியை முற்படுத்தவோ பிற்படுத்தவோ யாராலும் முடியாது.

குர்ஆன் மற்றோரிடத்தில் கூறுகிறது: ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு காலத்தவணை உண்டு. அவர்களு டைய தவணை முழுமையாகி விட்டால் அவர்கள் ஒருவிநாடி பிந்தவும் மாட்டார்கள்., முந்தவும் மாட்டார்கள்" (10 : 49)

எனவே மனிதர்களின் இறப்பு குறித்து அழுது புலம்புவதனால், அமைதி இழந்து பதறிப் பரிதவிப்பதனால் விதி மாறிடப் போவதில்லை!

நபியவர்களின் கண்களில் கண்ணீர் வடிந்தது"

- நபியவர்கள் மனம் பதறித்தான் அழுதார்கள் எனப் புரிந்து கொண்டு ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் வியப்புத் தெரிவித்தார்கள். ஆனால் நபியவர்கள் அழுதது சிறுவனின் நெருக்கடியான நிலைகண்டு மனம் இளகியதால்தான்! இரங்கியதால்தான்!

கடும் பிணியினால் துன்பத்திற்குள்ளானோரைக் கண்டு மனம் இரங்கி கண்ணீர் வடிப்பதற்கு அனுமதி உண்டு என்பதையே இது காட்டுகிறது. சப்தமிட்டு அழுது புலம்பவோ ஒப்பாரி வைக்கவோ அனுமதி இல்லை. அப்படி மனம் இரங்கி நீங்கள் அழுவது உங்கள் உள்ளத்தில் ரஹ்மத் - கிருபை உள்ளது என்பதற்கும் அதனால் அல்லாஹ்வின் கிருபைக்கு நீங்கள் தகுதி பெற்றுவிட்டீர்கள் என்பதற்கும் அடையாளம் என்று இந்த அறிவிப்பு காட்டுகிறது.

இங்கே ஓர் உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆறுதல் சொல்வதென்பது வாழ்த்துக் கூறுவதல்ல. மக்களில் சிலர் அவ்வாறு தவறாகப் புரிந்துகொண்டு தவறாகச் செயல்படுகின்றனர். இறந்த வீட்டில், பகட்டுக்காக வண்ண விளக்குகள் ஏற்றி, வருபவர்களை வரவேற்று, உயர்தர இருக்கைபோட்டு அமரச் செய்து மகிழ்விக்கின்றனர். மகிழ்கின்றனர்!இப்படிச் செய்வது எந்த வகையிலும் பொருத்தமாகாது! இது தவறு.

ஆறுதல் என்பது வாழ்த்துவது அல்ல. கவலைக்குள்ளான மனிதனின் மனத்தைச் சாந்தப்படுத்துவதும் சஞ்சலம் தவிர்த்து பொறுமை கொள்ளுமாறு செய்வதும்தான் ஆறுதல் என்பது!

மேலும் பாருங்கள். ஒரு முஸ்லிம் தன் உறவினர் மரணம் குறித்து கவலைப்படாமல் இருக்கிறார்., யார் இறந்தால் நம்கென்ன என்று வாளாவிருக்கிறார் என்றால் அவரிடம் சென்றும் ஆறுதல் சொல்லத்தான் வேண் டுமா? இது மிகவும் நுட்பமான - கவனிக்கத்தக்க விஷயமாகும்.

கவலைக்குள்ளானவருக்கு ஆறுதல் கூறுவது ஸு ன்னத் - நபிவழி என்று சொல்லப்பட்டுள்ளதே தவிர உறவினருக்கு ஆறுதல் கூறுவது ஸு ன்னத் என்று சொல்லப்படவில்லை!

ஒரு முஸ்லிமின் மரணத்தினால் அவருடைய உறவினர் கவலைப்படாமல் இருக்க, எவ்வித உறவு முறையு மில்லாத அவருடைய உயிர்த்தோழர் கடும் கவலைக்கும் துயரத்திற்கும் ஆளாகலாம். இந்தச் சூழ்நிலையில் இந்த நண்பருக்குத்தான் ஆறுதல் கூற வேண்டுமே தவிர அந்த உறவினருக்கல்ல!

ஆனால் இன்று நம்மிடையே ஆறுதலுக்கான அளவுகோல் தலைகீழாக மாறிவிட்டது. உறவினருக்குத்தான் ஆறுதல் சொல்வது என்றாகிவிட்டது. ஏற்பட்ட இறப்பினால் அவர் எவ்வளவுதான் ஆனந்தக் கூத்தாடினாலும் சரியே! வலியச் சென்று அவருக்கே மக்கள் ஆறுதல் சொல்கின்றனர்! அது ஒரு சடங்காகி விட்டது!

இதனை இன்னும் தெளிவாக்குகிறது இந்த உதாரணம். ஓர் ஏழை., அவருக்கு சிறிய தகப்பனார் அல் லது சிறிய தகப்பனாருடைய மகன் இருக்கிறார்., இவருக்கும் அவருக்கும் பல விஷயங்களில் சண்டை-தகராறுகள்! இந்நிலையில் அவர் இறந்துவிடுகிறார். அவரது பல லட்சம் பெறுமான சொத்துக்கு இவர் மட்டும் தான் வாரிசு. அவரது இறப்பு குறித்து இந்த ஏழை கவலைப்படுவானா? நிச்சயம் கவலைப்படமாட்டான். நம்மைப் பிடித்த தொல்லை தீர்ந்தது என்றிருப்பது மட்டுமல்ல.,அவரை மரணிக்கச் செய்து அவருடைய ஏகப்பட்ட சொத்துக்கு நம்மை வாரிசு ஆக்கினானே அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்றுகூறி ஆனந்தம் அடைவான். இப்பொழுது இவனுக்கு ஏதாவது சொல்லித்தான் ஆக வேண்டுமெனில் வள வாழ்வு கிடைத்ததற்காக வாழ்த்துத்தான் சொல்ல வேண்டும்!

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## உஸாமா பின் ஜைத் (ரலி) அவர்கள்

உஸாமா (ரலி) அவர்களின் தாயார் பெயர் உம்மு ஐமன் (ரலி) அவர்கள். இவர்கள் நபி (ஸல்) அவர் களின் வளர்ப்புத் தாயார். நபியவர்கள் தங்களது அந்திமகாலத்தில் உஸாமா (ரலி) அவர்களை சிரியா தேசத்து கிறிஸ்தவர்களுடன் போர் செய்யப் பணித்து தளபதியாக்கி அனுப்பி வைத்தார்கள். அப்படையில் அபூ பக்ர், உமர்(ரலி) போன்ற மூத்த ஸஹாபாக்களும் இடம் பெற்றிருந்தார்கள். உஸாமா (ரலி) அவர்களுக்கு அப்பொழுது பதினேழு வயதுதான்!

ஆனால் போர்க் களத்தை அடையும் முன்பே நபி (ஸல்)அவர்கள் மரணம் அடைந்த செய்தி கிடைக்கவே அப்படை மதீனா திரும்பியது. பிறகு அபூ பக்ர்(ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் நபியவர்கள் விரும்பிய படியே - உஸாமாவின் தலைமையிலேயே அந்தப் படையை அனுப்பிவைத்தார்கள்!

மூன்றாம் கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்கள் தீயோரால் கொலை செய்யப்பட்ட பிறகே - பிந்திய காலத்திலேயே உஸாமா (ரலி) அவர்கள் மரணம் அடைந்தார்கள். அது ஹிஜ்ரி 54 ஆம் ஆண்டு என்றொரு கருத்து உண்டு.

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) உயிர் பிரியும் நெருக்கடியான நிலையில் இருக்கி றான். | ١) احتضر: حضرته مقدمات الموت |
| 2)நீங்கள் எங்களிடம் வர வேண்டும். | ٢) فاشهدنا : أحضرنا |
| 3) குறிப்பிட்ட தவணைக்காலம்: அஜல் எனும் அரபிச் சொல் வாழ் நாளின் கடைசிப்பகுதிக்கும் சொல்லப்படும். வாழ்நாள் முழுவதற்கும் சொல்லப் படும். | ٣) باجل مسمى : معلوم مقدر والاجل يطلق على الجزء الاخير وعلى مجموع العمر |
| 4) அவள் கூலியை எதிர்பார்க்கட்டும்: தனது பொறுமையைக்கொண்டு தன் அதிபதியிடத்தில் கூலி தேடுவதை எண்ணட்டும். அதுவும் அவளது புண் ணிய கருமங்களுடன் சேர்த்துக் கணக்கிடப்படு வதற்காக! | ٤) ولتحتسب : تنوي بصبرها طلب الثواب من ربها ليحسب لها ذلك من عملها الصالح |
| 5) அவர்களின் இரு கண்கள் கண்ணீர் வடித்தன: அவர்களின் கண்கள் கண்ணீரால் நிரம்பின. அல் லது அவற்றில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது! | ٥) ففاضت عيناه: امتلأت عيناه بالدمع أو كثر فيها ثم سال |
| 6)இரங்குபவர்கள்: பன்மை வார்த்தை., அது மட்டு மல்ல கூடுதல் பொருளைக் கொடுக்கக் கூடிய துமாகும். | ٦) الرحماء : جمع رحيم وهو من صيغ المبالغة |

## கேள்விகள் - الاسئلة

1) உறவினரின் மரணத்தின் பேரில் துன்பத்திற்குள்ளானவருக்கு எந்த வார்த்தையைக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும்? அந்த வார்த்தையின் பொருளையும் விவரிக்கவும்.
2) நபியவர்களின் கண்கள் கண்ணீர் வடித்தன என்று வந்துள்ளது., அப்படியெனில் உறவினரின் மரணத் திற்காக அழுவது கூடுமா? விளக்கம் என்ன?
3) ஆறுதல் சொல்வது என்றால் யாருக்குச் சொல்ல வேண்டும்? மரணம் அடைந்தவரின் உறவினருக்கு - அவர் துன்பப்படாவிட்டாலும் ஆறுதல் கூறத்தான் வேண்டுமா?
4) உஸாமா பின் ஜைத் (ரலி) அவர்களின் வரலாற்றுக் குறிப்பைத் தரவும். அவர்களும் அவர்களின் தந்தை யும் பெற்றிருந்த சிறப்பு என்ன?
5) ஜைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் சிறு வயதில் அடிமையாக ஆனதெப்படி? அந்த வரலாற்றைச் சுருக்கமாக விவரிக்கவும்.

## இறைநம்பிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட சோதனை!

٣٠ – وَعَنْ صُهَيْب ﷺ أنَّ رَسُوْلَ الله ﷺ قَالَ : كَانَ مَلِكٌ فِيْمَنْ قَبْلَكُمْ وَ كَانَ لَهُ ساَحِرٌ فَلَمَّاكَبِرَ قَالَ لِلْمَلِكِ: اِنِّي كَبِرْتُ فَابْعَثْ اِلَيَّ غُلاَمَاً أُعَلِّمْهُ السِّحْرَ فَبَعَثَ اِلَيْهِ غُلاَماً يُعَلِّمُهُ وَ كَانَ فِي طَرِيْقِهِ اِذاَ سَلَكَ راَهِبٌ فَقَعَدَ اِلَيْهِ وَ سَمِعَ كَلاَمَهُ فأَعْجَبَهُ وَكَانَ اِذاَ أَتَي السَّاحِرَ مَرَّ بِالرَّاهِبِ وَ قَعَدَ اِلَيْهِ فَاِذاَ أَتَي اَلسَّاحِرَ ضَرَبَهُ فَشَكاَ ذَلِكَ اِلَى الرَّاهِبِ فَقَالَ: اِذاَ خَشِيْتَ السَّاحِرَ فَقُلْ: حَبَسَنِىْ أَهْلِى وَ اِذاَ خَشِيْتَ أَهْلَكَ فَقُلْ: حَبَسَنِي السَّاحِرُ

ஹதீஸ் 30

ஸு ஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன் வாழ்ந்து சென்ற சமுதாயத்தில் ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு ஒரு சூனியக்காரர் (ஆலோசகராக) இருந்தார். அவர் முதுமை அடைந்தபோது மன்னனிடம் சொன்னார்:

நான் முதுமை அடைந்து விட்டேன். எனவே ஒரு சிறுவனை என்னிடம் அனுப்பிவை. நான் அவனுக்குச் சூனியம் கற்றுக் கொடுக்கிறேன்.,

அதன்படி சிறுவனொருவனை அவரிடம் அனுப்பிவைத்தான் மன்னன். அந்தச் சூனியக்காரர் சிறுவனுக்குச் சூனியம் கற்றுக் கொடுத்தார்.

சிறுவன் நடந்துவரும் பாதையில் ஒரு துறவி இருந்தார். சிறுவன் சூனியம் கற்க வரும்பொழுது துறவியிடம் சிறிது நேரம் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்பான். அவர் சொல்வது அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது. அதனால் சூனியக்காரரிடம் வரும்பொழுது வழியில் அந்தத் துறவியிடம் அமர்ந்து அறிவுரை கேட்பது அவனது வழக்கமானது.

ஒருதடவை சூனியக்காரரிடம் வரும்பொழுது (தாமதமானதால்) அவனை அவர் அடித்தார். அது குறித்து துறவியிடம் சிறுவன் முறையிட்டான். அவர் அவனுக்கு ஒருவழி சொன்னார்:

இனி சூனியக்காரர் அடிப்பாரே என்று நீ பயந்தால், என் பெற்றோர்தான் என்னைத் தடுத்துத் தாமதப் படுத்தி விட்டனர் என்று அவரிடம் சொல். தாமதமாகத் திரும்பியது பற்றி பெற்றோர் கேட்டால் சூனியக் காரர் தான் தாமதப்படுத்தி விட்டார் என்று சொல்"

فَبَيْنَماَ هُوَ عَلَى ذَلِكَ اِذْ أَتَي عَلى داَبَّةٍ عَظِيْمَةٍ قَدْ حَبَسَتِ النَّا سَ فَقَالَ: اَلْيَوْمَ أَعْلَمُ آلسَّاحِرُ أَفْضَلُ أَمِ الرَّاهِبُ أَفْضَلُ؟ فَأَخَذَ حَجَراً فَقَالَ : اللَّهُمَّ اِنْ كَانَ أَمْرُ الرّاَهِبُ أَحَبَّ اِلَيْكَ مِنْ أَمْرِ السَّاحِرِ فَاقْتُلْ هذِهِ الدّاَبَّةَ حَتَّي يَمْضِيَ النَّاسُ فَرَماَهاَ فَقَتَلَهاَ وَ مَضَي النَّاسُ فاَتَى الرَّاهِبَ فَاَخْبَرَهُ فَقَالَ لَهُ الرَّاهِبُ : أَيْ بُنَيَّ أَنْتَ اليَوْمَ أَفْضَلُ مِنِّي قَدْ بَلَغَ مِنْ أَمْرِكَ ماَ أَرَي وَ اِنَّكَ سَتُبْتَلَي فَاِنِ ابْتُلِيْتَ فَلاَ تَدُلَّ عَلَّي وَكَانَ الْغُلاَم يُبْرِئُي الاَكْمَهَ وَ الابْرَصَ وَ يُداَوِيْ النَّاسَ مِنْ ساَئِرِ الاَدْوَاءِ

இவ்வாறு அவன் செய்து வந்தபொழுது ஒருதடவை பாதையில் பெரியதொரு மிருகத்தைக் கண்டான். அது மக்களின் நடமாட்டத்தைத் தடுத்து வைத்திருந்தது. சிறுவன் (மனத்திற்குள்) சொல்லிக் கொண்டான்: சூனியக்காரர் சிறந்தவரா? துறவி சிறந்தவரா? என்பதை இன்று பார்த்து விடலாம்! - ஒருபெரிய கல்லை எடுத்தான்., யா அல்லாஹ்! சூனியக்காரரைவிட துறவியின் விஷயம் உனக்குப் பிரியமானதாக இருந்தால் நான் (இந்தக் கல்லை எறிந்ததும்) மிருகத்தைக் கொன்றுவிடு., மக்கள் நடந்து செல்வதற்கு வழி ஏற்படுத்து! என்று பிரார்த்தனை செய்து கொண்டு கல்லால் அந்த மிருகத்தை அடித்தான். அதனைக் கொன்றுவிட்டான். மக்கள் நடந்து செல்ல வழிபிறந்தது!

துறவியிடம் வந்து நடந்த விஷயத்தைச் சொன்னான். அதற்கு அவர், என் அன்பு மகனே! இன்று என்னை விடவும் நீ சிறந்து விட்டாய். (ஞானத்தால் - பக்தியினால்) உனது விவகாரம் உயர்ந்துள்ளது என்பதை நான் காண்கிறேன். திண்ணமாக நீ சோதனைக்குள்ளாக்கப்படுவாய். அத்தகைய சோதனைக் கட்டம் வந்தால் என்னைப் பற்றி மக்களிடம் சொல்லி (எனது ரகசியத்தை வெளிப்படுத்தி) விடாதே!"

அந்தச் சிறுவன், பிறவிக் குருடனையும் தொழு நோயாளியையும் குணப்படுத்தக்கூடியவனாக ஆனான். ஏனைய அனைத்து நோய்களில் இருந்தும் மக்களுக்கு நிவாவரணம் அளிப்பவனாகத் திகழ்ந்தான்.

فَسَمِعَ جَلِيْسٌ لِلْمَلِكِ كَانَ قَدْ عَمِيَ فَأَتَاهُ بِهَدَايَا كَثِيْرَةٍ فَقَالَ : مَاهٰهُنَا لَكَ أَجْمَعَ اِنْ أَنْتَ شَفَيْتَنِيْ فَقَالَ : اِنِّي لا اَشْفِيْ أَحَداً اِنَّمَا يَشْفِي اللّٰهُ تَعَالَي فَاِنْ آمَنْتَ بِا للهِ تَعَالَي دَعَوْتُ اللهَ فَشفَاكَ فَآمَنَ بِاللهِ تَعَالَي فَشَفَاهُ اللّٰهُ تَعَالَي فَأَتَي الْمَلِكَ فَجَلَسَ اِلَيْهِ كَمَا كَانَ يَجْلِسُ فَقَالَ لَهُ الْمَلِكُ : مَنْ رَدَّ عَلَيْكَ بَصَرَكَ ؟ قَالَ: رَبِّي قَالَ : وَلَكَ رَبٌّ غَيْرِي؟ قَالَ : رَبِّي وَرَبُّكَ اللهُ فَأَخَذَهُ فَلَمْ يَزَلْ يُعَذِّبُهُ حَتَّى دَلَّ عَلَي الْغُلَامِ فَجِيءَ بِالْغُلَامِ فَقَالَ: لَهُ الْمَلِكُ : أَيْ بُنَّيْ قَدْ بَلَغَ مِنْ سِحْرِكَ مَا تُبْرِيءُ الاَكْمَهَ وَ الاَبْرَصَ وَ تَفْعَلُ وَ تَفْعَلُ فَقَالَ : اِنِّي لاَ أَشْفِي أَحَداً أَنَّمَا يَشْفِي اللّٰهُ تَعَالَي فَأَخَذَهُ فَلَمْ يَزَلْ يُعَذِّبُهُ حَتَّي دَلَّ عَلَى الرَّاهِبِ فَجِيْءَ بِالرَّاهِبِ فَقِيْلَ لَهُ : اِرْجِعْ عَنْ دِيْنِكَ فَأَبَي فَدَعَا بِالْمِنْشَارِ فَوُضِعَ بِالمِنْشَارُ فِي مَفْرَقِ رَأْسِهِ فَشَقَّهُ حَتَّي وَقَعَ شِقَّاهُ ثُمَّ جِيْءَ بِجَلِيْسِ الْمَلِكِ فَقِيْلَ لَهُ : اِرْجِعْ عَنْ دِيْنِكَ فَأَبَى فَوُضِعَ الْمِنْشَارُ فِيْ مَفْرَقِ رَأْسِهِ فَشَقَّهُ بِهِ حَتَّي وَقَعَ شِقَّاهُ

மன்னனின் அவைத் தோழர் ஒருவர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டார். அவர் கண்பார்வை இழந்தி ருந்தார். உடனே அவர் நிறைய அன்பளிப்புகளை எடுத்துக்கொண்டு அந்தச் சிறுவனிடம் வந்து சொன்னார்:

நீ எனக்கு நிவாரணம் அளித்தால் நான் கொண்டுவந்துள்ள அனைத்து அன்பளிப்புகளும் உனக்குத்தான்!"

அதற்கு சிறுவன் சொன்னான்: நான் யாருக்கும் (சுயமாக) நிவாரணம் அளிப்பதில்லை. நீர் அல்லாஹ் வின் மீது ஈமான் - நம்பிக்கை கொண்டால் உமக்காக அல்லாஹ்விடம் நான் பிரார்த்தனை செய்கிறேன். அல்லாஹ் உமக்குக் குணம் அளிப்பான்"

அதன்படி அவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டார். அல்லாஹ் அவருக்கு நிவாரணம் அளித்தான்.

பின்னர் அவர் மன்னரிடம் வந்து வழக்கம் போல் அவனது அவையில் அமர்ந்தார். மன்னன் கேட்டான்:

உமக்கு மீண்டும் பார்வையைக் கொடுத்தது யார்?

என் இறைவன்"

என்னைத் தவிர வேறொரு இறைவன் உமக்கு உண்டா? "

என்னுடையவும் உம்முடையவும் இறைவன் அல்லாஹ்தான்"

உடனே மன்னன் அந்த நண்பரைச் சிறையில் அடைத்தான். அவருக்குத் தொடர்ந்து தண்டனை கொடுத் துக்கொண்டிருந்தான். இறுதியில் அவர் சிறுவனைக் காட்டிக் கொடுத்துவிட்டார்.

சிறுவனை அழைத்து வந்தார்கள். அவனிடம் மன்னன் கேட்டான்: என் அன்பு மகனே! உனது மந்திரத் திறமை எந்த அளவு வளர்ந்துள்ளதெனில் பிறவிக் குருடனையும் வெண் குஷ்டக்காரனையும்கூட நீ குணப் படுத்துகிறாய். - இப்படி இப்படியெல்லாம் நீ பாதனை புரியவந்துவிட்டாய்,,

அதற்கு அந்தச் சிறுவன் சொன்னான்: நான் (சுயமாக) யாருக்கும் நிவாரணம் அளிப்பதில்லை., நிச்சய மாக நிவாரணம் அளிப்பவன் அல்லாஹ்தான்!"

மன்னன் அந்தச் சிறுவனையும் சிறைபிடித்தான். அவனுக்கும் தொடர்ந்து தண்டனை கொடுத்தான். இறுதி யில் சிறுவன் அந்தத் துறவியைக் காட்டிக் கொடுத்துவிட்டான்.

துறவியை அழைத்துவந்தார்கள். உமது மதத்தை நீர் விட்டுவிடும் என்று அவரிடம் சொல்லப்பட்டது. அதற்கு அவர் மறுத்துவிட்டார். உடனே ரம்பம் தருவிக்கப்பட்டது. அதனை அவரது தலையில் நேர்வகிடு எடுக்கும் இடத்தில் வைத்து அறுத்து அவர் இரண்டாகப் பிளக்கப்பட்டார்! துறவியின் உடல் இரண்டானது!

பிறகு மன்னனின் நண்பர் கொண்டுவரப்பட்டார். உமது மதத்தை நீர் விட்டுவிடும் என்று அவரிடம் சொல்லப் பட்டது. அவரும் அதனை மறுத்து விடவே ரம்பத்தை அவரது தலையில் நேர்வகிடு எடுக்கும் இடத்தில் வைத்து அறுத்தார்கள். அவரது உடல் இரு துண்டுகளானது!

ثُمَّ جِيْءِ بِالْغُلَامِ فَقِيْلَ لَهُ: اِرْجِعْ عَنْ دِيْنِكَ فَأَبَي فَدَفَعَهُ اِلَي نَفَرٍ مِنْ أَصْحَابِهِ فَقَالَ : اِذْهَبُوْا بِهِ اِلَي جَبَلٍ كَذَا وَ كَذَا فَاصْعَدُوْ بِهِ الْجَبَلَ فَاِذَا بَلَغْتُمْ ذِرْوَتَهُ فَاِن رَّجَعَ عَنْ دِيْنِهِ وَ الاَّ فَاطْرَحُوْهُ فَذَ هبُوْا بِهِ فَصَعَدُوا بِهِ الْجَبَلَ فَقَالَ : اللّٰهُمَّ اكْفِنِيْهِمْ بِمَا شِئْتَ ، فَرَجَفَ بِهِمْ الْجَبَلُ فَسَقَطُوْا وَجَاءَ يَمْشِي اِلَي الْمَلِكِ فَقَالَ لَهُ الْمَلِكُ : مَا فُعِلَ بِأَصْحَابِكَ فَقَالَ : كَفَانِيْهِمُ اللهُ تَعَالَي فَدَفَعَهُ اِلَي نَفَرٍ مِنْ أَصْحَابِهِ فَقَالَ: اِذْهَبُوْا فَاحْمِلُوْهُ فِي قُرْقُوْرٍ وَ تَوَسَّطُوْبِهِ الْبَحْرَ فَاِنْ رَجَعَ عَنْ دِيْنِهِ وَ الاَّ فَاقْذِفُوْهُ ، فَذَهَبُوْا بِهِ فَقَالَ: اللّٰهُمَّ اكْفِنِيْهِمْ بِمَا شِئْتَ ، فَانْكَفَأَتْ بِهِمْ السَّفِيْنَةُ فَغَرَقُوْا ، وَجَاءَ يَمْشِيْ اِلَي الْمَلِكِ ، فَقَالَ لَهُ الْمَلِكُ : مَا فُعِلَ بِأَصْحَابِكَ؟ فَقَالَ : كَفَانِيْهِمُ اللهُ تَعَالَي فَقَالَ لِلْمَلِكِ : اِنَّكَ لَسْتَ بِقَاتِلِي حَتّي تَفْعَلَ مَا آمُرُكَ بِهِ قَالَ : مَا هُوَ؟ قَالَ: تَجْمَعُ النَّاسَ فِي صَعِيْدٍ وَاحِدٍ وَ تَصْلُبُنِي عَلي جِذْعٍ . ثُمَّ خُذْ سَهْماً مِنْ كِنَانَتِي ثُمَّ ضَعِ السَّهْمَ فِي كَبِدِ الْقَوْسِ ثُمَّ قُلْ: بِسْمِ اللهِ رَبِّ الْغُلَامِ ثُمَّ ارْمِنِي ، فَاِنَّكَ اِذَا فَعَلْتَ ذٰلِكَ قَتَلْتَنِى

பிறகு அந்தச்சிறுவனை அழைத்து வந்தார்கள். அவனிடம் செொல்லப்பட்டது: உனது மதத்தைக் கைவிடு" என்று. அதற்கு அவனும் மறுத்து விட்டான். மன்னன், அரசு அதிகாரிகள் சிலரிடம் சிறுவனை ஒப்படைத்துக் கூறினான்:

இவனை, இன்னின்ன மலைக்குக் கொண்டு செல்லுங்கள். மலையின் உச்சிக்கு அவனை ஏற்றுங்கள். அதன் சிகரத்தை அடைந்ததும் நீங்கள் பார்க்க வேண்டும்: தனது மதத்தை இவன் கை கழுவிவிட்டால் சரி! இல்லையெனில் அவனைக் கீழே எறிந்துவிடுங்கள்!"

அவ்வாறே அவர்கள் சிறுவனை அழைத்துச் சென்றார்கள். அவனைப் பிடித்துக்கொண்டு மலைமீது ஏற்றி னார்கள்.

சிறுவன் பிரார்த்தனை செய்தான்: யா அல்லாஹ்! இவர்களுக்கு எதிரில் எனக்கு உதவி செய்ய நீ போது மாகிவிடு. அந்த ஏற்பாட்டை நீ விரும்பிய விதத்தில் செய்திடு" - அவ்வாறே அவர்களோடு சேர்த்து மலை நடுங்கியது. எல்லோரும் கீழே விழுந்தார்கள்.

சிறுவன் மன்னனிடம் நடந்து வந்தான். அவனிடம் மன்னன் கேட்டான். உன்னுடன் வந்தவர்கள் என்ன ஆனார்கள்? சிறுவன் சொன்னான்: அவர்களுக்கு எதிராக எனக்கு உதவி செய்ய அல்லாஹ் போதுமாகி விட்டான்"

மன்னன் அவனைத் தன்னுடைய பிரத்தியேக அதிகாரிகளிடம் ஒப்படைத்தான். சொன்னான்: இவனை அழைத்துச் சென்று ஒரு கப்பலில் ஏற்றி நடுக்கடலுக்குக் கொண்டு செல்லுங்கள். (அங்கு இவனிடம் கேளுங் கள்) இவன் தன் மதத்தில் இருந்து விலகினால் சரி. இல்லையெனில் இவனைக் கடலில் எறிந்து விடுங்கள்"

அவ்வாறே அவனை அழைத்துச் சென்றார்கள். சிறுவன் (கப்பலில் அமர்ந்து) துஆ செய்தான்: யா அல்லாஹ்! இவர்களுக்கு எதிராக நீ எனக்கு உதவி செய்திடு. (அந்த ஏற்பாட்டை) நீ விரும்பியபடி செய்திடு"

உடனே கப்பல் கவிழ்ந்தது. அனைவரும் நீரில் மூழ்கினார்கள். சிறுவன் மீண்டும் மன்னனிடம் வந்தான். மன்னன் கேட்டான்: உன்னுடன் வந்த வர்கள் என்ன ஆனார்கள்? "

சிறுவன் சொன்னான்: அவர்களுக்கு எதிராக அல்லாஹ் எனக்கு உதவிடப் போதுமாகிவிட்டான்"

அப்பொழுது சிறுவன் மன்னனிடம் சொன்னான்: நான் உனக்குக் காண்பித்துத் தருகிற முறைப்படி நீ செயல்படாத வரையில் என்னை நீ கொல்லமுடியாது!"

அது என்ன? "

திறந்ததொரு பூமியில் மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டு. ஒரு பேரீச்ச மரத்தின் அடிப்பகுதியில் என்னை சிலுவை அடித்து வை. பிறகு என் அம்புகளில் ஒன்றை எடுத்து அதனை வில்லின் நடுவில் வை. பிறகு சிறுவனின் இரட்சகனாகிய அல்லாஹ்வின் பெயரால் ... என்று சொல்லிக்கொண்டு என்னை நோக்கி அம்பை எய்திடு. அப்படிச் செய்தால் தான் நீ என்னைக் கொல்ல முடியும்!"

فَجَمَعَ النَّاسَ فِى صَعِيْدٍ واَحِدٍ ، وَ صَلَبَهُ عَلي جِذْعٍ، ثُمَّ أخَذَ سَهْماً مِنْ كِنانَتِهِ ثُمَّ وَضَعَ السَّهْمَ فِى كَبِدِ الْقَوْسِ ثُمَّ قَالَ: بِسْمِ اللهِ رَبِّ الْغُلاَمِ ، ثُمَّ رَماَهُ فَوَقَعَ السَّهْمُ فِى صُدْغِهِ فَوَضَعَ يَدَهُ فِى صُدْغِهِ فَماَتَ. فَقاَلَ النَّاسُ : آمَنَّا بِرَبِّ الْغُلاَمِ ، فَأُتِيَ الْمَلِكُ فَقِيْلَ لَهُ : أرَأَيْتَ ماَ كُنْتَ تَحْذَرُ قَدْ وَاللهِ نَزَلَ بكَ حَذَرُكَ. قَدْ آمَنَ النَّاسُ. فَأمَرَ بالأُخْدُوْدِ بأفْواَهِ السَّكَكِ فَخُدَّتْ وَ اُضْرِمَ فِيْهاَ النِّيْراَنُ وَقاَلَ : مَنْ لَمْ يَرْجِعْ عِنْ دِيْنِهِ فأقْحِمُوْهُ فِيْهاَ أوْ قِيْلَ لَهُ: اقْتَحِمْ، فَفَعَلُوْا حَتَّي جاَءَتِ امْرَأَةٌ وَ مَعَهاَ صَبِيٌّ لَهاَ،فَتَقاَعَسَتْ أنْ تَقَعَ فِيْهاَ،فَقاَلَ لَهاَ الغُلاَمُ : ياَ أمَّاه اصْبِرِيْ فِاِنَّكِ عَلي الْحَقِّ – رَواَهُ مُسْلِم

ذِرْوَةُ الْجَبَل:أعْلاَهُ وَهِي بِكَسْرِالذَّالِ الْمُعْجَمَةِ وَضَمِّهاَوَ (القُرْقُوْرُ) بِضَمِّ الْقاَفَيْنِ :نَوْعٌ مِنَ السُّفْنِ وَ (الصَّعِيْدُ) هُنا:الارْضُ البَارِزَةُ وَ(الأخْدُوْدُ) الشُّقُوْقُ فِي الأرْضِ كاَلنَّهَرِ الصَّغِيْرِ وَ( أُضْرِمَ ): أُوْقِدَ وَ (انْكَفَأَتْ) أى: اِنْقَلَبَتْ وَ ( تَقاَسَعَتْ) تَوَقَّفَتْ وَ جَبُنَتْ .

மன்னன் அவ்வாறே திறந்ததொரு திடலில் மக்களை ஒன்றுதிரட்டினான். சூறிவனை மரத்தின் அடிப்பகுதியில் கட்டி வைத்தான். பிறகு அவனுடைய அம்புக்கூட்டிலிருந்து ஓர் அம்பை எடுத்து வில்லின் நடுவில் வைத்துக் கொண்டு -சிறுவனின் இரட்சகனாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ... என்று சொல்லிக்கொண்டு சூறிவனை நோக்கி அம்பை எய்தான். அவனது நெற்றிப்பொட்டை அது தைத்தது. நெற்றிப்பொட்டில் கையை வைத்துக் கொண்டே சிறுவன் இறந்துவிட்டான்!

இதனைக் கண்ணுற்ற மக்கள் சொன்னார்கள்: சிறுவனின் இரட்சகனின் மீது நாங்கள் ஈமான்- நம்பிக்கை கொண்டோம்"

மன்னன் ஒருகனவு கண்டான். அதில் அவனிடம் சொல்லப்பட்டது: பார்த்தாயா! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எதனைக் குறித்து நீ அஞ்சிக் கொண்டிருந்தாயோ அதுதான் உனது விஷயத்தில் நடந்துள்ளது, இதோ! மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு விட்டார்களே!"

உடனே வீதிகளின் ஓரங்களில் கிடங்குகள் தோண்டுமாறு மன்னன் கட்டளை பிறப்பித்தான். அவ்வாறே தோண்டப்பட்டது. அவற்றில் நெருப்பும் மூட்டப்பட்டது.

மன்னன் கூறினான்: யார் யாரெல்லாம் தமது மதத்தைக் கைவிடவில்லையோ அவர்களைப் பிடித்து இவற்றில் வீசி எறியுங்கள்!- அல்லது இந்த நெருப்பில் இறங்குங்கள் என்று அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும்."

அவ்வாறே செய்தனர். இறுதியில் ஒருபெண் வந்தாள். அவளுடன் அவளுடைய குழந்தையும் இருந்தது. நெருப்பில் இறங்குவதற்கு அவள் தயங்கியபொழுது அந்த ஆண்குழந்தை சொன்னது: தாயே! பொறுமை கொள்! நிச்சயமாக நீதான் சத்தியத்தின் மீது இருக்கிறாய்" (நூல்: முஸ்லிம்)

| | |
|---|---|
| 1) மலை உச்சி | ١) ذِروة الجبل : أعلاه |
| 2) கப்பல் - படகு | ٢) القرقور : نوع من السفن |
| 3) பொட்டல் பூமி | ٣) الصعيد : الارض البارزة |
| 4) கிடங்குகள்: சிறிய நதி போன்று பூமியில் தோண்டப்படும் கிடங்குகள். | ٤) الاخدود : الشقوق في الارض كالنهر الصغير |
| 5) தீ மூட்டப்பட்டது | ٥) اُضرم : اُوقد |
| 6) கவிழ்ந்தது | ٦) انكفأءت : انقلبت |
| 7) தயங்கினாள். பேடியானாள் | ٧) تقاسعت : توقفت و جبنت |

## தெளிவுரை - الشرح

### சிறுவன் ஆற்றிய அழைப்புப் பணி

இது முந்தைய பனூ இஸ்ராயீல்களின் காலத்தில் நடைபெற்ற விநோதமான கதையாகும்.

இறைநம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக எத்தகைய இன்னல்களையும் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும்., அவ்வழியில் இன்னுயிரை ஈந்திட நேர்ந்தாலும் -அதற்கும் தயங்கக்கூடாது என்பதற்கு சிறந்ததொரு முன்னுதாரணத்தை இந்தக் கதை வழங்குகிறது. இதனாலேயே இந்தத் தலைப்பின் கீழ் இதனைக் கொண்டு வந்துள்ளார்கள், இமாம் நவவி (ரஹ்) அவர்கள்!

சூனியக்கலையில் கைதேர்ந்ததொரு மந்திரவாதி மன்னனுக்குக் கிடைத்திருந்தார். மன்னன், அரசாங்க விவகாரங்களானாலும் - மத விஷயங்களானாலும் அவற்றில் ஒருமுடிவு காண்பது அந்த மந்திரவாதியிடம் ஆலோசனை கேட்டுத்தான்!

முதுமைக் காலத்தில் யாருக்காவது தனது மந்திரக்கலையைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென மந்திரவாதி கருதினான். தனக்குப் பிறகும் தனது தொழில் நிலைத்திருக்க வேண்டும்., மன்னனுக்குப் பயனளித்துக் கொண்டிருக்க வேண்டும் என எண்ணினான்.

அதற்காக ஒரு சிறுவனை அனுப்பித்தருமாறு மன்னனிடம் கேட்டுக் கொண்டான். ஏனெனில்,

❁ சிறுவன்தான் எதுவொன்றையும் அக்கறையுடன் கற்பான். மேலும் சிறு வயதில் கற்கும் கல்விதான் காலாகாலம் நிலைத்து நிற்கும். அவன் பெரியவனாக வளரவளர அந்தக் கலையும் ஓர் இயல்பான திறமையாக வளர்ந்து வரும்!

❁ கல்வி கற்பது தொட்டில் முதல் மண்ணறை வரையில் என்பது உண்மைதான். ஆனாலும் கசடறக் கற்பதற்கு - அதிலொரு திறமையை வளர்த்துக் கொள்வதற்கு இளமைக் காலமே சிறந்த பருவமாகும்.

❁ அந்தப் பருவத்து மனம் கள்ளங்கபடமற்றது., தூய்மையானது! வாழ்க்கைக் கஷ்டங்களின் அழுத்தமோ பிரச்னைகளின் இழுபறியோ எதுவுமின்றி வெள்ளை பலகைபோல் தெள்ளத்தெளிவானது. அதில் பதியும் விஷயங்கள் கற்பலகையில் செதுக்கப்படுவதுபோல் ஆழமாகப் பதிகின்றன!

மன்னன் சிறுவனைத் தேர்வு செய்து அனுப்பிவைத்தான். ஆனால் அல்லாஹ் சிறுவன் விஷயத்தில் வேறொரு நலனை நாடியிருந்தான். அதற்கான சூழ்நிலைகளை மலரச் செய்தான்! அது எப்படி?

சிறுவன் மந்திரம் கற்கச் செல்லும் வழியில் ஒருதுறவி கிடைத்தார். துறவி (ராஹிப்) என்றால் ஆலயத்தில் சதாவும் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருப்பவர். அவர் கல்விஞானத்தை அதிகம் பெற்றிருந்தாலும் ஆலய வழி பாட்டில் மூழ்கிவிடுவதால் துறவி என்றே அவர் அழைக்கப்படுகிறார். சிறுவன் இயல்பிலேயே நல்லவனாக இருந்ததால் - நன்மையை நாடும் உள்ளத்தை அவன் பெற்றிருந்ததால் மந்திரவாதியிடம் சூனியம் கற்கச் சென்றவன் துறவியின் அறிவுரையில் சிக்குண்டான்! அவரிடம் உட்கார்ந்து ஞானம் கற்காமல் மந்திர வாதி யிடம் செல்வதில்லை! ஏன் தாமமாகவே வருகிறாய் என்று கேட்டு மந்திரவாதி அடித்தார்.

சிறுவன் துறவியிடம் முறையிடவே அவர் அதிலிருந்து விடுபட ஒருவழி சொல்லித் தந்தார். பொய்யான கூஷாக்குப்போக்குச் சொல்லித் தப்பித்து விடுவதே அது!

இன்று நம்முடைய சிறுவர்களிடம் -ஏன் பள்ளிக்கூடத்திற்கு அல்லது மத்ரஸாவுக்குத் தாமதமாக வருகிறாய் என்று கேட்டால் ஏதாவது ஒருபொய்யைச் சொல்லிச் சமாளிக்கிறார்களே அது போன்றதே இதுவும்!

எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும் என்றல்லவா கற்றுக் கொடுக்க வேண்டும்., பொய் சொல்லும்படி ஏன் அறிவுரை சொன்னார்., அந்தத் துறவி?

இது நற்கல்வி தேடுவதற்குக் கிடைத்த நல்ல சூழ்நிலை! அது தடைபட்டு விடக்கூடாது. சிறுவனேகூட அடிக்குப் பயந்து தன்னிடம் வருவதை நிறுத்திவிடக்கூடாது என்று அவர் கருதியிருக்கலாம். அல்லது அன்று ஏதாவது சாக்குப்போக்குகூஷ் கெஷால்வதைத் தவிர வேறுவழி இல்லை என்பதால் அவர் அப்படிச் சொல்லிக் கொடுத்திருக்கலாம்! (அல்லாஹ்தான் மிக அறிந்தவன்)

ஒருநாள் நடைபாதையில் நின்று தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த மிருகத்தைக் கண்டதும் அதனை அப்புறப்படுத்தி மக்களுக்குச் சேவை செய்ய நாடினான், சிறுவன்! அப்பொழுது அவனது உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது: துறவி சிறந்தவரா? மந்திரவாதி சிறந்தவரா? என்று இன்று பார்த்துவிட வேண்டும் என்பதே அது!

அவ்வாறே அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்துகொண்டு கல்லை எறிய அந்த மிருகம் செத்து விடுகிறது.- ஆகா! என்ன ஆச்சரியம்! அப்படியானால் துறவிதான் சிறந்தவர் என்று கூஷிறுவன் பெருமிதம் கொண்டான்!

உண்மையும் அதுதான்! ஏனெனில் சூனியம் செய்பவன், இறைவனோடு இணைவைத்துச் சிலைகளை யும் ஷைத்தான்களையும் வணங்குபவனாக இருந்ததால் சந்தேகமின்றி முஷ்ரிக்தான் -இணைவைத்து வணங்கு பவன்தான். அல்லது மந்திரப் பொருட்களைக் கையாண்டு கண்கட்டி வித்தை செய்து பிழைப்பு நடத்தினால் அவன் அநீதியாளன் ஆவான்.

ஆனால் அந்தத் துறவியின் நிலை அவ்வாறல்ல. அவர் சரியான ஞானத்துடன் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டால் நேர்வழியில் உள்ளவர். அல்லது அன்றைய சூழ்நிலையில் அறியாமைக்குள்ளாகி வழிகேட்டில் உழன்று கொண்டிருந்தால், குறைந்தபட்சம் உள்ளத்தில் நல்லெண்ணம் கொண்டவர் என்றாகிறார்!

- ஆக, வழியில் நடந்த நிகழ்ச்சியைச் சிறுவன் துறவியிடம் தெரிவிக்க அவர் சொன்னார்: சிறுவனே! இன்று நீ என்னை விடவும் சிறந்து விட்டாய்"

- அவர் உண்மையே உரைத்தார். கூஷிறுவனது பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு உதவி செய்துள் ளான் என்பதே அவனது சிறப்புக்குச் சான்றாகும். அல்லாஹ் அவன் மீது பொழிந்த அருட்கொடையாகும். ஒரு மனிதன் தனக்குத் தயக்கமாயுள்ள விஷயத்தில் சரியான முடிவை - தெளிவானதொரு அடையாளத்தைக் காண்பிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்க அவன் அதனை ஏற்றுத் தெளிவாக்கிக் கொடுக்கிறான் எனில், அல்லாஹ் அந்த மனிதனை நேசிக்கிறான்., அவன் மீது அருள்பொழிகிறான் என்பதுதானே பொருள்!

இங்கு ஒருவிஷயத்தை அறிந்துகொள்வது பயன்மிக்கது. ஷரீஅத்தின் நடைமுறையில் **இஸ்திகாரா தொழுகை** (صلاة الاستخارة) உள்ளது. அதாவது, ஒருகாரியத்தை மேற்கொள்வதா? வேண்டாமா? என்று தயங்கினால் இரண்டு ரக்அத் தொழுது வாய்மையான உள்ளத்துடனும் உறுதியான ஈமானுடனும் அல்லாஹ்விடம் பிரார்த் தனை செய்து ஒருதெளிவைத் தருமாறு கேட்க வேண்டும். இந்தத் தொழுகையின் பயனாக உள்ளத்தில் ஓர் உள்ளுதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் அல்லது கனவின் மூலம் அல்லது அனுபவமுள்ள ஒருவரின் ஆலோ சனையின் மூலம் ஒருதெளிவான முடிவை அல்லாஹ் தருவான். -இந்தச் சிறுவனும் இதுபோன்றே செய்தான்!

இதேபோன்று நோயாளிகள் குணமடைவதற்காகவும் அல்லாஹ்விடம் இந்தச் சிறுவன் பிரார்த்தனை செய்ய அதனையும் அல்லாஹ் ஏற்று உதவி செய்தான். பிறவிக்குருடர்கள், வெண்குஷ்டக்காரர்கள் என பலரும் வந்து கூஷிறுவனிடம் நிவாரணம் பெற்றுச் சென்றார்கள்.

- ஈஸா நபி (அலை)அவர்களின் வரலாற்றிலும் இதுபோன்று நடந்துள்ளது. அவர்களும் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பிறவிக் குருடர்களையும் வெண்குஷ்டக்காரர்களையும் குணப்படுத்தி உள்ளார்கள்! அந்த விவரம் குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. ஆனாலும் ஒருவித்தியாசம். அதாவது, ஈஸா நபி (அலை)அவர்கள் தங்கள் கையால் நோயாளிகளைத் தடவுவார்கள்., அவர்கள் குணமடைந்து விடுவார்கள். ஆனால் இங்கே இந்தச் சிறுவன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய -அல்லாஹ் அதனை ஏற்று நிவாரணம் அளித்தான்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மன்னனின் நெருங்கிய நண்பரும் சிறுவனைத் தேடிவந்தார். எனக்குக் கண்பார்வையை மீட்டுத்தந்திடு., அப்படிச் செய்தால் இந்த அன்பளிப்புகள் அனைத்தும் உனக்குத்தான் என்று அவர் சொன்னபொழுது,

நோயைக் குணப்படுத்துவது அல்லாஹ்தானே தவிர., நான் அல்ல.. என்று பதிலளித்தான்.

இன்னும் சொன்னான்: நீர் அல்லாஹ்வின் மீது ஈமான் - நம்பிக்கை கொண்டால் உமக்குக் கண்ணொளி கிடைக்க அல்லாஹ்விடம் நான் துஆ செய்கிறேன்,,

-இறைநம்பிக்கையில் எவ்வளவு தெளிவான நிலையை அவன் பெற்றிருந்தான் என்பதைப் பாருங்கள்! நோய் களுக்கு நிவாரணம் அளிக்கும் சிறப்பை அடக்கத்துடனும் பணிவுடனும் அல்லாஹ்வின் பக்கம் சேர்த்தான் என்பது மட்டுமல்ல., அந்த ஏக இறைவன் மீதே நம்பிக்கை கொள்ளுமாறு அனைவரையும் அழைத்தான் என்பதும் கவனிக்கத்தக்கது!

பிறகு கண்ணொளி பெற்ற அந்த மனிதர் வழக்கம்போல் மன்னனின் அவைக்கு வந்து அமர உமக்கு கண்ணொளி கிடைத்தது எப்படி? என்று மன்னன் கேட்டபொழுது - சிறுவனைப் பின்பற்றியே அவரது பதிலும் அமைந்திருந்தது. என் இறைவன் எனக்கு கண்பார்வை கொடுத்தான் என்றே அவரும் பதிலளித்தார்.

மன்னன் கோபம் கொண்டு, என்னைத் தவிர உமக்கு வேறோர் இறைவனா? என்று பிதற்றினான். அவரைச் சிறைப்பிடித்துச் சித்திரவதை செய்தான். அதனைத் தாங்க முடியாமல் அவர் சிறுவனைக் காட்டிக்கொடுத் தார். அவ்வாறே சிறுவன் துறவியைக் காட்டிக் கொடுத்தான்.

உடனே துறவியின் மீது குற்றம் சுமத்தப்பட்டது. பாவம், ஆலயத்தில் அமர்ந்து வணக்க வழிபாட்டில் ஈடு பட்டுக் கொண்டிருந்த அவரைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவரிடம் மன்னன், என்னையே இறைவனாக ஏற்றுக்கொண்டு உமது புதிய மதத்தைக் கைவிட்டுவிடும்" என்று சொன்னான், ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

மன்னன் திடுக்கிட்டான். ஆகா! நமது ஆட்சிக்கு எதிராக பெரும் சூழ்ச்சி நடக்கிறதுபோல் தெரிகிறது. இந்த இறைநம்பிக்கைப் படலம் மேலும் தொடரவிடக்கூடாது. இல்லையெனில் நமக்கு ஆபத்து! இந்தத் துறவி தான் இதற்கெல்லாம் மூல காரணம்! முதலில் இவரைத் தீர்த்துக்கட்ட வேண்டும் எனத் தீர்மானித்தான்! அவர் மீது ராஜதுரோகக் குற்றம் சுமத்தி கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. உடனே ரம்பத்தைக் கொண்டு வந்து அவரது தலையில் நேர்வகிடு எடுக்கும் இடத்தில் வைத்து நேராக அறுத்தார்கள். முதலில் தலை., பிறகு கழுத்து., முதுகு என்று அப்படியே அறுத்தார்கள்! உடல் இரண்டு துண்டுகளாயின! ஒன்று இந்தப் பக்கமும் மற்னொன்று அந்தப் பக்கமுமாக விழுந்தன!

மன்னனின் அரசுவைத் தோழரை அழைத்துவந்து அவரையும் ரம்பத்தால் அறுத்தார்கள்.

அந்த இறைநம்பிக்கையாளர்களின் கொள்கைப் பற்றும் பொறுமையும் எவ்வளவு உறுதியானவை என்ப தைக் கவனியுங்கள்! மன்னன் இவ்வளவு கொடிய தண்டனை தருவான் என்று தெரிந்தும் என்ன நடந்தாலும் சுரியே என்று எதற்கும் துணிந்தார்கள்., உறுதியான ஈமானுடனேயே உயிரைத் துறந்தார்கள்!

## தற்கொலையா? தியாகமா?

இங்கு ஒருகேள்வி எழலாம். இத்தகைய சித்திரவதையையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண் டும் என்று என்ன இருக்கிறது? நிராகரிப்பு (குஃப்ர்) வார்த்தையை ஒப்புக்கு மொழிந்துவிட்டு தப்பித்து விடலாம் தானே., உள்ளத்தில் விசுவாசம் பசுமையாக இருக்கத்தானே செய்கிறது?

இதற்கான பதில் சற்று விரிவானது. பிரச்னை, நிர்பந்தத்திற்கு உள்ளான மனிதனுடன் நின்று விடும் எனில், அவரது விருப்பப்படி அவர் நடந்து கொள்ளலாம். அதாவது, நிராகரிப்பு வார்த்தையை உயிர்போனாலும் உச்ச ரிக்க மாட்டேன் என்று மறுக்கவும் செய்யலாம். அல்லது உதட்டளவில் ஒப்புக்குச் சொல்லிவிட்டுத் தப்பிக்கவும் செய்யலாம்.

ஆனால் நிராகரிப்பு வார்த்தையை ஏற்று மொழிகிறபொழுது மக்கள் அனைவருடைய நம்பிக்கையையும் அது பாதிக்கும் - பலவீனப்படுத்தும் என்றிருந்தால் அது கூடாது. உயிர் போனாலும் பொறுமையுடன் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். இறைவழியில் ஜிஹாத் - புனிதப்போர் செய்வது போன்றதாகும் இது. புனிதப்போராளி எதிரிகளால் கொலை செய்யப்படுவதையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு கொள்கையில் உறுதியுடன் இருக்கிறார்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்)அவர்களது வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்று இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இமாம் அவர்களின் காலத்தில் ஒருகுழப்பம் தலைதூக்கி இருந்தது. அதாவது குர்ஆன் மக்லூக் - படைக்கப்பட்டது என்று சிலர் குதர்க்க வாதம் பேசினர். அதையே அன்றைய கலீஃபாவும் ஆதரித்தார்.

ஆனால் இமாம் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கவே அவர்களை கலீஃபா கடுமையாகத் தண்டித்தார். இமாம் அவர்களைக் கட்டிவைத்துச் சாட்டையால் அடித்தார். அவர்களைக் கழுதை வாலில் கயிற்றால் கட்டி கடைவீதிகள் வழியாக இழுத்துக்கொண்டு சென்றார்கள். ஒருகட்டத்தில் இமாம் அவர்கள் சாட்டை அடிகளைத் தாங்க முடியாமல் மயங்கி கீழே விழ நேரிட்டது! பிறகு மயக்கம் தெளிந்து சுய உணர்வு வரும் பொழுதெல் லாம் உரத்த குரலில் - குர்ஆன் என் அதிபதியின் வாக்குதானே தவிர மக்லூக்- படைக்கப்பட்டதல்ல -(அழியுந் தன்மை கொண்டதல்ல) என்று மொழிந்தார்கள்.

நிர்பந்த நிலையில் குஃப்ர் - நிராகரிப்பு வார்த்தையை மொழிவது தங்களைப் பொறுத்து ஆகுமானதே என்று இமாம் அவர்கள் ஆகுமாக்கிக் கொள்ளவில்லை. ஏனெனில் இமாம் என்ன சொல்கிறார்கள் என்பதை மக்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். குர்ஆன் மக்லூக் -படைக்கப் பட்டதுதான் என்று இமாம் அவர்கள் செுால்லி விட்டால் மக்களும் அது தான் சரி என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். தீன் - இறைமார்க்கம் குழப்பத்திற்கு உள்ளாகிவிடும்! அதனால்தான் தீனின் நலன் கருதி இமாம் அவர்கள் தங்களை அர்ப்பணித்தார்கள்.

காலங்கள் கடந்தன. தீய கொள்கையுடைய கலீஃபாக்களின் ஆட்சியும் காலாவதியானது. மூன்றாவது தலைமுறையில் நல்ல கொள்கைப்பிடிப்புள்ள கலீஃபா ஆட்சிக்கு வந்தார். அவர் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களுக்குக் கண்ணியம் அளித்தார். சத்தியத்தை - சரியான கொள்கையை உரத்த குரலில் இமாம்

அவர்கள் முழங்க மக்களும் அவ்வாறு செய்தார்கள். இத்தகைய சுதந்திரம் நிலைபெற்ற பிறகே இமாம் மரணம் அடைந்தார்கள்!

- இறுதியாக சிறுவனைக் கொண்டுவந்து, உனது கொள்கையைக் கைவிட்டுவிட்டு மன்னன்தான் கடவுள் என ஏற்றுக்கொள் என்று வற்புறுத்தினார்கள்! சிறுவன் மறுக்கவே அவனையும் தண்டிக்குமாறு மன்னன் கட்டளையிட்டான்.

மலையிலிருந்து கீழே எறிந்தோ கடலில் தூக்கி வீசியோ சிறுவனைக் கொலை செய்ய மன்னனின் அடி யாட்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அல்லாஹ்வின் உதவி சிறுவனைப் பாதுகாத்தது!

கடைசியாக தன்னைக் கொல்ல வேண்டுமாயின் அதற்கு ஒரே வழிதான் உள்ளது என்று சிறுவன் மன்ன னிடம் சொன்னான். அல்லாஹ்வின் பெயரை மன்னன் மொழிய வேண்டும்., மக்கள் அனைவரும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது அதில் பிரதானமான நிபந்தனைகள்! எந்த இறைவன்மீது விசு வாசம் கொண்டதைக் குற்றமெனக்கருதி அம் மூவரையும் மன்னன் தீர்த்துக் கட்டினானோ அந்த இறைவனே நிஜமானவன்., ஆற்றல் மிக்கவன் என்பதை மன்னனே நிரூபித்தான். ஆம்! அல்லாஹ்வின் பெயரை மொழிந்து அம்பை எய்துதான் மன்னன் சிறுவனைக் கொன்றான்! இந்த உண்மையைக் கவனித்துக் கொண்டிருந்த மக்கள் அனை வரும் அல்லாஹ்வின் பெயரைக்ஷ் சொல்லி விசுவாசம் கொண்டார்கள்!

மன்னனின் உள்ளம், தன்னை எதிர்ப்பவர்களை எப்படியாவது கொன்றிட வேண்டுமென்று வெறிகொண்டி ருந்ததே தவிர தாம் எதனை ஏற்று மொழிகிறோம் என்பதை அவன் சிந்திக்கவில்லை.

இந்த நபிமொழிக் கதையின் ஒளியில் பல விஷயங்கள் தெரிய வருகின்றன:

கடும் துன்பத்தில் சிக்கித் துயரப்படுபவன் - நிச்சயம் இறையுதவி கிடைக்கும் எனும் உறுதியுடன் இறை வனின் திருமுன்னால் அடைக் கலமாகி உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்தால் திண்ணமாக அவனுக்கு உதவி கிடைக்கிறது., அவன் இறைவிசுவாசமில்லாதவனாக - நிராகரிப்பாளனாக இருந்தாலும் சரியே! அப்படிப் பட்ட சூழ்நிலையில் உதவி செய்து துன்பத்தை அகற்றுகிறான் இறைவன்., அப்படி உதவுபவனே இறைவன் என்கிறது, குர்ஆன் பல இடங்களில்! அதற்கோர் மற்றோர் ஆதாரம்தான் இந்நபிமொழியில் வரும் சிறுவனின் விவகாரம்!

தன்னைத் தானே அழிவில் ஆழ்த்துவது முஸ்லிம்களுக்குப் பெரிய அளவில் நலன்கள் கிடைக்க வழி வகுக்குமெனில் அவ்வாறு செய்வது கூடும். அதற்கு இந்த நபிமொழியில் வரும் சிறுவனின் செஷயல் ஆதாரமாக உள்ளது. ஆம், எந்த முறையைக் கையாண்டால் தன்னைக் கொல்ல முடியும் என்பதை மன்னனுக்குக் காண் பித்துக் கொடுத்துத் தன்னையே அழித்துக் கொண்டான் அவன்! அதனால் விழைந்த நல்ல விளைவுதான் மக்கள் அனைவரும் ஏக இறைவன் மீது விசுவாசம் கொண்டது!

இது குறித்து ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

திண்ணமாக இது ஜிஹாத் - இறைவழியிலான புனிதப் போர் ஆகும்! ஒரு சமுதாயமே இறைவன் மீது விசு வாசம் கொண்டது. அந்தச் சிறுவன் எதையும் இழந்து விடவில்லை. அவன் மரணத்தைத் தழுவினான்- அவ்வளவுதான்! இன்றில்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் அவன் மரணம் அடைந்துதான் ஆக வேண்டும்”

அப்படி ஏக இறைவன் மீது விசுவாசம் கொண்ட அனைத்து மக்களையும் மன்னன் கடும் சோதனைக்கு உள்ளாக்கினான். ஆயினும் அவர்கள் ஏக இறைக்கொள்கையைக் கைவிடவில்லை! அதில் உறுதியாக இருந் தார்கள். அதற்காக உயிரையே அர்ப்பணித்தார்கள். அவர்களது கொள்கையே சத்தியமானது என்பதற்கு ஓர் ஆதாரத்தையும் அல்லாஹ் காண்பித்துக் கொடுத்தான், அதுதான் நெருப்புக் குண்டத்தில் இறங்கத் தயங்கிய ஒருபெண்ணின் கையிலிருந்த ஆண்குழந்தை ஒன்று - தாயே! பொறுமைகொள்., நீதான் சத்தியத்தின் மீது இருக்கிறாய் என்று பேசிய அற்புதம்!”

இன்று முஸ்லிம்களில் சிலர் உடலில் குண்டைக் கட்டிக்கொண்டு எதிரிகளுக்கு மத்தியில் ரகசியமாகப் புகுந்து அதை வெடிக்கச் செய்து பிறரை அழிப்பதுடன் தம்மையும் அழித்துக் கொள்கின்றனர். இப்படிச் செய் வது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட தற்கொலையே! தற்கொலை செய்பவன் நரகத்தில் தள்ளப்பட்டு காலா காலம் அதில் வீழ்ந்து கிடப்பான் என்று நபிமொழியில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடும் தண்டனையும் அதற்குண்டு. ஆனால் இந்த நபிமொழிக் கதையில் வரும் சிறுவன் செய்தது தற்கொலை அல்ல! இரண்டிற்கும் உள்ள வேறு பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உடலில் குண்டைக் கட்டிக்கொண்டு தம்மைத்தாமே அழிக்கும் செயல் தற்கொலையே. ஏனெனில் இதனால் இஸ்லாத்திற்கு எந்த நலனும் இல்லை. இதன் மூலம் யாராவது ஈமான் -இறைவிசுவாசம் கொள்கிறார்களா? இஸ்லாத்தின் மீது ஒரு நல்லெண்ணம் வருகிறதா? எதுவும் இல்லை! அது மட்டுமல்ல நிரபராதிகள் பலரும்

அந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்து விடுகிறார்கள்! இது மாபாதகச் செயல் அல்லவா?., இதனால் இஸ்லாத் தின் மீது பெரிய அளவில் தவறான கருத்து பரவிவிடுகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது!

ஆனால் ஒன்று: இப்படிச் செய்பவர் தனிப்பட்டதோர் ஆய்வின் அடிப்படையில் அது கூடுமெனக் கருதி அதை மேற்கொண்டாரெனில் தற்கொலை எனும் பாவத்திலிருந்து அவர் தப்பிக்கலாமென ஆதரவு வைக்கலாம். ஆனால் அவரது செயலை மெச்சுவதற்கோ பிறர் அதைப் பின்பற்றுவதற்கோ எந்த அடிப்படையும் இல்லை. மேலும் ஷஹாதத் - இறைவழியில் உயிர்த் தியாகம் என்கிற உயர் அந்தஸ்தும் அவருக்கு இல்லை! ஏனெனில் அவர் ஜிஹாதின் வழியில் நடைபோடவில்லை.

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) துறவி : கிறிஸ்தவ மத வணக்கசாலி | ١) راهب : المتعبد من النصاري |
| 2) என் வீட்டார் என்னைத் தடுத்துத் தாமதப்படுத்தி விட்டனர். | ٢) حبسني : منعني أهلي |
| 3) பிறவிக் குருடர். | ٣) الاكمه : الذي ولد أعمي |
| 4) நோய்நொடிகள் | ٤) الادواء: جمع داء أي الامراض و الاسقام |
| 5) தலையில் நேர்வகிடு எடுக்கும் இடத்தில் | ٥) مفرق رأسه: مكان فرق شعره |
| 6) மலை அவர்களைக் கொண்டு உலுக்கியது. அதிர்ந் தது | ٦) فرجف:تحرك الجبل واضطرب بهم |
| 7) பேரீச்ச மரத் தண்டில், அடிப்பகுதியில் | ٧) جذع : بكسر الجيم وسكون الدال أي عود من أعواد النخل وجمعه جذوع |
| 8) வில்லின் மத்தியில்: அம்பு எறியும் போது பிடிக்கும் இடத்தில் | ٨) في كبد القوس : أى فى وسطه يعنى مقبضها عند الرمي |
| 9) அவனது நெற்றிப்பொட்டில் | ٩) فى صدغه: بضم الصاد وسكون الدال ، هو ما بين العين الى شحمة الاذن |
| 10) தெருவோரங்களில் | ١٠) بأفواه السكك : بأبواب الطرق جمع سكة |
| 11) குண்டங்கள் தோண்டப்பட்டன | ١١) فخدت: أي شقت الاخدود |
| 12) அவர்களைப் பிடித்து அதில் வீசுஷி எறியுங்கள். | ١٢) فأقحموه : ألقوه كرها |

## கேள்விகள் - الاسئلة

1) இளமையில் கல்வி கற்பதன் பயன்களை விவரிக்கவும்.
2) சூனியக்காரனைவிடவும் துறவிதான் சிறந்தவர் என்பதை அந்தச் சிறுவன் எவ்வாறு அறிந்துகொண்டான்?
3) சூனியக்காரன் கீழானவன் என்றால் அதற்கான காரணம் என்ன?
4) இஸ்திகாரா தொழுகை என்பது என்ன? இந்த நபிமொழிக் கதையில் அதுபோன்று நடந்ததென்ன?
5) பிறவிக் குருடர்களையும் வெண்குஷ்டக்காரர்களையும் குணப்படுத்துவதில் இந்தச் சிறுவனுக்கும் ஈஸா நபிக்கும் வித்தியாசம் என்ன?
6) இந்தச் சிறுவன் ஆற்றிய அழைப்புப் பணி என்ன?
7) இறைவிசுவாசிகளுக்கு ஏற்பட்ட சோதனைகளை விவரிக்கவும்.
8) உயிருக்கு ஆபத்து நேரலாம் என்றிருந்தால் குஃப்ர் - நிராகரிப்பு வார்த்தையை ஒப்புக்கு மொழிந்துவிட்டுத் தப்பித்துக் கொள்ளலாம்தானே ... என்கிற கேள்விக்குப் பதில் என்ன?
9) இன்று தற்கொலைப் படை என்கிற பெயரில் உடலில் குண்டைக்கட்டிக்கொண்டு எதிரிகளின் கூட்டத்தில் புகுந்து குண்டை வெடிக்கச் செய்வது தற்கொலையா? தியாகமா? விளக்கிக் கூறவும்.

## பொறுமையின் இலக்கணம்

٣١ – وعَنْ اَنسٍ ﷺ قالَ: مَرَّ النَّبيُّ ﷺ بامْرَأةٍ تَبْكِيْ عِنْدَ قَبْرٍ فَقَا لَ : اتَّقِيْ اللهَ وَ اِصْبِرِىْ فَقَالَتْ : اِلَيْكَ عَنِّى فَاِنَّكَ لَمْ تُصَبْ بِمُصِيْبَتِي. وَلَمْ تَعْرِفْهُ ، فَقِيْلَ لَهاَ: اِنَّهُ النَّبيْ ﷺ فَاَتَتْ بَابَ النَّبيْ ﷺ فَلَمْ تَجِدْ عِنْدَهُ بَوَّابِيْنَ ، فَقَا لَتْ : لَمْ أعْرِفْكَ ، فَقَالَ : اَنَّماَ الصَّبْرُ عِنْدَ الصَّدْمَةِ الاُوْلَى– مُتفق عليه وَفِي رِوايَةٍ لِمُسْلِمٍ :{ تَبْكِيْ عَلَي صَبِيٍّ لَهاَ }

ஹதீஸ் 31

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள், ஓர் அடக்கத் தலத்தின் அருகில் அழுது கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கடந்து சென்றபொழுது (அவளிடம்) கூறினார்கள்: அல்லாஹ்வைப் பயந்து கொள்., பொறுமையைக் கடைப்பிடி. - அதற்குப் பெண் சொன்னாள்: என்னை விட்டும் தூரவிலகிச் செல்லும்., எனக்கு ஏற்பட்ட துன்பம் உமக்கு ஏற்படவில்லை,, - நபியவர்களை அந்தப் பெண் அறிந்திருக்க வில்லை. பிறகு - இவர்கள்தாம் நபிகளார் என்று அவளிடம் சொல்லப்பட்டது. உடனே அவள் நபியவர்களின் வாசல் தேடிவந்தாள். அங்கு காவலாளிகள் யாரையும் அவள் காணவில்லை. அவள் சொன்னாள்: உங்களை நான் அறிந்திருக்க வில்லை,,- அதற்கு நபி(ஸல்)அவர்கள் சொன்னார்கள்: பொறுமை என்பது துன்பத்தின் தொடக்கத்திலேயே மேற்கொள்வதுதான்,, (புகாரி, முஸ்லிம்)

இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது: அவள் அழுதுகொண்டிருந்தது அவளது ஆண் குழந்தையின் அடக்கத் தலத்தில்,,

### தெளிவுரை ~ الشرح

குழந்தைப் பருவத்திலேயே மரணம் அடைந்த தன் மகனின் பிரிவினால் அந்தப் பெண்மணி கடும் துயரத்திற்குள்ளாகி இருந்தாள். மகனின் மீது அவளுக்கு அளவுகடந்த அன்பு! மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வீட்டில் தங்கி பொறுமை காத்திட அவளால் இயலவில்லை.

அந்தப் பெண்ணுக்கு நபி(ஸல்)அவர்கள் கூறிய அறிவுரையின் கருத்து யாதெனில், இவ்வாறு அடக்கத்தலம் தேடிவந்து அழுது புலம்புவது தவறு.. அல்லாஹ்வுக்கு அஞ்சி பொறுமை காத்திட வேண்டும் என்பதாகும். ஆனால் அவள் - என்னை விட்டும் விலகிச் செல்லும். எனக்கு ஏற்பட்ட துன்பம் உமக்கு ஏற்படவில்லை என்று பதில் கூறினாள், அறியாமை யினாலும் ஆற்றாமையினாலும்!

ஆம்! அவளுக்கு ஏற்பட்ட துன்பம் கடுமையானதென்பதை இந்தப் பதில் காட்டுகிறது! பிறகு நபி(ஸல்) அவர்கள் அவ்விடத்தைவிட்டும் விலகிச் சென்றார்கள். இவ்வாறு அறிவுரை கூறியவர்கள் நபிகளார் என்று அவளிடம் எடுத்துக் கூறப்பட்டபொழுது- அடடா! நபியவர்களின் கட்டளையை மீறிவிட்டோமே., அலட்சியமாகப் பேசிவிட்டோமே என்று மனம் வருந்தினாள்.

உடனே நபி (ஸல்) அவர்களின் வீட்டுக்கு வந்தாள். உங்களை நான் அறிந்திருக்க வில்லை. மிகவும் மனம் வருந்துகிறேன். இதோ! உங்கள் கட்டளை ஏற்று பொறுமை கொள்கிறேன். அறியாத்தனமாக அவ்வாறு பதில் சொல்லி விட்டேன். என்று கேட்டுக்கொண்டபொழுது -

<u>பொறுமை என்பது துன்பத்தின் தொடக்கத்திலேயே மேற்கொள்வதுதான்,,</u> என்று தெளிவுபடுத்தினார்கள் நபியவர்கள்!

அதாவது துன்பம் நம்மைப் பீடித்தவுடனேயே மேற்கொள்வதுதான் பொறுமை! அதற்குத்தான் நன்மையும் நற்கூலியும் உண்டு. அப்பொழுது பொறுமை இழந்து வீணாகப் பதறித் துடித்து ஒப்பாரி வைத்து அழுது தீர்த்து - எல்லாம் முடிந்தபிறகு வருகிற அமைதி இருக்கிறதே அது பொறுமையாக இருக்க முடியாது., ஐந்தறிவுப் பிராணிகள் அடைவது போன்ற ஆறுதலாகத்தான் இருக்க முடியும்.

உண்மையான பொறுமை என்பது,துன்பம் வந்து மனத்தை உலுக்குகிறபொழுது மேற்கொள்கிற பொறுமை தான்! அதுதான் சிறப்புக்குரியது. அப்பொழுது அதற்கான கூலியை எதிர்பார்த்து இவ்வாறு பிரார்த்தனை செய்வது மேலும் சிறப்பு சேர்க்கும்: **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் அல்லாஹும்ம அஜிர்னீ ஃபீ முஸீபத்தீ வஃக்லுஃப்னீ கைர (ன்) மின் ஹா** (நிச்சயமாக நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாய் இருக்கிறோம். யா அல்லாஹ்! எனது துன்பத்தில் எனக்கு நற்கூலி வழங்குவாயாக. இதனைவிடச் சிறந்த நிலையை எனக்கு நீ பகரமாக்கித் தருவாயாக)

இந்த நபிமொழியில் இருந்து பல விஷயங்கள் தெரிய வருகின்றன:

நபி(ஸல்) அவர்கள் நன்மையின் பக்கம் மக்களை அழைத்து சத்திய நெறியில் அவர்களை நடைபோட வைப்பதில் அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த அதேநேரத்தில் மென்மையுடன் - நற்குணத்துடன்தான் மக்களை அனுகுபவர்களாய் இருந்தார்கள். இத்தகைய மிகஉயர்ந்த நற்குணம் அனைவருக்கும் -குறிப்பாக அழைப்புப் பணியில் உள்ளவர்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரி ஆகும்.

இதோ! அடக்கத்தலம் வந்து அழுது கொண்டிருந்த அப்பெண்ணிடம் -இறையச்சத்தையும் பொறுமையையும் கடைப்பிடிக்குமாறு நபியவர்கள் கட்டளையிட்டபொழுது - **என்னை விட்டும் தூரமாக விலகிச் செல்லும்** என்றே அவள் கூறினாள்., ஆனாலும் நபியவர்கள் ஆத்திரப்படவில்லை., பழிவாங்கும் போக்கைக் கடைப்பிடித்து வலுக்கட்டாயமாக அங்கிருந்து அவளை வெளியேறச் செய்யவுமில்லை! காரணம், அவளுக்கு ஏற்பட்டி ருந்த கடும் துயரத்தையும் சஞ்சலத்தையும் நபியவர்கள் அறிந்திருந்தார்கள். அதற்கேற்பவே நடந்து கொண்டார்கள்.

அடக்கத்தலத்தை ஜியாரத் செய்வது பெண்களுக்கு ஹராம் அல்லவா? தடைசெய்யப்பட்டதல்லவா? என்று சிலர் வினா எழுப்பலாம்.

ஆம்! அது அவர்களுக்கு ஹராம் மட்டுமல்ல பெரும் பாவமான செயலும்கூட. ஏனெனில் நபி(ஸல்) அவர் கள், அடக்கத் தலங்களை ஜியாரத் செய்யக்கூடிய பெண்களை- அவற்றின் மீது தொழுமிடங்களை ஏற்படுத்தக் கூடிய, விளக்கேற்றக்கூடிய பெண்களைச் சபித்துள்ளார்கள்! (ஆதாரம்: திர்மிதி, நஸாஈ) - எந்தச் செயலை அல்லாஹ்வோ ரஸூலோ சபித்துள்ளார்களோ அது பெரும்பாவமான செயலே!

ஆனால் இந்தப் பெண்மணி ஜியாரத்திற்கு வரவில்லை., தனது மகனது பிரிவால் கடும் துயரத்திற்கும் சஞ்சலதிற்கும் உள்ளாகியிருந்ததால் அவன் அடக்கமாகிய இடம் தேடி வந்துவிட்டாள்! அதனால்தான் நபியவர் களும் சரி என்று விட்டு விட்டார்கள். வீட்டிற்குத் திரும்பிச் செல்லுமாறு அவளை நிர்பந்திக்கவில்லை.

அறியாமையினால் தவறுசெய்யும் மனிதன் மீது குற்றப்பதிவு செய்யப்படமாட்டாது. ஷரீஅத் சட்டம் என்ன வென்று அறியாமல் செய்த தவறாயினும் சரி.. நிலைமையை அறியாமையினால் செய்த தவறாயினும் சரியே! அந்தப்பெண் நபியவர்களிடம் அலட்சியமாகப் பதில் சொன்னது அறியாமையினால்தான்!

அந்தப் பெண்மணி நபியவர்களின் வீட்டுவாசலுக்கு வந்தபொழுது <u>அங்கு காவலாளிகள் யாரையும் அவள் காணவில்லை</u> என்று இந்த அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது நபியவர்களின் எளிய வாழ்க்கையை எடுத் துக் காட்டுகிறது. மக்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பேற்றிருப்போர் இதனையே முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும். அவர்கள் தமது வீட்டு வாசலில் காவலாளிகளை நியமித்து பொதுமக்களை உள்ளே வரவிடாமல் தடுப்பது கூடாது.

ஆனால் அப்படிச் சந்திக்க வரும் மக்களின் எண்ணிக்கை அதிகமிருந்து அவர்களால் பணிகள் பாதிப்படை வதைப் பயந்தால் -மக்களைச் சந்திக்கவும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றவும் வேறொரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியிருந்தால் அவ்வாறு செய்வது கூடும்., அதில் குற்றமில்லை.

அது மட்டுமல்ல, ஒருவீட்டிற்குச் செல்ல வேண்டுமானால் முன் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டு மென்று ஷரீஅத்தில் ஓர் ஒழுங்குமுறை உள்ளது.அதன் நியாயக் காரணம் என்ன? ஒருநபிமொழியில் கூறப்பட்டி ருப்பது போன்று - அந்நியப் பார்வையைத் தடுப்பது ஒருகாரணம். அதே போன்று, தான்விரும்பும் நபரை வீட்டினுள் அனுமதிக்கவும் தடுக்கவும் வீட்டின் உரிமையாளருக்கு அதிகாரம் உண்டு என்பதுவும் ஒருகாரணம். அதில் நியாயமுண்டு என்பதையே இந்த நபிமொழி காட்டுகிறது. ஆனால் சமூகப் பணிகளுக்கு பொறுப் பேற்றிருப்ப வர்கள் தங்களது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

அடக்கத் தலத்திற்கு வந்து அழுவதென்பது பொறுமைப் பண்புக்கு எதிரானதாகும். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணிடம் - **அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்.. பொறுமையைக் கடைப்பிடி** என்று சொன்னார்கள்.

- மக்களில் சிலர் இத்தகைய சோதனைக்கு உள்ளாக்கப்படுவது உண்டு. நெருங்கிய உறவினரோ உயி ருக்குயிரான நண்பரோ தலைவரோ இறந்து விட்டால் அவர்களின் பிரிவைத் தாங்கமுடியாமல் அவர்களின் அடக்கத் தலங்களுக்கு அடிக்கடி வருவதையும் அழுவதையும் காணலாம்.

இப்படிப்பட்டவர்களுக்கு நாம் சொல்வது இதுதான்: <u>மரணம் அடைந்தவருக்கு நீங்கள் பயனளிக்க விரும்பினால் உங்கள் வீட்டில் இருந்து கொண்டே அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். அதனை விடுத்து அடக்கத்தலத்திற்கு வருவதனால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை</u>"

ஏனெனில் மண்ணறைக்கு அடிக்கடி வருவதென்பது மரணித்த மனிதரையே சதாவும் நினைத்துக் கொண்டி ருக்கச் செய்து சஞ்சலத்திலும் துயரத்திலும் மூழ்கிக்கிடக்கவே வழிவகுக்கும்!

மனிதன் துன்பங்களை மறந்திடவேண்டும்., மனத் துயரத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வுலக மெனும் செயற்களம் சுழன்றுகொண்டே இருக்க வேண்டும். - துன்பத்திற்குள்ளான மனிதன் மனத்தை வேறு விஷயங்களில் ஈடுபடுத்துவதும் துன்பங்களை முடிந்தவரையில் மறந்திட முயல்வதும்தானே அதற்கான சிறந்த வழிமுறையாகும்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களது வரலாற்றுக் குறிப்பு 104 ஆம் பக்கம் காண்க!

### அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) அல்லாஹ்வைப் பயந்துகொள்., பொறு மையை மேற்கொள்: அவளது அழுகையில் ஒப்பாரி வைத்தல் போன்ற நிலைகள் அதி கப்படியாக இருந்தன என்பது வெளிப்படை! | ١) اتقي الله و اصبري: الظاهر انها كان في بكائها قدر زائد من نوح وغيره |
| 2)என்னை விட்டும் விலகிச் செல்லும்: வினைச் சொல்லின் பொருள் கொண்ட பெயர்ச் சொல். | ٢) اليك عني: اسم فعل بمعني تنح وأبعد |

### கேள்விகள் - الاسئلة

1) எந்தப் பொறுமைக்கு நன்மையும் நற்கூலியும் உண்டு? அதற்கான இலக்கணம் என்ன?
2) இந்த நபிமொழி நிகழ்ச்சியில் இஸ்லாமிய அழைப்பாளர்களுக்கு என்ன முன்மாதிரி கிடைக்கிறது?
3) கப்று ஜியாரத் செய்வது பெண்களுக்கு விலக்கப்பட்டதல்லவா? இங்கு நபியவர்கள் கப்று ஜியாரத்திற்கு அந்தப் பெண்ணை அனுமதி அளித்ததுபோல் தெரிகிறதே எனும் கேள்விக்கு பதில் என்ன?
4) வீட்டு வாசலில் காவலாளிகளை நியமித்து மக்களின் வருகையைத் தடுப்பதற்கு அனுமதி உண்டா?
5) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## இந்தப் பொறுமையாளருக்குச் சுவனமே கூலியாகும்!

**٣٢ – وَ عَنْ أَبِى هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ: { يَقُوْلُ اللهُ تَعَالَي: ماَ لِعَبْدِىْ الْمُؤْمِنِ عِنْدِىْ جَزاَءٌ اذاَ قَبَضْتُ صَفِيَّهُ مِنْ أَهْلِ الدُّنْياَ ثُمَّ احْتَسَبَ الاَّ الْجَنَّةُ } رواه البخاري**

ஹதீஸ் 32

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: உயர்வு மிக்கவனாகிய அல்லாஹ் கூறுகிறான்: விசுவாசியான என்னுடைய அடியானுக்கு என்னிடத்தில் கூலி - உலக வாழ் மக்களில் அவனுக்கு மிகப்பிரியமானவரின் உயிரை நான் கைப்பற்றினால் பிறகு அவன் (விதியைப் பொருந்திக் கொண்டு பொறுமை காத்து அதற்கான) கூலியை எதிர்பார்த்திருந்தால், (என்னிடத்தில் அவனுக்கு உரிய கூலி) சுவனத்தைத் தவிர வேறில்லை" (புகாரி)

### தெளிவுரை - الشرح

அல்லாஹ் கூறியதாக வருகிற இவ்வகை ஹதீஸ், நபிமொழிக் கலையில் ஹதீஸுல் குத்ஸி (புனிதமான ஹதீஸ்) என அழைக்கப்படுகிறது.

மூலத்தில் அஸ்ஸஃபிய்யு - அதிகப் பிரியமானவர், உயிருக்குயிரானவர் எனும் வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் அகராதிப் பொருள், தேர்வு செய்யப்பட்டவர், உண்மையான நேசத்திற்குரியவர் என்ப தாகும்.

அதாவது, ஒரு மனிதன் எவரை தனது அதிக நேசத்திற்கும் ஆழமான உறவுக்கும் நெருக்கத்திற்கும் உரியவராகத் தேர்வு செய்கிறானோ அவரைக் குறித்தே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. அவர் அவனுடைய மனைவியாகவோ மகனாகவோ தந்தையாகவோ தாயாகவோ சகோதரனாகவோ அல்லது நண்பனாகவோ இருக்கலாம். இத்தகைய உயிருக்கு உயிராய் நேசிக்கப்பட்டவர் - நெருங்கிப் பழகியவர் மரணமாகி விடும் பொழுது அந்த மனிதன் கடுமையான சஞ்சலத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகிறான்., அதுவும் அந்த மரணம்

திடீரென வந்துவிடும்பொழுது அவனது இதயமே நொறுங்கி விடுகிறது. துன்பம் வந்து வாட்டும் இத்தகைய சூழ்நிலையில் உள்ளத்தைத் திடப்படுத்தி பொறுமை கொண்டால், பதறித் துடிக்காமல் - அழுது பிதற்றாமல் அமைதி காத்தால் அல்லாஹ் அவனுக்குச் சுவனத்தைக் கூலியாக வழங்குகிறான்.

பொறுமையின் பல வகைகளில் இந்தக் குறிப்பிட்ட பொறுமை தனிச் சிறப்புடையதாகும்.

இதேபோல் அல்லாஹ் தன் அடியார்களின் மீது பொழியும் கருணையின் சிறப்பும் இந்த நபிமொழியில் சுட்டிக்காட்டப்படுகிறது. எவ்வாறெனில், நீங்கள் யாரை உயிருக்குயிராய் நேசிக்கிறீர்களோ அவரும் நீங்களும் - இருவரும் அல்லாஹ்வின் உடைமைகளே., தன் உடைமைகளில் யாரையும் - எப்பொழு தும் மரணமடையச் செய்வதற்கு அல்லாஹ்வுக்கு முழுஅதிகாரம் உண்டு. அப்படியிருக்க நீங்கள் பொறுமையை மேற்கொள்கிறீர்கள் என்கிற வகையில் உங்களுக்கு சுவனத்தை அல்லாஹ் கூலியாக வழங்குகிறான் எனில் அது அவனது கருணையல்லாமல் வேறென்ன!

இந்த நபிமொழி மூலம் மேலும் தெரிய வருகின்றது: உயிரை நான் கைப்பற்றினால் எனும் வாசகம், தான் விரும்பியதை அல்லாஹ் செயல் படுத்தக்கூடியவன் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்த இடத்தில், இன்னோர் உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அல்லாஹ்வின் செயல்பாடுகள் அனைத்தும் நன்மைக்குரியவையே! தீமை என்றுள்ள எதுவும் அவனுடன் சேர்க்கப்படமாட்டாது. எங்கேனும் -ஏதேனும் தீமை நிகழ்கிறது எனில் செய்யப்படுகிற பொருள்களில் நிகழ்கிறதே தவிர செயல்படுகிறவனின் அதாவது இறைவனின் செயலில் அல்ல!

எடுத்துக்காட்டாக, விதியில் அல்லாஹ் நிர்ணயித்த ஒன்று, ஒரு மனிதன் வெறுக்கும்படியாக உள்ள தெனில், அது அவனைப் பொறுத்து தீமை என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அது, அல்லாஹ்வின் நிர்ண யத்தைப் பொறுத்து தீமை அல்ல! ஏனெனில் அல்லாஹ் ஏற்படுத்திய நிர்ணயத்தின் பின்னணியில் ஏதேனும் மகத்தான தத்துவம் - பெரும் பயன்பாடு அமைந்திருக்கும். அது அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட மனிதனுக் குரிய பயன்பாடாக இருக்கும். அல்லது பொதுவாக எல்லோருக்கும் உரிய பயன்பாடாக இருக்கும்.

இதோ, பாருங்கள்! நிகழ்ந்துவிட்ட மரணத்தை அந்த மனிதன் பொறுமையுடன் எதிர்கொண்டு அதற்கான கூலியை எதிர்பார்த்திருந்தான் எனில் அது அவனுக்குப் பெரும் நன்மையாக அமைந்துவிடுகிறது. அதாவது அப்படி ஒரு தீங்கு அவனுக்கு ஏற்பட்டதன் காரணமாக அல்லாஹ்விடம் அவன் அடைக்கலமாகிறான்., பணிவோடு பிரார்த்தனை செய்து உதவிகேட்கிறான். அல்லாஹ்வின் கருணையும் உதவியும் மீண்டும் அவனை அரவணைத்துக் கொள்கிறது! அதன் மூலம் முன்னைவிட அதிகமாக அல்லாஹ்வின் பக்கம் அவன் நெருங்கிச்செல்ல வழிபிறக்கிறது. இது மிகப்பெரிய பயன் அல்லவா?

அது மட்டுமல்ல, மனிதனிடம் ஒரு பலவீனம் உள்ளது. அவனுக்குத் தொடர்ந்து நன்மைகளே கிடைத்துக் கொண்டிருந்தால் நன்றி மறந்து விடுகிறான். ஏதேனும் கஷ்டம் வரும்பொழுதுதான் அவனுக்கு மீண்டும் இறை வனைப் பற்றிய நினைவு வருகிறது. பணிவுடனும் பக்தியுடனும் இறைவன் முன்னிலையில் உதவி கேட்டு மன்றாடுகிறான்! இவ்வாறாக அந்தத் தீமை அந்த மனிதனைப் பொறுத்து பெரும் நன்மையாக மாறுகிறது.

அதே தீமை மற்றவர்களைப் பொறுத்து நன்மையாக அமைவது எவ்வாறெனில், ஒரு மனிதனுக்கு மண் வீடுதான் உள்ளதென்று வைத்துக் கொள்ளுங்கள். இந்நிலையில் அல்லாஹ் பெருவாரியான மழையைப் பொழி விக்கிறான். அது மண்வீட்டுக்காரனுக்கு பெரும் தொல்லைதான்! அதே நேரத்தில் அதே மழை ஏனைய மக்களுக்கு பெரும் நன்மையாகிறது! இதோ! அந்த மழையால் அவர்களது விவசாயம் செழிக்கிறது. கால் நடைகள் பல்கிப்பெருகுவதற்கு வழிபிறக்கிறது!

அந்தப் பெரு மழையினால் ஏற்படும் துன்பம் மண்வீட்டு வாசிக்கும்கூட ஒருவகையில் நன்மையாக அமைய லாம்! எப்பொழுதெனில், அந்தத் துன்பத்தின் மூலம் அவன் படிப்பினை பெற்று அல்லாஹ்வின் பக்கம் அடைக்க லமாகி பணிவையும் பயபக்தியையும் மேற்கொள்ளும்பொழுது அதற்கான கூலி அல்லாஹ்விடம் கிடைக்கிறது. இது, அந்தச் சிறிய தீமையை விடவும் பெரிய நன்மையாகிறது., அவனுக்கு!

## அருஞ்சொற்கள் ~ شرح الكلمات

| | |
|---|---|
| 1) அவனுக்கு மிகப் பிரியமானவர்: மனிதன் தனது அன்புக்கும் நேசத்திற்கும் உரியவராக யாரைத் தேர்வு செஷய்கிறானோ அவர். | ١) صفيه : من يصطفيه الانسان للود و المحبة |
| 2) அதற்கான கூலியை எதிர்பார்த் திருந்தான்: அல்லாஹ்விடத்தில் அதைச் சேகரமாக்கி வைக்கி றான். இதுவே பொறுமையையும் அல் லாஹ்வுக்கு முற்றாக அடிபணிவதையும் காட்டுகிறது. | ٢) ثم احتسبه: بأن يدخره عند الله تعالي، وذلك ينبئ عـــن الصبر و التسليم |

## கேள்விகள்-الاسئلة

1) அஸ்ஸஃபிய்யு எனும் செஷால்லின் அர்த்தம் என்ன? விளக்கம் என்ன?
2) உயிரை நான் கைப்பற்றினால் எனும் வார்த்தையின் உள்ளர்த்தம் என்ன? இறைவனின் செயல்கள் முழுக்க முழுக்க நன்மை விளைவிப்பவையே என்பது எப்படி?
3) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## பிளேக் நோயும் தியாகியின் கூலியும்

٣٣ – وَعَنْ عائِشَةَ رضي الله عنها أَنَّها سَأَلَتْ رَسُوْلَ الله ﷺ عَنْ الطّاعُوْنِ ، فَأَخْبَرَها أَنَّهُ كَانَ عَذابًا يَبْعَثُهُ اللهُ تَعَالَى عَلَى مَنْ يَشاءُ ، فَجَعَلَهُ اللهُ تَعَالَي رَحْمَةً لِلْمُؤْمِنِيْنَ ، فَلَيْسَ مِنْ عَبْدٍ يَقَعُ فِي الطَّاعُوْنِ فَيَمْكُثُ فِي بَلَدِهِ صابِرًا مُحْتَسِبًا يَعْلَمُ أَنَّهُ لاَ يُصِيْبُهُ الاَّ مَا كَتَبَ اللهُ لَهُ ألاَّ كَانَ لَهُ مِثْلُ أجْرِ الشَّهِيْدِ – رواه البخاري

٣٤ – وَعَنْ أَنَسٍ ﷺ قَالَ: سَمِعْتُ رَسُولَ الله ﷺ يَقُوْلُ :{ اِنَّ اللهَ عَزَّ وَ جَلَّ قَالَ: اِذَا ابْتَلَيْتُ عَبْدِي بِحَبِيْبَتَيْهِ فَصَبَرَ عَوَّضْتُهُ مِنْهُمَا الْجَنَّةَ } يُرِيْدُ عَيْنَيْهِ – رواه البخاري

ஹதீஸ் 33

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களிடம் தாவூன் எனும் உயிர்க்கொல்லி நோய் பற்றி கேட்டேன். அதற்கு என்னிடம் நபியவர்கள் சொன்னார்கள்: தாவூன் (எனும் நோய்) ஒரு தண்டனையாகும். அல்லாஹ், அதனை எந்த மக்கள் மீது அனுப்ப விரும்புகிறானோ அந்த மக்கள் மீது அனுப்புகிறான். ஆனால் முஃமின் (இறைவிசுவாசி) களுக்கு, அதனை ஓர் அருட்கொடையாக ஆக்கியுள்ளான். (இறைவிசுவாசஷியான) ஓர் அடியார், தாவூன் நோயில் மாட்டிக்கொள்கிறபொழுது - விதியில் அல்லாஹ் எழுதிய தைத்தவிர வேறெதுவும் அவரைத் தீண்டாது என்று அறிந்தவராக, பொறுமையுடனும் அதற்கான கூலியை எதிர்பார்த்தவராகவும் தனது ஊரிலேயே தங்கியிருந்தார் எனில், இறைவழிப் போரில் உயிர் நீத்த தியாகி பெறுவதுபோன்ற கூலி நிக்ஷ்கூஷயம் அவருக்குண்டு,, (புகாரி)

ஹதீஸ் 34

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன்: அல்லாஹ் கூறுகிறான்: என்னுடைய ஓர் அடியானை நான் சோதனைக்குள்ளாக்கினால் (அதாவது) அவனுக்கு விருப்ப மான இரண்டைப் பறித்(து அவனைச் சோதித்)தால் அப்பொழுது அவன் பொறுமையுடன் சகித்துக் கொண் டான் என்றால், அவ்விரண்டுக்குப் பகரமாக சுவனத்தை அவனுக்கு நான் வழங்குவேன் - அவனுக்கு விருப்ப மான இரண்டை: அதாவது அவனுடைய இரு கண்களை. (நூல் : புகாரி)

## தெளிவுரை الشرح

இவ்விரு நபிமொழிகளும் குறிப்பிட்ட இரு துன்பங்களின் மீது பொறுமை கொள்வதன் சிறப்பை எடுத்து ரைக்கின்றன. ஒன்று: உயிரையே காவு கொள்ளும் பிளேக் போன்ற கொடிய நோய்! இரண்டு: இரு கண்களை யும் இழந்து பரிதவிப்பது.

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்பு பிளேக் போன்ற உயிர்க்கொல்லி நோய் தொடர்பானது.

தாவூன் எனும் அரபிச்சொல்லின் பொருள், பிளேக் எனும் குறிப்பிட்ட தொரு நோயாகும். அல்லது தொற்று நோய்போல் எல்லோரையும் தாக்கி மரணத்தின் பிடியில் சிக்கவைக்கும் உயிர்க்கொல்லி நோய் அனைத்தையும் அது குறிக்கும். இந்த இரண்டாவது கருத்தின்படி காலரா, பிளேக் போன்ற நோய்கள் அனைத்தையும் இந்த வார்த்தை உள்ளடக்கும். ஆக, தாவூன் என்பது அல்லாஹ் அனுப்பும் கடுமையானதொரு தண்டனையே!

ஆனால் இறைநம்பிக்கையாளனைப் பொறுத்தவரையில் அந்நோய் ஓர் அருட்கொடையாக மாறிவிடுகிறது"

- இது, அவன் மேற்கொள்ளும் பொறுமையின் அடிப்படையிலாகும்! அதாவது, ஒவ்வொரு மனிதனும் - எங்கே உயிர்க்கொல்லி நோய் நம்மையும் தாக்கி விடுமோ., நம் உயிருக்கும் உலை வைத்துவிடுமோ என்று பயந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஏதாவது ஒரு திக்கு நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் நேரத்தில் அந்த இறைநம்பிக்கையாளன் பொறுமையுடன் அந்த ஊரில் தங்கியிருக்கிறான்., அல்லாஹ் எழுதிய விதிப்படியே எதுவும் நடக்கும் எனும் உறுதிப்பாட்டுடன் நிலைகுலையாமல் இருக்கிறான்.. இதனால் அந் நோயால் தாக்குண்டு அங்கேயே மரணம் அடைகிறான் எனில் ஷஹீத் எனும் இறைவழிப் போர்த்தியாகியின் கூலியைப் போன்ற மகத்தான கூலி அவனுக்கு எழுதப்படும்! -இது அல்லாஹ்வின் அருட் கொடையே அன்றி வேறென்ன!

இதனால்தான் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவித்த ஆதாரப் பூர்வமான நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

ஓர் ஊரில் இந்நோய் தாக்கியுள்ளதென நீங்கள் கேள்விப்பட்டால் அங்கு செல்லாதீர்கள்., நீங்கள் இருக்கும் பகுதியில் இந்நோய் ஏற்பட்டால் அதை விட்டும் தப்பித்து விடலாமென அங்கிருந்து வெளியேறாதீர் கள்"(நூல்: புகாரி)

ஏனெனில் பிளேக் தாக்கியுள்ள ஊர் என்று தெரிந்தே அங்கு செல்வது நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்வது போன்றதாகும். இது கூடாது!

இதேபோல் ஓர் ஊரை அந்நோய் தாக்கிவிட்ட பிறகு அங்குள்ள எல்லா மக்களும் ஊரையே காலிசெய்து விட்டு வெளியேறுவதும் அவ்வாறுசெய்தால் அந்நோயில் இருந்து தப்பிவிடலாம் என்று கருதுவதும் கூடாது! ஏனெனில் அல்லாஹ் விதித்த விதியில் இருந்து தப்பி ஓடுவது எவ்விதப் பயனையும் அளிக்காது. அந்த ஊரிலேயே தங்கியிருப்பதும் நோய் நிவாரணத்திற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து வாழ்வதுமே ஈமான் எனும் இறை நம்பிக்கையின் தேட்டமாகும்.

குர்ஆனில் - அல்பகரா அத்தியாயத்தில் ஓர் ஊர் மக்களைப் பற்றி எடுத்துக் கூறியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். ஏதோ ஓர் உயிர்க் கொல்லி நோய் அந்த ஊரில் பரவியபொழுது மரணத்திற்குப் பயந்து வீடு வாசல்களைவிட்டும் ஒட்டுமொத்தமாக அந்த மக்கள் வெளியேறி ஓடினார்கள்! செத்து மடியுங்கள் என்று அம்மக்களை நோக்கி அல்லாஹ் கட்டளையிட்டான்! அனைவரும் செத்து மடிந்தார்கள். பிறகு மீண்டும் அவர் களை உயிர் பெற்றெழச் செய்தான்.- அப்படிச் செய்ததன் நோக்கம், அல்லாஹ் நிர்ணயித்த விதியை விட்டும் எவரும் எங்கும் விரண்டோடித் தப்பிக்க முடியாது., அல்லாஹ்வின் பக்கம்தான் அடைக்கலம் தேடியாக வேண் டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதே ஆகும்!

உயிர்க்கொல்லி நோய் பரவியுள்ள ஊரில் வாழும் மக்கள் பொறுமையுடன் அங்கு தங்கியிருப்பதை - இறை வழிப்போரில் பொறுமையுடன் நின்றுபோர் புரிவதுடன் ஒப்பிட்டுக்கூறி பொறுமையின் சிறப்பைச் சிலாகித்துக் கூறுகிறது, இந்நபிமொழி!

## சுவனபதியில் ஒரு மீட்டர் இடமானாலும் ...!

அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸ் கண்ணிழந்து தவிக்கும் பரிதாபகரமான நோய் மீது பொறுமை கொள்வது பற்றியதாகும். உலக வாழ்வில் மனிதர்களுக்குப் பல்வேறு சோதனைகளைக் கொடுக் கிறான், இறைவன். நோய்நொடிகளைக் கொடுத்துச் சோதிக்கிறான். இதுபோல் உறுப்புகளை ஊனம் அடை யச் செய்தும் சோதிக்கிறான்! கண்ணொளி மங்கச்செய்வதோ முற்றிலுமாக இழக்கச் செய்வதோ இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும்!

உலக வாழ்வில் மனிதன் இருகண்களையும் இழப்பதென்பது உலகத் தையே இழப்பதற்குச் சமமாகும். கண்ணொளி இழந்த மனிதனின் உலகம்" இருண்டுபோய் விடுகிறது! உலகிலுள்ள எந்தப் பொருளின் அழகை யும் அவன் கண்டு மகிழ முடியாது! இந்தச் சோதனையின் கடுமையை உணர்த்தும் வகையிலேயே இந் நபிமொழியின் வாசகமும் அமைந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. அடியானின் இருகண்களை . . . என்று சொல்வதற்கு பதிலாக அவனுக்கு அதிகப்பிரியமான இரண்டை என்று சொல்லப்பட்டுள்ளது.

இதேபோல் சோதனையின் கடுமைக்குத் தக்கவாறு அதிக மதிப்புமிக்க நிலையான சுவன வாழ்வே அதற்கான கூலியாக அறிவிக்கப்பட்டுள்ளதும் பொறுத்தமான ஒன்றே!

ஆம்! சுவனப்பேறு என்பது இவ்வுலம் முழுவதற்கும் சமமானது. ஏன் இவ்வுலகத்தையும் இதிலுள்ள அனைத்துச் சுகபோகங்களையும் விடவும் மிக்க மேலான இன்ப நுகர்ச்சி கொண்ட வாழ்வே சுவன வாழ்வென்பது! மற்றொரு நபிமொழி கூறுகிறது:

சுவனத்தில் உங்களில் ஒருவரின் சாட்டை அளவுக்குரிய இடமென்பது உலகத்தைவிடவும் அதிலுள்ள அனைத்தை விடவும் சிறந்ததாகும் - (நூல் : புகாரி)

- ஏனெனில் சுவன வாழ்வுதான் அழியாதது., நிலையானது. உலக வாழ்வு அழியக்கூடியதே. இதனால்தான் சாட்டை அளவு இடம் அதாவது ஒரு மீட்டர் இடம் சுவனத்தில் கிடைப்பது பெறற்கரிய பெரும் பேறு என்று சொல்லப்பட்டுள்ளது! கண்ணொளி இழந்தாலும் பொறுமை இழக்காமல் - இறைவனை ஏசுஷாமல் -விதியை நோகாமல்- பாவங்கள் புரியாமல் - பதறிப் பரிதவிக்காமல் இருக்கும் இறைநம்பிக்கையாளனுக்கே இவ்வளவு உயர்ந்த பரிசை இந்த நபிமொழி அறிவித்துள்ளது! இது மகிழ்ச்சிக்குரிய நற் செய்தியாகும்!

இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும். ஒரு மனிதனின் ஒரு புலனை அல்லாஹ் பறித்துவிடும்பொழுது பெரும்பாலும் வேறு புலன்களுக்கு அதிக ஆற்றலை அல்லாஹ் கொடுத்து விடுகிறான். அது, இழந்த புலனுக்கு ஈடாக அல்லது அந்த மனிதனின் வாழ்க்கையை ஓரளவுக்கு எளிதாக்கக் கூடியதாக அமைந்துவிடுகிறது.

- பார்வை இழந்த மனிதன் எது ஒன்றையும் துல்லியமாக உணர்ந்து சர்வ சாதாரணமாக நடந்து செல்வதை நாம் காணலாம். இதோ! கைத்தடியின் துணைகொண்டு அன்றாடம் வீதிகளில் அவர் உலா வருகிறார், பார்வையுள்ள மனிதர்களைப்போல்! பாதைகளில் அமைந்துள்ள வளைவுகளை, மேடுபள்ளங்களைத் துல்லியமாக உணர்ந்து போய்வருவதும் செயல்படுவதும் நம்மை வியப்பில் ஆழ்த்திவிடுகிறது! இதுவும் அல்லாஹ்வின் பெரும் அருட்கொடையே ஆகும்!

### அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1)பிளேக்: அக்குளிலும் தொடை இடுக்குகளிலும் ஏற்படும் நோவுடன் கூடிய சிறு கொப்பளங்கள். கடுமையாகக் காந்தும் அவற்றைச் சுற்றிலும் கருப்பாக இருக்கும். இவ்வாறு ஏற்பட்டால் இதயம் படபடக்கும் வாந்தியும் வரும்! | ١) الطاعون : بثر مؤلم يخرج غالبا في الآباط مع لهيب و اسوداد حواليه وخفقان القلب و القيء |
| 2)யார் மீது விரும்புகிறானோ அவர்கள்மீது: இறை நிராகரிப்பாளர் மீதும் பெரிய அல்லது சிறிய பாவங்கள் செய்வதில் பிடிவாமான தீயவர்கள் அனைவர் மீதும்! | ٢)على من يشاء: من كافر أو عاص بارتكاب كبيرة أو اصرار علي صغيرة |

### கேள்விகள் - الاسئلة

1) தாவூன் எனும் சொல்லின் பொருளை விவரிக்கவும்.
2) பிளேக் வந்து மரணம் அடைபவருக்கு தியாகியின் கூலி கிடைப்பதன் அடிப்படை என்ன?
3) சுவனத்தில் ஒருசாட்டை அளவு இடம்கூட இவ்வுலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் விடச் சிறந்தது என்பதன் விளக்கம் என்ன?

## பொறுமையும் நற்செய்தியும்

٣٥ – وَ عَنْ عَطَاء بْنِ أَبِى رَبَاحٍ قَالَ : قَالَ لِى ابْنُ عَبَّاسٍ ﷺ : الاَ أُرِيْكَ امْرَأَةً مِنْ أَهْلَ الْجَنَّةِ ؟ فَقُلْتُ : بَلَى، قَالَ : هٰذِهِ الْمَرْأَةُ السَّوْدَاءُ أتَتِ النَّبِيَّ ﷺ فَقَالَتْ: اِنِّي أُصْرَعُ ، وَاِنِّي أَتَكَشَّفُ فَادْعُ اللهَ لِي قَالَ: اِنْ شِئْتِ صَبَرْتِ وَلَكِ الْجَنَّةُ ، وَ أَنْ شِئْتِ دَعَوْتُ اللهَ تَعَالَى أنْ يُعَافِيَكِ فَقَالَتْ: أَصْبِرُ، فَقَالَتْ: اِنِّى أَتَكَشَّفُ ، فَادْعُ اللهَ أَنْ لاَ أَتَكَشَّفَ، فَدَعَا لَهَا – متفق عليه

ஹதீஸ் 35

அதா இப்னு அபீ ரபாஹ் (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் என்னிடம் கேட்டார்கள்: சுவனவாசிகளுள் ஒருவரான ஒருபெண்மணியை உனக்குக் காண்பித்துத் தர வேண்டாமா?" அதற்கு நான், வேண்டும்" என்றேன். அவர்கள் சொன்னார்கள்:

இந்தக் கருப்புநிறப் பெண்மணிதான்! இவள் நபி (ஸல்) அவர்களிடம் சொன்னாள்: சிலபொழுது நான் மயக்கம் போட்டு விழுந்து விடுகிறேன்., என் ஆடைகள் விலகி விடுகின்றன. எனக்காக அல்லாஹ்விடம் துஆ-பிரார்த்தனை செய்யுங்கள்"

அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீ விரும்பினால் இதனைப் பொறுத்துக்கொள்., உனக்குச் சுவனம் கிடைக்கும். அல்லது அல்லாஹ் விடம் நான் பிரார்த்தனை செய்யத்தான் வேண்டுமென நீ விரும்பி னால் உனக்கு நிவராணம் அளிக்க (அல்லாஹ்விடம்) பிரார்த்தனை செய்கிறேன்"

அதற்கு அவள்- (அப்படியாயின்) நான் பொறுத்துக் கொள்கிறேன். என்றாள். மேலும் சொன்னாள்: ஆனால் என் ஆடைகள் விலகி விடுகின்றன., அப்படி விலகாதிருக்க அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் - அவ்வாறு அந்தப் பெண்மணிக்காக நபி(ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்" (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை ~ الشرح

சுவனத்தைப் பற்றிய நற்செய்தி கிடைக்கப் பெற்ற ஒருபெண்மணி யைக் காண்பித்துத் தரவா என்று கேட்கிறார்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், தம் மாணவர் அதா (ரஹ்) அவர்களிடம்! இங்கே நாம் கவனிக்க வேண்டியது இதுதான்: சுவனப் பேறு பெற்றவர்கள் இரண்டு வகையில் உள்ளனர்.

(1) கொள்கையின் அடிப்படையில் சுவனப் பேறு பெற்றவர்கள்.

- அதாவது யார் யார் ஏக இறைவனை ஏற்று வணங்கிவழிபட்டு அவனது ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கி றார்களோ அத்தகைய ஒவ்வொரு வரும் சுவனவாசிகளே! ஆனால் இவ்வாறு பொதுவாகச் சொல்லப்படுமே தவிர இன்ன இன்ன மனிதர்கள் சுவனவாசிகளே என்று எவரையும் குறிப்பிட்டுச் சொல்லப்படமாட்டாது! ஏனெ னில் அவர்களுக்கு எத்தகைய முடிவு ஏற்பட்டது - ஏற்படும் என்பது நமக்குத் தெரியாது., அவர்களின் புற வாழ்க்கை அழகாக இருப்பது போல் அவர்களின் அகமும் தூய்மை யானதுதானா என்பதை நாம் அறியோம்!

ஆனால் நல்லவர்., பயபக்தியாளர் என்று எல்லோராலும் நற்சான்று வழங்கப்பட்ட ஒருநல்லடியார் இறந்தால் அவரைக் குறிப்பிட்டு நாம் சொல்ல லாம்,, இவர் சுவன பாக்கியம் பெறலாமென ஆதரவு வைக்கிறோம் என்று!

(2) இன்னார் இன்னார் எல்லாம் சுவனம் செல்வர் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுபவர்கள்!

- இது நபி (ஸல்)அவர்களால் நற்சான்று வழங்கப்பட்டதன் அடிப்படையிலாகும். தம்முடைய தோழர்களில் சிலருக்கு அத்தகைய நற்சான்றை நபியவர்கள் வழங்கியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ, ஸயீத் பின் ஸைத், ஸஅத் பின் அபீ வகாஸ், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், தல்ஹா பின் உபைதுல்லாஹ், அபூ உபைதா ஆமிர் பின் ஜர்ராஹ், ஜு பைர் பின் அவ்வாம் (ரலியல்லாஹு அன்ஹு ம்) ஆகிய பத்துத் தோழர்கள்!

இதேபோன்று ஸாபித் பின் கைஸ், ஸஅத் பின் முஆத், அப்துல்லாஹ் பின் ஸலாம், பிலால் போன்ற ஸஹாபாக்களுக்கும் நபியவர்கள் அவ்வாறு சொல்லியுள்ளார்கள். இத்தகையவர்களுள் - இந்த நபிமொழியில் கூறப்பட்ட பெண்மணியும் ஒருவர்!

இவர் சாதாரணமான ஒருபெண்தான்., சமுதாயத்தில் எவ்வித மதிப்பும் இல்லாதவள்தான்! ஆயினும் சுவனத்தின் நற்செய்தி கிடைக்கப் பெற்றவள் எனும் வகையில் மிக உன்னதமான அந்தஸ்தைப் பெற்று விடுகிறாள்! இதற்குஅடிப்படை பொறுமைதான்! **நீ விருப்பினால் இதனைப் பொறுத்துக்கொள்., உனக்குச் சுவனம் கிடைக்கும்** என்று நபியவர்கள் சொன்ன பொழுது **(அப்படியாயின்) நான் பொறுத்துக் கொள்கிறேன்** என்று சொல்லி பொறுமையைத் தேர்ந்தெடுத்தாள்., சுவனம் குறித்து நபியவர்கள் வழங்கிய நற்செய்தியைத் தக்கவைத்துக் கொண்டாள்!

இன்றைய காலத்திலும் சிலர் இதுபோன்று திடீர் திடீர் என்று மயக்கம் போட்டு கீழே விழும் சோதனைக்கு உள்ளாகுவதுண்டு. ஆகையால் இது தொடர்பாக மேலும் சில விவரங்களைச் சொல்வது பயனுள்ள ஒன்றே!

முதலாவதாக, இதில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று: நோயினால் ஏற்படுவது! - அதாவது, நரம்புத் தளர்ச்சி அதிகரித்தால் சிலர் இவ்வாறு பாதிக்கப்படுவதுண்டு. இப்படிப்பட்டவர்கள் நரம்பியல் மருத்துவரிடம்

(NER VOUS SPECIALIST) காண்பித்து முறையாக மருத்துவம் செஷ்தால் இதனைக் குணப்படுத்தலாம். குறைந்தபட்சம் கட்டுக்குள் வைத்திருக்கலாம்.

இரண்டாவது ஜின்களின் தீண்டுதலால் ஏற்படுவது! அதாவது மனிதனைச் சிலபொழுது ஜின்னு தீண்டுவதுண்டு. அப்பொழுது அவன் உணர்வற்று கீழே விழுந்துவிடுவான். பிரமைக்குள்ளாவான். சிலபொழுது அவனது நாவின் மூலம் ஜின்னு பேசும்., தீண்டியதற்கான காரணத்தையும் செஷால்லும்.

ஆனால் தீய மனிதர் சிலர் ஜின்னு பிடித்திருப்பதாக நடிப்பது - பேசுவது பற்றியும் அதன் மூலம் தங்களது தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது பற்றியும் பல பொய்யான நிகழ்ச்சிகளை நீங்கள் கேள்விப் படலாம். ஆயினும் உண்மையில் சிலர் ஜின்னுகளின் தீண்டுதலால் பாதிப்புக்கு உள்ளாவதை யாரும் மறுக்க முடியாது! இதோ குர்ஆனில் ஓரிடத்தில்,

قال الله تعالى: الَّذِينَ يَأكُلُوْنَ الرِّبَا لاَ يَقُوْمُوْنَ اِلاَّ كَمَا يَقُوْمُ الَّذِي يَتَخَبَّطُهُ الشَّيْطَانُ مِنَ الْمَسِّ{ سورة البقرة الاية: ٢٧٥}

(ஆனால்) வட்டி உண்பவர்கள் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் கொண்டவன் எழுவதுபோன்றே எழுவார்கள்" (2 : 275) - இந்த வாசகங்களிலும் அவற்றின் சமிஞ்கைளிலும் ஷைத்தான் மனிதனைத் தீண்டு கிறான்., அதனால் அவன் புலனுணர்வு இழந்து விடுகிறான் என்பதற்கு ஆதாரம் உள்ளது.

நபிமொழியிலும் இதற்கு ஆதாரம் உண்டு. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தமது முஸ்னதில் பதிவு செய்துள்ளார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு பயணத்தில் இருந்தார்கள். அப்பொழுது ஒருபெண்ணைக் கடந்து சென்றார்கள். உணர்விழந்து கீழே விழக்கூடிய சிறுவனாகிய அவளுடைய மகனும் அவளுடன் இருந்தான். அந்தப்பெண் அவனை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தாள். நபியவர்கள் அந்த ஜின்னை நோக்கிப் பேசினார்கள். அதுவும் அவர்களிடம் பேசியது. பிறகு அந்தச் சிறுவனை விட்டும் அது வெளியேறியது. அதன் பேரில் சிறுவனின் தாயாகிய அந்தப் பெண் நபி(ஸல்)அவர்களுக்கு அன்பளிப்புச் செய் தாள்" (இதனை ஷைக் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் தரத்திலானது என்று சொல்லி யுள்ளார்கள்)

இன்றைய காலத்தில் முஸ்லிம்கள் சிலர் இத்தயை நோய்களின் சிகிச்சைக்காக மந்திரவாதிகளிடம் செல்வதையும் அவர்கள் தகடு எழுதி தாயத்துகளில் அடைத்து கொடுப்பதை வாங்கி கழுத்துகளிலும் இடுப்பு களிலும் கட்டிக் கொண்டு திரிவதையும் பரவலாகப் பார்க்கலாம்.

அது மட்டுமல்ல எதிர் காலத்தில் இன்ன இன்ன காரியங்கள் நடைபெறும் என்று அந்த மந்திரவாதிகள் சொல்லும் ஜோசியத்தையும் இந்த அப்பாவி மக்கள் நம்புகிறார்கள்! எதிர்காலத்தில் நடைபெறுபவை ஃகைப் எனும் மறைவான உண்மைகள்., அவை இறைவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். எனக்கும் அது தெரியும் என்று ஒருவன் செஷால்வதோ செஷால்வதை நம்புவதோ ஷிர்க் - இணைவைப்பெனும் எனும் கொடிய பாவ மாகும் என்பதை இந்த மக்கள் அறிவதில்லை! அல்லது அறிந்துகொண்டே சிலர் அந்தப் பாவத்தில் மூழ்கிக்கிடக்கிறார்கள்!

இவ்வாறு சூனியத்தையும் ஜோசியத்தையும் தொழிலாகச் செய்து பிழைப்பு நடத்துவோர் இஸ்லாமிய சமுதாயத்திலும் பெருகிக்கிடக்கிறார்கள். அவர்கள் சிலைவணங்கிகளிடமிருந்து இதனைக் கற்றுவந்து அப்பாவி முஸ்லிம்களைக் குழப்பத்திலும் வழிகேட்டிலும் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்! இப்படிப்பட்ட வேடதாரிகள் யாராக இருந்தாலும் அவர்களிடம் செல்வதையும் அவர்கள் சொல்வதை நம்புவதையும் முஸ்லிம்கள் தவிர்த்திட வேண்டும்!

இத்தகைய நிலையில் ஜின்னின் தீண்டுதலில் இருந்து பாதுகாப்பாக இருப்பதன் வழிமுறைகள் குறித்தும் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள துஆ, திக்ர்கள் பற்றியும் ஒருசில விவரங்கள் கூறுவது பயனுள்ளதாக இருக் கும்.

முதலில்: தூய்மையை எப்பொழுதும் பேணிவர வேண்டும். சுத்தம் ஈமானில் பாதி என்கிற நபிமொழியை முன்னர் நாம் விளக்கியுள்ளோம். உடைகளில் - உறுப்புகளில் அசுத்தங்கள் மண்டினால் - ஜின்னுகளின் தீண்டுதல் ஏற்பட இலகுவாகும்! எனவே தினமும் குளித்து, ஆடைகளை மாற்றி சுத்தமாக இருக்க வேண்டும். மேலும் தொழுகைகளைப் பேணிவர வேண்டும். அவற்றை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதில் கவனம் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, குர்ஆன்-ஹதீஸில் வந்துள்ள திக்ர்கள், பாதுகாப்புத்தேடும் வாசுகங்கள் ஆகியவற்றை ஓதிப் பாதுகாப்புத் தேடிக்கொண்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகு ஸலாம் கொடுத்தவுடன் ஓதும் திக்ர்களுடன் ஆயத்துல் குர்ஸியை ஓத வேண்டும். மேலும் தூங்கும் முன்பாகவும் அதை ஓதிவர வேண்டும்.

## ஆயத்துல் குர்ஸி

اللهُ لاَ اِلَهَ اِلاَّ هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ لاَ تَأخُذُهُ سِنَةٌ وَ لاَ نَوْمٌ لَهُ مَا فِيْ السَّموَاتِ وَ مَا فِيْ الاَرْضِ مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهُ اِلاَّ بِاِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيْهِمْ وَ مَا خَلْفَهُمْ وِ لاَ يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ اِلاَّ بِمَا شَاءَ وَسِعَ كُرْسِيُّهُ السَّمَوَاتِ وَ الاَرْضَ وَ لاَيَؤُدُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ

உச்சரிப்பு: **அல்லாஹு லா இலாஹ இல்லா ஹு வல் ஹய்யுல் கய்யூம், லா தஅ்ஃகுதுஹு ஸினது (ன்வ்) வலா நவ்மு(ன்ல்) லஹு மா ஃபிஸ் ஸமாவாத்தி வமா ஃபில் அர்ழ், மன் ஃதல்லதீ யஷ்ஃபஉ இன்தஹு இல்லா பி இஃத்னிஹி, யஅலமு மாபைன அய்தீஹிம் வ மா ஃகல்ஃபஹு ம், வ லா யுஹீத்தூன பி ஷையின்(ம்) மின் இல்மிஹி இல்லா பிமா ஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹு ஸ் ஸமாவாத்தி வல் அர்ழ், வலா யஊதுஹு ஹிஃப்ழுஹு மா வ ஹு வல் அலிய்யுல் அழீம்**

பொருள்: அல்லாஹ் ஒருவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. அவன் நித்திய ஜீவன்., (இப்பேரண்டம் முழுவதையும்) நன்கு நிர்வகிப்பவன். தூக்கமோ சிற்றுறக்கமோ அவனைப் பிடிப்ப தில்லை. வானங்கள், பூமியிலுள்ளவை யாவும் அவனுடையவையே. அவனது அனுமதி இன்றி அவனது முன்னி லையில் யார்தான் பரிந்து பேசமுடியும்! (மனிதர் களாகிய) இவர்களுக்கு முன்னாலிருப்பவற்றையும் இவர் களுக்குப் பின்னால் (மறைவாக) இருப்பவற்றையும் அவன் நன்கு அறிவான். அவன் (அறிவித்துக் கொடுக்க) நாடியதைத் தவிர அவனது ஞானத்தில் இருந்து எவரும் எதையும் புரிந்து கொள்ள முடியாது! அவனது குர்ஸி வானங்கள் பூமி அனைத்தையும் வியாபித்துள்ளது. அவற்றைப் பாதுகாப்பது அவனைச் சோர்வுறச் செய்வ தில்லை. அவன் மிக உயர்ந்தவன்., மகத்துவம் மிக்கவன்!,, (2 : 255) மேலும் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

مَنْ قَرَءَ آيَةَ الْكُرْسِيِّ فِيْ لَيْلَةٍ لَمْ يَزَلْ عَلَيْهِ مِنَ اللهِ حَافِظٌ وَ لاَيَقْرُبُهُ شَيْطَانٌ حَتَّي يُصْبِحَ– البخاري

ஒருவர் இரவில் ஆயத்துல் குர்ஸியை ஓதினால் அவருக்காக அல்லாஹ்வின் கூறார்பில் ஒரு பாதுகாவலர் இருந்து கொண்டே இருப்பார்., அதிகாலை வரை ஷைத்தான் அவரை நெருங்கவே மாட்டான்" (நூல்: புகாரி)

இதேபோல் குல் ஹு வல்லாஹு அஹத் (قُلْ هُوَ اللهُ أَحَدٌ )

குல்அவூது பிரப்பில் ஃபலக் (قُلْ أَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ)

குல் அவூது பி ரப்பிந்நாஸ் (قُلْ أَعُوْذُ بِرَبِّ النَّاسِ )

ஆகிய சூராக்களையும் ஓதிட வேண்டும்.

அத்தகைய தீண்டுதலுக்கு ஒருவன் உள்ளாகிவிட்டால் அதன் பிறகு செய்ய வேண்டியது என்னவெனில், திருக்குர்ஆனின் வசனங்களை அந்த மனிதன் மீது ஓதி ஊதவேண்டும். அந்தத் தீண்டுதலில் இருந்து முற்றாகத் தெளிவு கிடைக்கும் வரையில் அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடும் துஆக் களையும் திக்ர்களையும் ஓதிக்கொண்டிருக்க வேண்டும்!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அதா பின் அபீ ரபாஹ் (ரஹ்)

அதா பின் அபீ ரபாஹ் (ரஹ்) அவர்கள் தாபிஈன் (எனும் நபித் தோழர்களுக்கு அடுத்த) தலைமுறையினர் ஆவார்! மக்கா நகரைச் சேர்ந்த இவர் புகழ்மிக்க மேதைகளுள் குறிப்பிடத்தக்கவர்கள்! தங்களது எண்பதா வது வயதில் ஹிஜ்ரி 114 ம் ஆண்டில் மரணம் அடைந்தார்கள்! அதாரப் பூர்வமான ஆறு நபிமொழித் தொகுப்புகளிலும் பிற நூல்களிலும் இவர்கள் அறிவித்த நபிமொழிகள் பதிவாகியுள்ளன!

## அருஞ்சொற்கள்- شرح الكلمات

| | |
|---|---|
| 1)மயங்கி விழுதல்: உடலின் முக்கிய உறுப்புகளைச் செயலிழக்கச் செய்யும் ஒருவிதமான நோய்., அது முழுமை யான செயலிழப்பாய் இராது. இதன் காரணம்: மூளையின் உட்பகுதிகளிலிலும் உறுப்புகளை இயக்கும் நரம்பு நாளங் | ١) الصرع : في القاموس: علة تمنع الاعضاء النفيسة من أفعالها منعا غيرتام و سببه : شدة تعرض في بطون الدماغ و في |

| | |
|---|---|
| களில் ஏற்படும் அடைப்பு. அது பருமனான தடுப்பினாலோ அதிகமான கொழுப்பி னாலோ ஏற்படுவதாகும். | مجاري الاعصاب المحركةللأعضاء من خلط غليظ أو لزج كثير، |
| 2) எனது ஆடை விலகிவிடுகிறது: உணர்விழந்த நிலை யில் அவளுடைய உடலுறுப்புகள் வெளியே தெரிவது குறித்து அவள் அஞ்சினாள். | ٢) اتكشف : يعني أنها خشيت أن تظهر عورتها وهي لا تشعر |

## கேள்விகள்- الاسئلة

1) சுவன பாக்கியம் பெற்றவர்கள் இருவகையினர் என்று சொல்லப்பட்டது. அதன் விளக்கம் என்ன?
2) ஸாபித் பின் கைஸ், ஸஅத் பின் முஆத், அப்துல்லாஹ் பின் ஸலாம், பிலால் பின் ரபாஹ் (ரலியல்லாஹு அன்ஹு ம்) ஆகிய ஸஹாபாக்களுக்கு நபியவர்கள் சுவனம்கொண்டு நற்செய்தி அளித்த நிகழ்ச்சிகளைக் கூறவும்.
3) ஜோசியம் சொல்வதை அதாவது எதிர் காலத்தில் இன்ன இன்ன காரியங்கள் நடைபெறும் என்று சொல்வதை நம்புவது ஷிர்க் என்பதற்கு ஆதாரங்கள் எழுதவும்.
4) ஆயதுல் குர்ஸி ஓதுவதன் சிறப்பு என்ன? விளக்கம் என்ன?

## இதனினும் மேலான பொறுமை உண்டா?

**٣٦ – وَعَنْ أَبِيْ عَبْدِ الرَّحْمنِ عَبْدِ اللهِ بْنِ مَسْعُوْدٍ ﷺ قَالَ : كَأَنِّيْ أَنْظُرُ الَي رَسُوْلِ اللهِ ﷺ يَحْكِي نَبِيًّا مِنَ الاَنْبِيَاءِ، صَلَوَاتُ اللهِ وَسَلاَمُهُ عَلَيْهِمْ، ضَرَبَهُ قَوْمُهُ فَأَدْمَوْهُ وَهُوَ يَمْسَحُ الدَّمَ عَنْ وَجْهِهِ ، يَقُوْلُ : اللَّهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَإِنَّهُمْ لاَ يَعْلَمُوْنَ – متفق عليه**

சதீஸ் 36

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நபிமார் களில் ஒருநபியின் நிலையை (அவர்களின் மீது அல்லாச்வின் நல்வாழ்த்துக்களும் சாந்தியும் பொழியட்டுமாக) எடுத்துரைத்தது, இப்பொழுதும் என் கண்முன் உள்ளது போன்று இருக்கிறது: அந்நபியை அவருடைய சமூகத்தார் அடித்தார்கள். இரத்தம் வடியும் அளவு அவரைக் காயப்படுத்தினார்கள். அவர் தமது முகத்தில் ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே பிராத்தனை கெஷ்ய்தார்: யா அல்லாஹ்! என் சமூகத்தாருக்கு நீ மன்னிப்பு வழங்குவாயாக! நிச்சயமாக இவர்கள் அறியாதவர்களாய் இருக்கிறார்கள்" நூல்: புகாரி, முஸ்லிம்

### தெளிவுரை ~ الشرح

முற்காலத்து நபிமார்களில் ஒருவரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை இங்கு இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

நபிமார்கள் என்றால் யார்? அல்லாஹ்வின் திருத்தூதர்கள். இறைவனின் தூதுச் செய்தியை இவ்வுலக மக்களிடம் சேர்ப்பிக்கும் பணி அவர்கள்மீது சுமத்தப்பட்டிருந்தது! அந்தப் பணிக்கு அவர்கள்தாம் மிகவும் பொருத்தமானவர்கள் என்பதால் அல்லாஹ் அவர்களைத் தூதர்களாகத் தேர்வு செய்தான்! அல்லாஹ் குர்ஆனில் சுட்டிக்காட்டுகிறான்:

**قال الله تعالى: اللهُ اَعْلَمُ حَيْثُ يَجْعَلُ رِسَالَتَهُ (سورة الانعام ، الآية: ١٢٤)**

தனது தூதுத்துவப் பொறுப்பை யார் மீது சுமத்த வேண்டும் என்பதை அல்லாச் நன்கு அறிந்தவனாக இருக்கிறான்" (6: 124)

ஆம்! அந்தப் பொறுப்பை ஏற்று இறைமார்க்கத்தைத் தொய்வின்றிப் பிரச்சாரம் செய்திட, அதன் பக்கம் உலக மாந்தர்களை அழைத்துக் கொண்டு வந்திட, நன்மை புரியும்படி ஏவித் தீமைகளைத் தடுத்திட, அவ்வழியில் எதிர்படும் இன்னல்களைப் பொறுமையுடன் சகித்திட அந்நபி மார்களே தகுதியும் ஆற்றலும் மிக்கோராய்த் திகழ்ந்தார்கள்! கற்களாலும் சொற்களாலும் தாக்கப்பட்டபோதும் கொண்ட கொள்கையிலிருந்து எள்ளளவும் அவர்கள் பின்வாங்கிடவில்லை., கடமையை கண்ணும் கருத்துமாய் நிறை வேற்றினார்கள்! அவ்வழியில் எதிர்பட்ட துன்பங்களையெல்லாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள்! ஆனாலும் எதிரி களின் எதிர்ப்பு எந்த அளவுக்கு கடுமையாக இருந்ததெனில், அந்நபிமார்களைக் கொலை செய்யவும் அக்கொடியவர்கள் துணிந்தார்கள்! - குர்ஆன் ஓரிடத்தில் இதனை இவ்வாறு வர்ணிக்கிறது:

قَالَ اللهُ تَعَالَى مُخَاطِبًا لِنَبِيِّهُ : وَلَقَدْ كُذِّبَتْ رُسُلٌ مِنْ قَبْلِكَ فَصَبَرُواْ عَلَي مَا كُذِبُوْا وَ أُوْذُوْا حَتَّي أَتَاهُمْ نَصْرُنَا وَلاَ مُبَدِّلَ لِكَلِمَاتِ اللهِ وَ لَقَدْ جَاءَكَ مِنْ نَبَإِ الْمُرْسَلِيْنَ وَ أنِ كَانَ كَبُرَ عَلَيْكَ اِعْرَاضُهُمْ فَانِ اِسْتَطَعْتَ أنْ تَبْتَغِيَ نَفَقًا فِيْ الاَرْضِ أوْ سُلَّمًا فِيْ السَّمَاءِ فَتَأْتِيَهُمْ بِآيَةٍ وَلَوْ شَاءَ اللهُ لَجَعَلَهُمْ عَلِي الْهُدَي فَلاَ تَكُوْنَنَّ مِنَ الْجَاهِلِيْنَ (سورة الانعام ، الآية: ٣٤–٣٥ )

(நபியே) உமக்கு முன்னரும் மக்கள், இறைத்தூதர்கள் பலரை பொய்யர் என்று தூற்றியுள்ளனர். ஆனால் அவ்வாறு பொய்யர்களென்று தாங்கள் தூற்றப்பட்டதையும் தங்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங் களையும் - நமது உதவி அவர்களிடம் வரும்வரை - பொறுமையுடன் அவர்கள் சகித்துக் கொண்டிருந் தார்கள்! அல்லாஹ்வின் வாக்குகளை மாற்றுவதற்கான வல்லமை உடையவர் யாருமில்லை! மேலும் முந்தைய நபிமார்(களுக்கு ஏற்பட்ட துன்பங்)களின் செய்திகள் உமக்குக் கிடைத்தே உள்ளன. இருப்பினும் (உம்மை) இம்மக்கள் புறக்கணிப்பதை சகித்துக் கொள்வது உமக்குக் கடினமாக இருந்தால் - பூமியில் சுரங்கப் பாதை யைத் தேடியோ வானில் ஏணி வைத்து ஏறியோ ஏதேனும் சான்றினைக் கொண்டுவர உம்மால் முடிந்தால் முயற்சி செய்து பாரும்! உண்மையாதெனில் அல்லாச் நாடியிருந்தால் இவர்கள் எல்லோரையும் நிச்சயமாக நேர்வழியில் ஒன்று திரட்டியிருப்பான்! எனவே அறியாதோரில் நீரும் ஒருவராகி விடாதீர்"(6 : 34 - 35)

- கருத்து இதுதான்: சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் போராட்டம் நடைபெற்று, வாக்குவாதம் நிகழ்ந்து அதன் மூலம் சத்தியம் தெளிவாக வேண்டும் எனும் தூதுவப் பணியின் நோக்கத்தின் அடிப்படை யிலேயே நபியே! உமக்கு இந்தச் சோதனைகள் ஏற்பட்டுள்ளன! உம்மை இம்மக்கள் பகைப்பதும் நீர்சொல்வதை எதிரிகள் நிராகரிப்பதும் பகைவர்களால் நீர் தூற்றப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இதனால் தான்! எனவே நீர் இவற்றைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு ஆறுதல் மொழி பகர்கிறான்!

இந்த ரீதியில்தான் - முந்தைய காலத்தில் அனுப்பப்பட்ட ஒரு நபியுடன் அக்காலத்து மக்கள் நடந்து கொண்ட முறையையும் அதற்குப் பதிலாக அந்த நபி மேற்கொண்ட பொறுமையையும் நமக்கு எடுத்துச் சொல்கிறார்கள், பொறுமைக் கடலான பூமான் நபி (ஸல்) அவர்கள்!

அந்தோ! அந்த மக்கள் நேருக்குநேர் தாக்குதல் தொடுத்து விட்டார்கள், அவர்களுக்கு இறைமார்க்கம் போதிக்க வந்த அந்த நபியுடன்! அதோ! அந்நபியின் முகத்தில் ரத்தம் வடிகிறது! ஆனால் பதிலுக்கு என்ன செய்கிறார், அவர்?

இன்று உலகில் நடை பெறுவதென்ன?. ஏதேனும் ஒரு சூழ்நிலையில் ஒருமனிதன் தாக்கப்பட்டால் உடனே அவன் கோபத்தால் கொதித்தெழுவதைப் பார்க்கிறோம்! தன்னைத் தாக்கியவனைப் பழிவாங்கிடத் துடிப்பதைக் காண்கிறோம்!

ஆனால் அந்த நபி அல்லாஹ்வின் தூதராக வந்தவர்! மக்களுக்கு நீதிநெறிகளைப் போதிக்கும் போதகர்! இறைமார்க்கம் காண்பிக்க வந்த மாபெரும் வழிகாட்டி! இத்தகைய இறைப்பணி செய்வதற்காக - மக்கள் சேவை ஆற்றுவதற்காக அவர்களிடம் கூலியோ பணம் காசுகளோ அவர் கேட்டாரா? இல்லை! ஆனாலும் அந்த மக்கள் அவரை எதிர்க்கிறார்கள்., நேருக்குநேர் தாக்குதல் தொடுக்கிறார்கள்.,அவரது முகத்தில் உதிரம் வழிகிறது! அதற்கு அந்நபி என்ன செய்கிறார்?

தமது முகத்தில் வழியும் ரத்தத்தை துடைத்துக் கொண்டே யா அல்லாஹ்! என் சமூகத்தாருக்கு நீ மன்னிப்பு வழங்குவாயாக!" என்றுதான் பிரார்த்தனை செய்கிறார்! அந்த மக்களின் மன்னிப்புக்காகத்தான் அல்லாஹ் விடம் மன்றாடுகிறார்! இத்தகைய பொறுமைக்கு வேறோர் உவமை இவ்வுலகில் உண்டா?

இந்நிகழ்ச்சியை நபி (ஸல்)அவர்கள் நமக்கு எடுத்துச் சொல்வது வேடிக்கைக்காக அல்ல., கதைகள் சொல்லி நேரத்தை வீணாகக் கடத்து வதற்காக அல்ல! இவற்றிலிருந்து நாம் தக்க படிப்பினை பெற வேண்டும்.,அதன்படியே நமது வாழ்க்கையை அமைத்துகொண்டு இறைவழியில் பாடுபட வேண்டும்., அவ்வழியில் எதிர்படும் இன்னல்களையும் ஏச்சுப் பேச்சுக்களையும் நாம் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும் என்ப தற்காகவே எடுத்துரைக்கிறார்கள்! அல்லாச் குர்ஆனில் கூறுவது போன்று:

قال الله تعالى :لَقَدْكَانَ فِي قَصَصِهِمْ عِبْرَةٌ لأولِي الاَبْصَار ( سورة يوسف الآية:١١١)

அவர்களுடைய இந்தச் சரிதைகளில் அறிவுடைய மக்களுக்கு அரிய படிப்பினை உள்ளது" (12 : 11)

ஒரு யுத்தத்தில் நபி (ஸல்) அவர்களது விரல் ஒன்று காயப்படுத்தப்பட்டு இரத்தம் வழிந்தது. அப்பொழுது நபியவர்கள் என்ன கூறினார்களோ அதேபோன்று நாமும் - இறைவழியில் எதிர்படும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு - அவ்வாறு கூறிட வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்: (அந்த விரலை நோக்கி):

هَلْ أَنْتِ اِلاَّ اِصْبَعٌ دَمَيْتِ          وَفِيْ سَبِيْلِ اللهِ مَا لَقِيْتِ

நீ இரத்தம் வழியும் ஓர் விரல்தான்!
நீ அல்லாஹ்வின் வழியில் சந்தித்தது இதுதான்!,,

இந்நபிமொழியின் மூலம் நாம் பெறவேண்டிய நற்சிந்தனை ஒன்றுள்ளது. அழைப்புப்பணியில் நாம் ஈடுபடும் பொழுது தீய மனிதர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் நாம் உள்ளாக நேரிடும். அசத்தியவாத அரசும் அதிகார வர்க்கமும்கூட நம்மைத் தொல்லைக்குள்ளாக்கலாம்., தொலைத்துக்கட்டவும் துணியலாம்! எல்லா வற்றையும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்., சகித்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமல்ல இது போன்ற துன்பங்களையும் கஷ்டங்களையும் நாம் எவ்வாறு கருதவேண்டுமெனில், இவை நம்முடைய பாவங்களை மாய்க்கக் கூடியவை.. நமக்கு உயர் அந்தஸ்துகளை அல்லாச்விடம் பெற்றுத்தரக்கூடியவை என்றே கருத வேண்டும்.

அது மட்டுமல்ல இஸ்லாமிய அழைப்புப் பணியை நிறைவேற்றுவதில் நம்மிடம் பலகுறைபாடுகள் உள்ளன என்பதே உண்மை! நமது வாய்மையில் குறைபாடு! நாம் மேற்கொள்ளும் நோக்கிலும் போக்கிலும் குறைபாடு! இதனாலேயே இத்தகைய தொல்லைகள் நம்மைச் சூழ்கின்றன! எனவே முதலில் அல்லாஹ்விடம் நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நமது கூஷிந்தனையையும் செயலையும் சீராக்கிக்கொள்ள வேண்டும். அழைப்புப் பணியில் நமது அணுகு முறையைத் திருத்திக் கொள்ள வேண்டும்!

மாறாக கஷ்டங்களைக் கண்டவுடன் நாம் கலக்கம் அடைந்து பொறுமை இழந்துவிடக்கூடாது! நமக்கு எதற்கு இந்த வம்பு என்று சொல்லி நழுவிச் செல்லக்கூடாது., பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது! நல்லவர்கள் களத்திலிருந்து ஒதுங்கிவிட்டால் தீயவர்களின் கைதான் ஓங்கும். தீமைகள்தான் பெருகும்! நன்மைகள் அருகிவிடும்! அந்நிலை ஏற்படலாகாது! உலக வாழ்க்கை என்பது சிலநாட்கள்தாம்! அழியும் அற்ப ஆயுள் கொண்டதுதான்! எனவே களத்தை விட்டும் நல்லோர்கள் விலகிச் சென்றுவிடக்கூடாது. சீர்திருத்தப் பணியில் இருந்து நின்று விடக்கூடாது.

நபி (ஸல்) அவர்கள் முந்தைய நபிமார்களில் ஒருநபியின் நிலையை அன்றொரு நாள் எடுத்துரைத்தது இன்றும் என் கண் முன்னால் உள்ளது போன்றுள்ளது என்று இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், சொல்லி யிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும், நபி (ஸல்) அவர்களைப் பற்றி தோழர்கள் அறிவிக்கும் செய்தி ஆதாரப்பூர்வமானது என்று வலுப்படுத்தும் பாணியுமாகும் இது. மேலும் அந்தஅளவுக்கு அந்நிகழ்ச்சி அவர்களது மனத்தில் ஆழமான பாதிப்பை ஏறப்படுத்தியுள்ளது என்பதையும் காட்டுகிறது!

## அறிவிப்பாளர் அறிமுகம்

## இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள்

நபியவர்களின் தோழரும் பணியாளருமான அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றவர்கள். பத்று யுத்தத்தில் கலந்துகொண்ட முக்கிய தோழர்களில் குறிப்பிடத் தக்க வர்கள். நபி(ஸல்) அவர்களிடம் நேரடியாக எழுபது அத்தியாயங்களைக் கற்று மனப்பாடம் செய்திருந் தார்கள். ஒருதடவை நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

எவர், குர்ஆனைப் புத்தம் புதிதாக- இறக்கியருளப்பட்டது போன்று ஓத விரும்புகிறாரோ அவர் இப்னு உம்மி அப்து (இப்னு மஸ்வூத்) அவர்கள் ஓதும் முறைப்படி ஓதட்டும்" இத்தகைய பல எண்ணற்ற சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் தங்களின் 60 வது வயதில் ஹிஜ்ரி 32 ம் ஆண்டில் மதீனாவில் மரணம் அடைந்தார்கள்.

## கேள்விகள் - الاسئلة

1) நபிமார்கள் என்போர் யார்? அவர்களின் பணிகள் என்ன?
2) ஒருநபியின் வாழ்வில் நடைபெற்றதாக நபி (ஸல்) அவர்கள் விவரித்த நிகழ்கூஷ்கூஷி என்ன?
3) இதன் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன?
4) அறிவிப்பாளர் பற்றி நீ அறிந்திருப்பதென்ன?

## ஏன் இந்தத் துன்பங்கள்?

٣٧ – وَ عَنْ أَبِى سَعِيْدٍ وَ أَبِىْ هُرَيْرَةَ رضي الله عنهما عن النبي ﷺ قَالَ : مَا يُصِيْبُ الْمُسْلِمَ مِنْ نَصَبٍ وَلاَ وَصَبٍ وَلاَ هَمٍّ وَلاَ حَزَنٍ وَلاَ أَذًى وَلاَ غَمٍّ ، حَتَّى الشَّوْكَةِ يُشَاكُّهَا اِلاَّ كَفَّرَ اللهُ بِهَا مِنْ خَطَايَاهُ متفق عليه – والوصب : المرض

ஹதீஸ் 37

அபூ ஸயீத் குத்ரி (ரலி) மற்றும் அபூ ஹுரைரா (ரலி) ஆகிய இருவரும் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: களைப்பு, நோய், கவலை, துயரம், துன்பம், துக்கம் ஆகிய ஒன்றின் மூலம் அல்லது உடலில் முள் குத்துவது வரையில் எதன் மூலம் ஒரு முஸ்லிமுக்குத் துன்பம் ஏற்பட்டாலும் அல்லாஹ் அதனை அவனுடைய தவறுகளுக்குப் பரிகாரமாக்காமல் இருப்பதில்லை" (புகாரி, முஸ்லிம்) - அல் வஸப்: நோய்)

وَعَنِ ابن مَسْعُوْدٍ ﷺ قَالَ :{ دَخَلْتُ عَلي النبي ﷺ وَهُوَ يُوْعَكُ فَقُلْتُ : يَا رَسُوْلَ اللهِ اِنَّكَ تُوْعَكُ وَعْكًا شَدِيْدًا قَالَ: أَجَلْ اِنِي اُوْعَكُ كَمَا يُعوْعَكُ رَجُلاَنِ مِنْكُمْ قُلْتُ : ذَلِكَ أَنَّ لَكَ أَجْرَيْنِ؟ قَالَ: ذَلِكَ كَذَلِكَ مَا مِنْ مُسْلِمٍ يُصِيْبُهُ أَذًي .، شَوْكَةٌ فَمَا فَوْقَهَا اِلاَّ كَفَّرَ اللهُ بِهَا سَيِّئَاتِهِ ، وَ حُطَّتْ عَنْهُ ذُنُوْبُهُ كَمَا تَحُطُّ الشَّجَرَةُ وَرَقَهَا } متفق عليه – والوعك : مغث الحمي وقيل : الحمي

ஹதீஸ் 38

இப்னு மஸ்ஊத் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்பொழுது அவர்கள் காய்ச்சலுக்கு உள்ளாகி இருந்தார்கள். நான் கேட்டேன்: அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு இவ்வளவு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறதே?' அதற்கு நபியவர்கள் சொன்னார்கள்: ஆம்! உங்களில் இருவருக்கு ஏற்படும் காய்ச்சல் எனக்கு ஏற்பட்டுள்ளது!"

நான் கேட்டேன்: அதற்கு பகரமாக உங்களுக்கு இருமடங்கு கூலி உண்டு அல்லவா?' - நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ஆம்! அது அப்படித்தான்! எந்த ஒரு முஸ்லிமானாலும் சரி, அவருக்கு ஒரு தொல்லை வந்தால் - ஒரு முள்ளோ அதை விடவும் பருமனான ஒன்றோ அவரது உடலைக் குத்தினால்கூட அதனை அவடைய தீமைகளுக்குப் பரிகார மாக்காமல் அல்லாஹ் விடுவதில்லை. மேலும் மரம் தன்னுடைய இலைகளை உதிர்ப்பதுபோன்று அந்த முஸ்லிமின் பாவங்கள் அனைத்தும் அவரை விட்டும் களையப்படுகின்றன!" (புகாரி)

மூலத்தில் அல்வஅக் (الوعك) எனும் வார்த்தை ஆளப்பட்டுள்ளது. அதன் பொருள்: காய்ச்சலின் தாக்கம் அல்லது காய்ச்சல்.

### தெளிவுரை الشرح

உலகில் ஒருமனிதனுக்கு ஏற்படுகிற துன்பங்கள் அவனுடைய பாவங்களுக்குப் பரிகாரமாகின்றன. மேற் சொன்ன இரண்டு நபிமொழிகளிலும் இது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்கு அல்லாஹ் வழங்கும் அருட்கொடை என்றுதான் இதனைச் சொல்ல வேண்டும். துன்பங் களைக் கொடுத்து மனிதனைச் சோதிப்பதும் சோதிக்காதிருப்பதும் இறைவனின் அதிகாரத்திற்கு உட்பட்ட வையே! அப்படி இருக்க அந்தத் துன்பங்களின் மூலம் பாவங்களைப் போக்குகிறான்., பரிகாரம் அளிக்கிறான் என்றால்அது அவனதுஅருட்கொடை அன்றி வேறென்ன!

இவ்வுலகில் மனிதன் என்றைக்கும் சந்தோசமாகவே வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. இன்பம் ஒருநாள் என்றால்., துன்பம் ஒருநாள்! லாபம் ஒருநாள் என்றால்., நஷ்டம் ஒருநாள்! இவ்வாறு இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவதுதான் உலக வாழ்க்கை! எத்தனை விதமான துன்பங்கள், கஷ்டங்கள்! உடல் மற்றும் உள்ளம் ரீதியான துன்பங்கள் ஒருபக்கம் என்றால் குடும்பம் மற்றும் சமுதாய ரீதியான துன்பங்கள் மறு பக்கம்! இவ்வாறு சுழன்றுவரும் துன்பங்களை எண்ணிக் கணக்கிடவே முடியாது! இறைவிசுவாசிகளானாலும் நிராகரிப்பாளர்களானாலும் - அனைவரும் துன்பங்களுக்கு ஆட்பட்டே ஆக வேண்டும்!

ஆனால் ஓர் இறைவிசுவாசியைப் பொறுத்தவரையில் அவனுடைய அனைத்து விவகாரங்களும் நன்மை களாகவே அமைந்து விடுகின்றன. வாழ்க்கையில் எது வந்தாலும் அதனை அவன் எதிர்கொள்வது ஈமான்

எனும் விசுவாசத்தின் அடிப்படையில்தான்! துன்பம் வந்தால் அதனைக் கொடுத்தது இறைவன்தான்., அதன் மூலம் நம்மைச் சோதிக்கிறான் என பொறுமையுடன் அதைத் தாங்கிக்கொள்கிறான். அதன் பேரில் அவனுக்குக் கூலி கிடைக்கிறது. அது நன்மையாகிவிடுகிறது.

நீங்கள் உண்மையான இறைவிசுவாசி எனில் வாழ்க்கையில் நீங்கள் எதிர் கொள்ளும் எது ஒன்றாலும் அதனை ஈமானுடன் எதிர்கொள்ளுங்கள். எந்த ஒரு கவலையாயினும் - காலில் முள் குத்தியதால் ஏற்படும் நோவாயினும் சரியே, அதன் மூலம் வீணாக அல்லாஹ் நம்மைத் துன்பப்படுத்துகிறானே என்று விதியை நொந்து கவலைப்படாதீர்கள். இறைவனின் எந்த ஒரு செயல்பாடு என்றாலும் அது குறித்து உங்கள் மனம் திருப்த்தி அடைந்து பொறுமை காத்தால் அதனை அல்லாச் உங்கள் பாவங்களுக்குப் பரிகார மாக்குகிறான். உங்கள் அந்தஸ்தை உயர்த்துகிறான். இது அவனது பெரும் அருட்கொடையே!

இத்துடன் இன்னொன்றையும் கவனியுங்கள். பொறுமை கொள்வதுடன் அதற்கான கூலியை எதிர்பார்த்திருந்தால் அதற்கும் நன்மை கிடைக்கிறது.

ஆனால் துன்பத்திற்குள்ளாகும் மனிதன் சிலபொழுது இதனை மறந்து விடுகிறான். அதாவது, பொறுமைக்கான கூலியை எதிர்பார்க்க மறந்து விடுகிறான். அந்த மறதிக்குக் காரணம் வந்துற்ற துன்பத்தால் அவனது மனம் துவண்டு விடுவதே! ஆகையால் பொறுமை கொள்வதுடன் கூலியை எதிர்பார்க்க மறந்ததால் அவனுக்குக் கிடைப்பது. பாவப்பரிகாரம் எனும் பயன் மட்டும்தான்! எப்படியானாலும் துன்பம் வந்தால் ஏதேனும் வகையில் அது லாபமாகத்தானே அமைகிறது! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) களைப்பு | ١) نصب : تعب |
| 2)தொல்லை : மனதிற்குப் பிடிக்காத ஒவ்வொரு கஷ்டமும் | ٢) أذى: كل ما لا يلائم النفس |
| 3) துக்கம்: இது துயரத்தை விடவும் கடுமையானது. துக்கத்திற் குள்ளாகும் மனிதன் அதன் கடுமை தாளாமல் மயக்கம் போட்டு விழுந்து விடுகிறான். | ٣) غم : هو أبلغ من الحزن يشتد بمن قام به حتي يصير يغمي عليه |
| 4) உடலைத் தைக்கக்கூடிய | ٤) يشاكها : تشكه وتدخل في جسده |
| 5) அவனுடைய பாவங்களில் சிலவற்றை : ஏனெனில் இவற்றின் மூலம் பரிகாரம் காண முடியாது சில பாவங்கள் உள்ளன. பிறர் உரிமையைப் பறித்தல், பெரும் பாவங்கள் போன்று! | ٥) من خطاياه : بعض خطاياه |
| 6)ஆம்: நஅம் என்பதைப் போன்றது இது. இமாம் அஃக்பஷ் கூறுகிறார்: உண்மைப் படுத்துவதில் நஅம் ஐ விட அஜல் சிறந்தது. வினவுவதில் அதை விட நஅம் சிறந்தது. | ٦) أجل : جواب مثل نعم قال ألاخفش: الا أنه أحسن من نعم في التصديق ونعم أحسن منه في الاستفهام |
| 7) காய்ச்சலின் தாக்கம்: அதன் அசல் பொருள்: அடித்தல்., ஆனால் கடுமையில்லாத அடி. | ٧) المغث:اصابة الحمي وأصله الضرب و ليس بالشديد |

## கேள்விகள் - الاسئلة

1) வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் பாவங்களுக்குப் பரிகாம் ஆகுவதை ஆதாரத்துடன் விளக்கவும்.

2) துன்பங்களுக்குள்ளாவது ஓர் இறைவிசுவாசியைப் பொறுத்தவரையில் ஓர் அருட்கொடை என்பதன் கருத்து என்ன?

3) அறிவிப்பாளர்கள் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## தற்கொலை செய்தால் மட்டும் தொல்லை தீர்ந்துவிடுமா, என்ன?

**٣٩ – وَ عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : مَنْ يُرِدِ اللهُ بِهِ خَيْرًا يُصِبْ مِنْهُ } رواه البخاري – وَضَبَطُوْا يُصَبْ: بِفَتحِ الصَّادِ وَ كَسْرِهَا**

**٤٠ – وَعَنْ أَنَسٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : {لا يَتَمَنَّيَنَّ أَحَدُكُمْ الْمَوْتَ لِضُرٍّ أَصَابَهُ ، فَانْ كَانَ لاَ بُدَّ فَاعِلاً فَلْيَقُلْ: اللَّهُمَّ أَحْيِنِي مَا كَانَتِ الْحَيَاةُ خَيْرًا لِيْ وَ تَوَفَّنِي أَذَا كَانَتْ الْوَفَاةُ خَيْرًا لِي متفق عليه**

ஹதீஸ் 40

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: எவருக்கு அல்லாச் நன்மையை நாடுகிறானோ அவரைத் துன்பத்திற்குள்ளாக்குவான்" (நூல்: புகாரி)

(இமாம் நவவி அவர்கள் சொல்கிறார்கள்) : يصب என்பதிலுள்ள الصاد க்கு فتح கொடுத்தும் كسر கொடுத்தும் இருவிதமாகவும் உச்சரித்திருக்கிறார்கள்.

ஹதீஸ் 40

அனஸ் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: உங்களில் யாரும் தனக்கு ஏற்பட்ட துன்பத்தின் காரணத் தால் மரணத்தை விரும்ப வேண்டாம். அவ்வாறு விரும்பிடத்தான் வேண்டு மெனில் அவர் இவ்வாறு பிரார்த்தனை செய்யட்டும்: யா அல்லாஹ்! உயிர் வாழ்வது எனக்கு நலமுடையதாக இருக்கும் காலமெல்லாம் என்னை உயிர் வாழச் செய். மரணம் எனக்குப் பயனளிப்பதாக இருந்தால் என்னை மரணம் அடையச் செய்!" (நூல் : புகாரி)

### தெளிவுரை ~الشرح

வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வது கடமை என்பதை இந்நபிமொழிகள் விளக்குகின்றன.

முதல் ஹதீஸில் يصب எனும் அரபிச் சொல் ஆளப்பட்டுள்ளது. இதனைச் செய்வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் பயன்படுத்தலாம். இமாம் நவவி (ரஹ்) அவர்களும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். செய் வினை எனில் அதற்கு இவ்வாறு பொருள் அமையும்: அல்லாச் அவரைத் துன்பத்திற்குள்ளாக்குவான். - அதாவது, அந்தமனிதனின் விதியில் துன்பத்தை ஏற்படுத்தி, அவன் பொறுமை கொள்கிறானா? அல்லது பொறுமை இழந்து பதறிப்பரிதவிக்கிறானா? என்று அல்லாச் அவனைச் சோதிப்பான்.

செயப்பாட்டுவினை எனில், இவ்வாறு பொருள் அமையும்: அதனால் அவன் துன்பத்திற்கு உள்ளாக்கப்படு வான். - இதில் இரண்டு நிலைகளும் வரும். அல்லாஹ் அவனுக்குத் துன்பங்களைக் கொடுப்பான்., மற்றவர் களாலும் அவனுக்குத் துன்பங்கள் நேரும். இவ்வாறு இது பொதுவான அர்த்தத்தைத் தருகிறது.

ஆயினும் வேறு சில அறிவிப்புகளின் மூலம் இதன் கருத்து இவ்வாறு நிர்ணயமாகிவிடுகிறது: அல்லாஹ் எந்த மனிதனுக்கு நலன் நாடுகிறானோ அந்தமனிதனின் பொறுமையை சோதிப்பான். அதற்காக அவனுக்குத் துன் பங்களைக் கொடுப்பான். அப்பொழுது அவன் பொறுமைகாத்திட வேண்டும். அதற்கான கூலியை அல்லாஹ் விடம் எதிர்பார்க்க வேண்டும்.

பொறுமையை மேற்கொள்ளவில்லையெனில் எந்த நன்மையும் இல்லை. மனித வாழ்வில் எத்தனையோ துன்பங்கள் வருகின்றன. அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டால்தான் அல்லாஹ் அந்த மனித னுக்கு நலன் நாடியுள்ளான் என்று பொருள்!

இறைவன் மீது விசுவாசம் கொள்ளாத - அவனை நிராகரிக்கும் மனிதர்களுக்குப் பல்வேறு துன்பங்கள் கொடுக்கப்படுகின்றன., அதன் பிறகும் நிராகரிப்புக் கொள்கையில்தான் அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள். அதிலிருந்து விலகுவதில்லை. அதிலேயே மரணம் அடைகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் எந்த நன்மையும் நாடவில்லை என்பதில் ஐயமில்லை!

ஆனால் ஒரு முஸ்லிம் உடைய வாழ்க்கையில் துன்பந்துயரங்கள் வரும்பொழுது இறைவிசுவாசத்தின் அடிப்படையில் அவற்றை அவன் பொறுத்துக்கொள்கிறான்., பொறுமை காக்கிறான். அதனால் துன்பங்கள் யாவும் அந்த இறைவிசுவாசிக்கு நன்மையாகின்றன! அதாவது அவனுடைய பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அவை பரிகாரமாகின்றன. (இதன் விவரம் முன்பு சென்றுள்ளது.)

மட்டுமல்ல இத்துன்பங்கள் உலக ரீதியானவைதான். அவை நீடிக்கக் கூடியவை அல்ல. நாட்கள் செல்லச் செல்ல துன்பத்தின் கடுமை குறைந்து இறுதியில் அது இல்லாமலாகி அதன் பிறகு இன்பம் வருவதைக் காண லாம்! ஆனால் மறுவுலகத்தின் துன்பம் - தண்டனை என்பது நீடித்தது., நிரந்தரமானது! (அல்லாச் அனைவரையும் அதிலிருந்து பாதுகாப்பானாக) இந்நிலையில் உலக ரீதியான துன்பங்களை உங்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக்கி மறுவுலகத்தின் அத்தகைய நீடித்த தண்டனையை அல்லாச் அகற்றுகிறான் என்றால் அது உங்களுக்குக் கிடைத்த பெரும் நன்மையே அன்றி வேறென்ன?

இரண்டாவது நபிமொழியின் கருத்து இதுதான்: தனக்கு ஏற்பட்ட துன்பத்தினால் மரணத்தை எவரும் விரும்பக்கூடாது. அப்படி விரும்புவதை விட்டும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். துன்பத்திற்குள்ளா கும் மனிதன் அதைச் சகித்துக்கொள்ள இயலாமல் அதனைப்பெரும் கஷ்டமாகக் கருதி - மரணம் வர வேண் டுமே., மரணம் வர வேண்டுமே என்றோ இறைவா! என்னை மரணம் அடையச் செய்துவிடு என்றோ பிரார்த் தனை செய்யக் கூடாது! மனிதரில் சிலர் வாய்திறந்து இவ்வாறு சொல்லி அழுவாகள். அல்லது அவர்களது மனம் அவ்வாறு விரும்பும்! இரண்டுமே கூடாது! ஏனெனில் அவனுக்கு வந்த அந்தத் துன்பம் சிலபொழுது நன்மையாக அமையலாம்!

ஆனால் துன்பத்தின்பொழுது யா அல்லாஹ்! எனக்குப் பொறுமை கொடுத்து உதவிசெய் என்று பிராத் தனை செய்யலாம். அப்பொழுது பொறுமையை மேற்கொள்ள அல்லாஹ் உதவி செய்வான். அது நன்மை யாக அமையும்.

மாறாக மரணமே! வா, வா என்று அழைத்தால் அந்த மரணம் தீமை விளைவிக்கக் கூடியதாக ஆகி விடலாம்! ஏனெனில் மரணத்ததைத் தேடிச் செல்லும் ஒவ்வொரு மனிதனும் -மரணம் அடையும் ஒவ்வொரு ஆத்மாவும் நிம்மதி அடைந்து விடுவதில்லை! மரணத்திற்குப் பிறகு மனிதன் மண்ணறையைச் சந்திக்க வேண்டி யதிருக்கிறது. அங்கு- உலகில் அவன் செய்த தீமைகளுக்குக்குரிய தண்டனையைச் சுவைக்க நேரிடலாம்!

ஒரு மனிதன் மரணத்தை விரும்புவதில் -யா அல்லாஹ்! எனது வாழ்க்கையை சீக்கிரம் முடித்து விடு என்று அவசரப்படும் நிலை உள்ளது. அப்படி மரணத்திற்கு அவசரப்படுவதால் நிறைய நன்மைகள் அவனுக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றன! உலகில் இன்னும் சில காலம் அவன் உயிர் வாழ்ந்தால் சிலபொழுது பாவங் கள் குறித்து மனம் வருந்தி- பட்சாதாபப்பட்டு மன்னிப்புக் கோரி அல்லாஹ்வின் பக்கம் மீளலாம்! அல்லாஹ் அவனுக்கு மன்னிப்பு வழங்கலாம்! உலகில் இன்னும் அதிக நல்லமல்கள் செய்யும் பாக்கியம் கிடைக்கும்.

ஆக, உங்களுக்கு ஒரு துன்பம் வந்து விட்டால் உடனே மரணமே! வா! என்று அழைக்காதீர்கள்! அது கூடாது!

இந்த இடத்தில் நாம் சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவெனில், மரணத்தை அழைப்பதையோ அதற்கு ஆசைப்படுவதையோ நபியவர்கள் தடை செய்திருக்கும்பொழுது தற்கொலை செய்து கொள்கிறானே, துர்ப் பாக்கியவான் அதனை என்னவென்று சொல்வது!!

மதியீனர்கள் சிலர் தற்கொலை செய்துகொண்டு விலைமதிப்பற்ற தமது உயிரை மாய்த்துக்கொள்வதைக் காண்கிறோம். இன்று மேலைக் கலாச்சாரத்தின் பிடியில் சிக்கியுள்ள பல நாடுகளில் - பல பகுதிகளில் தற்கொலைகள் பரவலாக நிகழ்கின்றன! ஏதேனும் நோயோ குடும்பத்தில் தீர்க்கமுடியாத சிக்கலோ வந்து விட்டால் - எடுத்த முயற்சி தோல்வி அடைந்துவிட்டால் - விரும்பியவளைத் திருமணம் செய்யப் பெற்றோர் தடைசெய்தால் - அதனால் அவமானத்திற்குள்ளானல் உடனே குறுக்குவழியில் நிம்மதி அடைந்து விடலாமென மரணத்தை வர வழைத்துக்கொள்கிறார்கள்! தூக்கில் தொங்குவோர் பலர். கத்தி போன்றவற்றால் தம்மைத் தாமே குத்திக்கொண்டு மரணப் படுகுழியில் வீழ்வோர் சிலர்! இன்னும் எத்தனையோ பேர் உயரமான இடங் களில் இருந்து கீழே விழுந்தும் விஷம் அருந்தியும் மடிகிறார்கள்!

துன்பம் தாளாமல் மரணத்தை விரும்பி வர வழைத்துக்கொள்ளும் இவர்களுக்கு நிம்மதி கிடைக்கிறதா என்றால் அதுதான் இல்லை., இந்தத் துன்பத்தை விடவும் வேறொரு கொடுமையான வேதனையை நோக்கித்தான் அவர்களின் பயணம் அமைகிது!

ஆம்! தற்கொலை செய்துகொண்டவர்களுக்கு நரகத்தில் கடும் வேதனை காத்திருக்கிறது. இது குறித்த எச்சரிக்கை வேறுசில நபிமொழி அறிவிப்புகளில் காணலாம். அதாவது, எதனைப் பயன்படுத்தித் தற்கொலை செய்து கொண்டார்களோ அதனைக் கொண்டே நரக நெருப்பில் அவர்களுக்கு வேதனை கொடுக்கப்படும். அது நிரந்தரமாகவும் இருக்கும்.

கத்தி அல்லது வாளைக் கொண்டு அவன் தற்கொலை செய்திருந்தால் அதே ஆயுதத்தைக் கொண்டு நரகத்தில் அவன் குத்தப்படுவான்! நஞ்சை அருந்தி தற்கொலை செய்திருந்தால் அதனை அருந்திய வண்ணம் நரகத்தில் தொடர் வேதனையை அவன் அனுபவித்துக் கொண்டிருப்பான்! மலையிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்திருந்தால் நரகத்தில் ஒரு மலை அவனுக்கென நாட்டப்படும்., அதிலிருந்து அவன் கீழே விழுந்து துன்பப்பட்டுக்கொண்டே இருப்பான்!

ஒரு துன்பம் அல்லது ஒருகஷ்டம் வந்ததெனில் அதிலிருந்து விடுபடும் நோக்கில் மரணத்தை அழைக்கக் கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் எனும்பொழுது ஒருமனிதன் மரணத்தை விரைவாக அழைத்துக்கொள்வதற்கென்று தற்கொலை செய்து கொள்வதும் அதனால் சகித்துக்கொள்ளமுடியாத நரக வேதனைக்கு ஆளாவதென்பது கொடுமை யினும் பெரிய கொடுமையன்றோ!

இங்கு இன்னொன்றும் நமது கவனத்திற்குரியது. நபி (ஸல்)அவர்கள் ஒருவிஷயத்தைத் தடைசெய்தார்கள் எனில் அதற்கு மாற்று ஏற்பாடு ஏதேனும் இருந்தால் அதனை விளக்கிக்கொடுப்பது அவர்களது வழக்கம்! அதில் குர்ஆனின் வழிகாட்டலைப் பின்பற்றுதலும் உள்ளது. ஆம்! அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قال الله سبحانه : يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا لاَ تَقُوْلُوْا رَاعِنَا وَ قُوْلُوْا انْظُرْنَا ( سورة البقرة الاية : ١٠٤)

இறைவிசுவாசும் கொண்டவர்களே! (எங்கள் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று உணர்த்துவதற்காக) ராஇனா என்று சொல்லாதீர்கள். உன்ளுர்னா என்று சொல்லுங்கள்" (2:104)

- ஏனெனில் ராஇனா என்பது எங்கள் இடையரே என்பது போன்ற சில தவறான அர்த்தங்களையும் கொடுக்கக்கூடிய வார்த்தையாகும். இத்தகைய தவறான அர்த்தத்தில் யூதர்கள் நபியவர்களை அழைத்துப் பரிகாசம் செய்பவர்களாய் இருந்தனர்! இதனை முன்னிட்டே இந்த வசனம் இறக்கியருளப் பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மரணத்தை விரும்பக் கூடாது என்று தடுத்த நபி (ஸல்) அவர்கள் அதற்கான மாற்று ஏற்பாட்டை விளக்கித்தருகிறார்கள். அதுதான் இந்நபி மொழியில் கூறப்பட்டுள்ள பிரார்த்தனை!

ஒரு பாதையை - மாற்று ஏற்பாட்டை நபி(ஸல்) அவர்கள் உங்களுக்குத் திறந்து வைக்கிறார்கள். அது ஆபத்தில்லாத பாதை! துன்பம் தாளாமல் மரணத்தை விரும்புவதென்பது பொறுமையின்மையினால்தானே! அல்லாச் நிர்ணயித்த விதியை அவன் பொருந்திக் கொள்ளாமல் பதறிப் பரிதவிப்பதைத்தான் அது காட்டுகிறது! ஆனால் நபி(ஸல்) அவர்கள் காண்பித்துத் தந்த பிரார்த்தனையில் அது இல்லை. அதில் - மனிதன் தன்னுடைய அனைத்து விவகாரங்களையும் அல்லாச்விடம் ஒப்படைத்து நன்மை எதுவோ அதைச் செய்யும்படி கேட்கிறான்! எனெனில் எதிர்காலம் பற்றி மனிதனுக்கு எதுவும் தெரியாது. எல்லாம் அறிந்தவன் இறைவன் ஒருவனே! குர்ஆன் பல இடங்களில் இதனைக் குறிப்பிடுகிறது:

كما قال الله : قُلْ لاَ يَعْلَمُ مَنْ فِي السَّمَاوَاتِ وَ الأَرْضِ الْغَيْبَ اِلاَّ اللهُ (سورة النمل الآية: ٦٥)

(நபியே! இவர்களிடம்) கூறும்: அல்லாச்வைத் தவிர வானங்கள் மற்றும் பூமியில் உள்ள எவரும் மறைவான உண்மைகளை அறியமாட்டார்" (27 : 65)

قال تعالى: وَمَا تَدْرِى نَفْسٌ مَاذَا تَكْسِبُ غَدًا وَمَا تَدْرِي نَفْسٌ بِأيِّ أَرْضٍ تَمُوْتُ (لقمان الأية: ٣٤)

மேலும் எந்த மனிதனும் அவன் நாளை என்ன சம்பாதிக்கப் போகிறான் என்பதை அறிவதில்லை. தான் எந்தப் பூமியில் மரணம் அடைவோம் என்பதும் எந்த மனிதனுக்கும் தெரியாது" (31 : 34) எனவே வாழ்வானாலும் மரணமானாலும் - எல்லாவற்றையும் பேரறிவாளனாகிய அந்த இறைவனிடம் ஒப்படைத்து விடுவதே மிகவும் சாலச் சிறந்தது!

இந்த அடிப்படையில் உங்கள் நண்பர் ஒருவரின் நீண்ட ஆயுளுக்காக நீங்கள் பிரார்த்தனை செய்ய விரும்பினால் - அல்லாஹ், உமது ஆயுளை அவனுக்குக் கீழ்ப்படிந்து வாழும் நிலையுடன் நீட்டிப்பானாக! எனும் வார்த்தையைச் சேர்த்துக் கொள்வது அவசுயம். அப்பொழுதுதான் அவர் நீண்ட நாட்கள் வாழ்வதில் நன்மைகள் இருக்க முடியும்.

ஒருவர் கேள்வி கேட்கலாம்: ஈஸா நபியின் தாயார் மர்யம் (அலை) அவர்கள் மரணத்தை விரும்பி பிரார்த்தனை செய்ததாக குர்ஆனில் வந்துள்ளதே., அது ஏன்? குர்ஆனின் அந்த வசனம் இதுதான்:

كما قال تعالى حكاية عن مريم : يَا لَيْتَنِى مِتُّ قَبْلَ هَذَا وَ كُنْتُ نَسْيًا مَنْسِيًّا ( سورة مريم الآية: ٢٣ )

"அப்பொழுது அவர் (மர்யம்), அந்தோ! நான் இதற்கு முன்னரே மரண மடைந்து முற்றிலும் மறக்கடிக்கப்பட்டுப் போயிருக்கக்கூடாதா! என்று கூறலானார்" (19 : 23)

இதற்கான பதில்: முதலில் ஓர் அடிப்படையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். முந்தைய சமுதாயத் தினருக்கு வழங்கப்பட்ட ஷரீஅத்தை எப்பொழுது ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாமெனில் நம்முடைய ஷரீஅத் அதனை அங்கீகரித்தால்தான்! ஏனெனில் முந்தைய நபிமார்களுடைய ஷரீஅத் சட்டங்களை நம்முடைய ஷரீஅத் மாற்றிவிட்டது!

இரண்டாவதாக, மர்யம் (அலை)அவர்கள் மரணத்தை விரும்பவில்லை. அவர்களுக்கு வந்துற்ற சோத னைக்கு முன்னரே மரணம் அடைந்திருக்கக் கூடாதா என்றுதான் அப்படி ஆதங்கத்துடன் கூறினார்கள். இனி அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் சரியே! எனவே மரணத்தை அவர்கள் அவசரப்பட்டு அழைக்க வில்லை!

ஆக, எந்தஒரு முஸ்லிமும் தீன் - இறைமார்க்கம் தொடர்பாக எவ்விதக் குழப்பத்திற்கும் உள்ளாகாமல் - இறைவனின் உவப்பைப் பெறும் வகையில் மரணம் அடைந்திட வேண்டும் என்பதே கருத்து! இதோ நபி யூசுப் (அலை) அவர்களது பிராத்தனையைக் கவனியுங்கள்:

أَنْتَ وَلِيِّ فِى الدُّنْيَا وَالأَخِرَةِ تَوَفَّنِي مُسْلِمًا وَ أَلْحِقْنِي بالصَّالِحِيْنَ ( سورة يوسف ألآية: ١٠١ )

(இறைவா!) நீதான் இம்மையிலும் மறுமையிலும் என் பாதுகாவலன். என்னை இஸ்லத்தின் மீது மரணிக்கச் செய்வாயாக! மேலும் என்னை ஒழுக்க சீலர்களுடன் சேர்த்துவைப்பாயாக" (12 : 101)

இது, துன்பத்திலிருந்து விடுபடுவதற்காக மரணத்தைக் கேட்டுச் செய்த பிரார்த்தனை அல்ல. மாறாக இஸ்லாத்தின் மீது மரணிக்கச் செய்யும்படியாகக் கேட்கிறார்கள்! இறுதி முடிவு நல்ல விதமாக அமையும் படியாகக் கேட்கிறார்கள்!

நீங்களும் இவ்வாறு பிரார்த்தனை செய்யலாம். யா அல்லாஹ்! என்னை இஸ்லாத்தின் மீதும் ஈமான் மீதும் ஏகத்துவத்தின் மீதும் இக்லாஸ் - வாய்மையின் மீதும் மரணிக்கச் செய்வாயாக! என்றோ, யா அல்லாஹ்! நீ என்னைப் பொருந்திய நிலையில் என்னை மரணிக்கச் செய்வாயாக! என்றோ பிரார்த்தனை செய்யுங்கள்! அது ஆகுமானதே!

ஆக! ஒரு மனிதன், கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாகி அதனால் பொறுமை இழந்து மரணத்தை விரும்புவது வேறு., அல்லாஹ் நம்மைப் பொருந்தி ஏற்றுக்கொள்கிற ஒருகுறிப்பிட்ட தன்மையுடன் மரணத்தை விரும்புவது வேறு! இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளதைப் புரிந்துகொள்ள வேண்டும். முந்தியதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். இரண்டாவது ஆகுமானதே!

## அருஞ்சொற்கள் ~ شرح الكلمات

| | |
|---|---|
| 1) துன்பம்: மனிதனுக்கு ஏற்படும் தீங்கு | ١) الضر : ما يترل بالانسان من سوء |
| 2) யா அல்லாஹ்: யா எனும் விளிச் சொல் போக்கப்பட்டு அதற்கப் பகரமாக மீம்அதன் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. அதிக அளவி லான உபயோகமே இதற்குக் காரணம். | ٢) اللهم : أصله يا الله ، والميم عوض عن ياء النداء وقدحـــذفت لكثـــرة الاستعمال |
| 3) இருக்கும் காலமெல்லாம்: மா எனும் சொல் தொழிற்பெயர் மற்றும் காலத்தின் கருத் தைக் கொடுக்கிறது. | ٣) ما كانت : ما هنا مصدرية ظرفية |

## கேள்விகள் الاسئلة

1) இந்த நபிமொழியில் செய்வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் பயன்படுத்தலாம் என்று உள்ள வார்த்தை எது? இருவகை உபயோகத்தின்படி அதன் கருத்தை விளக்கவும்.

2) துன்பங்களின் மூலம் இறைவிசுவாசி எவ்வாறு நன்மை அடைகிறான் என்பதை விளக்கவும்.

3) தற்கொலை செய்பவர்களுக்கு மறுமையில் கொடுக்கப்படும் தண்டனையை விவரிக்கவும்.
4) மரணத்தை விரும்பக்கூடாது எனத் தடுத்த நபியவர்கள் ஒரு பிரார்த்தனையைக் கற்றுத் தந்தார்கள்., அதனை எழுதி அதிலுள்ள தத்துவத்தையும் விளக்கவும்.
5) மர்யம் (அலை) அவர்கள் ஏன் மரணத்தை விரும்பி துஆ செய்தார்கள்? எனும் கேள்விக்கு என்ன பதில்?
6) யூசுப் நபி செய்த பிரார்த்தனை என்ன? அதைத் தொடர்ந்து ஒரு முஸ்லிமுக்கு அனுமதிக்கப்பட்ட பிரார்த்தனை என்ன?

## அதோ! வெற்றி., வெகு தூரத்தில்...!

٤١ – وَعَنْ اَبِى عَبْدِ اللهِ خَبَّاب بْنِ الاَرَتِّ ﷺ قَالَ :{ شَكَوْنَا اِلَي رَسُوْلِ اللهِ ﷺ وَهُوَ مُتَوَسِّدٌ بُرْدَةً لَهُ فِى ظِلِّ الْكَعْبَةِ ، قُلْنَا : اَلاَ تَسْتَنْصِرُ لَنَا ؟ اَلاَ تَدْعُوْ اللهَ لَنَا ؟ قَالَ : قَدْ كَانَ مَنْ قَبْلَكُمْ يُؤْخَذُ الرَّجُلُ فَيُحْفَرُ لَهُ فِى الأَرْضِ فَيُجْعَلُ فِيْهَا ، ثُمَّ يُؤْتَى بِالْمِنْشَارِ فَيُوْضَعُ عَلَي رَأسِهِ فَيُجْعَلُ نِصْفَيْنِ وَ يُمْشَطُ بِأَمْشَاطِ الْحَدِيْدِ مَا دُوْنَ لَحْمِهِ وَعَظْمِهِ ، مَا يَصُدُّهُ ذَلِكَ عَنْ دِيْنِهِ ، وَاللهِ لَيُتِمَّنَّ اللهُ هَذَا الأَمْرَ حَتَّى يَسِيْرُ الرَّاكِبُ مِنْ صَنْعَاءَ اِلَي حَضَرَ مَوْتَ لاَ يَخَافُ الاَّ اللهَ وَ الذِّئْبَ عَلَى غَنَمِهِ ، وَلَكِنَّكُمْ تَسْتَعْجِلُوْنَ } رواه البخارى

وَفِي رِوَايَةٍ : وَهُوَ مُتَوَسِّدٌ بُرْدَةً وَقَدْ لَقِيْنَا مِنَ الْمُشْرِكِيْنَ شِدَّةً

ஹதீஸ் 41

கப்பாப் பின் அல் - அரத்து (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: (இஸ்லாத்தின் எதிரிகள் எங்களுக்கு இழைத்த கொடுமை குறித்து) இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் நாங்கள் முறையிட்டோம். அப்பொழுது அவர்கள், கஃபாவின் நிழலில், தங்களது சால்வையைத் தலையணையாக வைத்துக் கொண்டு (ஓய்வாக) சாய்ந்திருந் தார்கள். நாங்கள் சொன்னோம்: எங்களுக்காக (அல்லாஹ்விடம்) தாங்கள் உதவி கோரமாட்டீர்களா? எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யமாட்டீர்களா?” அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: உங்க ளுக்கு முன்னிருந்த சமுதாயத்தினரின் நிலைமை எவ்வாறு இருந்ததெனில், அவர்களில் ஒருவர் (இறைவன் மீதுவிசுவாசம் கொண்டதற்காக) பிடிக்கப்படுவார். அவருக்காகப் பூமியில் குழி தோண்டப்பட்டு அதில் அவர் நிறுத்தப்படுவார். பிறகு ரம்பம் தருவிக்கப்பட்டு அதை அவரது தலையில் வைத்து அறுத்து இரண்டு துண்டு களாகப் பிளக்கப்படுவார். மேலும் (பழுக்கக் காய்ச்சிய) இரும்புச் சீப்புகளைக் கொண்டு ஒருவரது மேனி கோதப்பட்டு அவரது சதையின் உட்பகுதி பிய்க்கப்பட்டு எலும்புவரை அது சென்றடையும்! அப்படியெல்லாம் செய்வது அவரை அவரது இறைமார்க்கத்தில் இருந்து பிறழச் செய்திடாது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாச் இந்த மார்க்கத்தை நிச்சயம் வெற்றிபெறச் செய்வான். எந்த அளவுக்கெனில், ஒருபயணி (யமன் தேசத் தலைநகர்) ஸன்ஆவில் இருந்து ஹளரமௌத் என்ற ஊர் வரையில் நடைபயணமாகச் செல்வார். (வழியில்) அல்லாஹ்வைத் தவிர அல்லது அவரது ஆட்டின் விஷயத்தில் ஓநாயைத் தவிர வேறுயாருக்கும் அவர் அஞ்ச வேண்டியதிருக்காது! ஆயினும் நீங்கள்தாம் (பொறுமை காக்காமல்) அவசரப்படுகிறீர்கள்!” (நூல்: புகாரி)

மற்றோர் அறிவிப்பில் உள்ளது: அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் சால்வையைத் தலைக்கு வைத்து (ஓய்வாகச்) சாய்ந்திருந்தார்கள். இறைவனுக்கு இணைவைத்து வணங்குவோரிடம் இருந்து கடுந்துன்பங் களை நாங்கள் சந்தித்து வந்தோம்.

### தெளிவுரை الشرح

இஸ்லாமியப் பிரச்சாரத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் மீது நிராகரிப்பாளர்கள் இழைத்த அநீதிகளும் கொடுமைகளும் அளவிட முடியாதவை! அவை தாங்கிக்கொள்ள முடியாத அளவு கடுமையாகவும் கொடுமை யாகவும் இருந்தன! அதுபற்றி நபி (ஸல்) அவர்களிடம் தோழர்கள் பலதடவைகள் முறையிட்டு, அதற்கு நபியவர்கள் ஆறுதல் அளித்த நிகழ்ச்சிகள் பல! அவற்றுள் ஒன்றுதான் இது.

கப்பாப் (ரலி) அவர்கள் முறையிட்டபொழுது, முந்தைய காலத்தில் இறைவிசுவாசிகள் சந்தித்த - இதனினும் கொடுமையான சில துன்பங்களை எடுத்துக்கூறித் தம் தோழர்களின் உள்ளங்களைத் தேற்றுகிறார்கள் நபி (ஸல்) அவர்கள்!

அந்தோ! எத்துணை பயங்கரம்! கேட்டாலே குலைநடுங்கவைக்கக்கூடிய கொடுமைகள்! பூமியில் குழிகள் தோண்டி அவற்றில் அந்த இறைவிசுவாசிகளை நிறுத்தி ரம்பத்தால் இரு துண்டுகளாக அறுத்து வதை செய்திருக்கிறார்கள். இதேபோல் இரும்புச் சீப்புகளைப் பழுக்கக் காய்ச்சி அவற்றை அவர்களின் மேனியில் பாய்ச்சி சதைவேறு எலும்பு வேறாய்ப் பிய்த்துப் பிராண்டியிருக்கிறார்கள்! அந்த மக்களின் உள்ளங்களிலிருந்து ஈமான் எனும் விசுவாசத்தைப் பறித்திட வேண்டும் எனும் வெறியுடன் இவ்வாறெல்லாம் கொடுமை செய்தார்கள்! ஆயினும் அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேறியதா என்றால் அதுதான் இல்லை! அந்த மக்கள் தம்முடைய கொள்கையில் எஃகு போன்ற உறுதியுடன் நிலைத்திருந்தார்களே தவிர., எள்ளவும் பின்வாங்கவில்லை!

இவ்வாறு தம் தோழர்களுக்குப் பொறுமையூட்டிய நபி (ஸல்) அவர்கள்,

அல்லாச்வின் மீது சத்தியமாக! அல்லாஹ் இந்த மார்க்கத்தை நிச்சயம் வெற்றியடையச் செய்வான்." என்று கூறி எதிர் காலத்தில் இந்த இஸ்லாமிய மார்க்கத்திற்கு அல்லாச் மகத்தான வெற்றியை நல்குவான் என்று முன் னறிவிப்பும் செய்கிறார்கள்.

நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எத்துணை உறுதியுடன் சொல்கிறார்கள், பாருங்கள்! அதுவும் எந்தச் சூழ்நிலையில்? முஸ்லிம்கள் மிகவும் பலவீனப்பட்டிருந்த - நிராகரிப்பாளர்களின் ஆதிக்கமே கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த சூழ்நிலையில்!

ஆனால் என்னே ஆச்சரியம், பாருங்கள்! எதிரிகள் கடுமையாகத் துன்புறுத்திக் கொண்டிருந்த - அதனை எதிர்க்கவோ தடுத்து நிறுத்தவோ எந்த சக்தியும் இல்லாதிருந்த - ஆதரவற்ற சூழ்நிலையில் நபியவர்கள் முன்னறிவிப்பு செய்ததுபோலவே படிப்படியாக சூழ்நிலைகள் மாற்றமடைந்து எல்லாம் சாதகமாக நடந்தேறின! ஆம்! நபியவர்களும் முஸ்லிம்களும் முன்னெடுத்துச் சென்ற இஸ்லாமியப் பிரச்சாரப் பணிக்கு மாபெரும் வெற்றியை அல்லாஹ் அளித்தான்!

ஒருபயணி (யமன் தேசத் தலைநகர்) ஸன்ஆவில் இருந்து ஹளரமௌத் என்ற ஊர் வரை நடை பயணமாகந் நெல்வார். (வழியில்) அல்லாஹ்வைத் தவிர அல்லது அவரது ஆட்டின் விஷயத்தில் ஓநாயைத் தவிர வேறு யாருக்கும் அவர் அஞ்ச வேண்டியதிருக்காது!"

என்று நபியவர்கள் கூறினார்களே அதுபோன்று - இஸ்லாம் வெற்றி பெற்று அதன் வழிகாட்டல்கள் அனைத் தும் மக்களின் வாழ்வில் மலர்ந்த பொழுது மக்கள் அச்சமற்ற, அமைதியான சூழ்நிலையைக் கண்டார்கள். அவர்களது வாழ்வில் அது ஒருவசந்த காலமாய் மலர்ந்தது! நபிமொழிகளில் சொல்லப்பட்டது போன்று ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது!

இன்றும்கூட, உலகை வழிநடத்திச் செல்லும் அதிகாரம் இஸ்லாத்தின் கையில் கிடைக்கும் காலங்களில் - கிடைக்கும் பகுதிகளில் கூடீட்டம் ஒழுங்கைச் சீராகப் பராமரிப்பதும் மக்களின் வாழ்வில் நீதியையும் அமைதி யையும் நிம்மதியையும் நிலைநாட்டுவதுமே இஸ்லாமிய ஆட்சியாளர்களின் - இந்த இஸ்லாமியச் சமுதாயத்தின் தனிப்பெரும் சிறப்பாகவும் அடையாளமாகவும் திகழ்வதைக் காணலாம்!

ஆக! நபி(ஸல்) அவர்கள் செய்த இதுபோன்ற முன்னறிவிப்புகள் அனைத்தும் - அவர்கள் உண்மையான இறைத்தூதர் தாம்., ரஸூல்தாம் என்பதற்கு அல்லாஹ் வழங்கிய தெளிவான சான்றுகளாகத் திகழ்கின்றன.

இந்நபிமொழி - எதிரிகளால் இழைக்கப்படும் இதுபோன்ற துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள் வது கடமை என்பதற்கு ஆதாரமாகும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது மெய்யான முதுமொழி ஆகும்!

அல்லாஹ், இவ்வுலகில் பல்வேறு வகையில் விசுவாசிகளைச் சோதிக்கிறான். அவற்றுள் ஒன்றுதான் நிராகரிப்பாளர்கள் மூலம் ஏற்படும் சோதனையும்! அவர்கள் இறைவிசுவாசிகளுடன் கடுமையான பகைமைப் போக்கை மேற்கொண்டு அவர்களைக் கொலைசெஷய்யவும் துணிவார்கள். முற்காலத்து நிராகரிப்பாளர்கள் அன்றைய நபிமார்களையே கொலை செய்யவில்லையா?

வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள்! இதோ! யூத சமுதாயம், தங்களிடம் வருகை தந்த எத்த னையோ நபிமார்களை மிகவும் மூர்க்கத் தனமாக கொலை செய்துள்ளதே! நபிமார்கள் என்போரின் உயர் அந்தஸ்தை நாமெல்லாம் அறிவோம். அவர்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேன்மக்கள் - மனிதருள் மாணிக்கங்கள்., இறைவிசுவாசூிகள் அனைவரினும் ஏன், இறைவழிப்போராளிகள் - அழைப்பாளர்கள் அனை வரை விடவும் சிறந்தவர்கள். அவர்களுக்கே இத்தகைய எதிர்ப்பும் சோதனைகளும் ஏற்பட்டதுண்டென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

எனவே முஸ்லிம்களுக்கு என்றைக்கும் பொறுமையே மிகமிக அவசியம். துன்பங்களைக் கண்டு துவளவோ பதற்றமடையவோ கூப்பாடு போடவோ கூடாது. மாறாக எஃகு போன்ற உறுதியுடன் இமயம்போல் நிமிர்ந்து

நிற்க வேண்டும். இறுதி வெற்றி இறைபக்தர்களுக்கே என்பதில் எள்ளவும் ஐயமில்லை. நிச்சமாக அல்லாஹ் வின் உதவி பொறுமையாளர்களுத்தான்!

துன்பங்களைச் சகித்துக்கொண்டு தொடர்ந்து பொறுமையைக் கடைப்பிடித்தால் -ஒற்றுமையுடனும் கட்டுக் கோப்புடனும் தூரநோக்குடனான திட்டங்கள் தீட்டியும் செஷயல்பட்டால் இலட்சியத்தை எளிதில் அடையலாம். ஆனால் தலைமையில்லாத அல்லது தலைமைக்குக் கீழ்ப்படியாத- தன்னிச்சையான செயல்பாடுகள் எவ்விதப் பயனும் அளிக்காது., இதேபோல் உணர்வுகளைத் தூண்டிவிட்டுக் காரியமாற்றும் சுய நலப்போக்கும் வீழ்ச் சிக்குத்தான் வழிவகுக்கும்.

சத்தியத்திற்கு எதிராகச் செயல்படுவோர் எத்துணை உறுதியான கட்டுக் கோப்புடன் திட்டங்கள் தீட்டிச் செயல்படுகிறார்கள் என்பதைப் பாருங்கள்! ஆனால் அதற்கு எதிரணியில் என்ன நடக்கிறது? எதனையும் மேலோட்டமாகச் சிந்தித்துச் செயல்படுபவர்கள்தாம் இங்கு அதிகம். எடுத்த தற்கெல்லாம் உணர்கூஷி வகூப்பட்டுக் காரியத்தைக் கெடுத்து விடுகிறார்கள். எப்பொழுதும் எல்லா விவகாரங்களிலும் எதிர்மறையான - வெறுப்பான அணுகு முறையைத்தான் கடைப்பிடிக்கிறார்கள்! எதிர்மறை அணுகு முறையால் எதையாவது இவர்கள் சாதிக்கிறார்களா என்றால் எதுவும் இல்லை! அது மட்டுமல்ல, சிலபொழுது இப்படிப்பட்டவர்கள் செய்யும் சிறுதவறுகூட அவர்களுடைய எல்லாமுயற்சிகளையும் பாழாக்கி விடுகிறது! (அவர்கள் ஏதாவது உருப் படியான உழைப்புகள் - முயற்சிகள் செய்திருந்தால்!)

ஆனால் இஸ்லாத்தின் வளர்ச்சியையும் வெற்றியையும் இலட்சியமாகக்கொண்ட இறைவிசுவாசிகள் உறுதி யான பொறுமையை மேற்கொள்வார்கள். நிதானமாகச் சிந்தித்து தூரநோக்குடனான திட்டங்கள் தீட்டிச் செயல்படுவார்கள். இவ்வாறு செஷயல்படுவதன் மூலம் எதிரிகளின் சதித்திட்டங்களை வீழ்த்துவதுடன் அவர் களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் நீர்த்துப் போகவும் செய்திடலாம்!

நல்லோர்களுக்கு - நன்னெறியின் பக்கம் மக்களை அழைப்பவர்களுக்கு கேடுவரவேண்டும்., எப்படியாவது அவர்களை வீழ்த்திடவேண்டும் என்பதுதான் எதிரிகளின் எதிர்பார்ப்பு! அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப் பதற்காகவே சூழ்ச்சி வலைகள் பின்னுகிறார்கள்! ஆத்திர மூட்டும் வகையிலான காரியங்களை செய்கிறார்கள்., உணர்ச்சிகளைக் காயப்படுத்தும் சொற்கணைகளை சுழற்றிச் சுழற்றி வீசுகிறார்கள். இறைவிசுவிசிகள் கோபப் பட வேண்டும்., அவர்களிடையே உணர்ச்சிக் கொந்தழிப்பு ஏற்பட வேண்டுமென்று ஆவலுடன் எதிர் பார்க்கி றார்கள்!

தூரநோக்குடன் சிந்தித்தால் எதிரிகளின் இத்தகைய விஷமத்தனமான சூழ்ச்சியினை எவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியும்! ஆனால் அவசர புத்தியுடன் அணுகினால்- பேரும் புகழும் சில அரசியல் ஆதாயமும் கிடைத்தால்போதும் என்கிற சுயநலக் கண்ணோட்டத்துடன் செஷயல்பட்டால் இதயம் குருடாகி விடும்! சிந்தனை செயலிழந்து விடும்., அப்படிப்பட்டவர்களுக்கு எதுவும் புலப்படாது.,

அது மட்டுமல்ல எடுத்ததற்கெல்லாம் ஆத்திரப்பட்டு அவசர கோலத்தில் செயல்பட்டால் எதையும் சாதிக்க முடியாது. அதன் எதிர்விளைவையும் கவனிக்க வேண்டும். அவசர கோலத்தில் ஏதாவது செய்துவிட்டால் அதைச் சாக்காகக்கொண்டு நம்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டும் திடீர் தாக்குதல் தொடுத்தும் நம்மை வென்றடக்கத் தயாராக இருகிறார்கள் எதிரிகள்! நம் சமுதாய மக்களின் சொத்துகளுக்குப் பெருத்த நாசத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள்! இதற்கு இடமளிக்காத வகையில் செயல் படுவதே புத்திசாலித்தனம்!

இங்கு நபி(ஸல்)அவர்கள், முற்காலத்தில் வாழ்ந்த இறைவிசுவாசிகள் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளைச் சுட்டிக்காட்டி ஆறுதலூட்டிப் பொறுமை காக்குமாறு போதிக்கிறார்கள் என்றால் அதன் பொருள், தீமைகளைக் கண்டு மௌனமாக இருக்க வேண்டும்.,எதுவும் செய்யாமல் - பேசாமல் எல்லாக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பதல்ல. மாறாக, தீயோரின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்குத் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட வேண்டும்தான். ஆனால் மேலே சொன்னது போன்று - அதற்குரிய முறை யில் அது அமைந்திட வேண்டும். நிதா னமும் பொறுமையும் நீடித்த முயற்சியும் உழைப்பும் மிகமிகத் தேவை! வெற்றிக்கான பாதை தூரமானது. லட்சியப் பயணம் கரடுமுரடானது. அதிலும் சோதனைப்படலம் இப்பொழுது தான் தொடக்கம் என்றிருந்தால் மிகுந்த பொறுமை அவசியத்திலும் அவசியம் என்பதை மறந்திடலாகாது!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## கப்பாப் பின் அல் - அரத்து (ரலி) அவர்கள்

கப்பாப் பின் அல்-அரத்து (ரலி) அவர்கள் முதன்முதலில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முன்னணியினரில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆம்! ஆறாவது நபராக அல்லாச்வின் மார்க்கத்தில் அவர்கள் இணைந்தார்கள்! அன்று

முதல் எதிரிகளின் சீண்டல்களின் படலம் அவர்களையும் விட்டு வைக்க வில்லை! பத்று உள்ளிட்ட எல்லா யுத்தங்களிலும் கலந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றார்கள்! பின்னாட்களில் கடுமையாக நோய்வாய்ப்பட்டு கூஃபா நகரில் குடியேறிய கப்பாப் (ரலி) அவர்கள் அங்கேயே ஹிஜ்ரி 37 ம் ஆண்டு மரணம் அடைந்தார்கள்! அன்னாரின் மூலம் 32 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) சால்வை: கோடுகளிட்ட மேலங்கி, போர்த் திக்கொள்ள அதனைப் பயன் படுத்தலாம். | ١) البردة : كساء مخططة يلتحف به و جمعها : بُرُدٌ |
| 2)தலையணையாகவைத்திருந்தார்கள். | ٢) متوسد : جاعل البردة تحت رأسه |
| 3)அது அவரைத் தடுத்திடவில்லை. | ٣) ما يصده : ما يمنعه |
| 4) இந்த மார்க்கத்தை: இஸ்லாத்தை. | ٤) هذا الامر : دين الاسلام |
| 5) பயணி: பயணிக்கு, வாகனத்தில் செல்பவர் என்று குறிப்பிடுவது பெரும் பாலான வழக்கத் தின்படியிலாகும். | ٥) الراكب:المسافروجري التقييد بالراكب علي الغالب |

## கேள்விகள் – الاسئلة

1) முற்காலத்து இறைவிசுவாசுஷிகளுக்கு ஏற்பட்டதாக இந்த நபிமொழியில் சொல்லப்பட்ட சோதனைகள் சிலவற்றை விவரிக்கவும்.
2) இறைவிசுவாசிகளுக்கு - அன்றும் இன்றும் சோதனைகள் ஏற்படுவது ஏன்? அதில் இறைவன் நாடியுள்ள தத்துவம் என்ன?
3) நபி (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்பு என்ன? அது எவ்விதம் நிறைவேறியது?
4) மேலோட்டமாகச் சிந்திப்பவர்கள் அவசர கோலத்தில் செயல்படுவதால் ஏற்படும் கெடுதிகளை விவரிக்கவும்.
5) அறிவிப்பாளர் வரலாறு குறித்து சிறு விளக்கம் எழுதவும்.

## பொறுமைக்கு ஓர் அழகிய முன்மாதிரி!

٤٢ – وَعَنْ ابْنِ مَسْعُوْدٍ ﷺ قَالَ :{ لَمَّا كَانَ يَوْمُ حُنَيْنٍ آثَرَ رَسُوْلُ اللهِ ﷺ نَاسًا فِي الْقِسْمَةِ أعْطَي الأَقْرَعَ بْنَ حَابِسٍ مَائَةً مِــنَ الأَبلِ وَأعْطَي عُيَيْنَةَ بْنَ حِصْنٍ مِثْلَ ذَلِكَ وَأعْطَي نَاسًا مِنْ أشْرَافِ الْعَرَبِ و آثَرَهُمْ يَوْمَئِذٍ فِى الْقِسْمَةِ فَقَالَ رَجُلٌ : وَاللهِ اِنَّ هَــذِهِ قِسْمَةٌ مَا عُدِلَ فِيْهَا ، وَمَا أرِيْدَ فِيْهَا وَجْهُ اللهِ ، فَقُلْتُ : وَاللهِ لأُخْبِرَنَّ رَسُوْلَ اللهِ ﷺ ، فَأتَيْتُهُ فَأخْبَرْتُهُ بِمَا قَالَ، فَتَغَيَّرَ وَجْهُهُ حَتَّي كَانَ كَالصِّرْفِ . ثُمَّ قَالَ : فَمَنْ يَعْدِلُ اذَا لَمْ يَعْدِلِ اللهُ وَ رَسُوْلُهُ ؟ ثُمَّ قَالَ : يَرْحَمُ اللهُ مُوْسَى قَدْ أوْذِيَ بِأكْثَرَ مِنْ هَذَا فَصَــبَرَ } فَقُلْتُ: لاَجَرَمَ لاَ أرْفَعُ اِلَيْهِ بَعْدَهَا حَدِيْثًا . متفق عليه

وَقَوْلُهُ: كالصرف : هو بكسر الصاد المهملة : وهو صبغ أحمر

ஹதீஸ் 42

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுனைன் யுத்தம் நடைபெற்றபொழுது ஃகனீமத் (அதாவது, போரில் கைப்பற்றப்பட்ட) பொருட் களின் பங்கீட்டில் நபி(ஸல்) அவர்கள் சுஷில மனிதர்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அக்ரஉ பின் சாபிஸ் என்பாருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுத்தார்கள். உயைனா பின் சிஸ்ன் என்பாருக்கும் அதுபோல் கொடுத்தார்கள். மேலும் அரபு மக்களில் சிறப்பு அந்தஸ்து பெற்றிருந்த வேறு சிலருக்கும் வழங்கினார்கள். அந்நாளின் பங்கீட்டில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். (இது குறித்து) ஒருவர் சொன்னார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது நீதி கடைப்பிடிக்கப்படாத பங்கீடாகும். இறை உவப்பு இதில் நாடப்படவில்லை.

நான் சொன்னேன்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் இதனை நிச்சயம் நான் தெரிவிப்பேன்" -அவ்விதமே நான் நபி(ஸல்)அவர்களிடம் வந்தேன். அந்த மனிதர் சொன்னதைத் தெரிவித்தேன்.

அப்பொழுது நபியவர்களின் முகம் - சிகப்புச் சாயம் போல் மாறிவிட்டது! பிறகு நபியவர்கள் சொன்னார்கள்: அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நீதி செலுத்தவில்லையானால் பிறகு யார்தான் நீதி செலுத்துவார்? பிறகு சொன்னார்கள்: மூஸாவுக்கு அல்லாச் அருள் புரிவானாக. அவருக்கு இதனை விடவும் அதிகமாகத் துன்பம் இழைக்கப்பட்டது., ஆயினும் அவர் பொறுமை காத்தார்!

(எனக்குள்) நான் சொல்லிக்கொண்டேன்: நிச்சயமாக! இனி எந்த விவகாரத்தையும் நபியவர்களிடம் கொண்டு செல்ல மாட்டேன், (நூல்: புகாரி, முஸ்லிம்) - அஸ் ஸிர்ஃப்: சிகப்புச் சாயம்

## தெளிவுரை الشرح

ஹுனைன் யுத்தம் என்பது தாயிப் வாசிகளுடன் மேற்கொள்ளப்பட்ட போராகும். இது மக்கா வெற்றிக்குப் பிறகு நடந்தது. இதில் வெற்றி பெற்றது நபியவர்களும் முஸ்லிம்களுமே! இந்தப் போரில் எதிரிகளிடம் இருந்து நிறைய பொருள்கள் கைப்பற்றப்பட்டன. ஒட்டகங்கள், ஆடுகள், தங்கம் - வெள்ளி நாணயங்கள் எனப் பலவகைப் பொருள்கள் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன.

பிறகு முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு நபி (ஸல்) அவர்கள் மதீனா திரும்பும் வழியில் ஜுஅரானா என்ற இடத்தில் தங்கினார்கள். இது தாயிபில் இருந்து மக்கா வழியில் ஹரம் (புனிதப்) பகுதியின் எல்லை யிலுள்ள ஓர் இடம். நபி (ஸல்) அவர்கள் அங்கு தங்கியிருந்த பொழுது - போரில் கைப்பற்றப்பட்ட பொருட் களைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாத்தைத் தழுவிய பல்வேறு அரபு குலங்களின் தலைவர்களுக்கு அதிக அளவு வழங்கினார்கள். இதற்குக் காரணம் இருந்தது. அவர்கள் இஸ்லாத்திற்குப் புதியவர்கள்,, அவர்களின் இதயங்களை இணக்கமாக்க வேண்டும்., ஈர்க்க வேண்டும் என்பதுதான் அது!

ஆனால் இந்நோக்கத்தை அறியாத சிலர் இது குறித்து பலவாறு பேசுஷினார்கள்., ஒருவர் சொன்னார்:

<u>அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது நீதி கடைப்பிடிக்கப்படாத பங்கீடாகும். இறை உவப்பு இதில் நாடப்படவில்லை"</u>

நபி (ஸல்) அவர்களே நேரடியாக ஈடுபட்டுப் பங்கிட்டுக்கொடுத்தது பற்றியே இவ்வாறு அவதூறு பேசினார். உலகாசையும் ஷைத்தானிய ஊசாட்டமும் எந்த அளவுக்கு ஒருமனிதனை அழிவிலும் வழிகேட்டிலும் தள்ளிவிட வல்லது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்!

இது சாதரணமான வார்த்தை அல்ல.,ஈமானைப் பறித்துவிடும் வார்த்தை! இறைநிராகரிப்பில் ஆழ்த்தக்கூடிய வார்த்தை! அல்லாச்வும் ரஸுலும் நீதி செலுத்தவில்லை என்பதற்கு என்ன பொருள்? அவ்விருவரும் அநீதி இழைத்துவிட்டார்கள் என்பதுதானே பொருள். (அல்லாச் காப்பா னாக) இது குஃப்ர் - இறைநிராகரிப்பு அன்றி வேறென்ன? ஆனால் நபியவர்களோ அந்தப் பங்கீட்டில் இஸ்லாத்தின் நலனையே நாடினார்கள். இறை உவப்பே அவர்களின் இலட்சியம்!

நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு அதிகப்படியாக வழங்கியது புதிதாக இஸ்லாத்திற்கு வந்த மக்களின் தலைவர்களுக்குத்தான்! அதன் மூலம் அவர்களின் இதயங்களைக் குளிரச் செய்ய வேண்டும்., இஸ்லாத் திற்கு வலிமை சேர வேண்டுமெனக் கருதியே அப்படிச் செய்தார்கள். சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள் - மக்களின் தலைவர்களாக இருப்பவர்கள் இஸ்லாத்தில் கவர்ச்சியாகி விட்டால் - அவர்களின் விசுவாசம் வலுப் பெற்று விட்டால் அவர்களுக்குக் கீழுள்ள மக்கள் சந்தோசம் அடைவர்! நபி(ஸல்) அவர்கள் நமக்கு விரோத மானவர் அல்லர்., நமக்குச் சாதகமாகவே உள்ளார்கள் என்கிற செய்தி பரவுவதன் மூலம் ஏனைய குலத்தார் களும் கோத்திரத்தார்களும் இஸ்லாத்தில் இணைவார்கள். அதன் மூலம் இஸ்லாத்திற்கு வலிவும் பொலிவும் கூடும்! ஆனால் எந்த விஷயங்களையும் மன மாச்சரியமின்றி - சுய நலக் கண்ணோட்டமின்றி ஆராய்ந்திட வேண்டும். அறியாமை என்பது எப்பொழுதும் ஆபத்துதான்! மனிதர்களை அது அழிவில்தான் ஆழ்த்தும்! (அல்லாஹ் பாதுகாப்பானாக)

நபியவர்கள் மன வேதனை அடைந்தார்கள். அது அவர்களது முகத்தில் வெளிப்பட்டது. முகம் செக்கச் செவேறென்று சிவந்துவிடும் அளவு சினம் கொண்டார்கள்! அப்பொழுது சொன்னார்கள்:

<u>அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நீதி செலுத்தவில்லையானால் பிறகு யார்தான் நீதி செலுத்துவார்?"</u>

உண்மைதானே! இவ்வுலகில் நீதியை நிலைநிறுத்துவதற்காகவே இறைவன், அவர்களை நபியாக அனுப்பிவைத்தான், இறைவழிகாட்டலின் அடிப்படையிலேயே நபியவர்கள் செயல்பட்டார்கள். அந்த நபியவர் களின் செயலையே அவதூறு பேசினால் பிறகு இந்நானிலத்தில் வேறு யாரால்தான் நீதியை நிலைநாட்ட முடியும்? - மேலும் சொன்னார்கள்:

மூஸாவுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக. அவருக்கு இதனை விடவும் அதிகமாகத் துன்பம் இழைக்கப் பட்டது., ஆயினும் அவர் பொறுமை காத்தார்”

- இந்த வாசகத்திற்காகவே இந்நபிமொழியை இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இங்கு இடம்பெறச் செய்துள் ளார்கள். அதாவது நபிமார்களுக்குத் துன்பம் இழைக்கப்பட்டதுண்டு., அந்தச் சூழ்நிலைகளில் அவர்கள் பொறுமைதான் மேற்கொண்டார்கள்!

ஆம்! தூதுத்துவப் பணியேற்று மக்களைச் சீர்திருத்தம் செய்யுமாறு இறைவன் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு இவ்வுலகில் நபிமார்கள் அழைப்புப் பணியாற்றிபொழுது அறியாமையில் உழன்று கொண்டிருந்த மக்கள் சிலர், அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்றனர். வேறு சிலர், சூனியக்காரர்கள் - ஜோதிடர்கள், கவிபாடுகிறவர்கள் - கற்பனை உலகில் வாழ்பவர்கள் என்றெல்லாம் அவதூறுகளை அள்ளி வீசினர்! இவற்றை யெல்லாம் அந்நபிமார்கள் கூஜிறிதும் பொருட்படுத்தவில்லை., பொறுமையின் சிகரமாக விளங்கித் தங்களது சீர்திருத்தப் பணியிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். மக்களை ஓரிறை விசுவாசத்தில் நிலைக்கக்கூஷ் செய்து நேர்வழியில் செலுத்திட ஓயாது உழைத்தார்கள். நபிமார்களின் பொறுமைப் பண்பு குறித்து குர்ஆனில் ஓரிடத்தில் அல்லாச் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

قال الله تعالى: فصبروا علي ما كذبوا و أوذوا حتى أتاهم نصرنا ( سورة الأنعام ألآية : ٣٤ )

இந்நபிமார்கள் தாங்கள் பொய்ப்படுத்தப்பட்டதையும் தங்களுக்கு இழைக் கப்பட்ட துன்பங்களையும் பொறுமையுடன் கூஷிகித்துக் கொண்டிருந்தனர்., நம்முடைய உதவி அவர்களிடம் வரும்வரையில்!” (6 : 34 )

இதோ! நபி (ஸல்) அவர்கள் மீதே பழி சுமத்தப்படுகிறது! பண்பாடற்ற வார்த்தை கூறப்படுகிறது! அதுவும் எப்பொழுது? இஸ்லாமிய அழைப்புப் பணி தொடங்கிய ஆரம்பத்தில் அல்ல., சிஜ்ரத் நடைபெற்று எட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர்! அவர்கள் ஓர் உண்மைத் தூதர்தான் - நபிதான் என்று தெளிவாக்கப்பட்டதன் பின்னர் - அதற்கான தெளிவான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் - நபியவர்கள் மேற்கொண்ட அழைப்புப் பணிக்கு அல்லாச் மகத்தான வெற்றியை அளித்த பின்னர் - அவர்களுக்கு ஆட்சியதிகாரமும் வழங்கப்பட்ட பின்னர்தான் இவ்வாறு அவதூறு கூறப்பட்டுள்ளது! அவர்கள் மேற்கொண்ட பங்கீட்டில் அவர்கள் அல்லாஹ்வின் உவப்பை நாட வில்லை என்று தூற்றப்பட்டுள்ளது!
ஸசாபாக்களில் ஒருவர் நபி (ஸல்)அவர்களைக் குறித்து கூறியிருக்கிறார் எனில் இன்று இஸ்லாமிய அழைப்புப் பணியை வாய்மையுடன் மேற்கொள்ளும் அறிஞர் பெருமக்கள் மீது - ஆலிம்கள் மீது இதுபோன்ற அவதூறு களை சிலர் அச்சமின்றி அள்ளி வீசுவது குறித்து ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

அது மட்டுமல்ல இன்று இதில் ஷைத்தானின் தீய சூழ்ச்சியும் பின்னப்பட்டுள்ளது. மார்க்க அறிஞர்களைக் களங்கப்படுத்திவிட்டால் அவர்களின் அறிவுரைகளுக்கு மக்களிடத்தில் மதிப்பில்லாமல் போய்விடும். மக்கள் எளிதாக வழிகெட்டுப் போய்விடுவர் என்பதே அது! இதனால்தான் அறிஞர் பெருமக்களைப் பற்றி புறம் பேசுவது ஏனைய மனிதர்கள் தொடர்பாக புறம் பேசுவதை விடவும் கொடிய பாவமாக உள்ளது.

இந்நபிமொழியில் மேலும் பல விஷயங்கள் தெரிய வருகின்றன:

❁ தலைவருக்கு- இதுபோன்ற விவகாரங்களில் அதிகாரம் உள்ளது. இஸ்லாத்தின் நலனைக் கருத்தில் கொண்டு அவர், சிலபேருக்கு அதிகம் வழங்கலாம். ஆனால் சுய நலத்திற்காக அவ்வாறு செய்வது யாருக்கும் கூடாது.

❁ முந்தைய நபிமார்களின் வரலாற்றின் மூலம் நபி (ஸல்) அவர்கள் படிப்பினை பெற்றுள்ளார்கள்! அந்த ரீதியில்தான் மூஸா நபி (அலை)அவர்களுக்குத் துன்பம் இழைக்கப்பட்டதையும் அப்பொழுது அவர்கள் பொறுமை காத்ததையும் நபி (ஸல்) அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்! அல்லாச் குர்ஆனில் கூறியுள்ளான்:

لقد كان في قصصهم عبرة لاولى الالباب (سورة يوسف الأية: ١١١)

அந்த நபிமார்களின் சரிதைகளில் அறிவுடையோருக்கு அரிய படிப்பினை உள்ளது” (12 : 111) மற்றோரிடத்தில்,

أولئك الذين هدى الله فبهداهم اقتده ( سورة الانعام الآية : ٩٠ )

அத்தகைய நபிமார்கள்தாம் அல்லாஹ்வினால் நேர்வழி காட்டப்பட்டவர்கள்., அவர்களுடைய வழியினையே (நபியே!) நீரும் பின்பற்றிச் செல்வீராக!” (6 : 90)

இவ்வாறே நாமும் துன்பங்களின்போது நபிமார்களை - குறிப்பாக அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிப் பொறுமை காத்து சத்தியத்தில் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டும்., அதற்கான கூலியை அல்லாஹ்விடத்தில் எதிர்பார்த்திட வேண்டும்!

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) ஹுனைன் :அரஃபாவுக்குப் பின் புறத் தில் மக்காவுக்கும் தாயிபுக்கும் மத்தியி லான ஓர் ஓடைப்பகுதி. மக்காவில் இருந்து சுமார் பத்து மைல். | ١) حنين: واد بين مكة و الطائف وراء عرفات بينه وبين مكة بضعة عشر ميلا |
| 2) உயைனா பின் ஹுஸைன் (ரலி) : இவர் இதயம் கவரப்படவேண்டியவர். மக்கா வெற்றிக்கு முன் இஸ்லாம் தழுவி னார். ஹுனைன் மற்றும் தாயிப் போர் களில் கலந்து கொண்டார். நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைந்த பொழுது இஸ்லாத்தில் இருந்து மதம் மாறினார். பின் இஸ்லாத்தை ஏற்றார். | ٢) عيينة بن حصين: كان من المؤلفة قلوبهم أسلم قبل الفتح وشهد حنيناوالطائف وارتد بعد وفاة الرسول ﷺ ثم رجع الي الاسلام |
| 3) அக்ரஃ பின்சாபிஸ் (ரலி): வழுக்கத் தலையர் (அக்ரஃ) என்று அழைக்கப் பட்டார்., அவரது தலையில் வழுக்கு இருந்ததால்! தமீம் கோத்திரத்தலை வர்களில் ஒருவர். அறியாமைக் காலத் தில் - இஸ்லாத்தில் கண்ணியமிக்கவர். | ٣) الاقرع بن حابس : لقب بالاقرع لقرع كان في رأسه وهو من سادات قبيلة تميم كان شريفا في الجاهلية والاسلام |
| 4) சந்தேகமின்றி : சத்தியமாக! | ٤) لا جرم : حقا |

## கேள்விகள் - الاسئلة

1) ஹுனைன் போர் பற்றி சுருக்கமாகக் குறிப்படவும்.
2) போரில் கைப்பற்றப்பட்ட ஃகனீமத் பொருட்களைப் பங்கிடும் பொழுது சிலருக்கு அதிகம் வழங்கப்பட்டதன் நோக்கம் என்ன?
3) மூஸா நபிக்கு இழைக்கப்பட்ட சில துன்பங்களையும் அவற்றின் பொழுது அவர்கள் பொறுமை மேற் கொண்டதையும் விவரிக்கவும்.
4) அறிவிலிகள் கூறிய அவதூறுகளை எல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு இறைமார்க்கப் பணியிலேயே நபிமார்கள் ஈடுபட்டிருந்தது குறித்து குர்ஆன் குறிப்பிட்டது என்ன?
5) அறிவிப்பாளர் பற்றி ஓர் அறிமுகம் செய்யவும்.

## சோதனையின் ரகசியம்!

**٤٣ – وَ عَنْ أَنَسٍ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهُ ﷺ : اِذَا أَرَادَ اللهُ بِعَبْدِهِ خَيْرًا عَجَّلَ لَهُ الْعُقُوْبَةَ فِي الدُّنْيَا، وَ اذَا أَرَادَ اللهُ بِعَبْدِهِ الشَّرَ أَمْسَكَ عَنْهُ بِذَنْبِهِ حَتَى يُوَافِيَ بِهِ يَوْمَ الْقِيَامَةِ**

**وَقَالَ النَبِيُّ ﷺ : اِنَّ عِظَمَ الْجَزَاءِ مَعَ عِظْمِ الْبَلاَءِ ، وَ اِنَّ اللهَ تَعَالَي اِذَا أَحَبَّ قَوْمًا اِبْتَلاَهُمْ، فَمَنْ رَضِيَ فَلَهُ الرِّضَي وَمَنْ سَـــخِطَ فَلَهُ السُّخْطُ } رواه الترمذي وقال : حديث حسن .**

ஹதீஸ் 43

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: அல்லாஹ் தன்னுடைய ஓர் அடியாருக்கு நலன் நாடினால் அவனுக்கு (அவனுடைய பாவங்களின்) தண்டனையை இவ்வுலகிலேயே விரைவாகக் கொடுத்துவிடுகிறான். மேலும் அல்லாச் தன்னுடைய அடியானுக்குத் தீங்கை நாடினால் அவனது பாவத்திற்குரிய தண்டனையை (உலகில்) அவனை விட்டும் தடுத்துக்கொள்கிறான்., அந்தப் பாவத்தைச் சுமந்துகொண்டே மறுமை நாளினை திடுமென அவன் சந்திப்பதற்காக வேண்டி!

மேலும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: கூலியை அதிகப்படுத்துவது சோதனையின் அதிகரிப்புடன் உள்ளது. நிச்சயமாக அல்லாச் ஒரு கூட்டத் தினரை நேசிக்கிறான் எனில் அவர்களைச் சோதனைக்கு உள்ளாக்குகிறான். எவர் அதில் மனதிருப்தி கொள்கிறாரோ அவருக்கு (இறைவனின்) திருப்பொருத்தம் உண்டு. எவர் அதிருப்தி அடைகிறாரோ அவருக்கு (இறைவனின்) அதிருப்தியே உண்டு. (நூல்: திர்மிதி, இது ஹஸன் தரத்திலானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது)

## தெளிவுரை ~ الشرح

அனைத்து விவகாரங்களும் அல்லாஹ்வின் கைவசத்தில் உள்ளன. அவனது நாட்டப்படியே எல்லாம் நடைபெறுகின்றன. இது குறித்து அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قال الله تعالى: ان ربك فعال لما يريد (سورة هود الأية: ١٠٧)

நிச்சயமாக உம் இறைவன் தான் நாடுவதைச் செய்பவனாக இருக்கிறான்" (11 : 107) - மற்றோரிடத்தில்,

قال الله تعالى: ان الله يفعل ما يشاء (سورة الحج الاية: ١٨)

திண்ணமாக அல்லாஹ் தான் நாடுவதைச் செய்யக் கூடியவனாக இருக்கிறான்!" (22 : 18)

எந்த மனிதனானாலும் சரியே! ஏதேனும் தவறுகள், பாவங்கள் இல்லாமல் இருக்காது. கடமையில் குறைபாடு என்பதாவது அவனிடம் இருக்கத்தான் செய்யும்!

அல்லாச் ஓர் அடியானுக்கு நலன் நாடினால் அந்த அடியானின் தவறுகளுக்கு இவ்வுலகத்திலேயே சீக்கிரம் தண்டனை கொடுத்து விடுகிறான். அவனது சொத்தில் நஷ்டம், அவனுடைய குடும்பத்தில் கஷ்டம் என்கிற வடிவத்தில்! இப்படி அவனுக்கே நேரும்., அல்லது அவனுடன் தொடர்பு உடையவர்களுக்கு நேரும்!

இவ்வாறாக அந்தஅடியானுக்கு இவ்வுலகத்திலேயே தண்டனை கொடுப்பது அவனுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அமைகிறது. பிறகு மறுமை நாளில் அல்லாஹ்வை அவன் கூஷந்திக்கும்பொழுது தூய்மையான அதாவது பாவங்களில்லாத - பரிசுத்தமான நிலையில் சந்திக்கிறான்! - இதுதான் அல்லாச் அந்த அடியானை நேகூஷிக்கிறான்., அவனது விஷயத்தில் நலன் நாடியுள்ளான் என்பதன் தாத்பரியமாகும்!

இது எந்த அளவுக்கு அமைகிறதெனில், அந்த அடியானுக்கு மரணம் நெருங்கும்பொழுது அதன் வேதனை கூட கடுமையாக்கப்படலாம்! அதன் நோக்கம் என்ன? அவனிடத்தில் மன்னிக்கப்படாமல் எஞ்சியுள்ள ஓரிரு தீமைகளும் பாவங்களும் மன்னிக்கப்பட வேண்டும் என்பதே நோக்கம்! இவ்வாறு எல்லாப் பாவங்களும் மன்னிக்கபட்டுத் தூய்மையின் பரிபூரண நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்கும் அளவுக்கு அவன் விஷயத்தில் அல்லாச் நலன் நாடுகிறான்!

ஆனால் இதற்குப் பொறுமை காக்க வேண்டும் என்பது பிரதான நிபந்தனை! மனிதன் பதறிப் பரிதவிக்காமல், இறைவன் நிர்ணயித்த விதியைக் குறித்து மனம் நொந்து புலம்பாமல், இறைவிசுவாசுஷத்தில் பலவீனம் அடையாமல்,இஸ்லாமிய நெறிமுறைகளைப் பேணிவாழ்வதில் பின்தங்கி விடாமல்- மனம் வெறுப்படையாமல் இருக்க வேண்டும்.,அதனை விட்டும் பொறுமை அவனைப் பாதுகாக்க வேண்டும்! அப்பொழுதுதான் பொறுமைக்கான இத்தகைய முழுப்பலனை அவன் அடைந்திட முடியும்!

அடியான் செய்த பாவங்களுக்குரிய தண்டனை மறுமை நாளில் கொடுக்கப்படாமல் இவ்வுலகிலேயே ஒருசில கஷ்டங்களின் மூலம் அவற்றிற்குப் பரிகாரம் காணப்பட்டதெனில் அது அல்லாஹ்வின் அருட்கொடையே அன்றி வேறென்ன! ஏனெனில் மறுமையின் தண்டனையே மிகக் கொடியது., நீடித்ததும்கூட! அதற்கு எதிரில் இவ்வுலகின் தண்டனை என்பது எதுவு மில்லை., வெறும் தூசு போன்றதுதான்! விரைவில் விலகி விடுவதுதான்!

ஆனால் அல்லாஹ் ஓர் அடியானுக்குத் தீங்கை நாடினால் அவனுக்கு அவகாசம் கொடுக்கிறான்., உலகின் அருள் வளங்களையும் அதிக அளவு அள்ளிக் கொடுக்கிறான். அவனுக்குத் துன்பங்களும் தருவதில்லை! இவ்வாறு அந்த அடியான் இன்ப வாழ்வை அனுபவிக்கிறான். ஆணவம் கொள்கிறான். அதிக அளவு - அதாவது எல்லோராலும் இகழப்படும் அளவில் பூரித்துப் போகிறான்.

இந்நிலையில் திடுமென மரணம் வந்து அவனை வாரிக்கொண்டு செல்கிறது. பாவங்களும் தீமைகளும் நிறைந்திருக்கும் நிலையில் அல்லாச்வை கூஷந்திக்கும் துர்பாக்கிய நிலை அவனுக்கு! அந்தப் பாவங்களுக்குரிய தண்டனை மறுமையில் நிறைவாகக் கொடுக்கப்படுகிறது!

நீங்கள் ஒரு மனிதனைக் காண்கிறீர்கள். சத்தியத்தை நிராகரிக்கிறான். இறைகட்டளைகளை உதாசீனப் படுத்துவதுடன் அவற்றிற்கு எதிரான கிளர்ச்சியை மேற்கொண்டு இறைவனுடன் மோதல் போக்கை கடைப்பிடிக் கிறான்! இந்நிலையில் உலகத்தில் அவனுக்கு எந்தச் சேதனைகளும் வராமல் அல்லாஹ்வும் அவனைப் பாதுகாக்கிறான் எனில் நிச்சயமாக அல்லாஹ் அந்த மனிதனுக்கு தீங்கையே நாடியுள்ளான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! ஏனெனில் அவன் செய்யும் அட்டுழியங்களுக்குரிய தண்டனையை அல்லாஹ் பிற்படுத்தி வைத்துள்ளான்., அனைத்தையும் மரணத்தின் பிறகு - மறுவுலகத்தில் அந்த மனிதன் அனுபவிப்பான் என்பதே உண்மை!

<u>கூலியை அதிகப்படுத்துவது சோதனையின் அதிகரிப்புடன் உள்ளது"</u>

அதாவது, சோதனை கடுமையாகும்பொழுது கூலியும் அதற்கேற்ப மதிப்பு மிக்கதாக அதிகரித்துகொண்டே செல்லும்! லேசான சோதனை எனில் கூலியும் அதற்கேற்பவே - சிறிய அளவிலேயே இருக்கும். ஏனெனில் அல்லாஹ் மனிதர்கள் மீது அருள் புரிபவனாகவே இருக்கிறான். கடுமையான துன்பங்களைக் கொடுத்து அடியார்களை அவன் சோதனைக்கு உள்ளாக்கினால் அதற்கேற்ப அதிகக் கூலிகளைக் கொடுப்பதென்பது அவனது அருட் கொடையே!

<u>நிச்சயமாக அல்லாஹ் ஒரு கூட்டத்தினரை நேசிக்கிறான் எனில் அவர்களைச் சோதனைக்கு உள்ளாக் குகிறான் ... "</u>

இது இறைவிசுவாசிகளுக்கு ஓர் நற்செய்தியாகும். அல்லாஹ் விசுவாசியைச் சோதனைக்குள்ளாக்கினால், ஐயோ! அல்லாஹ் என்னைச் சோதித்து விட்டானே என்று மனம் நொந்து போக வேண்டாம்!மாறாக அல்லாஹ் அந்த அடியானை நேசிப்பதற்காகவே அவ்வாறு செய்யலாம்! அதனால்தான் சில துன்பங்களைக் கொடுத்து சோதிக்கிறான். எனவே அல்லாஹ் நிர்ணயித்த விதியை -விதி விளைவிக்கும் துன்பங்களை அடியான் பொருந் திக் கொள்ள வேண்டும். பொறுமை காக்க வேண்டும். அப்பொழுதுதான் இறைவனின் திருப்பொருத்தத்தை அவன் பெறமுடியும்!

### அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1)திடுமென சந்திக்கிறான்: தனது பாவத்தைத் தோளில் சுமந்து கொண்டே வருகிறான். | ١) يوافى : يأتي بذنبه حاملا له علي كاهله |
| 2) எவர் திருப்தி கொண்டாரோ: ஏற்றுக்கொண்டார்., பதறிப் பரிதவிக்கவில்லை! | ٢) فمن رضي : قبل ولم يتضجر |

## கேள்விகள் - الاسئلة

1) உலகில் நலலடியார்களுக்கு வரும் சோதனைகள் அல்லாஹ்வின் அன்புக்கு அடையாளம் என்பதை விளக்கவும்.

2) அல்லாஹ் ஓர் அடியானுக்குத் தீங்கை நாடினால் அவனுடன் எத்தகைய போக்கை மேற்கொள்கிறான்?

3) மகத்தான கூலி என்பது கடுமையான சோதனையுடன் உள்ளது என்பதை விளக்கவும்.

4) உலகில் நிகழும் எல்லாவும் அல்லாச்வின் நாட்டப்படியே நிகழ்கின்றன என்பதற்கு குர்ஆன் - சதீஸின் ஆதாரங்கள் எழுதவும்.

## பெண்குலத்தின் முன்மாதிரி!

٤٤ – وَ عَنْ أَنَسٍ ﷺ قَالَ: كَانَ ابْنٌ لأَبِي طَلْحَةَ ﷺ يَشْتَكِي ، فَخَرَجَ أَبُوْ طَلْحَةَ ، فَقُبِضَ الصَّبِيُّ ، فَلَمَّا رَجَعَ أَبُو طَلْحَةَ قَالَ : مَا فَعَلَ ابْنِي؟ قَالَتْ أُمُّ سُلَيْمٍ وَهِيَ أُمُّ الصَّبِيِ: هُوَ أَسْكَنُ مَا كَانَ . فَقَرَّبَتْ اِلَيْهِ الْعَشَاءَ فَتَعَشَّي ، ثُمَّ أَصَابَ مِنْهَا، فَلَمَّـــا فَـــرَغَ قَالَتْ: وَارُوْا الصَّبِيَّ فَلَمَّا أَصْبَحَ أَبُوْ طَلْحَةَ أَتَي رَسُوْلَ اللهِ ﷺ فَأَخْبَرَهُ ، فَقَالَ: أَعَرَّسْتُمْ اللَّيْلَةَ؟ قَالَ: نَعَمْ، قَالَ: اللَّهُمَّ بَارِكْ لَهُمَا.، فَوَلَدَتْ غُلاَمًا فَقَالَ لِي أَبُوْ طَلْحَةَ : احْمِلْهُ حَتَّي تَأتِيَ بِهِ النَّبِيَّ ﷺ ، وَبَعَثَ مَعَهُ بِتَمْرَاتٍ ، فَقَالَ :أَ مَعَهُ شَـــيْءٌ؟ قَـــالَ : نَعَـــمْ ، تَمَرَاتٌ فَأَخَذَ هَا النَّبِيُّ ﷺ فَمّضَغَهَا ، ثُمَّ أَخَذَ هَا مِنْ فِيْهِ فَجَعَلَهَا فِي فِي الصَّبِيِّ ، ثُمَّ حَنَّكَهُ وَ سَمَّاهُ عَبْدَ اللهِ. متفق عليه

وَفِى رِوَايَةٍ لِلبُخَارِى: قال ابن عُيَيْنَةَ : فَقال رَجُلٌ مِنَ الاَنْصَارِي : فَرَأَيْتُ تِسْعَةَ أَوْلاَدٍ كُلُّهُمْ قَدْ قَرَؤُوْا الْقُرْآنَ، يَعْنِي مِـــنْ أَوْلاَدِ عَبْدِ اللهِ الْمَوْلُوْدِ .

ஹதீஸ் 44

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அபூ தல்ஹா (ரலி) அவர்களின் மகன் ஒருவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். அபூ தல்ஹா அவர்கள் (ஏதோ ஒரு பணிக்காக) வெளியே சென்றிருந்தார்கள். அப்பொழுது அந்தச் சிறுவர் மரணம் அடைந்தார். அபூ தல்ஹா திரும்பி வந்தபொழுது கேட்டார்கள்: என் மகனின் நிலை என்ன?"

அதற்கு அவர் முன்னைவிடவும் மிக அமைதியாக இருக்கிறார்" என்று சிறுவரின் தாயாராகிய உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் சொன்னார்கள். பிறகு இரவு உணவை அவர்கள் முன்னால் வைத்தார்கள். அபூ தல்ஹா (ரலி) அவர்கள் உணவு உட்கொண்டார்கள். பிறகு மனைவியுடன் தாம்பத்திய உறவும் கொண்டார் கள். அவர்கள் ஓய்வு பெற்றபொழுது உம்மு ஸு லைம் செஷான்னார்கள்:

எல்லோரும் சிறுவனை அடக்கம் செய்யுங்கள்!"

- பொழுது விடிந்ததும் அபூ தல்ஹா (ரலி)அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவர்களிடம் செய்தி சொன்னார்கள். நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்:

இன்று இரவு நீங்கள் வீடு கூடினீர்களா?"

அதற்கு அபூ தல்சா ஆம் " என்றார்கள்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், யா அல்லாஹ்! இவ்விருவருக்கும் அருள்பாக்கியம் புரியாயாக! " என்று பிரார்த்தனை செய்தார்கள் - அவ்வாறே உம்மு ஸு லைம் அவர்கள் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தார்கள்.

அனஸ் (ரலி)அவர்கள் கூறுகிறார்கள்: அபூ தல்ஹா அவர்கள் என்னிடம் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நபி(ஸல்)அவர்களிடம் செல்லும்" என்று சொன்னார்கள்! அதனுடன் சில பேரீத்தம் பழங்களையும் அனுப்பி னார்கள்.

நபி(ஸல்)அவர்கள் ஏதேனும் உண்டா., அதனிடம்? என்று கேட்டார்கள். ஆம்! பேரீத்தம் பழங்கள் உள்ளன" என்று சொன்னார்கள் அபூ தல்ஹா. அவற்றை எடுத்துத் தங்கள் வாயில் போட்டு மென்றார்கள் நபியவர்கள். பிறகு தங்கள் வாயிலிருந்து எடுத்து குழந்தையின் வாயில் வைத்தார்கள்., பிறகு அதை அதன் மேல் வாயிலும் இரு உட்பகுதிகளிலும் தடவினார்கள். அக்குழந்தைக்கு அப்துல்லாஹ் என்று பெயரிட்டார்கள்" (புகாரி, முஸ்லிம்)

புகாரியின் மற்றோர் அறிவிப்பில் வருகிறது: இப்னு உயைனா (ரச்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்: அன்ஸார் களில் ஒருவர் என்னிடம் சொன்னார்: நான் ஒன்பது பிள்ளைகளைப் பார்த்துள்ளேன். அனைவரும் குர்ஆனை கற்றறிந்த அறிஞராகத் திகழ்ந்தார்கள். அதாவது அந்த ஒன்பது பேரும் (உம்மு ஸு லைமுக்கு பிறந்த) இந்த அப்துல்லாஹ்வின் பிள்ளைகளே!

وَفِى رِوَايَةٍ لِمُسْلِمٍ : مَاتَ ابْنٌ لأَبِي طَلْحَةَ مِنْ أُمِّ سُلَيْمٍ، فَقَالَتْ لأَهْلِهَا : لاَ تُحَدِّثُوْا أَبَا طَلْحَةَ بِابْنِهِ حَتَّي أَكُوْنَ أَنَا أُحَدِّثُهُ ، فَجَاءَ فَقَرَّبَتْ اِلَيْهِ عَشَاءً فأَكَلَ وَ شَرِبَ، ثُمَّ تَصَنَّعَتْ لَهُ أَحْسَنَ مَا كَانَتْ تَصْنَعُ قَبْلَ ذَلِكَ فَوَقَعَ بِهَا ، فَلَمَّا أَنْ رَأَتْ أَنَّهُ قَـــدْ شَـــبِعَ وَ أَصَابَ مِنْهَا قَالَتْ: يَا أَبَا طَلْحَةَ أَرَأَيْتَ لَوْ أَنَّ قَوْمًا أَعَارُوْا عَارِيَتَهُمْ أَهْلَ بَيْتٍ فَطَلَبُوْا عَارِيَتَهُمْ ، أَلَهُمْ أَنْ يَمْنَعُوْ هُمْ ؟ قَـــالَ : لاَ، فَقَالَتْ: فَاحْتَسِب ابْنَكَ . قَالَ : فَغَضِبَ، ثَمَّ قَالَ: تَرَكْتَنِي حَتَّي أَذَا تَلَطَّخْتُ ثُمَّ أَخْبَرْتَنِي بِابْنِي؟ فَانْطَلَقَ حَتَّي أَتَي رَسُوْلَ اللهِ ﷺ فَأَخْبَرَهُ بِمَا كانَ ، فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : بَارَكَ اللهُ فِى لَيْلَتِكُمَا قَالَ : فَحَمَلَتْ، قَالَ : وَكَانَ رَسُوْ لُ اللهِ ﷺ فِى سَفَرٍ وَهِيَ مَعَهُ ، وَكَانَ رَسُوْلُ اللهِ ﷺ اِذَا أَتَي الْمَدِيْنَةَ مِنْ سَفَرٍ لاَ يَطْرُقُ طُرُوْقًا فَدَنَوْا مِنَ الْمَدِيْنَةِ ، فَضَرَبَهَا الْمَخَاضُ فِاحْتُبِسَ عَلَيْهَا أَبُوْ طَلْحَـــةَ وَانْطَلَقَ رَسُوْلُ اللهِ ﷺ قَالَ : يَقُوْلُ أَبُوْ طَلْحَةَ اِنَّكَ تَعْلَمُ يَا رَبُّ أَنَّهُ يُعْجِبُنِي أَنْ أَخْرُجَ مَعَ رَسُوْ لِ اللهِ ﷺ اِذَا خَرَجَ ، وَ أَدْخُـــلَ مَعَهُ اِذَا دَخَلَ ، وَقَدْ احْتُبِسْتُ بِمَا تَرَى ، تَقُوْلُ أُمُّ سُلَيْمٍ : يَا أَبَا طَلْحَةَ مَا أَجِدُ الَّذِي كُنْتُ أَجِدُ ، انْطَلِقْ، فَانْطَلَقْنَـــا، وَضَـــرَبَهَا

الْمَخَاضُ حِيْنَ قَدِمَا فَوَلَدَتْ غُلاَمًا ، فَقَالَتْ لِى أُمِّي : يَا اَنَسُ لاَ يُرْضِعُهُ أَحَدٌ حَتَّي تَغْدُوَ بِهِ عَلَى رَسُوْلِ اللهِ ﷺ فَلَمَّـــا أَصْـــبَحَ احْتَمَلْتُهُ فَانْطَلَقْتُ بِهِ الَى رَسُوْلِ اللهِ ﷺ وَذَكَرَ تَمَامَ الْحَدِيْثِ .

ஸசீச்முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது: உம்மு ஸு லைம் - அபூ தல்சா தம்பதியினரின் ஆண் குழந்தை ஒன்று இறந்துவிட்டது. அப்பொழுது உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் தம் குடும்பத்தினரிடம் செஷான்னார்கள்:

அபூ தல்சாவிடம் அவருடைய மகனைப் பற்றி நீங்கள் எதுவும் செஷால்லாதீர்கள்., நானே அவரிம் அவ்விஷயத்தைசுஷ் செஷால்வேன்!"

அபூ தல்ஹா (ரலி)அவர்கள் வந்தார்கள். அவர்கள் முன்னால் இரவு உணவை வைத்தார்கள் உம்மு ஸு லைம் அவர்கள். அபூ தல்சா உணவு - பானங்களை உட்கொண்டார். பிறகு உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் அபூ தல்ஹாவுக்காக தம்மை அலங்கரித்தார்கள்., அதற்கு முன்பு தம்மை அலங்கரித்ததை விடவும் அழகாக! அபூ தல்சா (ரலி) அவர்கள் உம்மு ஸு லைமுடன் தாம்பத்திய உறவு கொண்டார்கள். - இவ்வாறு அபூ தல்ஹா நன்றாக உணவு உட்கொண்டு தம்முடன் உடலுறவும் கொண்ட பிறகு உம்மு ஸு லைம் அவர்கள் சொன்னார்கள்:

அபூ தல்ஹாவே! உங்கள் கருத்து என்ன? ஒருகூட்டம் தங்களது பொருளொன்றை ஒருவீட்டாரிடம் இரவலாகக் கொடுத்துவைத்தார்கள்., பிறகு தங்களது பொருளைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்கும்பொழுது தர முடியாது என்று செஷால்லும் உரிமை அந்த வீட்டாருக்கு உண்டா?"

கிடையாது"

(அவ்வாறாயின்) உங்கள் மகன் விஷயத்தில் நீங்கள் பொறுமை கொண்டு அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்த்திருங்கள்!"

அப்பொழுது அபூ தல்ஹா (ரலி)அவர்கள் கோபம் கொண்டார்கள்., சொன்னார்கள்: என்னிடம் முன்னரே எதுவும் செஷால்லாமல் இருந்துவிட்டு நான் இப்படி இப்படி எல்லாம் செய்து பெருந்துடக்கை அடைந்த பிறகு இப்பொழுது என் மகனைப் பற்றி சொல்கிறாயே!" (அதன் பிறகு) அபூ தல்சா அவர்கள் புறப்பட்டு நபி (ஸல்)அவர்களிடம் வந்து நடந்த செய்தியை அவர்களிடம் தெரிவித்தார்கள்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், உங்கள் இருவரது இந்த இரவில் அல்லாஹ் அருட்பாக்கியம் புரிவானாக!" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

(நபிமொழியின் அறிவிப்பாளர் அனஸ் (ரலி) தொடர்ந்து கூறுகிறார்கள்:) அவ்விதமே உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் கர்ப்பம் தரித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு பயணம் புறப்பட்டார்கள். (தம் கணவர் அபூ தல்சாவுடன்) உம்மு ஸு லைம் அவர்களும் அந்தப்பயணத்தில் சென்றார்கள். நபியவர்களின் வழக்கம் என்னவெனில், பயணத்திலிருந்து திரும்பினால் இரவு நேரத்தில் வந்து ஊரினுள் நுழையமாட்டார்கள்! அந்தப் பயணக்கூட்டம் மதீனாவை நெருங்கிய பொழுது உம்முஸு லைம் (ரலி) அவர்களுக்குப் பிரசுஷவ வேதனை ஏற்பட்டது. அதனால் அபூ தல்ஹாவும் உம்மு ஸு லைமுடன் தடைபட்டிருக்க வேண்டியதாகிவிட்டது. நபி(ஸல்) அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள்.

(அறிவிப்பாளர் செஷால்கிறார்கள்:) அப்பொழுது அபூ தல்ஹா (ரலி) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்: யா அல்லாஹ்! நபிகளார் அவர்கள் (மதீனாவை) விட்டும் கிளம்பினால் நானும் அவர்களுடன் கிளம்புவதும் அவர்கள் மதீனா வில் நுழைந்தால் நானும் அவர்களுடன் மதீனா வந்தடைவதும் எனக்கு மிகவும் பிரியமான ஒன்று என்பதை நீ அறிவாய்! இப்பொழுது நீ அறியக்கூடிய இந்தக் காரணத்தால் நான் இங்கு தடை பட்டு விட்டேனே!"

உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: அபூ தல்ஹாவே! இப்பொழுது பிரசவ வேதனையை நான் உணரவில்லை. எனவே நீங்களும் புறப்படுங்கள்"

அவ்வாறே அனைவரும் புறப்பட்டு வந்தோம். இருவரும் மதீனா வந்த பொழுது உம்முஸு லைமுக்கு பிரசவவேதனை ஏற்பட்டது. ஓர்ஆண் குழந்தை பெற்றெடுத்தார்கள்!

அப்பொழுது என் தாயார் என்னிடம் சொன்னார்கள்: அனஸே! யாரும் குழந்தைக்குப் பால் கொடுத்து விடக் கூடாது., நீ அதனை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்கிறவரையில்!"

காலையில் நான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நபிகளாரிடம் வந்தேன்.... பிறகு முன்னர் சென்றபடி அனைத்து விவரமும் அனஸ் (ரலி) அவர்களது அறிவிப்பில் உள்ளது.

## தெளிவுரை ~ الشرح

உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள், அறியாமைக்காலத்தில் மாலிக் பின் நள்ர் என்பவருக்கு வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். அவர்தான் அனஸ் (ரலி) அவர்களுடைய தந்தை! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய அழைப்புப் பணியைத் தொடங்கியதும் உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள். தம் கணவரையும் அதன் பக்கம் அழைத்தார்கள்! தம் மகன் அனஸு க்கும் لا اله الا الله محمد رسول الله (லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூ லுல்லாஹ்) எனும் திருக்கலிமாவின் பொருள் விளக்கம் அளித்து நன்நெறிப்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால் மாலிக் பின் நள்ர் இஸ்லாத்தை ஏற்கவில்லை. மாறாக உம்மு ஸு லைமின் இஸ்லாமியப் பற்றுதலைக் குறித்து கோபமடைந்தார். பிறகு சிரியா தேசம் சென்ற அவர் அங்கேயே மரணம் அடைந்தார்!

அதன் பிறகுதான் உம்மு ஸு லைம் அவர்கள் அபூ தல்ஹாவை மணந்தார்கள். இந்த வகையில் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அனஸ் (ரலி) அவர்களுக்கு மாற்றாந் தந்தை ஆவார்.

அபூ தல்ஹா - உம்மு ஸு லைம் தம்பதிக்குப் பிறந்த ஓர் ஆண் மகனின் மரணம் குறித்தே இந்நபிமொழி பேசுகிறது.

அனைவரும் அவரை அபூ உமைர் என்று செல்லமாக அழைப்பார்கள். அவர் ஐந்தாறு வயது வரையில் நல்ல ஆரோக்கியமாகவே இருந்தார். சில அறிவிப்புகளில் வருகிறது: சிறுவர் அபூ உமைர் குருவி ஒன்றை ஆசையோடு வளர்த்து வந்தார். அது ஒருநாள் செத்துவிடுகிறது! ஆசையாக வளர்த்த குருவி அகால மரணம் அடைந்துவிட்டதே என்று அபூ உமைர் கடுமையாக மனம் நொடிந்து போனார்! அதனை அறிந்த நபி(ஸல்) அவர்கள்கூட உம்மு ஸு லைமின் வீட்டுக்கு வந்து சிறுவர் அபூ உமைருக்கு ஆறுதல் கூறினார்கள்., அப்பொழுது அவரது தலையை அன்பாகத் தடவிக் கொடுத்தவாறு கேட்டார்கள்:

يا ابا عمير ما فعل النغير

என்னருமை உமைர்! என்னவாயிற்று நுஃகைர்!" (நுஃகைர் என்றால் சிட்டுக் குருவி என்று பொருள்.)

பிணியுற்றுக் கடும் கஷ்டத்திற்குள்ளாகியிருந்த மகனுக்கருகே அமைதியே உருவாக அமர்ந்திருந்த உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் பையன் அமைதியாகத்தானே படுத்திருக்கிறான் என்று நினைத்துக்கொண்டிருந்தார்! ஆனால் அது மரணத்தின் அமைதி என்பது பிறகுதான் தெரிய வந்தது! அப்பொழுது இதயமே நொறுங்கியது போன்றாகிவிட்டது அவர்களுக்கு! ஆனாலும் பொறுமை காத்தார்கள்! கவலையையும் துயரத்தையும் மென்று விழுங்கினார்கள். அந்தச் செய்தி கேட்டு அபூ தல்ஹா (ரலி) அவர்களும் அதிர்ச்சிக்குள்ளாகிவிடக்கூடாது என்பதற்காக நயமான முறையில் அவருக்கு அறிவிக்கிறார்கள்!

அவன் முன்னைவிடவும் அமைதியாக இருக்கிறான்"

- ஒருவகையில் உம்முஸு லைம் உரைத்தது உண்மையே! மனிதனுக்கு மரணத்திற்குப் பிறகுதானே ஆழ்ந்த அமைதி ஏற்படுகிறது! மரணத்தை விடவும் பெரிய அமைதி வேறென்ன இருக்க முடியும்!

உம்மு ஸு லைம் மேற்கொண்ட பொறுமை கண்டு நம் விழிகள் ஆச்சரியத்தால் அகல விரிகின்றன! எவ்வளவு பெரிய விவேகம் வேண்டும் இதற்கு! அதுவும் ஒருபெண்மணி இவ்வாறு செயல்பட்டுள்ளார்களெனில் பன்மடங்கு ஆச்சரியம்!

கணவரிடத்தில் விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைத்தே -அதாவது பையன் முன்னை விடவும் மிகஅமைதியாக இருக்கிறான் என்று சூசகமாகக் கூறிய பாணியும் நமது சிந்தனைக்குரியது! அவ்வாறு பேசுவது கூடும் என்பது இந்நபிமொழியில் இருந்து தெரிகிறது.

அரபி இலக்கியத்தில் இதற்கு அத்- தௌரிய்யா (التورية) விஷயத்தை மறைத்துப்பேசுவது என்பர். ஆதாவது ஒருகருத்தை மனத்தில் மறைத்துக் கொண்டு வெளிரங்கத்தில் அதற்கு மாறான ஒன்றை உணர்த்தக் கூடிய வார்த்தையைப் பேசுவதாகும். வெளிரங்கமான கருத்துதான் பேசுபவரின் நோக்கம் என்று கேட்பவர் புரிந்துகொள்வார். ஆனால் அந்த வார்த்தையில் உள்ளடங்கியுள்ள வேறொரு கருத்துதான் பேச்சின் நோக்கம்!

இவ்வாறு பேசுவது கூடும்தான்., ஆனால் ஒரு நலனை முன்னிட்டு அல்லது ஒருதீங்கை அதன் மூலம் தவிர்க்கலாமெனும் சூழ்நிலையில் அப்படிப் பேசலாம். தேவையின்றி அவ்வாறு பேசுஷினால் கேட்பவர் அதைப் பொய்யென்று கருதவேண்டியதுவரும். அதனால் அவரது மனம் புண்படும், தவறானதோர் எண்ணம் ஏற்படும்! ஆனால் ஏதேனும் தேவை இருந்தால் அவ்வாறு பேசுவதில் தவறில்லை.

ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை இன்னும் தெளிவாகப் புரியலாம். ஒருதடவை ஒரு பெண்மணி ஏதோ ஒரு தேவைக்காக நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அப்பொழுது நபியவர்கள், உன் கணவர் யார்?" எனக் கேட்டார்கள். இன்னார்தான் என் கணவர்" என்று அவள் சொன்னாள். இரண்டு கண்களிலும் வெள்ளை இருக்குமே அவரா?" என்று (ஏதோ ஒரு குறையைச் சுட்டுவதுபோல்) நபிகளார் கேட்டார்கள்! பிறகு அந்தப்பெண் விரைவாக வீடு திரும்பி தன் கணவரின் கண்களையே கூர்ந்து கவனிக்கத் தொடங்கினாள். கணவர் கேட்டார்: உனக்கு என்ன ஆனது?" அப்பொழுது அந்தப் பெண் சொன்னாள்: உங்களுடைய இரண்டு கண்களிலும் வெள்ளை இருப்பதாக நபிகளார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (அப்படி என்ன வித்தியாசூம் உங்கள் கண்களில் என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்) கணவர் சொன்னார்: என்னுடைய கண்களில் கருப்பை விடவும் வெண்மை அதிகமாக இருப்பது தெரிகிறதா? அதைத்தான் நபிகளார் குறிப்பிட்டி ருப்பார்கள்! - அப்பொழுதான் நபியவர்கள் சுட்டிக் காட்டிய நகைச்சுவையான பேச்சு அந்தப் பெண்ணுக் குப் புரிந்தது!

- அவ்வாறு உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் கூறியதும் - பரவாயில்லை., நோயின் உழற்றல் எதுவுமின்றி மகன் நிம்மதியாய் உறங்கத்தான் செய்கிறார் எனக்கருதிக்கொண்டு வழமையான நடவடிக் கையை மேற் கொண்டார்கள் அபூ தல்ஹா அவர்கள். வெளியே சென்று வந்த களைப்பு நீங்கி நன்றாக உணவு உட் கொண்டு உம்மு ஸு லைமுடன் சந்தோசமாக இருந்தார்கள். தாம்பத்திய உறவும் கொண்டார்கள்! அது வரையில் எதுவும் சொல்லாமல் எல்லாம் முடிந்த பிறகே மகன் மரணம் அடைந்த செய்தியைச் சொல்லி அவனை அடக்கம் செய்யுங்கள் என்றார்கள் உம்மு ஸு லைம் அவர்கள்!

காலையில் சிறுவனை அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அடக்கம் செய்யும் பொழுதே விஷயம் நபி (ஸல்) அவர்களுக்குத் தெரியவந்தது! செய்தியைக் கேட்டதும் அவ்விருவருக்கும் குழந்தைப் பாக்கியம் வேண்டி நபிகளார் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தது அன்பு மகனின் பிரிவினால் அவ்விரு வரும் மனம் கலங்கக் கூடாது என்பதற்காகவே!

அவ்வாறே ஓர் ஆண் குழந்தை பிறக்கவே அதற்கு அப்துல்லாஹ் என்று பெயர் சூட்டி அதன் அருட் பாக்கியத்திற்காகவும் பிரார்த்தனை செஷய்தார்கள் நபியவர்கள்.

அன்று பிறந்த அப்துல்லாஹ்வின் எதிர்கால வாழ்வு எப்படி இருந்தது என்பதும் கவனிக்கப்பட்டு அந்த விளக்கமும் இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆம்! மதீனாவாழ் முஸ்லிம்களில் ஒருவர் அந்த விவரத்தை அறிவித்துள்ளார். அன்று நபியவர்கள் எந்தக் குழந்தைக்காக அருட்பாக்கியம் வேண்டிப் பிரார்த் தனை செய்தார்களோ அந்த அப்துல்லாஹ் வுக்கு பிற்காலத்தில் ஒன்பது ஆண்மக்கள் பிறந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு வரும் குர்ஆனைக் கற்றுத் தேர்ந்து பெரும் அறிஞர்களாய்த் திகழ்ந்தார்கள்! இது நபியவர்கள் செய்த பிரார்த்தனையின் நற்பயனே அன்றி வேறென்ன!

இந்த நபிமொழி மூலம் மேலும் பல விஷயங்கள் தெரியவருகின்றன. நபி (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழங் களை மென்று அதனைக் கையிலெடுத்து குழந்தையின் உள்வாயின் மேற்பகுதியிலும் அடிநாக்கிலும் தடவுவார்கள். அந்த முறைக்கு அரபியில் தஹ்னீக் என்பர்.

நபிகளாரின் உமிழ் நீரின் பாக்கியம் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும்., அதுவே அதன் வயிற்றினுள் முதலில் செஷல்லவேண்டும் என்பது நோக்கமா? அல்லது அனைத்திற்கும் முதலில் பேரீத்தம் பழசூஷ்ஷாறும் ஷத்தும் குழந்தையின் வயிற்றுள் செஷல்லவேண்டும் என்பது நோக்கமா?

முந்தையதுதான் நோக்கமெனில் அது நபி(ஸல்)அவர்களுக்கு மட்டுமே சொஷாந்தமான - பிரத்தியேகமான சிறப்புகளுள் ஒன்றாகும். வேறு யாரும் இது போன்று பேரீத்தம் பழங்களை மென்று குழந்தைக்கு தச்னீக் செய்ய வேண்டியதில்லை! ஏனெனில் நபியவர்கள் நீங்கலாக வேறு யாருடைய உமிழ் நீருக்கும் அந்த சிறப்பு கிடையாது!

இரண்டாவதுதான் நோக்கமெனில் அதாவது, பேரீத்தம் பழச்சாரும் சத்தும் குழந்தையின் வயிற்றில் சதலில் செல்ல வேண்டுமென்பது நோக்கம் எனில் ஒவ்வொரு குழந்தைக்கும் இதுபோல் தஹ்னீக் செய்ய வேண்டும் என்று நாம் சொல்லலாம்!

மேலும் நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்ததன் பயனாக அந்தக் குழந்தைக்கும் அதன் சந்ததி களுக்கும் அல்லாஹ் பெரும் பாக்கியங்கள் அருளியது அல்லாஹ்வின் வல்லமைக்கான சான்றுகளில் ஒன்றே!

மேலும் குழந்தைகளுக்கு அப்துல்லாச் (அல்லாஹ்வின் அடிமை)என்றும் அப்துர் ரஹ்மான் (கருணைமிக்க இறைவனின் அடிமை) என்றும் பெயர் சூட்டுவது சிறப்பானது., விரும்பத்தக்கது என்பதும் இந்த நபிமொழியில் இருந்து தெரிகிறது.

நபி(ஸல்)அவர்கள் அருளினார்கள்: உங்கள் பெயர்களிலேயே அல்லாஹ்வுக்குப் பிரியமானது அப்துல்லாஹ் என்பதும் அப்துர் ரஹ்மான் என்பதும்தான்" நூல்: முஸ்லிம்

அழகிய பெயர்களைத் தேர்வு செய்து உங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டு வதன் மூலம் அல்லாச்விடம் நற்கூலியும் கிடைக்கும், உங்கள் பிள்ளைகளுக்கு நல்லுபகாரம் செய்தவர்களாகவும் நீங்கள் ஆகிறீர்கள்!

ஆனால் இன்று பெரும்பாலான மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நூதன மான பெயர்களைத் தேடுகிறார்கள். இதுவரையில் யாருக்குமே சூட்டப்படாத புதிய பெயர்கள் வேண்டுமாம்! அப்படி ஒரு பெயரைத் தேர்வு செய்யுங்கள் என்று கேட்கிறார்கள்!

இந்தப் போக்கு எதிர் காலத்தில் பிள்ளைகளின் பெரும் மனக் கஷ்டத்திற்கே வழிவகுக்கும்! எவ்வாறெனில் அந்த நூதனமான பெயரைக் கேட்போர் அனைவரும் இது என்ன பெயர்? இப்படியும் ஒரு பெயரா? என்று ஏளனமாகப் பேசும்பொழுது அது பிள்ளைகளின் மனத்தைப் புண்படுத்தும். அந்தப் பாவங்கள் உங்கள் மீதுதான் விழும்! ஏனெனில் அத்தகைய விநோதனமான பெயர்களைச் சூட்டியது நீங்கள்தானே!

இங்கே இன்னொன்றையும் குறிப்பிடுவது பயன்மிக்கதே! அதாவது, சிலர் புதிய பெயர்களைத் தேர்வு செய்வ தாகச் சொல்லிக்கொண்டு இறைநிராகரிப்பாளர்களின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர்! அல்லது நடிகர் - நடிகைகளின் பெயர்களைச் சூட்டுகின்றனர்! இது எவ்வளவு பெரிய அறியாமை! வெட்கக் கேடு! கேட்டால் இவர்கள் பிரபலங்கள்., அதனால் அவர்களின் பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டுகிறோம் என்கிறாகள்! இத்தகைய போக்கு குறித்து நபி (ஸல்) அவர்கள் செய்த எச்சரிக்கையைப் பாருங்கள்:

<u>யார் பிற கூட்டத்தினரைப் போல் தங்களைப் பாவித்துக்கொள்கிறார்களோ அவர்கள் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே!"</u>(நூல்: அபூதாவூத், அச்மத்)

இன்னும் சிலர் மகான்களின் பெயர்களைச் சூட்டுவதில்தான் பாக்கியம் உள்ளதெனக் கருதுகின்றனர். பெரியார்களின் பெயர்களைச் சூட்டுவதில் தவறில்லைதான். ஆனால் அவையும் நல்லபெயர்கள்தானா என்ப தைப் பார்க்க வேண்டும். கண்டகண்ட பெயர்களிலெல்லாம் தர்சாக்கள் உள்ளன, நம் நாடுகளில்! ஆவை யாவும் மகான்களின் பெயர்கள்தானே என்று சொல்லி அந்தப் பெயர்களைச் சூட்டுவது கூடாது!

வேறு சிலர் வெகு காலமாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாத நிலையில் ஏதேனும் மகானின் பெயரில் நேர்ச்சை செய்துகொண்டு குழந்தை பிறந்ததும் - அது ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரியே அந்த மகானின் பெயரைக் குழந்தைக்குச் சூட்டும்பொழுது பிச்சை எனும் வார்த்தையையும் சேர்த்து மைதீன் பிச்சை, நாகூர்பிச்சை என்று சூட்டுகிறார்கள்! இது நமது ஈமான் - விசுவாசத்தையே பாழாக்கி விடும் போக்காகும்! பிள்ளைகள் அல்லாஹ் நமக்களித்த பிச்சையே தவிர மகான்கள் அளித்த பிச்சை அல்ல!

- பொறுமையின் சிகரமாய்த் திகழ்ந்த உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் பிள்ளையின் மரணத்தினால் பதறிப் பரிதவித்து மனம்நொடிந்து உட்கார்ந்து விடக்கூடாது என்பதைக் கணவருக்கு நயமாக எடுத்துச் சொல்லிட ஒரு கேள்வி கேட்டார்கள். அதுவும் நம் சிந்தனைக்குரியது! உயர் தத்துவத்தை விளக்கக் கூடியது!

<u>அபூ தல்சாவே! உங்கள் கருத்து என்ன? ஒரு கூட்டம் தங்களது பொருள் ஒன்றை ஒரு வீட்டாரிடம் இரவலாகக் கொடுத்துவைத்தார்கள்., பிறகு தங்களது பொருளைத் திருப்பிக்கேட்கும்பொழுது தர முடியாது என்று சொல்லும் உரிமை அந்த வீட்டாருக்கு உண்டா?"</u>

- அதாவது, நம்முடைய பிள்ளைகள் அல்லாச்வின் உடமைகள்! அவற்றை அவன் நம்மிடம் இரவலாகத் தந்துவைத்துள்ளான். அவன் விரும்பும் நேரத்தில் நம்மிடம் இருந்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் உரிமை அவனுக்கு உண்டு!-உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் இப்படி ஓர் உதாரணத்தைக் கூறியது தம் கணவர் அபூ தல்சா (ரலி) அவர்கள் பதற்றம் அடையாதிருப்பதற்காகத்தான்., பொறுமை காத்து அதற்கான கூலியை அல்லாச்விடம் எதிர்பார்த்திருப்பதற்காகத்தான்!

உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் பொறுமையிலும் புத்திக்கூர்மையிலும் சிகரமாய்த் திகழ்ந்தார்கள் என்ப தையே இது காட்டுகிறது! இல்லையெனில் குழந்தையின் பிரிவால் கடும் துன்பத்திற்குள்ளாவதில் தந்தை

யைப் போன்றது தான் தாயின் நிலையும்! இன்னும் சொல்லப்போனால் பெண்கள்தாம் பெரும்பாலும் பலவீன மானவர்கள். அதிகம் மனம் நொடிந்து உட்கார்ந்து விடுவர்., துயரம்தாளாமல் துடிதுடித்துப்போவர்! ஏனெ னில் அவர்கள்தாம் பொறுமையில்லாதவர்கள்! ஆனால் உம்மு ஸு லைம்(ரலி)அவர்கள் ஒரு வித்தியாசமான பெண்மணி!

அபூ தல்ஹா (ரலி) அவர்களது கறாமத் எனும் சிறப்புத் தன்மையும் இங்கு கவனிக்கத் தக்கதாகும். அவர் களும் உம்மு ஸு லைமும் நபி (ஸல்) அவர்களுடன் பயணத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த நிலையில் உம்மு ஸு லைம் (ரலி) அவர்களுக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டு அபூ தல்ஹா (ரலி)அவர்கள் பயணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டபொழுது அவர்கள் செய்த பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது! உடனே உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் பிரஷுவ வேதனை தணிந்தது. எந்தத் தொல்லையும் இல்லாதது போன்றாகி விட்டது! இது அபூ தல்ஹா அவர்களுக்கு அல்லாஹ் அளித்த கறாமத் - அற்புதம் ஆகும். ஆம்! அவர்களது பிரார்த்தனையை ஏற்று உம்மு ஸு லைமின் பிரசவ வேதனையை அல்லாஹ் இலகு வாக்கினான்!

உம்மு ஸு லைம்(ரலி) அவர்களது வாழ்க்கையில் முஸ்லிம் பெண்மணிகளுக்கு மிகச்சிறந்த முன்மாதிரி உள்ளது! ஆணினமே ஆச்சரியப்படத்தக்க வகையிலான பொறுமையும் அறிவுத் திறமையும் அவர்கள் பெற்றி ருந்தார்கள்! மகனாரின் மரணச் செய்தியை நயமாக எடுத்துச்சொல்லி கணவரை மகிழ்வித்தது ஒருபெண் தம் கணவருக்கு ஆற்றும் கடமைக்கும் காட்டும் பரிவுக்கும் மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகும்!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) முன்னைவிடவும் அதிக அமைதியாக: முன்னெப் போதும் இல்லாத அமைதியாக | ١) أسكن ما كان : أهدأ أوقاته |
| 2) அவர்களுடன் வீடு கூடினார்கள்: தாம்பத்திய உறவு கொண்டார்கள். | ٢) أصاب منها : كان بينه و بينها ما يكون بين الرجل و المرأة |
| 3) மகனை அடக்கம் செய்யுங்கள்: புதைத்து விடுங்கள். | ٣) واروا الصبي: واروه بالدفن |
| 4) நீங்கள் வீடு கூடினீர்களா?: தாம்பத்திய உறவு கொண்டீர் களா? | ٤) أعرستم : المراد منه الوطء |
| 5) தஹ்னீக் செய்தார்கள்: ஸிஹாஹ் என்ற அகராதியில் உள் ளது: குழந்தைக்கு தஹ்னீக் செய்தேன்: பேரீத்தம் பழத்தை யோ அது போன்றதையோ வாயில் போட்டுமென்றேன். பிறகு குழந்தையின் மேல் வாயிலும் உட்பகுதிகளிலும் தடவினேன். | ٥) حنك: في الصحاح: حنكت الصبي اذا مضغت تمـــرا أو غيره ثم دلكته بحنكه |
| 6) அலங்கரித்தார்கள்: தம் கணவருக்காக அலங்கரித்தார் கள். | ٦) تصنعت : تزينت لزوجها |
| 7) என்னை அசுத்தமாக்கி விட்டேன்: உடலுறவின் மூலம் துடக்கானேன். | ٧) تلطخت: تقذرت بالجماع |
| 8) இரவில் பிரவேசிக்கமாட்டார்கள்: முன்னறிவிப்பின்றி இர வில் வந்து சேரமாட்டார்கள். | ٨) لا يطرقها طروقا : لا يدخلها ليلا |
| 9)பிரசவ வேதனை. | ٩) المخاض: وجع الطلق والولادة |

## கேள்விகள் الأسئلة

1) உம்மு ஸு லைம் (ரலி) அவர்களின் முதல் கணவரின் பெயர் என்ன? அவரது நிலை என்ன?
2) மரணம் அடைந்த அபூ உமைருக்கும் அனஸ் (ரலி) அவர்களுக்கும் உள்ள உறவு என்ன?
3) அத் தௌரிய்யா என்பதன் விளக்கம் என்ன?
4) தச்னீக் என்பதன் கருத்து என்ன? அதன் கூட்ட நிலை என்ன?
5) பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவதில் நபிகளாரின் வழிகாட்டுதல் என்ன?
6) பிள்ளைகள் அல்லாச் நம்மிடம் ஒப்படைத்துள்ள அமானிதம் என்பதை உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் எப்படி விவரிக்கிறார்கள்?
7) அபூ தல்ஹா (ரலி) அவர்களின் கறாமத் எனும் சிறப்புத் தன்மையை விவரிக்கவும்.

# வீரமும் கோபமும்

٤٥ – و عن أبي هريرة ﷺ أن رسول الله ﷺ قال: لَيْسَ الشَّدِيْدُ بالصُّرْعَةِ اِنَّمَا الشَّدِيْدُ الَّذِيْ يَمْلِكُ نَفْسَهُ عِنْدَ الْغَضَبِ – متفق عليه – والصُّرْعَةُ : بِضَمِّ الصَّادِ وَ فَتْحِ الرَّاءِ وَأَصْلُهُ عِنْدَ الْعَرَبِ مَنْ يَصْرَعُ النَّاسَ كَثِيْرًا

ஹதீஸ் 45

அபூ ஹு ரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்)அவர்கள் அருளினார்கள்: பலசாலி என்பவன் (எதிரியை) கீழே வீழ்த்துபவன் அல்லன். மாறாக கோபத்தின்பொழுது யார் தன்னைக் கட்டுப் படுத்துகி றானோ அவன்தான் பலசாலி! (நூல்: புகாரி, முஸ்லிம்)

அரபுகளிடத்தில் அஸ் ஸு ரஆ என்பதன் அசல் பொருள், மக்களை அதிகமாக கீழே வீழ்த்துபவன் என்பதாகும்.

٤٦ – و عن سُلَيْمَانَ بْنِ صُرْدٍ ﷺ قال : كُنْتُ جَالِسًا مَعَ النَّبِي ﷺ وَ رَجُلَانِ يَسْتَبَّانِ وَ أَحَدُهُمَا قَدِاحْمَرَّ وَجْهُــهُ وَ انْتَفَخَــتْ أَوْدَاجُهُ فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ اِنِّي لأَعْلَمُ كَلِمَةً لَوْ قَالَهَا لَذَهَبَ عَنْهُ مَا يَجِدُ ، لَوْ قَالَ : أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ذَهَبَ مِنْهُ مَا يَجِدَ فَقَالُوْا لَهُ: اِنَّ النَّبِي ﷺ قَالَ : تَعَوَّذْ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ – متفق عليه

சதீஸ் 46

ஸு லைமான் பின் ஸு ர்த் (ரலி) அறிவிக்கிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களின் அவையில் அமர்ந்தி ருந்தேன். அப்பொழுது இரு மனிதர்கள் பரஸ்பரம் ஏசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரின் முகம் சிவந்து விட்டது. அவருடைய நரம்புகள் புடைத்துவிட்டன. அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: நான் ஒரு வார்த்தையை அறிவேன். அதை அவர் சொன்னரெனில் அவரது கோபம் அகன்றுவிடும். விரட்டப் பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாச்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று அவர் சொன்னால் இவரது கோபம் போய்விடும்! அப்பொழுது மக்கள் அந்த மனிதரை நோக்கிச் சொன்னார்கள்: விரட்டப்பட்ட ஷைத் தானை விட்டும் நீ அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுமாறு நபியவர்கள் சொல்கிறார்கள்" (புகாரி, முஸ்லிம்)

**தெளிவுரை الشرح**

கோபம் கொண்ட மனிதனின் உள்ளத்தில் ஷைத்தான் தீ மூட்டிச் சூடேற்றுகிறான்! அதனால் கோபம் கொண்டவனின் முகம் சிவந்து விடுகிறது. நரம்பு - நாளங்களெல்லாம் புடைத்துப் பருத்துவிடுகின்றன! அப்பொழுது நிதானமிழந்து போகிறான்! என்ன பேசுகிறோம்., என்ன செய்கிறோம் என்பது கூட அவனுக்குத் தெரிவதில்லை!

இதனால்தான் ஒருமனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து எனக்கு அறிவுரை பகருங்கள் என்ற பொழுது நபி (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதே என்றார்கள். அவர் மீண்டும் எனக்கு அறிவுரை பகருங்கள் என்றார். அதற்கும் நபியவர்கள் நீ கோபம் கொள்ளாதே என்றார்கள். மூன்றாவது தடவையும் அந்த மனிதர் எனக்கு அறிவுரை பகருங்கள் என்றபொழுதும் நபி (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதே என்றே சொன்னார்கள்! (நூல்: புகாரி)

சண்டை - தகராறு என்று வரும்பொழுது மக்களை கீழே வீழ்த்தி விடுபவன் வீரன் அல்லன் என்று இங்கே விளக்கப்படுகிறது. ஆனால் வீரன் - பலசாலி என்று மக்கள் புகழ்வதோ அந்த மனிதனைத்தான்! உண்மையில் வீரன் யாரென்றால், கோபத்தின்பொழுது தன்மனத்துடன் போராடி கோபத்தை அடக்குகிறானே அவன்தான்! உண்மையில் அதுதான் வீரச்செயல்! அதுதான் பாரதூரமான - கஷ்டமான காரியம்! எல்லோரா லும் அது முடியாது. மனத்தை வென்றடக்கி அதன் தீய தூண்டுதல்களைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளானே அவனால்தான் அது முடியும்! அப்படிப்பட்ட மனிதனைத்தான் வீரன் என்று புகழவேண்டும் என நபியவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்!

இந்தவகையில் கோபத்தை அடக்கவும் மனத்தைக் கட்டுப்படுத்தவும் இந்த நபிமொழி ஆர்வமூட்டுகிறது. மனத்தைக் கட்டுப்படுத்தாமல் அதன் தீய தூண்டுதல்களின் பின்னால் சென்றுகொண்டிருந்தால் பேரிழப்புதான் ஏற்படும். பிற்பாடு மனம் வருந்தும் நிலைதான் வரும்!

இதனை அன்றாடம் நாம் காணலாம். சிலர் எடுத்ததெற்கெல்லாம் கோபப்படுவார்கள். மிகச்சாதாரண விஷயத்திலும் ஆத்திரம் கொண்டு அவசரப்பட்டு மனைவியைக்கூட மணவிலக்கு சொல்லிவிடுகிறார்கள்! அது

மணவிலக்கின் கடைகூஷித் தவணையாக இருக்கும்! அதனால் கணவனும் மனைவியும் நிரந்தரமாகப் பிரிய வேண்டியதாகிவிடுகிறது! பிறகு ஐயோ! அறியாத்தனமாக மணவிலக்கு செய்து விட்டேனே என்று புலம்பிக் கொண்டு திரிகிறார்கள்!

இன்னும் சிலர் கோபத்தின் வேகத்தை தன் மகன் மீது அல்லது மனைவி மீது காட்டுவார்கள். கண் மண் தெரியாமல் அடித்து நொறுக்கி விடுவார்கள்! அதனால் சிலபொழுது முரட்டுத்தனமான அந்த அடிகளைத் தாங்க முடியாமல் அவர்கள் இறந்தே போய்விடுகிறர்கள்! வேறு சிலர் உணர்ச்சி வசப்பட்டு தமது உடமை களையே அழித்துவிடுகிறார்கள்! ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டம் என்று சொல்வார்களே அதுபோல இவ்வாறு பற்பல நிகழ்ச்சிகளை நாம் காண்கிறோம். அல்லது கேள்விப்படுகிறோம்!

இதனால்தான் கோபம் உள்ள நேரத்தில் தீர்ப்பு வழங்கக்கூடாது என்று நீதிபதியைக்கூட தடுத்துள்ளார் கள் நீதி நபி(ஸல்) அவர்கள். (நூல்: புகாரி) ஏனெனில் பிரகூஷ்னை குறித்து ஆழமாகச் சிந்திக்க விடாமல் கோபம் அவரைத் தடுத்துவிடுகிறது! அப்பிரச்சனையில் ஷரீஅத் அளிக்கும் தீர்ப்பு என்ன என்று ஒப்பு நோக்கி ஆராய்வதற்கு ஆத்திரம் அவரை விடுவதில்லை! எனவே கோபத்துடன் தீர்ப்பு அளித்து அது அசத்தியத்தின்படி அமைந்து அதனால் அவர் அழிவுக்குள்ளாகிவிடலாம்!

இத்தகைய கோபத்தை அடக்கிட வேண்டும்., அதற்கான வழியைத்தான் இங்கு நபி(ஸல்) அவர்கள் கற்றுத்தருகிறார்கள். அதுதான்: **அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்** (விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்) என்று அல்லாச்விடம் பிரார்த்தனை செய்வது! ஆம்! முன்னர் சொஷன்னது போன்று - கோபத்தின் பொழுது மனத்தில் தீயை மூட்டுவது ஷைத்தான்தான்! எனவே அவனது பகைமையை நினைவில் கொண்டுவந்து -அதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினால் மனம் அமைதிப் படும் என்பது திண்ணம்!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## ஸு லைமான் பின் ஸு ர்த் (ரலி) அவர்கள்

ஸு லைமான் பின் ஸு ர்த்(ரலி)அவர்கள் இறைமார்க்கப் பற்றும் பயபக்தியும் மிக்கவராக இருந்தார்கள். தமது குலத்தாரிடையே உயர் அந்தஸ்து அவர் களுக்கு இருந்தது. பத்று யுத்தத்தில் கலந்துகொண்ட அன்னார் கொலை சொஷய்யப்பட்டார்கள். அப்பொழுது அவர்களது வயது 93 ஆகும். அன்னா ரிடம் இருந்து 15 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டிருந்தனர். | ١) يستبان: يسب كل منهما صاحبه |
| 2) அவருடைய நரம்புகள்: அதாவது, கழுத்தைச் சுற்றிலுமுள்ள நரம்புகள்.,(ஆடு மாடுகளை அறுப்ப)வர் அந்த நரம்புகளைத்தான் அறுக்கிறார். | ٢) أوداجه: في النهاية الاوداج: ما أحاط بالعنق من العروق التى يقطعها الذابح |
| 3) ஷைத்தான்: வரம்புமீறியவன், மூர்க்கத்தனம் கொண்டவன். ஷாத: சூடானான் அல்லது ஷ(த்)தன: தூரமானான் எனும் வேர்ச் சொல்லில் இருந்துள்ள வார்த்தையாகும் இது. | ٣) الشيطان: العاتي المتمرد ، مـــن شـــاط بمعـــنى احترق أو من شطن بمعنى بعد |
| 4) விரட்டப்பட்டவன்: அல்லாஹ்வின் அருளில் இருந்து தூர மாக்கப்பட்டவன்! | ٤) الرجيم : فعيل معني مفعول ، المبعد من رحمـــة الله |

### கேள்விகள் الاسئلة

1) பலகூஷாலி என்பதற்கு நபிகளார் அவர்கள் அளித்த விளக்கம் என்ன?
2) கோபத்தினால் ஏற்படும் தீமைகளை விளக்கவும்.
3) கோபம் ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய உபாயம் என்ன? அதற்கு நபியவர்கள் காண்பித்துத்தந்த வழி என்ன?

# கோபமும் துயரமும்

٤٧ – و عن معاذ ين أنسٍ ﷺ أنَّ النَّبِي ﷺ قَالَ : مَنْ كَظَمَ غَيْظًا وَهُوَ قَادِرٌ عَلَي أنْ يُنْفِذَهُ ، دَعَاهُ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَي عَلَي رُؤُسِ الْخَلاَئِقِ يَوْمَ الْقِيَامَةِ حَتَّي يُخَيِّرَهُ مِنَ الْحُوْرِ الْعِيْنِ مِا شاَءَ – رواه أبو داود و الترمذي وقال : حديث حسن

٤٨ – و عن أبِى هريرة ﷺ ، أنَّ رَجُلاً قَالَ للنَّبِي ﷺ أوْصِنِي قالَ : لاَ تَغْضَبْ فَرَدَّدَهُ مِرَارًا قَال: لاَ تَغْضَبْ – رواه البخاري

٤٩ – وعن أبِى هريرة ﷺ قال : قال رسول الله ﷺ مَا يَزَالُ الْبَلاَءُ بِالْمُؤمِنِ وَ الْمُؤمِنَةِ فِي نَفْسِهِ وَ وَلَدِهِ وَ مَالِهِ حَتّي يَلْقَي اللهَ تَعَالَى وَمَا عَلَيْهِ خَطِيْئَةٌ – رواه الترمذي وقال : حديث حسن صحيح

**ஹதீஸ் 47**

முஆத் பின் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ஒருமனிதன் சினத்தைச் செல்லுபடியாக்க ஆற்றல் பெற்றிருக்கும் நிலையிலும் அதனை மென்று விழுங்கினால் அவனை மறுமை நாளில் எல்லாப் படைப்பினங்களுக்கு முன்னிலையில் அல்லாஹ் அழைப்பான். ஹூருல் ஈன் எனும் அழகுமிக்க (சுவனத்துப்) பெண்களில் அவன் விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள அவனுக்கு அனுமதி அளிப்பான். (நூல்: அபூ தாவூத், திர்மிதி)

**ஹதீஸ் 48**

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து எனக்கு அறிவுரை கூறுங்கள் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதிருப்பாயாக என்றார்கள். மீண்டும் அறிவுரை கூறுமாறு பல தடவை அவர் கேட்டதற்கும் நபிகளார் (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதிருப்பாயாக என்றே பதில் அளித்தார்கள்! (நூல்: புகாரி)

ஹதீஸ் 49

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: விசுவாசும் கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் - அவர்களுடைய உயிர், பிள்ளைகள் மற்றும் செல்வம் ஆகியவற்றில் கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது! (அவர்களுடைய தவறுகளுக்கு அது பரிகாரமாகிவிடுவதால்) இறுதி யில் அவர்கள் மீது எவ்வித் தவறும் இல்லாத நிலையில் அல்லாஹ்வை அவர்கள் சந்திக்கிறார்கள்! (நூல்: திர்மிதி)

## தெளிவுரை الشرح

இம்மூன்று நபிமொழிகளும் பொறுமையின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. முதல் ஹதீஸின் கருத்து: நியாயமாக நடவடிக்கை எடுத்து தனது சினத்தைத் தீர்க்க ஆற்றல் பெற்றிருந்தும் ஒருமனிதன் சினத்தை அடக்கு கிறான்., பொறுமையை மேற்கொள்கிறான் எனில் அதற்கு அல்லாஹ்விடத்தில் மகத்தான பரிசு உள்ளது!

அரபியில் அல் ஃகைழ் - الغيظ என்றால் கடும்கோபம் அதாவது க்ஷினம் என்று பொருள். தனது சினத் திற்குப் பழிதீர்க்க வலிமை இல்லாதவன் சினத்தை மென்று விழுங்கினான் என்று சொல்லப்படு வதில்லை! கோபம் எனும் சொல்கூட ஆற்றலை வெளிப்படுத்தும் வார்த்தையே! ஆனால் துயருறுதல் எனும் வார்த்தையில் பலவீனத்தின் பொருள் உள்ளது. அதனால்தான் கோப நிலை - அது தன்னைப் பொறுத்து பூரணமான ஒன்றெனக் கூறப்படுகிறது! இந்த ரீதியில்தான் அல்லாஹ் கோபம் கொள்கிறான் என்று சொல்வது சரிகாணப் படுகிறது. ஆனால் அல்லாஹ் துயரப்படுகிறான் என்று சொல்லப்படுவதில்லை! ஏனெனில் நினைத்ததை நிறை வேற்ற முடியாத பொழுதுதான் துயரப்படும் நிலை வருகிறது! அல்லாஹ்வோ ஆற்றல்கள் நிறைந்தவன்!

ஆக! கடுமையாகக் கோபம் கொண்ட ஒருமனிதன் தனது சினத்திற்குப் பழிவாங்கும் சக்தி பெற்றிருந்தும் பொறுத்துக்கொள்கிறான்., சகித்துக் கொள்கிறான் என்றால் அது அல்லாஹ்விடத்தல் மிகவும் பிரியமான நற்குணமாக மதிக்கப்படுகிறது!

இரண்டாவது சதீஸின் கருத்து இதுதான்: அறிவுரை கேட்டுவந்த அந்த மனிதருக்கு மூன்று தடவையும் கோபம் கொள்ளாதே என்பதையே அறிவுரையாக நபியவர்கள் கூறியதற்குக் காரணம் அந்த மனிதர் அதிகம் கோபம் கொள்ளும் சுபாவம் உடையவராக இருந்தார் என்பதுதான்! எனவே அவரது பலவீனத்திற்கேற்ப

அவருக்குப் புத்திமதி கூறுவதே பொருத்தம்! நோய்க்கேற்ற மருந்து வழங்குவதில் நபிகளார் (ஸல்) அவர்கள் கைதேர்ந்த வர்கள்! பொறுமைப் பண்பே எந்நிலையிலும் சிறப்புக்குரியது என்பதையே இது காட்டுகிறது!

மூன்றாவது சதீஸின் கருத்து இதுதான்: மனிதனுக்கு பல்வேறு விதங்களில் தொல்லைகள், துன்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை அவனுக்கும் அவனுடைய உடமைகளுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் ஏற்படுகிற நோய்நொடிகள், கஷ்டங்கள்! இவ்வாறு தொடர்கிற துன்பங்கள் மனிதனின் பாவங்களுக்குப் பரிகாரமாக அமைகின்றன! பிறகு அவன் பூமியில் நடந்து செல்கிறான்.,அவன் மீது எவ் விதப் பாவங்களும் குற்றங்களும் இல்லாத நிலையில்! ஆனால் இதற்கு ஒருநிபந்தனை உண்டு. அதுதான் பொறுமை! பொறுமை கொள்வதற்கு மாறாக அந்த மனிதன் கோபம் கொண்டால் கோபத்தின் விளைவுதான் அவனுக்குக் கிடைக்கும்!

## அறிவிப்பாளர் அறிமுகம்
## முஆத் பின் அனஸ் (ரலி)அவர்கள்

எகிப்து மற்றும் சிரியா ஆகிய தேசங்களில் வாழ்ந்த முஆத் பின் அனஸ் (ரலி) அவர்களின் மூலம் 30 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) சினத்தை மென்று விழுங்கினான்: சினத்தை அருந்தினான். அதற்குத் தூண்டுகோலாக இருந்ததைச் சகித்துக் கொண்டான். பொறுத்துக் கொண்டான். இதன் அகராதிப் பொருள்: அடக்குதல், வெளித்தெரியாமல் தடுத்தல்! | ١) كظم غيظا : تجرع الغيظ واحتمل سببه وصبر عليه و اصل الغيظ : الحبس و المنع من الظهور |
| 2)அல் ஹூருல்ஈன்: ஹூர் என்பது ஹௌராஉ என்பதன் பன்மை. இதன் பொருள்: அதிக வெண்மையான வெள்ளை விழியும் அதிக கருமையான கருவிழியும் கொண்ட பெண்கள். அல் ஈன்: ஐனாஉ என்பதன் பன்மை. அகன்ற விழிகள் உடைய பெண்கள் என்று பொருள். இங்கு அதன் கருத்து அழகிய பெண்கள் என்பதாகும். | ٢) الحور العين : الحور جمع حوراء وهو شديدة البياض في العين و شديدة السواد و المراد هنا الحسان من النساء |

## கேள்விகள் الاسئلة

1) கோபம், சினம், துயரம் ஆகிவற்றின் விளக்கம் என்ன?
2)மூன்று தடவையும் ஒரே அறிவுரையையே நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதருக்கு வழங்கியதன் இரகசியம் என்ன?
3) அல் ஹூருல் ஈன் என்பதன் விளக்கம் என்ன?
4) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## உமர் (ரலி) அவர்களின் உயர் பண்பு!

٥٠ – و عن ابن عباس رضي الله عنهما قال : قَدِمَ عُيَيْنَةُ بْنُ حِصْنٍ فَنَزَلَ عَلَي ابْنِ أَخِيْهِ الْحُرِّ بْنِ قَيْسٍ، وَكَانَ مِنَ النَّفَرِ الَّذِيْنَ يُدْنِيْهِمْ عُمَرُ ﷺ وَكَانَ الْقُرَّاءُ أَصْحَابَ مَجْلِسِ عُمَرَ ﷺ وَمُشَاوَرَتِهِ كُهُوْلاً كَانُوْا أَوْ شُبَّانًا فَقَالَ عُيَيْنَةُ لابْنِ أَخِيْهِ : يَا بْنَ أَخِي لَكَ وَجْهٌ عِنْدَ هَذَا الاَمِيْرِ فَاسْتَأْذِنْ لِي عَلَيْهِ ، فِاسْتَاذَنَ فَأَذِنَ لَهُ عُمَرُ فَلَمَّا دَخَلَ قَالَ : هِيْ يَا بْنَ الْخَطَّابِ فَوَ اللهِ مَا تُعْطِيْنَا الْجَزَلَ وَ لاَ تَحْكُمُ فِيْنَا بِالْعَدْلِ فَغَضِبَ عُمَرُ ﷺ حَتّي هَمَّ أَنْ يُوْقِعَ بِهِ فَقَالَ لَهُ الْحُرُّ : يَا أَمِيْرَ الْمُؤْمِنِيْنَ اِنَّ اللهَ تَعَالي قَالَ لِنَبِيِّهِ ﷺ ( خُذِ الْعَفْوَ وَأمُرْ بِالْعُرْفِ وَ أَعْرِضْ عَنِ الْجَاهِلِيْنَ (سورة الاعراف الآية : ١٩٨) وَ أَنَّ هِذَا مِنَ الْجَاهِلِيْنَ ، وَاللهِ مَا جَاوَزَ عُمَرُ حِيْنَ تَلاَهَا وَكَانَ وَقَّافًا عِنْدَ كِتَابِ اللهِ – رواه البخاري

சதீஸ் 50

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உயைனா இப்னு ஹிஸ்ன் என்பார் (மதீனா) வந்து தன்னுடைய சகோதரர் மகனாகிய ஹுர்ரு பின் கைஸ் என்பாரிடம் தங்கியிருந்தார். உமர் (ரலி) அவர்கள்

யார் யாரையெல்லாம் தங்களது அவையில் நெருக்கமான அந்தஸ்தில் வைத்திருந்தார்களோ அத்தகைய நபர்களுள் ஹுர்ரும் ஒருவர். குர்ஆனை கற்றறிந்த அறிஞர்கள்தான் உமர் (ரலி) அவர்களது அவைத் தோழர்களாகவும் ஆலோசகர்களாவும் இருந்தனர். அவர்கள் பெரிய வயதுடையவர்களாயினும் இளைஞர்களா யினும் சரியே! தன் சகோதரர் மகனிடம் உயைனா சொன்னார்: மகனே! இந்த அமீரிடத்தில் உனக்கு செல்வாக்குள்ளது. எனவே அவரைச் சத்திப்பதற்கு எனக்கு அனுமதி வாங்கிக் கொடு!" அவ்வாறே அவர் அனுமதி கேட்டார். உமர் (ரலி) அவர்களும் அனுமதி கொடுத்தார்கள்.

உமர் (ரலி) அவர்களின் சமூகத்தில் உயைனா வந்தபொழுது சொன்னார்: இதோ! கத்தாபின் மகனாரே! நீர் எங்களுக்கு அதிக மானியம் கொடுப்பதில்லை. மேலும் எங்களிடையே நீதியுடன் தீர்ப்பு அளிப்பதில்லை!" (இதனைக் கேட்டதும்) உமர் (ரலி) அவர்கள் அதிகஅளவு கோபம் கொண்டு அவரைத் தண்டிக்கவே முனைந்து விட்டார்கள்!

அப்பொழுது உமர் (ரலி)அவர்களிடம் ஹுர்ரு சொன்னார்: அமீருல் முஃமினீன் அவர்களே! (குர்ஆனில்) அல்லாஹ் தன்னுடைய நபியை நோக்கிக் கூறுகிறான்: (நபியே! மக்களிடத்தில்) மென்மையையும் மன்னிக் கும் போக்கையும் மேற்கொள்வீராக! நன்மை புரியுமாறு ஏவுவீராக. மேலும் அறிவீனர்களைவிட்டும் விலகியிருப்பீராக! (7 : 199) - இந்த மனிதரும் அறிவீனர்களில் ஒருவர்தானே!" - அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இந்த வசனத்தை அவர் ஓதிக்காட்டியபொழுது உமர் (ரலி) அவர்கள் அதை மீறிச் செல்லவில்லை! அவர்கள் இறைவேதத்தின் வரம்புக்குக் கட்டுப்படுப வர்களாய்த் திகழ்ந்தார்கள்!" நூல்: புகாரி

## தெளிவுரை ~ الشرح

இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) அவர்களைப் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள இந்நிகழ்ச்சியை இமாம் நவவி (ரஹ்) அவர்கள் பொறுமை பற்றிய இந்தப் பகுதியில் கொண்டு வந்துள்ளார்கள்!

நீதிக்கும் நேர்மைக்கும் புகழ் பெற்றவர்கள் உமர் (ரலி)அவர்கள்! சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் பண்பும் அதன் முன் பணியும் இயல்பும் அவர்களிடம் மிகுந்திருந்தன! அவர்களது வாழ்க்கை வரலாற்றில் பல்வேறு நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று பகன்றுகொண்டிருப்பதைக் காணலாம்! ஒரு தடவை ஒருபெண்மணி குர்ஆனின் வசனத்தை ஓதிக்காட்டி நினைவூட்டியபொழுது உடனே உமர் (ரலி) அவர்கள் அதன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள் எனும் நிகழ்ச்சி மிகவும் பிரபலமானதே! அத்தகைய சான்றுகளுள் ஒன்றுதான் இங்கு கூறப்பட்ட இந்நிகழ்ச்சியும்!

உயைனா பின் ஹிஸ்ன் என்பவர் தம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்தான். ஆனாலும் அவர் நாட்டுப்புறத்தவர் என்பதால் நாகரிமற்றவராக இருந்தார். இதோ! கத்தாபின் மகனாரே! என்று அவர் தனது பேச்சைத்தொடங்கியது எவ்வளவு அநாகரிகமானது! பண்பாடற்றது! அதைத்தொடர்ந்து அவர் சொன்ன வார்த்தைளும் அப்படிப்பட்டவைதானே!

<u>நீர் எங்களுக்கு அதிக மானியம் வழங்குவதில்லை. மேலும் எங்களிடையே நீதியுடன் தீர்ப்பு அளிப்ப தில்லை!"</u>

பார்த்தீர்களா., எப்படிப் பொறுப்பின்றி - வாய்க்கு வந்தபடி பேசுகிறார் என்பதை! நீதிமிக்க ஆட்சிக்குப் புகழ்பெற்ற கலீஃபா உமர்(ரலி) அவர்களது நடவடிக்கை நீதி அல்ல என்கிறார்! அதாவது கலீஃபா உமர் அவர்கள் அரசாங்கப் பணத்தை அதிகஅளவு அவருக்கு அள்ளிக் கொடுக்காததை அநீதி என்று கூறுகிறார்! அதுவும் மரியாதைக் குறைவான முறையில் சுட்டிக்காட்டுகிறார்! பண்பாடற்ற அவரது பேச்சுதான் உமர் (ரலி)அவர்கள் அதிகம் கோபம் கொள்ள காரணமாயிற்று! உடனே அவரைப் பிடித்துத் தண்டிக்கவே முனைந்து விட்டார்கள்! இதனைக்கண்டதும் அருகில் நின்று கொண்டிருந்த ஹுர்ரு என்பார் கலீஃபா அவர்களைச் சமாதானப்படுத்தினார்! மன்னித்துவிடுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

அவர் எவ்வாறு சமாதானப்படுத்தினார் என்பதுதான் இங்கு நமக்கு நல்லதொரு பாடம்! அதாவது, உடனே -மேலே சொன்ன குர்ஆன் வசனத்தை அவர் ஓதிக்காண்பித்தார்! இறைவனின் அறிவுரையைக் கேட்ட உடனேயே உமர்(ரலி) அவர்கள் அமைதியாகிவிட்டார்கள். குர்ஆனுடன் அவர்களுக்கிருந்த ஈடுபாடு எத்தகைய ஆழமானது என்பதையே இது காட்டுகிறது! நபிகளாரிடம் பெற்றிருந்த நல்லொழுக்கப் பயிற்சி உமர் (ரலி) அவர்களது இதயத்தை அந்த அளவுக்கு பண்படுத்தி - பக்குவப்படுத்தி இருந்தது என்பதே உண்மை!

அல்லாஹ்வின் அருள்மறை குர்ஆனுக்கு நபித்தோழர்கள் அளித்துவந்த மரியாதையைப் பாருங்கள். இது அல்லாஹ் அருளிய வேதத்தின் கட்டளை என்று அவர்களுக்கு நினைவூட்டியதுமே அதற்குக் கட்டுப்பட்டார்கள்.

இன்று நாமும்தான் அந்த வேதத்தின் மீது விசுவாசம் கொண்டுள்ளோம்., அதன் கட்டளைகளைத் தினமும் செவிமடுக்கிறோம்., ஆனால் குர்ஆனுக்கு உரிய மரியாதை தருகிறோமா? அதன் ஆணைகளுக்குக் கீழ்ப் படிகிறோமா? நம்முடைய வாழ்க்கையில் அதுதான் கேள்விக் குறியாக உள்ளது! கலீஃபாக்களின் வாழ்வில் நடைபெற்ற இத்தகைய நிகழ்ச்சிகளின் மூலம் அத்தகைய பயிற்சியையும் பக்குவத்தையும் நாமும் பெற முயற்சி செய்ய வேண்டும் என்பதே நாம் பெற வேண்டிய பாடம்!

மேலேசொன்ன வசனத்தின் முதல்கட்டளை மென்மையையும் மன்னிக்கும் போக்கையும் மேற்கொள்வீராக என்பதாகும்! இதற்கு அரபியில் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தை (خذ العفو) கருத்துச் செறிவானது! அதாவது, உலகில் மக்களிடம் இணைந்து வாழும்பொழுது சிலர் உங்களிடம் மனம் நோகும் படிப் பேசிடலாம்., முறைகேடாக நடந்திடலாம்., அதற்கெல்லாம் முழு அளவில் பழிவாங்கியே தீருவது என்பது கூடாது. அந்த மனிதர்களின் குணங்களில் - செயல்களில் எது இலகுவானதோ அதை ஏற்றுக்கொண்டு அவர்களை நீங்கள் மனம் பொறுத்திட வேண்டுமே தவிர., உரிமை முழுவதையும் எதிர்பார்க்க முடியாது. அது உங்களுக்குக் கிடைக்காது!

இதேபோல் உங்களிடம் கடன் பெற்ற ஒருமனிதன் சூந்தர்ப்ப சூழ்நிலை யால் கடும் நஷ்டத்திற்குள்ளாகி வறுமைக்கோட்டின் கீழ்த் தள்ளப்பட்டு விடலாம்., அப்பொழுது அவன் தர வேண்டிய பணத்தை முழுமையாக நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்!உங்களது உரிமை முழுவதையும் கேட்காதீர்கள். அது உங்களுக்குக் கிடைக் காது!- இவ்வாறாக மன்னிக்கும் மனப்பான்மையை - மேலான பண்பாட்டைத் தன் தூதருக்கு அல்லாஹ் போதிக்கிறான்!

மேலும் நன்மை புரியுமாறு ஏவுவீராக ( وأمـــر بـــالعرف ) என்பதுதான் இரண்டாவது கட்டளை. மூலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அல் உர்ஃப் என்பதன் பொருள் நன்மையான சொல் - செயல் அனைத்தையும் உள்ள டக்கும். அறியப்பட்டது - பழக்கமானது என்கிற அதன் அகராதிப் பொருளோடு அதற்குள்ள கருத்துப் பொருத்தம் என்ன வெனில், அத்தகைய சொல், செயல்களை ஷரீஅத்தும் நன்மை என்று கருதும்., மக்களின் கருத்தும் அதுவாகவே இருக்கும்!அந்த வகையில் நன்மையைக் கொண்டு ஏவுதல் என்றால் எது நன்மை என்று ஷரீஅத்தும் மக்களும் அறிந்திருக்கிறார்களோ அதனைச் செயல்படுத்தும்படி ஏவுவீராக! முன்கர் - منكر எனும் தீமையைக் கொண்டும் ஏவாதீர்கள்., நன்மை அல்லாததைக்கொண்டும் ஏவா தீர்கள்!-அதாவது, ஷரீஅத்திலும் மக்களிடத்திலும் நன்மை என்று அறிமுக மில்லாததை ஏவாதீர்கள்!ஏனெனில் விஷயங்கள் மொத்தம் மூன்று வகைதான்:

1) தீமை - இதைத் தடுப்பது கடமை.
2) நன்மை - இதைக் கடைப்பிடிக்குமாறு ஏவிட வேண்டும்!
3) தீமையாகவும் நன்மையாகவும் இல்லாதது- இதனை ஏவுதல் என்பதும் இல்லை., தடுத்தல் என்பதுமில்லை.

அதாவது சில விஷயங்கள் உள்ளன., முந்தைய எந்த வகையிலும் சேராதவை! அவற்றைச் செய்வதால் நற்கூலி - புண்ணியம் கிட்டும் என்பதில்லை! அவை ஆகுமான காரியங்கள்., செய்யவும் செய்யலாம்., செய்யாம லும் இருக்கலாம். அப்படி இருக்கும்பொழுது அவற்றைச் செயல்படுத்து மாறு ஏவுவதற்கு என்ன இருக்கிறது?

ஆனால் அறிவுரையின் அடிப்படையில் சொல்வதாயின் எது நல்ல வார்த்தையோ அதைத் தவிர வேறெதை யும் யாரும் பேச வேண்டாம் என்று சொல்லலாம். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: யார் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் விசுவாசம் கொண்டுள்ளாரோ அவர் நல்லதைப் பேசட்டும். அல்லது மௌனமாக இருக்கட்டும்!" (நூல்: புகாரி, முஸ்லிம்)

மேலும் அறிவீனர்களை விட்டும் விலகியிருப்பீராக!"

இதன் கருத்து: யார் உங்கள் மீது அபத்தமாகவும் வரம்பு மீறியும் நடக்கிறாரோ அவரை விட்டும் விலகி விடுங்கள்., அப்படி விலகிச் செல்வது இழிவாகவோ அடங்கிப் போவதாகவோ இல்லாதபட்சத்தில் விலகிச் செல்வ தையே மேற்கொள்ளுங்கள்! இந்த நிகழ்ச்சியில் உமர் (ரலி) அவர்களின் செயல்பாடே நமக்கு முன்மாதிரி! அறிவீனர்களை விட்டும் அவர்கள் விலகியது இழிவாகவும் இல்லை., கீழடங்கியதாகவும் இல்லை! ஏனெனில் அப்படி அபத்தமாகப் பேசிய மனிதரைத் தண்டிக்கும் ஆற்றலை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆனாலும் இறைக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவ்வாறு அவர்கள் தண்டிக்கவில்லை!

இந்த வசுஷனத்தில் இடம்பெற்றுள்ள அல் ஜாசிலீன் என்பதன் வேர்ச் சொல்லான الجهل என்பதற்கு இரண்டு பொருள்கள் உள்ளன. 1) அறியாமை 2) அபத்தமாக - வரம்பு மீறி நடந்துகொள்வது. ஒரு கவிஞன் பாடினான்:

اَلاَ لاَ يَجْهَلَنَّ أَحَدٌ عَلَيْنَا فَنَجْهَلَ فَوْقَ جَهْلِ الْجَاهِلِيْنَ

எங்கள் மீது யாரும்
அபத்தமாக நடந்திட வேண்டாம்!
அறிந்திடவும்! -அப்படி
நடப்பவர்களிடம் - அதற்கும் மேலாக
நாங்கள் அபத்தமாக நடப்போம்!

- ஆனால் இது அறியாமை காலத்து வைராக்கியமாகும். இஸ்லாமியப் பண்பாடு என்னவெனில், அல்லாச் குர்ஆனில் கூறுகிறான்:

وَلاَ تَسْتَوِي الْحَسَنَةُ وَلاَ السَّيِّئَةُ اِدْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّتِي بَيْنَكَ وَ بَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيْمٌ

(நபியே) நன்மையும் தீமையும் சமமாக மாட்டா. மிகச் சிறந்த நன்மை யைக் கொண்டு நீர் தீமையைத் தடுப்பீராக! அப்பொழுது உம்முடன் கடும் பகைமை கொண்டிருந்தவர்கூட உற்ற நண்பராய் ஆகிவிடுவதைக் காண்பீர்" (41 : 34)

உங்களது இப்பண்பாட்டால் எத்தகைய தலைகீழ் மாற்றம் விளைகிறது., பாருங்கள்! உங்களிடம் தீவிரமான பகைமை பாராட்டிக் கொண்டிருப்பவர் உற்ற தோழராய்- நெருங்கிய நண்பராய் மாறிவிடுகிறார்! இது உங்க ளது நயமான நடவடிக்கையின் நல்ல விளைவுதானே! இவ்வாறு கூறுவது யார்? இதயங்களைப் புரட்டிக் கொண்டிருக்கக்கூடிய பேராற்றல் கொண்ட இறைவனாகிய அல்லாஹ்தான் இவ்வாறு கூறுகிறான். ஒவ்வொரு மனிதனின் இதயமும் கருணைமிக்க அந்த இறைவனின் இரண்டு கரங்களிடையேதான் உள்ளது! தன் விருப்பப்படி அதனை அவன் மாற்றிக் கொண்டிருக்கிறான்!

இந்த வசனத்தை ஓதிடக்கேட்டு உமர்(ரலி) அவர்கள் கடைப்பிடித்த உயர் பண்பாடு நமது வாழ்க்கையில் மலர வேண்டும். வெஞ்சினமோ கோபதாபமோ ஏற்படும்பொழுது இறைவேதத்தையும் இறைத்தூதரின் வழி முறையையும் நாம் நினைத்துப்பார்த்திட வேண்டும். அவர்களின் அறிவுரைக் கேற்ப நாமும் நடைபோட்டோ மாயின் யார் எனது வழிகாட்டலைப் பின்பற்றினாறோ அவர் வழிதவற மாட்டார்., துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகவும் மாட்டார்!" (20:123) குர்ஆன் குறிப்பிடுவது போன்று என்றைக்கும் நாம் வழிபிறழ்ந்திட மாட்டோம்.. துர்ப்பாக்கிய நிலை நமக்கு வராது!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) குர்ஆனை கற்றறிந்தவர்கள்: குர்ஆனை ஓதுபவர்கள்., அதன் பொருள் அறிந்து நடப்பவர்கள்! | ١) القراء : جمع قاريء وهو القـــاريء للقـــرآن ، المتفهم لمعانيه |
| 2)உமர் (ரலி) அவர்களின் அவைத் தோழர்கள்: அவர் களின் அவையில் அமர்ந்து ஆலோசனை வழங்கிக் கொண்டிருப்பவர்கள்! | ٢) أصحاب مجلس عمر : الملازمين لمجلسه |
| 3) பெரிய வயதுடையவர்கள்: முப்ப துக்கு மேல் நாற்பது வயது வரையிலுள்ளவர்கள். முப்பத்தி மூன்றில் இருந்து ஐம்பது வரையுள்ளவர்கள் என்பதும் ஒருகருத்து! | ٣) كهولا: الكهل من الرجال : من زاد علي ثلاثين الي الاربعين وقيل من ثلاث وثلاثين الي تمام الخمسين |
| 4) உனக்குச் செல்வாக்கு உள்ளது: அந்துஸ்தும் மரியாதையும் உள்ளது | ٤) لك وجه : لك جاه و منزل |
| 5) இதோ! கத்தாபின் மகனாரே!: ஹிய் என்பது எச்சரிக்கை வார்த்தை. மற்றொரு கருத்து: இது பிரதிப் பெயர்ச் சொல்., இதன் பயனிலை உள்ளடங்கியுள்ளது: இது பெரும் துன்பம் ஆயிற்றே! என்று பொருள் காண்க! | ٥) هِيْ يا بن الخطاب : بكسر الهاء كلمـــة تهديـــد وقيل: هيَ ضمير و ثم محذوف أي هي داهية |

| | |
|---|---|
| 6) மானியம்: பெரும் கொடை. | ٦) الجزل : العطاء الكثير |
| 7) மென்மையை - மன்னிக்கும் போக்கை மேற் கொள்வீ ராக: மக்களின் குணங்களில் லேசானதை., மேலோட்ட மானதை எடுத்துக் கொள்வீராக., அவை பற்றி துருவிக் கொண்டி ருக்காதீர்! | ٧) خذ العفو: ما عفا و تيسر من أخلاق الناس ولا تبحث عنها |
| 8) நன்மையைக் கொண்டு ஏவுவீராக: ஷரீஅத்திலும் வழக்கிலும் அறியப்பட்டதைக்கொண்டு ஏவுவீராக! | ٨) وأمر بالعرف : المعروف في الشرع و العرف |
| 9) இறைவேதத்திற்கு அடங்குபவராக: இறைவசனத்திற் குக் கட்டுப்படுதல், அதற்கு முக்கியத்துவம் கொடுத்தல், அதை மீறாதிருத்தல் ஆகிய பொருள்களின் சமிக்ஞை! | ٩) وقافا عند كتاب الله : كناية عن امتثاله للآيــة و الاهتمام بها وعدم تجاوز ذلك |

## கேள்விகள் الاسئلة

1) உமர்(ரலி)அவர்களின் உயர் பண்பாடுச் சிறப்புகள் சிலவற்றை - வரலாற்றுச் சான்றுகளுடன் விவரிக்கவும்.
2) மென்மையையும் மன்னிக்கும் போக்கையும் மேற்கொள்வதென்ன?
3) நன்மை - அல் உர்ஃப் என்றால் என்ன?
4) ஜஹ்ல் எனும் அரபிச்சொல்லின் பொருள் என்ன? அறிவீனர்களை விட்டும் விலகியிருத்தல் என்றால் என்ன?
5) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## நல்ல ஆட்சியாளர்கள் கிடைக்க வேண்டுமெனில்...!

٥١ – وَعن ابن مسعود ﷺ أنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : اِنَّهَا سَتَكُوْنُ بَعْدِي أَثَرَةٌ وَ أمُوْرٌ تُنْكِرُوْنَهَا قَالُوْا : يَا رَسُوْلَ اللهِ فَمَا تَأمُرُنَا ؟ قَالَ: تُؤَدُّوْنَ الْحَقَّ الَّذِى عَلَيْكُمْ ، وَ تَسْأَلُوْنَ الَّذِي لَكُمْ (– متفق عليه (والاثرةُ : الانفراد بالشيء عمن له حق )

٥٢ – و عن ابي يحيى أسيد بن حُضَيْرٍ ﷺ أنَّ رَجُلاً مِنَ الانْصَارِ قَالَ : يَا رَسُوْلَ اللهِ ألاَ تَسْتَعْمِلُنِى كَمَا اسْتَعْمَلْتَ فُلاَنًا فَقَــالَ : اِنَّكُمْ سَتَلْقَوْنَ بَعْدِى أثَرَةً، فَاصْبِرُوْا حَتّى تَلْقَوْنِى عَلَى الْحَوْضِ – متفق عليه

**ஹதீஸ் 51**

இப்னு மஸ்ஊத் (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: நிச்சயமாக என(து வாழ்நாளு)க்குப் பிறகு (உங்களுக்கு உரிமைப் பறிப்பு ஏற்படும் வகையிலான) சுயநலப் போக்கும் நீங்கள் வெறுக் கக் கூடிய வேறுக்ஷில காரியங்களும் நடைபெறும்!" தோழர்கள் கேட்டார்கள்: அல்லாச்வின் தூதரே! அப்பொழுது நாங்கள் என்ன செய்ய வேண்டு மென எங்களுக்குக் கட்டளையிடுகிறீர்கள்?- நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் மீதுள்ள கடமையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். மேலும் உங்களுக்குச் க்ஷேர வேண்டிய உரிமைகளை அல்லாச்விடம் நீங்கள் கேட்க வேண்டும்!" (நூல்: புகாரி, முஸ்லிம்)

அல் அஃதரா : (الاثــرة) ஒன்றைத் தனதாக்கிக்கொள்வது., உரிமையுள்ளவர்களின் உரிமையைப் புறக் கணித்துவிட்டு!

**ஹதீஸ் 52**

உஸைத் பின் ஹு ளைர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மதீனத்து அன்ஸாரித் தோழர்களில் ஒருவர் கேட்டார்: அல்லாஹ்வின் தூதரே! இன்ன மனிதரை அதிகாரியாக நீங்கள் நியமித்தது போன்று என்னையும் அதிகாரி யாக நியமிக்கக்கூடாதா? அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூஷான்னார்கள்: என(து வாழ்நாளு)க்குப் பிறகு (உங்கள் உரிமைகளைப் புறக்கணிக்கும் வகையிலான) சுயநலப் போக்கை நீங்கள் சந்திக்க வேண்டியதுவரும். அப்போது பொறுமையை மேற்கொள்ளுங்கள்., (மறுமை நாளில்) தடாகத்தின் அருகே என்னை நீங்கள் சந்திக்கும் வரையில்!" (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை الشرح

இவ்விரு நபிமொழிகளும் எதிர்காலத்தில் முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் தலைதூக்கும் சர்வாதிகாரப் போக்கு குறித்து எச்சரிக்கை செய்வதுடன் அந்தச் சூழ்நிலைகளில் பொறுமை மேற்கொள்ள வேண்டுமென நற் போதனையும் தருகின்றன! இதனால்தான் இவ்விரு நபிமொழிகளையும் இந்தப் பாடத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள் இமாம் நவவி (ரஹ்) அவர்கள்!

கருத்து இதுதான்: பிற்காலத்தில் முஸ்லிம் ஆட்சியாளர்களின் வாழ்க்கைப் போக்கில் பெரும் வீழ்ச்சி ஏற்படும். நபி (ஸல்) அவர்களும் நேர் வழிபெற்ற கலீஃபாக்களும் விட்டுச் சென்ற - நீதிநெறிமிக்க உயரிய பண்பாடுகளையும் உன்னத நெறிகளையும் அவர்கள் பின்பற்றமாட்டார்கள்! பொதுமக்களின் சொத்துக் களைத் தன்னிச்சையாகக் கையாளுவார்கள்! முஸ்லிம்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை தமதாக்கிக் கொள் வார்கள்!

இத்தகைய சுயநலப்போக்கும் உரிமை பறிப்பும் ஆட்சியாளர்களிடத்தில் காணப்படும்பொழுது நாங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமெனத் தோழர்கள் கேட்டபொழுது நபி(ஸல்) அவர்கள் -

<u>உங்கள் மீதுள்ள கடமையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்"</u>

என்று கட்டளையிட்டார்கள். அதாவது, அரசாங்கத்தின் பொதுச் சொத்தில் உங்களுக்குச் சேர வேண்டிய உரிமையை அந்த ஆட்சியாளர்கள் அபகரித்துக்கொண்டாலும் - உங்களுக்கு அநீதியிழைத்தாலும் செவியேற் றல்- கீழப்படிதல் என்கிற உங்கள் கடமையை நீங்கள் நிறைவேற்றாமல் புறக்கணித்துவிடாதீர்கள்! குழப்பம் விளைவிக்காதீர்கள்! பொறுமையை மேற்கொள்ளுங்கள்., ஆட்சியதிகாரத்தில் அவர்களுடன் தகராறு செய்யாதீர்கள்! மேலும் சொன்னார்கள்:

<u>உங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை அல்லாஹ்விடம் நீங்கள் கேட்கவேண்டும்"</u>

அதாவது அத்தகைய அட்சுஷியாளர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டுமென நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். அவ்வாறு அவர்கள் திருந்தி விட்டால் உங்கள் உரிமைகளைப் பறிக்க மாட்டார்கள்.

சுயநலப் போக்குடைய ஆட்சியாளர்களின் தன்னிச்சையான நடவடிக்கை யின் போது பொறுமை மேற்கொள்ளுமாறு தம் தோழர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் வழங்கிய அறிவுரையில் வேகம் இல்லைதான்., ஆனால் விவேகம் நிறைந்துள்ளது! மனிதர்களின் மனங்கள் கஞ்சத்தனம் மிக்கவை! மக்களின் உரிமைகளைப் பறித்து சொந்த வாழ்வை வளப்படுத்திக் கொள்ளும் ஆட்சியாளர்களைக் கண்டால் அதனைப்பொறுத்துக் கொள்ள மனித மனங்களுக்கு மிகவும் சிரமம்! இத்தகைய மனித இயல்பை நன்கு அறிந்திருந்தார்கள் நபி (ஸல்) அவர்கள்! அதற்கேற்ற வகையில் இங்கு வழிகாட்டியுள்ளார்கள்!

இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு.

1) நபி (ஸல்) அவர்கள் உண்மையில் இறைத்தூதரே என்பதற்கான ஆதாரம் இதிலுள்ளது. ஏனெனில் அன்று அவர்கள் முன்னறிவிப்பு செய்தது போன்றே நடைபெற்றது.

ஆம்! கலீஃபாக்கள் - அமீர்கள் என்போர் ரொம்ப காலமாகவே மக்களின் சொத்துக்களைத் தன்னிச்சை யாகவே அனுபவித்து வருகிறார்கள்! அவர்களின் உல்லாச வாழ்க்கையை நாம் பார்க்கிறோம். உணவு- பானத்தில் வீண்விரயம்! ஆடை அணிகலன்களில் வீண்விரயம்! ஆடம்பரமான வீடுகள், மாளிகைகள்! சொகுசான வாகன வசதிகள்! இவ்வாறு மக்களின் பொதுச் சொத்துக்களைத் தங்களின் சொந்த நலனுக்காகத் தாராளமாக அவர்கள் செலவு செய்வதை காணலாம்!

ஆட்சியாளர்கள் இப்படி பொதுச்சொத்தை வீண்விரயம் செய்யும்பொழுது மக்கள் அவர்களுக்கு கீழ்ப்படி யாமல் இருப்பதும் அவர்களுடன் மோதல் போக்கை மேற்கொள்வதும் உகந்ததல்ல! மட்டுமல்ல ஆட்சியாளர் களுடன் ஒத்துழையாமைப் போக்கை மக்கள் மேற்கொண்டால் - அதனால் ஆட்சி நடத்த முடியாத அளவுக்கு கூட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டால் அதனால் வரும் சோதனை எல்லோரையும் சூழ்ந்து கொள்ளும்! இஸ்லாத்தின் நலனுக்கும் கேடு ஏற்படலாம்! எனவே ஆட்சியாளர்கள் நேர்வழி திரும்ப வேண்டுமென அல்லாஹ் விடம் பிரார்த்தனை செய்வதும் அவர்களுக்கு அழகிய முறையில் புத்திமதி புகன்று கொண்டிருப்பதும்தான் அனைவருக்கும் நலம் பயக்கக்கூடியதாகும்!

2) இந்த அறிவுரையில் விவேகமும் நிதானமான போக்கும் உள்ளது. ஆட்சியாளர்கள் நாட்டின் பொதுச் சொத்தை அபகரித்து சுய நலனுக்காகப் பயன்படுத்துவதென்பது நாட்டு மக்களைக் கொதிப்படையச் செய்யும் கடுமை விஷயமே! மக்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்டு வீதியில் இறங்கிப் போராடக்கூடத் தயங்க

மாட்டார்கள்! அவர்களிடையே கொந்தளிப்பையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற சூழ்நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்கான போதனையை நபியவர்கள் வழங்குகிறார்கள்! அதுதான் பொறுமையை மேற்கொள்வதென்பது! அமைதியான முறையில் ஆட்சியாளர்களைச் சீர்திருத்த முயல வேண்டுமென்பது! அதில் தான் நமக்கும் நமது தீன் - இறைமார்க்கத்திற்கும் நன்மை உள்ளது!

உஸைத் பின் சு ளைர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியின் கருத்தும் இதேபோன்றதே!

<u>என(து வாழ்நாளு)க்குப் பிறகு (உங்களுக்கு உரிமைப் பறிப்பு ஏற்படும் வகையிலான) தன்னலப் போக்கை நீங்கள் சந்திக்க வேண்டியது வரும்! அப்பொழுது பொறுமையை மேற்கொள்ளுங்கள்., (மறுமை நாளில்) தடாகத்தின் அருகே என்னை நீங்கள் சந்திக்கும் வரையில்!"</u>

அதாவது, உரிமைகள் பறிக்கப்பட்டு உள்ளங்களைப் புண்படுத்தும் இத்தகைய கடினமன சூழ்நிலையில் நீங்கள் பொறுமையை மேற்கொண்டால் அதற்குரிய கூலியாக - மறுமை நாளில் நபி(ஸல்) அவர்களது தடாகத்தில் பானம் அருந்தும் பெரும் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும்! (அத்தகைய பாக்கியமிக்க மக்களின் குழுவில் அல்லாஹ் நம் அனைவரையும் சேர்த்து வைப்பானாக!)

மறுமை நாளில் மகவும் கடுமையான சூழ்நிலையில் நபியவர்களின் இந்தத் தடாகம் மக்களுக்குப் பெரிதும் நிம்மதி அளித்துக்கொண்டிருக்கும்! ஆம்! மக்கள் அந்நாளில் பெரும் கவலையிலும் துன்பத்திலும் சிக்கிவிட்டிருப்பார்கள். தாங்க முடியாத வெப்பமும் வியர்வையும் அவர்களை வாட்டிக் கொண்டிருக்கும்! அத்தகைய சூழ்நிலையில்தான் நபி(ஸல்) அவர்களது தடாகத்திற்கு மக்கள் வருவார்கள்., பாக்கியமிக்க அதன் பானம் அருந்தி மகிழ்வார்கள்., நிம்மதி அடைவார்கள்!

பொறுமை மேற்கொள்ளுங்கள்., மறுமை நாளில் தடாகத்தில் நீர் அருந் தும் பாக்கியம் பெறுவீர்கள் என்கிற இந்த வாசூக அமைப்பில் பொறுமையின் மற்றொரு சூிறப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆம்! மறுமை நாளில் நபி(ஸல்) அவர்களின் தடாகத்திற்கு வந்து நீர் அருந்தும் பாக்கியம் பெற வழிவகுக்கும் காரணிகளுள் பொறுமையும் ஒன்றென்பதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ளலாம்!

இவ்வாறு இவ்விரு நபிமொழிகளும் - பொதுமக்களின் உரிமைகளைப் பறித்து தம் சொந்த வாழ்க்கையை வளப்படுத்தும் ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வலியுறுத்தும் இந்த இடத்தில் இன்னோர் உண்மையை நாம் அறிந்திட வேண்டும். அதாவது மக்கள் எந்த லட்சூணத்தில் வாழ்கிறார்களோ அதற்கேற்பவே அவர்களின் ஆட்சியாளர்கள் அமைவார்கள்! உலகில் காணப்படும் நிதர்சூனமான உண்மையாகும் இது! ஜனநாயகம் உள்ளதெனச் சொல்லப்படும் நாட்டிலும் சரி, சூர்வாதிகாரம் உள்ளதெனச் சொல்லப்படும் நாட்டிலும் சரி இதைத்தானே நாம் காண்கிறோம்!

மக்கள் நீதி நெறி தவறினால் - அல்லாச்வுக்கும் தங்களுக்கும் மத்தியிலான உறவுகளில் அதாவது, அவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல், அவனுக்கு அஞ்சி வாழுதல், தீமைகள் தவிர்த்தல், நன்மை களைப் பரவலாக்குதல், இறைமார்க்கத்தின் பக்கம் அழைப்புவிடுத்தல் போன்ற விஷயங்களை மக்கள் பேணிட வில்லையானால் மேலேசொன்னது போன்று - தீய ஆட்சியாளர்களை அவர்கள் மீது அல்லாஹ் திணித்து விடுகிறான்!

كما قال تعالي: وكذلك نُوَلِّي بَعْضَ الظَّالِمِيْنَ بَعْضًا بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ (سورة الأنعام الآية: ١٢٩ )

இவ்வாறே அக்கிரமக்காரர்களில் சிலரை வேறு சிலருக்கு ஆட்சியாளர்களாய் நாம் ஆக்குவோம்., அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த தீமைகளின் காரணத்தால்!" (6 : 129)

ஆம்! மக்கள் நல்லவர்கள் எனில் அவர்களைப் போன்ற நல்ல ஆட்சியாளர்களை அல்லாஹ் அவர்களுக்கு இலகுவாக்கிக் கொடுக்கிறான்! மக்கள் தீயவர்களெனில் அவர்களுக்கு வாய்க்கும் ஆட்சியாளர்களும் தீயவர்களாகவே அமைவார்கள்!

வரலாற்றில் கூறப்பட்டுள்ளது: ஃகாரிஜியாக்கள் என்ற பிரிவைச் சேர்ந்த ஒருவன் அலீ (ரலி) அவர்களிடம் வந்து கேட்டான்: அலீ (ரலி) அவர்களே! மக்கள் இந்த அளவுக்கு உங்களை விமர்சனம் செய்கிறார்கள்! ஆனால் இவ்வாறு அபூ பக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) இருவரையும் யாரும் விமர்சனம் செய்யவில்லையே., என்ன காரணம்?"

அலீ (ரலி) அவர்கள் செூான்னார்கள்: அபூ பக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) இருவருக்கும் என் போன்றவர்கள் கிடைத்திருந்தார்கள்! ஆனால் எனக்குக் கிடைத்திருப்பது உன் போன்றவர்கள்தானே!" - அதாவது உன்னைப் போன்றவர்கள்தான் அதற்குக் காரணம்!

மற்றொரு நிகழ்ச்சி: பனூ உமைய்யா கலீஃபாக்களில் ஒருவர்தான் அப்துல் மலிக் பின் மர்வான்! இவருடைய ஆட்சிமுறை பற்றி மக்கள் குறை பேசிக்கொண்டிருந்தது இவரது காதுகளுக்கு எட்டியது. உடனே அவர் தன்னுடைய அவைப் பிரதானிகளையும் முக்கிய பிரமுகர்களையும் ஒன்றுதிரட்டினார். அவர்களிடம் கேட்டார்:

மக்களே! நான் உங்களுக்கு - அபூ பக்ர் மற்றும் உமர் (ரலி) போன்று சிறந்த ஆட்சியாளனாகத் திகழ வேண்டுமென் விரும்புகிறீர்களா?"

அனைவரும் ஒருமித்த குரலில் ஆம்" என்று பதில் அளித்தார்கள்!

பிறகு அப்துல் மலிக் சொன்னார்: அப்படியானால் நீங்கள் எனக்கு - அபூ பக்ர் மற்றும் உமர் இருவரும் பெற்றிருந்ததைப்போன்ற சிறந்த பொது மக்களாகத் திகழுங்களேன்!"

- உண்மைதானே., அல்லாஹ் நுண்ணறிவு மிக்கவன். மக்கள் எப்படிப்பட்டவர்களோ அப்படித்தான் அவர் களுடைய ஆட்சியாளர்களையும் அமைக்கிறான்! மக்கள் கெட்டவர்கள் எனில் ஆட்சியாளர்களும் கெட்டவர்கள் தான். மக்கள் நல்லவர்கள் எனில் அவர்களுக்குக் கிடைக்கும் ஆட்சியாளர்களும் நல்லவர்களாய் திகழ் வார்கள்!

ஆயினும் ஆளுவோர் திருந்திவிட்டால் மக்களும் திருந்திவிடுவர் எனும் ரீதியில் ஆட்சியாளர்கள் நல்லவர் களாய் இருக்க வேண்டுமென்பதுதான் அனைத்திற்கும் அடிப்படை! ஏனெனில் ஆட்சியாளர்களிடத்தில் அதிகாரம் உள்ளது. அதைப் பயன்படுத்தி சீர்திருத்த நடவடிக்கையைச் சிறப்பாய் மேற்கொள்வது அவர் களுக்கு எளிது. நெறிபிறழ்ந்து செல்வோரை நெறிப் படுத்தவும் அநீதியும் அட்டூழியமும் செய்வோரைத் தடுத்து நிறுத்தவும் ஆட்சியாளர்களால் இலகுவாக முடியும்!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## உஸைத் பின் ஹு ளைர் (ரலி) அவர்கள்

உஸைத் பின் ஹு ளைர் (ரலி) அவர்கள் மதீனாவில் வைத்து முஸ்அப் பின் உமைர்(ரலி) அவர்களின் அழைப்புப் பணியின் பயனாய் இஸ்லாத்தைத் தழுவினார்கள்! இரண்டாம் கணவாய் உடன்படிக்கையில் நபியவர் களிடம் விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தவர்களில் இவர்களும் முக்கியமானவர்கள்!

ஊஹு த் யுத்தத்திலும் அதன் பிறகு நடைபெற்ற போர்கள் அனைத்திலும் கலந்துகொண்டார்கள். குர்ஆனை அழகிய ராகத்துடன் ஓதும் தோழர்களில் இவர்கள் குறிப்படத்தக்கவர்கள்! எதையும் அறிவிப்பூர்வ மாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்த இவர்கள் ஹிஜ்ரி 20 ம் ஆண்டு மதீனாவில் மரணம் அடைந் தார்கள். உமர் (ரலி) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்த பகீஉ மண்ணறையில் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ளார்கள். இவர்களிடம் இருந்து 18 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) நீங்கள் நிறைவேற்ற வேண்டும்: கொடுக்க வேண்டும். | ١) تؤدون: تعطون |
| 2) அலா: வேண்டுகோளின் பொருள் கொண்ட உருபு. என்னை ஏதேனும் துறைக்கு அதிகாரி யாக நியமிக்கக் கூடாதா? | ٢) الا تستعملني : اداة عرض. تستعملني: تصيرني عاملا |
| 4) தடாகம்: சுவனபதியில் நபி (ஸல்) அவர் களுக்கு மட்டும் பிரத்தியேகமாக வழங்கப்பட உள்ள தடாகம்! | ٤) الحوض: هو الحوض المورود الذي خص به النبي ﷺ في الجنة |

## கேள்விகள் ~ الاسئلة

1) ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப் போக்கை மேற்கொள்ளும்பொழுது பொறுமையை மேற்கொள்ள வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறுவதன் விளக்கம் என்ன? அநீதியைத் தட்டிக்கேட்காமல் மௌனமாக இருக்க வேண்டுமென்பதா அதன் பொருள்?
2) இந்நபிமொழி சுட்டிக்காட்டும் பொறுமையின் தனிச்சிறப்பு என்ன?
3) நல்ல ஆட்சியாளர்கள் கிடைக்க வேண்டுமெனில் மக்கள் எவ்வாறு நடந்தகொள்ள வேண்டும்?
4) காரிஜியாக்கள் என்போர் யார்? அவர்களின் தீய கொள்கை என்ன?
5) அறிவிப்பாளரின் வரலாற்றுக் குறிப்பு தரவும்.

# எதிரிகளைக் களத்தில் சந்திக்க ஆசைப்படாதீர்கள்!

٥٣ – وَ عَنْ أَبِي اِبْرَاهِيْمَ عَبْدِ اللهِ بْنِ أَبِي أَوْفَي رضي الله عنهما أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ فِي بَعْضِ أَيَّامِهِ الَّتِي لَقِيَ فِيْهَا الْعَدُوَّ . انْتَظَرَ حَتَّي اِذَا مَالَتِ الشَّمْسُ قَامَ فِيْهِمْ فَقَالَ: يَا اَيُّهَا النَّاسُ لاَ تَتَمَنَّوْا لِقَاءَ الْعَدُوِّ ، وَاسْأَلُوْا اللهَ الْعَافِيَةَ ، فِإِذَا لَقِيْتُمُوْهُمْ فَاصْبِرُوْا ، وَاعْلَمُوْا أَنَّ الْجَنَّةَ تَحْتَ ظِلاَلِ السُّيُوْفِ ) ثُمَّ قَالَ النَّبِيُّ ﷺ : اللَّهُمَّ مُنْزِلَ الْكِتَابِ وَ مُجْرِيَ السَّحَابِ ، وَ هَازِمَ الأَحْزَابِ ، اهْزِمْهُمْ وَ انْصُرْنَا عَلَيْهِمْ ) متفق عليه.

ஹதீஸ் 53

அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எதிரிகளைச் சந்தித்த (யுத்த) நாட்களில் ஒருநாளன்று சூரியன் மேற்கு சாயும் வரையில் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பிறகு எழுந்து கூறினார்கள்: ஓ, மனிதர்களே! எதிரிகளை(க் களத்தில்) சந்திப்பதற்கு ஆசைப்படாதீர்கள். அல்லாச்விடம் சுக வாழ்வைக் கேளுங்கள். ஆனால் எதிரிகளைச் சந்திக்கும்படி யானால் பொறுமையை மேற்கொள்ளுங்கள். மேலும் நிச்சயமாக வாட்களின் நிழலின் கீழ்தான் சுவனம் உள்ளதென் பதை அறிந்து கொள்ளுங்கள்! பிறகு இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்: யா அல்லாஹ்! வேதங்களை இறக்கியருளியவனே! மேகங்களை ஓட்டுபவனே! அடர்ந்துவந்த எதிரணியினரைத் தோல்வி அடையச் செய்தவனே! எதிரிகளைத் தோல்வி அடையச் செய்வாயாக! அவர்கள் மீது எங்களுக்கு வெற்றியைத் தருவாயாக! (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை~الشرح

நபி (ஸல்) அவர்கள் மாலை நேரத்தை எதிர்பார்த்ததற்குக் காரணம், பகலின் வெப்பம் சற்றுத் தணிந்து நிழல்கள் வளர்ந்து குளுமை கிடைக்க வேண்டும் என்பதுதான்! அப்பொழுதுதான் மக்களுக்கு உற்சாகம் பிறக்கும். முழு ஈடுபாட்டுடன் போரில் அவர்கள் இறங்குவதற்கு வசதியாக இருக்கும்!

போர்ச் சூழ்நிலையை முன்னிட்டு மக்களிடையே சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் நபி (ஸல்) அவர்கள்! ஜு ம்ஆ நாளின் நிரந்தரமான சொற் பொழிவுகளுக்கிடையே - இந்த நபிமொழியில் குறிப்பிடப்பட்டது போன்று தற்காலிக உரைகளையும் அவர்கள் நிகழ்த்தியதுண்டு! இத்தகைய தற்காலிக உரைகளும் நபித்தொகுப்புகளில் எராளம் பதிவாகியுள்ளன!

<u>எதிரிகளை(க் களத்தில்) சந்திப்பதற்கு ஆசைப்படாதீர்கள்"</u>

அதாவது, எதிரிகளுடன் மோதவும் போர்ச்சூழ்நிலை உருவாகி இரத்தக் களறியை ஏற்படுத்தவும் ஆசைப் படுவது யாருக்கும் அழகல்ல. யா அல்லாஹ்! எதிரிகளுடன் எங்களை மோதச் செய்வாயாக என்று பிரார்த் தனை செய்வது ஏற்புடையதல்ல! யா அல்லாஹ்! அச்சமற்ற - அமைதி வாழ்வைக் கொடு என்றுதான் பிரார்த் தனை செய்ய வேண்டும்!

<u>ஆனால் எதிரிகளைச் சந்திக்கும்படியானால் பொறுமையை மேற் கொள்ளுங்கள்"</u>

- பொறுமையின் இந்த அறிவுரைக்காகத்தான் இந்த நபிமொழியை இந்தப் பாடத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள், இமாம் நவவி (ரஹ்) அவர்கள்!

கருத்து இதுதான்: எதிரிகளைச் சந்தித்தாக வேண்டிய - போர் புரிந்தாக வேண்டிய சூழ்நிலை வந்தால் பொறுமையைக் கைவிட்டுவிடக் கூடாது. இப்புவியில் இறைமார்க்கத்தை மேலோங்கச் செய்யும் உயர் இலட்சி யத்தை மனத்தில் ஏந்தி, பொறுமையுடனும் உறுதியுடனும் போர் புரியத்தான் வேண்டும். பொறுமையாளர் களுக்கு உதவியும் வெற்றியும் நல்குவதாக அல்லாச் வாக்குறுதி அளித்துள்ளான்!

<u>நிச்சயமாக வாட்களின் நிழலின் கீழ்தான் சுவனம் உள்ளதென்பதை அறிந்துகொள்ளுங்கள்!"</u>

அதாவது, இறைவழிப் போராளி ஏந்திச்செல்லும் வாட்களின் நிழலின் கீழ்தான் சுவனம் உள்ளது. இதோ! இறைமார்க்கத்தின் வெற்றிக்காகக் களமிறங்கும் அவர் அதிலேயே மரணத்தைச் சந்திக்க நேரிட்டு விட்டால் இன்ப வாழ்வும் அருட்பேறுகளும் நிறைந்த சுவனபதி செல்லக்கூடிய மேன் மக்களில் ஒருவராக அழைத்துக் கொள்ளப்படுகிறார்!

قال تعالى : وَلاَ تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِي سَبِيْلِ اللهِ أَمْوَاتًا بَلْ أَحْيَاءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ فَرِحِيْنَ بِمَا آتَاهُمُ اللهُ مِنْ فَضْلِهِ وَ يَسْتَبْشِرُوْنَ بِالَّذِيْنَ لَمْ يَلْحَقُوْا بِهِمْ مِنْ خَلْفِهِمْ اَلاَّ خَوْفٌ عَلَيْهِمْ وَ لاَ هُمْ يَحْزَنُوْنَ يَسْتَبْشِرُوْنَ بِنِعْمَةٍ مِنَ اللهِ وَ فَضْلٍ وَ اَنَّ اللهَ لاَ يُضِيْعُ أَجْرَ الْمُؤْمِنِيْنَ (سورة أل عمران الآية: ١٦٩ – ١٧١)

அல்லாச் கூறுகிறான்: இறைவழியில் கொல்லப்படுகிறவர்களை இறந்தவர் களாக ஒருபோதும் கருதாதீர்கள். உண்மையில் அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்., தங்கள் இறைவனிடம் இருந்து தங்களுக்குரிய வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் தன்னருளில் இருந்து தங்களுக்கு அளித்தவற்றைக் கொண்டு மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள்! தங்களுக்குப் பின் உலகில் வாழ்ந்துவருகிற - இன்னும் தங்களுடன் வந்து சேராதிருக்கும் இறைநம்பிக்கையாளர்கள் குறித்து - அவர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை., அவர்கள் துயரப்படவுமாட்டார்கள் என்று இவர்கள் மன நிறைவு பெறுகிறார்கள். அல்லாச் அளித்த கொடையினாலும் அருளினாலும் அவர்கள் அக மகிழ்வுடன் இருக்கிறார்கள். மேலும் திண்ணமாக அல்லாச் விசுவாசுஷிகளின் கூலியை வீணாக்க மாட்டான் என்பதாலும்! (3 : 169 -171)

ஆம்!அல்லாச்வின் வழியில் கொலை செுய்யப்படுகிற தியாகியின் உடலில் எவ்வளவு வெட்டுகள் -குத்துகள் விழுந்தாலும் எத்தகைய பயங்கரமான குண்டுகள் பாய்ந்தாலும் அது குறித்து எந்த வேதனையும் கஷ்டமும் அவர் உணர்வதில்லை! அவரது உயிர் நீடித்த - நிலையான சுவனபதியை நோக்கிச் செல்கிறது! இதனால் தான் நபிகளார் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: <u>சுவனம் வாட்களின் நிழலின் கீழ் உள்ளது</u> என்று!

உசு த் போர்க் களத்தில் ஷஹீதாக்கப்பட்ட ஸஹாபி அனஸ் பின் நள்ர் (ரலி)அவர்கள் ஒரு கட்டத்தில் கூறினார்கள்: திண்ணமாக நான் உஹு த் மலையின் திக்கிலிருந்து சுவனத்தின் நறுமணத்தை உணர்கிறேன்!"

ஆகா! எந்தஅளவுக்கு அந்த ஸஹாபியின் நுகர்ப் புலன்களை அல்லாஹ் திறந்துவைத்து நுட்பமான ஆற்றலை வழங்கியுள்ளான் என்பதைப் பாருங்கள்! சுவனபதியின் சுகந்தத்தை நுகர்வதாகக் கூறுகிறார்., உஹு த் மலையின் திக்கில் இருந்து அது கமழ்ந்து வருவதாகப் பேரானந்தப்படுகிறார்! இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: <u>வாட்களின் நிழலின் கீழ் சுவனபதி உள்ளது</u> என்று!

பிறகு நபியவர்கள் அல்லாஹ்விடம் உதவி கேட்டுப்பிரார்த்தனை செய்தார்கள். இறைவழிப்போர்வீரர்கள், களத்தில் எதிரிகளைச் சந்திக்கும் முன்னர் இதுபோல் பிரார்த்தனை செய்திட வேண்டும்.

இந்தப் பிரார்த்தனையில் அல்லாச்வின் ஆற்றலை நிரூபிக்கும் சான்றுகளைச் சுட்டிக்காட்டி உதவி கேட்டுள்ளார்கள். நபி(ஸல்) அவர்கள். அவை இரு வகைகள்.

ஒன்று ஷரீஅத் ரீதியிலானவை. அதாவது, வேதங்கள்! இவற்றில் குர்ஆன் உள்ளிட்ட -முற்காலத்தில் இறைவன் இறக்கியருளிய எல்லா வேதங்களும் அடங்கும். அத்தகைய வேதங்களை இறக்கியருளி சத்திய மார்க்கத்தை வழங்கிய உண்மையான இறைவனை அழைத்து உதவி கேட்டுள்ளார்கள், நபிகளார் அவர்கள்!

மற்றொன்று இப்பேரண்டத்தில் காணப்படும் பிரமாண்டமான படைப்புகள்! மேகங்களையும் அவற்றின் அதிசயிக்கத்தக்க செயல்பாடுகளையும் அவற்றுள் பிரத்தியேமாகக் குறிப்பிட்டுள்ளார்கள் நபி (ஸல்) அவர்கள்!

அதோ! வானத்தில் நீந்திக்கொண்டிருக்கும் மேகக்கூட்டங்கள் ஏக இறைவனாகிய அல்லாஹ் ஒருவனின் ஆணைக்கு மட்டுமே கட்டுப்பட்டவை. உலகிலுள்ள எல்லா மனிதர்களும் ஒன்று சேர்ந்து அனைத்து விதமான உபாயங்களையும் பிரயோகித்து எப்பேர்ப்பட்ட பிரமாண்டமான முயற்சிகள் செய்தாலும் அவர்களால் மேகத்தை வசப்படுத்தித் தங்கள் விருப்பப்படி மழைபொழிவிக்க முடியுமா? ஒருபோதும் முடியாது! அதற்கான பேராற்றல் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தம்! அத்தகைய மகத்தான பேராற்றல் படைத்த இறைவனை அழைத்துப் பிரார்த்தனை செய்தார்கள் நபியவர்கள்!

<u>எதிரணிகளைத் தோல்வி அடையச் செய்பவனே!"</u>

அதாவது, அணிதிரண்டு வந்த பல்வேறு எதிரிக் கூட்டத்தினரைத் தோல்வி அடையச் செய்தவன் அல்லாஹ் ஒருவனே. அத்தகைய பேருதவியை இங்கும் கேட்டுப் பிரார்த்தனை செய்கிறார்கள் நபிகளார் (ஸல்) அவர்கள்!

- இது அகழ் யுத்தத்தில் நடந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டும் வாசகம்! அல் அஹ்ஸாப் (எதிரிகளின் பல்வேறு கூட்டத்தினருடன் நடந்த) யுத்தம் என்றொரு பெயரும் அதற்குண்டு. அப்பொழுது இஸ்லாத்தை எதிர்த்துக் கொண்டிருந்த பல்வேறு கூட்டத்தினர் சுமார் பத்தாயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு மதீனா நோக்கி வந்தார்கள். இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வேரோடு வீழ்த்திட வேண்டும் என்பதுதான் அவர்களின் திட்டம்! ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நபியவர்களும் தோழர்களும் பெரியஅளவில் அகழ்

ஒன்றைத் தோண்டியிருந்தார்கள்! அதனால் எதிரிகளால் மதீனாவினுள்ளே பிரவேசிக்க முடியவில்லை. அந்த அகழுக்கு அப்பால் தங்கியிருந்து மதீனாவை பல நாட்களாக முற்றுகையிட்டிருந்தார்கள்!

அல்லாச்வின் பேராற்றலைப் பாருங்கள்! சுழன்றடித்த பெரும் புயற்காற்றை ஏவினான்! அது எதிரிகளைச் சின்னாப் பின்னமாக்கி சிதறி ஓடச் செய்தது! அவர்களின் கூடாரங்களைத் தாறுமாறாகப் பிய்த்து வீசியது! அடுப்புகளைப் புறட்டிப்போட்டு அவர்களை அலைக்களித்தது! தாக்குப் பிடிக்க முடியாமல் முற்றுகையை விலக்கிக்கொண்டு எல்லோரும் ஓட்டம் பிடித்தார்கள்! அதனைத்தான் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது:

قال الله: وَرَدَّ اللهُ الَّذِيْنَ كَفَرُوْا بِغَيْظِهِمْ لَمْ يَنَالُوْا خَيْرًا وَ كَفَى اللهُ الْمُؤْمِنِيْنَ الْقِتَالَ (الاحزاب الآية: ٢٥)

<u>அல்லாச் நிராகரிப்பாளர்களைத் திருப்பி அனுப்பினான். அவர்கள் எந்தப் பயனும் அடையாமலேயே தம் மன எரிச்சலுடன் அப்படியே திரும்பி விட்டனர். விசுவாசிகளின் சார்பில் போரிடுவதற்கு அல்லாஹ்வே போதுமாகி விட் டான்!"</u> (33 : 25)

ஆம்! அல்லாஹ்தான் வெற்றியைத் தருபவன். ஆனால் மனிதர்கள் திரட்டி வைத்திருக்கும் ஆற்றல்கள் அனைத்தும் பயனளிக்கவும் செய்யலாம். பயனளிக்காமலும் போகலாம். ஆயுதங்களைத் திரட்டி வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பது இதன் பொருளல்ல! போர் புரிவதற்கான அனைத்து விதமான ஆயுதங் களையும் ஆகுமான காரணிகளையும் நாம் கையாளத்தான் வேண்டும். ஆனால் எதிரிகளைத் தோல்வி அடையச் செய்யும் ஆற்றல் உண்மையில் அல்லாஹ்வின் ஆற்றல் மட்டுமே! இவ்வுண்மையைச் சுட்டிக்காட்டி அதில் உறுதி யான நம்பிக்கையை ஏற்படுத்துவதே நோக்கம்!

இந்த நபிமொழியில் பல படிப்பினைகள் உள்ளன!

❀ படைவீரர்களை மென்மையுடன் நடத்துவது படைத்தளபதியின் கடமை. பொருத்தமான நேரத்தில்தான் போரைத் தொடங்க வேண்டும். என்ன பருவகாலம்? கடுமையான கோடையா? குளிரா? என்பதைக் கவனித் துத் தான் வீரர்களைக் களமிறக்கிட வேண்டும்! கோடையும் குளிரும் கடுமையாக இருந்தால் போர்புரிவது கடும் சிரமம்! இலையுதிர் காலமெனில் போருக்கு அது மிகவும் பொருத்தமானது!

❀ எந்த மனிதனும் எதிரியைக் களத்தில் சந்திக்கவும் போர் புரியவும் ஆசைப்படுவது கூடாது! ஆனல் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்யும் (ஷஹாதத் எனும்) பாக்கியம் பெறுவதில் ஆசைப்பட வேண்டுமென நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது! இரண்டுக்கும் நுட்பமான வித்தியாசம் உள்ளதைப் புரிந்து கொள்ள வேண்டும்!

❀ சுக வாழ்வையும் அமைதியையும்தான் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் அமைதி வாழ் வுக்கு நிகரான பாக்கியம் உலகில் வேறெதுவும் இல்லை. எனவே யுத்தத்தை- போரை ஆசைப்படாதீர்கள். அமைதியைக் கேட்டுப் பிரார்த்தனை செய்யுங்கள். இஸ்லாத்தை நிலை நாட்டுவதற்கு உதவி புரியுமாறும் அல்லாஹ்விடம் கேளுங்கள்! ஆனால் களத்தில் எதிரியைச் சந்திக்க வேண்டியது வந்தால் பொறுமையுடன் களமிறங்குங்கள். அல்லாச்வின் உதவி பொறுமையாளர்களுக்கு உண்டு!

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) அவர்கள்

இவர்களுடைய இயற்பெயர் அப்துல்லாஹ். குறிப்புப் பெயர் அபூ இப்ராஹீம். இவருடைய தந்தை அபூஅவ்ஃபா (ரலி) அவர்களும் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்கள். அப்துல்லாச் (ரலி) அவர்கள் பைஅதுர் ரிள்வான் எனும் போர் உறுதிப் பிரமாணத்தில் பங்கேற்றார்கள். கைபர் யுத்தத்திலும் அதன் பிறகு நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள்! ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணம் அடைந்தபிறகு கூஃபா நகருக்குப் பயணமான அன்னார் அங்கேயே மரணம் அடைந்தார்கள்! கூஃபா நகரில் மரணம் அடைந்த நபித் தோழர்களில் இறுதியானவர் இவர்கள்தாம்! அன்னாரிடம் இருந்து சுமார் 95 நபிமொழிகள் அறிவிக்கப் பட்டுள்ளன!

**அருஞ்சொற்கள்** شرح الكلمات

| | |
|---|---|
| 1) அவர்கள் சந்தித்த யுத்த நாட்க ளில் ஒருநாள்! | ١) فى بعض أينامه : ايام غزواته وحروبه |
| 2) எதிர்பார்த்திருந்தார்கள்: அவர்களுடன் சண்டை செய்வ தைப் பிற்படுத்தினார்கள்! | ٢) انتظر : أخر قتالهم |
| 3) சூரியன் சாயும் வரையில்: சூரியன் நடுவானை விட்டும் மேற்குப் பக்கம் சாயும் வரையில்! அது நண்பகல் நேரம்! | ٣)حتى اذا مالت الشمس: مالت الى كبد السماء الي جهة |

| | |
|---|---|
| | الغروب وهو وقت الزوال |
| 4) சுகம்: உடலின் அகத்திலும் புறத்திலும் நேர்கிற ஆபத்துகள் மற்றும் தீனிலும் இம்மை - மறுமையிலும் நேர்கிற ஆபத்துகள் அனைத்தையும் தடுப்பது! | ٤) العافية: لفظ لدفع ألآفات في البدن في الظاهر والباطن في الدين والدنيا والآخرة |
| 5) பல்வேறு எதிரிப்படையினர்: நபி (ஸல்)அவர்கள் மீது அணி திரண்டு வந்த நிராகரிப்பாளர்களின் பல்வேறு குழுவினர்! | ٥) الأحزاب: الطوائف من الكفار الذين تحزبوا علي رسول الله |

## கேள்விகள் – الاسئلة

1) நபியவர்கள் போரைத் தொடங்குவதற்கு மாலை நேரத்தை எதிர் பார்த்திருந்ததற்குக் காரணம் என்ன?
2) எதிரிகளுடன் சண்டை போட வேண்டுமென ஆசைப்படுவதற்கும் இறைவழியில் உயிர்த்தியாகம் செஷய்ய வேண்டுமென ஆசைப்படுவதற்கும் என்ன வித்தியாசம்?
3) வாட்களின் நிழலின் கீழ்தான் சுவனம் உள்ளதென்பதன் விளக்கம் என்ன?
4) இந்த நபிமொழி தரும் படிப்பினைகள் சிலவற்றைக் குறிப்பிடவும்.
5) அறிவிப்பாளர் குறித்து அறிமுகம் செய்யவும்.

# باب الصدق

பாடம்: 4

# உண்மை

قال الله تعالى : **يَا اَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا اتَّقُوا اللهَ وَ كُوْنُوْا مَعَ الصّادِقِيْنَ** ( التوبة- الآية: ١١٩) وقال تعـالى: **وَالصّادِقِيْنَ وَ الصَّادِقَاتِ** (سورة الاحزاب الآية: ٣٥ ) وقال تعالى: **{فَلَوْ صَدَقُوْا اللهَ لَكَانَ خَيْرًا لَهُمْ }** (سورة محمد الآية: ٢١)

அல்லாஹ் கூறுகிறான்: இறைநம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உண்மை யாளர் களுடன் இணைந்திருங்கள்!" (9: 119)

வேறோரிடத்தில், ...உண்மை பேசக்கூடிய ஆண்களும் பெண்களும்..."(33:35)

இன்னோர் இடத்தில், அல்லாஹ்விடம் அவர்கள் அளித்த வாக்குறுதியில் உண்மையாளர்களாய் அவர்கள் நடந்திருந்தால் அது அவர்களுக்கு நல்ல தாய் இருந்திருக்கும்! " (47 : 21)

## தெளிவுரை-الشرح

அகராதியில் உண்மை (ஸித்க்) எனும் சொல்லின் பொருள், ஒருசெய்தி யதார்த்தற்கு ஒத்திருத்தல் என்பதாகும். நீங்கள் அறிவிக்கும் செய்தி யதார்த்தத்தில் நடைபெற்றிருந்தால் அது உண்மைச் செய்தியே!

எடுத்துக் காட்டாக, இன்று வெள்ளிக்கிழமை என்று நீங்கள் அறிவிக்கும்பொழுது யதார்த்தத்தில் அது வெள்ளிக் கிழமையாக இருந்தால் அது உண்மைச் செய்தி! - இது சொல்லால் வெளிப்படுத்தும் செய்தியின் நிலை!

இதேபோன்றுதான் செயல் மூலம் வெளிப்படுத்தும் செய்தியும்! அதாவது ஒருமனிதனின் செயல் யதார்த்தத் திற்கும் அவனது உள்ளத்து எண்ணத்திற்கும் ஒத்திருந்தால் அது உண்மையாகும்! எனவே முகஸ்துதிக்காகச் செயல்படுபவன் உண்மையாளன் அல்லன். ஏனெனில் அவன் தன்னை ஒருவணக்க சாலியாகக் வெளிக்காட்டு கிறான். ஆனால் அவனது உள்ளத்து நிலை அதற்கு முரண்படுவதால் உண்மையான வணக்கசாலியாக அவன் திகழமுடியாது!

இறைவனுக்கு இணைகற்பிப்பவனும் அதாவது சிலைவணக்கம் செய்பவனும் உண்மையானவன் அல்லன். ஏனெனில் வெளித்தோற்றத்தில் அவன் இறைவனை வணங்குவதுபோல் தெரிகிறது! ஆனால் யதார்த்தத்தில் அவன் வணங்குவது இறைவனை அல்ல!

நயவஞ்சகனும் உண்மையாளன் அல்லன். ஏனெனில் இறைவிசுவாசம் கொண்டிருப்பதுபோல் வெளிக் காட்டிக்கொள்கிறான். ஆனால் அவன் இறை விசுவாசம் கொள்ளவில்லை!

தொழுகை,நோன்பு போன்ற வணக்கவழிபாடுகளில் பித்அத் எனும் நூதனத்தை அனுஷ்டிப்பவனும் உண்மை யாளன் அல்லன். ஏனெனில் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி வணக்கவழிபாடு செய்வதாக அவன் வெளிக் காட்டிக் கொள்கிறான். ஆனால் யதார்த்தத்தில் நபியவர்களை அவன் பின்பற்றவில்லை!

உண்மைதான் இறைவிசுவாசிகளின் அடையாளம். அதன் எதிர்ப்பதமாகிய பொய் என்பது நயவஞ்சகர் களின் அடையாளம்!

உண்மையின் சிறப்பு குறித்தும் அதனைப் பேணிவாழ்வதால் கிடைக்கும் நன்மை, உயர்வு ஆகியவை குறித் தும் பல வசனங்களை இமாம் நவவி (ரஹ்)அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவற்றுள் ஒன்றுதான் இறை நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இணைந்திருங் கள்!" (9 : 119) என்பதும்.

இந்த வசனம் - கஅப் பின் மாலிக் (ரலி)அவர்களும் அவர்களின் இரு தோழர்களும் தபூக் யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் பின்தங்கியிருந்தபொழுது இறக்கியருளப்பட்டதாகும். கஅப் (ரலி) அவர்கள் அறிவித்த ஹதீஸு ம் அதன் கீழ் அந்த வரலாற்றின் விரிவான விளக்கமும் முன்னர் தௌபா - பாவமீட்சியின் பாடத்தில் சென்றுள்ளது!

## உண்மையாளரின் உயர் அந்தஸ்து!

وَ اَمَّا الأَحَادِيْثُ فالأول:٥٤ – عَنِ ابْنِ مَسْعُوْدٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ :{ اِنَّ الصِّدْقَ يَهْدِي اِلَى الْبِرِّ وَ اِنَّ الْبِرَّ يَهْدِي اِلَى الجَنَّةِ وَ اِنَّ الرَّجُلَ لَيصْدُقُ حَتَّي يُكْتَبَ عِنْدَ اللهِ صِدِّيْقًا وَاِنَّ الْكِذْبَ يَهْدِي اِلَي الْفُجُوْرِ وَ اِنَّ الْفُجُوْرَ يَهْدِي اِلَى النَّارِ وَ اِنَّ الرَّجُلَ لَيَكْذِبُ حَتَّي يُكْتَبَ عِنْدَ اللهِ كَذَّابًا } متفق عليه

ஹதீஸ் 54

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: நிச்சயமாக உண்மை என்பது புண்ணியச் செயலுக்கு வழிகாட்டுகிறது. புண்ணியச் செயல் சுவனம் செல்ல வழிகாட்டு கிறது. திண்ணமாக ஒருமனிதன் உண்மையே பேசிக்கொண்டிருகிறான்., இறுதியில் அல்லாஹ்விடத்தில் உண்மையாளன் என்று எழுதப்படுகிறான்!

மேலும் திண்ணமாக பொய் என்பது தீமை செய்ய வழிகாட்டுகிறது. தீமை செய்வது நரகத்திற்கு வழி காட்டுகிறது. திண்ணமாக ஒருமனிதன் பொய் பேசிக்கொண்டிருக்கிறான்., இறுதியில் அல்லாஹ்விடத்தில் மகாப் பொய்யன் என்று எழுதப்படுகிறான்! (நூல்: புகாரி, முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

இந்நபிமொழி, ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ள அறிவிப்பின்படி - உண்மையைப் பற்றிப்பிடித்துக் கொள் ளுங்கள்" என்று தொடங்குகிறது.

உண்மை பேசுவதன் சிறப்பு குறித்து, அதன் நல்முடிவு குறித்து இந்நபிமொழி எடுத்துரைக்கிறது. பொய் பேசுங்கள்., அப்பொழுதுதான் உலகில் வாழ முடியும்., பொய் பேசினால்தான் எதுவொன்றிலும் நல்ல லாபம் ஈட்டலாம் என்று சிலர் சொல்லலாம்! ஆனால் பொய் பேசிச் சம்பாதிக்கும் பணத்தில் எந்த அபிவிரித்தியும் கிடையாது. பொய் பேசிச் சம்பாதிக்கும் செல்வம் தற்காலிக மானது - சீக்கிரம் அழியக் கூடியது என்பது மட்டு மல்ல, நம்மை நீடித்த அழிவில் ஆழ்த்தக்கூடியதும்கூட! உண்மை பேசுவதுதான் நிலையான லாபத்திற்கும் நன்மைக்கும் வழிவகுக்கக்கூடியது!

முன்னர் கூறியதுபோன்று - பொய்யான சொல் என்பது போல் பொய்யான செயல் என்றும் கூறப்படும்!. பொய்யான செயலுக்கு நயவஞ்சகனின் செயல் எடுத்துக்காட்டாகும்! நயவஞ்சகன் தன்னை ஓர் விசுவாசியென வெளிக்காட்டிக்கொள்கிறான். எல்லோருடன் சேர்ந்து அவனும் தொழுகிறான்., நோன்பு நோற்கிறான்., செல் வத்தை எடுத்து இறைவழியில் செலவும் செய்கி றான்! அவன் ஹஜ் செய்வதைக்கூட காணலாம்!

அவனுடைய இந்தச் செயல்களைக்காண்போர் அவற்றின் வெளிரங்கத்தைப் பார்த்துப் புகழ்வார்கள்! ஆனால் அவை இறைவழிபாடாக ஒருபோதும் ஆகமாட்டா! ஏனெனில் அவன் வழங்குகிற தர்மமும் நிறைவேற்றுகிற வழிபாடுகளும் அவனது அகத்தின் நிலைக்கு மாறுபடுகிறது! ஏனெனில் அவன் இறைவனை விசுவாசம் கொள்ள வில்லை என்பதே உண்மை! எனவே அவனும் பொய்யன்தான்! அவனுடைய வணக்க வழிபாடுகளும் பொய்யான வைதான்!

பிறகு நபி (ஸல்) அவர்கள் உண்மையின் படிப்படியான நல் விளைவுகளை இவ்வாறு விளக்கித்தருகி றார்கள்!

நிச்சயமாக உண்மை என்பது புண்ணியச் செயல்புரிய வழிகாட்டுகிறது. புண்ணியச்செயல் புரிவது சுவனத் திற்கு வழிகாட்டுகிறது. திண்ணமாக ஒரு மனிதன் உண்மையே பேசுகிறான்., இறுதியில் அல்லாஹ்விடத்தில் உண்மை யாளன் என்று எழுதப்படுகிறான்!"

புண்ணியமான செயல்கள் என்றால் நன்மையை - நற்கூலியை ஈட்டித் தருகிற செயல்கள். அத்தகைய செயல்களை நிறைவேற்றுவது மனிதனைச் சுவனத்தின் பக்கம் இட்டுச்செல்லும்! மறுவுலக வாழ்க்கையில் சுவனத்தை அடைய வேண்டும் என்பதுதானே இலட்சியங்களுக்கெல்லாம் இலட்சியம்!

இதனால்தான் ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் சுவனத்தைக் கேட்குமாறும் நரகத்தை விட்டும் பாது காப்புத் தேடுமாறும் கட்டளை இடப்படுகிறது!

فَمَنْ زُحْزِحَ عَنِ النّارِوَ أُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فازَ وَ ما الْحَياةُ الدُّنْيا اِلاَّ مَتاعُ الْغُرُوْرِ (آل عمران الآية : ١٨٥ )

அல்லாஹ் கூறுகிறான்: (மறுமை நாளில்) எவன் நரக நெருப்பில் இருந்து காப்பாற்றப்பட்டு சுவனத்தில் நுழைவிக்கப்படுகிறானோ அவனே உண்மையில் வெற்றி பெற்றவன் ஆவான்! இவ்வுலக வாழ்வென்பது ஏமாற்றக் கூடிய அற்ப இன்பமேயன்றி வேறில்லை!"(3 : 185) நபியவர்கள் தொடர்ந்து சொல்கிறார்கள்:

ஒரு மனிதன் உண்மையே பேசிக்கொண்டு வருகிறான்., இறுதியில் அல்லாஹ் விடத்தில் உண்மையாளன் என்று எழுதப்படுகிறான்!

- மற்றோர் அறிவிப்பில், ஒருமனிதன் தொடர்ந்து உண்மை பேசிவருகிறான்.,மேலும் உண்மையே பேசவேண்டு மென்று தெண்டிக்கிறான்., இறுதியாக அல்லாஹ் விடத்தில் உண்மையாளன் என்று எழுதப்படுகிறான் என்று உள்ளது!

கருத்து இதுதான்: உண்மையே பேசிவர வேண்டும். அதில் முழுக் கவனமும் நாட்டமும் வேண்டும். அப்போது தான் உண்மையாளன் என்று அவனை அல்லாஹ் ஒப்புக்கொள்வான்!

உண்மையாளர்" எனும் நிலை,அல்லாஹ்வின் பேரருள் பொழியப்பட்ட மேன்மக்களின் வரிசையில் இரண்டா வது அந்தஸ்தில் உள்ளது. அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

قال الله: وَمَنْ يُطِعِ اللهَ و الرَّسُوْلَ فَأُوْلئكَ مَعَ الَّذِيْنَ أَنْعَمَ اللهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّنَ وَ الصِّدِّيْقِيْنَ وَ الشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ (سورة النساء الآية: ٦٩)

அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிகிறவர்கள் யாரோ அவர்கள், அல்லாஹ் அருள்புரிந்துள்ள நபிமார்கள், உண்மையாளர்கள், இறைவழியில் உயிர்த்தியாகம் புரிந்தவர்கள், உத்தமர்கள் ஆகியோருடன் இருப்பர்!"(4: 69)

உண்மையாளர்கள் அனைவரினும் சிறந்தவர் - மகத்துவமிக்கவர் யார் எனில் இறைவிசுவாசத்தில் -நபியவர் களை உண்மைப்படுத்துவதில் சிறந்து விளங்குபவரே ஆவார்! அத்தகைய உயர் சிறப்புக்குரியவர்கள் நபித் தோழர் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள்தாம்! ஆம்! நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்திற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்தபொழுது அதை ஏற்பதில் அனைவருக்கும் முன்னிலையில் இருந்தவர்கள் அவர்கள்தாம்! அதில் அவர்களுக்கு எவ்வித தயக்கமோ கலக்கமோ இல்லை!

அன்றிலிருந்து இறைவிசுவாசத்தில் - அதன் உறுதிப்பாட்டில் அபூ பக்ர் (ரலி) அவர்கள் தன்னிகரற்ற வர்களாய்த் திகழ்ந்தார்கள்!

இதோ! நபிகளார் (ஸல்) அவர்கள் தாம் கண்டுவந்த மி∴ராஜ் எனும் விண்ணேற்ற நிகழ்ச்சியை மக்க ளிடையே அறிவித்தபொழுது எதிரிகள் அதனைப் பொய் என்று தூற்றினர். முஹம்மதே! ஓரிரவிலேயே எப்படி இங்கெல்லாம் சென்று வந்தீர்? மக்காவில் இருந்து பைத்துல் மக்திஸ் வரை ஒரே நாளில் எப்படி பயணம் சென்று திரும்பிவர முடியும்? பிறகு அங்கு இருந்து வானுலம் ஏறிச் சென்றதாகவும் சொல்கிறீரே! இது எப்படி சாத்திய மாகும்? என்று ஏளனமாகக் கேட்டனர்! அந்தஉடனேயே அபூ பக்ர் ஸித்தீக் (ரலி)அவர்களிடம் ஓடோடிச் சென்று, உங்கள் நண்பர் சொல்வதைக் கேட்டீர்களா? இப்படி இப்படியெல்லாம் சொல்கிறாரே அதையுமா நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்? என்று இடைமறித்துக் கேட்டு வழியிலேயே மடக்கப் பார்த்தார்கள்!

ஆனால் அதற்கு அபூ பக்ர்(ரலி) அவர்கள், என் அன்புத் தோழர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மொழிந்தார்கள் எனில், அது உண்மைதான்" என்று உறுதியுடன் - அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வண்ணம் பதில் அளித்தார்கள்! அப்பொழுதான் ஸித்தீக் - உண்மையாளர் எனும் சிறப்புப்பட்டத்தை அபூபக்ர் அவர்களுக்கு உறுதிப்படுத்தினார்கள் நபியவர்கள்!

பொய் பேசுவதன் தீய விளைவு என்ன?

பொய் என்பது தீமைபுரிய வழிகாட்டுகிறது. தீமை செய்வது நரகத்திற்கு வழிகாட்டுகிறது! - மற்றோர் அறிவிப்பு, பொய்யைக் குறித்து உங்களை எச்சரிக்கை செய்கிறேன் என்று தொடங்குகிறது!"

∴புஜூ ர் (தீமை செய்தல்) எனும் அரபி வார்த்தையின் அகராதிப் பொருள், அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் - அதை மீறிச் செயல்படுதல் என்பதாகும். தீமைகளிலேயே மிகவும் கொடுமையானது இறை வனை நிராகரிப்பதுதான்! அவன் மீது விசுவாசம் கொள்ள மறுப்பதுதான்! குர்ஆன் ஓரிடத்தில் குறிப்பிடுகிறது:

قال تعالى : أولئك هُمُ الْكَفَرَةُ الْفَجَرَةُ ( سورة عبس الآية: ٤٢ )

அவர்கள்தான் இறைவனை நிராகரிக்கக்கூடியவர்கள்., தீமைகள் செய்பவர்கள்!" (80 : 42)

பொய் பேசிக்கொண்டிருப்பவன் அல்லாஹ்விடத்தில் மகாப்பொய்யன் என்று எழுதப்பட்டுவிடுகிறான் என்று இந்நபிமொழியில் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதால் பொய் பேசுவது ஹராம் - தடைசெய்யப்பட்

டது மட்டுமல்ல., அறிஞர்கள் சிலர் கூறுவதுபோன்று - பெரும் பாவங்களுள் ஒன்றாகவே அது கணிக்கப்பட்டுள்ளது!

மிகக்கொடுமையான பாவமெனும் பொய் எது எனில், இன்று சிலரிடம் உள்ளதே- அதாவது, மக்களை வீணாகச் சிரிக்கவைக்கும் நோக்கத்துடன் பொய்களை அள்ளி வீசுகிறார்களே அதுதான்! மற்றொரு நபி மொழியில் இது குறித்து கடும் எச்சரிக்கை வந்துள்ளது. அது வருமாறு:

அத்தகைய மனிதனுக்கு நாசம் உண்டாவதாகுக! அவன் பேசும்பொழுது பொய்யுரைக்கிறான்., அதன் மூலம் மக்களைச் சிரிக்க வைப்பதற்காகவே (இப்படிச் செய்கிறான்!) அத்தகைய மனிதனுக்கு நாசம் உண்டாவதாக!" (அபூ தாவூத், திர்மிதி)

பாருங்கள்! பொய் பேசுவது பற்றி எவ்வளவு கடுமையாக எச்சரிக்கை செய்கிறார்கள் நபியவர்கள்! அதே நேரத்தில் அதனை எவ்வளவு லேசாகக் கருதுகிறார்கள் மக்கள்!

மற்றொரு கடுமையான பொய் ஒன்றும் உண்டு! அதுதான் பிறரின் உரிமைகளை அபகரித்து உண்பதற்காகப் பொய் பேசுவது! எடுத்துக்காட்டாக, பிறருக்கு வழங்க வேண்டிய உரிமையை ஒருவன் மறுப்பது, அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் எதுவும் தர வேண்டியதில்ல என்று பொய் சத்தியம் செய்வது! அல்லது நீ இவ்வளவு தொகை என்னிடம் கடன் வாங்கியிருந்தாய்., அதனை இன்னும் தரவில்லை என்று பொய் சத்தியம் செய்து பிறரின் சொத்தை அபகரிக்கப்பது! இது குறித்து கடுமையாக எச்சரிக்கை செய்யும் நபிமொழி வருமாறு:

ஒருமுஸ்லிமான மனிதரின் செல்வத்தை(அநியாயமாகப்)பறித்துக் கொள்வதற்காக (ஒரு பிரமாண வாக்குமூலத்தின்போது) துணிவுடன் யார் பொய் சத்தியம் செய்கிறாரோ அவர் மீது அல்லாஹ் கோபம் கொண்ட நிலையில்தான் அவனை மறுமை நாளில் அவர் சத்திப்பார்!" (நூல்: புகாரி)

## அருஞ்சொற்கள் – شرح الكلمات

| | |
|---|---|
| 1) புண்ணியம்: நன்மையானது, அவன் புண்ணியம் செய்பவன் என்றால் அதன் பொருள், உண்மையாளன், பயபக்தியாளன் என்பதாகும். | ١) البر: بكسر الباء: الخير، و برَّ الرجل يبرُّ برًّا فهو بَرٌّ و بارٌّ أي صادق أو تقي |
| 2) வழிகாட்டுகிறது: சேர்க்கிறது | ٢) يهدي: يرشد و يوصل |
| 3) உண்மையாளர்: இது கூடுதல் பொருளைத்தரும் வார்த்தை! இதன் பொருள்: தொடர்ந்து உண்மை பேசி வருபவர்., அது அவரது இயல்பான குணமாகவே ஆகிவிடுகிறது! | ٣) صِدِّيقا: من أبنية المبالغة وهو من يتكرر منه الصدق حتى يصير سجية له و خلقا |
| 4) ஃபஜர என்றால் கீழ்ப்படியாமல் மீறினான் என்று பொருள். ஃபுஜூ ர்: தீய செயல்கள்! | ٤) الفجور : فجر الرجل يفجر فجورا: فسق والفجور : الأعمال السيئة |
| 5) பொய்யன்: இது கூடுதல் பொருள் தரும் வார்த்தை. அதன் பொருள்: தொடர்ந்து பொய் பேசி வருபவன். இறுதியில் அது அவனது இயல்பான குணமாகவே ஆகிவிடுகிறது! | ٥) كذابا: من أبنية المبالغة وهو من تكرر منه الكذب حتي يصير سجية له و خلقا |
| 6) பொய்யன் என்று அல்லாஹ் விடத்தில் எழுதப் படுகிறான்: அவ்வாறு அவனுக்குத் தீர்ப்பு அளிக்கப்படும். அத்தன்மைக்கு தகுதி பெறுகிறான்! | ٦) يكتب عند الله كذابا : يحكم له بذلك ويستحق الوصف به |

## கேள்விகள்- الاسئلة

1) உண்மை, பொய் இவை பற்றிய விளக்கம் எழுதவும்!
2) உண்மையாளர் பெறும் உயர் அந்தஸ்து என்ன? அதற்கு அளிக்கப் பட்ட உதாரணம் என்ன?
3) பொய்களின் வகைகளை எழுதவும்.
4) பொய் பேசுபவன் அடையும் தீய கதி பற்றி விவரிக்கவும். அது பற்றி வந்துள்ள ஒருநபிமொழியை எழுதவும்.
5) சொல் - செயல் இவற்றில் பொய் மற்றும் உண்மை அமைவதெப்படி? உதாரணங்களுடன் எழுதவும்.

6) அபூ பக்ர் (ரலி) அவர்கள் ஸித்தீக் - உண்மையாளர் எனும் சிறப்புப்பட்டத்தைப் பெற்றது எப்பொழுது? மி∴ராஜின் போதுதான் வழங்கப்பட்டதா?
7) அறிவிப்பாளர் வரலாறு சுருக்கமாக எழுதவும்.

## உண்மையே உள்ளத்தின் அமைதி!

الثاني :٥٥– عَنْ أبِي مُحَمَّدٍ الحسن بن علي بن أبي طالب رضي الله عنهما قال : حَفِظْتُ مِنْ رَسُـــولِ اللهِ ﷺ : دَعْ مَـــا يُرِيْبُكَ اِلَي ماَ لاَ يُرِيْبُكَ فَاِنَّ الصِّدْقَ طُمَأنِيْنَةٌ وَ الكِذْبَ رِيْبَةٌ – رواه الترمذي وقال حديث صحيح

قَوْلُهُ: يُرِيْبُكَ :هوبفتح الياء وضمها ومعناه :اترك ما تشك في حله واعدل الى ما لا تشك فيه

ஹதீஸ் 55

ஹஸன் பின் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் மனப்பாடம் செய்துள்ளேன்: உன்னைச் சந்தேகத்தில் ஆழ்த்தக் கூடியதை விட்டுவிட்டு சந்தேகமில்லாததைச் செய்திடு! ஏனெனில் உண்மையே உள்ளத்தின் அமைதியாகும். பொய்தான் சஞ்சலத்தை ஏற்படுத்தக்கூடியது!" ( திர்மிதி)

உன்னைச் சஞ்சலத்தில் ஆழ்த்தக்கூடியது என்பதன் பொருள் : இது ஹலால் (ஆகுமானது) தானா என்று நீ சந்தேகப்படுவதை விட்டுவிட்டு அப்படிச் சந்தேமில்லாததன் பக்கம் சென்றிடு!

### தெளிவுரை - الشرح

இமாம் நவவி (ரஹ்) அவர்களின் நாற்பது நபிமொழிகள் எனும் நபிமொழித் தொகுப்பிலும் இது இடம் பெற்றுள்ளது.

இரத்தினச் சுருக்கமான வார்த்தைகளைத் தாங்கியுள்ள இந்நபிமொழியில் ஆழிய கருத்துகள் பயனுள்ள வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்! அது வழங்கும் மிக முக்கியமான வழிகாட்டல் நமது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்! பேணுதலான நடைமுறை என்பதுதான் அந்தவழிகாட்டல்! ஓருசெயல் ஹராமா, ஹலாலா (அதாவது இது தடைசெய்யப்பட்டதா, அனுமதிக்கப்பட்டதா?) என்று ஐயம் வந்துவிட்டால் அதை விட்டுவிட வேண்டும். அதிலிருந்து விலகிட வேண்டும். அதுவே பேணுதலான முறை! தூய்மைக்கான வழிகாட்டல்! மேலும் ஹராம் தவிர்த்த சாதாரணமான விஷயங்களிலும் மிகத் தெளிவான நிலைப்பாட்டைக் கொடுக்கக் கூடியதும் இதுவே!

கல்வியாளர்களில் சிலர் ∴பிக்ஹு சட்டப் பிரச்னைகளை அலசும்போது பேணுதல் நிலை என்று ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்! மேலும் அதனை ஒரு பொதுவான அடிப்படையாக வைத்து அதன் கீழ் பல்வேறு விஷயங்களைக் கொண்டு வருகிறார்கள்! அவற்றுள் சிலவற்றை இங்கு பார்ப்போம்:

❀ ஆடையில் அசுத்தம் பட்டுவிடுகிறது. அவ்வாறு அசுத்தமான பகுதி ஆடையின் மேல் பகுதியா? கீழ்ப் பகுதியா? என்பதுதான் சந்தேகம்! மேல் பகுதியைக் கழுகிச் சுத்தம் செய்தால் - கீழ்ப்பகுதி அசுத்தமாக இருக்குமோ என்று சந்தேகம் நீடிக்கிறது! கீழ்ப்பகுதியைச் சுத்தம் செய்தால் மேல்பகுதி அசுத்தமாக இருந்து விட்டால் என்ன செய்வது என்று மனம் குழம்புகிறது!

இதற்கான தீர்வைத்தான் இந்நபிமொழி வழங்குகிறது! அதுதான் பேணுதலான முறையைக் கடைப்பிடித்தல் என்பது! மேலே சொன்ன விஷயத்தில் பேணுதலான முறை என்னவெனில், அந்த ஆடையின் மேல் பகுதியையும் கீழ்ப் பகுதியையும் - முழுவதுமாகக் கழுகிச் சுத்தம் செய்வதுதான் பேணுதல்! அப்படிச் சுத்தம் செய்கிறபொழுது சந்தேகம் முழுமையாக நீங்கிவிடுகிறது!

❀ ஒருவனுக்குத் தொழுகையில் சந்தேகம். தொழுது முடித்தது, இரண்டு ரக்அத்தா? மூன்றா? என்று! எந்த முடிவுக்கும் அவனால் வர முடிவதில்லை. இப்பொழுது என்ன செய்வது? சந்தேகம் நீங்கி மனம் அமைதி பெறுவதெப்படி? அதற்குத்தான் அந்தப் பேணுதலானமுறை அழகிய தீர்வைத் தருகிறது!

ஆம்! குறைவான எண்ணிக்கையை -அதாவது, இரண்டு ரக்அத் என்பதைக் கணக்கில்கொண்டு செயல் பட்டால் சந்தேகம் நீங்கிவிடும்! இரண்டு ரக்அத் தொழுதது உறுதியானது., உறுதியான நிலையை அடைந்து விட்டால் சந்தேகத்திற்கு அங்கு இடமேது? இதேபோல் மூன்று ரத்அத்தா? நான்கா? என்று சந்தேகம் வந்தால்- தொழுதது மூன்று ரக்அத் என்று முடிவு செய்துகொண்டு மீதி ஒரு ரக்அத்தை நிறைவேற்றினால் சந்தேகம் நீடிக்கவா செய்யும்?

ஐயத்திற்கும் சஞ்சலத்திற்கும் உரியதை விட்டுவிட்டு ஐயமில்லாததை எடுத்துக் கொள்! என்பது எவ்வளவு தெளிவான வழிகாட்டல்! மனத்தைக் குழப்பக்கூடிய சட்டப்பிரச்னைகள் அனைத்திற்கும் ஓர் இலகுவான தீர்வைக் கொடுக்கும் எவ்வளவு எளிமையான அடிப்படை!

இதன் சிறப்பை இன்னொரு கோணத்திலும் நாம் ஆராய்ந்திட வேண்டும்! அதாவது, இதில் மனோதத்துவ ரீதியான பயிற்சியும் உள்ளது. எவ்வாறெனில் மனக்கலக்கத்தை விட்டுவிட்டு அமைதிக்கும் நிம்மதிக்கும் திரும்பு வதுதான் மனிதனின் மனநலத்திற்கும்கூட நல்லது! இதோ! மக்களில் சிலர் இதுபோன்ற சந்தேகத்திற்குப் பலியாகி அதிலிருந்து விடுபட முடியாமல் உழன்று கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம். என்ன செய்வ தென்றே தெரியவில்லை.,எவ்வித முடிவுக்கும் வரமுடிவதில்லை., உள்ளத்தில் உறுத்தல் இருந்துகொண்டே இருக்கிறது என்று புலம்புவதை நீங்கள் கேட்கலாம்! அத்தகைய தடுமாற்றத்தை - உறுத்தலை- கலக்கத்தை நீக்கி நிம்மதி பிறக்க வழிவகுக்கும் ஓர் எளிய பயிற்சியைத்தான் இந்நபிமொழி தருகிறது!

உண்மையே உள்ளத்தின் அமைதியாகும்"

இந்நபிமொழியை இங்கு இடம்பெறச் செய்ததன் ஆதாரம் இதுதான். உண்மையே உள்ளத்திற்கு அமைதி தரவல்லது! உண்மை பேசுபவன் என்றைக்கும் மனம் வருந்த வேண்டியதில்லை. அடடா! இப்படி பேசி விட் டோமே! எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தோமில்லையே! என்று துயரப்பட வேண்டிய நிலையே அவனுக்கு வராது!

ஏனெனில் உண்மை பேசியவர்களுக்கு, உண்மை பேசியதன் காரணத்தால் ஈடேற்றம் அளித்திட அல்லாஹ்வே பொறுப் பேற்றுக் கொள்கிறான்! அதனால்தான் உண்மையாளன் எது குறித்தும் கலக்கப்படாமல் -கவலைப்படாமல் நிம்மதியாக இருப்பதை நீங்கள் காணலாம்! நடந்து முடிந்தது பற்றியோ எதிர்காலத்தில் நடக்க இருப்பதுபற்றியோ எந்தக்கவலையும் அவனுக்கு இருப்பதில்லை! ஏனெனில் அவன் உண்மை உரைத் திருக்கிறான், உண்மை பேசியவனுக்கு என்றைக்கும் ஈடேற்றமே!

பொய்தான் சஞ்சலத்தை ஏற்படுத்தக் கூடியது!"

இதுதான் பொய்யின் நிலை! இதனால்தான் பொய் பேசியது குறித்து - அனைவருக்கும் முதலில் பொய் பேசியவனின் மனமே பதற்றத்திற்குள்ளாகிறது! நாம் பொய் சொல்லியது நாலு பேருக்குத் தெரிந்து விட்டதோ என்னவோ தெரியவில்லையே! அப்படித் தெரிந்துவிட்டால் நாம் சொல்வதை மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார் கள்? என்று அவனது மனம் உறுத்திக் கொண்டே இருக்கும்!

இதனால்தான் பொய்யன் ஏதேனும் செய்திஅறிவித்தால் மூச்சுக்கு முந்நூறு தடவை அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! என்று சத்தியங்களை அள்ளி வீசுவதை நீங்கள் காணலாம்! இதோ! நயவஞ்சகர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

قال الله :يَحْلِفُوْنَ بِاللهِ مَا قَالُوْا وَ لَقَدْ قَالُوْا كَلِمَةَ الْكُفْرِوَ كَفَرُوْا بَعْدَ اِسْلاَمِهِمْ (التوبة الآية: ٧٤

நிராகரிப்புக் கொள்கையை அவர்கள் கூறியிருந்தும் நாங்கள் அவ்வாறு கூறவே இல்லைஎன்று அல்லாஹ் வின் மீது சத்தியம் செய்கிறார்கள்! அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபின் நிராகரிப்பை மேற்கொண்டார் கள் என்பது உண்மையே!"(9: 74)

இவ்வாறு அவர்கள் சத்தியம் செய்வதற்குக் காரணம், மனக்கலக்கமும் கடும் சஞ்சலமும் அவர்களை வாட்டிக் கொண்டிருக்கிறது என்பதே!

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## ஹஸன் பின் அலீ (ரலி) அவர்கள்

இவர்கள் அலீ (ரலி) அவர்களின் மூத்த புதல்வரும் நபி (ஸல்) அவர்களின் பேரரும் ஆவார்! ஹிஜ்ரி 3 ம் ஆண்டு ரமளான் மாதத்தின் நடுப்பிறையில் பிறந்தார்கள். அவர்களது மனைவியின் மூலம் நஞ்சு கொடுக்கப் பட்டு ஹிஜ்ரி 54 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்கள். ஸஅத் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்த மதீனாவின் பகீஉ மண்ணறையில் அவர்களது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது! ஹஸன் (ரலி) அவர்கள் பக்தி, பேணுதல், கொடைத்தன்மை ஆகிய பண்பாட்டில் பிரபலமான மேன்மக்களில் குறிப்பிடத் தக்கவர்கள்! அன்னாரின் சிறப்புகளும் உயர் அந்தஸ்துகளும் ஏராளம்! இவர்களிடம் இருந்து 13 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) உன்னைச் சந்தேகத்தில் ஆழ்த்தக் கூடியது. மூன்றெழுத்து கொண்ட வினைச்சொல்லாகவும் நான்கு எழுத்துக்கொண்ட வினைச் சொல்லாகவும் இதனை | ١) يريبك : بفتح الياء من راب وضـــمها مـــن أراب |

| | |
|---|---|
| வாசிக்கலாம். முந்தையதே ஏற்றது. | والفتح أفصح |
| 2)மனம் அமைதியானது., கலக்கம் அடைய வில்லை! | ٢) طمأنينة: اطمأن القلب: سكن ولم يقلق و الاســم الطمأنينة |

## கேள்விகள் - الاسئلة

1) இந்நபிமொழியின் கருத்தைச் சுருக்கமாக விவரிக்கவும்!
2) பேணுதலான நடைமுறைக்குச் சில உதாரணங்கள் தரவும்.
3) உண்மை பேசினால் ஏற்படும் பயன்கள், பொய் பேசியதால் ஏற்படும் தீங்குகள் சிலவற்றை எழுதவும்.
4) நயவஞ்சகர்கள் பொய்யினால் சஞ்சலத்திற்குள்ளாவதை விளக்கவும்.
5) பொய் குறித்து இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கொணர்ந்த குர்ஆன் வசனம் ஒன்றை எழுதி அதற்கு விளக்கம் தரவும்!
6) அறிவிப்பாளர் குறித்து நீ அறிந்திருப்பதென்ன?

## அந்த நபி உண்மை பேசுமாறு ஏவுகிறார்!

الثالث: **٥٦ – عَنْ أَبِي سُفْيَانَ صَخْرِ بْنِ حَرْبٍ ﷺ ، فِي حَدِيْثِهِ الطَّوِيْلِ فِي قِصَّةِ هِرَقْلَ : قَالَ هِرَقْلُ : فَمَاذَا يَـأْمُرُكُمْ – يَعْنِـي النبي ﷺ – قَالَ اَبُو سُفْيَانَ : قَلْتُ : يَقُوْلُ: اعْبُدُوْا اللهَ وَحْدَهُ وَ لاَ تُشْرِكُوْا بِهِ شَيْئاً وَ اتْرُكُوْا مَا يَقُوْلُ آبَاءُكُمْ ، وَ يَأْمُرُنَا بِالصَّلاَةِ ، وَ الصِّدْقِ ، وَ الْعَفَافِ ، وَالصِّلَةِ . متفق عليه**

ஹதீஸ் 56

அபூ ஸு ப்யான் (ரலி) அவர்கள் ஹிரக்ல் மன்னனின் கதை தொடர்பான தமது நீண்ட செய்தியில் அறிவிக்கிறார்கள்: உங்களுக்கு அவர் அதாவது நபி (ஸல்) அவர்கள் எதனை ஏவுகிறார்? என்று ஹெர்குலிஸ் மன்னர் கேட்டார். நான் சொன்னேன்: அவர் கூறுவது இதுதான்: அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்., வேறெந்தப் பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும் உங்கள் மூதாதையர் சொல்வதை விட்டு விடுங்கள். மேலும் தொழுகை, உண்மை, பத்தினித்தனம், பந்தபாசம் ஆகியவற்றை மேற் கொள்ளுமாறும் எங்களுக்கு அவர் ஏவுகிறார்!" (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை - الشرح

நபி (ஸல்) அவர்களைப் பற்றி தமக்கும் ஹெர்குலிஸ் மன்னனுக்கும் நடந்த உரையாடலை இங்கு நினைவு கூர்கிறார் அபூ ஸு ப்யான் (ரலி) அவர்கள்! அப்பொழுது அவர் முஸ்லிமாக இல்லை., அவர் இஸ்லாத்தை ஏற்றது பின்னாட்களில்தான்! அதாவது ஹு தைபிய்யா உடன்படிக்கைக்கும் மக்கா வெற்றிக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் அபூ ஸு ப்யான் இஸ்லாம் மார்க்கம் ஏற்றார்!

ஹிஜ்ரி 6 ம் ஆண்டு ஹு தைபிய்யா உடன்படிக்கை நடைபெற்ற பிறகு நபி (ஸல்)அவர்கள், இஸ்லாத்தை ஏற்குமாறு அண்டை நாடுகளின் மன்னர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதன்படி ரோம் நாட்டு மன்னர் ஹெர்குலிஸ் என்பாருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது! அதனைப் படித்துப்பார்த்த பிறகே நபிகளார் (ஸல்) அவர் களைப் பற்றி விசாரிக்கும் எண்ணம் ஹிரக்ல் மன்னருக்கு வந்தது!

மக்கா வாசியான அபூஸு ப்யான் அப்பொழுது வியாபாரம் தொடர்பாக ஷாம் தேசம் வந்திருந்தார். அவரு டன் குறைஷிகளின் வாணிபக் கூட்டத்தினர் சிலரும் இருந்தனர். அதே காலகட்டத்தில் ஜெரூஸலம் வருகை தந்த ஹெர்குலிஸ் மன்னர், பைத்துல் முகத்தஸில் முகாமிட்டிருந்தார். ஹிஜாஸ் பகுதியிலிருந்து அரபுகள் சிலர் வந்திருப்பதைக் கேள்விப்பட்டதும் அந்த அரபுகளிடம் நபி (ஸல்)அவர்களைப் பற்றி விசாரிக்கலாம் எனக் கருதி அவர்களை அழைத்து வருமாறு மன்னர் கட்டளையிட்டார்! அதன்படியே அபூ ஸு ப்யானும் அவருடனி ருந்த அரபுகளும் அரச தர்பாருக்கு வந்தனர்.

நபிகளாரைக் குறித்து பல கேள்விகளை அபூ ஸு ப்யானிடம் கேட்டார், மன்னர்!. நபியவர்களின் பாரம்பரி யம், குணவொழுக்கம், அவர்களின் அழைப் பேற்று இஸ்லாம் மார்க்கம் தழுவும் மக்களின் நிலை, அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்கு அளிக்கும் கண்ணியம் ஆகியவை பற்றி விசாரித்தார்!

முந்தைய காலத்தில் இறக்கிருளப்பட்ட தௌராத் - இன்ஜீல் போன்ற வேதங்களை ஹெர்குலிஸ் மன்னன் கற்றிருந்ததால் நபியவர்கள் பற்றி அபூ ஸு ப்யான் எடுத்துரைத்த ஒவ்வொரு விஷயத்தின்போதும், முந்தைய வேதங்களில் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நபி இவர்தான் எனத் தெரிகிறது என்று கூறிக்கொண்டிருந்தாார்! அப்படி நபி(ஸல்)அவர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் தெரிவித்த ஹெர்குலிஸ் மன்னர் இஸ்லாத்தை ஏற்றாரா என்றால் அதுதான் நிகழவில்லை!அதுதான் மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும்! ஆட்சியதிகாரத்தின் மீதான மோகம் அவரை ஆட்கொண்டிருந்தது! உண்மையை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தை ஏற்கவிடாமல் அவரைத் தடுத்து விட்டது அதுவே!

ஆயினும் ஹெர்குலிஸ் மன்னன் -அபூ ஸு ப்யான் உரையாடலின் மூலம் நபிகளாரின் தூதுத்துவம் உண்மை யானதே என்பதற்கான உறுதிமிக்க பல சான்றுகள் உலகிற்குக் கிடைத்துள்ளன! அழகிய பல அறிவுரை களையும் அது உள்ளடக்கியுள்ளது!

<u>அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்., வேறெந்தப் பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள்</u>”

நபிகளாரின் போதனைகள் குறித்து அபூ ஸு ப்யான் எடுத்துரைத்த முதலாவதும் முக்கியமானதுமானது இதுதான்! அல்லாஹ் அல்லாத எவரையும் எந்தப்பொருளையும் வணங்காதீர்கள் என்பதுதான்! மலக்கையும் நபியையும் கடவுளெனக் கருதக்கூடாது. சூரியனையும் சந்திரனையும் கல்லை யும் மண்ணையும் செடியையும் கொடியையும் - எது ஒன்றையும் வழிபடக்கூடாது! வணக்க வழிபாட்டை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செலுத்த வேண்டும்! இந்த ஏகத்துவக் கொள்கையைத்தான் உலகில் தோன்றிய இறைத்தூதர்கள் அனைவரும் போதித்தார்கள்! குர்ஆன் ஓரிடத்தில் கூறுகிறது:

قال تعالى:وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ اِلاَّ نُوْحِي اِلَيْهِ أَنَّهُ لاَ اِلهَ اِلاَّ أَنَا فَأَعْبُدُوْنِ (الانبياء الآية: ٢٥ )

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்தத் தூதரிடத்திலும் - நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை., என்னையே நீங்கள் வழிபட வேண்டும் என்றே வஹி மூலம் நாம் அறிவித்திருந்தோம்!” (21 : 25)

<u>மேலும் உங்கள் மூதாதையர் சொல்கிற கருத்துகளை விட்டுவிடுங்கள்</u>”

இது, சத்தியத்தைப் பகிரங்கப்படுத்தும் தெளிவான- துணிவான போக்கு மட்டுமல்ல மனிதகுலச் சீர்திருத் தத்திற்கான அடிப்படையே இதுதான்! இதோ! அனைத்திற்கும் முதலில் - மூதாதையர்கள் பின்பற்றி வந்த சடங்கு சம்பிரதாயங்களை விட்டொழியுங்கள் என்கிறார்கள் நபிகளார்! அவை என்ன? சிலைவணக்கமும் அது சார்ந்த சீர்கேடுகளும் மூடப்பழங்கால அநாச்சாரங்களும்தான்! சமூக வாழ்க்கையில் புற்றீசல் போல் பல்கிப் பெருகும் எல்லா அநாச்சாரங்களுக்கும் சீரழிவுகளுக்கும் மூதாதையரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் போக்குதான் மூல காரணம் என்பது பட்டவர்த்தனமான உண்மை!

அதே நேரத்தில் முன்னோர்கள் கடைப்பிடித்துவருவது இஸ்லாம் ஏற்றுக் கொள்ளும் மேலான குணவொழுக் கங்கள் - நெறிமுறைகள் எனில் அவற்றைப் பின்பற்றலாம்., பின்பற்றத்தான் வேண்டும்! அல்லாஹ் குர்ஆனில் கூறு வது போன்று:

قال تعالى: وَاِذَا فَعَلُوْا فَاحِشَةً قَالُوْ ا وَجَدْنَا عَلَيْهَا آبَائَنَا وَ اللهُ أَمَرَنَا بِهَا (الاعراف الآية: ٢٨ )

அவர்கள் ஏதேனும் மானக்கேடான செயலைச் செய்தால் இப்படித்தான் எங்கள் மூதாதையர் வாழ்ந்திடக் கண்டோம் என்றும் இவ்வாறு செய்யுமாறுதான் அல்லாஹ்வும் எங்களுக்குக் கட்டளையிட்டான் என்றும் கூறுகி றார்கள்” (7 : 28) - அல்லாஹ் அதற்கு மறுப்பளிக்கும்பொழுது கூறுகிறான்:

قال الله عز وجل: قُلْ اِنَّ اللهَ لاَ يَأمُرُ بِالْفَحْشَاءِ

நீர் கூறும்: மானக்கேடானவற்றைச் செய்யுமாறுஅல்லாஹ் ஒருபோதும் கட்டளை யிடுவதில்லை! . . . ” (7 : 28) -அதாவது, மானக்கேடான, தீய செயல்கள் எப்பொழுதுமே தடைசெய்யப்பட்டவைதான்! ஆனால் நல்லொ ழுக்கம் சார்ந்த செயல்களை மூதாதையர் செய்தால் அவை வரவேற்கப்பட வேண்டியவையே!

ஆக! நபி (ஸல்) அவர்கள் முற்காலத்து மக்கள் பாரம்பரியமாகச் செய்து வரும் சடங்குசம்பிரதாயங்களை யும் வழிகேடுகளையும் விட்டொழிக்க வேண்டுமெனப் பிரத்தியேமாகக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள், தங்களது அழைப்பை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு!

<u>தொழுகையைக் கடைப்பிடிக்குமாறு எங்களை ஏவினார்!</u>”

மனிதனுக்கும் இறைவனுக்கும் ஓர் வலுவான தொடர்பை ஏற்படுத்தக் கூடியது தொழுகைதான்! இறை விசுவாசிகள் யார்? இறைமறுப்பாளர்கள் மற்றும் இணைவைப்பாளர்கள் யார் யார் என்று வேறுபடுத்தும் எல்லைக் கோடே தொழுகை! மற்றொரு தடவை நபி(ஸல்)அவர்கள் அருளினார்கள்: நமக்கும் அவர்களுக்கும்

வித்தியாசப்படுத்தும் உடன்படிக்கை தொழுகையே! யார் அதை விட்டுவிடுகிறாரோ அவர் நிராகரிப் பாளராகி விட்டார்!" (நூல்: திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா)

ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இரு நபருக்குச் சொந்தமான இரு நிலங்களுக்கு மத்தியில் எல்லைக் கோடு ஒன்றிருக்கும். அந்த எல்லைக் கோட்டிற்கு உட்பட்ட நிலம் தான் அவரவருக்குச் சொந்தம்! அதற்கு அப்பாற்பட்ட நிலத்தை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது!

இதேபோன்று இறைவிசுவாசத்திற்குரிய எல்லைக் கோடாகத் தொழுகை திகழ்கிறது! தொழுகையைக் கை விட்டவன் இறைவிசுவாசத்திலிருந்து வெளியேறி விடுகிறான்! ஏனெனில் தொழுகையை விட்டவன் ஓரிறை நம்பிக்கை எனும் தௌஹீதையே கைகழுவியவன் ஆவான்! ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவித்த மற்றொரு நபிமொழி இதனையே சுட்டிக்காட்டுகிறது:

**عن جابر ﷺ عن النبي ﷺ أنه قال :بين الرجل وبين الكفروالشرك ترك الصلاة - أخرجه مسلم**

ஒருமனிதனுக்கும் நிராகரிப்பு மற்றும் இணைவைப்புக்கும் மத்தியில் எல்லைக் கோடு தொழுகையை விடுவதுதான்!" (நூல்: முஸ்லிம்)

<u>உண்மை, பத்தினித்தனம், பந்தஇணைப்பு ஆகியவற்றை மேற்கொள்ளு மாறும் எங்களுக்கு ஏவுகிறார்!"</u>

உண்மை பற்றிய விளக்கம் முன்னர் விரிவாகச் சென்றுள்ளது. பத்தினித்தனம் என்பது இரண்டு வகை யாகும். ஒன்று: மானத்தைப் பாதுகாப்பது! மற்றொன்று: தன்மானத்தைப் பாதுகாப்பது! அதாவது, பிறரிடம் கையேந்தாமல் தன்மானத்துடன் வாழ்வது!

முந்தையது, விபச்சாரமெனும் மானக்கேடான செயலை விட்டும் அதற்குத் தூண்டுகோலாக இருக்கும் நட வடிக்கைகளை விட்டும் விலகியிருப்ப தாகும். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

**لأن الله يقول: وَلاَ تَقْرَبُوْا الزِّنَي اِنَّهُ كَانَ فَاحِشَةً وَ ساَءَ سَبِيْلاً (سورة الاسراء الآية: ٣٢ )**

மேலும் விபச்சாரத்தின் அருகில்கூட நெருங்காதீர்கள். திண்ணமாக அது மானங்கெட்ட செயலாகவும் தீய வழியாகவும் இருக்கிறது!" (17 : 32)

விபச்சாரக் குற்றத்திற்கு ஷரீஅத் கடுமையான தண்டனைதான் கொடுக்கிறது! அதாவது, விபச்சாரம் செய்த ஒருவனை நூறு சாட்டையடி கொடுக்க வேண்டும்., ஓராண்டு நாடு கடத்த வேண்டும்! இது அவன் மணம் புரியாதவனாக இருந்தால்! திருமணம் முடித்து மனைவியுடன் வாழ்ந்தவன் விபச்சாரம் செய்தால் அவனைக் கல்லால் அடித்துக் கொன்றிட வேண்டும்!

இத்தகைய கடுமையான தண்டனையை இஸ்லாமிய ஷரீஅத் வழங்குவதன் நோக்கம் என்ன? அருவருக் கத்தக்க - மானக்கேடான இந்த இழிச்செயலில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும்., அவர்களை நல்லொழுக்கத்துடன் வாழச்செய்ய வேண்டும் என்பதுதான்! இந்த மாபாதகச் செயல் அவர்களின் ஒழுக்க உணர்வை மழுங்கச்செய்து படுபயங்கரமான சீரழிவையும் நாசத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தக் கூடியதாகும்! மக்களின் மதநம்பிக்கையையும் மனிதப் பண்பாட்டின் மீதான மரியாதை யையும் மதிப்பச்சத்தையும் பலமிழக்கச் செய்யக்கூடிய படுமோசமான செயல் இது! மட்டுமல்ல இந்தக் கேவலமான இழிச்செயல்தான் மிகப் பயங்கர மான - உயிர்க் கொல்லி நோய்கள் பரவுவதற்கும் காரணம்! விபச்சாரமும் ஒழுக்கக் கேடுகளும் மலிந்துவிட்ட இன்றைய சீரழிந்த காலச் சூழ்நிலையில் எய்ட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் மிகப்பெரிய அளவில் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருப்பது நிதர்சனமான உண்மையன்றோ!

விபச்சாரமெனும் இந்தக் கொடிய பாவத்தை இஸ்லாம் தடைசெய்து அதற்கான தண்டனையைக் கடுமை யாக்கியது மட்டுமல்ல அந்த மானக்கேடான செயலுக்குத் தூண்டுகோலாக உள்ள எல்லாத் தீமைகளைக் களைவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கிறது! பெண்கள் பர்தா அணிந்து உடலை மறைத்துக் கொண்டுதான் வெளியே செல்ல வேண்டுமென்கிற நல்லொழுக்கப் போதனை இந்தவகையைச் சேர்ந்ததே! அல்லாஹ் திருக் குர்ஆனில் கூறுகிறான்:

**قال الله تعالى: وَ قَرْنَ فِي بُيُوْتِكُنَّ وَ لاَ تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُوْلَي (سورة الأحزاب الآية: ٣٣)**

மேலும் உங்களுடைய வீடுகளில் தங்கியிருங்கள். முந்தைய அஞ்ஞானக் காலத்தைப்போன்று ஒப்பனையை யும் ஒய்யாரத்தையும் காட்டிக்கொண்டு திரியாதீர்கள்!"(33:33)

ஆம்! ஒரு பெண்ணின் நல்லொழுக்கத்திற்குப் பாதுகாப்பு அவள் தனது வீட்டில் தங்கியிருப்பதுதான்! ஏதேனும் தேவையோ நிர்ப்பந்தமோ இருந்தால் மட்டும்தான் அவள் வெளியே செல்ல அனுமதியுண்டு! அப்படி வெளியே செல்லும்பொழுதுகூட - நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று - நறுமணப்பொருட்களைப் பயன் படுத்தாமல் - ஒழுக்கத்தைப் பேணும் நிலையில்தான் செல்ல வேண்டும்!

இதோ! நபி (ஸல்) அவர்கள், தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குச் செல்லும் பெண்களுக்கு என்ன போதிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்! அல்லாஹ்வின் அடிமைகளை (அதாவது பெண்களை) மஸ்ஜித் களுக்குச் செல்ல வேண்டாமெனத் தடுக்காதீர்கள். ஆயினும் அவர்கள் சாதாரண ஆடைகளுடன் வீட்டில் இருந்து வெளியே வரட்டும்" (அறிவிப்பு: அபூ ஹு ரைரா (ரலி) - நூல்: அபூ தாவூத்)

பிறரிடம் தேவையாகாமல் தன்மானத்துடன் வாழ்வதும் இஸ்லாத்தின் நன்நெறிகளுள் மிக முக்கிய மானதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

**قال تعالى :يَحْسَبُهُمُ الْجَاهِلُ أَغْنِيَاءَ مِنَ التَّعَفُّفِ تَعْرِفُهُمْ بِسِيْمَاهُمْ لاَ يَسْئَلُوْنَ النَّاسَ اِلْحَافًا (البقرة: ٢٧٣ )**

(அவர்களைப் பற்றி அறியாதவர்) அவர்களின் தன்னடக்கத்தைக் கண்டு அவர்களைச் செல்வந்தர்கள் என்றுதான் கருதுகிறார்கள். ஆனால் அவர்களின் முக அறிகுறிகளைப் பார்த்தே அவர்களை நீர் அறிந்து கொள்ளலாம்! அவர்கள் மக்களிடம் வற்புறுத்திக் கெஞ்சிக்கேட்க மாட்டார்கள்!" (2 : 273)

- மக்களிடம் யாசிப்பதை இந்த வசனம் தடுக்கிறது. மனிதன் தன்மானத்துடன் வாழவேண்டும் என்பது தான் இஸ்லாத்தின் குறிக்கோள்! ஏனெனில் யாசிப்பது இழிவாகும். யாசிப்பவனின் கரம் தாழ்ந்தது., கொடுப்ப வனின் கரம்தான் உயர்ந்தது! எனவே யாரிடமும் எதுவும் கேட்கக்கூடாது. ஆனால் இன்றியமையாத தேவை ஏற்பட்டுள்ளதெனில் - நிர்ப்பந்தமான சூழ்நிலையெனில் யாசிப்பது கூடும். அவ்வாறில்லாத நிலையில் யாசிப்ப தென்பது தீயசெயலாகும்., தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தன்மானத்திற்கு களங்கம் விளைவிக்கும் இத்தகைய தீயசெயல் குறித்து எச்சரிக்கை செய்யக்கூடிய பல நபிமொழிகள் வந்துள்ளன. ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்: உங்களில் ஒருவர் தொடர்ந்து யாசகம் கேட்டுக் கொண்டே இருப்பாரெனில், இறுதியில் முகத்தில் சதை இன்றி அலங்கோலமான நிலையில் தான் அல்லாஹ்வை அவர் சந்திப்பார்"!(அறிவிப்பு: இப்னு உமர்(ரலி) - நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்களின் இத்தகைய அழுத்தமான அறிவுரைகளைச் செவியேற்றதை அடுத்து இதோ! ஸஹாபாக்கள் யாரிடத்திலும் எந்தத் தேவையையும் கேட்க மாட்டோம் என்று சபதமே செய்துகொடுத்தார்கள் என்ற ஹதீஸ் அறிவிப்புகளில் வந்துள்ளது! அதன் பின்னர் எத்தகைய தன்மானமிக்க வாழ்க்கையை அவர்கள் மேற்கொண்டார்களெனில் அவர்களில் ஒருவர் வாகனத்தின் மேலே அமர்ந்திருக்கும் நிலையில் அவரது சாட்டை கீழே விழுந்தால் அதை எடுப்பதற்குக்கூட யாருடைய உதவியையும் அவர் நாடுவதில்லை! அவரே கீழே இறங்கித்தான் அதை எடுப்பார் என்று வரலாற்றில் பார்க்கிறோம்!

<u>பந்த பாசத்தை மேற்கொள்ளுமாறும் ஏவுகிறார்!"</u>

அதாவது, எத்தகைய உறவுகளை இணைத்துவைக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அத்தைகய உறவுகளுடன் இணைந்து வாழ வேண்டும்! மிகநெருங்கிய உறவினர்களுக்கு முதலிடம்! பிறகு அடுத்தடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்! இந்த வகையில் முதலில் பெற்றோர்கள்! பிறகு உடன்பிறந்தவர்கள், பிறகு தந்தையின் உடன் பிறந்தவர்கள்! இவ்வாறே அதன் வரிசை செல்கிறது! ஏனெனில் குர்ஆன் - ஹதீஸில் பந்துக்கள் எனும் வார்த்தை பொதுப்படையாக வந்தால் வழக்கத்திலுள்ள கருத்தே அதற்குக் கொடுக்கப்படும். அதன்படி பந்துக்களைக் கவனித்தல் என்பது மக்களின் சூழ்நிலை மற்றும் காலங் கள், இடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப அமைவதாகும்.

### அறிவிப்பாளர் அறிமுகம்

## அபூ ஸு ப்யான் (ரலி) அவர்கள்

அபூ ஸு ப்யான் (ரலி)அவர்கள் ஆனை ஆண்டிற்கு பத்து வருடங்கள் முன்பு பிறந்தார்கள். ஆரம்ப காலத் தில் இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்க்கக் கூடியவராக இருந்த அன்னார் இஸ்லாம் மார்க்கம் ஏற்றது, மக்கா வெற்றி கொள்ளப்பட்ட இரவில்தான்! அதன் பிறகு இஸ்லாத்தின் வெற்றிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பல யுத்தங்களில் கலந்துகொண்டார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஹு னைன் மற்றும் தாயிப் யுத்தங் களாகும்.

அபூ ஸு ப்யான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மனைவி உம்மு ஹபீபா (ரலி) அவர்களுடையவும் வஹி எழுத்தர்களில் ஒருவரான அமீர் முஆவியா (ரலி) அவர்களுடையவும் தந்தை ஆவார்கள்.

நுபி (ஸல்) அவர்கள் அபூ ஸு ப்யான் அவர்களை நஜ்ரான் தேசத்தின் கவர்னராக நியமித்திருந்தார்கள், நபியவர்கள் மரணம் அடைந்த பொழுதும் அபூஸு ப்யான் அந்தப் பதவியில்தான் இருந்தார்கள்! 88 ஆம் வயதில் மதீனாவில் ஹிஜ்ரி 31 ஆம் ஆண்டு மரணம் அடைந்த அபூ ஸு ப்யானுக்கு உஸ்மான் (ரலி)அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்!

## அருஞ்சொற்கள் - شرح الكلمات

| | |
|---|---|
| 1) ஹெர்குலிஸ் : இவர் ரோம் நாட்டின் மன்னர்., கைஸர் (சீஸர்)என்பது இவரது பட்டப் பெயராகும். | ١)هرقل: بكسرالهاء وفتح الهاء وسكون القاف، هو ملك الروم ولقبه قيصر |
| 2) பத்தினித்தனம்: தடை செய்யப்பட்டவற்றை விட்டும் தன் மானத்திற்கு கேடானவை ஆகிய வற்றை விட்டும் விலகியிருப்பதாகும். | ٢) العفاف: الكف عن المحارم و خوارم المروءة |
| 3) பந்த இணைப்பு: இரத்த பந்தங்கள் இணைப்பு,இணைத் துவைக்க வேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டுள்ள அனைத்தையும் இணைத்து வைத்தல். | ٣) الصلة: صلة الارحام و كل ما أمر الله به أن يوصل |

### கேள்விகள் - الاسئلة

1) ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்து மன்னர்கள் சிலருக்குக் கடிதம் எழுதி அனுப்பினார்கள்., அவர்கள் யார் யார்?
2) இஸ்லாத்தை ஏற்கவிடாமல் ஹெர்குலிஸ் மன்னரைத் தடுத்தது எது?
3) மூதாதையர் சொல்வதை விட்டுவிடுங்கள் என்பதன் விரிவான கருத்து என்ன?
4) பத்தினித்தனம் என்றால் என்ன என்பதைச் சற்று விவரிக்கவும்.
5) அறிவிப்பாளர் பற்றிய விவரத்தைச் சுருக்கமாக எழுதவும்.

## சத்தியத்திற்குச் சான்று வழங்குதல்!

الرابع : ٥٧ عَنْ اَبِي ثَابِتٍ. وَقِيْلَ: أَبِي سَعِيْدٍ . وَقِيْلَ: أَبِي الْوَلِيْدِ. سَهْلِ بْنِ حُنَيْفٍ. وَهُوَ بَدْرِيٌّ ﷺ أَنَّ النَّبِي ﷺ قَالَ: مَــنْ سَــأَلَ اللهَ تَعَالَي الشَّهَادَةَ بِصِدْقٍ بَلَّغَهُ اللهُ مَنَازِلَ الشُّهَدَاءِ وَ اِنْ مَاتَ عَلَي فِرَاشِهِ – رواه مسلم

ஹதீஸ் 57

ஸஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ஷஹாதத் எனும் (இறைவழியில் உயிர் துறக்கும்) பாக்கியத்தை உண்மையிலேயே ஒருவர் அல்லாஹ்விடம் கேட்பாராயின் அவரைத் தியாகிகளின் அந்தஸ்துகளில் அவன் சேர்த்து வைப்பான்., அவர் தனது படுக்கையில் மரணம் அடைந்தாலும் சரியே!"(நூல்: முஸ்லிம்)

### தெளிவுரை - الشرح

உண்மை எனும் அத்தியாயத்தில் இந்த நபிமொழியை இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கொண்டுவந்ததற்கு ஆதாரம் -

ஷஹாதத் (எனும் இறைவழியில் உயிர் துறக்கும்) பாக்கியத்தை உண்மையிலேயே ஒருவர் அல்லாஹ்விடம் கேட்பாராயின்" எனும் வாசகம் தான்!

ஷஹாதத் என்பது உண்மையாளர் எனும் அந்தஸ்துக்கு அடுத்த படியானதோர் உயர் அந்தஸ்து ஆகும்! அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قال الله تعالى: وَمَنْ يُطِعِ اللهَ وَ الرَّسُوْلَ فَأُولئِكَ مَعَ الَّذِيْنَ أَنْعَمَ اللهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيّيْنَ وَ الصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ (سورة النساء الآية : ٦٩)

எவர்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள், அல்லாஹ் அருள்புரிந்துள்ள நபிமார்கள், உண்மையாளர்கள், ஷுஹதா (தியாகிகள் - சான்று வழங்குபவர்கள்), உத்தமர்கள் ஆகியோருடன் இருப்பார்கள்!" (4 : 69)

ஷஹாதத் எனும் வார்த்தை பொருட்செறிவானதாகும். சான்று வழங்குதல் என்பது அதன் அகராதிப் பொருள்! அதன் அடிப்படையில் அது விரிவான தொருகருத்தைக் கொடுக்கிறது!சான்றுவழங்குதல் அதாவது சத்தியத்திற்குச் சான்று வழங்குதல்! இறைவனும் இறைத்தூதரும் போதித்த உண்மை மார்க்கம் இஸ்லாம்

தான் என்பதற்கு சான்று வழங்குதல்., இதனைப் பின்பற்றி வாழ்ந்தால் மட்டுமே இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெற்றி பெறமுடியும்., மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையில் மனிதன் சுவனபதியை அடைவது இந்த சத்திய மார்க்கத்தை விசுவாசம் கொண்டு அதன்படி வாழ்ந்தால்தான் முடியும் என்பதற்கு சான்று வழங்குதல்! சொல் மற்றும் செயல் மூலம் இத்தகைய சான்றினை வழங்குதல்!

❀ இந்த வகையில் இந்தச் சான்று வழங்குதலில் பலவகைகள் உள்ளன., அல்லாஹ் வழங்கியுள்ள சட்டங்களுக்குச் சான்றுவழங்குதல் என்பதும் அதன் ஒருவகைதான்! இது அறிவுஞானத்தின் மூலம் வழங்கும் சான்று!

قال الله فيهم : شَهِدَ اللهُ أَنَّهُ لاَ اِلَهَ اِلاَّ هُوَ وَ الْمَلَئِكَةُ وَ اُولُو الْعِلْمِ ( سورة آل عمران الآية: ١٨ )

குர்ஆன் கூறுகிறது: வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கு அல்லாஹ்வே சான்று பகர்கிறான். மேலும் வானவர்களும் அறிவுடையோரும் சான்று பகர்கிறார்கள்!"(3 : 18) - அதாவது அறிவுடையோர் வழங்கும் சான்று இவைதான்:

❀ முஹம்மத் நபியவர்களை அல்லாஹ் தன்னுடைய தூதராக அனுப்பினான்., அவர்களுக்கு நேர்வழியையும் சத்திய மார்க்கத்தையும் கொடுத் தான் என்பதற்கும் -

❀ நபியவர்களின் வாயிலாக அல்லாஹ்வுடைய ஷரீஅத் இந்தச் சமுதாயத்திடம் வந்து சேர்ந்து விட்டது என்பதற்கும் -

மேலும் அல்லாஹ்வின் சட்டங்களில் - இந்தச் செயல் ஆகுமானது, இது தடைசெய்யப்பட்டது., இதனைச் செய்வது கடமை.,இது விரும்பத் தக்கது என்கிற சட்ட விளக்கத்திற்கும் - ஷரீஅத் பற்றிய தெளிவான அறிவு ஞானம் உடையவர்கள்தாம் சத்தியத்திற்குச் சான்று வழங்குகிறார்கள்! பெரும் ஆதாரமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள்!

❀ இரண்டாவதாக, அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுகிறவர்களும் ஷு ஹீத் - சத்தியத்திற்குச் சான்று வழங்குபவர்களே!

❀ மூன்றாவதாக, தங்களுடைய உடமைகள் மற்றும் உயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் கொலை செய்யப்படுகிறவர்களும் ஷஹீத்களே! நபிமொழியில் வந்துள்ளது: ஒருமனிதர் நபியவர்களிடம் கேட்டார்:

அல்லாஹ்வின் தூதரே! ஒருவன் என்னிடம் வந்து எனது உடமையை நிர்பந்தமாக அபகரித்தால் நான் என்ன செய்வது?"

அவனுக்குக் கொடுக்காதே! "

என்னுடன் அவன் சண்டைக்கு வந்தால்? "

அவனுடன் நீ சண்டையிடு"

நான் அவனைக் கொலை செய்யவேண்டியதானால்? "

அவன் நரகம் செல்வான்! ஏனெனில் அவன் அக்கிரமக்காரன்., அநீதியாளன்! "

அவன் என்னைக் கொன்றுவிட்டால்?

அவன் உன்னைக் கொன்றால் நீ ஷஹீத் (தியாகி) ஆவாய்! (நூல்: முஸ்லிம்)

மற்றொரு நபிமொழி உள்ளது: யார் தனது உடமையை - மனைவி - மக்களைப் பாதுகாக்கும் முயற்சியில் கொலை செய்யப்படுகிறாரோ அவர் ஷஹீத் ஆவார்!" (நூல்: அபூ தாவூத், திர்மிதி)

❀ நான்காவதாக, அநியாயமாகக் கொலை செய்யப்படுகிறவர்களும் ஷஹீத் அந்தஸ்தைப் பெறுவர்!

❀ ஐந்தாவதாக, உயிர்க்கொல்லி நோய், தீயில் கருகுதல், தண்ணீரில் மூழ்குதல் போன்ற ஆபத்துகளின் மூலம் மரணத்தைத் தழுவுகிறவர்களும் ஷஹீத் அந்தஸ்தைப் பெறுவர்!

ஆயினும் ஷஹீத்களிலேயே மிக உயர்ந்த அந்தஸ்துக்குரியவர்கள் இறைவழிப்போரில் கொல்லப்படுகிற உயிர்த்தியாகிகளே! அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قال الله: وَلاَ تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِي سَبِيْلِ اللهِ أَمْوَاتًا بَلْ أَحْيَاءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ فَرِحِيْنَ بِمَا آتَاهُمُ اللهُ مِنْ فَضْلِهِ وَ يَسْتَبْشِرُوْنَ بِالَّذِيْنَ لَمْ يَلْحَقُوْا بِهِمْ مِنْ خَلْفِهِمْ أَنْ لاَ خَوْفٌ عَلَيْهِمْ وَلاَ هُمْ يَحْزَنُوْنَ يَسْتَبْشِرُوْنَ بِنِعْمَةٍ مِنَ اللهِ وَ فَضْلٍ وَ أَنَّ اللهَ لاَ يُضِيْعُ أَجْرَ الْمُؤْمِنِيْنَ (آل عمران ألاية: ١٦٩– ١٧١ )

இறைவழியில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்களாக ஒருபோதும் கருதாதீர்கள். உண்மையில் அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் தம் இறைவனிடமிருந்து தங்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் தனது அருளிலிருந்து அவர்களுக்கு அளித்தவற்றைக் கொண்டு

மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள்! தங்களுக்குப் பின் உலகில் வாழ்ந்து வருகிற -இன்னும் தங்களுடன் வந்து சேராமல் இருக்கிற இறைநம்பிக்கையாளர்கள் குறித்து - அவர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை., அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள் என்று இவர்கள் மனநிறைவு பெறுகிறார்கள்! அல்லாஹ் அளித்த கொடை யினாலும் அருளினாலும் அகமகிழ்வு பெறுகிறார்கள்! திண்ணமாக அல்லாஹ், விசுவாசிகளின் கூலியை வீணாக்க மாட்டான் என்பதனாலும்!"(3 : 169 - 171)

இத்தகைய உன்னதமான சிறப்பையும் உயர்வையும் பெறக்கூடியவர்கள் - உலகில் அல்லாஹ்வின் மார்க்கம் மேலோங்குவதற்காகப் போர் புரிந்து உயிர்த்தியாகம் செய்பவர்கள்தாம்! அழியும் உலக இன்பங்களுக்காகவோ பேரும் புகழும் பெறுவதற்காகவோ - வேறெந்த நோக்கத்திற்காவும் போர் செய்யாமல், சத்தியம் நிலைப்பதற்கா கவே - இறைமார்க்கத்தைப் பாதுகாப்பதற்காகவே போரிட்டவர்கள்தாம்!

இத்தகைய உயர் இலட்சியத்திற்காகப் போர் புரிபவன்தான் இறைவழிப் போராளியாவான்! கொல்லப்பட்டால் ஷஹீத்- தியாகி., வென்றால் பெரும் பாக்கியசாலி எனப்படுபவன் அவன்தான்! குர்ஆன் கூறுவதுபோன்று:

قال الله تعالى: **قُلْ هَلْ تَرَبَّصُوْنَ بِنَا اِلاَّ اِحْدَي الْحُسْنَيَيْنِ وَ نَحْنُ نَتَرَبَّصُ بِكُمْ أَنْ يُصِيْبَكُمُ اللهُ بِعَذَابٍ مِنْ عِنْدِهِ أَوْ بِأَيْدِيْنَا** (سورة التوبة الآية: ٥٢)

(நபியே! அவர்களிடம்) கூறும்: எங்கள் விஷயத்தில் இரு நன்மைகளில் (அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் அல்லது இஸ்லாத்தின் வெற்றி எனும் இரண்டில்) ஒன்றைத்தவிர வேறெதனை நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்? ஆனால் உங்கள் விஷயத்தில் நாங்கள் எதிர்பார்ப்பது - அல்லாஹ்வே உங்களுக்குத் தண் டனை கொடுக்கிறானா? அல்லது எங்கள் கைகளின் மூலம் கொடுக்க வைக்கிறானா என்பதைத்தான்!"(9: 52)

அதாவது, ஒன்று அல்லாஹ்வே உங்களுக்குத் தண்டனை கொடுப்பான் அல்லது முஸ்லிம்களின் கரங் களினால் தண்டனை பெறவைப்பான்., முதலாவததன் எடுத்துக்காட்டுதான் அல் அஹ்ஸாப் யுத்தம்!

அதன் விவரம் இதுதான்: அன்று நபி(ஸல்) அவர்களைக் கொன்றிடவும் இஸ்லாத்தை ஒழித்துக் கட்டவும் பெரும் திட்டங்கள் தீட்டிக்கொண்டும் பலதரப்பட்ட படைகளைத் திரட்டிக்கொண்டும் மதீனா மீது படை யெடுத்து வந்த எதிரிப்படையினர் தாக்குப்பிடிக்க முடியாமல் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினார்களே, அதன் சூட்சுமம் என்ன தெரியுமா? அன்று அவர்கள் மீது பெரும் புயற்காற்றை அல்லாஹ் ஏவினான்! அவர் களின் உள்ளத்தில் பீதியை ஏற்படுத்தினான்! அதனாலேயே முற்றுகையை நீடிக்க முடியாமல் - நிலைகொள்ள வழிவகை தெரியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள் அன்று அணிதிரண்டுவந்த எதிரிகள் அனைவரும்!

இரண்டாவதன் எடுத்துக்காட்டுதான் பத்று யுத்தம்! மக்கத்து குறை ஷிகள் அதில் மிகக்கேவலமான முறையில் தண்டிக்கப்பட்டார்கள்., முஸ்லிம்களின் கரங்களின் மூலம்!

ஷஹாதத்தின் இத்தனை வகைகளுள் மிகவும் சிறந்தது இறைவழியில் போர் செய்து உயிர்த்தியாகம் செய்வதே! ஆம்! ஒரு மனிதன், யா அல்லாஹ்! உனது பாதையில் போர் புரிந்து உயிர்த்தியாகம் செய்யும் பாக்கியத்தைக் கொடுப்பாயாக என்று பிரார்த்தனை செய்தால்- அது அல்லாஹ்வின் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யும் நோக்கத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டு உயிர்த்தியாகம் செய்வதையே குறிக்கும்! அந்த மனித னின் வாய்மையை - உண்மையான எண்ணத்தை அல்லாஹ் அறிந்தால் ஷஹீத் - தியாகியின் உயர்அந்தஸ்தை நிச்சயம் அவனுக்கு அளிப்பான்., படுக்கையில் கிடந்துதான் அவன் மரணம் அடைந்தான் என்றாலும் சரியே!

### அறிவிப்பாளர் அறிமுகம்

## ஸஹ்ல் பின் ஹு னைப் (ரலி) அவர்கள்

ஸஹ்ல் பின் ஹு னைப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் வெற்றிக்காக நடைபெற்ற எல்லா யுத்தங்களிலும் கலந்துகொண்டார்கள். உஹு த் போரில் - தொடக்கத்தில் ஏற்பட்ட அமளிதுமளியில் களத்திலிருந்து திரும்பி ஓடாமல் கடைசி வரை உறுதியுடன் நிலைத்திருந்த ஸஹாபிகளுள் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்! அலீ (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் நடந்த ஸிஃப்பீன் யுத்தத்தில் அன்னார் கலந்து கொண்டார்கள். பாரசீகப் பகுதிகள் சிலவற்றிற்கு கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த அவர்கள் கூஃபா நகரில் ஹிஜ்ரி 38 ம் ஆண்டு மரணம் அடைந்தார்கள்! அன்னாருக்கு ஜனாஸா தொழுகை நடத்தியது கலீஃபா அலீ (ரலி)அவர்கள். ஸஹ்ல் பின் ஹு னைப் (ரலி) அவர்களிடம் இருந்து நாற்பது நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) பத்ரீ: பத்று போரில் கலந்து கொண்டவர்! | ١)بدري : أي حضر في غزوة بدر |
| 2) ஷஹாதத்: இதன் அசல் பொருள் எதிரி களுடனான சண்டையில் மரணம் அடைவதாகும்., அதன் நோக்கம் அல்லாஹ்வின் உவப்பைப் பெறுவதே! ஷஹாதத் -சான்று வழங்குதல் என்று பெயரிடப்பட்டதன் காரணம், அல்லா | ٢) الشهادة : في أصلها هي الموت في قتال الأعداء ابتغاء مرضاة الله تعالى ، وسميت شهادة لقيامه بشهادة |

| | |
|---|---|
| ஹ்வின் தீன் விஷயத்தில் சத்தியத்திற்கான சான்று வழங்கும் பணியை - மரணத்தின் வரையிலும் நிலை நாட்டினார் என்பதாகும்!மற்றொரு கருத்து: அல்லாஹ் வும் மலக்குகளும் அவருக்கு சுவனத்தைக் கொண்டு சான்று வழங்குகிறார்கள். மற்றொரு கருத்து: உண்மை யில் அவர் மரிக்கவில்லை., அங்கு ஷாஹித் - ஆஜராகி யவர் போல் இருக்கிறார்! | الحق في أمر الله حتي قتل وقيل: لأن صاحبها من شهد له الله و ملائكته بالجنة و قيل لأنه حي لم يمت كأنه شاهد حاضر |
| 3) தியாகிகளின் அந்தஸ்துகள்: அல்லாஹ்விடத்தில் அவர்கள் பெறும் பதவிகள்! | ٣) منازل الشهداء : درجاتهم عند الله |

## கேள்விகள் الأسئلة

1) ஷஹாதத் என்பதன் பொருளை விரிவாக எழுதவும். அதன் வகைகள் எத்தனை? சிறந்தது எது?
2) அறிவுஞானம் உடையோர் வழங்கும் சான்று என்ன?
3) எங்கள் விஷயத்தில் இரு நன்மைகளைத் தவிர வேறு எதனை எதிர்பார்க் கிறீர்கள் எனும் வசனத்தின் கருத்தை விளக்கவும்!
4) அறிவிப்பாளர் பற்றி நீ அறிந்திருப்பதென்ன?

## இந்த ஆற்றல்கள் இறைவனுக்கே சொந்தம்!

**الخامس ٥٨ – عن أبي هريرة ﷺ قال : قال رسول الله ﷺ : غَزَا نَبِيٌّ مِنَ الأَنْبِيَاءِ صَلَوَاتُ اللهِ وَ سَلاَمُهُ عَلَيْهِمْ فَقَالَ لِقَوْمِهِمْ: لاَ يَتْبَعَنِّي رَجُلٌ مَلَكَ بُضْعَ امْرَأَةٍ وَهُوَ يُرِيْدُ أَنْ يَبْنِيَ بِهَا وَلَمَّا يَبْنِ بِهَا ، وَلاَ أَحَدٌ بَنَي بُيُوْتَا لَمْ يَرْفَعْ سُقُوْفَهَا، وَلاَ أَحَدٌ اِشْتَرَي غَنَمًا أَوْ خَلِفَاتٍ وَهُوَ يَنْتَظِرُ أَوْلاَدَهَا. فَغَزَا فَدَنَا مِنَ الْقَرْيَةِ صَلاَةَ الْعَصْرِ أَوْ قَرِيْبًا مِنْ ذَلِكَ فَقَالَ لِلشَّمْسِ: اِنَّكِ مَأْمُوْرَةٌ وَأَنَا مَؤْمُوْرٌ، اَللَّهُمَّ احْبِسْهَا عَلَيْنَا ، فَحُبِسَتْ حَتَّي فَتَحَ اللهُ عَلَيْهِ ، فَجَمَعَ الْغَنَائِمَ، فَجَاءَتْ – يعني النار – لِتَاكُلَهَا فَلَمْ تَطْعَمْهَا فَقَالَ : اِنَّ فِيْكُمْ غُلُوْلاً، فَلْتُبَايِعْنِي قَبِيْلَتُكَ فَلَزِقَتْ يَدُ رَجُلَيْنِ أَوْ ثَلاَثَةٍ بِيَدِهِ فَقَالَ : فِيْكُمْ الْغُلُوْلُ فَجَاؤُوْا بِرَأْسِ بَقَرَةٍ مِنَ الذَّهَبِ، فَوَضَعَهَا فَجَاءَتِ النَّارُ فَأَكَلَتْهَا فَلَمْ تَحِلَّ الْغَنَائِمُ لأَحَدٍ قَبْلَنَا ، ثُمَ أَحَلَّ اللهُ لَنَا الْغَنَائِمَ لَمَا رَأَي ضَعْفَنَا وَ عَجْزَنَا فَأَحَلَّهَا لَنَا } متفق عليه**

**اَلْخَلِفَاتُ : بفتح الخاء المعجمة و كسر اللام جمع خَلِفَةٍ وهي الناقة الحامل**

ஹதீஸ் 58

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: நபிமார்களில் ஒருநபி யுத்தத்திற்குச் செல்ல நாடினார்., தம்முடைய கூட்டத்தினரிடம் சொன்னார்: யார் ஒருபெண்ணின் மர்ம உறுப்பை உடமையாக்கி (அதாவது திருமணம் செய்து) அவளுடன் வீடுகூட விரும்புகிறாரோ - இதுவரையில் வீடுகூடவில்லையோ அவர் என்னுடன் வர வேண்டாம். மேலும் எவர் வீடுகளைக் கட்டினாரோ ஆனால் அவற் றின் முகடுகளை உயர்த்தவில்லையோ அவரும் எவர் ஆடுகளை அல்லது கர்ப்பமான ஒட்டகைகளை விலைக்கு வாங்கி அவை கன்றுகளை ஈன்டெடுக்குமென எதிர்பார்த்திருக்கிறாரோ அவரும் என்னுடன் வர வேண்டாம்!

அந்த நபி (மற்றவர்களை அழைத்துக்கொண்டு) யுத்தத்திற்காகப் புறப்பட்டார். அஸர் தொழுகை நேரத்தில் அல்லது அதற்கும் சிறிது நேரத்திற்குப் பிறகு ஒருகிராமத்தை நெருங்கினார். சூரியனை நோக்கி கூறினார்: நிச்சயமாக நீயும் (இறைவனால்) கட்டளையிடப்பட்டிருக்கிறாய். எனக்கும் கட்டளை இடப்பட்டிருக்கிறது. யா அல்லாஹ்! இந்தச் சூரியனை எங்கள் மீது சற்று நிறுத்திவைப்பாயாக! - அதன்படி அவருக்கு அல்லாஹ் வெற்றி அளிக்கும் வரையில் சூரியன் நிறுத்தி வைக்கப்பட்டது! (அந்தப் போரில்) எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை எல்லாம் ஒன்றுதிரட்டி (மைதானத்தில்) வைத்தார். பிறகு அவற்றைக் கரித்துப் பொசுக்குவதற்காக அது (அதாவது, நெருப்பு) வந்தது., ஆனால் அது அவற்றைக் கரிக்க வில்லை! அந்தநபி (மக்களிடம்) சொன்னார்: உங்களில் யாரோ (ஃகனீமத் பொருட்களில்) நம்பிக்கை மோசடி செய்திருக்கிறார். எனவே ஒவ்வொரு கூட்டத்தாரிலிருந்தும் ஒருவர் என்னுடன் உறுதிப் பிரமாணம் செய்து கொடுக்க வேண்டும். (அதன்படி உறுதிப்பிரமாணம் செய்தபொழுது) இரண்டு பேரின் அல்லது மூன்று பேரின் கரம் நபியின் கரத் துடன் ஒட்டிக் கொண்டது! (அவர்களை நோக்கி) அந்த நபி சொன்னார்: உங்களில்தான் மோசடி நடந்தி ருக்கிறது. எனவே உங்கள் கூட்டத்தினர் அனைவரும் உறுதிப்பிரமாணம் செய்து தர வேண்டும். (அதன்

பிறகு) அவர்கள் தங்கத்தினாலான பசுமாட்டுத் தலைபோன்ற பொருளொன்றை (இதைத்தான் ஒருவர் மறைத்துவைத்திருந்தார் என்று சொல்லிக்) கொண்டு வந்தார்கள்! அந்த நபி அதனையும் அந்தப் பொருட்களுடன் வைத்தார். அதன் பிறகே நெருப்பு வந்து அவை எல்லாவற்றையும் சாப்பிட்டது!

நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து சொன்னார்கள்: நமக்கு முன்னர் எந்த மக்களுக்கும் ஃகனீமத் பொருட்கள் ஆகுமானவையாக இல்லை. பிறகுதான் போரில் கைப்பற்றப்பட்ட ஃகனீமத் பொருட்களை அல்லாஹ் நமக்கு ஹலால் - ஆகுமாக்கினான். ஆம், நமது பலவீனத்தையும் இயலாமையையும் பார்த்த பொழுது நமக்கு அவற்றை ஹலால் ஆக்கினான்! (நூல்: புகாரி, முஸ்லிம்) -

الخلفات (அல் கலிஃபாத்) கர்ப்பமான ஒட்டகைகள்.

## தெளிவுரை الشرح

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த ஹதீஸில் சில நூதனமான நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன!

முற்காலத்தைச் சேர்ந்த ஒருநபியின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியை நபிகளார் (ஸல்) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்! அந்தநபி போருக்காகப் புறப்பட்டார். அதில் கலந்துகொள்ள எல்லா மக்களையும் அனுமதித்தார். ஆனால் மூன்று நபர்களை மட்டும் அனுமதிக்கவில்லை.

ஒருவர் புதிதாக திருமணம் முடித்தவர். மனைவியைக் காண வேண்டும்., அவளுடன் பேச வேண்டும் எனும் அவரது ஆவல் இன்னும் நிறைவேறாதவர்! இவரது மனம் மனைவியுடன் புது வாழ்வைத் தொடங்குவதிலேயே லயித்திருக்கும். அதனை எப்பொழுது அனுபவிக்கப்போகிறோம் என்றே எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்.

புதிய வீடுகளைக் கட்டிக்கொண்டிருப்பவர். அவற்றிற்கு முகடுகள் அமைத்து அழகு பார்க்கவேண்டுமெனும் ஆசையுடன் இருப்பார். இவரும் போரில் முழுமையாக ஈடுபாடு கொள்ளமாட்டார். எப்பொழுது வீடுகளுக்கு முகடுகளை அமைத்து அழகு பார்ப்போம்., அவற்றின் தோற்றம் எப்படி அமையும் என்றே சிந்தித்துக் கொண்டிருப்பார்!

ஆடு, ஒட்டகைகளை வளர்த்துக்கொண்டிருப்பவர். அந்தக் கால்நடைகள் இப்பொழுதுதான் கர்ப்பமாகி கன்றுகளை ஈன்டெடுக்கும் நிலையில் உள்ளன! இவர் போருக்காக வந்தாலும் அவரது எண்ணமெல்லாம் அந்த ஆடுகளுடனும் ஒட்டகைகளுடனும்தான் இருக்கும். அவற்றின் வளர்ச்சி பற்றியே சதாவும் சிந்தித்துக் கொண்டிருப்பார்!

போரில் ஈடுபடும் மனிதனுக்கு வேறெந்தக் கவனமும் இருக்கக் கூடாது! ஜிஹாத் - இறைவழிப்போரும் அதன் வெற்றி மட்டுமே குறிக்கோளாக இருக்க வேண்டும். இதனால்தான் குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

قال الله تعالى: فَإِذَا فَرَغْتَ فَانْصَبْ (سورة الشرح الآية: ٧ )

நீர் ஓய்வு பெற்றீரானால் வழிபாட்டில் முனைப்புடன் ஈடுபடுவீராக!" (94 : 7)
அதாவது உலக விவகாரங்களில் இருந்து நீர் முழுமையாக ஓய்வு பெறும் பொழுது வணக்கவழிபாட்டில் முழு ஈடுபாடுகொள்வீராக!

நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: உணவு தயாராகி இருக்கும் நிலையில் தொழுகை என்பதில்லை., மல - ஜலம் கழிக்கும் தேவை அவனைத் தடுத்திருக்கும்பொழுதும் தொழுகை என்பதில்லை!" (நூல்: முஸ்லிம்)

இந்த குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழியின் மூலம் தெரியவருவது இதுதான்: மனிதன் இறை வழிபாட்டை நிறைவேற்ற நாடினால் உள்ளத்திற்கு முழு ஓய்வும் உடலில் முழு உற்சாகமும் இருப்பது அவசியம்! அப்போதுதான் வழிபாட்டின் மீதான நிறைவான ஆவல் உள்ளத்தில் பொங்கும். அமைதியுடனும் நிம்மதியாகவும் தெளிந்த சிந்தனையுடனும் இறைவழிபாட்டை நிறைவேற்ற முடியும்! அதிலும் ஜிஹாத் எனும் இறைவழிப்போருக்கு அவை இன்னும் முக்கியமாகும்!

- பிறகு அந்த நபி போருக்காகப் புறப்பட்டார். அஸர் தொழுகைக்குப் பிறகு மாலை நேரத்தில் அதாவது இரவின் இருள் படரத்தொடங்குவதற்கு சற்று முன்னர் எதிரிகளைச் சந்தித்தார்! இன்னும் அதிகமாக இருட்டிவிட்டதெனில் போரில் முழுமையாக வெற்றியை ஈட்ட முடியாது என்று அவர் அஞ்சினார். உடனே சூரியனை நோக்கிக் கூறினார்:

சூரியனே! நிச்சயமாக நீயும் (இறைவனால்) கட்டளை இடப்பட்டி ருக்கிறாய். எனக்கும் கட்டளை யிடப்பட்டிருக்கிறது”

-இரண்டிற்கும் ஒருசிறு வித்தியாசம்: சூரியனுக்கு இடப்பட்ட கட்டளை உலக நியதியிலானது. நபிக்கு இடப்பட்ட கட்டளையோ ஷரீஅத் ரீதியானது! நபிக்கு இடப்பட்ட கட்டளை தீனை -இறைமார்க்கத்தைப் பிரச்சாரம் செய்ய வேண்டும்., அதற்காக ஜிஹாத் செய்ய வேண்டுமென்பது! சூரியனுக்கு இடப்பட்டகட்டளை தொடர்ந்து சுழன்றுகொண்டிருக்க வேண்டு மென்பது! அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قال الله : وَالشَّمْسُ تَجْرِي لِمُسْتَقَرٍّ لَهَا ذَلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ (سورة يس الآية : ٣٨)

மேலும் சூரியன் தனக்குரிய இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இது போரறிவாளனும் வல்லமை மிக்கவனுமாகிய இறைவனின் நிர்ணயமாகும்!” (36 : 38)- ஆம்! படைக்கப்பட்ட நாள்முதற்கொண்டு தனக்கு இடப்பட்ட கட்டளைப்படியே சூரியன் இயங்கிக்கொண்டிருக்கிறது., எவ்வித மாறுதலின்றி! ஆனால் அது தொடர்பாகத்தான் அந்த நபி பிரார்த்தனை செய்தார்:

யா அல்லாஹ்! இந்தச் சூரியனை எங்கள் மீது சற்று நிறுத்தி வைப்பாயாக!”

அதாவது அது உரிய நேரத்தில் மறையக்கூடாது. இருள் சற்று தாமதமாகவே வர வேண்டும் என்று வேண்டினார்! ஆகா! என்ன ஆச்சரியம்! அந்த நபி பிரார்த்தனை செய்தபடியே சூரியனின் இயக்கம் தடுத்து வைக்கப்பட்டது. அதன் மறைவு சற்று தாமதமாக்கப்பட்டு இரவின் வருகை ஒத்தி போடப்பட்டது! அப்படிக் கிடைத்த கால அவகாசத்தில் போரில் முழு வெற்றியை ஈட்டினார், அந்த நபி! பிறகு எதிரிகள் விட்டுச்சென்ற ஆயுதங்களையும் இன்ன பிற பொருட்களையும் கைப்பற்றினார்.

போரில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட அதாவது எதிரிகள் போட்டுவிட்டுச் சென்ற இப்பொருட்களுக்கு கனீமத் பொருட்கள் என்று சொல்லப்படும். அவற்றை அனுபவிப்பது முற்காலத்து சமுதாயத்தினருக்கு ஆகுமாக் கப்படவில்லை! இறுதி நபியின் சமுதாயத்திற்கு மட்டுமே அது ஆகுமாக்கப்பட்டது! இந்த வகையில்தான் இது, இறுதிச் சமுதாயத்திற்கு மட்டுமே சொந்தமான சிறப்புகளுள் ஒன்றென பல நபிமொழி அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறோம்!

ஆனால் முந்தைய சமுதாயத்து மக்கள் ஃகனீமத் பொருட்களை என்ன செய்தார்கள்? அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி மைதானத்தில் வைத்து விடுவார்கள். நெருப்பு வந்து அவற்றை எரித்துவிடும்! இவ்வாறு அவை நெருப்புக்கு இரையாக்கப்பட்டன!

அத்தகைய வழமைக்கு ஏற்பவே அந்த நபியும் அப்பொருட்களை எல்லாம் ஒன்று திரட்டி மைதானத்தில் வைக்க பிறகு நெருப்பு வந்து அவற்றை எரிக்க வேண்டுமென எதிர்பார்த்தபொழுது அப்படி எதுவும் நடக்க வில்லை! அதன் காரணம் என்ன என்பதை அந்த நபி அறிந்தார்! அதுதான் யாரோ ஒருவர் கனீமத் பொருட் களில் ஒன்றை நம்பிக்கை மோசடி செய்துள்ளார் என்பது!

ஒவ்வொரு குலத்திலிருந்தும் பிரதிநிதிகள் சிலர் வந்து எங்களில் யாரும் எதையும் மறைத்து வைக்க வில்லை., மோசடி செய்யவில்லை என்று நபியின் கரத்துடன் கரம் பதித்து சத்தியம் செய்ய வேண்டுமென கூறப்பட்டது! அதன்படியே எல்லோரும் செய்தனர். ஒருகுறிப்பிட்ட குலத்தினர் நபியிடம் வந்து சத்தியம் செய்து கொடுத்தபொழுது அவர்களது கரம் நபியின் கரத்துடன் ஒட்டிக் கொண்டது!

அந்தக் குலத்தினரிடம் நபி சொன்னார்: உங்களில் ஒவ்வொரு நபரும் வந்து சத்தியம் செய்ய வேண்டும்., ஏனெனில் உங்களில் யாரோ கனீமத் பொருளைத் திருடிவைத்திருக்கிறார்கள் என்று! அதன்படி ஒவ்வொரு நபரும் வந்து சத்தியம் செய்து கொடுத்தபொழுது இரண்டு மூன்று பேருடைய கரங்கள் நபியின் கரத்துடன் ஒட்டிக்கொண்டன! ஆம்! அதன் மூலம் அவர்கள்தான் கனீமத் பொருட்களை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று துப்புத் துலங்கியது!

தங்கத்தினால் செய்யப்பட்ட மாட்டின் தலை ஒன்றை மறைத்து வைத்திருந்ததை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு அதைக் கொண்டு வந்து ஃகனீமத் பொருட்களுடன் சேர்த்தபிறகே நெருப்பு வந்து அவற்றைத் தின்றுவிட்டுச் சென்றது!

இந்த நபிமொழியில் பல விஷயங்கள் தெரியவருகின்றன:

∴ ஜிஹாத் எனும் இறைவழிப்போர் முந்தைய நபிமார்களின் சமுதாயத் திலும் நடைமுறையில் இருந்தது. குர்ஆன் ஓரிடத்தில் கூறுகிறது:

**قال الله تعالى: وَكَأَيِّنِ مِنْ نَبِيٍّ قَاتَل مَعَهُ رِبِّيُّوْنَ كَثِيْرٌ فَمَا وَهَنُوْا لِمَا أَصَابَهُمْ فِيْ سَبِيْلِ اللهِ وَمَا ضَعُفُوْا وَمَااسْـتَكَانُوْا (سـورة آل عمران الآية: ١٤٦)**

(இதற்கு முன்பு) எத்தனையோ இறைத்தூதர்(களும் அவர்)களோடு சேர்ந்து இறையன்பர்கள் பலரும் போர் புரிந்துள்ளார்கள். அல்லாஹ்வின் வழியில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களினால் அவர்கள் மனம் தளர்ந்து விடவில்லை., ஊக்கம் குன்றிடவும் இல்லை!" (3 : 146) - இதேபோல் முந்தைய நபிமார்களுள் ஒருவரான நபி தாவூத் (அலை) அவர்கள் போரில் ஜாலூத்தை கொன்ற வரலாறு **அல் பகறா** அத்தியாத்தில் இடம்பெற்றுள்ளது. (பார்க்க வசனம் 246 -252)

❁ அல்லாஹ்வின் பேராற்றலுக்கான சான்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அண்ட சராசரங்களை எல் லாம் இயக்கிக்கொண்டிருப்பவன் அவன்தான்! இவ்வுலகிலுள்ள இயற்கைப் பொருட்களுக்கு அவற்றின் சிறப்பியல்புகளை அதிகமாக்கிக் கொடுக்கவோ அல்லது அவற்றை அறவே இல்லாமல் பறிக்கவோ அல்லாஹ் ஆற்றல் பெற்றவன் ஆவான்! நபிமார்கள் - ரஸூல் மார்களின் காலங்களில் அவ்வாறு நிகழ்த்திக் காண்பிக்கி றான்! அவ்வாறு செய்வதன் நோக்கம், இறைத் தூதருக்கு ஒத்துழைப்பு நல்குவதாக இருக்கும், அல்லது இஸ்லாத்தின் நலனுக்காக ஏதேனும் தீங்கினை விட்டும் அவரைப் பாதுகாப்பதாக இருக்கும்! நபிமார்களின் மூலம் வெளிப்படும் இத்தகைய செயல்களுக்கு முஃஜிஸாத் (அற்புதங்கள்) என்று சொல்லப்படும்! இந்த நபிமொழியில் சொல்லப்பட்ட நிகழ்ச்சியில் சூரியனின் இயக்கம் சிறிது நேரத்திற்கு நிறுத்தப்பட்டதும் இவ்வகை யைச் சேர்ந்ததே!

இதோ! நபிகளார்(ஸல்) அவர்களிடம் - அவர்களின் தூதுத்துவத்திற்கு ஏதேனும் சான்று வேண்டுமென இணைவைப்பாளர்கள் முரட்டுத்தனமாகவும் பிடிவாதமாகவும் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தபொழுது சந்திரன் இரண்டாகப் பிளந்ததை மக்கள் எல்லோரும் நேரில் கண்டார்கள்! அது பற்றி இறக்கியருளப்பட்ட வசனம் இதுதான்:

اِقْتَرَبَتِ السَّاعَةُ وَ انْشَقَّ الْقَمَرُ وَاِنْ يَّرَوْا آيَةً يُّعْرِضُوْا وَيَقُوْلُوا سِحْرٌ مُّسْتَمِرٌّ (القمر الآية: ١ – ٢ )

மறுமைக்கான நேரம் நெருங்கிவிட்டது., சந்திரன் பிளந்துவிட்டது! ஆனால் (இந்த மக்களின் நிலைமை என்னவெனில்) எந்தச் சான்றினைப் பார்த்தாலும் புறக்கணிக்கிறார்கள்! இதுஎப்பொழுதும் நடைபெறுகிற சூனியம் தான் என்றுதான் சொல்கிறார்கள்!" (54 : 1-2)

ஆனால் அதன் பிறகும் நிராகரிப்பாளர்கள் என்ன சொன்னார்கள் எனில் முஹம்மத் நமக்குச் சூனியம் செய்துவிட்டார். சந்திரன் பிளப்பதாவது, ஒன்றாவது! எதுவும் நடைபெறவில்லை! முஹம்மத்தான் நம்முடைய பார்வைகளை மயக்கிவிட்டார்! சூனியம் செய்துவிட்டார்!-இவ்வாறு பிதற்றிக் கொண்டு மீண்டும் நிராகரிப்பிலேயே உழன்றுகொண்டிருந்தார்கள் அவர்கள்! உண்மை என்னவெனில், ஈமான் - விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள் என்று யாருடைய விதியில் அல்லாஹ் எழுதிவிட்டானோ அவர்கள் எந்தக் காலத்திலும் - எத்தனை சான்று களைக் கொண்டுவந்து காட்டினாலும் ஈமான் கொள்ள மாட்டார்கள்! ஓரிடத்தில் குர்ஆன் கூறுகிறது:

قال الله : اِنَّ الَّذِيْ حَقَّتْ عَلَيْهِمْ كَلِمَةُ رَبِّكَ لاَ يُؤْمِنُوْنَ وَلَوْ جَاءَتْهُمْ كُلُّ آيَةٍ ( يونس الآية: ٩٦–٩٧)

உண்மையாதெனில் எவர்கள் மீது உம் இறைவனின் வாக்கு மெய்யாகி விட்டதோ அவர்கள் விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள்., எத்தனை சான்றுகள் அவர்களிடம் வந்தாலும் சரியே!" (10: 96-97)

❁ போரில் கைப்பற்றப்படும் கனீமத் பொருட்களை அனுபவிப்பதற்கு இந்தச் சமுதாயத்திற்கு அல்லாஹ் அனுமதி அளித்தது இந்த நபிமொழியில் விளக்கப்பட்டுள்ளது. கனீமத் பொருட்களில் பெரும் நன்மைகள் உள்ளன. முஸ்லிம் வீரர்கள் அவற்றைக் கைப்பற்றுவது ஜிஹாத் எனும் இறைவழிப் போரில் இன்னும் அதிக ஊக்கத்துடன் அவர்கள் ஈடுபடுவதற்கு உறுது ணையாக இருக்கும்.

இது பற்றி மற்றொரு நபிமொழி அறிவிக்கிறது: ஐந்து சிறப்புகள் எனக்கு வழங்கப்பட்டுள்ளன., எனக்கு முன்னர் வந்த நபிமார்கள் எவருக்கும் அவை வழங்கப்படவில்லை! (அவற்றுள் ஒன்றாக நபியவர்கள் கூறி னார்கள்:) போரில் கைப்பற்றப்பட்ட கனீமத்" பொருட்கள் எனக்கு மட்டுமே ஆகுமாக்கப்பட்டன., ஆனால் இதற்கு முன்னர் யாருக்கும் அவை ஆகுமாக்கப்படவில்லை!" (புகாரி: முஸ்லிம்)

❁ அந்த நபியிடம் மக்கள் உறுதிமொழி அளித்தபொழுது அவர்களின் கரம் நபியின் கரத்துடன் ஒட்டிக் கொண்டதும் அல்லாஹ்வின் சான்றுகளுள் ஒன்றாகும். ஏனெனில் இது வழக்கத்திற்கு மாற்றமானது. கரத் தோடு கரம் பதித்து வாக்குறுதி அளித்த பிறகு அந்தக் கரங்கள் பிரிந்துவிடுவதே இயற்கை நிலை!ஆனால் அன்று நடந்த அந்த மோசடியில் துப்புத் துலக்கு வதற்காக அல்லாஹ் அவ்வாறு நிகழ்த்திக் காட்டினான்! அதுவும் ஓர் அற்புதமே!

❁ நபிமார்கள் ஃகைப் எனும் மறைவானவற்றை அறியமாட்டார்கள்! அத்தகைய மகத்தான ஞானம் அல்லாஹ் வின் ஆற்றலுக்கு மட்டும் உட்பட்டது! நடந்தவை., நடப்பவை., நடக்கவிருப்பவை ஆகிய முக்காலத்து நிகழ்வுகள் பற்றிய விஷயஞானம் அவனுக்கு மட்டுமே சொந்தம்! அவனே யாவும் அறிந்தவன்! ஆனால் அந்த

விஷயங்களில் சிலவற்றைத் தான் நாடுகிறவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுக்கலாம். அவ்வாறு அறிவித்துக் கொடுத்தால் மட்டுமே மறைவானவை பற்றிய விவரம் நபிமார்களுக்குத் தெரியவரும்! இல்லையெனில் இல்லை!

நம்முடைய நபி முஹம்மத் (ஸல்)அவர்களுக்கு இதுபோன்று - எதிர்காலத்தில் நடக்கும் சில நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான் என்பதும் அதனை நபிவர்கள் தம் தோழர்களுக்குத் தெரிவித்தார்கள் என்பதும் அவர்கள் அறிவித்தபடியே யாவும் நடந்தன என்பதும் உண்மையே! அவற்றை அல்லாஹ் அறிவித்துக்கொடுத்ததால் நபியவர்கள் அறிந்தார்கள்!

இதோ! நபியவர்களின் இரகசியம் ஒன்றை அவர்களின் மனைவியரில் ஒருவர் வெளிப்படுத்தியது பற்றி நபிகளார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் பிரத்தியேகமாக அறிவித்துக்கொடுத்தபொழுது -

قَالَتْ مَنْ أَنْبَأَكَ هذَا قَالَ نَبَّأَنِيَ الْعَلِيْمُ الْخَبِيْرُ (سورة التحريم الآية: ٣)

மனைவி கேட்டார்: தங்களுக்கு இதனைத் தெரிவித்தது யார்? என்று! அதற்கு நபி பதிலளித்தார், அனைத்தையும் அறிந்தவனும் நன்கு தெரிந்தவனும்தான் எனக்கு அறிவித்தான்!" (66 : 3) - ஆம்! அல்லாஹ் அந்த விபரத்தை நபியவர்களுக்கு அறிவித்துக் கொடுத்தான்!

அவ்வாறு அல்லாஹ் முன்கூட்டியே அவர்களுக்கு அறிவித்துக்கொடுத்த விஷயம் மட்டும்தான் நபியவர்களுக்குத் தெரியும்! அல்லாஹ் அறிவித்துக் கொடுக்காத விஷயங்களை நபியவர்கள் அறியமாட்டார்கள்!

قال الله: عَالِمُ الْغَيْبِ فَلاَ يُظْهِرُ عَلَي غَيْبِهِ أَحَدًا اِلاَّ مَنِ ارْتَضَي مِنْ رَسُوْلٍ (الجن الآية: ٢٥–٢٦)

அவன் மறைவானவற்றை அறிந்தவன். தான் மறைவாக வைத்திருப்பவற்றை எவருக்கும் அவன் அறிவித்துக் கொடுப்பதில்லை., அவன் (அறி வித்துக்கொடுக்க) விரும்பிய தூதருக்கே தவிர!" (72 : 25 -26)

இதோ! நபி (ஸல்) அவர்களின் அவையில் அமர்ந்திருக்கும் தோழர்கள் திடீரென எங்காவது - ஏதேனும் தேவைக்காக எழுந்து சென்று விட்டால் நபியவர்களுக்கு அது தெரிவதில்லை! ஒருமுறை அபூ ஹு ரைரா (ரலி) அவர்கள் நபியவர்களின் அவையிலிருந்து நழுவிச்சென்று விடுகிறார்கள். அப்பொழுது அவருக்குப் பெருந்துடக்கு ஏற்பட்டிருந்ததால் குளித்து சுத்தமாக வேண்டியதிருந்தது! ஆனால் திடீரென அபூ ஹு ரைரா எங்கு சென்று விட்டார் என்று நபியவர்களுக்கு பெருத்த ஆச்சரியம்! குளித்து சுத்தமாகி அபூஹு ரைரா திரும்பி வந்த பொழுது எங்கு போய்விட்டீர்கள்? என்று கேட்டுத்தான் நபியவர்கள் தெரிந்து கொண்டார்கள்! (நூல்: புகாரி, முஸ்லிம்)

ஆக! நபி(ஸல்) அவர்கள்கூட ஃகைப் எனும் மறைவான விஷயங்களை அறியமாட்டார்கள்., வேறு எவராலும் அவற்றை அறியமுடியாது!

முக்காலத்தின் விஷய ஞானம் -எவ்வாறு அல்லாஹ்வுக்கு உள்ளதோ அவ்வாறே நபியவர்களுக்கும் உண்டு., அல்லாஹ் அறிவதுபோன்று நபியவர்களும் யாவற்றையும் அறிந்து கொண்டிருக்கிறார்கள்" என்று நம்புவதோ வாதிடுவதோ ஏக இறைவிசுவாசத்திற்கு முற்றிலும் முரணானதாகும்! ஷிர்க் - இணைவைப்பில் கொண்டு போய் சேர்க்கக் கூடியதாகும்! முஸ்லிம்கள் இது விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்!

## அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) மா்ம உறுப்பு, திருமணம், உடலுறவு கொள்ளல் ஆகிய மூன்று பொருளிலும் இந்த வார்த்தை பயன் படுத்தப்படுகிறது! | ١) بضع : بضم الباء وسكون الضاد يطلق علي الفرج والنكاح والجماع |
| 2) வீடுகூட விரும்பினார்: அரபுகளின் வழக்கம் யாதெனில், புது மாப்பிள்ளை மனைவியிடம் செல்ல வேண்டுமாயின் ரோமத்தால் ஒரு வீடு கட்டுவார்கள். இந்த வகையில் அல்பினாஉ (வீடு)எனும் வார்த்தை மனைவியுடன் தங்குதல் எனும் பொருளில் பயன் படுத்தப்பட்டது! | ٢) يبني بها : يدخل بها، وكانت عادة العرب اذا دخل الزوج علي المرأة بني عليها قبة من شعر او غيره فأطلق البناء وأراد الدخول |
| 3) அதை உண்ணவில்லை: தின்னவில்லை என்பதற்கு பதிலாக இந்த வார்த்தையை பயன் படுத்தியதன் நோக்கம் மிகைப்படுத்திக் காட்டுவதே! ஏனெனில் அசல் பொருள் அதன் சுவையைச் சுவைக்கவில்லை என்பதுதான்! | ٣) لم تطعمها:قال الكرماني :عبر بلم تطعمها دون لم تأكلها للمبالغة اذ معناه لم تذق طعمها |

| | |
|---|---|
| 4) மோசடி: அதாவது ஃகனீமத் பொருளில் மோசடி செய்தல்! | ٤) غلولا: الخيانة في الغنيمة |

## கேள்விகள் -- الأسئلة

1) மூன்று நபர்களைப் போரில் கலந்துகொள்ள வேண்டாமென நபியவர்கள் தடுத்ததன் காரணம் என்ன?
2) நபிக்கும் சூரியன் போன்ற கோளங்களுக்கும் இடப்பட்ட கட்டளைகளுக்கு வித்தியாசம் என்ன?
3) நெருப்பு ஏன் அன்று ஃகனீமத் பொருட்களைக் கரிக்கவில்லை?
4) சிலரின் ஏமாற்று வேலை பற்றி துப்புத் துலங்கியது எப்படி?
5) அற்புதங்களைக் கண்ணெதிரே கண்ட பிறகும் மக்கள் இறைத்தூரின் மீது விசுவாசம் கொள்ளாமல் புறக்கணித்தற்கு என்ன காரணம்?
6) ஃகைப் - மறைவான விஷயங்கள் பற்றிய ஞானம் நபிமார்களுக்கு உண்டா? அது பற்றி விவரிக்கவும்!
7) இந்நபிமொழியில் இருந்து தெரியவரும் வேறு விஷயங்கள் என்ன?

## வியாபாரத்தில் அபிவிருத்தி காண்பதெப்படி?

**السادس : ٥٩ – عن أبي خَالِدٍ حَكِيْمِ بْنِ حِزَامٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : اَلْبَيِّعَانِ بِالْخِيَارِ مَا لَمْ يَتَفَرَّقَا ، فَإِنْ صَدَقَا وَ بَيَّنَا بُوْرِكَ لَهُمَا فِيْ بَيْعِهِمَا ، وَإِنْ كَذَبَا وَ كَتَمَا مُحِقَتْ بَرَكَةُ بَيْعِهِمَا – متفق عليه**

ஹதீஸ் 59

ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: விற்றவருக்கும் வாங்கியவருக்கும் உரிமை உள்ளது., அவ்விருவரும் பிரிந்து செல்லாத வரையில்! அவ்விருவரும் உண்மை உரைத்தால்., (பொருள் மற்றும் விலையின் குறைபாட்டை) விளக்கிக் கூறினால் அவர்களது வியாபாரத்தில் அபிவிரித்தி அருளப்படும். அவர்கள் பொய் உரைத்தால்., (குறையை) மறைத்தால் அவர்களது வியாபாரத்தின் அபிவிருத்தி அழிக்கப்படும்!" (நூல்: புகாரி, முஸ்லிம்)

## தெளிவுரை الشرح

மூலத்தில் அல் பய்யிஆன் எனும் வார்த்தை ஆளப்பட்டுள்ளது. இது அல் பய்யிஉ (வியாபாரி) என்பதன் இருமை. வாங்குபவருக்கும் வியாபாரி என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்திற்கு அரபி இலக்கணத்தில் அத்தஃக்லீப்-மிகைப்படுத்திக் கூறுதல் எனப்படும்! எடுத்துக் காட்டாக அல் கமரானி (இரு சந்திரன்கள்) எனும் வார்த்தை சூரியனுக் கும் சந்திரனுக்கும் கூறப்படுகிறது! அல் உமரானி (இரு உமர்கள்) எனும் வார்த்தை இஸ்லாமிய மரபில் அபூ பக்ர் (ரலி) உமர் (ரலி) இருவருக்கும் கூறப்படுகிறது!

விற்றவருக்கும் வாங்கியவருக்கும் உரிமை உள்ளது"

அதாவது நடந்துமுடிந்த வியாபாரத்தை வாபஸ் செய்யும் உரிமை அவ்விருவருக்கும் உண்டு. வியாபாரம் செய்த இடத்தில் அவ்விருவரும் நீடிக்கும் வரையில் அவ்வுரிமையும் அவர்களுக்கு நீடிக்கும்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் பத்தாயிரம் ரூபாய்க்கு தங்க மாலை ஒன்றை விற்றார். வியாபாரம் இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது., அவ்விடத்தை விட்டும் இருவரும் இன்னும் பிரிந்து செல்லவில்லை எனில் அந்த வியாபாரத்தை முறிப்பதற்கான உரிமை அவ்விருவருக்கும் உள்ளது. விற்றவர் இந்த வியாபாரம் எனக்கு விருப்பமில்லை., நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லலாம்! வாங்கியவருக்கும் அவ்வாறு சொல்லும் உரிமை உள்ளது.

வியாபாரக் கொடுக்கல் - வாங்கலில் இஸ்லாமிய ஷரீஅத் இத்தகைய தாராள நிலையை அனுமதித்திருப்பது மனிதர்கள் மீது அல்லாஹ் புரிந்த அருள் என்றுதான் சொல்ல வேண்டும். மனிதனின் இயல்பு என்னவெனில் ஒருபொருள் பிறர் கையில் இருக்கும் வரையில் அது அவனது மனத்தில் மதிப்புடையதாக இருக்கிறது., அதை எப்படியாவது அடைந்திட வேண்டும் என்று ஆவல் கொள்கிறான்! அதேபொருள் அவனது கைக்கு வந்து விட்டால் அதனைக் குறைவாக மதிப்பிடத் தலைப்பட்டுவிடுகிறான். இது நமக்குத் தேவை இல்லை என்று கருதுகிறான்! இப்பொழுது இஸ்லாமிய ஷரீஅத் அவனுக்கு - நன்கு சிந்தித்துச் செயல்படவும் தனது முந்தைய கருத்தை மறுபரிசீலனை செய்யவும் கால அவகாசம் அளிக்கிறது!

அவ்விருவரும் பிரிந்துசெல்லாத வரையில் என்று வாசகம் பொதுப்படையாக இருப்பதால் அவ்விருவரும் அவ்விடத்தில் இருக்கும் வரைக் கும் இந்தச் சலுகை நீடிக்கிறது! அது எவ்வளவு நேரமானாலும் சரியே!

இப்னு உமர்(ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பில் அல்லது அவர்களில் ஒருவர் மற்றவருக்கு அந்த உரிமையை அளிக்கும் வரையில்" என்று கூடுதலாக ஒருவாசகம் உள்ளது.

இதன் கருத்து: அவர்களில் ஒருவர் இந்த வியாபாரத்தை வாபஸ் வாங்கும் உரிமை உனக்கு மட்டுமே உண்டு என்று மற்றொருவரிடம் கூறி விட்டால் அப்பொழுது அவருக்கு மட்டுமே அவ்வுரிமை உண்டு. அல்லது அவ்விருவரும் இனி நம் இருவருக்குமே வாபஸ் செய்யும் உரிமை இல்லை என்று நிபந்தனை விதித்தால் அதன் பிறகு யாருக்கும் உரிமை கிடையாது! - ஆக! இதில் நான்கு நிலைமைகள் உள்ளன:

1) வாபஸ் செய்யும் உரிமை இருவருக்கும் இருக்கும் நிலை. இது அவ்வியாபாரத்தில் எந்த நிபந்தனையும் விதிக்காமல் பொதுப்படையாக இருந்தால் மட்டுமே!

2) இருவரில் எவருக்குமே அந்த உரிமை கிடையாது., இருவரும் அவ்வாறு நிபந்தனை விதித்திருந்தால்!

3) விற்றவருக்கு மட்டுமே அந்த உரிமை! அவ்விருவரும் இவ்வாறு நிபந்தனை விதித்திருந்தால்!

4) வாங்கியவருக்கு மட்டுமே அவ்வுரிமை! அவ்விருவரும் அதனை ஏற்றிருந்தால்!

ஏனெனில் அந்த வியாபாரத்தை வாபஸ் பெறும் உரிமை இருவருக்கும் உண்டு. இதேபோல் அதனை ஏற்றுக்கொண்டேன்., இனி வாபஸ் பெறக் கூடாது என்று நிபந்தனை விதிக்கும் உரிமையும் அவ்விருவருக்கும் உண்டு! அவ்வாறு நிபந்தனையிட்டால் பிறகு வாபஸ் பெற முடியாது!

நபி (ஸல்)அவர்கள் அருளினார்கள்: முஸ்லிம்கள் தங்களுடைய நிபந்தனைகள் மீதே உள்ளனர்., ஆனால் ஒரு ஹராமை ஹலாலாக்கும் நிபந்தனையைத் தவிர., இதேபோல் ஒரு ஹலாலை ஹராமாக்கும் நிபந்தனையைத் தவிர!" (நூல்: திர்மிதி) - ஹராம்: இஸ்லாத்தில் தடை விதிக்கப்பட்டது. ஹலால்: இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது. முஸ்லிம்கள் சுயமாக விதிக்கும் நிபந்தனை ஷரீஅத் விதித்த வரம்புகளை மாற்ற முடியாதென்பதே கருத்து.

அவ்விருவரும் பிரிந்து செல்லாத வரையில்!"

-அந்தப் பிரிதல் எந்த வகையிலானது என்று நபியவர்கள் விளக்கவில்லை. ஆனாலும் உடலால் பிரிதல் என்பதே கருத்து! அப்படி அவர்கள் பிரிந்து சென்றால் அந்த உரிமையின் கால அவகாசமும் முடிந்து விடும்!

அவ்விருவரும் உண்மை உரைத்தால்., (பொருள் மற்றும் விலையின் குறைபாட்டை) விளக்கிக் கூறினால்"

- இதுதான் உண்மை பேசுதல் எனும் இந்தப் பாடத்தின் கீழ் இந்த ஹதீஸை கொண்டு வந்ததற்கான ஆதாரமாகும். இதன் கருத்து யாதெனில், அந்தப்பொருளின் சிறப்பியல்புகள் பற்றிய யதார்த்த நிலையை நுகர்வோர் முன் எடுத்துவைக்க வேண்டும். அல்லது அதில் ஏதேனும் குறைகள் இருந்தால் அவற்றை வெளிப்படையாகக் கூறிட வேண்டும். மாறாக இன்னின்ன சிறப்புகள் இதற்கு உண்டு என்று வாய்க்கு வந்தபடி வார்த்தை ஜாலம் போடக்கூடாது! இதேபோல் அதிலுள்ள குற்றங்குறைகளை மூடி மறைக்கவும் கூடாது!

வியாபாரத்தின் அபிவிருத்தி என்பது உண்மை உரைப்பதிலும் உள்ளது உள்ளபடி குறைகளைத் தெரிவிப்பதிலும்தான் உள்ளது! பொய் உரைத்தாலோ குறைகளைச் சுட்டிக்காட்டாமல் நம்பிக்கை மோசடி செய்தாலோ அந்த வியாபாரத்தின் அபிவிருத்தி அழிக்கப்பட்டுவிடும்!

**அறிவிப்பாளர் அறிமுகம்**

## ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள்

இவர்கள் பிறந்த இடம் கஃபாவின் முற்றம். அன்னார் இஸ்லாம் மார்க்கம் ஏற்றது மக்கா வெற்றி கொள்ளப்பட்டபொழுதுதான்! அறியாமைக் காலத்திலும் இஸ்லாத்தை ஏற்ற பிறகும் குறைஷி குலத்து சிறப்பும் உயர்வும் மிக்க முக்கிய பிரமுகர்களில் ஒருவராய்த் திகழ்ந்தார். இதயம் இணைக்கப்பட வேண்டியவர்களுள் ஒருவராக நடத்தப்பட்ட அன்னார் இஸ்லாத்தை ஏற்ற பிறகு சத்தியத்தில் வாய்மையுடன் நிலைத்திருந்தார்! கொடை வழங்கி மகிழ்வது அவரது சிறப்புத் தன்மை! ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள் நூற்றி இருபது ஆண்டுகள் வாழ்ந்தார்கள். கடைசி காலத்தில் கண் பார்வை இழந்த நிலையில் ஹிஜ்ரி ஐம்பத்து நான்காம் ஆண்டில் மரணம் அடைந்தார்கள்! அன்னாரிடம் இருந்து நாற்பது நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

### அருஞ்சொற்கள் شرح الكلمات

| | |
|---|---|
| 1) இரு வியாபாரிகள்: விற்றவரும் வாங்கியவரும் | ١) البيعان: البائع و المشتري |
| 2) தேர்வு செய்யும் உரிமை: ரத்து செய்தல் அல்லது அனுமதித்தல் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை! | ٢) بالخيار: اسم من الأختيار و التخييرهو طلب خير الأمرين من الفسخ وألجازة |
| 3) இருவரும் உண்மை உரைத்தால்: அவரவரது பொருளைப்பற்றி அவர்கள் அறிவிக்கும் விஷயத்தில்! | ٣) ان صدقا : فيما يخبران به |

| | |
|---|---|
| 4) அவ்விருவரும் விளக்கினால்: வியாபாரி தன் பொருளிலுள்ள குறையையும் வாங்கியவர் அவர் கொடுத்த பொருளிலுள்ள குறையையும் விளக்கினால்! | ٤) بينا: أظهر البائع و المشتري ما في المبيع و الثمن من عيب ونحوه |
| 5) அவ்விருவருக்கும் அபிவிருத்தி அளிக் கப்படும்: இது, அவர்களின் கொடுக்கல் வாங்கலில் - நன்மை யையும் அபிவிருத்தி யையும் அதிகப்படுத்துவது, லாபம் அதிக ரிக்கப்பதற்கான வழிமுறைகளை இலகு வாக்குவது ஆகியவை மூலம் கிடைப்பதாகும்.. | ٥) بورك لهما: في بيعهما و شرائهما ذلك بكثرة الخيروالبركة وتسهيل الأسباب المفضية لزيارة الربح |
| 6) அவ்விருவரும் மறைத்தால்: பொருளிலும் விலை யிலும் உள்ள குறைகளை மறைத்தால்: | ٦) كتما: أخفيا ما في السلعة و الثمن من العيوب |
| 7) அவர்களின் கொடுக்கல் - வாங் கலில் அபிவிருத்தி அழிக்கப்படும்: அதுமாய்ந்துவிடும்., அதில் கஷ்டம், களைப்பைத் தவிர வேறெதுவும் அவர்களுக்குக் கிடைக்காது! | ٧) محقت بركة بيعهما: ذهبت فلم يحصلا الا علي مجرد التعب |

## கேள்விகள் - الاسئلة

1) அல் பய்யிஆனி எனும் வார்த்தையின் பொருள் என்ன? அத்தகைய வார்த்தைப் பிரயோகத்தின் பெயர் என்ன?

2) விற்றவருக்கும் வாங்கியவருக்கும் உரிமை உள்ளது என்பதன் விளக்கம் என்ன?

3) அறிவிப்பாளரின் வரலாற்றுச் சுருக்கம் எழுதவும்.

4) அவ்விருவரும் பிரிந்துசெல்லாத வரையில் என்பதன் கருத்து என்ன? அவர்களில் ஒருவர் மற்றவருக்கு அந்த உரிமையை அளிக்கும் வரையில் எனும் வாசகத்தின் கருத்து என்ன?

5) வியாபாரத்தில் அபிவிருத்தி அருளப்படுதல் என்பதன் கருத்து என்ன?